# கோயிற் களஞ்சியம்

## வட ஆர்க்காடு மாவட்டம்

### தொகுதி ஒன்று

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

வ.எண்:
நாள்:
நூலகம்

# கோயிற் களஞ்சியம்

# கோயிற் களஞ்சியம்

## வட ஆர்க்காடு மாவட்டம்

### தொகுதி ஒன்று

*சிறப்பாசிரியர்*

கோ. மு. முத்துசாமி பிள்ளை, இ.ஆ.ப., (ஓய்வு)

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

ISBN: 81-7090-180-4

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 142-2

திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாசி - அக்டோபர் 1991

| | | |
|---|---|---|
| துறை | : | களஞ்சிய மையம் |
| நூல் | : | **கோயிற் களஞ்சியம்**<br>**வட ஆர்க்காடு மாவட்டம் - தொகுதி ஒன்று** |
| சிறப்பாசிரியர் | : | **கோ.மு. முத்துசாமி பிள்ளை** |
| பதிப்பு | : | முதற் பதிப்பு - 1991 |
| விலை | : | உரு. 80-00 |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம்,<br>தஞ்சாவூர் - 613 005. |

இராமவீரப்பன்
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009

நாள் 26.9.91

# வாழ்த்துச் செய்தி

புண்ணிய திருக்கோயில்களின் உறைவிடம் நம் தமிழகம். "திருக்கோயில் இல்லா ஊர் திருவில் ஊர்" என்பது திருநாவுக்கரசர் தேவாரம். நம் தமிழகத்தில் விளங்கும் அத்தனை ஊர்களும் திருக்கோயில்கள் பொலிவுற்று விளங்கும் திருமிகு ஊர்களே. திருவில் ஊர் ஒன்றும் நம் தமிழகத்தில் இல்லை.

அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளை மக்கள் வழிபட்டு உய்யும் வழிபாட்டு மையங்கள் மாத்திரமே அல்ல ஆலயங்கள்; அவை மக்களின் நல, வள வாழ்விற்கு அடிப்படையாக விளங்கும் சமுதாய நல நிலையங்களும் ஆகும்.

சிற்பக்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை, ஓவியக்கலை, காவியக்கலை, அலங்காரக்கலை, பூத்தொடுக்கும் கலை, இன்னும் மடைப்பள்ளிக் கலை (சமையற்கலை) முதலாக பல கலைகள் வளர்க்கும் பல்கலைக்கழகங்களே நம் பழம்பெருமை வாய்ந்த ஆலயங்கள்.

இவ்வாலயங்கள் முன்னாளில் அறிவுக்கண் வழங்கும் கல்வி நிலையங்களாகவும் மக்களின் வழக்குகளைத் தீர்த்து வைக்கும் நீதி மன்றங்களாகவும் நோய் தீர்க்கும் மருத்துவச் சாலைகளாகவும் வயிற்றுப் பசி தணிக்கும் அறச் சாலைகளாகவும் இன்னும் தமிழக வரலாற்றிற்கு ஆதாரமான ஆவணக் காப்பகங்களாகவும் அனைத்து மொழி, கலை இலக்கிய நூல்களைக் காத்து நிற்கும் நூலகங்களாகவும் திகழ்ந்திருப்பதை வரலாறு நமக்கு வளமாகக் காட்டுகிறது.

இவ்வாறு பண்டைய தமிழ் நாகரீகம், பண்பாடு, வரலாறு மற்றும் கலை இலக்கியச் சிறப்புகள் அனைத்தையும் தாங்கி நிற்கும் பல்கலைக் கருவூலங்களான நம் புண்ணியத் திருக்கோயில்களைப் பேணிக் காப்பதில், மாமன்னர் முதல் நாட்டின் கடைசி குடிமகன் வரை அனைவருமே அளவிலாத ஆர்வம் காட்டி வந்திருப்பதையும் நாம் அறிந்து மகிழ்கிறோம்.

தமிழகத்தில் உள்ள தென்காசி விசுவநாதர் ஆலயத்தை அமைத்தவன் அரிகேசரி பராக்கிரம பாண்டியன் (கி. பி. 1411-1463). அம்மன்னன் அவ்வாலயத்தில் அமைத்துச் சென்ற சில கல்வெட்டுப் பாடல்கள், திருக்கோயில்களை உயிரெனப் பேணிய நம் முன்னோர்தம் அருங்குணச் சிறப்பை இன்றும் நமக்குத் தெற்றென விளக்குகின்றன.

*"ஆராயினும் இந்தத் தென்காசி மேவும் பொன் ஆலயத்து*
*வாராததோர் குற்றம் வந்தால் அப்போது அங்கு வந்ததனை*
*நேராகவே ஒழித்துப் புரப்பார்களை நீதியுடன்*
*பாரோர் அறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே"*

*"அரிகேசரிமன் பராக்கிரம மாறன் அரனருளால்*
*பரிசேர் பொழிலணி தென்காசிக் கோயில் வகுத்துவலம்*
*புரிசேர் கடற்புவி போற்றவைத்தேன்; அன்பு பூண்டிதனைத்*
*திரிசேர் விளக்கெனக் காப்பார் பொற்பாதம் சென்னியதே"*

மணிமகுடம் தரித்து மன்பதை ஆண்டவொரு மாமன்னன் தான் அமைத்த திருக்கோயிலைப் பேணும் ஒரு எளிய குடிமகனின் திருப்பாதத்தையும் தன் தலைமேல் வைத்துப் போற்றுவதாகக் கல்வெட்டில் பாடி அதைப் பொதித்துச் சென்றிருக்கிறான் என்றால் நம் திருக்கோயில்கள் சமுதாயத்தில் பெற்று விளங்கிய தலைமைச் சிறப்பை என்னென்று போற்றுவது!

*"வணங்கும் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால்*
*பிணங்கும் சமயம் பலபல வாக்கி . . . . "*

என்று பாடினார் நம்மாழ்வார். அவர்தம் கருத்திற்கிணங்கவே தமிழகத்தில் பண்டை நாள் தொட்டு சைவத் திருத்தலங்கள், வைணவத் திருத்தலங்கள், சக்தி திருத்தலங்கள், முருகன் திருத்தலங்கள், பிள்ளையார் திருத்தலங்கள் எனப் பல்லாயிரக்கணக்கான திருத்தலங்கள் பாரெங்கும் அமைந்து அருளொளி பரப்பி வருகின்றன. பெரும் தெய்வ ஆலயங்களோடு சிறந்து விளங்கும் சிறு தெய்வ ஆலயங்களும் தமிழகத்தில் அநேகம் உள்ளன.

இவற்றையெல்லாம் வகைதொகைப்படுத்தி இவற்றின் தத்துவ விளக்கங்களோடு "கோயிற் களஞ்சியம்" வெளியிடப் பெறவேண்டும் என்பது நீண்ட நெடுங்காலமாகவே நம் அறிஞர் பெருமக்கள் பலர் வற்புறுத்தி வந்த ஓர் அரிய கருத்தாகும். அறிஞர் பெருமக்களின் அரிய அக்கனவை நனவாக்கும் வகையில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் **"கோயிற் களஞ்சியம்"** வெளியிடுவது அறிந்து நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

**தமிழகத்தின் நாயகர் டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள்** எத்தகைய நல்ல நோக்கங்களுக்காகத் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தாரோ அந்த நோக்கம் நிறைவேறப் பல்வகையிலும் ஆக்கபூர்வமான

பணிகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆர்வமுடன் நிறைவேற்றி வருவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

**"இறவாத புகழுடைய புதுநூல்கள்**
**தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்"**

என்று பாடிய மகாகவி பாரதியாரின் ஆணையை நிறைவேற்றும் வகையில் ஆறு **அறிவியல் களஞ்சியங்களையும்** பத்து **வாழ்வியல் களஞ்சியங்களையும்** இதுகாறும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டிருப்பது பாராட்டிற்குரியது.

நம் தமிழகத்தின் அரும்பெருஞ் சிறப்புக்குக் காரணமாக விளங்கும் திருக்கோயில்களின் வரலாற்றைக் '**கோயிற் களஞ்சியம்**' எனும் வரிசையில் அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களாக மாவட்டங்கள் வாரியாகத் தொகுத்துத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட இருப்பது போற்றுதலுக்குரிய ஒரு பெரும் பணி-பொற்பணி. இப்பணியில் முதல் கட்ட பணியை நிறைவேற்றிக் "**கோயிற் களஞ்சியம் அறிமுகம்**" மற்றும் "**வட ஆர்க்காடு மாவட்ட கோயிற் களஞ்சியம்-முதல், இரண்டு தொகுதிகள்**" வெளியிட இருப்பது அறிந்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

"கோயிற் களஞ்சியம்" தொகுத்து வெளியிடும், மிகச் சிறந்த தெய்வத் தமிழ்ப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள முதுபெரும் புலவர் முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கோ. மு. முத்துசாமிப் பிள்ளை அவர்களுக்கும் அவருடன் இணைந்து இப்பணியை ஆற்றிவரும் அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆற்றிவரும் இதுபோன்ற நற்பணிகளைக் காணும்போது

**"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்**
**இனிஎதிர் காலத்தின் சிறப்பும்**
**இன்றெழுந் தருளப் பெற்ற**
**பேறிதனால் எற்றைக்கும் திருவருள் உடையேம்"**

என்ற தெய்வச் சேக்கிழார்தம் அருள்மொழிதான் என் நினைவிற்கு வருகிறது. தமிழ்கூறு நல்லுலகம் போற்றி வாழ்த்திடும் வண்ணம் மேலும் மேலும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அரும்பணிகள் தொடர என் மனமார்ந்த பாராட்டுதல்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

சென்னை
26-9-1991

அன்புள்ள,

முனைவர் சி. பாலசுப்பிரமணியன்
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீக்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே.

உளவாக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலுமாகிய திருவிளையாட்டை ஒரு விளையாட்டாகக் கொள்ளும் இறைவனே அனைத்து உலகங்கட்கும் அனைத்து உயிர்கட்கும் தலைவனாவான். உயிர்கள் அத்தலைவனைக் கண்டு களித்துத் தலை தாழ்த்திக் கை கூப்பி வாழ்த்தி வணங்குவதற்காக அவன் குடிகொண்டுள்ள இல்லமே கோவில்; கோயில்.

தலைவன் கோ எனப்பட்டான்; அவன் குடிகொண்ட இல்லம் கோவில்-கோயில் ஆயிற்று.

இறைவன் வீற்றிருந்து அருள்புரியும் இல்லம் போன்று, நாட்டுமக்களை நன்னெறிப்படுத்திக் காக்கும் வகையால் செங்கோல் ஏந்தி, ஏழை எளியவரின் கண்ணீரை மாற்றி அருள்புரியும் நாடாளும் மன்னரும் 'கோ' எனப்பட்டனர். அவர்கள் குடிகொண்டுள்ள இல்லங்களும் கோவில்கள்-கோயில்கள் ஆயின.

'கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி'
'வாயில் வந்து கோயில் காட்ட'

என்னும் சிலப்பதிகார அடிகளும்

'வாயில் விடாது கோயில் புக்கு'
'வச்சிரத் தடக்கை நெடியோன் கோயில்'

என வரும் புறநானூற்றுத் தொடர்களும்

'கோயிலொடு குடி நிறீஇ'

என வரும் பட்டினப்பாலை அடியும்

மன்னவர் இல்லங்களும் கோயில்கள் என வழங்கப்பட்டமையை உணர்த்துகின்றன.

செங்கோல் வழுவாது சீரிய ஆட்சி நலங்கண்ட மன்னவரையும் தமிழக மக்கள் இறையெனவே போற்றினர் என்பதைத்

"திருவுடை மன்னரைக் காணின்
திருமாலைக் கண்டேனே"

என்னும் நம்மாழ்வார்ப் பாசுரம் நமக்கு உணர்த்துவதாக அமையும். உள்ளக் கோயிலிலே வீற்றிருக்கும் இறைவனை ஊர்க் கோயில்களிலே கண்டு களித்து வழிபட்டு வாழ்த்தி வணங்கும் இயல்பினர் தமிழக மக்கள்.

எப்பொருளுக்கும் இறைத்தன்மையை ஏற்றி நிலமகளாக, திருமகளாக, கலைமகளாக, வெற்றிமகள் கொற்றவையாக வணங்கி வாழ்த்தும் இறையுணர்வோடு இரண்டறக் கலந்தவர்கள் தமிழக மக்கள்.

நிலமும் பொழுதும் முதற் பொருளாகக் கண்ட தமிழ்மக்கள், தம் வாழ்க்கையின் கருப்பொருளாகக் கொண்டவற்றுள் முதலிடத்தைத் தெய்வத்திற்குத் தந்து அதனைப் போற்றி வணங்கிப் புகழ்ந்து பாடியவர்கள் ஆவர்.

அப்பரும் சுந்தரரும் ஆளுடையபிள்ளையும் ஒப்பில் மணிவாசகரும் தந்த சந்தத் தமிழ்ப் பாடல்களால் இறைவனைப் பண்ணிசைத்துப் பாடிப் போற்றும் பாங்கினர் தமிழ்மக்கள்.

ஏழு சுரம் இசைக்க இனிய தமிழ் மணக்க ஆழ்வார்கள் பாடியருளிய திவ்வியப் பிரபந்தங்களால் திருமாலைப் போற்றி வழிபடுபவர்கள் தமிழ் மாந்தர்.

இயற்றமிழும் இசைத்தமிழும் நாடகத்தமிழுமாகிய முத்தமிழோடு பக்தித் தமிழாக ஒன்றையும் பாமணக்க வளர்க்கும் பாங்குறு மரபினர் தமிழ்மக்கள்.

முத்திறம் பொருந்தத் தித்திக்கும் தமிழில் தத்துவப் பொருளின் மெய்த்திறம் கண்ட மன்னரும் மக்களும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த ஒரு பொருளைத் தங்களுக்காக ஓரிடத்தே மனத்தால் நிலைநிறுத்தி வழிபாடாற்றிய இடங்களே கோயில்கள்; வழிபாடு கண்டவர்களே தமிழர்கள்.

தமிழ்மக்கள் வாழும் ஊர்கள் சிற்றூர்களே ஆயினும் பேரூர்களே ஆயினும் எல்லா ஊர்களிலும் இறைவன் வீற்றிருந்து அருட்காட்சி நல்கும் கோயில்கள் அமையப்பெற்றிருத்தல் நாம் பெற்ற பெரும் பேறேயாகும். இது தமிழ்மண் தந்த அருள் வரமாகும்.

'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'

என்ற தொடர் ஊர்தோறும் கோயில்கள் உருவாதல் வேண்டும் என்பதை உணர்த்த வந்த பழமொழியே அன்றோ! சைவம் தழைக்கவும் வைணவம் வளரவும் தமிழகமெங்குமுள்ள கோயில்கள் அடியவர்களை வருகவென வரவேற்று வளர்கோபுரம் காட்டிநிற்கின்றன. இறைநெறிச் செல்வர்கள், தமிழகத்தில் எங்கெங்குச் செல்லினும் அங்கங்கும் உள்ள கோயில்கள் அவர்களை அருட் கரம் காட்டி அழைக்கின்றன.

வாய்ப்பும் வசதியும் பெற்று அனைத்துத் திருத்தலங்களுக்கும் சென்று ஆலய வழிபாடு செய்யும் நன்னெறியாளர்க்கு வழிகாட்டியாகவும் வாய்ப்பும் வசதியும் இன்றி, திருத்தலங்கள்தோறும் சென்று இறைவனை வழிபட எண்ணும் இறைநெறியாளர், உள்ளத்தால் இறைவன் வீற்றிருக்கும் திருக்கோயில்களைக் கண்டு வழிபாடு செய்து மகிழும் வாய்ப்புக் கருதியும் தமிழகத்திலுள்ள அனைத்துக் கோயில்களைப் பற்றியும் 'களஞ்சியம்' ஒன்றை வெளியிடக் கருதியது தமிழ்ப்

பல்கலைக்கழகம். திருக்கோயில்களைப் பற்றிய சீரான செய்திகளையெல்லாம் தொகுத்துக் கூறும் நூலாக அமைதலின் இந்நூல் கோயிற் களஞ்சியம் என்னும் பெயரேற்றுச் சிறப்படைகிறது.

தமிழகத்தே உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந்த திருக்கோயில்களைப் பற்றிய செய்திகளைத் தனித்தனியே தொகுத்து வெளியிடும் முயற்சியில் வட ஆர்க்காடு மாவட்டக் கோயிற் களஞ்சியமும் தென்னார்க்காடு மாவட்டக் கோயிற்களஞ்சியமும் செங்கற்பட்டு, சென்னை மாவட்டக் கோயிற்களஞ்சியங்களும் தொகுக்கப்பட்டன; ஏனைய மாவட்டக் கோயிற் களஞ்சியங்களைத் தொகுக்கும் முயற்சியும் தொடர்கின்றது. மிகமிக விரைவில் அனைத்து மாவட்டக் கோயிற்களஞ்சியங்களும் வெளிவரும் நன்னாளை நாம் எதிர்நோக்கி மகிழலாம்.

கோயிற்களஞ்சியங்களைத் தொகுத்துத்தரும் முயற்சியில், திருமிகு கோ. மு. முத்துசாமி பிள்ளை, இ. ஆ. ப., (ஓய்வு) அவர்கள் சிறப்பாசிரியர் பொறுப்பேற்று, எவ்வகைப் பயனும் கருதாமல் இதனை இறைபணியாகவும் மக்கட்கு ஆற்றும் நற்பணியாகவும் கருதி இப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

கருங்கல்லும் சாந்தும் கொண்டு கலைவாணர் கைத்திறங் காட்டிக் காவலன் கட்டியமைத்த கோயிலினும் கற்பனைத் திறங்காட்டிப் பூசலார் நாயனார் கட்டிய உள்ளக் கோயிலையே இறைவன் உவந்தேற்று முதலில் குடிபுகுந்தார் எனப் பெரிய புராணம் கூறுவதை நாம் அறிவோம்.

இறைவன் வழிபாட்டையே பிறவியின் பயனாகக் கருதும் தமிழ்ப் பெருமக்கள் வாழும் தமிழகத்தே சிற்றூர், பேரூர் என்னும் பாகுபாடின்றி எல்லாம் வல்லானுக்கு மன்னரும் மக்களும் அமைத்த கோயில்களுக்குக் கணக்கேது? வழக்கேது? ஆயினும் மக்கட்பிறவி எடுத்தவர்கள் அத்துணைக் கோயில்களுக்கும் சென்று கண்டு வழிபடுதல் இயலுமோ?

இயலாதவர்களும் இறைவன் வீற்றிருக்கின்ற எல்லாத் திருத்தலங்களையும் இருந்த இடத்திலிருந்தே தம் அகக்கண்ணாற் கண்டு களித்துக் கழிபேருவகை கொள்ள வழிவகை செய்கிறது இக்கோயிற் களஞ்சியம் எனின் மிகையாகாது.

மாவட்டம்; மாவட்டத்திலுள்ள ஊர்; ஊரிலுள்ள கோயிலின் இருப்பிட அமைப்பு; கோயிலின் கோபுரக் காட்சி; கோயிலினுள் புகுந்தால் அங்கு நாம் காணுகின்ற தெய்வத் திருவடிவங்கள்; உலாத்திருமேனிகள்; கருப்பக்கிரகம்; அங்கு நடைபெறுகின்ற வழிபாட்டுக் காலங்கள்; வழிபாட்டு முறைகள்; அக்கோயிலுக்குரிய வருவாய்; அந்தத் தலத்திற்குரிய மரம்; அங்குள்ள தெய்வம் வழிபடுவார்க்கு அருள் புரியும் முறை; அத்தலம் பற்றிய வரலாற்றுத் தொகுப்பு - இத்துணையும் நம் மனக் கண்ணால் கண்டு கை கூப்பித் தலை தாழ்த்தி வணங்கத் தக்க பக்குவ நிலையில் ஒவ்வொரு திருத்தலமும் தொகுப்பாசிரியரால் உருவாக்கிக் காட்டப் பெறுகின்றது.

பெருமதிப்பிற்குரிய சிறப்பாசிரியர் அவர்கள், தெய்வபக்தியில் திளைத்தவர்; செந்தமிழ்மொழியில் தேர்ந்த ஞானமும் பற்றும் பெற்றவர்; அடக்கத்திற்கும்

அறிவுடைமைக்கும் நிலைக்களனாக விளங்குபவா. சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் தலைவராக விளக்கமுற்றவர்; தமிழகப் புலவர் குழுவின் தலைவராக விளங்கி வருபவர். இத்தகு சீரும் சிறப்பும் நிறைந்த பெரியார் அவர்கள் இப்பணியை ஏற்றமை தமிழகம் செய்த தவப்பயனே எனக் கருதலாம்.

ஒவ்வொரு மாவட்டக் கோயிற் களஞ்சியமும் ஒவ்வொரு தொகுதியாக வெளிவருநிலையில், கோயில்களைப் பற்றிய பொதுவான செய்திகளைத் தொகுத்து முதலில் வெளியிட்டால், மாவட்டக் கோயிற்களஞ்சியங்களைக் கற்பார்க்குப் பெருந்துணையாக இருக்குமேயெனக் கருதியதன் விளைவே 'கோயில் அறிமுகம்' என்னும் இத்தொகுப்பு நூல்-முதல் நூல். இதைத் தொடர்ந்து வெளிவரவிருக்கின்ற கோயிற்களஞ்சியங்களைக் கற்பார்க்கு இந்நூல் பெருந்துணையாக அமையும்.

ஏழை எளியவர்களின் உள்ளங்களையே தம் கோயிலெனக் கொண்டு அவர்களின் உள்ளங்களிலெல்லாம் தாமும் வீற்றிருந்து, இன்று தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் புரட்சித் தலைவி மாண்புமிகு செல்வி ஜெயலலிதா அவர்கள், தாம் பொறுப்பேற்றவுடனேயே கோயில்களின் வளர்ச்சியில் தம் கருத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். இது தமிழகம் செய்த தவப்பயனே ஆகும்.

நாட்பூசை பெறாத கோயில்களும் இடிபாடுகளுடன் காட்சிதரும் கோயில்களும் வழிபட வருவார்க்கு நிறைவிடமற்ற கோயில்களும் வருவாயற்ற கோயில்களும் அவர்கள் உள்ளத்தைத் தம்பால் ஈர்த்தன.

அதனால்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே கோயில்களின் பராமரிப்புக்காக ஒரு பெருநிதியைத் தொகுக்கத்தொடங்கி அதற்கு முதன்முதல் தரும் முதலீடாக ஒரு நூறாயிரத்தெட்டு உரூபாய்கள் தந்திருக்கிறார்கள்.

கொடையுள்ளம் கொண்ட அவர்கள் தொடங்கியநிதி, கோடி கோடியாகப் பெருகித் தமிழகக் கோயில்கள் அனைத்தும் சீரும் சிறப்பும் பெறும் என்பதில் ஐயமில்லை. அவர்களின் ஆட்சிக்காலத்தில் கோயிற்களஞ்சியத்தின் முதலிரு தொகுதிகளும் (வட ஆர்க்காடு மாவட்டம்) வெளிவரும் பேறு பெற்றிருக்கிறது.

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவரும் கோயில் களஞ்சியத்தின் முதல் தொகுதியை மாண்புமிகு தமிழக முதல்வர்தம் வாழ்த்துரையோடு அவர்களே தம் திருக்கரங்களால் வெளியிடுதல் வேண்டும் என்பதே தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதன்மையான பெருவிருப்பமாகும்.

தமிழகக் கல்வியமைச்சராகவும் தமிழ்ப் பல்கலைக்கழக இணைவேந்தராகவும் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் நற்றமிழர் இனப்பற்றும் கொண்டவர்கள். அவர்கள் வாழ்த்துரையோடு கோயில் களஞ்சியத்தின் முதல் தொகுதி வெளிவரவேண்டுமென்பது தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பெருவிருப்பம் ஆகும்.

கோயிற்களஞ்சியத்தின் அனைத்துத் தொகுதிகளையும் விரைவில் கொண்டுவரவேண்டுமென்பதே தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதன்மையான குறிக்கோள். தமிழக மக்கள் அனைவரும் கோயிற்களஞ்சியங்களைப் பெற்றுப்

படித்துப் பெரும்பயன் பெறுவர் என உளமார நம்புகிறது தமிழ்ப் பல்கலைக்கழகம்.

தமிழகக் கோயில்கள் அனைத்திலும் கோயிற்களஞ்சியங்கள் இடம் பெறுதல் வேண்டும். கோயில்கள் மட்டுமின்றித் தமிழகக் கல்லூரிகள், மேல்நிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் அனைத்திலும் கோயிற்களஞ்சியங்கள் இடம் பெறுதல் வேண்டும்.

தமிழகத்து நூல் நிலையங்களிலே மட்டுமன்றித் தமிழ் மக்கள் வாழும் பிற நாட்டு நூல் நிலையங்களிலும் கோயிற் களஞ்சியங்கள் இடம் பெறச் செய்தல் வேண்டும்.

அந்நாளே தமிழகத்தின் பொன்னாளாகும். இறைநெறிச் செல்வர்களுக்கோர் இனிய நாளாகும்.

அன்றுதான் அன்பும் அறனும் அகிலமெங்கும் பெருகும்; பண்பும் பயனும் பெற்று இந்நாட்டு மக்கள் பார்புகழ வாழ்வர்.

தஞ்சாவூர்,

5-10-1991.

# முன்னுரை

நம்நாட்டிற்குச் சீரும் சிறப்பும் நல்குவன சிலவற்றுள் ஒன்று, இங்கு ஆயிரக்கணக்கில் திருக்கோயில்கள் அமைந்துள்ளமையாகும். இச்சிறப்பு வேறெந்த நாட்டிலும் காணப்படாத ஒன்றாகும்.

நம்நாட்டுக்கோயில்களுள், சில கடற்கரைகளை ஒட்டியும் சில குன்றுகளின் உச்சிகளிலும் சில புனித ஆறுகளின் இருமருங்கிலும் சில பேராறுகளும் சிற்றாறுகளும் கூடும் இடங்களிலும் எழிலுற அமைந்துள்ளன. செழிப்புற்று விளங்கும் மரங்கள் அடர்ந்த சோலைகளில் எழுந்த கோயில்களின் சூழ்நிலைகளில் கண்ணுக்கினிய பசுமையும் காதிற்கினிய பறவைகளின் இசையும் மூக்கினால் முகரத்தக்க நறுமணமும் நாவிற்கினிய நற்கனிகளும் பெற அரிய வாய்ப்பு இருந்து வருகிறது. இவற்றிற்கெல்லாம் மேலாகப் பல நன்மைகள் கோயில்களால் சமுதாயத்திற்குக் கிடைத்துவருகின்றன. இத்தகைய நன்மைகளை இந்நூலின் 156, 157-ஆம் பக்கங்களில் காணலாம்.

இவற்றையெல்லாம் முன்னிட்டுத் திருக்கோயில்களின் வரலாறும் அவற்றின் பெருமைகளும் எழுத்துவடிவில் இடம் பெற வேண்டும் என்னும் நன்னோக்கில் கோயில்களைப் பற்றிக் கூறும் தலபுராணங்கள் முதலில் செய்யுள் வடிவில் தோன்றின. பின்னர் உரைநடையில் கோயில்கள் பற்றிய நூல்கள் வெளிவந்தன. அவிநாசி, பேரூர், பழனி, மருதமலை ஆகிய தலங்களைப் பற்றி, கோவை திரு. நாராயணசாமி முதலியார் அவர்களால் இயற்றப்பட்ட நூல்கள் இவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். இவர் 1942-ஆம் ஆண்டில் பொள்ளாச்சி இனாம் சங்கரமநல்லூர் சோமீச்சுவரர் கோயில் பற்றிய நூலை இயற்றியுள்ளார். இத்தலபுராணங்களைப் பற்றிய ஆய்வை, இந்நூலின் 12, 13-ஆம் பக்கங்களில் காணலாம்.

தலபுராணங்களின் அடிப்படையில் கோயில் பற்றிய நூல்களை அவ்வக்கோயில்களே வெளியிட வேண்டுமென 1944-ஆம் ஆண்டில் சென்னை அறநிலையக் கழகத்தின் தலைவராக இருந்த திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் ஆணை பிறப்பித்தார். இந்த ஆணைக்கேற்பப் பல கோயில்கள், நூல்கள் வெளியிட நடவடிக்கை எடுத்தன. இவ்வகையில் இயற்றப்பட்ட நூல்களுக்கு எடுத்துக்காட்டு, காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயில் நூலாகும். இதனைத் தொடர்ந்து நிறுவனங்கள் சில, கோயில் நூல்கள் சிலவற்றை அவ்வப்போது வெளியிட்டு வந்தன. 1961-ஆம் ஆண்டு மக்கள் தொகை

கணக்கீட்டுத்துறை, கோயில்களின் வரலாற்று இயல்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அதனதன் வட்டங்களின் வரிசையில் ஆங்கிலத்தில் வெளியிட்டது. இவ்வாறு வெளியிடப்பட்டவை, ஒவ்வொரு வட்டத்தின் சில கோயில்களுக்கு மட்டும் வரலாற்றைக் கூறி எஞ்சியவற்றைப் பட்டியல் படுத்திக்காட்டின. இத்துறையினர் இவ்வாறு வெளியிட்ட நூல்களின் தனிச்சிறப்பு இந்நூல்களின் இடையிடையே கோபுரங்களின் படங்களும் கோயில்களின் மூர்த்தங்களின் படங்களும் எழில் மிக்க முறையில் இடம்பெற்றமையாகும். அடுத்த நிலையில் பல கோயில்களுக்கு நூல்கள் அவ்வக் கோயிலார்களாலோ தனிப்பட்டவர்களாலோ உரைநடையில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. 'திருமயிலையும் பூம்பாவையும்' என்னும் தலைப்பில் நாடக வடிவில் ஒரு சிறுநூல் என்னால் எழுதப்பட்டு திருமயிலைக் கபாலீச்சுவரர் கோயில் சார்பில் வெளியிடப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பின்னர்த் தஞ்சாவூர் மாவட்டத்தின் அன்னியூர்க் கோயில் நூலும் புதுக்கோட்டை மாவட்டம் திருப்புனவாயில் கோயில் நூலும் திரு ஜி. கலியாணம் என்பவரால் சிறந்த முறையில் எழுதி வெளியிடப்பட்டது.

யான் திருவான்மியூர் மருந்தீசுவரர் கோயிலுக்காக 'மருந்தீசுவரர் கோயில்' பற்றிய நூலினை நாடக வடிவில் எழுதினேன். இந்நூல் சென்னை பார்க்கர் அச்சக உரிமையாளர் திரு. நடராஜ முதலியார், தம் செலவில் அச்சிட்டு நன்கொடையாகக் கோயிலுக்கு அளித்தார்.

இந்நிலையில் கோயிற்களஞ்சியம் உரு எய்தத் தொடங்கிற்று. இதற்காக 1985-ஆம் ஆண்டில் ஒரு திட்டத்தை அந்நாள் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக விளங்கிய முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் வகுத்தார். 12-3-1985-ஆம் நாளில் காஞ்சிபுரம் தத்துவ மையத்தில் நடைபெற்ற கருத்தரங்குக் கூட்டத்திற்கு யான் அழைக்கப் பெற்றேன்.

இக்கூட்டத்திற்கு அரசின் சார்பில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அரசுச் செயலாளர் திரு. ஆர். சண்முகசிகாமணியும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சார்பில் துணை ஆணையாளர் திரு. சுவாமிநாதனும் வந்திருந்தார்கள்.

யான் தமிழில் வித்துவான் பட்டம் பெற்றிருந்ததாலும் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறைச் சைவசித்தாந்த வல்லுநர் குழுவின் தலைவராக இருந்ததாலும் திருக்கோயில்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்த நீதிபதி மகராசன் குழுவில் உறுப்பினராக இருந்ததாலும் இக்கூட்டத்தின்போது, ஊதியம் பெற்றுக் கோயிற்களஞ்சிய ஆசிரியராக யான் பதவி ஏற்க வேண்டுமென தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் விரும்பினர். இதனை யான் ஏற்க மறுத்தேன். கோயிற்களஞ்சிய முன்னேற்றத்தை முன்னிட்டு ஊதியம் பெறாமல் மதிப்புறு முறையில் இப்பணியை யான் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனப் பின்னர் வேண்டினர். அவர்தம் வேண்டுகோளைப் புறக்கணிக்க விரும்பாமல், இப்பதவியை ஏற்றுக் கொண்டேன். இவர் வகுத்த திட்டம், கோயில்களின் விவரங்களைக் கோயில் அலுவலர்களிடமிருந்து பெற அவர்களுக்கு ஒரு வினாத்தாள் அனுப்பப்படவேண்டும் என்பதும் அதில் குறிக்கப்பட்ட

வினாக்களுக்கு அவர்கள் அளிக்கும் விடைகளைக் கொண்டு கோயிற்களஞ்சியம் எழுதப்பட வேண்டும் என்பதுமாகும். இவ்வாறு வினாப்பட்டியல் அச்சிடப்பட்டு ஏறத்தாழ 50 கோயில்களுக்கு அனுப்பப்பட்டன. இவ்வினாப் பட்டியலைப் பெற்றுக்கொண்ட கோயில் அலுவலர்களுள் எவரும் அவ்வினாப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட வினாக்களுக்கு விடை அளிக்கவில்லை. இந்நிலைமையை யான் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்குத் தெரிவித்தேன். வினாப்பட்டியல் திட்டம் தோல்வியுற்றதை அவர் ஏற்றுக்கொண்டு, செங்கற்பட்டு மாவட்டக் கோயில்களுக்கு யான் சென்று கோயில் விவரங்களைத் திரட்டி இம்மாவட்டக் கோயிற்களஞ்சியத்தை மட்டும் வெளியிட வேண்டும் என்றார். இதன்பேரில் என் கீழ்ப் பணிபுரிய நியமனம் செய்யப்பட்ட நாளுதியர் இருவரில் ஒருவரை என்னுடன் அழைத்துக்கொண்டு செங்கற்பட்டு மாவட்டக் கோயில்களுக்குச் சென்று விவரங்களைத் தொடர்ந்து திரட்டினேன். இதே முறையில் சென்னை மாநகர்க் கோயில்களின் விவரங்களையும் திரட்டினேன்.

காஞ்சிபுரத்திலுள்ள பெரிய கோயில்களாகிய ஏகாம்பரேசுவரர் கோயில், வரதராசர் கோயில், குமரக்கோட்டம் சுப்பிரமணியர் கோயில், காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயில் ஆகியவற்றிற்குச் சென்று அக்கோயில்களின் விவரங்களைத் திரட்டிக்கொண்டு அவற்றின் அடிப்படையில் அக்கோயில்களின் களஞ்சியக் கட்டுரைகளை எழுதினேன். காஞ்சிபுரத்தில் மிகுதியான கோயில்கள் இருப்பதன்காரணமாக, அங்குள்ள கோயில்களில் சிலவற்றிற்குக் காஞ்சிபுரம் திட்ட அலுவலர் திரு. சவுந்தரபாண்டியன் கட்டுரைகளை வரைந்தார். மேலும் அவருக்குப் பின் பதவி ஏற்ற முனைவர் குளத்தூரான் சில கோயில்களுக்குக் கட்டுரைகளை எழுதித் தந்தார். இவ்விருவரும் ஏறத்தாழ ஓராண்டுக்காலம் காஞ்சியில் பணிபுரிந்தவர்கள். இவர்களாலும் எழுதிக் கொடுக்கப்படாமல் நின்ற கோயில்களின் கட்டுரைகளைக் கோயிற்களஞ்சிய அலுவலகப் பணியாளர் பூசை. ஆட்சிலிங்கம் பின்னர் எழுதித் தர நேர்ந்தது.

இதற்குள் சிதம்பரம் சிற்றம்பலவனார் திருக்கோயில் கும்பாபிடேக விழாவும் தக்கோலம் திருவூறல் மகாதேவர் திருக்கோயில் கும்பாபிடேக விழாவும் திருவரங்கம் அரங்கநாதர் திருக்கோயில் கும்பாபிடேக விழாவும் நடத்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இவற்றை முன்னிட்டு இக்கோயில்கள் பற்றிய நூல்களை யான் எழுதித் தந்து அதன் வெளியீட்டுப் பணியைக் கவனிக்குமாறு தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்தார். இவர்தம் அறிவுரைக்கேற்ப, இக்கோயில்களின் நூல்களை எழுதினேன். கோயிற் களஞ்சியத்திற்காகத் திரட்டப்பட்ட விவரங்களின் அடிப்படையில் இக்கோயில்களின் நூல்கள் எழுதப்பட்டன என்னும் குறிப்புடன் இந்நூல்களை அந்த அந்தக் கோயிலாரோ வேறு நிறுவனத்தாரோ வெளியிடலாம் எனத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் அகத்தியலிங்கம் அவர்கள் அனுமதி வழங்கினர். இந்த அனுமதியின் பேரில் இந்த நூல்களில் திருவரங்கம் அரங்கநாதர்கோயில் பற்றிய நூலை அக்கோயிலாரும் திருவூறல் மகாதேவர் கோயில் பற்றிய நூலை அக்கோயிலாரும் வெளியிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். சிதம்பரம் சிற்றம்பலவனார் திருக்கோயில் பற்றிய நூலை

தனிப்பட்ட நிறுவனம் ஒன்று வெளியிட்டது. திருவானைக்காவிலுள்ள சம்புகேசுவரர் கோயில் பற்றிய நூலை என் செலவில் யான் அச்சிட்டு அதன் பிரதிகளை அன்பளிப்பாக அக்கோயிலுக்கு அளித்தேன்.

திருவரங்கம் அரங்கநாதர் கோயில் நூலுக்கு 17-3-1987-ஆம் நாளில் தாம் அளித்த அணிந்துரையில் அந்நாள் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு வி. வி. சுவாமிநாதன் அவர்கள், "இந்நூலாசிரியர் சுவையுள்ள நாவலைப் படிப்பதுபோல் வாசகர்கள் படிக்கும்படி வசீகரமாக எழுதியிருக்கிறார். ஆன்மீகத்தில் ஆர்வமுள்ளவர்கள் மாத்திரம் தெரிந்து கொள்ள வேண்டியதோடு வரலாறு, சிற்பம், ஓவியம், கட்டடக்கலை பற்றிப் புரிந்துகொள்ளவும் அவைகளின் தனிச்சிறப்புகள் விளக்கப்பட்டிருக்கின்றன. நிச்சயம் கோயிலை ஏற்கனவே பார்த்தவர்களா யிருந்தாலும் மீண்டும் பார்க்க - இந்நூல் தூண்டுகிறது. பல கோணங்களில் திருவரங்கம் அரங்கநாதர் கோயிலைப் பற்றி ஓர் ஆராய்ச்சி நூலை எழுதிய ஆசிரியர் இந்து சமய அறநிலையத்துறையினரால் பாராட்டுதற்குரியவர்" என எழுதியுள்ளார்.

இவ்வாறு ஒருவாறு செங்கற்பட்டு மாவட்டக் கோயில்களின் களஞ்சியமும் சென்னை மாநகர்க் கோயில்களைப் பற்றிய களஞ்சியத் தொகுதிகளும் எழுதிமுடிக்கப்பட்டன. இவற்றை அச்சிட்டு வெளியிடுமுன்னர் காஞ்சி காமகோடி பீடம் பரமாச்சாரியார் அவர்களின் ஆசி பெறச் சென்றேன். அவர்கள் எனக்கு முன்னமே நன்கு அறிமுகம் பெற்றவர். ஆதலால், அவர்கள் பேரன்போடு ஆசிவழங்கி அனுப்பினார்கள். பின்னர் யான் தொகுத்த செங்கற்பட்டு மாவட்டக் கோயில்களின் களஞ்சியத் தொகுதியையும் சென்னை மாநகர்க் களஞ்சியத் தொகுதியையும் 17-5-87-ஆம் நாளில் காஞ்சிபுரம் தத்துவ மையத்திற்கு வந்திருந்த தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்களிடம் ஒப்புவித்துவிட்டு என் அலுவலிலிருந்து விலகிக்கொள்ள யான் விரும்பினேன். ஆனால் இவ்விருப்பத்தை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்து, அனைத்துக் கோயிற்களஞ்சியங்களையும் யான் எழுதித் தரவேண்டும் எனவும் தேவைப்படின் யான் முன்பு ஏழாண்டுகள் சைவ சித்தாந்தப் பெருமன்றத் தலைவராக இருந்ததை முன்னிட்டு அப்பெருமன்ற உறுப்பினர்களைக் கொண்டாயினும் இக்கோயிற் களஞ்சியப்பணியைச் செய்து முடித்துக் கொடுக்க வேண்டுமென்றும் கூறி, மேலும், இதற்காக வடஆர்க்காடு மாவட்டக் கோயில்களின் களஞ்சியம் எழுதி முடிக்க ஒரு திட்டம் வகுக்க 15-6-87-ஆம் நாளில் வேலூரில் ஒரு கூட்டம் நடத்த யான் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் அவர் விரும்பினார். இதற்கு மறுப்புக்கூற இயலாத நிலையில் யான் சிந்தித்துப் பார்த்ததில், சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் உறுப்பினர்களை இப்பணியில் ஈடுபடுத்துதலில் சிக்கல்கள் தோன்றக்கூடும் என அஞ்சித் தலைமைச் செயலகம் சென்று இதைப் பற்றி அறநிலையத்துறை அரசுச் செயலாளர் திரு.சுகவனேசரிடம் கலந்து உரையாடினேன். இவர் எனக்கு அறிமுகமாகாதவர். எனினும், யான் கூறியவற்றிற்குச் செவிசாய்த்துக் கோயில் அலுவலர்களையே கொண்டு அப்பணியை செய்துமுடித்துக் கொள்ளலாம் எனத் தெரிவித்து இதற்காக வடஆர்க்காட்டுக்கோயில் அலுவலர்களின் கூட்டம் வேலூரில் 15-6-87-ஆம் நாளில் நடத்தப்பட அரசு ஆணை பிறப்பிக்கப்பட உதவினார். இந்த

ஆணைக்கேற்ப, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருகலியாணசுந்தரம் தம் சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். இவ்வேற்பாட்டிற்கேற்ப 15-6-87-ஆம் நாளில் வேலூரில் துணை ஆணையாளர் திருசுவாமிநாதன் அவர்கள் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தைத் தொடங்கிவைத்த துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் கோயிற் களஞ்சியத்தின் சிறப்பை எடுத்துரைத்தார்.

கோயிற்கட்டுரைகளை ஒரு மாதத்தில் கோயில் அலுவலர்கள் எழுதித் தரவேண்டுமெனத் துணைஆணையாளர் திருசுவாமிநாதன் அவர்கள் அறிவுரை வழங்கினார். இவ்வறிவுரைக்கிணங்க, திரு அண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் நிருவாக உதவிஆணையாளர் திருசிதம்பரம் அவர்கள் மட்டுமே ஒருமாத கால அளவிற்குள் கட்டுரையை எழுதி அனுப்ப ஏற்பாடு செய்தார். மற்றக் கோயில் அலுவலர்களுக்கு உதவிஆணையாளர்கள் திரு.இராசமாணிக்கம் அவர்களும் திருதனபால் அவர்களும் நினைவூட்டுகள் அனுப்புதலின் மூலமாக நூற்றொரு கோயில்களின் கட்டுரைகள் பெறப்பட்டன. எஞ்சிய கோயில்களுக்குரிய கட்டுரைகளை எழுதி அனுப்புமாறு அந்த அந்தக் கோயில்களுக்குக் கடிதங்கள் எழுதப்பட்டன. என் கடிதங்களுக்கு மதிப்பு அளிக்கும் வகையில் தங்கள் கோயில்களின் கட்டுரைகளை எழுதியனுப்பியவர் சிலரே. அவர்களுள் சிறந்து விளங்கியவர் தேவிகாபுரம் கனககிரீசுவரர் கோயில் அறங்காவலர். இவர் தொடர்ந்து என்னால் எழுதப்பட்ட கடிதங்களுக்கு அவ்வப்போது வேண்டப்பட்ட விவரங்களைத் தந்து உதவினார். காவேரிப்பாக்கம் இராமாபுரம் திருசச்சிதானந்தம் அவர்கள் பன்னிரண்டு கோயில்களின் கட்டுரைகளை வரைந்து தந்தார். எஞ்சிய கோயில்களின் கட்டுரைகளைப் பூசை. ஆட்சிலிங்கம் எழுதினார். இவ்வகையில் 230 கோயில்கள் களஞ்சியத்தில் இடம் பெற்றுள்ளன. இக்கோயில்களஞ்சியத் தொகுதி அச்சிடப்பட்டுள்ளது.

கோயிற் களஞ்சியத்தில் தட்டச்சுப் பணியே அன்றி எனக்கு அவ்வப்போது தேவைப்பட்ட அலுவலகப் பணிகளையும் திருசு. கதிர்வேலு செய்து வருகிறார்.

திரு பூசை. சஆட்சிலிங்கம் அவர்கள், அறநிலையத்துறை கோயில் அலுவலர்கள் விவரம் தெரிவிக்காத பல கோயில்களுக்கும் சென்று பயன்தரும் விவரங்களைத் திரட்டி எனக்கு உதவி செய்து வருகிறார். கோயிற் களஞ்சியத் தொகுப்புப் பணியில் பேருதவி புரிந்துவரும் இவ்விருவருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பதிப்புத்துறை உதவி இயக்குநர் புலவர் சி.இளங்கோவன் அவர்கள் மெய்ப்புகளை மிகப் பொருத்தமாகவும் கவனமாகவும் திருத்தி எனக்கு உதவியதோடு தம் சிறந்த கருத்துகளையும் தெரிவித்தார். அவருடன் பணியாற்றும் பதிப்புத்துறை, அச்சகத்துறை பணியலுவலர்களும் கோயிற் களஞ்சியப் பணியில் பெருதவி செய்தார்கள். அனைவருக்கும் என் நன்றி உரித்தாகும்.

பல்லாண்டுகளாக நல்லார்பலர் உதவியொடு கோயில்கள் பற்றிய செய்திகளை

யெல்லாம் தொகுத்துக் களஞ்சியமாக்கியதன் பயனை எனக்களிக்கும் வகையில், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மதிப்புறு பதிவாளர் முனைவர் இராம. முத்தையன் அவர்களும் நூல்வடிவாக்கி வெளியீட்டு விழாவும் நடத்தி என்னைச் சேய்முகம் கண்ட தாயென மகிழச் செய்தார்கள்.

இவ்விரு பெருந்தகையாளர்களுக்கும் என்மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னை,
18-09-1991.

கோ. மு. முத்துசாமி பிள்ளை

# பொருளடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 01. | புவியியல் அமைப்பு | 1 |
| 02. | அரசியல் வரலாற்றுச் சூழ்நிலை | 4 |
| 03. | அரிய பெயர்களில் விநாயகர் | 13 |
| 04. | அருள் பாலிக்கும் விநாயகர் | 15 |
| 05. | சிவபெருமான் காட்சி | 17 |
| 06. | அண்ணாமலை அண்ணலும் உண்ணாமுலை உமையாளும் | 21 |
| 07. | சுயம்புலிங்கங்கள் | 23 |
| 08. | காசி விசுவநாதர் கோயில்கள் | 24 |
| 09. | அரிய பெயர்களில் விளங்கும் அம்பிகை | 24 |
| 10. | ஆனை காத்த அப்பன் | 25 |
| 11. | அஷ்டலட்சுமிகளின் அரிய திருவுருவங்கள் | 26 |
| 12. | விரும்பிப் போற்றப் பெறும் வேணுகோபாலர் கோயில்கள் | 26 |
| 13. | முருகப் பெருமான் மகிழ்ந்த திருத்தலங்கள் | 27 |
| 14. | ஆஞ்சநேயரின் அரிய கோலங்கள் | 29 |
| 15. | வீரபத்திரர் | 30 |
| 16. | பச்சையம்மன் கோயில்கள் | 30 |
| 17. | திரௌபதை கோயில்களும் தருமர் கோயில்களும் | 32 |
| 18. | சித்திரகுப்தர் | 32 |
| 19. | வசவேசர் | 33 |

| | | |
|---|---|---|
| 20. | திரிசூலம் (அத்திர தேவர்) | 33 |
| 21. | இந்து முகமதியர் கட்டடப் பாணி | 34 |
| 22. | வள்ளியம்மை வரலாற்றைக் கூறும் வள்ளிமலை | 34 |
| 23. | வடஆர்க்காடு மாவட்டத்தில் கார்த்திகைச் சிறப்பு | 39 |
| 24. | பனைவளம் கொண்ட வடஆர்க்காடு | 40 |
| 25. | தவச்சீலர்கள் திகழ் வடஆர்க்காடு | 41 |
| 26. | தோத்திரம் பற்றியும் சாத்திரம் பற்றியும் குறிப்பிடும் முதல் கல்வெட்டு | 46 |
| 27. | நில அளவுகோலும் கோயில் அளவுகோலும் | 48 |
| 28. | இராமர் கோயில்கள் | 48 |
| 29. | ஆனைகாத்த அப்பன் கோயில் | 51 |
| 30. | காசி விசுவநாதர் கோயில் | 52 |
| 31. | இராமச்சந்திரசுவாமி கோயில் | 54 |
| 32. | இரேணுகாம்பாள் கோயில் | 56 |
| 33. | இராமநாதீசுவரர் கோயில் | 61 |
| 34. | அகத்தீசுவரர் கோயில் | 62 |
| 35. | கரிய பெருமாள் கோயில் | 64 |
| 36. | உத்தமராசா பெருமாள் கோயில் | 66 |
| 37. | இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் | 66 |
| 38. | சுந்தர வரதராசர் கோயில் | 68 |
| 39. | வீரராகவப் பெருமாள் கோயில் | 68 |

| | | |
|---|---|---|
| 40. | தருமலிங்கேசுவரர் கோயில் | 70 |
| 41. | வீரபத்திரசாமி கோயில் | 72 |
| 42. | காமாட்சியம்மன் (எ) காளிகாம்பாள் கோயில் | 73 |
| 43. | சாமுண்டீசுவரி அம்மன் கோயில் | 74 |
| 44. | சீனிவாசப் பெருமாள் கோயில் | 76 |
| 45. | நாகநாதசுவாமி கோயில் | 77 |
| 46. | அரியாத்தம்மன் கோயில் | 79 |
| 47. | கில்லா வரதராசப் பெருமாள் கோயில் | 80 |
| 48. | வாணியப்பிள்ளையார் கோயில் | 82 |
| 49. | கரியமாணிக்கப் பெருமாள் கோயில் | 82 |
| 50. | பாலமுருகன் கோயில் | 83 |
| 51. | புவன மாணிக்கப் பெருமாள் கோயில் | 88 |
| 52. | வைத்தியநாத சுவாமி கோயில் | 91 |
| 53. | அகத்தீசுவரர் கோயில் | 92 |
| 54. | கரியமாணிக்கப் பெருமாள் கோயில் | 93 |
| 55. | கரைகண்டேசுவரர் கோயில் | 94 |
| 56. | இலட்சுமி நாராயணசுவாமி கோயில் | 95 |
| 57. | சப்த ரிஷீசுவரர் கோயில் | 96 |
| 58. | சுயம்புநாதர் கோயில் | 98 |
| 59. | கட்டேரியம்மன் கோயில் | 99 |
| 60. | இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் | 100 |

| | | |
|---|---|---|
| 61. | கரைகண்டேசுவரர் கோயில் | 101 |
| 62. | வன்னீசுவரர் கோயில் | 102 |
| 63. | அரி பிரசாதேசுவரர் கோயில் | 104 |
| 64. | கசேந்திரவரதர் கோயில் | 106 |
| 65. | வீரமாகாளியம்மன் கோயில் | 107 |
| 66. | திருக்கண்டேசுவரர் கோயில் | 108 |
| 67. | திருமாமுடீசுவரர் கோயில் | 109 |
| 68. | திருக்காரீசுவரர் கோயில் | 111 |
| 69. | நீலகண்டீசுவரர் கோயில் | 113 |
| 70. | ஆதிகேசவப் பெருமாள் கோயில் | 114 |
| 71. | கயிலாச நாதர் கோயில் | 114 |
| 72. | சுகநாதேசுவரர் கோயில் | 115 |
| 73. | சுப்பிரமணிய சுவாமி கோயில் | 117 |
| 74. | காசி விசுவநாதர் கோயில் | 117 |
| 75. | வேணுகோபால சுவாமி கோயில் | 118 |
| 76. | சென்னகேசவப் பெருமாள் கோயில் | 119 |
| 77. | விநாயகர் கோயில் | 120 |
| 78. | பால குஜாம்பாள் சமேத காங்கேசப் பெருமாள் திருக்கோயில் | 121 |
| 79. | சுந்தரவரதராசப் பெருமாள் கோயில் | 123 |
| 80. | சுப்பிரமணிய சுவாமி கோயில் | 124 |
| 81. | கரைகண்டேசுவரர் கோயில் | 128 |

| | | |
|---|---|---|
| 82. | சுப்பிரமணியர் கோயில் | 130 |
| 83. | சொர்ணமுகீசுவரர், ஓடைப்பிள்ளையார் கோயில் | 131 |
| 84. | திருக்காமீசுவரர் கோயில் | 132 |
| 85. | விசயராகவப் பெருமாள் கோயில் | 135 |
| 86. | கௌதமேசுவரர் கோயில் | 135 |
| 87. | பொன்னியம்மன், மண்டியம்மன் கோயில் | 136 |
| 88. | அழகிய இராமர் கோயில் | 137 |
| 89. | காளிகாம்பாள் கோயில் | 138 |
| 90. | கொங்கணீசுவரர் கோயில் | 139 |
| 91. | கோட்டை அபயவரதராசர் திருக்கோயில் | 141 |
| 92. | சுந்தரவிநாயகர் கோயில் | 144 |
| 93. | சுப்பிரமணியசுவாமி கோயில் | 145 |
| 94. | செல்லியம்மன் கோயில் | 146 |
| 95. | பஞ்சலிங்கேசுவரர் கோயில் | 146 |
| 96. | முத்தீசர் கோயில் | 148 |
| 97. | மூலத்துவாழியம்மன் திருக்கோயில் | 149 |
| 98. | பெருமாள் கோயில் | 150 |
| 99. | அகத்தீசுவரர் கோயில் | 150 |
| 100. | ஆதிகேசவப் பெருமாள் கோயில் | 152 |
| 101. | அகத்தீசுவரர் கோயில் | 153 |
| 102. | பூமீசுவரர் கோயில் | 154 |

| | | |
|---|---|---|
| 103. | கருப்புலீசுவரர் கோயில் | 157 |
| 104. | வாலீசுவரர் கோயில் | 160 |
| 105. | சென்ன கேசவப்பெருமாள் கோயில் | 164 |
| 106. | சோமீச்சுரர் கோயில் | 165 |
| 107. | காளத்தீசுவரர் கோயில் | 166 |
| 108. | வேங்கடரமணப் பெருமாள் கோயில் | 168 |
| 109. | சுந்தர வரதராசப்பெருமாள் கோயில் | 168 |
| 110. | திருக்கண்டீசுவரர் கோயில் | 170 |
| 111. | வாலீசுவரர் கோயில் | 175 |
| 112. | திரௌபதையம்மன் கோயில் | 176 |
| 113. | ஆற்றங்கரை விநாயகர் கோயில் | 176 |
| 114. | விருபாட்சீசுவரர் கோயில் | 177 |
| 115. | அகத்தீசுவரர் கோயில் | 179 |
| 116. | இலட்சுமி நாராயணப்பெருமாள் கோயில் | 180 |
| 117. | சுந்தரவரதராசர் கோயில் | 181 |
| 118. | திரிபுராந்தகேசுவரர் கோயில் | 182 |
| 119. | தருமராசர் கோயில் | 184 |
| 120. | தம்பேசுவரர் கோயில் | 184 |
| 121. | முக்குறுணி தாலிகாத்தம்மன் கோயில் | 186 |
| 122. | கரிவரதராசப் பெருமாள் கோயில் | 187 |
| 123. | சத்தியநாதர் கோயில் | 188 |

| | | |
|---|---|---|
| 124. | இடபேசுவரர் கோயில் | 189 |
| 125. | வேணுகோபாலப் பார்த்தசாரதிப் பெருமாள். கோயில் | 191 |
| 126. | மாரியம்மன் கோயில் | 193 |
| 127. | வீரபத்திரர் கோயில் | 194 |
| 128. | செல்வ விநாயகர் கோயில் | 195 |
| 129. | நரசிம்ம ஈசுவரர் கோயில் | 198 |
| 130. | கோதண்டராமர் கோயில் | 199 |
| 131. | சன்னாசிப் பட்டன் கோயில் | 200 |
| 132. | மாரியம்மன் கோயில் | 201 |
| 133. | சத்தியநாதேசுவரர் கோயில் | 202 |
| 134. | மாரியம்மன் கோயில் | 203 |
| 135. | வரதராசப் பெருமாள் கோயில் | 203 |
| 136. | இலட்சுமி நரசிம்மசுவாமி கோயில் | 204 |
| 137. | கங்காதரேசுவரர் கோயில் | 227 |
| 138. | சலநாதீசுவரர் கோயில் | 229 |
| 139. | சோமநாதீசுவரர் கோயில் | 242 |
| 140. | அக்கினீசுவரர் கோயில் | 243 |
| 141. | பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில் | 244 |
| 142. | சுப்பிரமணிய சுவாமி கோயில் | 245 |
| 143. | காளியம்மன் (எ) காமாட்சியம்மன் கோயில் | 246 |
| 144. | சுந்தரவீர ஆஞ்சநேயர் கோயில் | 247 |

# புவியியல் அமைப்பு

வட ஆர்க்காடு மாவட்டம் வடக்கு அட்சரேகை 12° முதல் 13° 15' வரையிலும் கிழக்குத் தீர்க்கரேகை 78° 20' முதல் 79° 50' வரைக்குள்ளாகவும் அமைந்துள்ளது. வடக்கில் ஆந்திர மாநிலச் சித்தூர் மாவட்டமும் தெற்கில் தென்னார்க்காடு மாவட்டமும் மேற்கே தருமபுரி மாவட்டமும் கிழக்கில் செங்கற்பட்டு மாவட்டமும் உள்ளன. தமிழகத்தின் மொத்தப் பரப்பாகிய 1. 30 இலட்சம் சதுர கிலோமீட்டர்ப் பரப்பில் இது 12,268 சதுர கிலோமீட்டர்ப் பரப்பைக் கொண்டுள்ளது.

இம்மாவட்டம் ஏரிகள் நிறைந்துள்ள மாவட்டமாகும். இவை பாசனத்திற்குப் பயன்படுகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்க ஏரிகள், காவேரிப்பாக்கம் ஏரியும் மாமண்டூர் ஏரியுமாகும். இவை ஒவ்வொன்றும் 20 சதுரகிலோமீட்டர்ப் பரப்புடையவை. சமுத்திரம் போன்று அகன்ற பரப்பையுடைய ஏரிகளைக் கொண்டுள்ளதால், இங்குள்ள பல ஊர்களுக்குச் சமுத்திரம் என்ற பெயர் வழங்கிவருகின்றது. எடுத்துக்காட்டுகளாக ஆரணிக்கருகில் உள்ள திருமலைசமுத்திரம்; போளூர் வட்டம் காலசமுத்திரம்; வந்தவாசி இரகுநாத சமுத்திரம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவை பாசன வசதியை மேம்படுத்த மன்னர்களால் வெட்டப்பெற்றவை. இம்மாவட்டத்தில் பல்லவ மகேந்திரவர்மனால் மகேந்திர தடாகம் என்னும் ஏரியும் குறும்பர்களால் குறும்பர் ஏரியும் வெட்டப்பட்டுள்ளன.

இம்மாவட்டம் முழுவதிலும் மலைகள் செறிந்துள்ளன. கிழக்குத் தொடர்ச்சி மலையின் சிலபகுதிகளான சவ்வாது மலைகள் இம்மாவட்டத்திலுள்ளன. ஏலகிரி மலையின் சில பகுதிகளும் இங்குள்ளன. இவை அகன்ற பரப்பையும் நெடிய உயரத்தையும் உடையவை. போளூர் வட்டத்திலுள்ள மலைகள் 2500 அடிக்கு மேல் உயரமுடையவை. இங்குள்ள மகாதேவமலையில் 2,000 அடி உயரத்தில் கோயில் ஒன்று அமைந்துள்ளது. மேற்செல்ல அமைந்துள்ள ஒற்றையடிப்பாதை 15 கிலோமீட்டர் நீளமுடையது. இதன் உச்சியில் மலைபோலுள்ள மண்மேடு ஒன்றின் மீது கோயில் அமைக்கப்பட்டுள்ளது. காஞ்சி போன்ற ஊர்களிலும் இத்தகைய மண்மலைகள் உள்ளன. திருவண்ணாமலையும் அதனைச் சார்ந்த சில மலைகளும் நெருப்பினால் வந்த மலைகள் என்று புவியியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இம்மாவட்டத்தை வளப்படுத்துபவை பாலாறு, சேயாறு மற்றும் அவற்றின்

துணை ஆறுகளும் ஆகும். கன்னடநாட்டு நந்திமலையில் உற்பத்தியாகும் பாலாறு வாணியம்பாடி வட்டத்தின் வழியாக இம்மாவட்டத்தில் புகுந்து வளப்படுத்தி வாலாசா வட்டத்தில் பிரிந்து செங்கற்பட்டு மாவட்டத்திற்குச் செல்கிறது. இம்மாவட்டத்தில் உருவாகும் கமண்டலநதி குடியாத்தத்திற்கு அருகிலும் கோட்டாறு ஆம்பூரிலும் பாலாற்றோடு கலக்கின்றன. சித்தூர் மாவட்டத்தில் பொன்னை எனப்படும் நீலாநதி இராணிப்பேட்டைக்கருகில் பாலாற்றுடன் கூடுகிறது.

பாலாற்றுக்கு அடுத்தபடியாக இம்மாவட்டத்தை வளப்படுத்தும் செய்யாறு சவ்வாது மலையில் உற்பத்தியாகி இம்மாவட்டத்தை வளப்படுத்தியபின் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள முக்கூடலில் பாலாற்றுடன் கலக்கிறது. இது தவிர, தென்பெண்ணையாறு செங்கம் வட்டத்தில் பாய்ந்து பின் தென்னார்க்காடு மாவட்டத்தில் பாய்கிறது.

இயற்கைச் செல்வமான காடுகளைக் கொண்டிருப்பதில் இம்மாவட்டம் மிகவும் பெருமை படைக்கிறது. இங்கு ஏறத்தாழ 3,18,887 எக்டேர் பரப்பில் காடுகள் செழித்து வளர்ந்துள்ளன. இக்காடுகளின் பரப்பு இம் மாவட்டத்தின் மொத்தப்பரப்பில் 26 சதவீதமாகும். தமிழ்நாட்டில் உள்ள காடுகளின் மொத்தப்பரப்பில் இது 16 சதவீதமாகும். பண்டைக்காலம் தொட்டுக் காடுகளைப் பெற்றிருப்பதால், இது முல்லை சார்ந்த இடமாகக் கருதப்படுவது குறிப்பிடத்தக்கது. காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலத்தைக் குறிக்கும். முல்லை நிலத்திற்குரிய பாடி என்று முடியும் பெயர்களை உடைய ஊர்கள் இங்கு மிகுதியாக உள்ளன. காட்டின் செல்வத்துடன் கால்நடைச் செல்வத்தாலும் இம்மாவட்டம் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது.

இம்மாவட்டத்தில் மிகப்பெரிய மைய நெடுஞ்சாலை தருமபுரி மாவட்டத்திலிருந்து வாணியம்பாடி, பள்ளிகொண்டா, வேலூர், காஞ்சிபுரம் வழியாகச் சென்னையை அடைகிறது.

தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரையிலிருந்து ஒரு சாலை, செங்கம் சென்று இரண்டாகப் பிரிந்து, ஒன்று தேவிகாபுரம் வழியாக வந்தவாசியையும் மற்றொன்று திருவண்ணாமலை வழியாக வேட்டவலத்தையும் அடைந்து விழுப்புரத்தையும் இணைக்கின்றன. சென்னை-சித்தூர் சாலை இம்மாவட்டத்தில் திருவலம் வழியாகச் செல்கிறது.

மாவட்ட நெடுஞ்சாலைகளுள் ஒன்று திருக்கோயிலூரில் தொடங்கிச் சித்தூரில் முடிகிறது. இடையில் திருவண்ணாமலை, தேவிகாபுரம், போளூர், வேலூர் ஆகியவற்றை இஃது இணைக்கிறது.

சென்னையையும் சேலத்தையும் இணைக்கும் அகன்ற இருப்புப்பாதை அரக்கோணம், ஆம்பூர், வாணியம்பாடி வழியாகச் செல்கிறது. விழுப்புரம் சந்திப்பில் தொடங்கும் குறுகிய இருப்புப்பாதை திருவண்ணாமலை, போளூர், வேலூர் குடியாத்தம் வழியாக நெல்லூர் வட்டம் பக்கலா சந்திப்பில் முடிகிறது.

அரக்கோணத்திலிருந்து அகன்ற இருப்புப்பாதை இரேணுகுண்டாவுக்குச் செல்கிறது. செங்கற்பட்டிலிருந்து குறுகிய இருப்புப்பாதை காஞ்சிபுரம் வந்து திருமாற்பேறு, தக்கோலம் வழியாக அரக்கோணத்தை அடைகிறது. இம்மாவட்டத்திலுள்ள பெரும்பான்மையான கோயில்களுக்கு இருப்புப் பாதை வசதிகளும் பேருந்து வசதிகளும் உள்ளன.

இம்மாவட்டம் 30-9-89-ஆம் நாளில் வேலூர் அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர் என இரண்டு மாவட்டங்களாகக் கீழ்க்காணுமாறு பிரிக்கப் பட்டுள்ளது.

**வேலூர் அம்பேத்கார் மாவட்டம் - தலைநகர்-வேலூர்**

| **வருவாய்க் கோட்டங்கள்** | | **வட்டங்கள்** |
|---|---|---|
| 1. இராணிப்பேட்டை | - | 1. ஆர்க்காடு<br>2. வாலாசா<br>3. அரக்கோணம் |
| 2. வேலூர் | - | 1. வேலூர்<br>2. குடியாத்தம் |

**திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் - தலைநகர்-திருவண்ணாமலை**

| **வருவாய்க்கோட்டங்கள்** | | **வட்டங்கள்** |
|---|---|---|
| 1. திருவண்ணாமலை | - | 1. திருவண்ணாமலை<br>2. செங்கம்<br>3. போளூர் |
| 2. செய்யாறு | - | 1. செய்யாறு<br>2. வந்தவாசி<br>3. ஆரணி |

# அரசியல் வரலாற்றுச் சூழ்நிலை

வட ஆர்க்காடு மாவட்டம் அடர்ந்த காடுகள் நிறைந்த தொண்டைமண்டலத்து முல்லை நிலப்பரப்பாகும். இம்மாவட்டப்பகுதிகளில் முற்காலத்தில் குறும்பர்கள் வாழ்ந்திருந்தார்கள் என்பதை இம்மாவட்டத்துத் திருப்பத்தூர் வட்டத்திலுள்ள குறும்பேரி என்னும் ஊரின் பெயரே ஒருவாறு காட்டுகிறது. குறும்பர்களின் ஆதிக்கத்தை ஒழித்தவர்கள் சோழர்கள். இச்சோழர்களின் சோழமண்டலத்திலிருந்து பிரிக்கப்பட்ட நிலப்பரப்பை, அச்சோழர் மரபைச் சேர்ந்த ஒருபிரிவினர் ஆண்டுவந்தார்கள். இவர்கள் சோழமண்டலத்துச் சோழர்களின் ஆத்தி மாலையை விடுத்துத் தொண்டைமாலையைக் கைக்கொண்டனர். இதன் அடிப்படையில் இவர்கள் "தொண்டைமான்கள்" என்னும் பெயரில் விளங்கினார்கள். அவர்கள் ஆண்ட நிலப்பரப்பிற்குத் தொண்டைமண்டலம் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இத்தொண்டைமான்களுள் முதல்வன் தொண்டைமான் இளந்திரையன். இவன் சங்ககால இலக்கியங்களுள் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப் படையில் புகழப்பெற்றுள்ளான். இம்மன்னனுக்குப் பின், அரசேற்ற தொண்டைமான்களின் ஆட்சி கி. பி. நான்காம் நூற்றாண்டோடு முடிவுற்றது.

கி. பி. 4-ஆம் நூற்றாண்டிலே ஆந்திரநாட்டிலிருந்த பல்லவர்கள் தமிழகத்தின் மீது படையெடுத்து, முதலில் காஞ்சியைக் கைப்பற்றிப் பின்னர்த் தொண்டைமண்டலத்தை ஆளத் தொடங்கினார்கள். கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு வரையிலும் நிகழ்ந்த இப்பல்லவராட்சி, தமிழ்நாட்டின் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது. இவர்கள் இங்குச் சூழ்ந்திருந்த காடுகளை வெட்டி நாடாக்கியதால், இவர்கள் "காடு வெட்டிகள்" என்னும் பெயரும் தாங்கினார்கள். இவர்களின் ஆட்சியில் பல கோயில்கள் விளக்கம் பெற்றன; பலவகைக் கலைகள் வளம்பெற்றன. பல்லவ மன்னர்களுள் பெருஞ்சிறப்போடு ஆட்சிபுரிந்தவன் மகேந்திரவர்மன் (கி. பி. 600-630). இம்மன்னன் வாலாசாப்பேட்டை வட்டத்தில் சோளிங்கருக்கு அருகில் மகேந்திர தடாகம் என்னும் ஏரியையும் மகேந்திரவாடி என்னும் நகரையும் அமைத்து அங்கு முராரி விட்டுணு கிரகம் குகைக் கோயிலையும் அமைத்தான். மேலும் தூசிமாமண்டூர் குகைக் கோயிலையும் வந்தவாசி வட்டம் மாமண்டூர் குகைக் கோயிலையும் வந்தவாசி வட்டத்தில் தம்பேசுவரர் கோயில் என்னும் குடைவரைக் கோயிலையும் இம்மன்னன் உருவாக்கினான்.

இப்பல்லவர்கள் காலத்தில் சோளிங்கபுரத்தில் ஒரு கல்லூரி (கடிகை) இருந்தது எனவும் அதில் பல்லவ இளவரசர்களும் கங்கநாட்டு இளவரசி அரங்கப் பதாகைப் பிராட்டியும் கல்வி கற்றார்கள் எனவும் கூறுவர். கி. பி. 9-ஆம் நூற்றாண்டில், தலைமை நிலைக்காகப் பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் இடையே கடும்போர்

இடைவிடாமல் நிகழ்ந்தது. பல்லவமன்னன் மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 835_860) மாறவல்லப பாண்டியனைத் (கி.பி. 815_862) தெள்ளாற்றங்கரையில் வென்றான். தெள்ளாறு வந்தவாசி வட்டத்திலுள்ள ஊராகும். இவன் இப்போரில் எய்திய வெற்றிக்குப் பின்னர்த் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் எனப் புகழப் பெற்றான். இவன் மீது தமிழ்க் கலம்பக நூல் ஒன்று இயற்றப்பெற்றது. இக்கலம்பகம் நந்தி கலம்பகம் என்னும் பெயரில் தமிழ் இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

குடியாத்தம் வட்டம், திருவலம் வில்வநாதீசுவரர் கோயில் மகாமண்டபத்தின் வடக்குச்சுவரில் கோவிசயநந்தி விக்கிரமவர்மன் காலத்துக் கல்வெட்டும் இதற்கு அருகிலுள்ள பாறையில் இம்மன்னனின் மற்றொரு கல்வெட்டும் காணப்படுகின்றன. இவன் பல்லவமன்னன் நிருபதுங்கனின் (885_890) தந்தையும் இராட்டிரகூட மன்னன் அசோகவர்மனின் மருமகனும் ஆவான் என அரசுக் கல்வெட்டாராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

பல்லவராட்சி கி. பி. 897_ஆம் ஆண்டில் அபராசித பல்லவனோடு முடிவடைந்தது. இதன் பின்னர்ச் சோழமன்னன் விசயாலயன் தலைமையில் சோழர் ஆட்சி வளர்ச்சியுற்றது. இம்மன்னன் கல்வெட்டு இம்மாவட்டத்துப் போளூர்க் காப்பலூர் திருக்காமேசுவரர் கோயிலில் காணப்படுகிறது.

விசயாலயன் மகன் முதலாம் ஆதித்தன் (கி. பி. 871_907) காலத்துக் கல்வெட்டுகள் அரக்கோணம் வட்டம் காவேரிப்பாக்கம் சுந்தர வரதராசப்பெருமாள் கோயிலிலும் திருவலம் வில்வநாதீசுவரர் கோயிலிலும் அரக்கோணம் வட்டம் தக்கோலம் சலநாதீசுவரர் கோயிலிலும் காணப்படுகின்றன. இம்மன்னன் இராட்டிரகூட இரண்டாம் கிருட்டிண தேவனின் மகளை மணந்து கொண்டான். முதலாம் ஆதித்தன் மகன் முதலாம் பராந்தகன் (905_955) சோழர் ஆட்சியை விரிவாக்கினான். இவன் காலத்துக் கல்வெட்டுகள் அரக்கோணம் வட்டம் திருமாற்பேறு கோயிலிலும் தக்கோலம் சலநாதீசுவரர் கோயிலிலும் காணப்படுகின்றன.

இவன் தன்மகள் வீரமாதேவியை, இராட்டிரகூட மன்னன் கிருட்டின தேவனின் பேரனும் மூன்றாம் இந்திரன் மகனுமான நான்காம் கோவிந்தனுக்குத் திருமணம் செய்து கொடுத்திருந்தான். இந்நான்காம் கோவிந்தன் நாட்டுமக்களின் வெறுப்பைப் பெற்று அரசு அதிகாரிகளின் நல்லுறவை இழந்தான். இச்சூழ்நிலையில் இவனுடைய சிறிய தந்தையின் மகனாகிய கிருட்டினன் என்பவன் நான்காம் கோவிந்தனிடமிருந்து நாட்டைக் கைப்பற்றித் தன் தந்தையிடம் ஒப்புவித்தான். நாடிழந்த நான்காம் கோவிந்தன் தன் மனைவியுடன் சோழநாடு சென்று தன் மாதுலன் முதலாம் பராந்தகன் ஆதரவில் வாழ்ந்து வந்தான். கிருட்டினனின் தந்தை கி. பி. 940_ஆம் ஆண்டில் இறக்க, கிருட்டினன் பட்டம் எய்த முயன்றபோது, நான்காம் கோவிந்தன், மாதுலன் முதலாம் பராந்தகன் அனுப்பிய சேனையின் உதவிகொண்டு கிருட்டினனை எதிர்த்துப் போரிட்டுத் தோல்வியுற்றான். அதன்பின் நான்காம் கோவிந்தனைப் பற்றிய செய்தி யாதும் தெரியவில்லை. வெற்றிபெற்ற கிருட்டினன் அதன் பின்னர் மூன்றாம் கிருட்டினன் என வரலாற்றில் இடம்பெற்று

நாட்டை ஆளத் தொடங்கினான். ஒன்பது ஆண்டுகளாகப் படைகளைப் பெருக்கிச் சோழநாட்டின் மீது படையெடுத்தான். சோழநாட்டின் வடபகுதியைத் தன் பொறுப்பில் வைத்திருந்த முதலாம் பராந்தகனின் முதல் மகன் இராசாதித்தன் மூன்றாம் கிருட்டினனை எதிர்த்துப் போரிட்டான். இப்போர் தக்கோலத்தில் நிகழ்ந்தது. இதில் இராசாதித்தன் இறந்தான். இவ்வகையில் தொண்டைநாட்டை மூன்றாம் கிருட்டினன் கைப்பற்றி 28 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். இவன் காலத்துக் கல்வெட்டுகள் செய்யாறு வட்டம் உக்கல் பெருமாள் கோயிலிலும் தக்கோலம் சலநாதீசுவரர் கோயிலிலும் காணப்படுகின்றன.

முதலாம் பராந்தகனின் மூன்றாம் மகன் அரிஞ்சயனும் (கி.பி. 956-957) அரிஞ்சயனின் மகன் இரண்டாம் பராந்தகன் (கி.பி. 957-963) எனப்பெறும் சுந்தரசோழனும் தொண்டை மண்டலத்தை மூன்றாம் கிருட்டினனிடமிருந்து மீட்க முயற்சிகள் மேற்கொண்டு ஓரளவு வெற்றியும் கண்டார்கள். சுந்தர சோழன் மகன் பாண்டியன் முடித்தலை கொண்ட இரண்டாம் ஆதித்தன் (கி.பி. 964-969) அரசேற்றான். இக்காலத்தில் கி.பி. 968-ஆம் ஆண்டில் மூன்றாம் கிருட்டினன் இறந்தான். இதன்பின்னர் இராட்டிரகூட ஆட்சி இறுதி அடைந்தது. தொண்டைமண்டலம் மீண்டும் சோழர் ஆட்சிக்குள்ளாயிற்று. உத்தம சோழனுக்குப் பின்னர் (கி.பி. 969-985) முதலாம் இராசராசச்சோழன் அரசேற்றான். இவன் காலத்துக் கல்வெட்டுகளை திருமாற்பேறு மணிகண்டீசுவரர் கோயில், திருவோத்தூர் வேதபுரீசுவரர் கோயில் முதலியவற்றில் காணலாம். திருவலத்திற்கு வடக்கில் நீவா நதிக்கரையில் அமைந்துள்ள சோமநாதீசுவரர் கோயிலுக்கு அருகில் அரிஞ்சிகை ஈசுவரம் என்னும் கோயிலை இராசராசச்சோழன் அமைத்தான். இஃது அவன் பாட்டனான அரிஞ்சயன் உடல் பள்ளிப்படுத்தப்பட்ட பள்ளிப்படைக் கோயிலாகும்.

இராசேந்திர சோழன் (கி.பி. 1013-1044) கல்வெட்டுகள் திருமாற்பேறு மணிகண்டீசுவரர் கோயில், செய்யாறு வட்டம் திருப்பனங்காட்டூர் தாலபுரீசுவரர் கோயில், திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் முதலியவற்றிலும் விக்கிரமசோழன் (கி.பி. 1118-35) கல்வெட்டு செய்யாறு வட்டம் திருவோத்தூர் வேதபுரீசுவரர் கோயிலிலும் காணப்படுகின்றன.

முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070-1125) கல்வெட்டு தக்கோலம் சலநாதீசுவரர் கோயிலில் காணப்படுகிறது. மருதாடு விக்கிரமசோழநல்லூர் என்னும் பெயரில் இருந்துவந்தது என்பதை இக்கல்வெட்டால் அறியலாம். இங்குள்ள கோயில் கல்வெட்டில், இம்மன்னன் பெயருக்கு முன் "சுங்கம் தவிர்த்து இருள் நீக்கி உலகாண்ட" என்று குறிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் இராசராசன் (கி.பி. 1166-1182) கல்வெட்டுகள் செய்யாறு வட்டம் அத்தி கிராமத்திலுள்ள அகத்தீசுவரர் கோயிலிலும் கரிய பெருமாள் கோயிலிலும் உள்ளன. மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1218) கல்வெட்டுகள் திருவோத்தூர் வேதபுரீசுவரர் கோயில், திருமாற்பேறு மணிகண்டீசுவரர் கோயில், செங்கம் இடபேசுவரர் கோயில், திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் முதலியவற்றில் உள்ளன. மூன்றாம் இராசராசன் (கி.பி. 1216-1246) ஆட்சியும் மூன்றாம் இராசேந்திர சோழன் (கி.பி. 1246-1279) ஆட்சியும்

சோழர் ஆட்சியின் கடைசிக் கட்டத்தலைவையாகும். மூன்றாம் இராசராசன் காலத்திய கல்வெட்டு ஒன்று வாணியம்பாடி அதிதீசுவரர் கோயிலில் உள்ளது.

பின்னர் வடக்கே நெல்லூர்ப்பகுதியில் தெலுங்குச் சோழர்கள் தோன்றினார்கள். தாங்கள் கரிகால்சோழன் பரம்பரையினர் எனக் கூறிக்கொண்டு முதலில் படைத்தலைவராகப் பணியாற்றிப் பின்னர் அரசுரிமை கொண்டாடிய இத்தெலுங்குச் சோழர்களுள் குறிப்பிடத்தக்க மன்னன் விசயகண்ட கோபாலன் (கி.பி. 1250-1291) ஆவான். இம்மன்னனின் மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டுகள் திருவலம் வில்வநாதீசுவரர் கோயிலிலும் அரக்கோணம் காவேரிப்பாக்கம் சுந்தரவரதராசப்பெருமாள் கோயிலிலும் காணப்படுகின்றன.

பழைமைக் காலத்துச் சோழர் பரம்பரையினர் தாங்கள் எனத் தெலுங்குச் சோழர்கள் உரிமை கொண்டாடியதைப் போன்று பழைமைக் காலத்துப் பல்லவர் மரபினர் தாங்கள் என்று உரிமை கொண்டாடிய சிலர் சிற்றரசர்களாகிப் பின்னர்த் தனியுரிமை மன்னர்களாக விளங்கினார்கள். இத்தகையவர்களுள் கோப்பெருஞ்சிங்கன் ஒருவனாவான். இவன் கல்வெட்டுகள் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலில் காணப்படுகின்றன.

இக்காலத்தில் தொண்டைமண்டலத்து மன்னர்களிடையே ஒற்றுமையின்மையைப் பயன்படுத்திக்கொண்டு சோழமன்னரைக் காப்பாற்றுவார் போல, ஓய்சலர் தொண்டைமண்டலத்தில் மன்னர்களின் ஆட்சியில் தலையிட்டார்கள். ஓய்சலர்களுள் புகழ்வாய்ந்த படைத்தலைவன் கோபய்ய தண்ட நாயகன் தன் படைகளைச் செலுத்திக் கோப்பெருஞ்சிங்கனை அடக்கி அப்போது தன் அரசுப்பதவி இழந்திருந்த மூன்றாம் இராசராசனை ஆட்சியில் அமர்த்தினான். திருப்பத்தூர் நகரிலுள்ள பிரமேசுவரர் கோயிலில் ஓய்சல மன்னர் வீரவல்லாளதேவர் (3) (கி.பி. 1291-1342) கல்வெட்டும் வீரராமநாதாவின் மகனும் சோமேசுவரனின் பேரனுமாகிய, ஓய்சல மன்னர் வீர விசுவநாததேவர் கல்வெட்டும் காணப்படுகின்றன.

அடுத்துப் பாண்டிய மன்னர்கள் ஆட்சி ஓங்கியது. பெரும்புகழ் வாய்ந்த சடாவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1256-1266) ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டு செய்யாறு வட்டம் திருவத்திபுரம் வேதபுரீசுவரர் கோயிலில் காணப்படுகிறது. காவேரிப்பாக்கம் சுந்தரவரதராசப் பெருமாள் கோயிலிலும் இம்மன்னன் கல்வெட்டொன்று உள்ளது. இம்மன்னன், மூன்றாம் இராசேந்திரசோழன், கோப்பெருஞ்சிங்கன், விசயகண்ட கோபாலன் முதலியோர்களை வென்று வீராபிடேகம் செய்து கொண்டவன்.

தொண்டைமண்டலத்தில் சடாவர்மன் சுந்தரபாண்டியன் தலைமையில் ஓங்கி உயர்ந்து நின்ற பாண்டியர் ஆட்சி அவனுக்குப் பின்னர்த் தளர்ந்தபோது, வடஆர்க்காடு பகுதிகளிலும் செங்கற்பட்டுப் பகுதிகளிலும் சோழர்களின் ஆட்சியின் கீழ்த் திறை செலுத்தி அதிகாரம் செலுத்தி வந்த சம்புகுலச் சம்புவராயர்களுள் செங்கேணிமிண்டான் அத்தி மல்லன் சம்புவராயன் என்பவன் குறிப்பிடத்தக்க மிகப்

பழமையானவன். இவன் மூன்றாம் குலோத்துங்கனின் 8-ஆவது ஆட்சி ஆண்டில் (கி.பி.1186) திருவலம் வில்வநாதீசுவரர் கோயிலுக்குக் குற்றத்தண்டம், திரிசூலக்காசு ஆகியவற்றால் கிடைக்கப்பெற்ற வருவாயை அளித்தான் என அக்கோயில் கல்வெட்டு கூறுகிறது.

மூன்றாம் குலோத்துங்கனது 11-ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 1189) விக்கிரமசோழன் சம்புவராயன் என்கிற செங்கேணி அம்மையப்பன் கண்ணுடையபெருமான் என்போன் பலவரிகளால் கிடைக்கப்பெற்ற வருவாய்களைத் திருவலம் வில்வநாதீசுவரர் கோயிலுக்கு அளித்தான். செங்கேணி மிண்டான் அத்திமல்லன் சம்புவராயனுக்கு இச்செங்கேணி அம்மையப்பன் கண்ணுடைய பெருமாள் என்ன முறையுடையான் என்பது தெரியவில்லை. செங்கேணி அம்மையப்பன் கண்ணுடைய பெருமாள் சம்புவராயன் மகன் இராசராச சம்புவராயன் என்கிற எதிரிலி சோழ சம்புவராயன்; இவன் மகன் சிற்றம்பலமுடையான் பிள்ளைப் பல்லவராயன். இம்மன்னன் காலத்தில் சிங்களப் படையினர் பாண்டிய நாட்டைத் தாக்கியதால் பல கோயில்கள் இடிக்கப்பட்டன. சிங்களப் படைகளை எதிர்க்க, இச்சமயத்தில் பாண்டிய மன்னன் குலசேகர பாண்டியனுக்குச் சோழ மன்னர்கள் உதவி புரிந்தார்கள். அப்போது சோழர் படைக்குச் சிற்றம்பலமுடையான் பிள்ளைப் பல்லவராயன் தலைமை தாங்கி வீரத்தோடு சிங்களப்படையை எதிர்த்தான்.

இந்நிலையில் எதிரிலி சோழ சம்புவராயன், தன் மகன் இவ்வாறு உதவிபுரியச் சென்றதைக் காஞ்சிபுரத்திற்கு அருகில் ஆரப்பாக்கத்தில் எழுந்தருளியிருந்த உமாபதி தேவராகிய ஞானசிவதேவரிடம் முறையிட, அவர் இதைப்பற்றிக் கவலையுற்று இதைக் குறித்து இருபத்தெட்டு நாள்கள் இரவும் பகலும் தவம் செய்தார். இதன் பின்னர் எதிரிலி சோழ சம்புவராயனுக்கு அவன் மகன் சிற்றம்பலமுடையான் பிள்ளைப் பல்லவராயனிடமிருந்து ஒரு திருமுகம் வந்தது. அதில், சிங்களப் படையினர் தோல்வியுற்றுச் சென்றுவிட்டமை தெரிவிக்கப்பட்டிருந்தது. இத்திருமுகத்தை எதிரிலி சோழப் பல்லவராயன் ஆரப்பாக்கம் சுவாமிகளிடம் காட்டினார். அதைப்பார்த்து அவர் மகிழ்ச்சியடைந்தார். சுவாமிகளின் தவ ஆற்றலைப் பாராட்டும் வகையில் அவன் ஆரப்பாக்கம் கிராமத்தையே அப்பெரியவருக்கு அளித்தான் என்பதை ஆரப்பாக்கம் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. மேலும், இவன் அரக்கோணம் வட்டம் விரிஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ளதும் தற்போது பொய்கை எனப்பெறும் இராசேந்திர சோழநல்லூர்ச் சித்திரமேழிமலை, புத்தூர், அத்தியூர் ஆகிய கிராமங்களை கி. பி. 1238, 1239, 1243 ஆகிய ஆண்டுகளில் தேவதானமாக அளித்தான் எனவும் பொய்கைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இக்கிராமங்கள் கேரள வணிகர் அதிஇராமன் என்பவனிடம் இம்மன்னன் பொன் கொடுத்து வாங்கியவை. இவன் அத்திமல்லன் சம்புக்குலப் பெருமான் இராசகம்பீரச் சம்புவராயன் என்னும் பெயரில் விளங்கினான்.

இவன் வேலூருக்கு அருகிலுள்ள படைவீட்டில் ஒரு கோட்டை கட்டிச் சோழமன்னர்களுக்குத் திறை செலுத்தாது தனி அரசு செலுத்தி வந்தான். ஆரணிக்கு அருகில் உள்ள விருபாட்சீசர் கோயிலும் ஆற்றங்கரை விநாயகர்

கோயிலும் உள்ள ஊருக்குத் தற்போது சம்புவராயர் நல்லூர் என்னும் பெயர் வழங்கிவருகிறது. இவ்வூர் இச்சம்புவராயன் நினைவாக எழுந்தது எனத் தோன்றுகிறது.

கி. பி. 1352-ஆம் ஆண்டில் தொண்டை மண்டலத்தின் வடக்கெல்லையிலிருந்த உதயகிரிப் பகுதி முதலாம் கம்பண்ணாவின் மகன் சாயனஉடையார் ஆட்சியிலிருந்தது. இதுவே விசயநகர மன்னராட்சியின் தொடக்க நிலையாகும். அடுத்து இங்கு முதலாம் புக்கர் ஆட்சிபுரிந்த காலத்தில் அவன் மகன் குமாரகம்பண்ணா (இரண்டாம் கம்பண்ணா) தெற்குநோக்கி எழுந்த முகலாயர் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தப் புறப்பட்டான். முதலில் கி.பி. 1361-ஆம் ஆண்டில் சம்புவராயரின் இராசகம்பீரக் கோட்டையைக் கைப்பற்றினான். இராசநாராயண சம்புவராயர் தனக்குத் திறை செலுத்தி வரவேண்டும் என்னும் நிபந்தனையின் பேரில் கம்பண்ணர் தான் வென்ற நாட்டை இராசநாராயண சம்புவராயனிடமே ஒப்புவித்து விட்டுச் சென்றுவிட்டான்.

கம்பண்ணாவின் சகம் 1291 (கி.பி. 1370)-ஆம் ஆண்டுக் கல்வெட்டு செய்யாறு வட்டம் திருப்பனங்காட்டூர் திருத்தாலேசுவரர் கோயிலிலும் சகம் 1295 (கி.பி. 1374)-ஆம் ஆண்டுக் கல்வெட்டு அரக்கோணம் வட்டம் காவேரிப்பாக்கம் சுந்தரவரதராசப் பெருமாள் கோயிலிலும் காணப்படுகின்றன. கம்பண்ணா கி.பி. 1374-ஆம் ஆண்டில் இறந்தபின்னரும் அவன் தந்தை பொக்கண்ணா கி.பி. 1377-ஆம் ஆண்டு வரையில் அரசாண்டான். அடுத்துப் பொக்கண்ணாவின் மகன் அரிகரன் கி.பி. 1377-ஆம் ஆண்டுவரையில் ஆட்சிபுரிந்தான். இவன் அரிகரன் அரியண்ணா எனக் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகிறான். அரியண்ணா உடையார் சகம் 1299 (கி.பி.1378)-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலில் காணப்படுகிறது. அரியண்ணா உடையார் மகன் விருப்பண்ண உடையார். விருப்பண்ண உடையார் சகம் 1310 (கி.பி.1379)-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றும் சகம் 1311 (கி.பி.1380)-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்றும் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலிலும் சகம் 1310 (கி.பி.1379)-ஆம் ஆண்டுக் கல்வெட்டு திருப்பனங்காட்டூர்த் தாலபுரீசுவரர் கோயிலிலும் காணப்படுகின்றன.

அரியண்ண உடையார் கி.பி. 1404-ஆம் ஆண்டில் இறந்தபின்னர், அவன் மக்களுக்குள் அரசுரிமை பற்றித் தகராறு நேரிட்டது. இயர்களுள் முதலாம் விருப்பாட்சனிற்குப் பின்னர் இரண்டாம் பொக்கண்ணாவும் இப்பொக்கண்ணாவிற்குப் பின் முதலாம் தேவராயனும் பட்டம் எய்தினார்கள். முதலாம் தேவராயன் சகம் 1320 (கி.பி.1399)-ஆம் ஆண்டுக் கல்வெட்டு பனங்காட்டூர்த் திருத்தாலேசுவரர் கோயிலில் காணப்படுகின்றது. முதலாம் தேவராயன் ஆட்சி கி.பி. 1406-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1422-ஆம் ஆண்டு வரையில் நீடித்திருந்தது. பின்னர் இவன் மகன் இரண்டாம் தேவராயன் கி.பி. 1422-ஆம் ஆண்டு முதல் 1466-ஆம் ஆண்டு வரை அரசாண்டான். இவனது சகம் 1340 (கி.பி.1419)-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலில் காணப்படுகிறது. இவனுக்குப் பின் இரண்டாம் விசயராயனும் அடுத்து விசயராயன் மகன் மல்லிகார்ச்சுனனும் அரசு செலுத்தினார்கள். மல்லிகார்ச்சுனனின் சகம் 1381

(கி.பி.1460)-ஆம் ஆண்டுக் கல்வெட்டுகள் காவேரிப்பாக்கம் சுந்தரராசப் பெருமாள் கோயிலிலும் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலிலும் காணப்படுகின்றன. மல்லிகார்ச்சுனனுக்குப் பின் அவன் மகன் இரண்டாம் விருப்பாட்சன் கி.பி. 1465-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1485-ஆம் ஆண்டு வரையில் ஆண்டான். இக்காலத்தில் விசயநகர ஆட்சியை எதிர்த்துப்படையெடுத்த, ஒரிசா கசபதி மன்னன் படைகளையும் பாமினி சுல்தான் படைகளையும் எதிர்த்து அவர்களை விரட்டச் சாளுவ நரசிம்மன் அரும்பாடுபட்டான். இவன் அப்போது தற்போதுள்ள தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்கள் அடங்கிய பகுதிக்கு ஆளுநராக இருந்தவன். இரண்டாம் விருப்பாட்சன் இறந்தபின்னர் பதவிக்காக விருப்பாட்சனின் மக்கள் இருவருக்குள் தகராறு தோன்றிற்று. இதில் இருவரும் இறக்கவே, சாளுவ நரசிம்மன் கி.பி. 1486-ஆம் ஆண்டில் அரசைக் கைப்பற்றிக் கொண்டான். இம்மன்னன் காலத்திலிருந்து சாளுவர் பரம்பரை தொடங்கிற்று.

இம்மன்னனின் சகம் 1401 (கி.பி. 1480)-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஆரணி வட்டம் தேவிகாபுரம் பெரியநாயகி கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. இம்மன்னன் கி.பி.1491 ஆம் ஆண்டு இறந்தான். அடுத்து இவன் மகன் இம்மடி நரசிம்மன் அரசேற்றான். சாளுவ நரசிம்மனின் கீழ்ப்பணிபுரிந்தோர் இவன் நினைவாகத் தேவிகாபுரம் சமாபுங்க தீட்சிதருக்கு ஒருநிலம் அளித்ததைத் தேவிகாபுரம் பெரியநாயகிகோயில் சகம் 1425 (கி.பி. 1504)-ஆம் ஆண்டுக் கல்வெட்டு தெரிவிக்கிறது. இம்மடி நரசிம்மன் கி.பி.1505 ஆம் ஆண்டில் இறந்தான். இம்மன்னன் சகம் 1429 (கி.பி. 1508)-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, தேவிகாபுரம் பெரிய நாயகி கோயிலில் காணப்படுகிறது.

இச்சமயத்தில் இம்மடி நரசிம்ம நாயக்கரின் படைத்தலைவனாக இருந்த நரச நாயக்கன் அரசைக் கைப்பற்றிக் கொண்டான். நரசநாயக்கன் மக்கள் வீரநரசிம்மன், கிருஷ்ணதேவராயர், அச்சுததேவராயன் ஆகிய மூவரில் நரச நாயக்கருக்குப் பின் அவன் மகன் வீரநரசிம்மன் கி.பி. 1505-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1509-ஆம் ஆண்டு வரையில் அரசாண்டான். பின்னர்க் கிருட்டிணதேவராயன் ஆட்சி கி.பி. 1509-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1529-ஆம் ஆண்டு வரை சிறப்பாக அமைந்தது. ஏறக்குறைய தென்னிந்தியப் பகுதி முழுதும் இவர்தம் ஆட்சியின் கீழ் அமைந்தது. புனிதக் கோயில்கள் பலவற்றிற்குச் சென்று வழிபாடாற்றி அவற்றிற்கு நன்கொடைகள் அளித்து வந்ததும் தன் தந்தை நரசநாயக்கர், தாயார் நாகலாதேவி ஆகியோர்களின் நினைவாகச் சில அறச்செயல்கள் புரிந்ததும் அக்காலத்தில் போற்றப்பட்டன. கிருட்டின தேவராயன் திருவண்ணாமலை அருணாசலீசுவரர் இராசகோபுரம் கட்டியதையும் திருமண மண்டபம் அமைத்ததையும் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இம்மன்னர் கல்வெட்டுகள் தேவிகாபுரம் பெரியநாயகி கோயிலிலும் செய்யாறு வட்டம் அத்தி அகத்தீசுவரர் கோயிலிலும் பரவலாகக் காணப்படுகின்றன.

அடுத்து அச்சுததேவராயன் (கி.பி. 1530-1542) தனது ஆட்சிக்காலத்தில் பல திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடாற்றி அவற்றிற்கு நன்கொடைகள்

அளித்துள்ளான். அவன் கல்வெட்டுகள் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலிலும் தேவிகாபுரம் பெரியநாயகி அம்மன் கோயிலிலும் ஆரணி வட்டம் பூண்டி கரைகண்டீசுவரர் கோயிலிலும் காணப்படுகின்றன. அச்சுததேவராயனுக்குப் பின்னர்ச் சதாசிவராயன் கி.பி. 1542 முதல் கி.பி. 1565–ஆம் ஆண்டு வரையில் அரசாண்டான். இம்மன்னன் காலத்துக் கல்வெட்டுகள் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலிலும் தேவிகாபுரம் பெரியநாயகி கோயிலிலும் உள்ளன. சதாசிவராயன் ஆட்சிக்காலத்தில் அம்மன்னனின் அமைச்சன் இராமராயன் ஒப்பற்ற ஆதிக்கம் செலுத்தி வந்தான். அக்காலத்தில் தட்சிணச் சுல்தான்கள் விசயநகர ஆட்சியை எதிர்த்து கி.பி. 1565–ஆம் ஆண்டில் தலைக்கோட்டையில் போரிட்ட போது விசயநகர ஆட்சி தோல்வியுற்றது. இராமராயன் சிறைப்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டான். இத்தோல்விக்குப் பின்னரும் சதாசிவராயன் ஆட்சி நீடித்திருந்திருக்கிறது. இராமராயன் உடன்பிறந்தான் திருமலை கி.பி. 1570–ஆம் ஆண்டில் அரசைக் கைப்பற்றி விசயநகராட்சியை மீண்டும் நிலைப்படுத்த முயன்றான். இதிலிருந்து விசயநகர அரவீடு பரம்பரை தொடங்கிற்று. திருமலை, நாட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்துத் தெலுங்குப் பகுதிக்கு உதயகிரியைத் தலைநகராக்கி அதன் பொறுப்பைத் தன் முதல் மகன் ஸ்ரீரங்காவிடமும் ஸ்ரீரங்கப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்ட கர்நாடகப் பகுதியை இரண்டாம் மகன் இராமராவிடமும் ஒப்புவித்தான். சந்திரகிரியைத் தலைநகராகக் கொண்ட தமிழகப்பகுதியைத் தன் அடுத்த மகன் வேங்கடபதியிடம் ஒப்புவித்தான். வேங்கடபதி, தலைநகராக இருந்த சந்திரகிரியைவிடுத்து வேலூரில் குடியேறினான். வேலூர் இவனது தலைநகராயிற்று. வேங்கடபதி வேலூர் மன்னர் எனப் போற்றப் பெற்றான்.

இவ்வேங்கடபதி மன்னர் (கி.பி. 1586–1614) விசயநகராட்சியை நிலைப்படுத்தப் பல முயற்சிகள் மேற்கொண்டார். சந்திரகிரியைத் தலைநகராகக் கொண்டிருந்த இவர், வேலூரரை கி.பி. 1606–ஆம் ஆண்டு முதல் இரண்டாம் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தார். வேலூர்க் கோட்டையை அமைத்தார். சூரியகுண்டம் என்னும் குளத்து நீர் இக்கோட்டையின் அகழிக்குப் பாயும் படிச் செய்தார். இவ்வேங்கடபதி வேலூர் மன்னர் எனப் புகழப்பெற்றார். இக்காலத்தில் வேலூர்க்கோட்டைப் பகுதியில் சலகண்டேசுவரர் கோயில் அமைக்கப்பட்டது. இவர் காலத்தில் பொம்ம நாயக்கன் என்னும் சிற்றரசன் இருந்தான் என்பதைக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இச்சிற்றரசனே சலகண்டேசுவரர் கோயிலை நிறுவியவன் ஆவான். இக்கோயிலின் நுழைவாயிலில் பொம்ம நாயக்கன் தன் துணைவியுடன் சிற்ப வடிவில் தன்னை அறிவித்துக் கொண்டிருக்கிறான்.

வேங்கடபதிக்குப் பின்னர்ப் பெத்த வெங்கடப்பா (கி.பி. 1630–1642) ஆட்சியை ஏற்றார். அவர்தம் உறவினர் சீரங்கா என்பவரைச் சந்திரகிரிக்கு ஆளுநராக நியமித்துவிட்டு, அவர் வேலூரில் வாழத் தொடங்கினார். இதே சமயத்தில் இவர் ஓர் ஏற்பாடு செய்தார். வேங்கடபதி (கி.பி. 1586–1614) மன்னரின் படைத்தலைவராக இருந்தவரும் காளத்தி வேலுகோட்டி குடும்பத்தைச் சேர்ந்தவருமாகிய சென்னா என்பவரின் மக்களான தார்மல வேங்கட்டப்பா, தார்மல அய்யப்பா ஆகிய

இருவரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்புவித்தார். வடஆர்க்காடு மாவட்டத்தில் வந்தவாசிப் பகுதியின் பொறுப்பைத் தார்மல வேங்கடப்பா ஏற்றுக்கொண்டார்.

பெத்தவேங்கடப்பாவிற்குப் பின்னர் அவர் உறவினர் சீரங்கா சந்திரகிரியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். கி.பி.1645_ஆம் ஆண்டில் பீசப்பூர் கோல்கொண்டாப் படைகள் சீரங்காவின் தலைநகராகிய வேலூரை முற்றுகையிட்டன. இதில் சீரங்கா தோற்றார். வேலூரில் அவர் குடியிருந்த அரண்மனையை முசுலிம் படையினர் கைப்பற்றினர். கோல்கொண்டா ஆட்சி நிலைப்படுத்தப்பட்டது. கி. பி. 1645_ஆம் ஆண்டில் சீரங்கா திருப்பதிக்குச் சென்றுவிட்டார். அவரோடு விசயநகராட்சி இறுதியடைந்தது.

கோல்கொண்டா சுல்தான் அப்துல் குடுப்சா இப்பகுதியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். கி. பி. 1674_ஆம் ஆண்டில் இவருக்குப் பின் இவர் மருமகன் ஹாசன் குடுப்சா ஆட்சியை ஏற்றார்.

கி. பி. 1686_ஆம் ஆண்டில் சிவாஜி தென்னாடு நோக்கி வந்து செஞ்சியை முற்றுகையிட்டார். பின்னர் வேலூரையும் முற்றுகையிட்டார். வேலூரில் பீசப்பூர் படைக்குத் தலைமை தாங்கிய அப்துல்லா, சிவாஜி படைகளிடம் சரணடைந்தார். பின்னர் ஔரங்கசீப்பின் முகலாயர் படைகள் தெற்கே படையெடுத்தன. இப்படையெடுப்பைச் சிவாஜியின் புதல்வர் எதிர்த்தார். கி. பி. 1689_ஆம் ஆண்டில் ஔரங்கசீப் படையினர் சிவாஜியின் புதல்வர் சாம்பாசியைப் பிடித்து அவருக்குக் கொடுந்துன்பம் விளைவித்தனர். இதன் காரணமாக அவர் இறந்தார். சாம்பாசியின் உடன்பிறந்தார் மராட்டிய மன்னரானார்.

செஞ்சியைக் கைப்பற்றிய பின்னர் ஔரங்கசீப்பின் தென்னிந்தியப் படைத்தலைவர் சுல்பிகார் கருநாடகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். அவருக்குப் பின் அவரிடம் பணியாற்றிய தாத்கான் பொறுப்பேற்றார். இவர் சிறிதுகாலம் செஞ்சியில் வாழ்ந்து பின்னர் ஆர்க்காட்டில் குடியேறினார். இம்முறையில் ஆர்க்காடு கருநாடகத்தின் தலைநகராயிற்று. இவரது ஆட்சிப்பிரிவைச் சேர்ந்த சையத் முசாபர், ஆர்க்காடு சாதத் உல்லாகான் கி. பி. 1710_ஆம் ஆண்டில் நவாப் ஆனார். இவர் ஆட்சியிலும் இவர் பின் வந்த தோஸ்த் அலி ஆட்சியிலும் (ஏறக்குறைய 30 ஆண்டுகள்) நாடு ஓரளவு அமைதியாகவும் நன்றாகவும் அமைந்தது.

கி. பி. 1724, 1740 ஆகிய ஆண்டுகளில் மராத்தியர் படையெடுப்புகளும் கி. பி. 1742_ஆம் ஆண்டில் ஹைதராபாத் நைசாம் படையெடுப்பும் நேர்ந்தன. இதில் ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே போர் மூண்டது. ஆங்கிலேயர்கள், கிளைவ் தலைமையில் பாலாற்றிற்கு வடக்கிலிருந்த பகுதியை அக்காலத்துக் கருநாடக நவாப் மகமது அலிகான் சார்பில் கைப்பற்றினர். கி. பி. 1801_ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் கருநாடக நவாப்பிடம் கருநாடக நாட்டைப்பெற்றுக்கொண்டு அவருக்கு ஓய்வூதியம் அளித்தார்கள். கி. பி. 1806_ஆம் ஆண்டில் இந்தியப் படையினர் வேலூர்க் கோட்டையில் ஆங்கிலேயருக்கு எதிராகக்

கிளர்ந்தெழுந்து சுதந்தர உணர்ச்சியை வெளிப்படுத்தினார்கள். அதன் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சி இம்மாவட்டத்தில் தொடர்ந்து நிலைபெற்றிருந்தது.

(1. இராசா நாராயண சம்புவராயன் இறந்த பின்னர் அவன் வழிவந்தவர்கள் விசயநகர மன்னர் ஆட்சியில் குறுநில மன்னர்களாகச் சிலகாலம் இருந்தார்கள். இவர்கள் செல்வாக்கு, காலப்போக்கில் ஒடுங்கிற்று. இவர்களின் வழியில் தோன்றியவர்கள் இன்றும் வேலூருக்கு அருகில் படைவீட்டுப் பகுதியில் வாழ்கிறார்கள்.)

# அரியபெயர்களில் விநாயகர்

பிற இடங்களில் விளங்கிவருவதைப் போன்று, இம்மாவட்டத்திலும் கற்பகவிநாயகர், சத்திவிநாயகர், சுந்தரவிநாயகர், வரசித்தி விநாயகர் முதலிய பெயர்களில் விநாயகர் விளங்குகின்றார். இம்மாவட்டத்தில் அரிய பெயர்களில் விளங்கும் விநாயகரைப் பற்றி இங்குக் காண்போம்.

மனிதர்களால் நிறுவப்படாமல் தானே தோன்றும் சிவலிங்கம் சுயம்பு லிங்கமாகும். சுயம்புலிங்கத்தைப் போன்று தானே தோன்றிய விநாயகரை இம்மாவட்டத்தின் தலைநகராகிய வேலூரில் காணலாம். இவ்விநாயகர் சேண்பாக்கம் செல்வவிநாயகர் என்னும் பெயரில் மிகச் சிறப்பாக வழிபடப்பெறுகிறார்.

இவ்விநாயகருக்கு வரலாறும் ஒன்றுள்ளது. கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் முகம்மதுகான் மகன் அப்துல்கான் வேலூரில் ஆட்சி புரிந்துவந்த காலத்தில் மராட்டிய நாட்டு அமைச்சர். துக்கோசிராவ் தம் படையோடு இம்மாவட்டத்து வேலூரை அடைந்தார். அப்போது அவர் கேள்வியுற்ற செய்தி, இளைஞர் ஒருவர் சிலர் முன்னிலையில் தோன்றி, வேலூர்க் கோட்டையை அமைக்கக் கல்கொண்டுவந்த வண்டி ஒன்று தாக்கியதால் தம் முதுகில் அடிபட்டதாகவும் அதனால் இக்காயம் நேர்ந்ததென்றும் கூறித் தம் முதுகில் இருந்த காயத்தைக் காட்டிவிட்டு மறைந்தாரென்றும் அவர் மறைந்த இடத்தை உடனே தோண்டிப் பார்த்தபோது, அங்கு விநாயகர் திருவுருவச் சிலையொன்று குருதி வழிந்த நிலையில் காணப்பட்டது என்பதுமாகும். இச்செய்தியைத் தம் செவிகளில் ஏற்றுக்கொண்ட துக்கோசிராவ் உடனடியாக அந்த இடத்தில் விநாயகர் கோயில் ஒன்றை அமைத்தார். தாம் மேற்கொண்ட திட்டத்தில் தமக்கு வெற்றி கிடைக்குமெனில் இக்கோயிலை மேலும் சிறக்குமாறு செய்வதாகப் பலர் அறியப் பகர்ந்தார். இந்நிலையில் வேலூரை ஆட்சிபுரிந்த மகமதுகான் மனம் மாறி வேலூர்க்

கோட்டையைத் துக்கோசிராவிடம் ஒப்படைத்துவிட்டுத் தாம் வேலூருக்கு அருகில் தனி இருப்பிடம் அமைத்துக்கொண்டு வாழ்வாராயினார். அஃது இப்போதும் அப்துல்லாபுரம் என்னும் பெயரில் இருந்து வருகிறது. அதன்பின்னர் துக்கோசிராவ் இக்கோயிலுக்குச் செய்த திருப்பணி குறிப்பிடத்தக்கதாகும். அவர் திருப்பணியால் அன்று சிறந்த முறையில் வளர்ச்சி எய்திய இக்கோயில் இப்போதும் மாபெருங்கோயிலாகக் காட்சியளிக்கிறது.

இக்கோயிலின் முன்புறம் செண்பகவனம் என்னும் பூந்தோட்டம் இருந்தது; அதில் மக்கள் குடியேறினர். அது சேண்பாக்கம் என்னும் கிராமமாயிற்று. இக்கோயிலில் மீனாட்சிசுந்தரேசுவரர், சுப்பிரமணியர் முதலியோர் சந்நிதிகளும் உள்ளன. சித்திரைத் திங்களிலும் சித்திரைப் பௌர்ணமியிலும் புட்பப் பல்லக்கு விழாவும் ஆடிமாதத்தில் இலட்சத்தீப விழாவும் சங்காபிடேகமும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன. சித்திரை முதல் நாளும் சனவரி முதல் நாளும் பெருந்திரளாக மக்கள் இக்கோயிலுக்கு வருகிறார்கள். இக்கோயிலில் ஒரே நேரத்தில் நான்கு திருமணங்கள் நடத்தக்கூடிய அளவுக்கு இடவசதி இருக்கிறது. இக்கோயிலில் ஆண்டொன்றுக்கு நானூறு திருமணங்களுக்கு மேல் மிகக் குறைந்த கட்டணத்தில் சிறப்பாகச் செய்து வைக்கப்படுகின்றன. ஒரே நேரத்தில் பத்துத் திருமணங்கள் நடைபெறுவதற்கேற்பத் திருமண மண்டபம் ஒன்று தற்பொழுது கட்டப்பட்டு வருகிறது.

வேலூரிலிருந்து 15 கிலோமீட்டர்த் தொலைவில் வள்ளி மலை இருக்கிறது. வள்ளி முருகப்பெருமானை மணக்க மறுத்தபோது முருகப்பெருமான் விநாயகரை நினைவுகூர விநாயகர் யானை வடிவில் வள்ளியை அச்சுறுத்தினார். இவ்வாறு அச்சுறுத்தப் பெற்ற வள்ளி, முருகப்பெருமானை ஏற்றுக்கொள்ள முற்பட்டாள். அதன்பின்னர் விநாயகரின் யானை வடிவம் கல்லாகி விட்டது. அது தற்போது கணேசகிரி எனப்படுகிறது. வள்ளிமலையில் இன்றும் இந்த யானை வடிவத்தைக் காணலாம். வள்ளியை முருகப்பெருமானுக்குத் திருமணம் செய்துகொடுத்த காலத்தில், வள்ளியை வளர்த்த நம்பிராசன் வள்ளியைத் தாரை வார்த்து அளிக்கும் காட்சியைப் போல நீர்த்தாரைச் சுவடுகள் இங்கு ஒரு பாறை அருகே காணப்படுகின்றன. இப்பாறை அடியில் இப்போது விநாயகர் உருவங்கள் நிறுவப்பெற்றுள்ளன.

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலில் வல்லாள மகாராசர் கோபுரத்திற்கு அருகிலுள்ள விநாயகர் சம்பந்த விநாயகர் ஆவார். இத்திருவுருவம் மூன்று மீட்டர் உயரத்தில் மிக எடுப்பாக இருக்கின்றது. திருவண்ணாமலை ஞானகிரி எனவும் ஞானமலை எனவும் போற்றப்படுகிறது. ஞானத்தோடு சம்பந்தப்படுத்துதலால், இங்குள்ள இவ்விநாயகர் ஞானசம்பந்த விநாயகர் என்னும் பெயரில் திகழ்கிறார்.

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலில் கிளிமண்டபத்திற்கு அருகில் 'யானை திறைகொண்ட விநாயகர்' திருவுருவம் உள்ளது. இவரைப் பற்றிய வரலாறு

ஒன்றுள்ளது. வடநாட்டிலிருந்து வந்து திருவண்ணாமலையில் தங்கியிருந்த அகிலன் என்னும் சிற்றரசன் அடியார்களுக்கும் அந்நகரத்தவர்களுக்கும் மிக்க இடையூறு விளைவித்து வந்ததாகவும் இதனை உணர்ந்த குகை நமச்சிவாயர் என்னும் பெருஞ்சான்றோர்,

சூலம் கரத்திருக்கச் சோதிமழு வாளிருக்க
ஆலமுண்ட கண்டத் தருளிருக்க - மேலும்
எரிவிழி தானிருக்க இந்நாட்டுச் சோணேசர்
தரித்ததென்ன காரணமோ தாம்.

என்னும் பாடலைக் கூறித் துதித்ததாகவும் அன்றிரவு அச்சிற்றரசன் கனவில் விநாயகக் கடவுள் தோன்றி மிகவும் அச்சுறுத்தியதாகவும் அவன்தன் தவற்றை உணர்ந்து நல்லவனாக மாறி விநாயகரை வழிபட்டு அவருக்குச் சில யானைகளைத் திறையாக அளித்ததாகவும் அந்த வரலாற்று அடிப்படையில் இவ்விநாயகருக்கு யானை திறைகொண்டவிநாயகர் என்னும் பெயர் வழங்குவதாகவும் கூறப்படுகிறது. சிவப்பிரகாச சுவாமிகள் தாம் இயற்றிய சோணசைல மாலையின் முதற் பாட்டில் இவரைத் துதித்து வணங்கியுள்ளார்.

விநாயகர், திருமால் கோயில்களிலும் இடம்பெறுகிறார். குடியாத்தம் வட்டத்தில் பள்ளிகொண்டா உத்தரரங்கநாதர் கோயிலில், கருடன் சந்நிதிக்கு மேலுள்ள மண்டபத்தின் மீது கோயில் மணிக்கதவு உள்ளது. இக்கதவின் இருபுறங்களிலும் துவாரபாலகர் திருவுருவங்கள் காணப்படுகின்றன. இத் துவாரபாலகர்களின் திருவுருவங்களுக்கு மேலாக 'தும்பிக்கைஆழ்வார்' எனப்பெறும் விநாயகர் திருவுருவம் காணப்படுகிறது.

விநாயகரின் உலாத்திருமேனிகளைப் பொறுத்தவரையில், ஆறுமுகங்களைக் கொண்ட நர்த்தன விநாயகர் செங்கம் இடபேசர் கோயிலிலும் திருவோத்தூர் வேதபுரீசுவரர் கோயிலிலும் காணலாம். விநாயகப்பெருமானின் முப்பத்திரண்டு திருவுருவங்களைத் திருவண்ணாமலைச் சம்பந்த விநாயகர் சந்நிதி நாடகச் சட்டத்தில் காணலாம்.

## அருள்பாலிக்கும் விநாயகர்

கணபதி, கணேசர், பிள்ளையார் என்னும் தனிப்பெயர்களில் விளங்கும் விநாயகர், அடைமொழிகள் பல ஏற்று அந்த அந்த அடைமொழிக்கேற்ப ஆங்காங்கு அருள்புரிகிறார்.

ஆரணி தேவிகாபுரத்தில் ஆலமரத்தடியில் வீற்றிருந்து அருள்புரிந்து வந்ததால், இங்கு அவர் ஆலடி விநாயகர் எனவும் ஆரணி சம்புவராயநல்லூரில் ஆற்றங்கரையில் அமர்ந்து அருள்புரிதலால், ஆற்றங்கரை விநாயகர் எனவும் ஆர்க்காடு கலவை, குடியாத்தம் ஏரித்தாங்கல், குடியாத்தம் வஞ்சூர், செய்யாறு செங்காடு, செய்யாறு தென்கழனி, செய்யாறு பெருங்காட்டூர் ஆகிய தலங்களில் எழுந்தருளியுள்ள இவர், கோரியவற்றையெல்லாம் கற்பக விருட்சம் போன்று அருள்வதால் கற்பக விநாயகர் எனவும் பெயர்பெற்று விளங்குகிறார்.

செய்யாறு கனிகிலுப்பையில் குழந்தை வடிவில் கனிவுடன் அருள்புரிவதால் குழந்தை விநாயகர் எனவும் குடியாத்தம் கொத்தமங்கலம், வந்தவாசி சென்றாயம்பாளையம், வாணியம்பாடி, பள்ளிப்பட்டு, வாலாசாப்பேட்டை ஆகிய தலங்களில் தம்மை வழிபடுவோர் செயல்கள் சித்தியடையுமாறு அருள்புரிவதால் சித்திவிநாயகர் எனவும் அரக்கோணம், காவேரிப்பாக்கம், குடியாத்தம் வேப்பூர், செய்யாறு மண்ணூர், வந்தவாசி கொளப்பலூர், வேலூர்க் கீழ்ப்பள்ளிப்பட்டு, வேலூர் கோவிந்தவாடி ஆகிய தலங்களில் அழகின் சிகரமாய் விளங்கி அருள்புரிவதால், இவர் சுந்தர விநாயகர் எனவும் அழைக்கப்பெறுகிறார்.

வந்தவாசி, சேம்பூர் ஆகிய தலங்களில் அழகிய மூர்த்தி வடிவில் அருள்புரிவதால் இங்குச் சுந்தரமூர்த்தி விநாயகர் எனவும் அரக்கோணம் வேட்டங்குளம், ஆர்க்காடு சின்னஉப்புப்பேட்டை, குடியாத்தம் பிச்சனூர், குடியாத்தம் மோடிக்குப்பம், செங்கம் நத்தவாடி, செய்யாறு திருமணி, செய்யாறு மல்லபுரம், செய்யாறு மாத்தூர், வேலூர்ச் செண்பாக்கம், போளூர்த் தேவராயம்பாளையம், ஆம்பூர் ஆகிய தலங்களில் செல்வங்களெல்லாம் அளித்து அருள்புரிவதால் செல்வ விநாயகர் எனவும் வேலூர்ப் பள்ளி கொண்டாவில் பிரகாசமாய் விளங்கி அருள்புரிவதால் பிரகாச விநாயகர் எனவும் செய்யாறு வடமாத்தூர் ஆகிய தலங்களில் மாணிக்கம் போல் மதிப்பிடத்தக்க முறையில் இவர் அருள்புரிவதால் மாணிக்க விநாயகர் எனவும் விளங்கி வருகிறார்.

குடியாத்தம் தரணம்பேட்டை, குடியாத்தம் பனமடங்கி, செங்கம் தென்முடியனூர், (கீழ் நாய்க்கன் பாளையம்) திருவண்ணாமலை ஆணாப்பிறந்தான், திருவண்ணாமலை கர்ணாம்பூண்டி ஆகிய தலங்களில் முத்துப்போன்று மதிப்பிடத்தக்க முறையில் அருள்புரிவதால் முத்துவிநாயகர் எனவும் ஆரணி காமக்கூர், ஆர்க்காடு, அரக்கோணம், குடியாத்தம் காந்திநகர், போளூர்வெண்மணி, வேலூர் வேப்பங்குளம், செய்யாறு பிரம்மதேசம், வந்தவாசி அன்மருந்தை ஆகிய தலங்களில், கோரப்படும் வரங்களைச் சித்தி விளைவிக்கும் முறையில் அளிப்பதால், இங்குச் சித்தி விநாயகர் எனவும் செய்யாறு நெடுங்காலில் உள்ளத்தூய்மை உண்டாகும் முறையில் அருள்புரிவதால் இங்கு வெள்ளை விநாயகர் எனவும் போற்றப்பெறுகிறார்.

# சிவபெருமான் காட்சி

## அடிமுடி தேடிய வரலாறு

தங்களுக்குள்ளே போர்புரிந்துகொண்ட பிரமதேவர்தம் அகமும் திருமாலது அகமும் இருண்டன போல உலகமெங்கும் இருளடையத் தொடங்கியவுடனே, தேவர்கள் முதல் யாவரும் அஞ்சினர். இந்நிலை நீடிக்குமானால் உயிர்கள் அழிய நேரிடுமே எனக்கருதி இருவருக்கும் உண்மை நிலையை உணர்த்தினால்தான் அவர்கள் உய்வார்கள்; உலகமும் உய்யும் எனத் திருவுள்ளங்கொண்ட எம்பெருமான் அவர்கள் முன்பாக ஒரு சோதி மலையாக நின்றார். அது சமயம் "இச்சோதியின் அடிமுடியைக் காண்பீர்களானால் உங்கள் வலிமையைச் சிவபெருமான் அறிந்து கொள்வார்" என்பதான .ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. அச்சோதியின் அடியைக் காண்பதற்குப் பன்றிவடிவாய் அடியைக் காண முயன்றார் திருமால். பிரமன் அன்னப் பறவை வடிவாய் முடியைக் காண முயன்றார். பல காலம் தேடியும் இருவர் செய்த முயற்சிகளும் பலிக்கவில்லை. மயக்கமடைந்த நிலையில் அவர்கள் தவிக்கும்போது, 'ஓம்" என்பதான மூல மந்திரம் எழுந்தது. அஃது அகரம், உகரம், மகரம் நாதமாகப் பிரிந்து அச்சோதியின் வலப்புறத்து அகரம் பிரிந்து பிரமதேவரையும் இடப்பக்கத்து உகரம் பிரிந்து திருமாலையும் நடுவில் தோன்றிய மகரம் உருத்திரனையும் நிலை நிறுத்தியது. வலப்பாகத்திலிருந்தும் இடப்பாகத்திலிருந்தும் தோன்றிய பிரமதேவர், திருமால் ஆகிய இவ்விருவரைக் காட்டிலும் சிவபெருமானது உள்ளத்தினின்றும் தோன்றிய உருத்திரர் மேலானவர் என்பதையும் மகேசுவரருக்கும் சதாசிவமூர்த்திக்கும் மேலான நிலையில் பரமசிவம் விளங்குவதையும் அடிமுடி தேடிய திருமாலும் பிரமதேவரும் கண்கூடாகக் கண்டுணர்ந்தனர். நான்கு வேதங்களும் சிவபெருமானே தலைவர் என்பதாக விரித்தும் தொகுத்தும் இயம்பின. இவை யாவும் உண்மையே என்பதைக் காட்டும் வகையில் சிவபெருமான் சோதியில் சிறந்த சோதியாய் மேலும் பிரகாசமாய்க் காட்சியளித்தார். பிரமதேவரும் திருமாலும் தங்கள் அஞ்ஞானத்தைப் போக்கிக் கொண்டனர்.

பின்னர்ச் சிவபெருமானை வணங்கித் தாங்கள் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டனர். அவ்விருவரையும் நோக்கி "மாயையில் மயங்கிச் செருக்குற்றீர்கள். உங்களுக்கு அறிவுறுத்தவே திருவுள்ளங் கொண்டோம். முன்னாளிலே பஞ்சாட்சரத்தையும் ஞான சங்கிதைகளையும் தந்தோம். அவற்றை மறந்து அஞ்ஞானத்தை அடைந்தீர்கள்; ஞானம் பெறாவிடில் உங்கள் கடமைகளை அதிகாரப் பூர்வமாக நீங்கள் செய்தல் அரிது" என்பதாகச் சிவபெருமான் அருளினார். இவ்வாறு அறிவுறுத்திய பின்னர் முன் போலவே

அவர்கள் தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட தொழில்களை இயற்றுமாறு அவர்களுக்குச் சிவபெருமான் அருள்புரிந்தார். அப்போது அச்சோதி சுருங்கிச் சிவலிங்க வடிவமான ஒரு மலையாயிற்று. அச்சோதி தோன்றிய இரவு சிவராத்திரி ஆயிற்று. அச்சோதி மலையே அருணாசலம் ஆயிற்று. இதுவே இன்று திருவண்ணாமலை எனப் பெயர் பெற்று விளங்குகிறது. இந்நிகழ்ச்சி நடைபெற்ற நாள் மாசி மாதம் அமர பக்கம் சதுர்த்தசி திதியாகும்.

இவ்வாறு அடிமுடி தேடிய திருமால், பிரமதேவர் யாவர் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். நாம் வசிக்கும் உலகத்தைப் போன்ற பல அண்டங்களிலும் நாம் வாழும் உலகத்திலுள்ள உயிர்த் தொகுதிகளைப் போன்று கணக்கிடுதற்கரிய உயிர்த் தொகுதிகள் அங்கும் உள்ளன என்பதாக நூல்கள் கூறுகின்றன. ஆன்ம வர்க்கங்களில் சிறந்த தவங்கள் புரிந்து நற்பத மெய்தியவர்களை அந்த அண்டங்களுக்குப் படைத்தல் தொழிலோ காத்தல் தொழிலோ புரியுமாறு முழுமுதற் கடவுள் நியமிப்பார். இவர்கள் பிரம, விட்டுணு என்னும் பெயருடன் இருப்பர். இவர்கள் காரியேசுவரர் அல்லது அனுபக்கம் எனச் சாத்திரங்களில் குறிக்கப்படுகின்றார்கள். இவ்வகையில் பிரம விட்டுணுக்கள் பல்வேறு காலத்தில் இருந்திருக்கின்றனர் எனக் கொள்ளவேண்டும். இவ்வுண்மையை,

"நூறு கோடி பிரமர்கள் நொங்கினர்
ஆறு கோடி நாரணர் அங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவ னீச னொருவனே."

என்று அப்பர் கூறுவதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

இத்தகைய அதிகாரங்களை ஒரு கற்ப காலத்தில் இருந்த பிரமதேவரும் திருமாலும் தங்களது உண்மை நிலையை அறிந்துகொள்ளாமல் படைத்தல், காத்தல் தொழில்களுக்குத் தாங்களே பரமகாரணர் எனத் தருக்கி மயங்கி, தங்களுக்குள்ளே தாம் தாமே தலைவர் என்பதாகக் கருதி ஒருவரோடு ஒருவர் விரோதம் கொண்டனர். பின்னர், இவ்விருவருக்கும் போர் நிகழ்ந்தது. இதன் விளைவாக அவர்கள் சிவசோதியின் அடிமுடிதேடும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்கள் ஆன்ம வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாதலால், இவர்களுக்கு இது சமயம் அகந்தை மேலிட்டது என்பதை நன்குணர்ந்து கொண்டால் அடிமுடி தேடிய வரலாற்றின் அடிப்படைத் தத்துவத்தை அறிந்துகொள்ள இயலும்.

இவ்வரலாற்றில் திருவடி தேடிய திருமாலிலும் வேறுபட்ட சிவபெருமானின்றும் வேறுபடாத் திருமால் சிவபெருமானுக்குத் தேவியாகப் போற்றப்படுகிறதை அநேக சாத்திரங்களில் காணலாம். "மாதாய மாலவனை மாயவனை" எனத் திருமழிசை ஆழ்வார் குறிப்பிடுகிறார். "அரியலால் தேவியில்லை" என்பதாகக் குறிப்பிடுகிறார் அப்பர். மேலும் "ஒருவருக்குப் பெயர் அரன்; மற்றொருவருக்குப் பெயர் நாராயணன். ஒருவருக்கு வாகனம் இடபம்; மற்றொருவருக்கு வாகனம் கருடன். ஒருவரைப் பொறுத்தமட்டில் பிரமாணம்

ஆகமம்; மற்றொருவரைப் பொறுத்தவரையில் பிரமாணம் வேதம். ஒருவர் வசிக்குமிடம் கைலாசம்; மற்றொருவர் வசிக்கும் இடம் கடல். ஒருவரது தொழில் அழித்தல்; மற்றொருவரது தொழில் பாதுகாத்தல். ஒருவரது கையில் இருப்பது சூலம்; மற்றொருவரது கையில் இருப்பது சக்கரம். ஒருவரது உருவம் எரிபோன்றது; மற்றொருவரது உருவம் மேகம் போன்றது. ஆனால் இருவரது உருவும் ஒன்றே ஒன்று" என்பதான கருத்தை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதலாம் திருவந்தாதியிலுள்ள பொய்கையாழ்வாரது பாடல் ஒன்று எடுத்துரைக்கிறது. வேற்றுமை உணர்ச்சியை அகற்றி ஒற்றுமையை வலியுறுத்தும் அப்பாடல்,

"அரன்நா ரணன்நாமம் ஆள்விடைபுள் ஊர்தி
உரைநூல் மறையுறையும் கோயில் - வரைநீர்
கருமம் அழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார்மேனி ஒன்று"

என்பதாகும். சிவபெருமான், திருமால் ஆகிய இருவர் உருவும் ஒன்றே என்னும் அரி அர தத்துவத்தை,

"தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன்நாணும் தோன்றுமால்-சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்(கு)
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து"

என்னும் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தின் மூன்றாம் திருவந்தாதியிலுள்ள பேயாழ்வாரது பாடல் குறிப்பிடுகிறது. இவ்வுண்மை இம்மாவட்டத்தில் காவேரிப்பாக்கத்திற்கு அருகிலுள்ள திருப்பாற்கடல் வெங்கடேசப்பெருமாள் கோயிலை நினைவுபடுத்துகிறது.

இத்திருக்கோயில் தொடக்கத்தில் சிவன்கோயிலாக இருந்தது. இக்கோயிலுக்கு தாஷண ஈசுவரர் கோயில் என்னும் பெயர் இருந்தது. முன்பொரு காலத்தில் 107 தலங்களில் வழிபாடாற்றிய புண்டரீகமாமுனிவர் பின்னர் இத்தலத்திற்கு வந்தார். இங்குள்ள புனிதப்புட்கரணியில் நீராடிய அவர், - திருமால் இக்கோயிலில் எழுந்தருளியுள்ளார் எனக் கருதியே இக் கோயிலுக்கு வந்தார். கோயிலின் உள்ளே சென்ற பின்னரே இது சிவன் கோயில் என்பது அவருக்குத் தெரியவந்தது. இதனால் இங்கு வழிபாடாற்றுவது பொருத்தமன்று என்று முடிவுசெய்து, முனிவர் அருகிலுள்ள கடிகாசலம் என்கிற சோழசிம்மபுரத்திற்குச் (சோழிங்கபுரம்) சென்று நரசிங்கப்பெருமாளை வழிபடலாம் எனப் புறப்பட்டார். அப்போது பதினாறாண்டு நிரம்பிய இளைஞன் ஒருவன் அம்மாமுனிவரைத் தொடர்ந்து வந்தான். அவன் அவரை நோக்கி "ஐயன்மீர் இந்தத் தலத்தில் திருமால் வீற்றிருக்கிறார்; நீங்கள் திரும்பி வந்து பாருங்கள்" என எடுத்துச் சொல்லியும் அவர் திரும்பி வரமறுத்தார். இதற்குள் ஊர் மக்கள் திரண்டனர். அம்மக்களை அவன் அழைத்துக்கொண்டு கோயிலுக்குள் சென்றான். அப்போது அக்கோயிலில் திருமால் காட்சியளித்தார். பெருமாள் கோயிலாக அவர்கள் கண்ட காட்சியை அம்முனிவரிடம் எடுத்துரைத்து

அம்முனிவரை மீண்டும் அழைத்தார்கள். இவ்வேண்டுகோளுக்கேற்ப அம்முனிவர் இசைந்து, ஊர்மக்களுடன் கோயிலுக்குச் சென்றார். அனைவருக்கும் முன் அந்த இளைஞன் சென்று கோயிலிலிருந்த சிவலிங்க ஆவுடையார் மீது ஏறிநின்று திருமாலாகக் காட்சியளித்தான். அதற்குப் பின்னர் இக்கோயில் மிகுந்த சிறப்பு எய்தியது. கீழே ஆவுடையாராகவும் நடுப்பகுதி திருமாலாகவும் அம்மாமுனிவருக்குக் காட்சியளித்ததால், திருமால் பிரசன்னமாகிய காரணத்தை முன்னிட்டு இவருக்குப் பிரசன்னவெங்கடேசப் பெருமாள் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

அடிமுடி தேடிய வரலாற்றுக்குரிய திருமால், தாம் அடியைக் காண இயலவில்லையென உண்மை நிலையைக் கூறினார். ஆதலால் அவர் சிவபெருமானிடம் பல வரங்களைப் பெற்றார். ஆனால் பிரமதேவரோ, முடியைக் கண்டதாக உண்மைக்கு மாறாகப் பொய் கூறினார். அண்ணாமலையின் முடி காண்கிலாது ஈசனாரின் திருமுடியில் இருந்து விழுந்த தாழம்பூவை ஆதாரமாகக் கொண்டு ஈசனாரின்முடியைத் தாம் கண்டதாகக் கூறி அதனால் அல்லலுற்ற பிரமதேவர் வேண்டிக்கொள்ள, தெய்வ வடிவில் காட்சி அவருக்கு கொடுத்தல் பொருந்தாது என்றெண்ணிய ஈசனார், தொண்டை நாட்டில் திருவிரிஞ்சைப் பதியில் எம்பெருமானார்க்குச் சிவத்தொண்டு செய்யும் ஆதிசைவ (தூய நன்) மரபினரும் குலவத்திரி மகாமுனிவர் குலத்தில் தோன்றியவருமான சிவநாதனென்னும் சிவநேச அன்பருக்கும் நயனா நந்தினி என்னும் உத்தமிக்கும் சிவசருமன் என்ற பெயருடன் மகனாய்த் தோன்றுமாறு பிரமதேவருக்கு அருள்புரிந்தார். இவ்வாறு திருவிருஞ்சைப்பதியில் சிவசருமனாகப் பிறந்த பிரமதேவரே சிவபெருமானை வழிபட்டு உய்ந்தார். இவ்வரலாற்றை வேலூர் வட்டத்திலுள்ள விரிஞ்சிபுரம் மார்க்கபந்தீசுவரர் கோயில் தலவரலாறு எடுத்துக்காட்டுகிறது.

சிவ வழிபாட்டின்போது திருமால் வழிபாட்டிற்குக் கருத்து வேற்றுமை தோன்றக் கூடாது என்பதற்குத் திருமாற்பேறு கோயில் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. திருமால் இங்குச் சிவபெருமானை வழிபட்டுத் தாம் விரும்பியதைச் சிவபெருமானிடம் பெற்றார்.

திருமாற்பேறு கோயிலுக்கு அருகிலுள்ள திருமால் கோயிலாகிய கோவிந்தவாடியில் திருவிழா, பூசை முதலியவை நடத்த அளிக்கப்பட்ட நன்கொடைகள் முதலியவற்றைக் கூறும் கல்வெட்டுகள் திருமாற்பேறு கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன (314/1906; 319/1906, 328/1906; 333/1906).

மங்களாசாசனம் செய்யப்பெற்ற 108 வைணவத் திவ்வியத் தலங்கள் திருமாற்பேறு மணிகண்டீசர் கோயில் கல்வெட்டில் காணப்படுகின்றன (322/1906). நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியைத் திருமாற்பேறு மணிகண்டீசர் கோயிலில் பாராயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இவையெல்லாம் திருமால் வழிபாட்டுக்கு மதிப்பளித்தன (326/1906).

வ.எண்: 855
நாள்: 17/5/02
நூலகம்

# "அண்ணாமலை அண்ணலும் உண்ணாமுலை உமையாளும்

வடஆர்க்காடு மாவட்டத்தில் ஒப்புயர்வற்ற தனிப்பெருங்கோயிலாக எழுந்துள்ள திருவண்ணாமலையில் வீற்றிருக்கும் சிவபெருமானை "அண்ணாமலை அண்ணல்" எனவும் அவர் தேவியாரை "உண்ணாமுலை உமையாள்" எனவும் திருஞானசம்பந்தர் போற்றியுள்ளார்.

அண்ணாமலை என்னும் சொற்றொடர் முன் "பிரமனும் திருமாலும்" என்னும் சொற்கள் தொக்கி நிற்கின்றன. பிரமனும் திருமாலும் அண்ணாதமலை - அண்ண முடியாத மலை - அண்ணாமலை என்பதாம்.

அண் என்பது அணுகுதல் என்னும் பொருள் உடைத்து. அண்ணுதல் என்பதே அணுகுதலாகும். இவர்கள் இருவரும் இம்மலையை அண்ணாதவர்களாக (அணுகாதவர்களாக) இருந்தார்கள். "பிரமன் அரி என்றிருவரும் தம் பேதைமையால் பாம் பரம்" என்றிருந்தார்கள் என மாணிக்கவாசகர் எடுத்துக்காட்டுகிறார். சிவபெருமானின் அடிமுடி தேடியபோது அவர் அண்ணாமலை (அண்ணாத) யாக இருந்தார். ஆதலினால், அவர்கள் அவரைக் கண்டறிய இயலவில்லை. ஆனால், திருஞானசம்பந்தர் காட்டுவது போன்று அவர் "அண்ணாமலை தொழுவார்", "கழல் பரவி உருகும் மனமுடையார்" ஆகியோர்க்கு அண்ணும் மலையாக (அண்மையில் உள்ளவராக) உள்ளார் என (இம்முறையில்) அண்ணாமலை அண்ணல் என்பதற்கு விளக்கம் காணலாம். காணாஎன்னும் சொல்லுக்குக் கண்டு என்ற ஒருபொருள் உண்டு; அதுபோல "அண்ணா என்பதற்கு அணணும் என்ற பொருளும் கொள்ளலாம்.

"உண்ணாமுலை உமை" எனத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுவதில் பேருண்மை உள்ளது. சீர்காழிப்பதியில் உமையம்மை தமது திருமுலைப் பாலைப் பொற்கிண்ணத்தில் தமக்கு அளிக்கச் சிவபெருமான் தம்மை ஆட்கொண்டதை,

> "போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லா தெனத்
> தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்"

எனத் தமது திருக்கழுமலப் பதிகப்பாடலில் குறிப்பிட்டுள்ளார். இதனை நினைவுபடுத்துவார் போன்று திருஞானசம்பந்தர் தமது திருவண்ணாமலைப் பதிகத்தின் முதல் பாடலில் "உண்ணாமுலை யுமையாளோடும் உடனாகிய ஒருவன்" என அருளியுள்ளார்.

சிவபெருமான் உமையம்மையை நோக்கி,

"துணைத்திருமுலைகளும் பொழிகின்ற
பாலமுதத்தினைப் பொற்கிண்ணத்தில்
ஊட்டுக" என்றருள,

அம்மையார்

"திருமுலையமுதினைப் பொன் கிண்ணத்துக் கறந்தருளி"
"எண்ணரிய சிவஞானத்தின்னமுதம் குழைந்தருளி
உண் அடிசில் என ஊட்ட" முற்பட்டு,

தம்மை எதிர்நோக்கிய திருஞான சம்பந்தரின் "கண்மலர்களின் நீரைத் துடைத்தருளி, அவர் கையில் பொற் கிண்ணமளிக்கச் சிவபெருமான் திருஞானசம்பந்தருக்கு அருள்புரிந்தார்." என்பதாகச் சேக்கிழார் தாம் அருளிய பெரிய புராணத்தில் கூறியுள்ளார். இங்குத் துணைமுலைகள் என்பன இரண்டு முலைகளாகும். உயிர்கள் ஞான வளர்ச்சி பெற்றுய்தற்கு இன்றியமையாத துணையாகவுள்ள இரண்டு முலைகளும் பரஞானம் அபரஞானம் ஆகிய இரண்டினையும் குறிக்கின்றன. கலைகள், மறைகள் ஆகியவற்றின் வழியே அடையப்பெறுவது (கலைஞானம்) அபர ஞானம்; தவத்தின் வழியே பெறத் தக்கது (பரஞானம்) மெய்ஞ்ஞானம்; இவ்விரு ஞானங்களைத் திருஞானசம்பந்தர் பெற்ற மாட்சியை

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கிலோ ங்கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவ முதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்"

எனச் சேக்கிழார் விளக்கிக் காட்டுகிறார். இப்பாடலில் காட்டப்பெறும் உவமையிலாக் கலைஞானம் அபரஞானத்தையும் உணர்வரிய மெய்ஞ்ஞானம் பரஞானத்தையும் குறிக்கின்றன என்கிறார் சிவக்கவிமணி.* இவ்வகையில் உண்ணாமுலை உமையாள் என்னும் தொடர் மிக உன்னதமான பொருளைக் கொண்டுள்ளதை உணர்கிறோம்.

---

* சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார். பெரியபுராணம் -திருஞானசம்பந்தர் உரை, 1949.

# சுயம்புலிங்கங்கள்

ஆகம விதிப்படி கோயில்களை அமைத்து அவற்றில் உரிய முறையில் சிவலிங்கங்கள் நிறுவப்பெறுகின்றன. தானே தோன்றும் சிவலிங்கம் சுயம்புலிங்கம் ஆகும்.

ஆரணி வட்டம் தேவிகாபுரத்தில் ஒருவர் நிலத்தைத் தோண்டியபோது அதில் சிவலிங்கம் இருந்ததைக் கண்டார். அதுவே தேவிகாபுரம் கனககிரீசுவரர் கோயிலில் முதன்மைச் சிவலிங்கமாகவுள்ளது.

ஒரு பசு, புற்று ஒன்றில் பால் சொரிந்து வந்த இடத்தைத் தோண்டிப் பார்த்ததில் காணப்பெற்ற சிவலிங்கம் ஆம்பூர் நாகநாதசுவாமி கோயிலிலுள்ளது. இதைப்போன்று திருவலத்தில் பசு ஒன்று பாம்புப் புற்றில் பால் சொரிந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிவலிங்கம் திருவலம் வில்வநாதீசுவரர் கோயிலில் உள்ளது. இதைப்போன்றே வெட்டுவானத்தில் கமண்டல ஆற்றின் தென்கரையிலுள்ள புத்திரகாமேசுவரர் கோயிலில் சுயம்புலிங்கம் ஒன்று அமைந்துள்ளது. சுயம்பு லிங்கத்தின் பெயரிலே சில கோயில்கள் சுயம்புநாதீசர் பெயரில் விளங்குகின்றன.

வயிற்றுவலியால் துன்புற்ற இராகூப் என்பவர் ஒரு நாவல் மரத்தடியிலிருந்த சிவலிங்கத்திற்கு ஒரு கோயில் அமைத்தார். அது தற்போது ஒச்சேரி சுயம்புநாதீசுவரர் கோயில் என விளங்கிவருகிறது. இவ்வாறு தோன்றிய சுயம்புநாதீசுவரர் கோயில்கள் ஆரணி முள்ளந்திரம், செங்கம் ஓரவந்தவாடி, செய்யாறு சுனைப்பட்டு, போளூர் மாம்பட்டு, வாலாசாப்பேட்டை வேலம், ஆரணி ஆதனூர் ஆகிய ஊர்களில் உள்ளன. அரக்கோணம் ரெட்டி வலத்திலுள்ள இத்தகைய கோயில் தான்தோன்றீசுவரர் கோயில் என்னும் பெயரில் அமைந்துள்ளது.

சுயம்புநாதீசுவரர் கோயில்கள் சிறப்புடையவை. பெருங்காட்டூரில் எழுந்தருளிய பெருமான் சார்ந்தாரைக் காத்த ஈசுவரர் என்னும் பெயரில் அருள்பாலிக்கிறார்.

## காசிவிசுவநாதர் கோயில்கள்

இந்நாட்டில் முக்தி அளிக்கும் திருத்தலங்களில் முதன்மையாக விளங்குவது காசியாகும். கயிலையில் பிறக்க முக்தி, காசியில் இறக்க முக்தி என்பர். தங்கள் வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் காசியில் வாழவிரும்புவோர் வெளியூர்களிலிருந்து காசியில் குடியேறுவர். இவ்வாறு காசியில் குடியேற இயலாதவர்கள் காசி விசுவநாதர் பெயரில், தங்கள் தங்கள் ஊர்களில் கோயில்களை அமைத்து அவற்றில் வழிபாடு செய்ய முற்பட்டார்கள். இம்முறையில் இம்மாவட்டத்தில் ஆங்காங்குக் காசி விசுவநாதர் கோயில்கள் தோன்றின. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை அரக்கோணம் வட்டத்தில் இரும்பேடு, வேகாமங்கலம்; ஆரணி வட்டத்தில் ஆர்க்காடு வண்ணாங்குளம்; குடியாத்தத்தில் ஆலத்தூர்; செய்யாறு வட்டத்தில் கொடநகர் அரசங்குப்பம், நாட்டேரி; போளூர் வட்டத்தில் களம்பூர், கொடக்கால், வீரனூர்; வந்தவாசி வட்டத்தில் தேசூர்; வாலாசா வட்டத்தில் சுமைதாங்கி, ஆயாலம், வாலாசா; வேலூர் வட்டத்தில் அகரம் ஆகிய ஊர்களிலுள்ள காசி விசுவநாதர் கோயில்கள் ஆகும். இக்கோயில்களிலுள்ள தேவியார் காசி விசாலாட்சியின் பெயராகிய விசாலாட்சியம்மை என்னும் பெயரிலே விளங்கி வருகிறார்.

## அரிய பெயர்களில் விளங்கும் அம்பிகை

இம்மாவட்டத்தில் வழங்கும் அம்பிகையின் பெயர்களுள் அரிய பெயர் உண்ணாமுலைஉமை என்பதாகும். இப்பெயர் அபிதகுஜாம்பாள் என்று வழங்கிவருகிறது. திருவிரிஞ்சை மார்க்கபந்தீசுவரர் கோயில், செங்கம் பாடி அக்கிரகாரத்திலுள்ள மார்க்கபந்தீசுவரர் கோயில், திருவண்ணாமலை வழுதலங்குணம் மார்க்கபந்து சகாயர் கோயில், ஒடுக்கத்தூர் சப்தரிஷீசுவரர் கோயில் ஆகிய கோயில்களில் அம்பிகை அபிதகுஜாம்பாள் என்னும் பெயரில் விளங்கிவருகிறார். இப்பெயரை ஒட்டித் திருவத்திபுரம் வேதபுரீசுவரர் கோயில் அம்பிகை 'பாலகுஜாம்பாள் என்னும் பெயரில் வழிபடப்பெறுகிறார்.

காவேரிப்பாக்கம் காளிகாம்பாள் கோயிலில், உள்ள அம்மை காளிகாம்பாள் என்னும் பெயரில் வழங்கப் பெறுகிறார். திருப்பத்தூர்க் காளியம்மன் கோயிலிலும் காளி, காமாட்சியாகப் போற்றப்பெறுகிறார். ஆனால் ஆம்பூர்க் காளிகாம்பாள் கோயிலிலுள்ள அம்பிகை, காமாட்சியம்மையாவார்.

அகரம் காசிவிசுவநாதர் கோயில், களம்பூர்க் காசிவிசுவநாதர் கோயில், பேரிப்பேட்டைக் காசிவிசுவநாதர் கோயில் போன்ற கோயில்களின் அம்பிகையர் காசிவிசுவநாதர்தம் தேவியாகிய விசாலாட்சியின் பெயரிலேயே வழிபடப் பெறுகிறார்கள். குடிமல்லூர்ப் பூமிசுவரர் கோயிலில் உள்ள அம்பிகை சௌந்தரவல்லியம்மை என்னும் பெயரில் விளங்குவது போல் சக்கரமநல்லூர்ச் சுந்தரராசப்பெருமாள் கோயிலில் உள்ள தாயாரும் சௌந்தரவல்லி என்னும் பெயரிலேயே வழிபடப்பெறுகிறார். எனவே சௌந்தரவல்லி என்னும் பெயர் புதுமையான பெயராகும். சௌந்தரவல்லி என்னும் பெயர் சிவன்கோயிலில் அம்பிகைக்கும் பெருமாள் கோயிலில் தாயாருக்கும் பொதுப்பெயராக அமைந்துள்ளது என்பது கருத்தில் கொள்ளத்தக்க புதுமையாகும்.

தேவிகாபுரம் மலையின் அடிப்பகுதியிலுள்ள திருக்காமேசுவரரின் தேவி கோகிலாம்பாள். ஆனால், காப்பளூர்த் திருக்காமீசுவரர் கோயிலில் தேவியின் பெயர் கனககுஜாம்பாள் என்பதாகும். இது பொன்முலை மடந்தை என்பதைக் குறிக்கும். இது பின்னர்க் கடின குஜாம்பாள் எனத் திரிபு எய்தியுள்ளது.

## ஆனைகாத்த அப்பன்

தமிழகத்தில் ஒவ்வொரு பகுதியில் ஒவ்வொரு கடவுளர் ஒவ்வொருவகையில் சிறப்பாக வழிபடப்பட்டு வருகின்றனர். அவ்வகையில் முதலையால் பிடியுண்டு ஆதிமூலமே என அழைத்த யானைக்கு அருள் செய்ததுபோல அகரத்து வரதர் எழுந்தருளி அருள்புரிகின்றார். இதனால் அகரத்தில் எழுந்தருளியுள்ள பெருமானைக் கல்வெட்டுகள் ஆனைகாத்த அப்பன் என அழைக்கின்றன. கருவறையில் மூலவர் அருகில் யானை உருவம் இருந்ததாகவும் பின்னர் அது சிதைந்து விட்டதாகவும் கூறுகின்றனர்.

கரிவேடு என்னும் தலத்தில் யானை பூசை செய்து பேறுபெற்றதாகக் கூறுவர். அவ்வூர் இறைவன் கசேந்திர வரதர் எனப் பெயர் பெறுகிறார். ஆனைக்கருள் செய்த செய்தியை விளக்கும் மிகப்பெரிய சுதைச் சிற்பம் ஆம்பூர் சீனிவாசப்பெருமாள் கோயில் கோபுரத்தில் காணப்படுகிறது.

## அஷ்டலட்சுமிகளின் அரிய திருவுருவங்கள்

சென்னைப் பெசண்டு நகரில் அண்மையில் எழுந்துள்ள அஷ்டலட்சுமி கோயில் சிறப்புற்று விளங்கிவருகிறது. ஆயினும் இக்கோயிலுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அஷ்டலட்சுமிகளின் திருவுருவங்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தில் சில கோயில்களில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

திருவண்ணாமலை அம்மன் சந்நிதி மகாமண்டபத்தில் ஆதிலட்சுமி, சந்தானலட்சுமி, கசலட்சுமி, தனலட்சுமி, தானியலட்சுமி, விசயலட்சுமி, ஐசுவரியலட்சுமி, வீரலட்சுமி ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

வேலூர் வட்டம் திருவிரிஞ்சிபுரம் மார்க்கபந்தீசுவரர் கோயிலில் அம்பிகை சந்நிதியைச் சுற்றி அஷ்டலட்சுமிகளின் திருவுருவங்கள் புதியவண்ண அமைப்பில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. அரக்கோணம் வட்டம் கரிவேடு வீரமாகாளியம்மன் கோயிலில் கசலட்சுமியின் திருவுருவங்கள் உள்ளன.

மேலும் இக்கோயில் கருவறையின் மையத்தில் பிடாரியின் திருவுருவம் உள்ளது. இதன் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் இரு யானைகளுடன் கூடிய இரு கசலட்சுமி திருவுருவங்கள் உள்ளன. இவ்விரு கசலட்சுமியின் திருவுருவங்கள் ஒவ்வொன்றினையும் அடுத்து ஒரு ஸ்ரீவத்சம் உள்ளது. ஸ்ரீவத்சம் என்பது திருமகளின் தலைப்பாகம் மட்டும் ஒரு குறியீட்டு வடிவில் அமைந்திருப்பதாகும். இது திருமால் மற்றும் உத்தமபுருடர்களின் மார்பில் இருப்பதாகக் கருதப்படுகிறது.

## விரும்பிப் போற்றப்பெறும் வேணுகோபாலர் கோயில்கள்

பாகவதமும் பாரதமும் போற்றும் வேணுகோபாலரை நினைவுகூரும் வகையில் வேணுகோபாலர் கோயில்கள் பல இம்மாவட்டத்தில் எழுந்தன. அவற்றை ஒருவாறு கீழ்க்காணுமாறு சுட்டிக்காட்டலாம்.

அரக்கோணம் வட்டத்தில் கீழ்க்களத்தூர், மூதூர், ரெட்டிவலம், புத்தூர், பையூர் ஆகிய ஊர்களிலும் ஆர்க்காடு வட்டத்தில் அரும்பாக்கம், ஆர்க்காடு நகர் (பசனைக்கோயில் தெரு), இசையனூர், சொரையூர், மாச்சம்பட்டு ஆகிய ஊர்களிலும் செங்கம் வட்டத்தில் தென்கரும்பூர், செங்கம் பெருங்குளத்தூர் ஆகிய ஊர்களிலும் செய்யாறு வட்டத்தில் எருமைவெட்டி, கொடநகர், தண்டரை, புளியாம்பாக்கம் ஆகிய ஊர்களிலும் திருப்பத்தூர் வட்டத்தில் எலவம்பட்டி, கதிரம்பட்டி ஆகிய ஊர்களிலும் திருவண்ணாமலை வட்டத்தில் கொரகுணத்தூர், திருவண்ணாமலை நகர் ஆகிய ஊர்களிலும் போளூர் வட்டத்தில் களம்பூர், கார்தம்பாடி ஆகிய ஊர்களிலும் வந்தவாசி வட்டத்தில் ஊர்க்குடி, கீழ்நர்மா ஆகிய ஊர்களிலும் வாலாசா வட்டத்தில் அருங்குணம், தென்நந்தியாலம், பூண்டி, வேலூர், வேலூர் விருபாட்சிபுரம் ஆகிய ஊர்களிலும் வேணுகோபாலர் கோயில்கள் அழகுற அமைந்துள்ளன.

கண்ணன் சாட்டை ஏந்தி மாடுமேய்க்கும் கோலத்தில் காட்சியளிப்பதைச் செங்கம் பார்த்தசாரதி வேணுகோபாலர் சுவாமி கோயிலில் காணலாம். கலசப்பாக்கம் அருகிலுள்ள பழங்கோயிலில் உள்ள சிவன் கோயிலில் பசுவின் அருகில் வேணுகோபாலர் காட்சியளிக்கிறார்.

இவ்வாறு வேணுகோபாலர் கோயில், இம்மாவட்டத்தில் இருப்பதற்கு ஒரு காரணம் கூறுவர். வட ஆர்க்காடு மாவட்டத்தின் பெரும்பகுதி முல்லை நிலப்பகுதிப் பிரிவில் உள்ளது. இங்குள்ளவர்கள் வேணுகோபாலரை விரும்பி வழிபடுகிறார்கள். முல்லை நில ஊர்ப் பெயரான பாடி என்று முடியும் ஊர்கள் அதிகமாகக் காணப்படுவதும் இது முல்லை நிலம் என்பதை மேலும் உறுதிப்படுத்துவதாகும்.

## முருகப்பெருமான் மகிழ்ந்த திருத்தலங்கள்

முருகப்பெருமான் வள்ளியை மணம் புரிந்துகொண்ட நிகழ்ச்சியை அருணகிரிநாதர்.

"கானச் சிறுமானை நினைந்து ஏவற் புனமீது நடந்து
காதற் கிளியோடு மொழிந்து சிலைவேடர்
கானக் கனியாக வளர்ந்த
ஞானக் குற மாதை மணந்த வடிவேலா"

எனப் பாடியுள்ளார். வள்ளி பிறந்து வளர்ந்து தினைப்புனத்தில் ஆயலோட்டித்

திருமுருகப் பெருமானை மணந்து திருத்தணிகை செல்லும் வரை நடந்த, பல நிகழ்ச்சிகள் வள்ளிமலையிலும் வள்ளி மலையைச் சுற்றியுள்ள இடங்களிலும் நிகழ்ந்துள்ளன என்பர். அருணகிரிநாதர் பதினொரு திருப்புகழ்ப்பாடல்களில் வள்ளிமலையைப் போற்றியுள்ளார்.

போளூர் வட்டத்தில் தேவிகாபுரத்திற்கு அருகிலுள்ள வாழைப்பந்தல் என்னும் ஊரில் பார்வதி வாழை இலைகளால் பந்தல் அமைத்துச் சிவலிங்கம் நிறுவிப் பூசைசெய்து வந்தார். அப்போது கடும் வறட்சி ஏற்பட்டிருந்ததால், நீருக்காகப் பார்வதிதேவி முருகப்பெருமானின் உதவியை நாடினார். பார்வதிதேவியாருக்கு உதவிபுரிய முற்பட்ட முருகப்பெருமான் அருகிலிருந்த மலைகளின் மீது வேல்வீச அம்மலைகளிலிருந்து தூய நீர் ஆறாகப் பெருகிற்று. இந்நீர் பார்வதிதேவியின் பூசைக்குப் பயன்பட்டது. சேய் (குழந்தை) ஆகிய முருகப்பெருமான் மேற்கொண்ட முயற்சியால் பெருகிய ஆறு, சேயாறு என்னும் பெயர் பெற்றது. தற்போது இது செய்யாறு எனக் குறிப்பிடப்பெறுகிறது.

முருகப்பெருமான் வகுத்த சேயாற்றுநீர் சிவப்பு நிறத்தோடிருந்தது. இதற்குக் காரணம் அக்காலத்தில் அம்மலைகளில் தவமியற்றிக் கொண்டிருந்த முனிவர் எழுவர் முருகப் பெருமான் விடுத்த அம்புகளால் கொல்லப்பட்டமையேயாகும். இவ்வகையில் நேர்ந்த பாவத்தைப் போக்கிக்கொள்ள முருகப்பெருமான் சேயாற்றின்கரையில் ஏழு தலங்களில் கோயில்கள் அமைத்து வழிபட்டார். அவ்வேழு தலங்கள் "சப்தகரைகண்ட சேத்திரங்கள்" என்னும் பெயரில் விளங்கி வருகின்றன.

14-ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதரால் பாடப்பெற்ற இரத்தினகிரி சுப்பிரமணியர் கோயில் மிகவும் புகழ்பெற்ற தலமாக விளங்குகிறது. 20-3-1968-ஆம் நாளில் முருகனருளால் ஆட்கொள்ளப் பெற்ற கீழ்மின்னல் திரு. க. சச்சிதானந்தம் என்பவர் ஞானியாகித் தவ ஆற்றலால் தவத்திரு பாலமுருகனடிமை என்னும் பெயர் தாங்கித் திருமுருகன் ஆணைப்படிக் கருவறைத்திருப்பணி, சண்முகத் தெப்பக்குளம் ஆகிய பணிகள் மேற்கொண்டுள்ளார். இராசகோபுரத் திருப்பணி, தங்கத்தேர்த் திருப்பணி, அடிவாரம் வரசித்தி விநாயகர் கோயில் திருப்பணி, மலைக்கற்பக விநாயகர் கோயில் திருப்பணி ஆகியவையும் ஆபரணங்கள் செய்யும் திருப்பணியும் இவரால் நிறைவெய்தியுள்ளன.

ஆர்க்காடு வட்டம் இராணிப்பேட்டை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 12 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள திமிரி என்னும் ஊரில் 83. 34 மீட்டர் உயரமுள்ள மலை மீது அமைந்துள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மிகுதியான எண்ணிக்கையில் மக்கள் வழிபாடாற்றுகின்றனர். திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன.

திருவண்ணாமலை-செங்கம் வழியில் திருவண்ணாமலையிலிருந்து 24 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள சாலை ஓரத்தில் 15 மீட்டர் உயரத்தில் உள்ள மணற் குன்றின் மீது பாலசுப்பிரமணியசுவாமி கோயில் ஒன்று இருக்கின்றது. இங்குப் பல விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன. பெருந்திரளாக

மக்கள் இங்குவந்து வழிபடுகின்றனர்.

வள்ளிமலைக்கு அருகிலுள்ள மேற்பாடியில் சோழர்கள் கட்டிய பழமையானகோயில் சோமநாதேசுவரர் கோயிலாகும். இம்மேற்பாடியின் பெருமையைக் கந்த புராணம் எடுத்தியம்புகிறது. மேற்பாடிக்கு அருகில் அரிஞ்சிகை ஈசுவரம் என்னும் பள்ளிப்படைக்கோயில் உள்ளது. இது முதல் இராசராசனின் (கி.பி. 985-1013) பாட்டன் அரிஞ்சையன் எலும்புகள் புதைக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்ட பள்ளிப்படைச் கோயிலாகும். இக்கோயிலின் விமானத்தில் யானை மீது அமர்ந்துள்ள நிலையில் முருகப்பெருமான் திருவுருவம் ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது.

# ஆஞ்சநேயரின் அரிய கோலங்கள்

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆஞ்சநேயர் எழுந்தருளிய கோயில்கள் பலவுள. ஆஞ்சநேயருக்கு அனுமார் என்னும் பெயரும் உள்ளது. ஆரணி வட்டம் சிறுமூரில் அனுமந்தராயர் கோயிலும் ஆஞ்சநேயர் கோயிலும் உள்ளன. இதைப்போன்றே வாணியம்பாடி வட்டம் துத்திப்பட்டில் அனுமந்தராயர் கோயிலும் சஞ்சீவிராயர் கோயிலும் உள்ளன. சஞ்சீவிமலையைக் கொண்டுவந்த காரணத்தால் ஆஞ்சநேயர் சஞ்சீவிராயர் எனப்படுகிறார். வேலூர் வட்டம் கோணவட்டத்திலும் வாணியம்பாடி துத்திப்பட்டியிலும் எழுந்தருளியிருப்பவர் வீர ஆஞ்சநேயர். திருப்பத்தூரில் இருப்பவர் சுந்தரவீர ஆஞ்சநேயர்.

சோளிங்கபுரத்தில் இருப்பவர் யோக ஆஞ்சநேயர் ஆவார். இங்கு இவர் நான்கு கரங்களுடன் உள்ளார். இவர்தம் மேல்இரு கரங்களில் சங்கு சக்கரம் ஆகியவற்றை ஏந்தியுள்ளார். ஒரு கையில் ஜபமாலை உள்ளது. மற்றொரு கையில் எண்ணிக்கையைக் கணக்கிடுகிறார். மருதாடு கோயிலில் உற்சவ சதுர்புஜ ஆஞ்சநேயர் உள்ளார். காப்பளூரில் அர்த்தாஞ்சலி ஆஞ்சநேயர் உள்ளார். அர்த்தாஞ்சலி செய்தல் என்பது அரைக்கை வணக்கமாகும். ஆஞ்சநேயரை வழிபடுதலால் உடல் வலிமையும் மன ஆற்றலும் பெறலாம் என்பது மக்கள் நம்பிக்கையாகும்.

பெரும்பான்மையான கோயில்களில் இவர் இரு கைகளையும் கூப்பி வணங்கும் நிலையில் உள்ளார். இது பக்த ஆஞ்சநேயர் வடிவம் ஆகும்.

## வீரபத்திரர்

சிவபெருமானின் மகனாகத் தோன்றிய வீரபத்திரர், தக்கன் புரிந்த வேள்வியை அழித்தார். பின்பு காக்கும் கடவுளாகக் கணத்தலைவரானார். வீர சைவர்கள் வீரபத்திரரைச் சிறப்பாகப் போற்றி வழிபடுகிறார்கள். இம்மாவட்டத்தில் வீரபத்திரர் கோயில்களும் வீரபத்திரர் திருவுருவங்களும் மிகுதியான எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

வீரபத்திரர் கோயில்களில் பத்திரகாளி சிலையையும் காண்கிறோம். ஆம்பூர் நாகநாதீசுவரர் கோயிலிலும் வேலூர் ஜலகண்டேசுவரர் கோயிலிலும் வீரபத்திரரின் கல்திருமேனிகள் காணப்படுகின்றன. தென்மகாதேவமங்கலத்தில் வீரபத்திரரின் உலாத்திருமேனியும் பத்திரகாளியின் உலாத்திருமேனியும் காணப்படுகின்றன. வாலாசாப்பேட்டை, காப்பளூர் போன்ற இடங்களில் வீரபத்திரருக்குத் தனிப்பட்ட முறையில் கோயில்கள் உள்ளன. தக்கோலத்தில் சலநாதீசுவரர் கோயிலுக்கு ஒரு மீட்டர்த் தொலைவில் வீரபத்திரருக்குத் தனிக்கோயில் ஒன்று காணப்படுகிறது.

வீரசைவ மடங்களுடன் இணைந்த வகையிலும் வீரபத்திரர் கோயில் உள்ளது. இவ்வகையில் போளூர் வட்டம் செம்பியன் மங்கலத்திலுள்ள வீரபத்திரர் கோயில் புதிய கட்டட அமைப்பைக் கொண்டது. இங்குக் கருவறைக்கு முன் 36 தூண்களைக் கொண்ட மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் நடுவில் கிணறு ஒன்றும் உள்ளது. உச்சி நேரத்தில் சூரியனின் கதிர்கள் இக்கிணற்றுக்குள் விழுமாறு மண்டபத்தின் மேல்பகுதி கிணற்றுக்கு நேரே திறந்து விடப்பட்டுள்ளது. வாலாசாப்பேட்டையிலுள்ள மூர்த்தி கோபுரத்தில், விமானங்களுடன் கூடிய தனித் தெய்வமாக வீரபத்திரர் உள்ளார். திருப்பத்தூர் இராமச்சமங்கலத்திலும் திருப்பத்தூர் ஆத்தூர்க் குப்பத்திலும் வீரபத்திரசுவாமி கோயில்கள் இருக்கின்றன.

## பச்சையம்மன் கோயில்கள்

கருமைநிறம் உடைய இறைவி தவம் செய்யுமிடங்களே பச்சையம்மன் கோயில்கள் என்னும் கருத்து நிலவிவருகிறது. எனினும் பெரும்போர் ஏற்பட்ட

இடங்களில் வீரர்கள் இறந்தபின் அவர்களின் பத்தினிகள் சிலர் தீப்புகுந்தனர். அவர்கள் பத்தினித் தெய்வங்களாகக் கொண்டாடப் பெற்றார்கள்.

இத்தகையோர்களுக்கும் யானை, குதிரைகளுக்கும் நினைவுக்கோயில்கள் கட்டப்பட்டன எனவும் அவர்கள் உடல் வெந்து சாம்பலாயின எனினும் அவர்களைப்பற்றிய நினைவு பசுமையாக உள்ளது என்பதைக் குறிக்க அவர்களின் நினைவாக எழுப்பப்பட்ட கோயில்கள் பச்சையம்மன் கோயில்கள் என விளங்குவன ஆயின எனவும் மரபு வழிச் செய்தி கூறுகிறது.

இம்மாவட்டம் பல போர்களைக் கண்டது. புகழ்பெற்ற தக்கோலப்போர், தெள்ளாற்றுப்போர், ஆங்கில ஆதிக்கம் பரவக் காரணமாயிருந்த ஆர்க்காட்டுப்போர் ஆகியவை இங்கு நடைபெற்ற குறிப்பிடத்தக்க போர்களாகும். இவ்வாறு ஏற்பட்ட போர்களின் நினைவிடங்களில் பச்சையம்மன்கோயில்கள் எழுந்தன என்று கருதப்படுகிறது.

தென்மகாதேவமங்கலம், வேகாமங்கலம், மாங்காடு, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் பச்சையம்மன் கோயில்கள் உள்ளன. இம்மாவட்டத்தின், வடபகுதியில் தென்மகாதேவமங்கலம் போன்ற இடங்களில் விளங்கும் பச்சையம்மன் கோயில்களிலுள்ள முனிகள் கூட்டத்திற்கும் தென்பகுதியில் திருவண்ணாமலை போன்ற இடங்களில் திகழும் பச்சையம்மன் கோயில்களிலுள்ள முனிகள் கூட்டத்திற்கும் வேறுபாடு உள்ளது. வடமாவட்டத்தில் காணப்படும் சிங்கமுனி தென்மாவட்டப்பகுதியில் காணப்படுவதில்லை. வடபகுதியிலுள்ள தவமுனி சிலையும் தென்பகுதியில் இல்லை. இம்மாவட்டத்தில் உள்ள பச்சையம்மன் கோயில்களில் திங்கட்கிழமை தோறும் சிறப்பான பூசைகள் நடைபெறுகின்றன.

குறிப்பு:

கருமை, நீலம், பசுமை முதலியவை ஒரே நிறமாகப் பாடப்பட்டன.

எ.டு. "பச்சைமாமலைபோல்மேனி."
"பச்சைப்பசுங்கொண்டலே."

மதுரை மீனாட்சி அம்மையின் வடிவினைப் பச்சைநிறத்தில் வரைவது மரபு.

## திரௌபதை கோயில்களும் தருமர் கோயில்களும்

பாரதத்தில் மூலவராக விளங்கும் கண்ணனைத் தவிரப் பஞ்சபாண்டவர்களுள் சிறந்து விளங்குபவர்கள் தருமரும் பாண்டவர் ஐவருக்கும் பத்தினியாக விளங்கிய திரௌபதையும் ஆவார்கள். அவர்கள் பெயரில் இம்மாவட்டத்தில் எழுந்த கோயில்கள் மிகப் பலவாகும். அவையாவன:

அரக்கோணம் வட்டத்தில் நெமிலி, சயனாவரம் திரௌபதையம்மன், சித்தன் ஜி திரௌபதையம்மன், தக்கோலம் தருமராசர்; ஆரணி வட்டத்தில் கண்ணிமங்கலம் தருமராசர், காட்டுகாநல்லூர்த் தருமராசர், கொளத்தூர்த் திரௌபதையம்மன், புலவன்பாடித் திரௌபதையம்மன், தருமராசர், புத்தூர் தருமராசர், மாமண்டூர் தருமராசர், மொரப்பந்தாங்கல் தருமராசர், வண்டிப்பாளையம் தருமராசர்; குடியாத்தம் வட்டத்தில் மாலியப்பட்டுத் திரௌபதையம்மன், அரங்கசமுத்திரம் தருமராசர்; திருப்பத்தூர் வட்டத்தில் காந்திலி தருமராசர், திருப்பத்தூர் நகர் தருமராசர்; திருவண்ணாமலை வட்டத்தில் திருவண்ணாமலை நகர் தருமராசர், மலப்பம்பாடித் தருமராசர்; போளூர் வட்டத்தில் காலசமுத்திரம் தருமராசர், சொரக்கரவாடித் திரௌபதையம்மன், மோசவாடித் திரௌபதையம்மன், சித்தறுக்காலூர்புதூர்த் தருமராசர், நல்லூர்த் திரௌபதையம்மன், புன்னை திரௌபதையம்மன்; வாணியம்பாடி வட்டத்தில் நிமியப்பட்டுத் தருமராசர், திரௌபதையம்மன், வடக்குப்பட்டுத் தருமராசர், வாணியம்பாடி நகர் தருமராசர்; வாலாசா வட்டத்தில் கேசவனாங்குப்பம் தருமராசர், கொடைக்கல் தருமராசர், தெங்கால் திரௌபதையம்மன், மேல்வீராளம் தருமராசர், வேலம் தருமராசர்; வேலூர் வட்டத்தில் தோட்டப்பாளையம் தருமராசர், வேலூர்க் கஸ்பா திரௌபதையம்மன், குப்பம்பட்டுத் தருமராசர், வேலப்பாடித் திரௌபதையம்மன்.

## சித்திரகுப்தர்

சித்திரகுப்தர் சூரியன் மகன் என்பதும் ஒருவர் புரிந்த பாவச்செயல்களுக்கு ஏற்ப இயமதருமன் தண்டனை விதிக்கும்வகையில் அவனுக்கு உதவிபுரிய இவர் நியமிக்கப் பெற்றுள்ளார் என்பதும் மரபுவழிக் கொள்கைகளாகும். சித்திரகுப்தருக்குத் தனிக்கோயில் காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தின் அருகில்

இருக்கிறது. சிதம்பரம் அம்மன் கோயிலில் வெளிப்பிரகாரத்தில் சித்திரகுப்தர் எழுத்தாணியுடன் மேற்குநோக்கி நிற்கும் திருவுருவம் காணப்படுகிறது.

ஆனால், வடஆர்க்காடு மாவட்டத்தில் சித்திரர், குப்தர் என்னும் பெயருடன் இருவர் திருவுருவங்களும் காணப்படுகின்றன. செங்கம் இடபேசர் கோயிலில் சித்திரர், குப்தர் என்னும் இருவரின் திருவுருவங்கள் உள்ளன. இதைப்போன்று திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலிலும் சித்திரர், புத்திரர் என்னும் இருவர் திருவுருவங்களும் உள்ளன. இவ்விருவரும் இயமதருமனுக்கு உதவி புரியத் தோன்றியவர்கள் என்று புராணத்தில் கூறப்படுகிறது.

## வசவேசர்

நந்திதேவரின் அவதாரமாக வீரசைவ வசவேசர் போற்றப்படுகிறார். இவர் வீர சைவ சமய ஆச்சாரியாருள் ஒருவர். இவருக்கு இம்மாவட்டத்தில் சில கோயில்கள் உள்ளன. கோயிற் கருவறையில் நந்திதேவர் வடிவமும் வசவேசர் உருவப் படமும் உள்ளன. இத்தகைய பெரிய கோயில் ஒன்று வாலாசாப்பேட்டைச் சுவர்ண செட்டிப்பேட்டையில் அமைந்துள்ளது. இங்கு வசவேசரின் பித்தளையிலான சிலை, குதிரை மீது அமர்ந்தவண்ணம் உள்ளது.

## திரிசூலம் (அத்திரதேவர்)

படைக்கலங்களை வழிபடும் வழக்கம் மிகப்பழங்காலம் தொட்டே தொடர்ந்து வருகின்றது. சிவபெருமானின் சூலப்படை, அத்திரதேவர் என வழங்கப்பெறுகிறது. பொதுவாக இதில் சூலம் மட்டுமே உள்ளது. அத்திரதேவர் திரிசூலப்படை வடிவில் உள்ளார். பொதுவாக இறையுருவங்களைச் சூலப்படை வடிவில் அமைப்பதில்லை. ஆனால், இம்மாவட்டத்தில் அமைந்திருக்கும் பல அத்திரதேவர் வடிவங்கள் தெய்வீக உருவங்களோடு விளங்குகின்றன. வந்தவாசி வட்டம் உளுந்தைக் கோயிலிலுள்ள அத்திரதேவர் அர்த்தநாரீசுவரர் வடிவமாகவும் காஞ்சியில் சுப்பிரமணியர் வடிவமாகவும், கடலாடி, கலசப்பாக்கம் போன்ற இடங்களிலுள்ள கோயில்களில் இடபாரூடர் வடிவமாகவும் வாலாசாப்பேட்டையில் சந்திரசேகரர் வடிவமாகவும் அமைக்கப்பெற்று எழிலுடன் விளங்குகின்றன.

## இந்து - முகமதியர் கட்டடப் பாணி

இம்மாவட்டத்தில் 100 ஆண்டுகளுக்கு மேலாக முசுலீம்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். சில வேளைகளில் முசுலீம்களின் கடவுளிடம் ஈடுபாடுகொண்டோ, அவர்களது கட்டடக்கலையைப் பின்பற்றியோ சில கோயில்கள் அமைந்தன. வேட்டவலம் மனோன்மணி கோயில், வேகாமங்கலம் பச்சையம்மன் கோயில் ஆகியவை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

## வள்ளியம்மை வரலாற்றைக் கூறும் வள்ளிமலை

தமிழ் மக்கள் தொன்றுதொட்டு முருகனை விரும்பி வழிபட்டு வந்துள்ளார்கள். திருமுருகன் பெயர்கள் பலவற்றுள் வள்ளி கணவன், வள்ளி மணாளன் என்பவையும் உள்ளன. வள்ளி கணவனாக முருகப்பெருமான் எவ்வாறு விளங்கினார் என்பதை வள்ளிமலையின் அமைப்புகள் பலவும் தெளிவுபடுத்துகின்றன.

கந்த புராணத்தில் குறிப்பிடப்பெறும் மேற்பாடி என்னும் சிற்றூர் தொண்டை நாட்டில் உள்ளது. இதனருகில் ஒரு மலை அமைந்துள்ளது. முற்காலத்தில் அம்மலைச் சூழலில் அதனைச் சார்ந்து வேட்டுவ மக்கள் பலர் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்குத் தலைவனாக நம்பி என்பவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஆண்மக்கள் பலர் தோன்றியிருந்தும் பெண்மகவு வாய்க்கவில்லை. ஆதலின் பெண் மகவு விழைந்து குறிஞ்சி நிலக்கடவுளாகிய முருகப்பெருமானை நோன்புகள் நோற்று வழிபட்டு வந்தான்.

முன்னொரு காலத்தில் திருமாலின் இரு கண்களிலிருந்து தோன்றிய அமிர்தவல்லி, சுந்தரவல்லி ஆகிய இருவரும் முருகன் பால் ஆராக் காதல் கொண்டு அவனையே மணக்க விரும்பி அருந்தவம் புரிந்து வழிபட்டுவந்தனர். அவர்கள் தவத்திற்குகந்த முருகப்பெருமான் அவர்களுக்கு அருள்புரிந்தார். அவ்வகையில் அவர்களுள் ஒருத்தியாகிய அமிர்தவல்லி விண்ணுலகத்தில் தேவேந்திரனுக்கு மகளாகப் பிறந்து வளர்ந்தாள். சுந்தரவல்லி தொண்டை நாட்டில் மேற்பாடி அருகிலுள்ள மலைச்சாரலில், சிவமுனிவர் அருள்நோக்கால் கருவுற்ற மான்

வயிற்றில் மானிட மகவாய்த் தோன்றி அம்மலைச்சாரலில் வள்ளிக்கிழங்கு அகழ்ந்த குழியில் கிடந்தனள். வேட்டுவர் குலத்தலைவன் நம்பிராசன் அவ்வழியே வந்தபோது அம்மகவைக் கண்டெடுத்து அதனைத் தன் துணைவியைக் கொண்டு சீரோடு வளர்க்க ஏற்பாடு செய்தான் வேட்டுவ மகளிர் குழந்தை வள்ளியைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்து வந்தனர். வள்ளி முறையே வளர்ந்து பன்னிரண்டு வயதடைந்தபோது வேடுவர் குல முறைப்படி நம்பிராசன் அவளைத் தினைப்புனம் காவல் புரியுமாறு அமர்த்தினான். அங்கே அவள் பரண் மீது அமர்ந்து குருவி ஓட்டியும் கிளி கடிந்தும் மான் முதலியவற்றை விலக்கியும் தினைப்புனம் காத்துவந்தாள்.

முன்பு தாம் அளித்த வரத்திற்கேற்ப வள்ளியம்மைக்கு அருள்புரிய நினைத்த முருகன் முதலில் தணிகை மலைக்கு எழுந்தருளினார். அப்போது அங்குவந்த நாரதமுனிவர் முருகப்பெருமானிடம், வள்ளியம்மைக்கு அருள்புரியும் நேரம் நெருங்கிற்று என எடுத்துக் கூறினார். அதற்கு இசைந்த முருகப்பெருமான் மானிட வடிவம் தாங்கிக் கழலும் கச்சும் அணிந்து வேடர் கோலம் ஏற்று வளமிக்க வள்ளிமலைச் சாரலை அடைந்தார். ஆங்குத் தினைப்புனம் காத்துநின்ற வள்ளியின்பால் சென்றார். அப்போது நம்பிராசன் தன் துணைவர்களுடன் தன் மகளைக் காண வந்தான். அச்சமயம் முருகப்பெருமான் வள்ளியின் பரணுக்கு அருகே ஒரு வேங்கை மரமாயினர். அப்போது அங்கு வந்த நம்பிராசன் இம்மரம் வள்ளிக்குத் துணையாகவும் நிழலாகவும் இருக்க வேண்டும் எனக் கூறிச் சென்றதும் முருகப்பெருமான் மானிட உருவம்கொண்டு வள்ளியம்மையிடம் காதல் உரைகள் பேசத் தலைப்பட்டார். வள்ளியம்மை பல பணிவுரைகள் கூறி நாணி நின்றாள் அப்போது மீண்டும் நம்பிராசன் தன் துணைவர்களுடன் அங்கே வந்து சேர்ந்தான் இச்சமயம் வள்ளி அச்சம் கொண்டு உடனே அவ்விடத்திலிருந்து நீங்கிவிடுமாறு முருகப்பெருமானிடம் வேண்டினாள். அதற்கிணங்கி அங்கிருந்து சென்ற முருகப்பெருமான் பின்னர்க் கிழவனாக வேடங்கொண்டு, வரும் வழியில் நம்பிராசனைச் சந்தித்து அவனை வாழ்த்தினார். தவவேடத்தில் விளங்கிய அன்னாரை நோக்கி, "யாது வேண்டும்?" என நம்பிராசன் வினவ, அவர் தமது மூப்பு அகலவும் கவலை நீங்கவும் அங்குள்ள குமரியை (தீர்த்தத்தை) அடைந்து அதில் நீராட விரும்புவதாகக் கூறினார். இதைச் செவியில் ஏற்றுக்கொண்ட நம்பிராசன், "தாங்கள் கூறிய தீர்த்தத்தில் நாள்தோறும் நீராடித்!தனிமையாக இருக்கும் எங்கள் மகளுக்கு ஒரு தனித்துணையாகத் தாங்கள் இங்கு இருக்கலாம்" என்று கூறி அவரைத் தன் மகள் வள்ளியிடம் விட்டுச் சென்றான்.

வேடுவரும் நம்பிராசனும் சென்ற பின்னர், தவவேடம் பூண்ட கிழவராக இருந்த முருகப்பெருமான், "யான் பசியால் மெலிவுற்றேன்" என்றார். வள்ளியம்மை தேனும் தினைமாவும் கொணர்ந்து அளித்தாள். அவற்றை ஏற்றுக்கொண்ட முருகப் பெருமான், "நீர் வேட்கை மிகுந்துள்ளது; என் செய்வேன்?" என்றார். அதற்கு வள்ளியம்மை, "இம்மலையைக் கடந்தால் அங்கு ஒரு சுனை உள்ளது. அங்குச் சென்று நீர் அருந்தி வருக" என்றாள். அதற்கு முருகப்பெருமான், "யானோ முதியவன்; இளைத்து மெலிந்துள்ளேன்; சுனைக்குச் செல்லும் வழியும் தெரியவில்லை; நீயே என்னுடன் வந்து · அச்சுனையைக் காட்டுவாயாக" என்றார். அவ்வாறே வள்ளி

துணை செய்ய முருகப்பெருமான் சுனை நீர் அருந்தி, "என் பசியைப் போக்கினாய்; தாகத்தை நீக்கினாய்; ஆயினும் என் தளர்ச்சி நீங்க யான் கொண்ட மோகத்தைத் தணித்தால் என் குறை நீங்கும்," என்றார்.

இதனைச் செவியிலேற்ற வள்ளியம்மை அவரை நோக்கி "மேலாகிய தவ வேடம் பூண்டுள்ளீர்; ஆனால் அதற்குச் சிறிதும் ஒவ்வாச் சொல்லும் செயலும் கொண்டுள்ளீர்; பார்ப்பவருக்குப் பால் போன்று தோன்றி அதனைப் பருகுவோர் உயிரைப் போக்கும் நஞ்சினைப்போன்று உள்ளீர்; இங்குள்ளவர்கள் வேடர்கள்; உண்மைக்கு உண்மையாய் இருக்கும் தவவேடர்கள். அவர்கள் கூட்டத்திற்கு இஃது ஒரு பெரும்பழி கண்டீர்," எனச் சினந்து கூறித் தன்னிருப்பிடம் செல்ல முற்பட்டாள்.

அப்போது கிழவனார் வடிவுகொண்ட முருகப்பெருமான் தன் தமையனாராகிய விநாயகரை நினைத்தார். அவர் ஒரு பெருங்களிறாக வள்ளியின் முன் நண்ணிப் பிளிறி முழங்கினார். வள்ளியம்மை அச்சங்கொண்டு "என்னைக் காப்பாற்றியருள்க; யான் இணங்குகிறேன்" என வேண்டினாள். முருகப்பெருமான் விரும்பியவாறு யானை மறைந்தது. முருகப்பெருமான் ஆறுமுகங்களோடும் பன்னிரு கைகளோடும் வேல்தாங்கி மயில்மீது அமர்ந்த நிலையில் வள்ளிக்குக் காட்சியளித்தார். "இன்னார் என அறியாது யான் கூறிய இகழ்ச்சி உரைகளைப் பொறுத்தருள்க" எனப் பணிந்து தன்னை ஆட்கொண்டருளுமாறு வள்ளி வேண்டினாள்.

சில நாள்களுக்குப் பின்னர்த் தினைக்கதிர் முற்றியமையால் வள்ளி தன் தோழிகளோடு தினைப்புனம் நீங்கி இல்லம் வந்தெய்தினாள். ஒரு நாள் நள்ளிரவில் முருகப்பெருமான் அங்குப் போந்து அங்கிருந்த வள்ளியைத் தம்முடன் அழைத்துச் செல்ல முற்பட்டபோது வேடர்கள் இதனை அறிந்து அவரை எதிர்த்துப் போரிடத் தொடங்கினார்கள். முருகப்பெருமான் புன்முறுவல் பூத்தவுடன் அவரது கொடியிலிருந்த சேவல் நிமிர்ந்து நின்று ஒரு பெருங்குரல் எழுப்பிற்று. அவ்வொலி காரணமாக வேடர்கள் அனைவரும் மயங்கிக் கீழே விழுந்தார்கள். அப்போது வள்ளியின் மனம் பெரிதும் வருந்தியது. அதைக் கண்ட முருகப்பெருமான் மயங்கிக் கிடந்த வேடுவர்கள் அனைவரும் எழுந்துய்யுமாறு அருள்புரிந்தார். அவர்கள் அவரைத் தொழுது பணிந்தார்கள்.

அவர்கள் வேண்டுகோளுக்கேற்ப முருகப்பெருமான் அவர்களின் சிற்றூருக்குச் சென்று நாரதமுனிவர் உரியமுறையில் எரியோம்பி வேள்விபுரிய வள்ளியை மணந்து தணிகை மலைக்குச் சென்று அங்கு அடியவர்களுக்கு அருள்புரிவாராயினர். இவ்வரலாற்றை வள்ளிமலை எவ்வாறு எடுத்தியம்புகிறது என்பதை இனிக் காண்போம்.

வள்ளிமலை என்ற ஊரின் வடக்குப் பகுதியில் கிழக்கு நோக்கியவாறுள்ள திருமாலீசுவரர் கோயிலில், வள்ளியைத் திருமால் தம் திருமகளாக எய்துதற்குச் சிவபெருமானை நோக்கித் தவம் செய்த காட்சியைக் காண்கிறோம். இங்குத் திருமால் சங்கு, சக்கரம் ஏந்திப் பதுமாசனத்தில் அமர்ந்து, சிவலிங்க வடிவில் காட்சியளிக்கும் பெருமானை நோக்கித் தவம்புரிகிறார். இதன் காரணமாக

இங்குள்ள சிவலிங்கமூர்த்தி, திருமாலீசுவரர் என்னும் பெயரில் விளங்குகிறார்.

இத்தவத்தின் பயனாகத் திருமால் வள்ளியம்மையைத் தம் திருமகளாக அடையும் பேறு பெறுகிறார். இவ்வகையில் அவர் மகிழ்வெய்தியதைக் காட்டும் வகையில் திருமாலின் திருநோக்கு நேரெதிரில் வள்ளியம்மை சந்நிதி அமைந்துள்ளது திருமாலின் மருமகனாகவுள்ள சுப்பிரமணியர் சந்நிதியும் இங்கு உள்ளது.

வள்ளியம்மையின் பிறப்பையும் வளர்ப்பையும் பற்றி மேலும் வள்ளிமலை தெரிவிப்பன கருத்தில் கொள்ளத்தக்கன.

கரு தாங்கிய மான் ஆகிய இலக்குமிக்கும் சிவமுனிவராகிய திருமாலுக்கும் திருமகளாகப் பிறந்த வள்ளியம்மை வளர்ந்து ஓடி ஆடித் தினைப்புனம் காத்து முருகப்பெருமானை மணம்புரிந்த மலைப்பகுதி, வள்ளிமலையில் இன்றும் உள்ளது. இம்மலையைச் சுற்றி மான் கருவுற்ற இடத்தைச் சுட்டிக் காட்டுவது போன்று விளங்கும் கருமான் ஓடை, மான் வள்ளியை ஈன்ற இடத்தைக் குறிக்கக்கூடிய பெருமான் குப்பம், நம்பிராசன் ஆட்சிபுரிந்த இடங்களைக் குறிக்கும் நம்பிராசன் கோட்டைச் சுனைகள் ஆகியவை வள்ளியின் வரலாற்றுச் சான்றுகளாகக் காட்டப்படுகின்றன.

வள்ளிமலையில் கணேச கிரி எனப்படும் மலை உள்ளது. விநாயகர் யானை வடிவில் வள்ளியை அச்சுறுத்திய பின்னர் அந்த யானை உடல் கல்லாகிக் கணேசகிரியாகிவிட்டது என்பர். கணேசகிரி நான்கைந்து பாறைகள் ஒரே கோணத்தில் அமைய ஒரு யானையைப் போலவே காட்சியளிக்கிறது.

இம்மலையில் "சூரியன் காணாச் சுனை" என்று சொல்லப்பெறும் சுனை ஒன்றுள்ளது. தேனும் தினைமாவும் உண்டபின்னர் முருகப்பெருமான் இச்சுனை நீரைப் பருகினார் எனக் கூறுகிறார்கள்.

இதனையடுத்துப் பாறையொன்றுள்ளது. அப்பாறையின் மீது, மனிதரின் காலடி போன்ற அடிச்சுவடு ஒன்று காணப்படுகிறது. மலையின் மீது படிக்கட்டுகள் அமைக்கப்பட்டபோது அடிச்சுவடுகள் பல மறைந்துவிட்டன எனவும் கூறுகின்றனர்.

இங்குள்ள குன்று ஒன்றுக்குப் பர்வதராசன் குன்று என்பது பெயராகும். இங்குள்ள பாறையை வழுக்குப் பாறை என்பர். குளிப்பதற்காக வள்ளி இங்கு மஞ்சள் அரைப்பது வழக்கம் எனவும் இப்போதும் அதன் விளைவாக ஒரு துணியைத் தண்ணீரில் நனைத்து இந்தப் பாறையில் தேய்த்துப் பார்த்தால் துணியில் மஞ்சள் படிந்து விடுகிறது என்றும் சிலர் கூறுகின்றனர்.

நம்பிராசன் வாழ்ந்த மலையே பர்வதராசன் குன்று எனப்படுகிறது. இதன் உச்சியில் ஒரு சிவலிங்கம் காணப்படுகிறது. வள்ளியை முருகப்பெருமானுக்கு நம்பிராசன் தாரை வார்க்கும் காட்சியைப் போன்று, நீர்த்தாரைகளின் சுவடுகள் ஒரு பாறையில் காணப்படுகின்றன. இப்பாறையின் அடியில் விநாயகரின்

திருவுருவங்கள் நிறுவப்பெற்றுள்ளன. இன்றும் இங்கு நம்பிராசனின் பரம்பரையினர் வேடர்பரி உற்சவம் நடத்தி வருகிறார்கள்.

வள்ளியின் உயிர்த்தோழியாகிய 'பொங்கி' என்பவள் வள்ளிமலையின் காவல் தெய்வமாகக் கொண்டாடப்பெறுகிறாள். இவள் பெயரால் உள்ள பொங்கிப் பாறையின் மீது குங்குமத்தில் மயிலும் சேவலும் பாம்பும் வரையப்பட்டுள்ளன.

வள்ளிமலையிலிருந்து முருகப்பெருமான் வள்ளியோடு திருத்தணிகை சென்றதை நினைவூட்டும் வகையில் இவ்வூரிலிருந்து திருத்தணி செல்லும் வழியிலுள்ள ஊர்கள் மயிலாடி, வெடியங்காடு என்பன போன்ற பெயர்களைக் கொண்டுள்ளன. மயில் ஆடிய இடம் மயிலாடி. அவ்விருவரும் சென்றபோது பொழுது விடிந்த இடம் விடியும் காடு. இப்பெயர் வெடியங்காடு எனத் திரிபு எய்திற்று.

இவ்வாறு வள்ளி பிறந்து வளர்ந்து தினைப்புனத்தில் காவல்புரிந்து முருகனை மணந்து திருத்தணி செல்லும்வரை நிகழ்ந்த நிகழ்ச்சிகளை வள்ளிமலையும் அதனைச் சுற்றியுள்ள இடங்களும் சுட்டிக்காட்டுகின்றன.

வள்ளியம்மை திருமண வரலாறும் அதன் நுட்பங்களும் தமிழக மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து வந்துள்ளன. இது பற்றியே ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் இதனை "வாடா வள்ளி" எனக் குறிப்பிட்டுள்ளார்.

வள்ளியம்மை முருகனை மணம் புணர்ந்தது, உயிரானது இறைவனோடு இரண்டறக் கலக்கும் பேற்றைப் பெறும் நிலையினை உணர்த்தும் என்பர். வள்ளியம்மை–உயிர்; முருகன்–இறைவன்; மணம் புணர்தல் இரண்டறக் கலத்தல்.

முருகன் வள்ளியை நாடிவந்து முறைப்படி மணத்தல், இறைவன் வெளி வந்து உயிர்களை வலிந்து ஆட்கொள்ளும் அருள்திறனை அறிவிக்கிறது. வள்ளியம்மை முருகனுடன் இயைந்து நிற்றல், உயிர் மலங்கழிந்த நிலையில் இறையருளில் கலந்து கொள்ளும் முத்தி நிலையைக் குறிக்கிறது. இவற்றையெல்லாம் வள்ளிமலை நினைவு படுத்திக் கொண்டு வந்துள்ளது.

இவ்வழிமுறையில் வள்ளி மலையில் சித்தி பெற்ற ஞானிகள் பலராவர். அருணகிரி நாதர் வள்ளிமலையைத் தாம் அருளிய திருப்புகழில் பதினொரு பாடல்களில் சிறப்பித்துள்ளார். திருப்புகழை நாடெங்கும் பரப்பிய திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகள் வள்ளிமலையில் தங்கிச் சித்தி பெற்றார். அடுத்து வள்ளி மலைக்கருகில் தங்கால் என்னும் இடத்தில் வள்ளிமலை சுவாமிகள் எனப் பாராட்டப் பெற்றுவந்த மௌனகுரு சுவாமிகளின் சமாதி இருக்கிறது. இவ்வழியில் தொடர்ந்து வள்ளிமலையில் பணியாற்றுபவர்கள் அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், திருமயிலை குருஜி சுந்தரசுவாமிகள் ஆகியோராவர்.

# வட ஆர்க்காடு மாவட்டத்தில் கார்த்திகைச் சிறப்பு

சித்திரை, வைகாசி, கார்த்திகை ஆகிய மூன்று மாதங்களின் பெயரில் நட்சத்திரங்கள் முறையே சித்திரை, விசாகம், கிருத்திகை என்னும் பெயர்களில் அமைந்துள்ளன. இந்நட்சத்திரங்கள் அந்த அந்த மாதங்களில் பௌர்ணமி நாள்களுக்குரியவை. இம்மூன்றிலும் கார்த்திகை மாதத்தில் வரும் கிருத்திகை நாளே மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது.

சுப்பிரமணியர் கோயில்களில் கிருத்திகை நட்சத்திரத்தில் வழிபாடுகளும் அருச்சனை ஆராதனைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன. சுப்பிரமணியர் தோன்றிய நட்சத்திரம் விசாகம். இதன் அடிப்படையில் . அவருக்கு விசாகப்பெருமான் என்னும் பெயர் வழங்கிவருகிறது. விசாக நட்சத்திரத்தில் முருகப்பெருமானுக்கு வழிபாடு நடத்தப்படுகிறது. ஆனால், விசாக நட்சத்திரத்தை விடப் பன்மடங்கு கிருத்திகை நட்சத்திரம் கொண்டாடப்பெறுகிறது. இதற்குக் காரணம் முருகப்பெருமான் ஆறுகுழந்தைகளின் வடிவில் சரவணப்பொய்கையில் இருந்தபோது கார்த்திகைப் பெண்கள் அறுவர் அவருக்குப் பாலமுதம் ஊட்டினர். அவர்களை நினைவுபடுத்தும் வகையில் அவர்கள் பெயரில் கிருத்திகை நட்சத்திரம் கொண்டாட முருகப்பெருமான் அருள்புரிந்தார். இதற்கேற்ப முருகப்பெருமான் கோயில்களில் கிருத்திகை விழா கொண்டாடப்படுகிறது.

இம்மாவட்டத்தில் திருவண்ணாமலையில் கார்த்திகைமாதக் கிருத்திகையன்று நடைபெறும் சோதி வழிபாடே பசிப்பிணியைப் போக்கி உலகில் நலமுடன் வாழ 21 தலைமுறைகளுக்கும் கருணை அளிக்கும் என்பது சமயக் கோட்பாடாகும்.

வேலூர் வட்டம் விரிஞ்சையில் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் மகப்பேறு வேண்டுவோர் சிறப்பு வழிபாடாற்றுவார்கள்.

அசுவினி முதல் ரேவதி ஈறாகவுள்ள 27 நட்சத்திரங்களில் மேஷம் முதல் மீனம் வரையிலுள்ள பன்னிரண்டு இராசிகளில் ஒவ்வொன்றுக்கும் இரண்டேகால் நட்சத்திரங்கள் உரியவை. மேஷராசிக்கு அடுத்த இராசியாகிய இடபராசிக்குக் கிருத்திகை முக்கால் பங்கும் உரோகிணி நட்சத்திரமும் மிருகசீரிடத்தில் பாதிப்பங்கும் உரியவை. இராசிகள் பன்னிரண்டுள் கார்த்திகை நட்சத்திரத்தின் முக்கால் பங்கைக் கொண்ட இடபராசியே மிகச் சிறந்தது ஆகும். இடபம் அறத்தின் சின்னம்; தருமத்தின் சிகரம். இப்பெயர்களில் பல கோயில்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. இவற்றிற்குப் போளூர் ஆத்துவாம்பாடி, செய்யாறு ஒழுக்கவாக்கம் தருமலிங்கேசுவரர், போளூர் மண்டகுளத்தார் தருமேசுவரர் கோயில் முதலியவை எடுத்துக்காட்டு

களாகும். செய்யாறு வட்டத்திலுள்ள மோட்டுக்கோயில், கார்த்திகை நட்சத்திரத்தில் தோன்றி நட்சத்திரக்கோயில் என்னும் பெயர் தாங்கிற்று. கார்த்திகை நட்சத்திரத்தின் கடவுளும் கார்த்திகை மாதத்தின் கடவுளுமாகிய சுப்பிரமணியர் இம்மாவட்டத்தில் ஏழு சிவலிங்கங்களுக்குப் பூசை செய்தார் என்று கூறுவர்.

கார்த்திகை மாதத்திற்கு விருட்சிகராசி பனைவீடு என நாடி சாத்திரம் கூறுகிறது. பனைமரம் இம்மாவட்டத்தில் பல கோயில்களில் உள்ளது. எடுத்துக்காட்டுகள்: திருவோத்தூர் என்னும் திருவத்திபுரத்தில் திருஞானசம்பந்தர் ஆண்பனையைப் பெண்பனை ஆக்கினர். செய்யாறு வட்டம் வன்பார்த்தான் பனங்காட்டூரில் இக்கோயிலுக்குரிய தலவிருட்சம் பனைமரமாகும். வேலூர் வட்டம் பனப்பாக்கம் மயூரநாதசுவாமி கோயிலின் தலவிருட்சம் பனைமரமாகும். திருவிரிஞ்சை மார்கபந்தீசுவரர் கோயில் தலமரமும் பனைமரமாகும். குடியாத்தம் பனக்காட்டூரில் சஞ்சீவிராமசாமி கோயிலும் குடியாத்தம் பனமடங்கியில் முத்துவிநாயகர் கோயிலும் உள்ளன.

கார்காலத்தை உள்ளடக்கிய மாதம் கார்த்திகை மாதம். இதைக் கிருத்திகா எனக் குறிப்பிடுவதுண்டு. விவசாயத்தை கிருஷி எனக் குறிப்பிடுகிறார்கள். இது கிருஷிவிருத்திகா என்பதிலிருந்தும் வந்தது என்பர். விவசாயத்தை வளர்ப்பதாகிய மழை தெய்வமாகப் போற்றப்படுகிறது. பல தலங்களில் தண்ணீர்க் கிணறுகளைச் சுற்றிலும் மண்டபம் அமைத்துப் பாதுகாத்து அவற்றை வழிபடுகின்றார்கள்.

## பனைவளம் கொண்ட வடஆர்க்காடு

பனைமரத்தின் பயனைப் பற்றிப் பள்ளிச் சிறுவர்களுக்கு அழுத்தமாக எடுத்துக்கூறும் வகையில் முன்பு ஒரு பாடல் அமைக்கப்பட்டது. அப்பாடல், "பனை மரமே பனைமரமே ஏன் வளர்ந்தாய்" என்று தன்னிடம் வினவப்பட்ட கேள்விக்கு, தானே விடை பகரும் முறையில் அது தன்னிடமிருந்து அடையப்பெறும் பயன்களையெல்லாம் எடுத்துக் கூறுகிறது. தண்ணீர் வார்த்து வளர்க்கப்பெறும் தென்னை காய்த்து நற்பயன் தருகிறது. அது போன்றன்றி முறையாக நீர் வார்க்கப்படாத நிலையிலும், ஓங்கி வளர்ந்து பல வகைகளிலும் பயனளிக்கும் பனை மரத்தின் சிறப்பை வடஆர்க்காடு மாவட்டக்கோயில்களுள் சில எடுத்துக் காட்டுகின்றன.

இம்முறையில் பனை மரத்தின் அருமையையும் பெருமையையும் செய்யாறு வட்டத்தில் செய்யாற்றங்கரையில் அமைந்துள்ள திருவத்திபுரம் எனப்படும் திருவோத்தூர் விளக்குகிறது. இங்கிருந்த மெய்யடியார் ஒருவர் விரும்பியவாறு, திருஞானசம்பந்தர் காய்க்காத நிலையிலிருந்த ஆண்பனைகள் காய்க்குமாறு ஒரு பதிகம் பாடிச் செயலாற்றினார். பனை மரங்கள் இருப்பது மட்டும்போதாது. அவை

காய்க்கவும் வேண்டும் என்பதை அழகிய முறையில் இக்கோயிலில் நிறுவப்பட்டுள்ள பனை மரத்தின் சிற்பம் தெரிவிக்கிறது. இவ்வாறு பெருகிவளரும் பனைமரங்கள் அளிக்கும் பயனையும் அவை பாதுகாக்கப்பட வேண்டிய தேவையையும் இதே வட்டத்திலுள்ள பனங்காட்டூர்த் திருக்கோயில் எடுத்துக்காட்டுகிறது. இத்தலத்தின் பெயரே பனை மரத்தின் பெயரில் விளங்கி வருகிறது. இங்கு எழுந்தருளிய சிவபெருமானுக்குப் படைத்துப் பூசிக்க வேறு எதுவும் கிடைக்காத நிலையில் கண்ணுவ முனிவர் பனம்பழத்தை இட்டுவழிபட்டார் என்றும் அதனைச் சிவபெருமான் உவந்து ஏற்றுக் கொண்டார் என்றும் கூறுவர். உணவு எதுவும் கிடைக்காதவிடத்துப் பனைமரத்தின் நுங்கும் அதன் பழமும் உணவுப்பொருள்களாக அமைகின்றன. இத்தகைய பனைமரங்கள் வெட்டப்படுவதற்கு உரியவை அல்ல. உயிர்ப்புடனுள்ள பனைமரங்களை வெட்டுவோர் மன்னன் ஆணைக்கேற்பத் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என இக்கோயிலின் கிருபாநாதீசுரர் சந்நிதி முன்புறமுள்ள மண்டபத்தின் கிழக்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு கூறுகிறது.

அக்காலத்தில் அம்மாவட்டத்தில் பயன்படுத்தப்பட்ட ஓர் அளவுகோலின் நீளம் இக்கோயிலின் கிழக்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த அளவுகோலின் தொடக்கத்திலும் இறுதியிலும் பனைமரத்தின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. பனை மரத்தின் உருவங்கள் அதன்பெருமையை எடுத்துக் காட்டிக்கொண்டுள்ளன.

இவ்வாறு வட ஆர்க்காட்டின் தெற்குப் பகுதியிலுள்ள திருவத்திபுரத்திலும் பனங்காட்டூரிலும் சிறப்பிக்கப்பெற்ற பனைமரம் வடஆர்க்காட்டின் வடக்குப் பகுதியாகிய அரக்கோணம் வட்டத்திலுள்ள பனப்பாக்கம் மயூரநாதர் கோயிலிலும் திருவிரிஞ்சிபுரம் வழித்துணைநாதர் கோயிலிலும் தலமரமாக அமைந்துள்ளமை நினைந்து இன்புறத்தக்கதாகும்.

# தவச்சீலர்கள் திகழ் வடஆர்க்காடு

உலகில் ஆண்மக்களாய்ப் பிறந்தவர்கள்,

"ஞானமும் கல்வியும் நயந்து தானமும் தருமமும்
தாம் செய்வாராயின் வானநாடு வழிதிறக்கும்"

என்பது ஆன்றோர் வழங்கிய அமுதமொழியாகும். இக்கோட்பாட்டிற்கேற்பத் தவச்சீலர்கள் பலர் வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாழ்ந்து மக்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து மறைந்துள்ளார்கள்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் பாலாற்றின் தென்கரையில் காரை, வள்ளி வேடு, குடிமல்லூர் ஆகிய மூன்று தலங்களும் பாலாற்றின் வடகரையில் விஷாரம், வேப்பூர், புலப்பாடி ஆகிய மூன்று தலங்களுமாக மொத்தம் ஆறு தலங்கள் உள்ளன. இவற்றில் முனிவர்கள் பலர் இருந்து அருந்தவமியற்றி அருள் நெறியை விளக்கினார்கள். இவர்களுள் அவரவர் நினைவாகக் கோயில்கள் அமைந்துள்ளன. காரை கௌதமேசுவரர் கோயில் கௌதமர் நினைவாகவும் வள்ளிவேடு அகத்தீசுவரர் கோயில் அகத்தியர் நினைவாகவும் குடிமல்லூர் திருவத்தீசுவரர் கோயில் அத்திரி முனிவர் நினைவாகவும் விஷாரம் வான்மீகீசுவரர் கோயில் வான்மீகி முனிவர் நினைவாகவும் வேப்பூர் வசிட்டேசுவரர் கோயில் வசிட்டர் நினைவாகவும் புதுப்பாடி பாரதீசுவரர் கோயில் பரத்வாஜர் நினைவாகவும் எழுந்தன.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் திருவண்ணாமலையில் முருகப்பெருமானால் ஆட்கொள்ளப்பெற்ற அருணகிரிநாதர் வரலாறு நன்கறியப் பெற்றதாகும். அப்பெருமான் பதினாறாயிரம் திருப்புகழ்ப் பாடல்கள், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, சீர்வகுப்பு, கடைக்கண்ணியல் வகுப்பு, வேல்வகுப்பு, மயில்வகுப்பு, சேவல் வகுப்பு, மயில் விருத்தம், வேல் விருத்தம் முதலியவற்றை அருளி அழியாப்புகழ் எய்தியுள்ளார்.

இராணிப்பேட்டை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 15 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள ஒடுக்கத்தூரில் தவம் இயற்றிய முனிவர்கள் எழுவர் சிவலிங்கத்தில் ஒடுங்கினார்கள். இவ்வாறு இவர்கள் ஒடுங்கிய நிலையை ஒடுக்கத்தூரிலுள்ள சப்தரிஷிகள் கோயில் எடுத்துக்காட்டுகிறது.

தற்போது குன்றக்குடி ஆதீனம் என விளங்கிவரும் சைவ ஆதீனம் முன்னாளில் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்ட திருமடத்தில் அருளாட்சிபுரிந்து வந்தது. இவ்வாதீனத்துச் சுவாமி திருமயிலைப்புராணம் போன்ற தமிழ் நூல்களை இயற்றினார். இதன் பெயர் தற்போதும் திருவண்ணாமலை ஆதீனம் என்றே ஏற்றுக்கொள்ளப்பெற்றுள்ளது.

செங்கம் நகரிலிருந்து ஏறத்தாழ 28 கிலோமீட்டர்த் தொலைவில் தென்பெண்ணை ஆற்றங்கரையிலுள்ள வெங்கட்டரமணப்பெருமாள் கோயிலும் அதன் அருகிலுள்ள சென்னியம்மன் கோயிலும் வெள்ளையப்ப சித்தர் என்பவரை நினைவுபடுத்திக் கொண்டு வருகின்றன.

தருமபுரி மாவட்டம் ஓசூர் கிராமத்தில் ஏகாலியர் இனத்தைச் சேர்ந்த குடும்பத்தில், சென்னியம்மன் என்ற ஏழு வயதுப்பெண் வளர்ந்து வந்த காலத்தில், இம்மாவட்டத்து ஜாகீர்சாயபு, தமக்குக் குழந்தை இல்லாத காரணமாகச் சென்னியம்மனை அவள் பெற்றோர்களிடமிருந்து விலைக்கு வாங்கப் பேசிவிட்டு, அடுத்தநாள் தாம் பணத்தோடு வருவதாகச் சொல்லிச் சென்றுவிட்டார். இதையறிந்த அப்பெண் தன்னை எவரும் விலைக்கு விற்கக்கூடாது எனவும் தன்னை ஒரு பெட்டியிலிட்டு ஆற்றில் விட்டுவிடுமாறும் கூறினாள். அடுத்த நாள் ஜாகீர்தார்

வருமுன், சென்னியம்மன் பெட்டியில் இடப்பட்டு ஆற்றில் விடப்பட்டாள். அன்று ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தது. அக்காலத்தில் அந்த ஆற்றங்கரையிலுள்ள பிரசன்னவெங்கட்டரமணப்பெருமாள் கோயிலில் வழிபாடாற்றிக் கொண்டிருந்த சித்தர் வெள்ளையப்பர் அப்பெட்டியை வழிமறித்து அப்பெண்ணை மீட்டார். அப்பெண் அங்கே சில காலம் வாழ்ந்து அந்த ஆற்றின் நடுவே உள்ள பாறையில் வீடுபேறு எய்தினாள். சித்தர், பூசை செய்துவந்த வெங்கட்ட ரமணப்பெருமாள் கோயிலும் சென்னியம்மன் தங்கியிருந்து வீடுபேறு எய்தியபாறையும் தற்போது நீப்பத்துறையில் இரு பெருங்கோயில்களாக விளங்கிவருகின்றன. இக்கோயில்களின் ஆண்டு விழாவில் மக்கள் இலட்சக்கணக்கில் கூடி வழிபாடாற்றுகின்றனர்.

விருபாட்சிதேவர் மல்லிகார்ச்சுனத்தில் தோன்றிய வீரசைவமரபினர். திருவண்ணாமலையில் குகையொன்றில் தவம் இயற்றி வீடுபேறு எய்தினார். இக்குகை திருவண்ணாமலை விருபாட்சிக் குகை என்னும் பெயரில் இன்றும் இருந்துவருகிறது. இதன் மேற்புறத்தில் கந்தாசிரமம் உள்ளது.

குகைநமச்சிவாய மூர்த்தி சித்தராக விளங்கினார். இவர் கன்னட நாட்டு வீரசைவர். மல்லிகார்ச்சுனத்திலிருந்து தெற்கே சிவத் தலயாத்திரை மேற்கொண்டு திருவண்ணாமலைக்கு வந்து அங்குத் தவம் இயற்றிச் சிதம்பரம் கோயிலில் திருப்பணி செய்யும்பொருட்டு, தம்மிடம் விரைவில் பக்குவம் பெற்ற சீடரை "குரு நமச்சிவாயர்" என்னும் பட்டம் பெறத்தக்கவராய் விளங்க வைத்து, அன்னாரைச் சிதம்பரத்திற்கு அனுப்பினார். குகை நமச்சிவாயர் திருவண்ணாமலையில் சித்தியடைந்த குகைக்கு வடபுறம் முலைப்பால் தீர்த்தமும் மேற்புறம் அருவிக்கரையில் பாததீர்த்தமும் உள்ளன.

தம் குரு வாக்கைத் தாங்கிச்சென்ற குரு நமச்சிவாயர், சிதம்பரம் நடராசப்பெருமானிடம் ஈடுபட்டு ஆங்குப் பல திருப்பணிகள் புரிந்து அற்புதச் சாதனைகள் பல புரிந்தார்.

வட ஆர்க்காடு மாவட்டத் தலைநகராகிய வேலூரில் 250 ஆண்டுகளுக்கு முன்னர் வேளாளர் குலத்தில் தோன்றிய நீலகண்ட தேசிகருக்கு மகனாகத் தோன்றியவர் ஈசானிய தேசிகர். இவர் ஓதாதுணர்ந்த உத்தமராய்ப் பல தலங்களில் வழிபாடாற்றிப் பின்னர்த் திருவண்ணாமலையை அடுத்துள்ள வேட்டவலத்தருகில் ஒரு மலைக்குகையில் சிலகாலம் தவம் இயற்றிப் பின்னர்த் திருவண்ணாமலையை அடைந்தார். தமக்கு அண்ணாமலையார் அருளியவாறு "ஈசானிய" திசைக்குச் சென்று ஈசானிய தீர்த்தத்தின் தென்கரையில் ஓர் ஆலமரத்தின் கீழிருந்து தவமியற்றினார். இவர் ஞானக்கட்டளை, அண்ணாமலையார் தோத்திரப்பாமாலை, வெண்பா, அந்தாதி, கண்ணி முதலிய பிரபந்தங்களை இயற்றிப் புலவர் பெருமக்களுக்கிடையிலும் பேரருளாளர்களிடையிலும் திகழ்ந்து கி. பி. 1829-ஆம் ஆண்டில் வீடு பேறெய்தினார்.

காஞ்சிபுரத்தில் அந்தணர் மரபில் தோன்றிக் கல்வி கேள்விகளில் வல்லுநராய் விளங்கினார் சேஷாத்திரி சுவாமிகள். இவர் காஞ்சிபுரம் சர்வ தீர்த்தக்கரையிலுள்ள

தீர்த்தீசுவரர் சந்நிதியில் கௌடத்துறவி அவதூதி பாலாஜி சுவாமிகளிடம் உபதேசம் பெற்றுத்துறவறம் பூண்டு திருவண்ணாமலை அடைந்தார். பிளேக் நோய்க் காலத்தில் இவர் திருவண்ணாமலைக்கு வந்தார் என்பதற்காக இவருக்கு ஒரு மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவரது ஆனந்த நிலையை முன்னிட்டு இவர் பின்னர் விடுவிக்கப்பெற்றார். அண்ணாமலையில் இவர் தங்கித் தவம்புரிந்து வீடுபேறெய்திய இடம் சேஷாத்திரிசுவாமி ஆசிரமம் என மிளிர்கிறது.

ஸ்ரீரமணமகரிஷி பாண்டிய நாட்டில் திருச்சுழியல் என்னும் தலத்தில் வழக்கறிஞர் சுந்தரம் ஐயருக்கும் அழகம்மையாருக்கும் மகனாகத் தோன்றினார். தமது பதினேழாவது வயதில் இல்லத்தில், ஒரு சீட்டை எழுதி வைத்துவிட்டுத் திருவண்ணாமலையை அடைந்து துறவு பூண்டார். இங்குப் பல ஆண்டுகள் தவமியற்றினார். தம் தாயார் அழகம்மை 19-5-1922-ஆம் நாளில் இறைவன் திருவடி நிழலை அடைய அவ்விடத்தில் இவர் சிவலிங்கப் பிரதிட்டை செய்தார். இது தற்போது "மாத்ரு பூத" என்னும் பெயரில் அபிடேக ஆராதனை செய்யப்பெற்றுவருகிறது. இவர் காலோத்தரம், விவேகசூடாமணி, உபதேசமொழிகள், ரமணகீதை முதலிய அரிய நூல்களை இயற்றியுள்ளார். இவரது ஆசிரமத்திற்குப் பல நாட்டவர்களும் வந்திருந்து இவருடைய பொன்மொழிகளால் ஆறுதல் பெற்றுச் சென்றார்கள். இவர் 14-4-1956-ஆம் ஆண்டில் சோதியில் கலந்தார். இவர் முதலில் திருவண்ணாமலைக் கோயில் ஆயிரக்கால் மண்டபத்துப் பாதாள இலிங்கேசுவரர் சந்நிதியில் பலகாலம் நோன்பு ஏற்றுப் பூசித்துவந்தார். இக்கோயில் 3-11-1968-ஆம் ஆண்டு குடமுழுக்குப் பெற்றது.

பாண்டியநாட்டைச் சேர்ந்த ஐடிநி சண்முகயோகினி, பாண்டிநாட்டுச் சிவகிரியில் தொண்டைமண்டலச் சைவ வேளாளர் குலத்தில் தோன்றிச் சண்பகம் என்னும் பெயரில் துறவறம் பூண்டவர். தம் இருபத்து நான்காம் ஆண்டில் அண்ணாமலையாரால் ஆட்கொள்ளப்பெற்றவர். இங்கு ஐம்பது ஆண்டுகள் தவம் இயற்றிப் பேறுபெற்றார்.

பத்திராசல சுவாமிகள் இங்குத் தவம் இயற்றி முத்தி அடைந்தார். இவரது சமாதி திருவண்ணாமலை சேஷாத்திரி மடாலயம் அருகில் உள்ளது.

ஈசுவர சுவாமிகள், சோழவளநாட்டில் திருக்கோயிலூரை அடுத்த இறைவாச நல்லூரில் அருணாசல தீட்சிதர், சதி பாலாம்பிகை ஆகியோருக்கு அருமை மகனாகத் தோன்றியவர். இவர் திருக்கோயிலூர் ஆங்கிலக் கல்லூரியில் கல்வி பயின்று துறவறம் பூண்டு அண்ணாமலையை எய்தினார். இவர் வடமொழி, தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் வல்லுநர். "மகாதேவா" "மகாதேவா" என இடைவிடாது தியானம் செய்துவந்தார். பிச்சையேற்று அண்ணாமலையார் கோயில் முன்மண்டபத்தில் தங்கிக் கிரிவலம் செய்துவந்தார். இவரது சமாதி இங்குள்ள ஈசானிய தீர்த்தத்திற்கு அருகில் உள்ளது.

வள்ளிமலைச் சச்சிதானந்த சுவாமிகள், பெரியார்மாவட்டம், பவானியை அடுத்து, மேட்டூர் செல்லும் வழியில் பூதாச்சியபுதூர் என்னும் கிராமத்தில் வாழ்ந்த சிதம்பரம் அய்யருக்கும் மகாலட்சுமிக்கும் 1876-ஆம் ஆண்டில் மகனாகத் தோன்றினார். அவர் அப்போது அர்த்தநாரி என்னும் பெயர் தாங்கி வளர்ந்து வளம்பெற்று இல்லறமேற்றுச் சில ஆண்டுகளுக்குப் பின்னர் பல இன்னல்களையும் பொருட்படுத்தாமல் பல தலங்களில் இறைவனை வழிபட்டார். பழனியில் அவர் பழனியாண்டவருக்கு வழிபாடாற்றி வந்த நாள்களில் ஒரு நாள் "வங்காரமார்பிலணி" என்னும் திருப்புகழை, தேவதாசி ஒருத்தி உள்ளம் உருக மெய்மறந்து பாடிக்கொண்டிருந்ததைச் செவிமடுத்தார். அத்திருப்புகழில் "சிங்கார ரூப மயில் வாகன நமோநமோ" என்னும் தொடர் அவரை ஆட்கொண்டது. அக்கணம் முதல் அவர் அருணகிரிநாதரின் திருப்புகழைப் பாடம் செய்து மனமுருகப் பாடவேண்டும் என்னும் தீரா அவாவில் திருப்புகழ் பாடி அதனைப் பரப்பும் பணியில் ஈடுபட்டார். அவர் திருவண்ணாமலையில் ஸ்ரீரமணர், சேஷாத்திரி ஆகியோரிடம் நல்லாசி பெற்றுக்கொண்டு 1916-ஆம் ஆண்டிலிருந்து வள்ளிமலையில் திருப்புகழ்ப் பணியை ஆற்றிவந்தார். பின்னர் 1950-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சுவாமிகள் சென்னையில் சமாதி அடைந்தார். அவரது திருமேனி அவர் தமது உயிருக்குயிராய் போற்றிவந்த வள்ளிமலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அங்கு அவரது திருப்புகழ்த் தேனிசை பெற்றிருந்த புனிதக் குகையில் அவருக்கு சமாதிக்கோயில் அமைக்கப்பட்டது.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த துறையூருக்கு அண்மையில் மூன்று கிலோமீட்டர்த் தொலைவில் முசிறி செல்லும் சாலைப்பிரிவிலுள்ள மதுராபுரி என்னும் சிற்றூரில் சீலமிகு சபாபதி உடையாருக்கும் அவர்தம் துணைவியார் விசாலாட்சியம்மையாருக்கும் 28-9-1898-ஆம் ஆண்டில் தோன்றிய திருமகனார் திரு நடேச ஞானதேசிகர். ஸ்ரீரமணர் தமது 17-ஆம் வயதில் துறவியாகி அண்ணாமலை அடைந்தது போன்று நடேசனாரும் தமது 16-ஆம் வயதில் (கி.பி. 1916-ஆம் ஆண்டில்) துறவியாகித் திருவண்ணாமலை எய்தினார். அப்போது திருவண்ணாமலை ஈசானிய மடத்திற்கு ஞானவள்ளலாக விளங்கியவர் ஏழாம் குருமூர்த்தியாகிய ஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகள். இவர்கள் நடேசனாரின் பக்குவ நிலைமையை உணர்ந்து தம் சீடராக ஏற்றுக்கொண்டார். அக்காலத்தில் ஒருநாள் அம்மடத்திற்கு வந்திருந்த கேரள நாட்டுச் சமரச சன்மார்க்க ஞானி ஸ்ரீநாராயணகுரு, நடேசனாருக்கு ஆசி வழங்கினார். பின்னர் ஸ்ரீமத் மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் கோவிலூர் மடத்தின் ஏழாவது பீடாதிபதியாகத் தலைமைப் பொறுப்பை ஏற்றபோது, அவர் நடேசனாரைத் திருவண்ணாமலை ஈசானிய மடத்திற்குத் தலைவராக்கினார். அது முதல் இருபத்தாறு ஆண்டுகள் (1921- 1947) அங்கு நடேச ஞானதேசிகர் மடாதிபதியாக இருந்து அரும்பணிகள் பல ஆற்றினார். பின்னர் இத் தலைமைப் பதவியைத் தாமாகவே துறந்து, பல தலங்களுக்குச் சென்று இறுதியில் 1949-ஆம் ஆண்டு திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டம், கைகளத்தூருக்கு அண்மையிலுள்ள காரியனூருக்குச் சென்று

ஆங்கு ஓர் ஆசிரமம் அமைத்து அமைதியாக இருந்து பலருக்கு நல்லுபதேசம் வழங்கிவரும் நாளில் (23-2-1960-ஆம் நாளில்) முக்தி எய்தினார்.

விட்டோபா சுவாமிகள் போளூரில் எண்பது ஆண்டுகளுக்கு முன்வரையில் திகழ்ந்த அருட்சித்தர். அவர்கள் நினைவாகத் தற்போதும் பல நிகழ்ச்சிகள் கொண்டாடப்பெறுகின்றன.

திருவண்ணாமலையில் தேர்முட்டிச் சந்நிதித் தெருவில் வாழ்ந்து வந்தவர் தவயோகி ஸ்ரீராம்சுரத் குமார் சுவாமிகள். இவர் காசிக்கு அருகில் 1-12-1918-ஆம் ஆண்டில் பிறந்து கன்னடத்தே காஞ்சன்காடு ஆனந்தாசிரமம் சுவாமி இராமதாசரிடம் உபதேசம் பெற்றுப் புதுச்சேரியில் அரவிந்தரைத் தரிசித்து இரமணரிடம் ஈடுபாடுகொண்டு, திருவண்ணாமலையைத் தேடி வந்து 1959-ஆம் ஆண்டு முதலாக இங்கு நிலைத்துவிட்டார்.

# தோத்திரம் பற்றியும் சாத்திரம் பற்றியும் குறிப்பிடும் முதல் கல்வெட்டு

சைவ சமயத்திற்கு இருகண்கள் போன்றவை தோத்திர வடிவிலான பன்னிரு சைவத் திருமுறைகளும் சாத்திர வடிவிலான பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்களுமாகும். சைவத் திருமுறைகளுள் முதல் ஆறுதிருமுறைகள், கி. பி. ஏழாம் நூற்றாண்டில் திகழ்ந்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு நாயனார் ஆகிய இவ்விருவராலும் அருளப்பெற்றவை. இவை பரவலாக ஓதப்பட்டமை பற்றி முதன்முதலில் அறிவித்த கல்வெட்டு, திருவலம் வில்வநாதீசுவரர் கோயிலில் மண்டபத்தின் வடக்குச்சுவரில் பொறிக்கப்பட்டதாகும்.

இக்கல்வெட்டு பல்லவ கோவிசயநந்தி விக்கிரமவர்மனின் பதினேழாம் ஆண்டுக் கல்வெட்டாகும். இவன், பல்லவ மன்னன் நிருபதுங்கனின் (கி.பி. 855-890) தந்தையும் இராட்டிரகூட மன்னன் முதலாம் அமோகவர்ஷனின் மருமகனுமாவான் என அரசுக் கல்வெட்டாராய்ச்சியாளர் கூறுகிறார். தேவாரப் பதிகம் பற்றித் தெரிவிக்கும் முதல் கல்வெட்டு இதுவாதலால், இது முக்கியமான ஆதாரமாகவுள்ளது.

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் தலையாயது சிவஞானபோதம். இதனை அருளியவர் கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் தென் ஆர்க்காடு மாவட்டம் பெண்ணாடகத்தில் தோன்றிய மெய்கண்டதேவர். இவர், திருவெண்ணெய் நல்லூரில் வளர்ந்து வந்த காலத்தில், சனற்குமாரமுனிவரின் ஞானப்புதல்வராகிய சத்திய

ஞானதரிசினியிடம் ஞனோபதேசம் பெற்ற பரஞ்சோதி முனிவரால் ஆட்கொள்ளப் பெற்றவர். இவர் திருவெண்ணெய் நல்லூரிலிருந்த காலத்தில் சிவஞான வேட்கை மிக்காருக்கு அதனைப் புகட்டிவந்தார். பின்னர்த் திருவண்ணாமலையில் அப்போதிருந்த கோளகிமடம், மெய்கண்டாரது தலைமையை நாடிற்று. மெய்கண்டாரும் திருவண்ணாமலை மடத்தில் தலைமை தாங்கிப் பலருக்குச் சிவஞானத்தைப் பரிவோடு பகர்ந்து வந்தார். அவர்களுள் ஒருவர் ஊருடைய பெருமாள் என்ற "எடுத்தது வலிய வேளார்" என்பார். இவர், திருவண்ணாமலைக்கு அருகில் திருவண்ணாமலைக் கோயிலின் தேவதானமாக இருந்த தேவதான மாத்தூர்ப் பகுதியில் ஓரள ៴ நிலப்பரப்பைத் திருவண்ணாமலைக் கோயிலாரிடமிருந்து பெற்று அதில், புதிதாக ஓர் ஏரியை அமைத்து அதற்குத் தம் ஞானாசிரியராகிய மெய்கண்டதேவரின் பெயரில், மெய்கண்ட தேவப்புத்தேரி எனப் பெயரிட்டார். இதன் நீர்ப்பாசனத்தின் விளைவாக இந்நிலப் பரப்பு செழிப்புற்றது. இந்த ஏரியின் கீழ் மேட்டுப்பகுதியில் அவர் சிவன் கோயில் ஒன்றை அமைத்து அதற்கு மெய்கண்டீசுவரம் எனப்பெயரிட்டார்.

மெய்கண்ட தேவரின் சிவஞானப் பொலிவையும் அவர் மாணவர்களின் திறத்தையும் முன்னிட்டு அந்த ஏரியையும் அதன் நீர்ப்பாசனம் பெற்ற நிலங்களையும் மெய்கண்டீச்சரமுடைய பெருமானுக்குத் தேவதானமாக விடக் கோயிலார் முடிவு செய்து, அக்காலத்து சோழமன்னர் மூன்றாம் இராசராசன் (கி.பி. 1216-48) ஆணையை வேண்டினர். அதற்கு உவந்த அம்மன்னர் தேவதானம் மாத்தூருக்கு இராசராச நல்லூர் எனத் தம் பெயரிட்டு இவ்வகையில் கோரியவாறு ஆணை பிறப்பித்தார். அவ்வாணையின் சுருக்கம் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் முதற்பிரகாரத்தின் வடக்குச்சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் வாசகம், "ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராசராச தேவர்க்கு யாண்டு 19-ஆவது ரிஷப ஞாயிற்று இருபத்தெட்டாந் தேதியும் சனிக்கிழமையும் பெற்ற மிருகசீரிஷத்து நாள் உடையார் திருவண்ணாமலையுடைய நாயனார் கோயில் ஸ்ரீ மாகேசுவரன் கண்காணி செய்வார்களும் தேவர்கன்மி கோயில் கணக்கனும் திருவெண்ணெய்நல்லூருடையான் மெய்கண்டதேவன் ஊருடைய பெருமாளான எடுத்தது வலிய வேளார்க்குக் கல்வெட்டிக் கொடுத்த பரிசாவது"[1] எனத் தொடங்கி, செங்குன்றநாட்டு மாத்தூரான இராசராச நல்லூரில் இவர் வெட்டுவித்த மெய்கண்ட தேவப் புத்தேரியையும், இவ்விராசராச நல்லூரில் எழுந்தருளியிருக்கிற உடையார் மெய்கண்டீச்சுரமுடைய நாயனார் பெயரையும் குறித்துரைக்கும் கல்வெட்டொன்று திருவண்ணாமலைக் கோயிலில் பொறிக்கப்பட்டது.

இக்கல்வெட்டு மெய்கண்டதேவர் காலத்திலே திருவண்ணாமலைத் திருக்கோயிலார் ஏற்றுக்கொண்டவாறும் அக்காலத்துச் சோழமன்னர் மூன்றாம் இராசராச சோழன் ஆணைக்கேற்பவும் திருவண்ணாமலைத் திருக்கோயிலில் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க சைவ சமய வரலாற்று ஆதாரமாகும்.

---

(1. சென்னைக் கல்வெட்டு, ஆண்டறிக்கை 485/1902)

## நில அளவுகோலும் கோயில் அளவுகோலும்

நிலங்களை அளப்பதற்காக ஓர் அளவுகோல் தேவைப்பட்டது. இந்த அளவுகோலும் தரப்படுத்தப்பட்டது. இந்த அளவு செய்யாறு வட்டம் பனங்காட்டூர் தாலபுரீசுவரர் கோயிலின் கிழக்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த அளவுள்ள கல்வெட்டுப் பகுதியின் தொடக்கத்தில் ஒரு பனைமரத்தின் உருவமும் அதன் இறுதியில் மற்றொரு பனைமரத்தின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன (கல்வெட்டு எண் 237/1906).

இப்பகுதியில் நியாயமான நில அளவு பற்றி ஐயம் ஏற்பட்டபோது மக்கள் இங்கு வந்து இந்த நில அளவினைக் கொண்டு நியாயமான அளவை உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் வல்லாள மகாராசன் கோபுரத்திற்கு வலப்புறத்தில் உள்ள நந்தவனச் சுவரில் "தேவ அங்குல அளவு கோல்" பொறிக்கப்பட்டுள்ளது. கோயில் கோபுரங்கள், விமானங்கள், சிலைகள் முதலியவற்றை அளப்பதற்கு இந்த அளவுகோல் பயன்படுத்தப்பட்டது.

## இராமர் கோயில்கள்

இராமர் என்னும் சொல்லுக்குத் தம் அழகு, குணம் முதலியவற்றால் பிறரை மகிழ்விப்பவர் என்பது பொருளாகும். இத்தகைய இராமர் அழகிய இராமர் என்னும் பெயரில் காவேரிப்பாக்கத்தில் எழுந்தருளியுள்ளார்.

குடியாத்தம் ஏறுகுத்தி, குடியாத்தம் வேங்கடாபுரம், செய்யாறு பல்லி, திருவண்ணாமலை காட்டம்பூர் ஆகிய தலங்களில் இராமசாமி கோயில்கள் உள்ளன. திருமலைச்சமுத்திரம் ஆரணிமட்டத்தரை, அரக்கோணம் வட்டம்சேரி ஆகிய தலங்களில் கோதண்டராமராகக் கோலங்கொண்டுள்ளார். இரகுநாதசமுத்திரம் ஆரணியை அடுத்துள்ள படைவீட்டிலும் இராமரும் சீதையும் அமர்ந்திருக்க இலக்குவர் தம் இரு கைகளையும் கூப்பி வணங்கும் நிலையில் உள்ளார். அவர்களுக்கு எதிரில் ஆஞ்சநேயர் அடக்கத்துடன் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறார்.



அண்ணல் இராமருடன்
சீதா பிராட்டியாரும் இலக்குவரும்

142.2.4

இம்மாவட்டத்தில் மிக உன்னத நிலையிலிருக்கும் இராமர் கோயில், சென்னையிலிருந்து போளூர் செல்லும் பேருந்து வழியிலுள்ள நெடுங்குணத்திலுள்ளது. ஏழு ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள இக்கோயிலின் கோபுரம் விண்ணளாவி நிற்கின்றது. இக்கோயிலின் அருகிலுள்ள மலை, நெடுங்குன்றம் என்னும் பெயரில் சுகர் முனிவர் தவம் இயற்றிய புனித இடம் என்னும் பண்டைப் பெருமையைக்கொண்டு விளங்குகிறது.

இக்கோயிலில், காணும் பொங்கல் விழா அண்மைக்காலம் வரையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அந்நாளில் இராமச்சந்திரப்பெருமான் நெடுங்குன்ற மலையை வலமாக வந்து அரசம்பட்டு, 'பழம்பேட்டை முதலிய ஊர்களுக்கு உலாச்சென்று திரும்பி வருவார். இவ்விழா இப்பகுதி மக்களிடையே தெய்வ வழிபாட்டை வலியுறுத்தி வந்தது. இவ்விழா தற்போது நடைபெறுவதில்லை என்பது தெரியவருகிறது.

இராமர் கோயில்களில் ஆஞ்சநேயர் சிறப்பிடம் பெற்றுள்ளார். குறிப்பாகத் தெரிந்து கொள்ளத்தக்கது ஆஞ்சநேயர் திருவுருவங்கள் பல இப்பகுதியில் பரவலாகக் காணப்படுகின்றன என்பதாகும். இங்கு இரேணுகைக்கும் ஆஞ்சநேயருக்குமிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக இரேணுகை இவரோடு மாயப்போர் நிகழ்த்தினாள். ஆனால் ஆஞ்சநேயரோ இப்போருக்கு அடங்காது பல உருவங்களைப் பெருக்கினார். பல இடங்களில் தம் திருவுருவங்களைத் தோற்றுவித்தார். இரேணுகைக்கும் ஆஞ்சநேயருக்கும் இடையே இவ்வேற்றுமை உணர்ச்சி வளரக்கூடாது என்பதற்காக இராமர் இரேணுகையின் ஆற்றலை எடுத்துக் கூறினார். ஆஞ்சநேயர் அதன் பின் மனநிறைவு கொண்டார். இராமர் வழிபாடு இப்பகுதிகளில் நிலைபெற்று வருவதற்கு இங்குள்ள இராமர் கோயில்கள் ஓரளவு உதவுகின்றன.

## அகரம்

# ஆனை காத்த அப்பன் கோயில்

### (கசேந்திர வரதராசப்பெருமாள்)

இக்கோயில் வேலூர் - ஒடுக்கத்தூர் சாலையில் வேலூரிலிருந்து 27 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள வேலூர் வட்டம் அகரம் என்னும் ஊரின் கிழக்கில், கிழக்கு நோக்கியவாறு 5 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

எழுத்துகளில் அகரம் முதன்மை பெற்றிருப்பதைப்போலத் தலைமைச் சிறப்புடைய ஊர்களும் அகரம் எனக் குறிக்கப்படுகின்றன போலும். மடுவில் முதலை வாய்ப்பட்ட யானை, ஆதிமூலமே என்று ஓலமிட்டபோது வரதர் அதற்கு அருள்புரிந்தார். அதனை நினைவுகூரும் வகையில் ஆனைகாத்த அப்பன் என்னும் பெயரில் இங்குத் திருமால் கோயில் கொண்டுள்ளார்.

கிழக்கிலுள்ள வாயிலின் வழியாக உள்ளே செல்வோமெனில், பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றைக் கடந்து கருடாழ்வார் சந்நிதியை அடையலாம். பின்னர்ப் பிரகாரத்தில் வலம் வரும்போது, தென்பகுதியில் வாரணவல்லித்தாயார் சந்நிதியைக் காணலாம். பின்னர் மகாமண்டபத்திலுள்ள துவாரபாலகர்களை வணங்கிக் கருவறையை அடையலாம். கருவறையில் நெடிய வடிவில் சுதையினாலான வரதர், சீதேவி பூதேவியுடன் சேவை சாதிக்கின்றார். இங்குக் கருவறையின் முன் கசேந்திரனின் (யானை) வடிவம் இருந்ததாகவும் பின்னர் அது சிதைந்துவிட்டதென்றும் கூறுகின்றனர்.

திருமஞ்சனம் செய்யப்பெறுவதற்கென மூலவருக்கு முன்புறம், கல்லாலான வரதர் திருவுருவம் ஒன்று உள்ளது. முன்புறம், பீடத்தில் வரதர், சீதேவி, பூதேவி, சக்கரத்தாழ்வார், கண்ணன் ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன.

கருவறை முன் மகாமண்டபம், உள்மண்டபம் ஆகியவை உள்ளன. கருவறை மீதில் மூன்று நிலைவிமானம் இருக்கின்றது. முன்புறத்தில் கோபுரம் இடி விழுந்ததால் பழுதடைந்துள்ளது.

இக்கோயிலில் பாஞ்சராத்திர முறைப்படி, வடகலைப் பட்டாச்சாரியரால் ஒரு காலப்பூசை செய்யப்பட்டு வருகிறது. பெருந்திருவிழாவில் 5-ஆம் நாள் கருடசேவை சிறப்புற நடைபெறுகிறது.

கல்வெட்டுகளில் இப்பெருமான் ஆனைகாத்த அப்பன் எனக் குறிக்கப்பெறுகிறார். இப்போது கரிவரதர் என்ற பெயரில் போற்றப்பெறுகிறார்.

விசயநகரப் பேரரசரின் கல்வெட்டுகள் மூன்று இங்குக் காணப்படுகின்றன. ஒன்று பிருததேவராயர் என்கிற கஜவேட்டை கண்டருளின மல்லிகார்ச்சுன மகாதேவராயர் அளித்த நிபந்தங்களைக் குறிப்பிடுகிறது. மற்றொன்றில் கி. பி. 1428-ஆம் ஆண்டில் கட்டாரி இராணுவத் தளபதியான மகாராயர் நரசிங்க பூமான் சென்னம்ம நாயக்கன் வன்னிய திம்மு நாயக்கன் என்பவர் இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், சேனை முதலியார் சந்நிதி, திருமதில் மடவளாகம் ஆகியவற்றிற்குத் திருப்பணி செய்த விவரம் குறிப்பிடப்படுகிறது.

புரட்டாசி மாதத்தில் உரியடி விழாவும் கருடசேவையும் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன. கோயிலுக்கு 8.42 ஏக்கர் நன்செய்நிலமும் 27.71 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 9,000/- உருபாயாகும்.

## அகரம்

# காசிவிசுவநாதர் கோயில்

இக்கோயில் வேலூருக்கு மேற்கில் 27 கிலோமீட்டர்த் தொலைவில் 10 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. அக்கிரகாரம் என்னும் பெயர் சுருங்கி அகரம் ஆனதென்பர். (இஃது ஆய்வுக்குரிய ஒன்று)

காசியிலிருந்து கொண்டுவரப்பெற்ற சிவலிங்கம், காசி விசுவநாதர் என்னும் பெயரில் நிறுவப்பெற்றதால், இக்கோயிலுக்குக் காசி விசுவநாதர் கோயில் என்னும் பெயர் வழங்கிவருகிறது.

கிழக்கு வாயிலையடுத்து உட்புறம் பலிபீடமும் நந்திதேவர் திருவுருவமும் உள்ளன. தெற்குப்பிரகாரத்தின் மேற்குக் கோடியில் விநாயகர் சந்நிதியும் மேற்குப் பிரகாரத்தின் மையத்தில் வள்ளி தெய்வயானையுடன் கூடிய சண்முகர் சந்நிதியும் கிழக்கு நோக்கியவாறுள்ளன.

நவக்கிரகங்களின் சந்நிதி வடக்குப் பிரகாரத்தின் கிழக்குக் கோடியில் தெற்கு நோக்கியவாறு இருக்கின்றது. தெற்கு வாயிலின் வழியாகக் கோயிலினுள் செல்வோமெனில், கருவறை வாயிலில் இருபுறங்களிலும் துவாரபாலகர்களின் திருவுருவங்களைக் காணலாம். கருவறையில் காசி விசுவநாதர், கிழக்கு

நோக்கியவாறு சிவலிங்க வடிவில் காட்சிதருகிறார். கருவறை வடபுறத்திலுள்ள துவாரபாலகருக்குச் சற்றுக் கிழக்கில் வயிரவர் திருவுருவம் தெற்கு நோக்கி அமைந்துள்ளது.

கருவறைச் சுவர்மாடங்களில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகியோர் திருவுருவங்களும் மேற்கில் திருமால் திருவுருவமும் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. கருவறைக்கு வடக்கில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது.

வயிரவர் திருவுருவத்தையடுத்து அன்னபூரணி அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. அடுத்துச் சூரியன் திருவுருவம் மேற்கு நோக்கியவாறு இருக்கின்றது. சூரியன் திருவுருவத்திற்குக் கிழக்கில் ஒரே வரிசையில் தெற்கு நோக்கியவாறு நாகம், விநாயகர், சிவலிங்கம், அம்பிகை ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

விசுவநாதர், சந்திரசேகரர், அம்பிகை, மாரியம்மன் ஆகியோரின் உற்சவத் திருமேனிகள் உள்ளன.

தீர்த்தக்கிணறு தெற்குப் பிரகாரத்தின் கிழக்குக் கோடியில் உள்ளது.

காசி விசுவநாதர் கருவறை மீது ஒருநிலை வட்ட வடிவ விமானமும் அம்பிகை சந்நிதி மீது ஒருநிலை சாலஹார விமானமும் உள்ளன.

கோயிலுக்கு முன்புறம் முன்மண்டபமும் அதனை அடுத்து மகாமண்டபமும் உள்ளன. கோயில் வாயிலின் வலப்புறத்தில் நான்குபேர் வணங்குவது போன்ற புடைப்புச் சிற்பமும் இச்சிற்பத்தைப் போன்று மற்றொரு புடைப்புச் சிற்பம் வாயிலின் இடப்புறத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் இருகாலப்பூசைகளைக் குருக்கள் ஒருவர் செய்துவருகிறார்.

இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலையத் துறையினர் கட்டுப்பாட்டில் உள்ளது. இக்கோயிலுக்கு 8.42 ஏக்கர் நன்செய் நிலமும் 27.71 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 2263/- உருபாயாகும்.

இக்கோயிலில் பெருச்சாளி வாகனம், இடப வாகனம், குதிரை வாகனம் ஆகியவை உள்ளன.

## அ. கோ. படவேடு

# இராமச்சந்திரசுவாமி கோயில்

போளூர் வட்டம் பட்வேடு கிராமத்திலுள்ள இரேணுகை அம்மன் கோயிலிலிருந்து இரண்டு கிலோமீட்டர்த் தொலைவில் இராமச்சந்திரசுவாமி கோயில் கிழக்கு நோக்கியவாறுள்ளது.

இக்கோயிலுக்கும் இரேணுகை அம்மன் கோயிலுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இதற்குப் புரரண வரலாறு உள்ளது. 'இராமர் மயில்ராவணனுடன் போரிட்டபோது, அனுமார் இரேணுகை அம்மனோடு போரிடத் தொடங்கினார். இரேணுகை மாயப் போர் நிகழ்த்தினாள். அனுமாரும் இம்மாயப்போருக்கு அஞ்சாமல் காணுமிடமெல்லாம் தம் உருவத்தைக் காட்டினார். இதுவே இப்பகுதியில் பல இடங்களில் அனுமாருடைய திருவுருவங்கள் காணப்படுவதற்கு உரிய காரணமாகும். பின்னர் இராமர் இரேணுகையின் ஆற்றலைப் பற்றி அனுமாருக்கு எடுத்துரைத்தார். இவ்வரலாற்றின் அடிப்படையில் இரேணுகை அம்மன் கோயிலுடன் இராமச்சந்திரசுவாமி கோயில் இணைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலுக்குக் கிழக்கில் கோயில் வெளிப்புறத்தில் மேற்குநோக்கியவாறு ஆஞ்சநேயர் சந்நிதியும் இச்சந்நிதியை ஒட்டினாற்போல் இதன் தென்புறத்தில் விநாயகர் சந்நிதியும் உள்ளன. கிழக்கு நோக்கிய வாயில் வழியாக உள்ளே செல்வோமெனில், பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றையும் கருடாழ்வார் சந்நிதியையும் காணலாம். தெற்குப் பிரகாரத்தில் வேணுகோபாலர் சந்நிதி வடக்கு நோக்கியுள்ளது. அடுத்துத் தென்மேற்கில் தாயார் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. கருவறையில் ஆஞ்சநேயர் திருவுருவம் மேற்கு நோக்கியவாறு எதிரிலுள்ள இராமச்சந்திர சுவாமியை வழிபடும் நிலையில் அமைந்துள்ளது. கருவறையின் மேற்குப்பகுதியில் இராமச்சந்திரமூர்த்தி ஆஞ்சநேயருக்கு அருள்பாலிக்கும் முறையில் கிழக்கு நோக்கியவாறுள்ளார்.

வடகிழக்குப் பகுதியில் ஒரு மண்டபம் உள்ளது. இக்கோயிலின் நிருவாகம் இரேணுகை அம்மன் கோயில் நிருவாகத்துடன் இணைந்துள்ளது.

இராமச்சந்திரசுவாமி கோயிலுக்கு ஒரு கிலோமீட்டர்த் தொலைவில், நந்திவர்மன் காலத்துக் கோட்டத்தலையாரி என்னும் 3 மீட்டர் உயரமுள்ள சிலையும் கோட்ட வரதராசசுவாமி சிலையும் 3 மீட்டர் உயரமுள்ள வீரஆஞ்சநேயர் சிலையும் காணப்படுகின்றன. இக்கோயிலுக்கு மேற்புறம் 1/2 கிலோமீட்டர்த்

தொலைவில் பஞ்சமுக ஆஞ்சநேயர் சிலை காணப்படுகிறது.

இக்கோயில் கருவறையின் வடக்குச் சுவரிலுள்ள் விசயராய மகாராயன் மகன் விசயநகர வீரப்பிரதாப தேவராய மகாராயன் சகம் 1348-ஆம் நாள் கல்வெட்டு மூலம் பிரபவ மகர சதுர்த்தசி வெள்ளிக் கிழமை விசயகண்ட கோபாலன் மகன் கரியமாணிக்கத்தை இராமச்சந்திரதேவர் கோயில் திருவிளக்குக்குடி பங்கலநாட்டு இடையத்துறையைச் சஞ்சிப்பற்று ஆக அவன் உடன்பிறந்தார் திருவேங்கட உடையார் நியமித்ததைக் குறிக்கிறது[1].

இதே சுவரிலுள்ள வீரப்பிரதாபதேவராய மகாராயர் சகம் 1351 சௌமிய விருச்சிகம் 12-ஆம் நாள் கல்வெட்டு இதைப்போன்றே தக்கிளி பெம்மானை (வடுக) ஆடு மேய்ப்போராயும் சப்தநாத உடையார் நியமித்ததைக் குறிக்கிறது[2].

இதே சுவரிலுள்ள தம்மைய தேவமகாராயரின் நளவருடம் தை மாதக் கல்வெட்டு, ஆடுமேய்ப்பவன் வேலூர் மாணிக்கக் கோனை ஈசுவர நாயக்கர் முகவர் தாடநாய்க்கர் நியமித்ததைக் குறிக்கிறது[3].

இதே சுவரிலுள்ள வீர விசயராய மகாராயன் மகன் வீரப்பிரதாப தேவராய மகாராயர் சகம் 134(7) விசுவாவசு கார்த்திகை 3-ஆம் நாள் கல்வெட்டு, பாக்கப்பேறு அழகியபிள்ளையை இராமச்சந்திரப்பெருமாள் கோயிலுக்குத் திருவிளக்குக் குடியாக அதிகாரி சின்னமகாராஜன் நியமனம் செய்ததைக் குறிக்கிறது[4].

வடக்குச்சுவரிலுள்ள வீரப்பிரதாப கிருஷ்ணதேவ மகாராயன் சகம் 1435 ஸ்ரீமுக மேஷ 10-ஆம் நாள் கல்வெட்டு, இராமப்பெருமாள் கோயிலில் வேதம் ஓதுவதற்கு 15 கலம் நெல் கோயிலுக்குக் கொடுப்பதற்கும் வேதம் ஓதுவதற்கு ஒவ்வோர் ஆண்டும் 15 பணம் செலுத்துவதற்கும் உரிய நிபந்தனையின் பேரில் இக்கோயிலுக்குரிய சில நன்செய் நிலங்களும் புன்செய் நிலங்களும் வீட்டு மனைகளும் குடிவாரம் கட்டியப்ப நாயக்கர் புதல்வன் கன்னடிய நாய்க்கப்பாடிக்கு அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது[5].

மகாமண்டபத்தின் கிழக்குப்புறச் சுவரிலுள்ள கல்வெட்டு சார்வரி கிருத்திகை மாதம் 6-ஆம் நாள் கல்வெட்டு, கீழூரில் கோயில்களில் ஒரு விளக்கு வைக்க ஐயனார் நாயக்கர் சில மான்யங்கள் அளித்ததைக் குறிக்கிறது[6].

---

(1. 71/1940-41; 2. 72/1940-41; 3. 73/1940-41; 4. 74/1940-41; 5. 75/1940-41; 6. 76/1940-41)

## அ.கோ. படவேடு

# இரேணுகாம்பாள் கோயில்


ஆரணி நகரத்திற்கு 20 கிலோமீட்டர் மேற்கிலும் வேலூரிலிருந்து 40 கிலோமீட்டர்த் தெற்கிலும் போளூரிலிருந்து 22 கிலோமீட்டர் வடக்கிலும் உள்ள படவேடு ஊரில் 291/2 எண் நில அளவைப்புலத்தில் 2.54 ஏக்கர்ப் பரப்பில் இக்கோயில் அமைந்துள்ளது.

முன்னொரு காலத்தில் விதர்ப்ப நாட்டை ஆண்டுவந்த இரைவத மாமன்னர், பிரமதேவர் வாழ்த்தோடு உமாதேவியைத் தம் பெண்குழந்தையாகப் பெற்றெடுத்து அக்குழந்தைக்கு இரேணுகை என்னும் பெயரிட்டு வளர்த்தார்.

இரேணுகை மங்கைப்பருவம் எய்தியும் தன் கணவனைத் தானே தேடிக் கண்டு கொள்ளவிரும்பி, படையோடு தன் தோழி சாமுண்டி பின்தொடரப் புறப்பட்டாள். சந்தவாசல் என்னும் ஊர் வழியாகச் சமதக்கினி முனிவர் ஆசிரமம் அமைத்துத் தவம் செய்து கொண்டிருந்த குண்டலிபுரத்தை எய்தினாள். சேனையொடு தங்கிய இடம் சேனதளம் எனவும் படை தங்கியதால் அது படைவீடு எனவும் பெயர் பெற்றது (பிற்காலத்தில் படைவீடு என்னும் பெயர் படவேடு எனத் திரிபு எய்திற்று).

இரேணுகை சமதக்கினி முனிவரை அணுகி அவரைத் தான் மணந்துகொள்ள விரும்புவதாகக் கூறினாள். முனிவரும் உடன்பட்டு அவளை மணந்து இல்லறம் மேற்கொண்டு மக்கட்பேறு வாய்க்கப் பெற்றார். இந்நாளில் அவள் ஆற்றுக்குச் சென்று தன் தவ ஆற்றலால் மணலால் குடத்தை வனைந்து நீர்முகந்து வருவது வழக்கம். ஒருநாள் நீர் முகந்துகொண்டிருந்தபோது வான்வழியே சென்று கொண்டிருந்த கந்தர்வ வீரனின் நிழலைக் கண்டாள். அவன் அழகை மிகவும் வியந்தாள். அக்கணமே அவள் தன் ஆற்றலை இழந்தாள். அதன்காரணமாக அவளால் மணலால் குடத்தை வனைய முடியவில்லை. இதனை ஞானத்தால் அறிந்த சமதக்கினி முனிவர் சீற்றம் கொண்டு அவளைக் கொன்றுவிடுமாறு தம் மகன் பரசுராமரிடம் கூறினார். தம் தந்தை சொல்லுக்கேற்பப் பரசுராமர் தம் கோடரியால் இரேணுகையைக் கொன்றார். பின்னர்ப் பரசுராமர் விருப்பத்திற்கேற்ப ஜமதக்கினி முனிவர் தமது கமண்டல நீரைத் தெளித்து இரேணுகையை உயிர்ப்பித்தார்.

பின்னர்க் காத்தவீரியன் தாக்கியதால் சமதக்கினி உயிர் துறந்தார். முனிவரது உடலை இரேணுகை தீயிலிட்டு அதில் அவளும் வீழ்ந்தாள். அப்போது அவளது



அ. கோ. படவேடு, இரேணுகாம்பாள் கோயில் கோபுரத் தோற்றம்

கற்பின் சிறப்பைப் - பாராட்டும் வகையில் தேவர்கள் மழைபொழிந்தார்கள். இதன்விளைவாகத் தீயணைந்தது. மும்மூர்த்திகளும் அவளுக்குக் காட்சியளித்து "நீ சிலகாலம் சிலை வடிவில் இங்கிருந்து நல்லோர்க்கு அருள்புரிக; தீயோரைக் கண்டித்து அவர்களைத் திருத்துவாயாக; அவர்களும் உன்னை வழிபட்டு அருள் பெறுவார்களாக" என வாழ்த்தினார்கள். இவ்வாழ்த்துக்கேற்ப இரேணுகை இங்குக் கோயில் கொண்டுள்ளாள்.

முதலில், தெற்குப் பிரகாரத்தின் வழியே செல்லும்போது, தென்மேற்கில் வரசித்தி விநாயகர் கோயில் கிழக்கு நோக்கியும் மேற்கில் வடமேற்குப் பகுதியில் வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணியர் கிழக்கு நோக்கியும் இருப்பதைக் காண்கிறோம். அருகில் ஐயப்பன் சந்நிதி உள்ளது. அம்மன் மூலவர் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. கருவறை முகப்பில் துவார பாலகர்கள் திருவுருவங்கள் உள்ளன. மேற்பகுதியில் இலக்குமியின் உருவச்சிலையும் இரண்டு வானரங்களின் உருவங்களும் உள்ளன. அம்பாள் சுயம்பு வடிவில் உள்ளார். அம்பாள் அருகில் பிரமதேவர், திருமால், பரசுராமர் ஆகியோர் திருவுருவங்களும் அம்மன் தலைப்பகுதியின் உருவமும் உள்ளன. 14 1/2 மீட்டர் அகலத்திலும் 21 மீட்டர் நீளத்திலும் திருக்குளம் ஒன்று உள்ளது. இதற்குப் பரசுராமர் தீர்த்தம் என்னும் பெயர் அமைந்துள்ளது. அன்பர்கள் வெல்லம், மிளகு, குங்குமம் ஆகியவற்றைக் குளத்திலிட்டு இறைவனை வணங்குவது வழக்கம். குளத்தின் நீர் தற்போது தூய்மையாக இல்லை. தற்போது இதனைச் செப்பனிடத் திட்டமிட்டுள்ளனர்.

இக்கோயிலுக்கு இரண்டு கோபுரங்களும் மூன்று விமானங்களும் உள்ளன. இராசகோபுரம் கிழக்குப் பகுதியில் கோயிலின் தலைவாயிலில் அமைந்திருக்கிறது. இது மூன்று அடுக்குகளையும் ஐந்து கலசங்களையும் கொண்டுள்ளது. மேற்குக் கோபுரம் பின்கோபுரமாக உள்ளது. இதற்கு ஒரே அடுக்கும் ஐந்து கலசங்களும் உள்ளன.

அம்மன் சந்நிதி, வரசித்தி விநாயகர் சந்நிதி, சுப்பிரமணியர் சந்நிதி ஆகிய வற்றின் மீது விமானங்கள் உள்ளன.

இக்கோயிலுக்கு இரண்டு பிரகாரங்கள் உள்ளன. உட்பிரகாரம் ஒருபுறம் 69.30 மீட்டர் அளவும் மறுபுறம் 63.15 மீட்டர் அளவும் கொண்டுள்ளது. இப்பிரகாரத்தில் மக்கள் அம்மனுக்காக அங்கப் பிரதட்சணம், அடிதண்டம் முதலான பிரார்த்தனைகளைச் செலுத்துகின்றனர்.

இக்கோயிலில் உள்மண்டபம், வெளிமண்டபம், கல்யாணமண்டபம், அலங்கார மண்டபம், யாகசாலை, மகாமண்டபம் ஆகியவை உள்ளன. கல்யாணமண்டபம் தற்போது தனியாகக் கட்டப்பட்டு முழுவதும் முடிக்கப்படும் நிலையில் உள்ளது. மகாமண்டபம் மூலவர் சந்நிதிக்குக் கிழக்கு நோக்கியும் உற்சவர் சந்நிதிக்குத் தெற்கு நோக்கியும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கோயில் மகாமண்டபத்திலுள்ள தூண்களில் நரசிம்மர், காளியம்மன்,

இரேணுகைதேவி, இலட்சுமி நரசிம்மர், சுப்பிரமணியர், விநாயகர், ஐயப்பன், சரசுவதி, ஆஞ்சநேயர், வயிரவர், நவநீதகிருஷ்ணன் ஆகியோர் திருவுருவங்களும் ஆடல்மகளிர் உருவங்களும் அன்னம், சக்கரம், காமதேனு ஆகியவற்றின் உருவங்களும் சிற்பங்களாகக் காணப்படுகின்றன.

அம்மன் துவாரபாலகர்கள், கோபுரம் தாங்கிகள், பரசுராமர், இரேணுகை, இலட்சுமி, சமதக்கினி முனிவர், மீனாட்சி, சுப்பிரமணியர், பிரமதேவர் ஆகியோர் சுதைச்சிற்பங்கள் முன்கோபுரத்திலும் இரேணுகை பரசுராமருக்கு உபதேசம் செய்யும் காட்சி, இலட்சுமி, அம்மன் கழுத்து வடிவம், சரசுவதி, அம்பாள் ஆகியோர் உருவச் சிலைகள் பின்கோபுரத்திலும் கருமாரியம்மன், அம்மன், துவாரபாலகர், கோபுரம் தாங்கிகள், பிள்ளையார், சுப்பிரமணியர், சமதக்கினி முனிவர், மீனாட்சி ஆகியோர் சுதைச் சிற்பங்கள் விமானத்திலும் காணப்படுகின்றன.

இக்கோயில் தெற்குச் சுவரிலுள்ள விசயநகரமன்னர் மகாமண்டலேசுவர நரசிங்கராய உடையார் சகம் 1394 துன்முகி வைகாசி 20-ஆம் நாள் கல்வெட்டு, எக்களாதேவி அம்மன் கோயிலில் சாதாரண நாள்களிலும் திருவிழாக்களிலும் வரப்பெறும் கட்டணங்களை மானியமாகக் கருதப்பட வேண்டும் என்றும் அரசின் படைவீட்டுத் தலைவரின் ஆணையைக் குறிக்கிறது.[1]

மகாமண்டபத்தில் உட்பகுதி கிழக்குச்சுவரிலுள்ள விசயநகர ஸ்ரீரங்கதேவமகராயர் சகம் 1484 அட்சய ஆண்டு ஆடிமாதக் கல்வெட்டு மருதராசு படைவீட்டுப் பிரசன்ன எக்களா தேவி அம்மையின் புனித நீராட்டுக்கும் திருவாதிரை மகாநவமி பங்குனி உத்திரம் ஆகிய நாள்களில் நாள்தோறும் நான்கு செம்மறி ஆடுகள் கொண்டு வருவதற்கும் விளக்குகள் வைக்கத் தேவைப்படும் நெய் வழங்குவதற்கும் வேலூர் சின்ன பொம்முநாயக்கன் முகவர்கள் என்ற முறை கிடைத்துறை தம்பிக்கோனும் காவநாயக்கக் கோனும் அவர்கள் செலுத்தவேண்டிய சில வரிகளுக்குப் பதிலாக அவர்களைத் திருவிளக்குக் குடிகளாக நியமித்த ஆணையைப் பதிவு செய்கிறது[2].

இதே இடத்தில் மேற்கு நுழைவாயிலுக்கு அருகில் வீரப்பிரதாப மல்லிகார்ச்சுன தேவராயர் சகம் 1367 ஈசுவர தை 5, ஞாயிறு திருவோணம் கல்வெட்டு, இருவரை விளக்குக் குடியாகச் சோமநாததேவ நயினார் நியமித்ததைக் குறிக்கிறது[3].

இதே இடத்தில் சென்ற தாதுவுக்குமேல் செல்லா நின்ற ஈசுவர சித்திரை 8-ஆம் நாள் கல்வெட்டு, சோமநாததேவர் கோயிலின் விளக்குக் குடியாகப் பிரான் கோனை (ஈசுவர நாயக்கர்) நியமித்ததைக் குறிப்பிடுகிறது[4].

இதே இடத்திலுள்ள பகுதான்ய வருடம் வைகாசி 23-ஆம் நாள் கல்வெட்டு திருவிளக்குக் குடியாக இளையபெருமாளையும் அக்குடும்பத்தின் மற்றொருவரையும் நயினார் பிறப்பித்த ஆணையைக் குறிக்கிறது[5].

இதே இடத்திலுள்ள மகாமண்டலேசுவர குமார திம்மராச உடையார் சித்திரபானு, புரட்டாசி மாதக் கல்வெட்டு சோமநாதத் தோட்டத்திலிருந்து மலர்மாலைகளைக் கோயிலுக்கு அளித்து வருவதற்காக மன்னரின் முகவர் அய்யநயினாருக்குஆணையிட்டதைக் குறிப்பிடுகிறது.

இங்குள்ள பாறையிலுள்ள விசயநகர அரியண்ண உடையார் குமாரர் வீரவிருபண்ண உடையார் அட்சய ஆண்டுக் கல்வெட்டு, விருபாட்சி கோயில் தேவதானமாக, அணைக்கட்டிலிருந்து நீர்ப்பாசன வாய்க்காலுக்காக மன்னன் நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது.

(கன்னடத்திலும் கிரந்தத்திலும்) சோமநாதர் கோயில் கருவறைத் தெற்குச் சுவரிலுள்ள சகம்(1) 327 கலி 4506 பார்த்திப ஆடி 5-ஆம் நாள் திங்கட்கிழமை உரோகிணி நட்சத்திரக் கல்வெட்டு, படைவீட்டிலுள்ள சோமநாததேவர் கோயிலில் வழிபாட்டின்போது சங்கு ஊதுவதற்காக இருவருக்கு ஊதியமாக ஆண்டிநாட்டில் 1000 குழி நிலம் அறக்கட்டளை ஏற்பாடு செய்ததைக் குறிக்கிறது.

இக்கோயிலில் மூன்று காலப்பூசை நடைபெறுகின்றது. முதல்காலம் காலை 9 மணிக்கும் இரண்டாவது காலம் (உச்சிக்காலம்) காலை 11 மணிக்கும் மூன்றாவது காலம் மாலை 6 மணிக்கும் நடைபெறுகின்றன. இப்பூசை குருக்களால் செய்யப்படுகிறது.

இக்கோயிலில் ஒவ்வோர் ஆண்டும் ஆடி வெள்ளிப் பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். விடியற்காலையில் அம்மனுக்கு அபிடேகம் நடைபெறும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் வெவ்வேறு அலங்காரங்களுடன் தனித்தனியான வாகனங்களில் அம்பாள் உலாவரும் அரிய காட்சியினைக் காணலாம்.

இக்கோயிலுக்குத் தென்மேற்கில் 1 கிலோமீட்டர்த் தொலைவில் கமண்டல நதிக்கரையில் சமதக்கினி முனிவர் தவம் செய்த இடம் உள்ளது. முனிவர் கமண்டலத்திலிருந்து தோன்றிய நதியானதால் இது கமண்டலநதி என்னும் பெயரில் விளங்குகிறது. இந்த இடத்தில் இன்றும் தெய்வீகமான ஆறு பெருகிக்கொண்டுவரும். திருநீற்றை, அம்மன் கோயிலிலிருந்து ஆண்டுதோறும் ஆனித்திருமஞ்சனத்தன்று அபிடேக ஆராதனையுடன் எடுத்துவந்து அன்பர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது. இத்திருநீறு அன்பர்கள் உடல்நோய், மனநோய் ஆகியவற்றைத் தீர்த்து வைப்பதைப் பொதுமக்கள் உணர்கிறார்கள் என்பர்.

இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலையத்துறை நிருவாக அலுவலர், தக்கார் ஆகியோர் பொறுப்பில் உள்ளது. இக்கோயிலுக்கு 8.20 ஏக்கர் நன்செய் நிலமும் 5.96 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. ஆண்டுவருமானம் 3 இலட்சம் உருபாயாகும்.

இக்கோயிலில் மரத்தினால் செய்யப்பட்ட அன்னவாகனம், காமதேனு

வாகனம், சிம்மவாகனம், குதிரை வாகனம், மயில் வாகனம், நாக வாகனம் கருடவாகனம் ஆகியவை உள்ளன.

(1. 44/1940_41; 2. 45/1940_41; 3. 46/1940_41; 4. 47/1940_41; 5. 48/1940_41; 6. 49/1940_41;)

## அசனமாப்பேட்டை

# இராமநாதீசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரத்திலிருந்து செய்யாறு, வேலூர் ஆகிய நகரங்களுக்குச் செல்லும் வழியில் 24 கிலோமீட்டர்த் தொலைவில் பெருங்கட்டூர் என்னும் ஊரின் அருகில் 42 செண்ட் பரப்பில் தெற்கு நோக்கிய வாயிலுடன் இருக்கின்றது.

கோயில் அமைந்துள்ள அசனமாப்பேட்டைக் கிராமம் அசனமாபாய் என்னும் முசுலீம் பெண்ணுக்குச் சொந்தமானது எனவும் அப்பெண்ணின் 'பெயரால்' இவ்வூரின் பெயர் அமைந்தது எனவும் மரபு வழிச் செய்தி கூறுகிறது.

இக்கோயில் இராமேசுவரம் இராமநாதீசுவரர் கோயில் நினைவாக அமைக்கப்பட்டது. இக்கோயிலின் தலவிருட்சம் வில்வ மரமாகும்.

இக்கோயிலின் நுழைவாயில் அருகில் நந்திதேவர் திருவுருவமும் பலிபீடமும் உள்ளன. அடுத்து இடப்பக்கத்தில் இரண்டு மீட்டர் நீள அகலம் கொண்ட பரப்பில் கிழக்கு நோக்கியவாறு விநாயகர் சந்நிதியும் இதே திசையில் வள்ளி தெய்வயானையொடு முருகர் சந்நிதியும் உள்ளன. இராமநாதீசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சி அளிக்கிறார். இச்சந்நிதிக்கு அருகில் தெற்கு நோக்கியவாறு பர்வதவர்த்தினி அம்மன் சந்நிதி இருக்கின்றது. நடராசர் சந்நிதி 20 கால் மண்டபத்தில் தெற்கு நோக்கி உள்ளது.

இக்கோயிலில் தீர்த்தக்கிணறு உள்ளது. இக்கோயிலின் கோபுரம் 30 மீட்டர் உயரமுள்ளது. இஃது ஐந்து நிலைகளைக் கொண்டுள்ளது. இக்கோயிலில் வெளிப்பிரகாரமும் உட்பிரகாரமும் உள்ளன. கோபுரவாயிலையடுத்து 18 தூண்களைக் கொண்ட மண்டபம் 26_10_75_ஆம் நாளில் திருப்பணிக்குழுவின் மூலம் கட்டப்பட்டது.

சுவாமி சந்நிதியில் 20 கால் மண்டபம் உள்ளது. உட்பிரகாரத்தில் திருமண மண்டபம் இருக்கிறது. நான்கு கால் மண்டபம் ஒன்றும் உள்ளது.

இக்கோயிலில் இரண்டு காலப்பூசை நடைபெறுகிறது. ஐப்பசி மாதம் கந்தர் சஷ்டி விழா சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது.

இக்கோயில் இவ்வூரைச் சேர்ந்த செங்குந்த மரபினால் நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது. தற்போது இவ்வினத்தைச் சேர்ந்தவர்கள் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் அறங்காவலர்களாக நியமனம் செய்யப்பெறுகிறார்கள்.

இக்கோயிலுக்கு 33.79 ஏக்கர் நன்செய் நிலமும் 5.85 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன.

இக்கோயிலின் ஆண்டு வருமானம் 2,800 உரூபாயாகும்.

## அத்தி

# அகத்தீசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி செல்லும் வழியில், மானாம்பதிக் கூட்டுச்சாலையிலிருந்து மேற்கே 8 கிலோமீட்டர்த் தொலைவில், செய்யாறு வட்டத்தில் இருக்கின்றது.

இக்கோயில் இடிந்த நிலையில் வழிபாட்டிற்குரியதாக இல்லாது இருப்பினும் இதில் பண்டைச் சிறப்பும் கலைச்சிறப்பும் ஒருங்கே அமைந்திருப்பதாலும் இவ்வகையில் இது பாதுகாக்கப்படுவதற்கு உரியதாக இருப்பதாலும் இதனைப் பற்றி அறிந்து கொள்ளவேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இக்கோயில் தற்போது கருவறை, உள்மண்டபம், முகமண்டபம் ஆகியவற்றுடன் காணப்படுகிறது. கருவறைச்சுவர்களில் தெற்குமாடத்தில் தட்சிணாமூர்த்தி திருவுருவம் காணப்படுகிறது. கருவறை வாயிலில் விநாயகர், திருமால் ஆகியோர் திருவுருவங்கள் காணப்படுகின்றன. கருவறையில் அகத்தீசுவரர் சிவலிங்க வடிவில் உள்ளார்.

கருவறையின் மீதிருந்த விமானம் விழுந்த நிலையில் இருக்கின்றது. முகமண்டபத்தை நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்கள் உத்திரம், போதிகை, கலசம் முதலிய நுட்பக்கலை அமைப்புகளுடன் இன்றும் விளங்கி வருகின்றன.

தட்சிணாமூர்த்தி உச்சியில் கிரீடம் தாங்கித் தமது இடக்காலைத் தம் தொடை மீது நேராக வைத்துக் கொண்டிருக்கும் நிலை காணப்படுகிறது. கருவறையின் வெளிச்சுவர்களில் கல்வெட்டுகள் காணப்பெறுகின்றன.

அகத்தீசுவரர் கோயிலின் கருவறைத் தெற்குச்சுவரின் புறத்தில் தொண்டை மண்டலத்தை வென்றவனும் காடவராயர் என்கிற கூடல் ஆளப்பிறந்தான் மகனுமாகிய காடவராயர் என்கிற பல்லவ வேந்தனின் புகழினைத் தமிழ்ப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. தாங்கள் பல்லவர் பரம்பரையினர் எனவும் தொண்டை நாட்டை வென்றவர்கள் எனவும் உரிமை கொண்டாடும் கூடல் எனப்படும் கடலூர்ப் படைத்தலைவர் இருவரைப் பற்றிய விவரங்களை இக்கல்வெட்டு தெரிவிப்பதால் இது முக்கியமான கல்வெட்டாகும்[1].

முதலில் குறிப்பிடப்பட்ட தொண்டை நாட்டை வென்ற காடவராயர் என்கிற பல்லவ வேந்தன், காகத்தியர் படையெடுப்பைத் தோல்வியுறச் செய்து தொண்டை மண்டலத்தைக் காப்பாற்றிச் சோழர் படைத்தலைவன் ஆனான் எனவும் அடுத்துக் குறிப்பிடப்பட்டவன் இரண்டாம் காடவர் எனவும் இவனே கூடல் அவனி ஆளப்பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன் எனவும் அரசுக் கல்வெட்டாசிரியர் கூறுகிறார். இவனே சேவூர்க் கடும்போருக்குப் பின்னர் இறுதியாகக் காகத்தியர்களைத் துரத்தியவன் எனவும் வெற்றிமாலை தாங்கி மூன்றாம் இராசராசனைச் சிறைப்படுத்தித் தனியுரிமை கொண்டாடினான் எனவும் அரசுக் கல்வெட்டாராய்ச்சியாளர் கருதுகிறார்.

இதே சுவரிலுள்ள சோழமன்னன் இரண்டாம் இராசாதிதேவர் பத்தாம் ஆண்டுக் கல்வெட்டு, மா்வட்டம் உய்யக்கொண்டார் வளநாட்டுப் பனங்குடி நிறநிந்தன் என்கிற சேதிராயன், ஜெயங்கொண்ட சோழமண்டலத்திலுள்ள உட்பிரிவாகிய வெண்குன்றக்கோட்டம் பெருநகர நாட்டுக் கோளாந்தக நல்லூர் என்கிற அத்தியில் எழுந்தருளியுள்ள திருவாகட்டீசுவரர் கோயிலுக்கு 32 பசுக்களையும் ஒரு காளையையும் நன்கொடையாக அளித்ததைக் கூறுகிறது[2].

இதே கோயிலின் வடக்குச்சுவரிலுள்ள விஜயநகர மன்னன் வீரப்பிரதாப கிருஷ்ணதேவ மகராயர் சகம் 1447 பார்த்திப மீனம் 3-ஆம் நாள் வியாழக்கிழமை சித்திரை நட்சத்திரம் 1.3.1256-ஆம் நாளுக்கு நேரொத்தவாறு படைவீட்டுச் சோழீசுவரமுடையார் ஜெயங்கொண்ட சோழமண்டலத்தின் உட்பிரிவாகிய பல குன்றக் கோட்டத்திலுள்ள மருதசர் ராசகம்பீரன் மலைக்கு அருகிலுள்ள அத்திப்பற்றின் அத்தியிலுள்ள எதிரிலி சோழீசுவரமுடையார் கோயில் மற்ற உரிமைகளோடு இக்கோயிலில் கணக்காய்வர் பதவி ஏற்படுத்திக் கொள்ளும் உரிமை வழங்கப்பட்டது[3].

இதே சுவரிலுள்ள விஜயநகர மன்னன் கிருஷ்ணதேவராயர் சகம் 1448 விசைய, மிதுன (சிம்மமாக இருக்கவேண்டும்) திங்கட்கிழமை திருவோணம் கி. பி. 1520 -ஆம் ஆண்டு ஆகஸ்டு 20-ஆம் நாளுக்கு ஒத்தவாறு காவல் புரிவதற்கான திருமேனிக்காவல் காணியாட்சி, கோயிலின் மடாதிபதி, அடைப்பட்டு வையப்ப

நாயக்கருக்கும் பொட்டு நாயக்கருக்கும் பரிந்துரை செய்த கலவைப்பற்றிலுள்ள பாப்பு திம்ம நாயக்கருக்கு அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது[4].

இதை ஏற்றுக்கொண்ட பின்னர், கிருஷ்ணதேவராயர் கிருஷ்ணதேவி நதிக்கரையில் தங்கியிருந்தபோது அவரிடமிருந்து, கிருஷ்ணாபுரம் என்கிற அத்திகிராமம், உடையவர் கோயிலுக்குச் சர்வமானியமாகப் பெறப்பட்டது.

இதே கோயிலின் கிழக்குச்சுவரிலுள்ள கல்வெட்டு, பல்லவர்கள் தங்கள் சமுதாயச் சூழ்ச்சியிலிருந்து அத்தி, ஆளப்பிறந்தான் என்னும் கிராமங்களை விலக்கிக் கொண்டதைப் பதிவு செய்கிறது[5].

இதே கோயிலிலுள்ள கல்வெட்டு, விஜயநகர மன்னன் கிருஷ்ணதேவராயர் சகம் 1447 தாரண மாசி 25 திங்கட்கிழமை உத்திராடம் நட்சத்திரத்திற்குரிய கல்வெட்டு கிருஷ்ணாபுரம் என்கிற அத்தி என்கிற கேராளாந்த விண்ணகரிலுள்ள எதிரிலி சோழீசுவரமுடையார் நாயனார் கோயிலுக்கு நிலம் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது[6].

கல்வெட்டுச் சிறப்புகளைக் கொண்டுள்ள இக்கோயில் தற்போது நலிவுற்றுச் சிதைந்த நிலையில் உள்ளது. இக்கோயில் எல்லா வகையிலும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுவதற்குரியது.

---

(1. 296/1912; 2. 297/1912; 3. 298/1912; 4. 299/1912; 5. 300/1912; 6. 301/1912)

## அத்தி

# கரிய பெருமாள் கோயில்

அத்தி கிராமத்தின் மேற்குக் கோடியில் கரிய பெருமாள் கோயில் இருக்கின்றது. இக்கோயில் கருங்கல் கட்டடமாதலால், இஃது இவ்வூரிலுள்ள அகத்தீசுவரர் கோயிலைப் போன்று இடிபாடுகள் எய்தாமல் நன்னிலையில் இருக்கின்றது.

இங்குக் கரிய பெருமாள் சீதேவி, பூதேவி ஆகிய இருவருடன் காட்சியளிக்கிறார். இக்கோயிலின் உற்சவத் திருமேனிகள் பாதுகாப்பின் பொருட்டு

முருகப்பெருமான் கோயிலில் வைக்கப்பட்டுள்ளன. இத்தேவியரின் உடலமைப்பு, உடையமைப்பு ஆகியவற்றில் சிற்பியின் கைத்திறன் காணப்படுகிறது.

இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் கல்வெட்டுகள் இதன் பண்டைச் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன.

இதே கிராமத்திலுள்ள கரிய பெருமாள் கோயிலின் தெற்குச்சுவரிலுள்ள திரிபுவன சக்கரவர்த்தி விசயகண்ட கோபாலன் எட்டாவது ஆண்டுக் கல்வெட்டு, கலியூர்க் கோட்டத்திலுள்ள பெரியநல்லூர் இராசராச சம்புவராயர் இளவரசர், வெண்குன்றக் கோட்டத்து அத்தி கிராமத்திலுள்ள எதிரிலி சோழ விண்ணகரப்பெருமான் கோயில் பழுது பார்த்தலுக்காக நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் கூறுகிறது[1].

இதே கோயிலின் மேற்குச்சுவரிலுள்ள திரிபுவனச்சக்கரவர்த்தி விசயகண்ட கோபாலன் பதினெட்டாம் ஆண்டுக் கல்வெட்டு, எதிரிலி சோழ விண்ணகரப்பெருமாள் கோயிலில் அம்மை நாச்சி என்கிற பாலாற்றில் வென்றாரால் நிறுவப்பட்ட வெண்ணெய்க் கடியருளின பிள்ளை (கிருட்டினன்) சந்நிதிக்குப் பெரியநல்லூர் 3 வேலி நிலங்களை நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது[2].

இதே கோயிலில் முன்புறமுள்ள பலகைக்கல்லில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, துர்மதி ஆண்டில் அத்தியிலுள்ள கரியபெருமாள் கோயிலின் மகாமண்டபம், மையக் கூரைப்பகுதி, கிணறு ஆகியவை சென்னப்பன் என்பவனால் அளிக்கப்பட்டன என்பதைக் குறிக்கிறது[3].

இக்கோயில் நலிவுற்று நிற்கின்றது. இக்கோயில் பாதுகாக்கப்பட்டுப பராமரிக்கப்படத்தக்கது. இக்கோயிலின் கல்வெட்டொன்று, இக்கோயிலின் கொடைகளை அழிப்பவன் தன் குலத்தில் தன் தந்தைக்குப் பிறவாதவன் என்னும் மிகக் கொடிய வாசகங்களைக் கொண்டுள்ளது. இதிலிருந்து தெரியவருவது இக்கோயிலுக்கு நன்கொடை அளித்தவர்கள் இக்கோயில் சீரும் சிறப்போடும் திகழவேண்டும் என்னும் நோக்கம் கொண்டிருந்தார்கள் என்பதாகும்.

---

1. 302/1912; 2. 303/1912; 3. 304/1912

## அய்யம்பாளையம்

# உத்தமராசாபெருமாள் கோயில்

இக்கோயில் வேலூர் - திருவண்ணாமலை நெடுஞ்சாலையிலிருந்து 2 கிலோமீட்டர்த் தொலைவில் கிழக்குத் திசையில் குன்றின் மீது அமைந்துள்ளது. இறைவன், ஊமைக்குப் பேசும் திறமை அளித்த காரணத்திற்காக உத்தமராசா பெருமாள் என்னும் பெயர் வழங்கிவருகிறது என்பதை மரபுவழிச் செய்தி கூறுகிறது. இங்கு உத்தமராசப் பெருமாள் சீதேவி, பூதேவி ஆகியோர்களுடன் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். இக்குன்றில் உள்ள சுனை நீர் இக்கோயிலின் தீர்த்தமாகும்.

இங்கு ஒரு காலப்பூசை நடைபெற்று வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் காணும் பொங்கலுக்கு அடுத்த நாளில் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகிறது. வெளியூர்களிலிருந்து அன்பர் பலர் இங்குவந்து வழிபடுகிறார்கள். இக்கோயில் குன்றின் மீதிருப்பதால் இது சிறந்த தோற்றம் அளிக்கிறது.

இக்கோயிலுக்கு 4.94 ஏக்கர் நன்செய் நிலமும் 1.49 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டுவருமானம் 1,200 உருபாயாகும்.

இக்கோயிலில் ஒரு கல்வெட்டு உள்ளது. இக்கோயில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

## அரும்பாக்கம்

# இலட்சுமிநாராயணப் பெருமாள் கோயில்

இக்கோயில் காட்பாடி - ஜோலார்பேட்டை இருப்புப்பாதையில் இலத்தேரி இருப்புப்பாதை நிலையத்தினின்று வடக்குத் திசையில் ஏறத்தாழ 3 கிலோமீட்டர்த் தொலைவில் அரும்பாக்கம் கிராமத்தில் நாற்புறங்களிலும் மதிற்சுவர்களுடன் 29

மீட்டர் நீளமும் 16 மீட்டர் அகலமும் கொண்ட 404 சதுரமீட்டர் பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் தலவிருட்சம் பவளமல்லி மரமாகும். இஃது இக்கோயிலின் வடபுறத்தில் உள்ளது. இம்மரத்தின் உயரம் 16 மீட்டராகும்.

இக்கோயிலின் நுழைவாயிலைக் கடந்து உள்ளே செல்வோமெனில் பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றையும் அடுத்துக் கருடாழ்வார் சந்நிதியையும் வலப்பக்கம் ஆஞ்சநேயர் சந்நிதியையும் மேல்புறத்தில் நாகர் திருவுருவங்களையும் காணலாம். கருடாழ்வார் சந்நிதி 1 மீட்டர்ப் பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் கருவறை கிழக்கு மேற்காக 2 மீட்டர் நீளமும் தென்வடலாக 2 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. கருவறையில் இலட்சுமி நாராயணப்பெருமாள் திருவுருவம் கிழக்கு நோக்கியவாறுள்ளது. இம்மூலவருக்கு வலப்பக்கம் பழைய மூலவர் இலட்சுமி நாராயணப் பெருமாள், இடப்பக்கம் தொண்டரடிப் பொடியாழ்வார் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன." அர்த்த மண்டபத்தில் நாகேந்திரன் திருவுருவம் உள்ளது. வடபுறம் ஆஞ்சநேயர் தெற்கு முகமாக உள்ளார்.

இக்கோயிலுக்குரிய தீர்த்தக்குளம் தற்போது தூர்ந்த நிலையில் உள்ளது.

இக்கோயிலின் இராசகோபுரம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இராசகோபுரத்தின் ஒரு நிலை மட்டும் கட்டப்பட்டு, முடிக்கப்பெறாமல் உள்ளது.

மூலவர் சந்நிதியில் விமானம் எழுப்பப்பட்டுள்ளது. கருவறையை அடுத்து உள்மண்டபம் கிழக்குமேற்கில் 2 1/2 மீட்டர் நீளமும் தென்வடலாக 2 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. வெளிமண்டபம் அமைக்கக் கல்தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன. கீழ்ப்புறம், தென்புறத்தில் யாகசாலை, மடைப்பள்ளி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இவை தற்போது பயன்படுத்தப்பெறுவதில்லை.

வைகாசன ஆகம முறையில் நாள்தோறும் ஒரு காலப்பூசை காலையில் செய்யப்படுகிறது.

இக்கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகைக்குட்பட்டது. இக்கோயிலுக்கு 1.63 ஏக்கர் நன்செய் நிலமும் 10.14 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 6,000 உரூபாயாகும். இக்கோயிலில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு காலப்பூசையும், திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற்றுவந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இக்கோயிலுக்குத் திருப்பணி தேவைப்படுகிறது.

## அவலூர் (பேட்டை)
# சுந்தர வரதராசர் கோயில்

அரக்கோணம் வட்டத்தில் காஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 18 கிலோமீட்டர்த் தொலைவில் 14 செண்ட் பரப்பில் சுந்தரவரதராசர் கோயில் அமைந்துள்ளது.

கருவறையை எதிர்நோக்கிக் கருடாழ்வார் சந்நிதி உள்ளது. கருவறையில் சுந்தரராசர் உபய நாச்சிமார்களுடன் எழுந்தருளியுள்ளார். இச்சந்நிதி முன்புறமுள்ள பீடத்தில் சுந்தரவரதர், உபயநாச்சிமார்கள், சக்கரத்தாழ்வார் ஆகியோர் உற்சவத் திருமேனிகள் உள்ளன. வலப்பக்கத்தில் சிறு அறையில் சுந்தரவல்லித் தாயார் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார்.

கருவறைக்கு முன்புறம் சிறுமண்டபம் இருக்கின்றது. பட்டாச்சாரியார் ஒரு காலப்பூசை செய்துவருகிறார். பங்குனி உத்திர விழா சிறிய அளவில் கொண்டாடப்படுகிறது. இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினர் கட்டுப்பாட்டில் உள்ளது. இக்கோயிலில் கருட வாகனம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் ஏழாயிரம் உரூபாயாகும்.

## அனக்காவூர்
# வீரராகவப் பெருமாள் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 25.6 கிலோமீட்டர்த் தொலைவில் செய்யாறு வட்டம் அனக்காவூர் முகப்பில் இரண்டு ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் நுண்வாயில் வழியாக உள்ளே செல்வோமெனில், முதலில்

பலிபீடத்தையும் மூலவரை நோக்கியவாறு கருடாழ்வார் சந்நிதியையும் காணலாம். கருவறையில் வீரராகவப் பெருமாள் சீதேவி, பூதேவியுடன் அருள் பாலிக்கின்றார். அருகில் கனகவல்லித் தாயார் சந்நிதி உள்ளது. இங்கு அனுமார், வீரஆஞ்சநேயர், உடையவர் ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. சீதேவி, பூதேவி, கனகவல்லித் தாயார் ஆகியோரின் ஐம்பொன்னாலான உற்சவத் திருமேனிகள் உள்ளன.

இக்கோயிலில் வீரராகவப்பெருமாள் சந்நிதிக்கும் தாயார் சந்நிதிக்கும் விமானங்கள் உள்ளன. இங்கு உள்மண்டபமும் மகாமண்டபமும் உள்ளன.

இக்கோயிலின் மேற்குச்சுவரிலுள்ள மதுரைகொண்ட பரகேசரிமன்னன் (பராந்தகன் 1) கல்வெட்டு, இக்கிரர்மத்தில் வரிகள் மூலம் பெறப்படும் தொகை இக்கோயிலில் இரண்டு விளக்குகள் எரிக்கப் பயன்படுத்தப்படவேண்டும் என்னும் ஏற்பாட்டைக் குறிக்கிறது[1].

இக்கோயிலின் வடக்குச்சுவரிலும் தெற்குச்சுவரிலும் பொறிக்கப்பட்ட வீரப்பிரதாப தேவராயர் புதல்வர் மல்லிகார்ச்சுனர் காலத்துக் கல்வெட்டு சகம் 1369 விபவ ஆண்டு கார்த்திகை மாதம் அத்த நட்சத்திரம் தசமி திதி திங்கட்கிழமை நாளுக்குரியது. இது முடிவுபெறாத கல்வெட்டு. இது மகாராசா ஈசுவர சோழ மகராசன் நலத்திற்காகச் செயம்கொண்ட சோழமண்டலத்து வெண்குன்றக் கோட்டம் அத்திபுரம் உட்பிரிவிலுள்ள அனக்காவூர் என்கிற இராசராசாதிநல்லூருள் எழுந்தருளிய கண்ணறைந்த பெருமாளுக்காக இரவு வழிபாட்டுக்காகவும் இரண்டு ஒளிவிளக்கு வைப்பதற்காகவும் சிலவரிப்பணம் அளிக்கப்பட்டதைப் பதிவுசெய்கிறது[2].

இதே சுவரிலுள்ள விஜயகண்டகோபாலன் 20-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இக்கோயிலில் நான்கு ஒளி விளக்கு வைக்கச் சோரப்பிள்ளை என்பவர் இரண்டு கண்டகோபாலன் பழவண்ணாமடைகள் அளித்ததைக் குறிப்பிடுகிறது[3].

அனுமீசுவரர் கோயிலின் கிழக்குச்சுவரில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு முடிவு அடையாமலுள்ளது. இக்கோயிலில் நான்கு ஒளி விளக்குகளை வைக்கக் கோயில் பிராமணர் ஒருவர் செய்துகொண்ட உடன்படிக்கையை இது குறிக்கிறது. இதன்படி இதற்கெனப் பணமும் நெல்லும் பெற்றுக்கொண்டவர் தம் முறையில் 15 நாள்கள் நான்கு விளக்கு எரித்துவர உடன்பட்டதை இக்கல்வெட்டு பதிவுசெய்கிறது[4].

இதே சுவரிலுள்ள விஜய நகர வீரப்பிரதாப தேவ மகராயர் மகனார் மல்லிகார்ச்சுன மகாராயர் சகம் 1368 பிரபவ ஆண்டு வைகாசிமாதம் ஐந்தாம் நாள் கல்வெட்டு, மகாமண்டலேசுவர திம்மய்ய மகராயர் நலனுக்காக அணக்காவூர் என்கிற இராசராசநல்லூரில் இராசீசுவரம் உடைய நாயனாருக்காக நிரந்தர விளக்குகள் வைப்பதற்காகத் தேவதானம் நிலங்களுக்குரிய வரிகள் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது[5].

இதே கோயில் மேற்குச்சுவரிலும் தெற்குச்சுவரிலுமுள்ள பாண்டியன் ஸ்ரீ வீர

பாண்டியதேவன் 26-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, தனிப்பட்ட ஒருவரிடமிருந்து 28 பணம் பெற்றுக்கொண்டதற்காக இதே சந்நிதியில் ஒளி விளக்குகள் வைக்க நல்லன் பட்டர் பெருமான் எழுதிக் கொடுத்த உடன்படிக்கையைக் குறிக்கிறது.

இதே சோழ ராசகேசரிவர்மன் கோட்டத்துக் கோவலூர்க் கயிலாசநாதர் கோயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, (வெண்) குன்றக் கோட்டத்துக் கோவலூர்ச் சபையாரால் நில விற்பனை செய்யப்பட்டதைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. இது துண்டிக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் ஒருகாலப் பூசை, பரம்பரைப் பட்டாச்சாரியாரால் வைகாசன ஆகம முறையில் நிகழ்த்தப்பெறுகின்றது. ஜெயந்தி, நவராத்திரி, கார்த்திகை தீபம், வைகுண்ட ஏகாதசி, துவாதசி, மாட்டுப்பொங்கல், பங்குனி உத்திரத் திருக்கல்யாணம் ஆகிய திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன.

இக்கோயிலுக்கு 3.27 ஏக்கர் நன்செய் நிலமும் 13.77 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் நிருவாகம் பரம்பரை அறங்காவலரிடம் உள்ளது. இதற்கு ஆண்டு வருமானம் 1,200/- உருபாயாகும்.

---

(1. 431/1922; 2. 432/1922; 3. 433/1922; 4. 434/1922; 5. 435/1922; 6. 436/1922; 7. 437/1922;)

## ஆத்துவாம்பாடி

## தருமலிங்கேசுவரர் கோயில்

இக்கோயில் போளூர்வட்டம், மதிமங்கலம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 7 கிலோமீட்டர்த் தொலைவிலும் காட்பாடி - விழுப்புரம் இருப்புப்பாதை வழியில் ஆரணி சாலை நிறுத்தத்திலிருந்து 12 கிலோமீட்டர்த் தொலைவிலும் ஆத்துவாம்பாடி கிராமத்தில் 50 மீட்டர் நீளமும் 48 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் உள்ளது.

கருவறை முன்புறம் துவாரபாலகர் இருவர் உள்ளனர். கருவறைச் சுவர் மாடங்களில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகியோரும் மேற்கில் திருமாலும் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோரும் உள்ளார்கள். எதிரில் சண்டேசுவரர் உள்ளார்.

இக்கோயில் மகாபாரத காலத்திற்கு உரியதாகத் தலபுராணம் கூறுகிறது.

பஞ்சபாண்டவர் வனவாசம் செய்த காலத்தில் தருமர் இங்கே சிவலிங்கம் நிறுவி வழிபட்டார் எனவும் இதன் காரணமாக இக்கோயிலுக்குத் தருமலிங்கேசுவரர் கோயில் என்னும் பெயர் வழங்கிவருவதாகவும் இப்புராணம் எடுத்துக்காட்டுகிறது. இவ்வூருக்கு அருகிலுள்ள படவேட்டு மலையில் பீமலிங்கம் இருப்பதாகவும் இத்தலத்திற்கு அருகிலுள்ள அஸ்தம்பாடி, மதிமங்கலம் முதலிய ஊர்களில் அருச்சுனன், சகாதேவன் ஆகியோர் பெயரில் சிவலிங்கங்கள் உள்ளன எனவும் இக்கோயில்கள் பஞ்சபாண்டவர் வனவாசத்திற்குப் பின்னர் மறைந்து வாழ்ந்த காலத்தில் கட்டப்பட்டன எனவும் இக்கோயிலின் கருவறையின் கீழ் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன என மக்கள் தொகை கணக்கீட்டு நூல் தெரிவிக்கின்றது.

இக்கோயிலில் வெளிப்பிரகாரம், உட்பிரகாரம் ஆகிய இரண்டு பிரகாரங்கள் உள்ளன.

இக்கோயிலில் காமிக ஆகம விதிப்படி ஒரு காலப்பூசை நடைபெறுகிறது. ஆண்டுதோறும் பங்குனி உத்திரத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. உற்சவமூர்த்தி வீதி உலா வருவது வழக்கம். வாகனங்களும் தேரும் பழுதடைந்த நிலையில் உள்ளன.

இக்கோயில் வடக்கு, மேற்கு ஆகிய சுவர்களில் சகம் 1554 ஆங்கீரச ஆண்டு கன்னி 2-ஆம் நாள் உத்திர நட்சத்திரம் ஆனை கொண்ட வேங்கிடபதிராயர் கல்வெட்டு, இக்கோயிலின் இறைவனுக்கு நாள்தோறும் குறிப்பிட்ட அளவு அமுது படைத்துவரக் கோயிலின் பெண்பணியாளர் வகுத்த பண அறக்கட்டளையை முன்னிட்டுக் கோயிலார் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டதைக் குறிக்கிறது.[1] இதே சுவரிலுள்ள சகம் 14(5)0 சர்வதாரித் திங்கள் சதயம் மகாமண்டலேசுவர கிருஷ்ணதேவ மகாராயர் கல்வெட்டு, தேவதான பொக்கிஷம் கிராமநாயக்கர் கன்னடிய நாயக்கப்பாடி மகன் ஏகப்ப நாயக்கர், தனது பிறந்த நட்சத்திரத்தில் மகர சங்கராந்தியில் ஒவ்வோர் ஆண்டும் தனிப்பட்ட வழிபாட்டுக்காக நிலம் அறக்கட்டளை ஏற்படுத்தியதைக் குறிக்கிறது.[2]

இதே கோயிலின் மகாமண்டபத்தின் தலை இடத்தில் "அருள்ளான் பாடி என்கிற வீரகுமார சம்புராசன் பேட்டை சரண்புகக்கூடிய இடமாக உள்ளது" என்பதனைக் குறிக்கிறது.[3]

இதே கோயிலின் தரைப்பகுதியின் கல்லிலுள்ள கல்வெட்டு,- விசயநகர சதாசிவதேவ மகாராயர் சகம் 1468 பிரபவ மிதுனம் 12-ஆம் நாள் உரோகிணி நாளில், சாம்ப நாய்க்கர் இக்கோயிலில் விளக்கு வைக்க ஓர் ஏற்பாடு செய்ததைக் குறிக்கிறது[4].

நிருவாகம் இந்து சமய அறநிலையத் துறையின் அலுவலராலும் அறங்காவலராலும் நடத்தப்பட்டு வருகின்றது.

இங்கு, பஞ்சலோகத்தால் உருவாக்கப்பட்ட உற்சவர் திருமேனிகள் பதினொன்று உள்ளன.

இக்கோயிலுக்குச் சொந்தமாக 8.50 ஏக்கர் நன்செய் நிலமும் 9.42 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. கோயிலின் ஆண்டு வருமானம் சுமார் 4,000/- உரூபாயாகும்.

(1. 86/1940-41; 2. 87/1940-41; 3. 88,89/1940-41; 4. 90/1940-41)

## ஆத்தூர்க்குப்பம்

# வீரபத்திரசாமி கோயில்

இக்கோயில் ஜோலார்பேட்டை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 5.6 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள ஆத்தூர்க்குப்பம் கிராமத்தின் கீழ்ப்புறமாகக் கிழக்கு நோக்கியவாறு 4.57 மீட்டர் 9.14 மீட்டர் அளவில் அமைந்துள்ளது.

கருவறையில் வீரபத்திரசாமி எழுந்தருளியுள்ளார். கருவறை மீது விமானம் உள்ளது. வீரபத்திரர் உற்சவத் திருமேனி உள்ளது. கருவறையின் அருகில் ஏகாம்பரேசுவரர் உலாத்திருமேனியும் உள்ளது.

இக்கோயிலில் வாரபூசை மட்டும் செய்யப்படுகிறது. இங்கு மார்கழியில் 30 நாள்களும் பூசை நடத்தப்பெறுகிறது. தை அமாவாசையில் சிறப்புப்பூசை நிகழ்த்தப்படுகிறது.

இக்கோயிலுக்கு 7. 88 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. சென்னை ஆணையரின் ஏ. பி. 24/71 நாள் 31-7-71 ஆணையின்படி பரம்பரை நிருவாகம் என அறிவிக்கப்பட்டதில் பூசையும் நிருவாகமும் நடைபெற்றுவருகின்றன. இக்கோயில் புதுப்பிக்கப்பட்டு 40 ஆண்டுகள் ஆகின்றன எனக் கூறப்படுகிறது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் உரூபாய் 850/- ஆகும். இலிங்காயத்தார்களால் பூசை செய்யப்படுகிறது. இக்கோயிலுக்குக் குதிரை வாகனம் உள்ளது.

## ஆம்பூர்

# காமாட்சியம்மன் (எ) காளிகாம்பாள் கோயில்

இக்கோயில் சென்னை-சோலார்ப்பேட்டை இருப்புப்பாதையிலுள்ள ஆம்பூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 30 கிலோமீட்டர்த் தொலைவில் ஆம்பூர் மேல்கிருஷ்ணாபுரத்தில் 5 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலுக்குக் கிழக்கில் இருவாயில்கள் உள்ளன. தெற்கிலுள்ள வாயில் சுவாமி சந்நிதியை நோக்கியுள்ளது. இச்சந்நிதிக்கு நேரெதிரில் பலிபீடம், நந்திதேவர் சந்நிதி ஆகியவை உள்ளன. சுவாமி கோயிலின் வாயில் தென்புறத்தில் விநாயகர் திருவுருவமும் வடபுறத்தில் சுப்பிரமணியர் திருவுருவமும் உள்ளன. கருவறைக் கோட்டத்தில் தெற்கில் விநாயகர், அடுத்துத் தட்சிணாமூர்த்தி, மேற்கில் இலிங்கோற்பவர், வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுவரர் தெற்கு முகமாகக் காட்சியளிக்கிறார். கருவறைக்கு வடக்கில் காமாட்சியம்மன் அமர்ந்த நிலையில் நான்கு கரங்களுடன் விளங்குகிறார். இவ்வம்மனின் சந்நிதி முன் சிங்கம், பலிபீடம் ஆகியவை உள்ளன.

வடக்கிலிருந்து தெற்காக மதிற்சுவர் மீது பரசுராமர், சமயபுரம் மாரியம்மன், மதுரை மீனாட்சியம்மன், காஞ்சி காமாட்சியம்மன், கன்னியாகுமரி பன்னாரியம்மன், திருவேற்காடு கருமாரியம்மன் ஆகிய அம்பிகையின் திருவுருவங்களும் விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோர் திருவுருவங்களும் மேற்கு வாயில் முகப்பில் 18 கைகளுடைய துர்க்கை திருவுருவமும் சுதை வடிவில் அமைக்கப்பட்டுள்ளன.

நாள்தோறும் இருகாலப்பூசை குருக்கள் செய்துவருகிறார். நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இக்கோயிலுக்கு 1.08 ஏக்கர் நன்செய் நிலமும் ஒரு வீடும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 6,132/- உரூபாயாகும். இக்கோயில் நிருவாகம் பொன் ஆச்சாரியார்கள் கட்டுப்பாட்டில் உள்ளது.

# ஆம்பூர்
# சாமுண்டீசுவரி அம்மன் கோயில்

இக்கோயில் ஆம்பூரில் மூன்று செண்ட் நிலப்பரப்பில் தெற்கு நோக்கிய வாயிலும் கிழக்கு நோக்கிய சந்நிதியும் கொண்டு அமைந்துள்ளது.

தெற்கு வாயிலை அடுத்துக் கோயிலினுள் மேற்குக் கோடியில் மீனாட்சி திருமணம் சுதை வடிவில் காணப்படுகிறது. அடுத்து விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. கருவறையில் சாமுண்டியம்மன் சிங்கம் மீதமர்ந்து சூலத்தால் அசுரனைக் குத்தும் கோலத்தில் கிழக்கு நோக்கியவாறு அருள்பாலிக்கிறார். பழைய சாமுண்டியம்மன் திருவுருவமும் இங்குள்ளது. துவாரபாலகர்கள் திருவுருவங்கள் உள்ளன. கோயிலினுள் வடக்குப்புறத்தில் விநாயகர், சாமுண்டியம்மன், பாலமுருகன் ஆகியோர்தம் உற்சவர் திருமேனிகள் உள்ளன.

தெற்குவாயில் கோபுரம் 8 நிலைகளையும் 5 கலசங்களையும் கொண்டுள்ளது. கிழக்குப்பகுதியில் மூன்று வாயில்கள் ஒன்றுக்கு ஒன்று சிறிது இடம் விட்டு அமைந்துள்ளன. இவ்வாயில்களின் நடுவில் மேல்பகுதியில் சாமுண்டி, காசி விசாலாட்சி, கன்னியாகுமரி, காஞ்சிகாமாட்சி, மதுரை மீனாட்சி, சமயபுரம் மாரியம்மன், இலட்சுமி ஆகியோர்தம் சுதைத்திருவுருவங்கள் உள்ளன.

இக்கோயிலில் இருவேளைப்பூசை நடைபெறுகிறது. இக்கோயிலில் தொன்றுதொட்டு நடைபெறும் க்ரகத்திருவிழா இப்பொழுதும் மாசித்திங்கள் முதல் வியாழக்கிழமை நாளில் தவறாமல் நடைபெறுகின்றது. அதையடுத்து ஆடிமாதத்தில் 5 வெள்ளிக்கிழமைகளிலும் அம்பிகைக்குச் சிறப்பு அபிடேகமும் அலங்காரத்துடன் சிறப்புமிகு வழிபாடுகளும் நடைபெற்றுவருகின்றன. ஆடி ஐந்தாம் வெள்ளியில் இலட்ச தீப விழா மிகச் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. அன்று நடைபெறும் திருவிளக்கு வீதி ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சியாகும். இறைவனும் இறைவியும் திருவீதியுலா வர, நூற்றுக்கணக்கில் பெண்டிரும் குழந்தைகளும் கையில் தீபமேந்தி முதன்மை வீதிகள்வழியாக வலம் வந்து கோயிலில் இலட்சதீபத்தை ஏற்றி வைக்கிறார்கள். இஃது அஞ்ஞான இருளை ஓட்ட மெய்ஞ்ஞானமாகிய ஒளியை ஏற்றுவது போல் உள்ளது. ஆடிமாதத்தில் இவ்வாலயத்தின் சார்பில் சமயச் சொற்பொழிவுகளும் வழக்காடு மன்றக்கூட்டங்களும் பரத நாட்டியம், நாதசுரம் போன்ற கலைநிகழ்ச்சிகளும் கடந்த பல ஆண்டுகளாகத் தவறாமல் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

அதையடுத்துப் புரட்டாசி மாதம் மாளய அமாவாசை நாள் முதல் விசயதசமிக்கு அடுத்தநாள் வரையிலும் நடைபெறும் நவராத்திரிப் பெருவிழாவில் ஒவ்வொரு நாளும் அம்பிகை ஒவ்வொரு திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். அடுத்து மார்கழி மாதம் 30 நாள்களும் விடியற்காலைப் பூசை நடைபெறும். இப்பூசையில் மக்கள் குளிரையும் பொருட்படுத்தாமல் கலந்து கொள்வது தனிச்சிறப்பாகும். மார்கழி மாதச் சிறப்பு நிகழ்ச்சிகளில் முக்கியமான விழா பவானியம்மன் விழாவாகும். அந்நாளில் அம்பிகை புதிய அலங்காரத்துடன் காட்சியளிக்கிறார். அந்நாளில் ஆயிரக்கணக்கில் அன்பர்களுக்கு அன்னதானமும் நடைபெறும். அடுத்து, சனவரி முதல் நாள் (ஆங்கிலப் புத்தாண்டு நாளில்) இலட்சுமி அருச்சனை நூற்றுக்கணக்கில் நடைபெறும்.

மக்கள் திரளாக வந்து அருச்சனைசெய்து அம்பிகையை வழிபடுகிறார்கள். அதனையடுத்து மார்கழி மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையன்று திருமணத் திருவருள்வேண்டுதல் விழா நடைபெறும். அப்போது திருமணமாகாத பெண்கள் இரண்டு மாலைகளுடன் வந்து மணக்கோலத்தில் எழுந்தருளியிருக்கும் நாயகனையும் நாயகியையும் வழிபட்டு அருள் வேண்டிச் செல்கின்றனர். அவரவர் நம்பிக்கைக்கேற்பப் பெண்டிர் பலருக்குத் திருமணங்கள் நடைபெறுகின்றன. அவர்கள் தங்கள் துணைவரோடு வந்து, சிறப்பு வழிபாடுகள் செய்கிறார்கள்.

இவைதவிர மாதந்தோறும் பௌர்ணமியில் திருவிளக்குப்பூசையும் கிருத்திகை தோறும் முருகப் பெருமானுக்கும் சங்கடஹர சதுர்த்தியில் கணபதிக்கும் பூசைகளும் நடைபெறுகின்றன.

இக்கோயிலுக்கு 5 கடைகள் மட்டும் உள்ளன. சிங்க வாகனம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 3,000/- உருபாயாகும். ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுக் காலத்திற்கு முன் குலால மரபினரால் நிறுவப்பட்டு நாளதுவரை அந்த மரபைச் சார்ந்தவர்களாலேயே நிருவகிக்கப்பட்டு வருகிறது. அதற்கு அடையாளமாகக் கோயில் கூரையின் உட்பகுதியில் குலாலர்களின் முக்கியமான கருவியாகிய 'சக்கரம்' செதுக்கப்பட்டுள்ளது.

1979-ஆம் ஆண்டில் நடைபெற்ற குடமுழுக்கு விழாவிற்குப் பிறகு கோயிலைச் சார்ந்துள்ள மண்டபத் திருப்பணி, அந்த மண்டபத்தின் முகப்பில் தொடங்கப்பட்டது. அடுத்துக் கோபுரத்திருப்பணி, விநாயகர், தண்டாயுதபாணி வெள்ளிக்கவசத் திருப்பணி, உற்சவமூர்த்தி திருப்பணி ஆகிய திருப்பணிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

# ஆம்பூர் (மேல் கிருஷ்ணாபுரம்) சீனிவாசப் பெருமாள் கோயில்

இக்கோயில் ஆம்பூர் இருப்புப்பாதை நிலையத்திற்கு அரைமீட்டர்த் தொலைவில் 10 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

கிழக்குக் கோபுரத்தின் வழியாகக் கோயிலினுள் செல்வோம் எனில், முதலில் தென்படுவன பலிபீடமும் கொடிமரமுமாகும். இவற்றையடுத்துக் கருடாழ்வார் சந்நிதி மேற்கு நோக்கியவாறுள்ளது. தென்கிழக்குக் கோடியில் ஆழ்வார் சந்நிதியும் தென்மேற்குக் கோடியில் ஆண்டாள் சந்நிதியும் வடக்கு நோக்கியுள்ளன. மேற்குப் பிரகாரத்தில் தாயார் சந்நிதியும் வரதராசப்பெருமாள் சந்நிதியும் உள்ளன. வடகிழக்குப் பகுதியில் ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது.

கண்ணுவ முனிவருக்கு இங்குக் கிருட்டிணன் காட்சியளித்ததால் இவ்வூருக்குக் கிருட்டிணாபுரம் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

இங்குள்ள சுதைச் சிற்பங்கள் மிகவும் அழகியவை. இராசகோபுரத்தில் கிருட்டிணன் பார்த்தனுக்குத் தேரோட்டுதல், யானைக்கு திருமால் அருளல், வைகுண்டவாசர் திருவுருவம் இரண்ய சம்மாரம் முதலியவை குறிப்பிடத்தக்கவை.

இக்கோயிலில் இரு காலப் பூசைகள் நடைபெற்றுவருகின்றன. பிரம்மோற்சவம், வைகுண்ட ஏகாதசி ஆகிய நாள்களில் சிறப்புப் பூசைகள் நடைபெறும்.

கோயிலுக்கு 4ஏக்கர் நன்செய் நிலமும் வீடுகள் மூன்றும் கடைகள் இரண்டும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 32, 642/- உருபாயாகும்.

# ஆம்பூர்
## நாகநாதசுவாமி கோயில்

ஆம்பூரின் மையப்பகுதியில் 1 1/2 ஏக்கர்ப் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் சற்றுப் பள்ளமான இடத்தில் அமைந்துள்ளதால் 7 படிகள் இறங்கிக் கடந்தே உட்செல்லல்வேண்டும்.

ஒரு பசு, புற்று ஒன்றில் பால் சொரிவதைக் கண்டு அகழ்ந்து பார்த்தபோது சிவலிங்கம் காணப்பட்டது. பாம்புப்புற்றில் இப்பெருமான் இருந்தவராதலின், இப்பெருமானுக்கு நாகநாதர் .என்னும் பெயர் வழங்கிவருகிறது.

கிழக்குக்கோபுரவாயிலின் வழியாகக் கோயிலினுள்ளே சென்று பிரகாரத்தினை வலம் வருவோம் எனில் பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றை முதலில் காண்கிறோம். அடுத்து நந்திதேவர் திருவுருவம் மேற்கு நோக்கியுள்ளது. அடுத்துத் தெற்குப் பிரகாரத்தில் மார்க்கபந்தீசுவரர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. இங்கு மார்க்கபந்தீசுவரர் சிவலிங்க வடிவில் உள்ளார். மரகதவல்லி, விநாயகர், நந்திதேவர் ஆகியோரும் உள்ளனர்.

அடுத்துச் சப்தமாதர் சந்நிதி வடக்கு நோக்கியவாறு இருக்கின்றது. பிரகாரத்தின் தென்கிழக்குக் கோடியில் அறுபத்துமூவர் சந்நிதி இருக்கின்றது. அடுத்து வள்ளி தெய்வயானையுடன் முருகப்பெருமான் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. அடுத்து ஐந்து நாகங்களின் உருவங்கள் உள்ளன. பிரகாரத்தின் தென்மேற்குக் கோடியில் ஐயப்பன் சந்நிதி வடக்கு நோக்கியவாறுள்ளது. மேற்குப் பிரகாரத்தில் அம்பிகை அபயவல்லி சந்நிதிக்கு எதிரில் சிங்கத்தின் உருவம் இருக்கின்றது. அம்மன் சந்நதியின் வடபுறத்தில் சுக்கிரவாரம்மன் சந்நதியும் இதற்கு அடுத்துப் பள்ளியறையும் உள்ளன. அடுத்து நாகநாதசுவாமி கோயிலினுள் செல்கிறோம். கோயிலின் உள்வாயிலின் இருபுறங்களிலும் துவாரபாலகர்களின் திருவுருவங்கள் உள்ளன. தென்புறத் துவாரபாலகர் திருவுருவத்திற்குத் தெற்கில் விநாயகர் திருவுருவமும் அதேபோல் வடக்கில் சுப்பிரமணியர் திருவுருவமும் உள்ளன. கருவறையில் நாகநாதசுவாமி சிவலிங்கவடிவில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார்.

கருவறை உள் மண்டபத்தின் வடபுறத்தில் பள்ளியறைச் சொக்கர் உற்சவர் உள்ளார். சுவாமி சந்நிதி மண்டபத்தின் வடபுறத்தில் நடராசர் சந்நிதி உள்ளது. இங்குச் சிவகாமசுந்தரி திருவுருவமும் இருக்கிறது. தெற்குப் பகுதியில் சோமாசுகந்தர்

திருமேனி கிழக்கு நோக்கியவாறுள்ளது. சுவாமி கருவறைக் கோட்டச் சுவர்களில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி மேற்கில் இலிங்கோற்பவர் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோரும் துர்க்கைக்கு எதிரில் சண்டேசுவரரும் உள்ளார்கள்.

கிழக்குப் பிரகாரத்தின் வடகோடியில் காலவயிரவர் சந்நிதியும் அடுத்துக் காளத்திநாதர் ஞானாம்பிகை சந்நிதியும் அடுத்து விநாயகர் சந்நிதியும் நால்வர் சந்நிதியும் தண்டபாணி சந்நிதியும் மேற்கு நோக்கியவாறுள்ளன.

இக்கோயிலின் தலமரம் வில்வ மரமாகும். இது தெற்குப் பிராகாரத்தில் உள்ளது. இதற்குக் கிழக்கில் மந்தாரை மரமும் உள்ளது.

கிழக்கிலுள்ள இராசகோபுரம் மூன்று நிலைகளையும் ஏழு கலசங்களையும் கொண்டு 15 மீட்டர் உயரத்துடன் காணப்படுகிறது. சுவாமி சந்நிதிக்கு மூன்று நிலை சதுரவிமானமும் சோமாசுகந்தர் சந்நிதிக்கு மூன்று நிலை விமானமும் உள்ளன. மார்க்கபந்தீசுவரர் சந்நிதிக்கு இரண்டு நிலை விமானமும் உள்ளன. சுவாமி சந்நிதியில் முன்மண்டபம், முகமண்டபம், உள்மண்டபம் ஆகியவையும் சோமாசுகந்தர் சந்நிதிக்குச் சிறு மண்டபமும் உள்ளன. அம்பிகை சந்நிதிக்கு முன் ஒரு மண்டபமும் மார்க்கபந்தீசுவரர் சந்நிதி முன் ஒரு சிறுமண்டபமும் உள்ளன. அறுபத்துமூவர் சந்நிதியையடுத்து உற்சவர் மண்டபம் இருக்கிறது. சொற்பொழிவுகள் இங்கு நிகழ்த்தப்பெறுகின்றன.

கோபுரத்தில் பிட்டுக்கு மண்சுமத்தல், இராமருக்கு அனுமர் சிவலிங்கம் கொண்டு வருதல், அட்டதிக்குப்பாலர் உருவங்கள், காலசம்மாரம், திருஞானசம்பந்தர் அற்புதங்கள் ஆகியவை சுதைச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலின் வடமேற்கு மூனையில் சபரிமலை ஐயப்பனின் தனிச் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. இவருக்கு எதிரில் சபரிமலையை நினைவூட்டும் 18 படிகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கோயிலின் வடக்குச் சுவரிலுள்ள சகம் 1390 சர்வதாரி ஆண்டுக் கல்வெட்டு விசயநகரமன்னர் சாளுவ நரசிங்கதேவராயரையும் சென்னைய தேவரையும் குறிப்பிடுகிறது.[1]

இக்கோயிலின் முன்னுள்ள மண்டபத்திற்கு அருகிலுள்ள கல்லில் பொறிக்கப்பட்ட சோழர் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கச் சோழதேவர் 15-ஆவது ஆண்டுக் கல்வெட்டு விராலி நாட்டு மக்கள் ஆம்பூர்க் கோயிலுக்கு ஒரு நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.[2]

இந்த மண்டபத்தின் வடக்குச்சுவரின் அடிப்பகுதியிலுள்ள ஒய்சால வீரவல்லாளதேவர் விரோதி ஆண்டுக் கல்வெட்டு ஆம்பூர் நாகேசுவரர் கோயிலுக்கு அண்மையூரில் நிலம் நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[3]

இக்கோயிலில் நான்கு வேளை பூசை செய்யப்படுகின்றது. இக்கோயிலுக்கு 22 ஏக்கர் நிலங்களும் 15 கடைகளும் உள்ளன. பங்குனி உத்திரம் 10 நாள்கள் விழா சிறப்பாக நடைபெறும். இந்து சமய அறநிலையத் துறையினரால் நியமிக்கப்பெற்ற செயல் அலுவலர் இங்குச் செயலாற்றி வருகிறார். இக்கோயிலின் ஆண்டு வருமானம் 50, 000/- உருபாயாகும்.

இக்கோயிலில் வழிபாடு செய்ய மக்கள் திரண்டு வருகிறார்கள் சோமவார விழாக்குழுவும் மகளிர் வழிபாட்டு மன்றமும் வாரந்தோறும் திங்கள், வெள்ளி ஆகிய நாள்களில் கூட்டு வழிபாடு செய்கின்றனர். ஐப்பசி மாதம் தொடங்கி 1000 பேர்களுக்கு மேல் இங்கு மாலை அணிந்து சபரிமலை யாத்திரை செல்கின்றனர். மக்களை ஒருங்கிணைக்கும் செயற்பாட்டை இக்கோயில் மேற்கொண்டுவருகிறது.

---

(1. 4/1986; 2. 5/1986; 3. 6/1896)

## ஆரணி

# அரியாத்தம்மன் கோயில்

இக்கோயில் ஆரணி பாளையம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 9 கிலோ மீட்டர்த் தொலைவில் 34 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயில் 500 ஆண்டுகளுக்கு முன்னர்ச் சிவகங்கை அம்மானால் கட்டப்பட்டது என்பதை இக்கோயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. பின்னரே மதிற்சுவர்களும் முன்மண்டபமும் கட்டப்பட்டன.

அரிய அத்தாள் அம்மன் என்னும் பெயர் அரியாத்தம்மன் என மருவி வழங்கி வருகிறது எனக் கூறுகிறார்கள்.

மூலவர் அம்மன் திருவுருவம் 4 1/2 மீட்டர் உயரத்தில் அமர்ந்த நிலையில் உள்ளது. பஞ்சலோகத்தினாலான உற்சவர் திருமேனி 2 3/4 மீட்டர் உயரம் கொண்டுள்ளது.

இக்கோயிலுக்குக் கோபுரமும் ஆறுகால் மண்டபமும் இருக்கின்றன இக்கோயிலின் அம்மன் ஒரு பாம்பின் வடிவில் இக்கோயிலிலிருந்து மேற்கே ஒரு கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள தாழைப்புதரில் இருந்து வருவதாகக்

கருதப்படுகிறது. இவ்வகையில் அம்மனின் திருவுருவம் ஆண்டுதோறும் திருவிழாக் காலங்களில் இப்புதரிலிருந்து கோயிலுக்கு எழுந்தருள்கிறது.

இக்கோயிலில் ஒருகாலப்பூசை நடைபெறுகிறது. இக்கோயிலின் ஆண்டுவிழா தை மாத வெள்ளிக் கிழமை நாளில் நடைபெறுகிறது.

இக்கோயிலுக்கு 35 செண்ட் நன்செய் நிலமும் நான்கு கடைகளும் உள்ளன. இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பட்ட அறங்காவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 4, 000 உருபாயாகும்.

## ஆரணி நகர்

# கில்லா வரதராசப் பெருமாள் கோயில்

ஆரணிநகர், பெரிய கடைத்தெருவில் இக்கோயில் அமைந்துள்ளது. நாற்புறங்களிலும் மதிற்சுவர்களுடன் கூடிய இக்கோயில் 27. 43 மீட்டர் நீளமும் 13.71 மீட்டர் அகலமும் கொண்டு 376 சதுரமீட்டர்ப் பரப்பளவில் அமைந்துள்ளது. இக்கோயிலின் மதிற்சுவர்க்கு வடக்குப்பக்கத்தில் ஆலய நந்தவனம் ஓர் ஏக்கர்ப் பரப்பில் அமைந்துள்ளது.

கில்லா வரதராசப்பெருமாள் என இக்கோயிலின் பெயர் வழங்கிவருகிறது. கில்லா என்பது கோட்டை எனவும் வழங்கப்படுகிறது. கோட்டை வரதராசப்பெருமாள் எனவும் இக்கோயிலுக்கு ஒரு பெயர் உண்டு.

இக்கோயிலின் இராசகோபுரம் கிழக்கு நோக்கி உள்ளது. கோயிலின் வடபகுதியில் திருக்கச்சி நம்பிகள் வீற்றிருக்கிறார். மகாமண்டபத்தில் கருடாழ்வார் வரதராசப்பெருமாளை நோக்கி அமர்ந்துள்ளார். மகாமண்டபத்தையடுத்து உள்மண்டபத்திற்கு உள்ளே செல்லும் நுழைவாயிலின்இருபுறங்களிலும் துவார பாலகர்கள் உள்ளார்கள். மூலத்தானத்தில் வரதராசப் பெருமாள் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றார்.

உள்மண்டபத்தில் வடக்கு நோக்கி இராமச்சந்திரப் பெருமாள், சீதாப் பிராட்டியார், இலக்குவர், ஆஞ்சநேயர் ஆகியோர் காட்சியளிக்கின்றனர். உள்மண்டபத்தில் எம்பெருமான் வரதராசப்பெருமாள் மூலத்தான சந்நிதிக்கு இருமருங்கிலும் வடக்கே பெருந்தேவித் தாயாரும் தெற்கே ஆண்டாளும் தனித்தனி

சந்நிதிகளில் உள்ளார்கள். மேலும் உள்மண்டபத்தில் எம்பெருமான் கண்ணபிரான் இராதா உருக்குமணியுடன் காட்சியளிக்கின்றார்.

இக்கோயிலின் உட்பிரகாரத்தில் கோயில் திருக்கிணறு அமைந்துள்ளது. பூசைக்குரிய தீர்த்தம் இக்கிணற்றிலிருந்து எடுக்கப்படுகிறது.

இக்கோயிலுக்குக் கிழக்குப்புறத்தில் உள்ள இராசகோபுரம் 65 மீட்டர் உயரமுள்ளது. இதற்கு 3 தளங்களும் 5 கலசங்களும் உள்ளன.

மூலத்தான வரதராசப் பெருமாள் சந்நதியின் மீது அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய விமானம் காட்சியளிக்கிறது. இராதா உருக்குமணி, சமேத கண்ணபிரான் சந்நிதியிலும் ஒரு விமானம் அழகுடன் காட்சியளிக்கிறது.

இத்திருக்கோயிலின் உட்பிரகாரத்தில் வாகன மண்டபமும் அலங்கார மண்டபமும் அமைந்துள்ளன. அவற்றிற்கு அருகில் யாகசாலையும் ஆலய நிருவாக அலுவலகமும் அமைந்துள்ளன.

இக்கோயிலின் அர்த்த மண்டபத்திலுள்ள தூண்களில் வைணவ சமயத்தை விளக்கும் பல சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் ஒரு காலப் பூசை, காலை வேளையில் வைகானச முறைப்படி பட்டாச்சாரியரால் நடத்தப்படுகிறது. ஆண்டு பிரமோற்சவம், நவராத்திரி விழா, தனுர்மாதப்பூசை ஆகியவை சிறப்பாக நடைபெறுகின்றன.

இக்கோயில் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறையின்கீழ் நிருவாக அலுவலர் பொறுப்பிலிருந்து வருகிறது. இக்கோயிலுக்கு 4 வீடுகளும் 6 கடைகளும் 2 காலிமனைப் பகுதிகளும் 1. 90 ஏக்கர் நன்செய் புன்செய் நிலங்களும் உள்ளன.

இக்கோயிலுக்கு அன்னம், சிங்கம், அனுமன், நாகம், யானை, குதிரை, சூரிய பிரபை ஆகிய வாகனங்கள் உள்ளன. இக்கோயிலுக்கு 20 மீட்டர் உயரமுள்ள ஒரு தேர் உள்ளது. ஆலய ஆண்டு உற்சவத்தில் திருத்தேர் நகர்வலம் வருகிறது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 9000 உருபாய் ஆகும்.

## ஆரணி

# வாணியப்பிள்ளையார் கோயில்

ஆரணி சாலை இருப்புப் பாதையிலிருந்து 9 கிலோமீட்டர்த் தொலைவில் இக்கோயில் வடக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இந்தப் பகுதியில் மாட்டுவண்டிகள் நிறுத்தி வைத்திருந்ததால், வண்டிப்பாளையம் என்னும் பெயர் அமைந்தது. இக்கோயிலை இப்பகுதியில் வாழ்ந்த வாணிய சமுதாயத்தினர் ஏற்படுத்தியதால் இங்கு எழுந்தருளியுள்ள மூர்த்திக்கு வாணியப்பிள்ளையார் என்னும் பெயர் வழங்கி வருகிறது. இப்பிள்ளையாருக்குச் சித்தி விநாயகர் என்னும் பெயரும் வழங்கி வருகிறது.

இக்கோயிலில் பிள்ளையார் சந்நிதி தவிர நவக்கிரகங்கள் சந்நிதியும் உள்ளது. இக்கோயிலுக்குத் தீர்த்தமாகக் கிணற்றுநீர் பயன்படுத்தப்படுகிறது. இக்கோயில் மூலவர் கருவறையின் மீது விமானம் உள்ளது. இங்கு முன்மண்டபம் ஒன்றிருக்கிறது.

இங்கு ஒரு காலப்பூசை நடைபெறுகிறது. இக்கோயிலுக்கு ஐந்து கடைகள் உள்ளன. இக்கோயில் நிருவாகம் அறங்காவலரிடம் உள்ளது.

## ஆலத்தூர்

# கரியமாணிக்கப் பெருமாள் கோயில்

இக்கோயில் செய்யாற்றிலிருந்து உத்தரமேரூர் செல்லும் வழியில் 32 கிலோ மீட்டர்த் தொலைவில் மேல்மா என்னும் கிராமத்தை அடுத்து 45 மீட்டர் நீளமும் 36 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் உள்ளது.

இவ்வூர் முன்பு ஆலமரத்தைச்சுற்றி இருந்தமையால் இதற்கு ஆலத்தூர் என்னும் பெயர் வழங்கிவந்தது.

இக்கோயிலின் வாயிலைக் கடந்து உள்ளே செல்வோம் எனில், விமானத்துடன் கூடிய கரியமாணிக்கப்பெருமாள் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளதைக் காணலாம். தாயார் சந்நிதி தனியாக அமைந்துள்ளது.

இக்கோயிலுக்குப் பின்புறம் காசிக்காரக்குளம் உள்ளது. இக்குளம் காசி விசுவநாதர் கோயிலிலுள்ள குளத்தைப் போன்று இருப்பதால் இதற்குக் காசிக்காரக்குளம் என்னும் பெயர் அமைந்தது.

இக்கோயிலுக்கு ஓரே பிரகாரம் உள்ளது. இக்கோயிலில் ஒருகாலப்பூசை வடகலைப் பாஞ்சராத்திர ஆகம முறையில் நடத்தப்பெறுகிறது. இக்கோயிலின் அறங்காவலர்கள் இந்து சமய அறநிலையத்துறையினரால் நியமனம் செய்யப்பட்டவர்கள். இவர்களால் இக்கோயில் நிருவாகம் செய்யப்படுகிறது. இக்கோயிலுக்கு 3.50 ஏக்கர் நன்செய் நிலமும் 0.60 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 700 உரூபாயாகும்.

## இரத்தினகிரி

# பாலமுருகன் கோயில்

இக்கோயில் வடஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகராகிய வேலூரிலிருந்து 13 கிலோமீட்டர்த் தொலைவில் அமைந்துள்ளது. இக்கோயில் இரத்தினகிரிக் குன்றின் மீது கிழக்கு நோக்கியவாறுள்ளது.

இது 14-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட திருத்தலமாகும். இத்தலத்தைப் போற்றி அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளார்.

இல்லறம் மேற்கொண்டிருந்த கீழ்மின்னல் திரு. க. சச்சிதானந்தம் 20-3-1968-ஆம் நாளில் முருகனருளால் ஆட்கொள்ளப்பெற்று ஞானியாகிச் சித்தரை

நிகர்த்த தவ ஆற்றலால் தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள் என்னும் பெயர் தாங்கித் திருமுருகன் ஆணைப்படி கருவறைத் திருப்பணி, சண்முக தெப்பக்குளத் திருப்பணி ஆகிய பணிகள் மேற்கொண்டுள்ளார். இராசகோபுரத் திருப்பணி, தங்கத்தேர்த் திருப்பணி, அடிவாரம் வரசித்தி விநாயகர் கோயில் திருப்பணி, மலை கற்பக விநாயகர் கோயில் திருப்பணி ஆகியவையும் ஆபரணங்கள் செய்யும் திருப்பணியும் நிறைவெய்தியுள்ளன.

மலைமீதுள்ள இக்கோயிலுக்குப் பல படிகள் ஏறிச் செல்ல வேண்டும். மலை மீது ஏறிச் செல்வதற்கும் மலையிலிருந்து இறங்கிவருவதற்கும் தனித்தனியாக 1968-ஆம் ஆண்டில் படிகள் அமைக்கப்பெற்றன.

ஒவ்வொருவர் ஒவ்வொரு படி என்ற முறையில் அன்பர்கள் இப்படிகளை அமைத்துத் தந்துள்ளார்கள். அவ்வாறு அமைத்துத் தந்தவர் பெயர் அந்த அந்தப் படியில் பொறிக்கப்பட்டுள்ளது.

மலை அடிவாரத்தில் வரசித்தி விநாயகர் கோயில் கிழக்கு நோக்கியவாறுள்ளது. இது 1970-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. படிக்கட்டின் அருகில் வடக்கு நோக்கியவாறு விநாயகர் சந்நிதி உள்ளது. மலைமீதுள்ள கற்பகவிநாயகர் கோயில் 1971-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. மலைமீது கிழக்கு நோக்கியவாறு சண்முகர், வள்ளி தெய்வானையுடன் கல்தேரில் அமர்ந்து அருள்பாலிக்கிறார். இங்குச் சண்முகர், வள்ளி தெய்வயானை, சந்திரசேகரர், விநாயகர், அத்திரதேவர் திருமால் ஆகியோரின் உற்சவத்திருமேனிகள் உள்ளன. இதன் வடபுறமுள்ள கருவறையுள் சுப்பிரமணியர் வள்ளி தெய்வயானையுடன் காட்சியளிக்கின்றார்.


4.31 ஏக்கர் பரப்பில் ஆறுமுகத் தெப்பக்குளம் நீராழிமண்டபத்துடன் அமைக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலுக்கு முகப்பு நுழைவாயில் 1974-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. மலைமீதமர்ந்துள்ள பெருமானுக்கு 1971-ஆம் ஆண்டில் கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. இஃது ஐந்து நிலைகளையும் ஐந்து கலசங்களையும் கொண்டுள்ளது. மலை அடிவாரத்து விநாயகர் கோயிலுக்கு ஒரு நிலை விமானம் உள்ளது.


மலைப்படிகளின் தொடக்கத்தில் முகப்புமண்டபம் உள்ளது. அடுத்து மூன்று மண்டபங்கள் இடையிடையே உள்ளன. மலையின் உச்சியில் சண்முகர் சந்நிதிக்கு அருகில் தியான மண்டபம் உள்ளது. கருவறைக்கு மேல் வடபுறத்தில் ஒரு மண்டபம் உள்ளது.

கோயிலுக்குத் தெற்கில் கல்தேர் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கல்தேர் பிரமதேவர் ஓட்டுவது போலவும் யானை இழுத்துச்செல்வது போலவும் செதுக்கப்பட்டுள்ளது இத்தேரினுள் உற்சவச்சண்முகர், வள்ளி, தெய்வயானை

## இரத்தினகிரி பாலமுருகன் கோயில்




இராசகோபுரம்




மூலவர்கள் பாலமுருகன், வள்ளி, தெய்வயானை

## இரத்தினகிரி பாலமுருகன் கோயில்



கருவறை மாதிரி வடிவம்



அடிவார முகப்பு

ஆகியோர் திருவுருவங்கள் எழுந்தருளியுள்ளன.

சுப்பிரமணியர் கோயிலின் கீழ் ஒரு பாறையிலுள்ள, ஈசுவர ஆண்டு பங்குனி மாதக் கல்வெட்டு, கீழ்மின்னல் குளத்தின் கரையைப் பராமரிப்பதற்காக அக்குளத்தின் மீன்பிடிப்புக் குத்தகையிலிருந்து மகாமண்டலேசுவர மல்லப்பதேவ மகாராயர் அடைந்த தொகை நன்கொடையாக அளிக்கப்பட்டதைப் பதிவு செய்கிறது. (34/1933_34)

இக்கோயில் ஒரு சென்ட் நிலப்பரப்பில் இருந்ததாகவும் ஒரு காலப் பூசை நடைபெற்றதாகவும் ஆடிக்கிருத்திகை, கந்தர்சஷ்டி ஆகிய நாள்கள் கொண்டாடப் பெற்று வந்ததாகவும் இக்கோயிலுக்கு 2 ஏக்கர் நன்செய் நிலமும் 3 ஏக்கர் புன்செய் நிலமும் மயில் வாகனம் ஒன்றும் இருந்ததாகவும் 1968_ஆம் ஆண்டு மக்கள்தொகை (சென்சஸ்) நூலில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இந்நிலைமை மாறிக் கோயில் சிதைந்த நிலையிலிருந்தது. இதன்பின்னர் சச்சிதானந்தம் என்னும் பாலமுருகனடிமை சுவாமிகள் 1968_ஆம் ஆண்டில் தொடங்கிய திட்டத்தின்படி, கோயிலுக்குப் பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சமுதாயத்திற்காக முதலாவதாகத் திருமுருகன் திருமணக் கூடம் 1971_ஆம் ஆண்டிலும், இரண்டாவதாக சுவாமி திருமணமண்டபம் 1980_ஆம் ஆண்டிலும், திருமதி செகதாம்பாள், சண்முக முதலியார் திருமணமண்டபம் 1981_ஆம் ஆண்டிலும் கட்டிமுடிக்கப்பட்டன. இத்திருமண மண்டபங்கள் மிகக் குறைந்த வாடகைகளுக்கு விடப்படுகின்றன.

பாலாற்றிலிருந்து குடிநீர் மலைக்குக் கொண்டு வரப்படுகிறது. பாலாற்றிலிருந்து நிலத்தினடியில் குழாய்கள் மூலம் வருகின்ற நீர் மேனிலைத் தொட்டியில் தேக்கப்படுகிறது. அங்கிருந்து ஊர் முழுமைக்கும் தூயகுடிநீர் வழங்கப்படுகிறது. கோயில் பணியாளருக்காகக் குடியிருப்பு இல்லங்கள் அமைக்கப்பட்டுக் குறைந்த வாடகைகளில் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

அரசாங்க ஆணையின்பேரில் வாலாசா வட்டம் கீழ்மின்னல் கிராமத்தில் 119/2 எண்ணில் ஊரக மருத்துவமனை நடத்தப்படுகிறது. இதைப் பாலமுருகனடிமை சுவாமிகள் நடத்துகிறார். 19_8_87_ஆம் ஆண்டு முதல் இரத்தினகிரியில் குழந்தைகளுக்காகத் தொடக்கப்பள்ளி (நர்சரி) நடத்தப்படுகிறது. ஊரக மருத்துவமனையில் 20 படுக்கை வசதிகள் கொண்ட மகப்பேறு மருத்துவமனை சிறப்பாக நடைபெற்றுவருகிறது. சித்த மருத்துவ மனை ஒன்றும் இரத்தினகிரியில் 1978_ஆம் ஆண்டு முதல் இயங்கிவருகிறது. ஊனமுற்ற குழந்தைகளுக்கு முடநீக்குக் கருவிகள் வழங்கப்படுகின்றன. இப்பணி 30_12_81_ஆம் நாள் முதல் நடைபெற்றுவருகிறது.

திருமணம் செய்துகொள்ள வயதும் வாய்ப்பும் பெற்றிருந்தும் திருமணம் செய்துகொள்ள இயலாதவர்களுக்கு இலவசத் திருமணம் செய்துவைக்கப்படுகிறது. அப்போது அவர்களுக்குப் புத்தாடை, மாலை, மாங்கல்யம் முதலியவை அளிக்கப்படுகின்றன. இவ்வாறு சமூகப்பணி இங்குச் சிறப்பாகப் பல வகைகளில் நடைபெற்றுவருகிறது.

இங்கு நான்கு காலப்பூசை சோழியப்பிராமணரால் நடைபெறுகிறது. கிருத்திகைகள், சஷ்டி, கார்த்திகை விளக்கீடு முதலிய நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன. இரத்தினகிரியில் தமிழ்வழிபாட்டு முறையை நடைமுறைப்படுத்திய பெருமை பாலமுருகனடிமை சுவாமிகளையே சாரும். இதற்காக நூல் வெளியீட்டகம் ஒன்றுள்ளது.

இக்கோயிலுக்கு வடபுறத்தில் தங்கரதம் உள்ளது. குறிப்பிட்ட நாள்களில் தங்கத்தேர் உலாவரும். இங்கு வெள்ளி மயில், வெள்ளி இடபம், வெள்ளி மூஷிகம் ஆகிய வாகனங்கள் உள்ளன. இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் நிருவாக அலுவலர் கட்டுப்பாட்டிலுள்ளது.

## உக்கல்

# புவனமாணிக்கப் பெருமாள் கோயில்

காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி செல்லும் பாதையில், காஞ்சியிலிருந்து 22 கிலோமீட்டர்த் தொலைவில் செய்யாறு வட்டத்தில் உள்ள உக்கல் என்னும் கிராமத்தில் புவனமாணிக்கப் பெருமாள் கோயில் உள்ளது. இதில் திருவுருவங்கள் இல்லை. இஃது அழிந்த நிலையில் உள்ளது எனினும் இங்கே கிணறு ஒன்று உள்ளது. இஃது இராசராசன் கிணறு என்னும் பெயரில் வழங்கிவருகிறது. இப்போது இத்திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கல்வெட்டில் இவ்வூர்ப் பெயர் புவனமாணிக்க விட்டுணுகிரகம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இராசராசன் கல்வெட்டு இங்குள்ள இறைவனை நம்மாழ்வார் பிரபந்தத்தின் பெயரில் திருவாய்மொழித்தேவர் எனக் குறிக்கிறது. பல்லவர் காலத்தில் இக்கிராமம் உட்கர் எனக் குறிப்பிடப்பட்டது. இது தொண்டை மண்டலம் என்னும் ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் காலியூர்க் கோட்டத்துப் பாகூர் நாட்டு உக்கல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருமாள் கோயிலின் வடக்குச் சுவரிலுள்ள முதலாம் பராந்தகனின் தந்தையாகிய முதலாம் ஆதித்தனாகக் கருதப்பெறும் சோழமன்னன் கோராசகேசரிவர்மன் 23-ஆம் ஆண்டுக் கல்வெட்டு 200 கழஞ்சிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து பன்னிரண்டு பிராமண அறிஞர்களுக்கு உணவிடுவதற்காக அத்தொகையைக் கிராமச் சபையிடம் பிரமாதிராசன் என்பவன் அளித்ததைக் கூறுகிறது.

இக் கோயிலின் வடக்குச் சுவரிலும் மேற்குச் சுவரிலுமுள்ள முதலாம்

சோழமன்னர் கோராசராசகேசரிவர்மன் 13-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, சோழநாட்டில் வாழ்ந்து வந்த ஒருவர் 550 குழிநிலத்தை விலைக்கு வாங்கி அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து நான்கு நாழி அரிசி நாள்தோறும் வழங்கப்படுவதற்காக அந்நிலத்தை ஊர்ச்சபைக்கு அளித்ததைக் குறிக்கிறது.[2]

மேற்குச் சுவரிலுள்ள சோழமன்னன் கோராசராசகேசரிவர்மன் பதினான்காம் ஆண்டுக் 'கல்வெட்டு, சோழநாட்டில் வாழ்ந்தவர் ஒருவர் இரண்டு நிலங்களுள் ஒன்றைத் தனிப்பட்டவரிடமிருந்தும் மற்றதை ஊர்ச்சபையிடமிருந்தும் விலைக்கு வாங்கி, நந்தவனம் பராமரிக்கப்பட ஊர்ச்சபையிடம் ஒப்புவித்ததைக் கூறுகிறது.[3]

இக்கோயிலின் மேற்குச் சுவரிலுள்ள முதலாம் இராசராசன் என்கிற சோழமன்னன் கோ ராசகேசரிவர்மன் இருபத்தொன்பதாம் ஆண்டுக் கல்வெட்டு உக்கலுக்கு அருகில் ஒருவர் கிணறு ஒன்று தோண்டி அதற்கு அம்மன்னனின் பெயரிட்டு, அதற்கு அருகில் ஒரு பந்தல் அமைத்து அந்நீரை வழங்குபவருக்கு ஒரு தொகை அளித்ததைக் கூறுகிறது.[4]

இக்கோயிலின் தெற்குச் சுவரிலுள்ள சோழமன்னன் முதலாம் இராசகேசரிவர்மன் கோ ராசராசன் பதினேழாம் ஆண்டுக் கல்வெட்டு உள்ளூர் அய்யனார் (மகாசாஸ்தா) கோயிலுக்கு அரிசியும் எண்ணெயும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ததைக் குறிக்கிறது. பிடாரி கோயிலுக்கு வெளியில் வெற்றிலை விற்பவருக்கு ஒரு கழஞ்சு தண்டம் விதித்து அதை ஏரிக் கரைக்காகப் பயன்படுத்த ஏரிமேற்பார்வைக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[5]

தெற்குச் சுவரிலுள்ள கம்பவர்மன் பத்தாம் ஆண்டுக் கல்வெட்டு நாள்தோறும் சடையன் என்பவர் ஊர்ச்சபைக்கு 400 காடி நெல் அளித்து அதன் வட்டி 100 காடியிலிருந்து பிராமணர் இருவருக்கு உணவிடுவதற்காக ஏற்பாடு செய்ததைக் குறிக்கிறது.[6]

தெற்குச் சுவரிலுள்ள இராட்டிரக்கூடக் கன்னரதேவன் (மூன்றாம் கிருஷ்ணன்) 16-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, சில நிபந்தனைகளுக்கு உட்படுத்தித் தனிப்பட்டவர் சிலர் ஊர்ச்சபையிலிருந்து நிலங்கள் சிலவற்றை விலைக்கு வாங்கியதைக் குறிக்கிறது.[7]

இக்கோயிலிலுள்ள தெற்குச் சுவரில் கம்பவர்மன் 15-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, சடையன் என்பவர் ஊர்ச்சபைக்கு 1000 காடி நெல் அளித்ததையும் ஊர்ச்சபை ஒவ்வோர் [8] ஆண்டும் கோயிலுக்கு 500 காடி நெல் அளிக்க ஒப்புக்கொண்டதையும் குறிக்கிறது.

இதே கோயிலின் இதே மண்டபத்தின் வடக்குச் சுவரிலுள்ள முதலாம் இராசேந்திரசோழமன்னன் கோபரகேசரிவர்மன் நான்காம் ஆண்டுக் கல்வெட்டு 3000 குழி நிலத்தையும் 5 தண்ணீர் இறைப்புகளையும் ஊர்ச்சபை, மன்னரின் பணியாளருக்கு அளித்ததையும் அவர் அவற்றைக் கிராம ஏரியில் இரண்டு

படகுகளைப் பராமரிப்பதற்காக அளித்ததையும் குறிக்கிறது.[9]

இக்கோயில் மண்டபத்தின் வடக்குச் சுவரிலுள்ள சோழமன்னன் கோபரகேசரிவர்மன் பதினாறாம் ஆண்டுக் கல்வெட்டு மேலாளர் சக்கர பாணி நம்பியின் கோரிக்கையின் பேரில் ஊர்ச்சபை நிலக்கொடை வழங்கியதைக் குறிக்கிறது[10]

இதே கோயிலின் இதே மண்டபத்தின் வடக்குச் சுவரிலுள்ள சோழமன்னன் கோஇராசராசகேசரிவர்மன் என்கிற இராசராசதேவன் 1, 24_ஆம் ஆண்டுக் கல்வெட்டு சோழ, பாண்டிய, தொண்டை மண்டல நாடுகளின் கிராமங்களில் பிராமணர்கள், வைகானசர்கள், சமணர்கள் ஆகியோர்களிடமுள்ள நிலங்களுக்குரிய நிலத்தீர்வை செலுத்தத் தவறியவர்களின் (நிலங்களுக்குரிய தீர்வை இரண்டு முழு ஆண்டுகளுக்குச் செலுத்தப்படாமலிருந்தால்) நிலங்களைக் கிராமத்தார் கைப்பற்றி அவற்றை விற்க அதிகாரம் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. அரசுச் செயலாளரும் குறிக்கப்பெறுகிறார்.[11]

இதே மண்டபத்தின் மேற்குச் சுவரில் சோழமன்னன் மதுரைகொண்ட கோபரகேசரிவர்மன் (முதலாம் பராந்தகன்) முப்பத்தேழாம் ஆண்டுக் கல்வெட்டு ஏரிகள், தோட்டங்கள் ஆகியவற்றைப் பொதுமேற்பார்வை செய்யும் கிராமக்குழுக்களைக் குறிப்பிடுகிறது.[12]

இம் மண்டபத்தின் தெற்குச் சுவரிலுள்ள சோழமன்னன் கோராசகேசரிவர்மன் பதினேழாம் ஆண்டுக் கல்வெட்டு காணப்படுகிறது.[13]

இம் மண்டபத்தின் தெற்குச் சுவரிலுள்ள சோழமன்னன் கோபரகேசரிவர்மன் நான்காம் ஆண்டுக் கல்வெட்டு இம்மன்னன் வீரபாண்டியனை ஒழித்தவன் எனக் கூறப்பட்டுள்ளதால் இவன் முதலாம் இராசராசசோழன் தமையனாக இருக்கக்கூடும் என்னும் கருத்துள்ளது[14]

பெருமாள் கோயிலின் முன்புறமுள்ள சிதைந்த மண்டபத்தில் பிரிக்கப்பட்டுள்ள கல்லில், திரிபுவனச்சக்கரவர்த்தி விசயகண்ட கோபாலன் 28_ஆம் ஆண்டுக் கல்வெட்டு காணப்படுகிறது.[15]

---

(1. 19/1893; 2. 20/1893; 3. 21/1893; 4. 22/1893; 5.23/1893; 6. 24/1893; 7. 25/1893; 8. 26/1893; 9. 27/1893; 10. 28/1893; 11. 29/1893; 12. 30/1893; 13. 31/1893; 14. 32/1893; 15. 33/ 1893.)

## உக்கல்

# வைத்தியநாதசுவாமி கோயில்

இக்கோயில் காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி செல்லும் பாதையில், காஞ்சிபுரத்திலிருந்து 22 கிலோமீட்டர்த் தொலைவில், செய்யாறு வட்டத்தில் தெற்கு நோக்கியவாறு 69மீட்டர் நீளமும் 23 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் உள்ளது.

கோயிலின் உள்ளே, இடப்பக்கத்து வாயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. முன்பக்கம் மூன்று மண்டபங்களுக்கு அடுத்துக் கருவறையும் உள்ளது. இதன் முன்புறம் இடப்பக்கம் விநாயகர் சந்நிதியும் வலப்பக்கம் முருகர் சந்நிதியும் உள்ளன. முருகர் சந்நிதியில் ஆறுமுகம் கொண்ட முருகர் திருவுருவம்/ மயில்வாகனம், சேவல், வேல் ஆகியவற்றுடன் இருப்பதைக் காண்கிறோம். கருவறையைச் சுற்றிக் கோட்டத்தெய்வங்களாகத் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகியோரையும் மேற்கில் திருமாலையும் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோரையும் காணலாம். எதிரில் சண்டேசுவரர் தெற்கு நோக்கியவாறு ஒரு சந்நிதியில் உள்ளார். கருவறையின்முன் துவாரபாலகர் இருவர் உள்ளனர்.

கோயிலின் உள்ளே கருவறைக்கு இடப்பக்கம் அம்மன் சந்நிதி தெற்கு நோக்கி அமைந்துள்ளது. அம்மன் சிலைக்குப் பின்புறச் சுவரில் கல்விளக்கு ஒன்று உள்ளது.

தீர்த்தக்குளம் 23 மீட்டர்ச் சதுரவடிவில் நன்னிலைமையில் உள்ளது. இக்கோயிலுக்கு ஒரு வெளிப் பிரகாரம் உள்ளது. இப்பிரகாரம் ஒருபுறம் 68 மீட்டர் அளவும் மறுபுறம் 23 மீட்டர் அளவும் கொண்டுள்ளது.

கருவறைக்கு முன்னுள்ள உள்மண்டபத்தில் 16 தூண்கள் உள்ளன. இதனால் இது பதினாறு கால் மண்டபமென அழைக்கப்படுகிறது. அம்மன் சந்நிதி முன் 12 தூண்களைக் கொண்ட மண்டபம் ஒன்றும் உள்ளது.

புடைச்சிற்பங்கள் தூண்களில் உள்ளன. அவை சுண்ணாம்பு பூசப்பட்டு மூடப்பட்டுள்ளன.

திருக்கோயிலின் கருவறையைச் சுற்றியுள்ள கற்களில் 15 கல்வெட்டுகள் உள்ளன. இங்கே இருகாலப்பூசை நடைபெற்றுவருகிறது.

இந்து சமய அறநிலையத்துறையினரால் நிருவாகம் செய்யப்படுகிறது.

கோயிலுக்குச் சொந்தமாக 4.02 ஏக்கர் நன்செய் நிலமும் 2.75 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டுவருமானம் 1,000/- உருபாயாகும்.

இடபம், குதிரை, சிங்கம், சூரியபிறை, சந்திரபிரபை போன்ற வாகனங்கள் உள்ளன. இடப வாகனத்தின் அமைப்பு திருவண்ணாமலைப் பெரிய கோயில் இடப வாகனத்தைப் போன்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உளுந்தை

# அகத்தீசுவரர் கோயில்

இக்கோயில் வந்தவாசி வட்டம், உளுந்தையின் வடகிழக்கில் ஓர் ஏக்கர்ப் பரப்பில் தெற்கு நோக்கிய நுழைவாயிலுடன் அமைந்துள்ளது.

அகத்தியர் பூசித்ததால் இப்பெயர் உண்டாயிற்றென்பர்.

தெற்கு நோக்கிய வாயிலின் வழியாக உட்சென்றால் சுற்றுப்பிரகாரத்தை அடைகிறோம். இதில் வலம் வரும்போது கிழக்குப் பிரகாரத்தில் கொடிமரம், பலிபீடம், நந்தி சந்நிதி ஆகியவற்றைக் காண்கிறோம். தெற்கு நோக்கியவாறுள்ள உள்வாயிலைக் கடந்து கிழக்கு நோக்கிய கருவறையில் சிவலிங்கத் திருமேனியாக அகத்தீசுவரர் எழுந்தருளியுள்ளார். முன்மண்டபத்தில் சோமாசுகந்தர், தனியம்மன், வள்ளி தெய்வானையுடன் முருகப்பெருமான், சண்டேசுவரர், விநாயகர் ஆகியோர் உலாத்திருமேனிகளாக எழுந்தருளியுள்ளனர்.

இங்குள்ள அத்திரதேவர் உலாப் படிமம் சிற்ப அழகு வாய்ந்தது. அதன் மூவிலைச் சூலத்தின் நடுப்பகுதியில் அர்த்தநாரீசுவரர் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

மகாமண்டபத்தை ஒட்டி வடக்கில் தெற்கு நோக்கியவாறு காமாட்சியம்மன் சந்நிதி அமைந்துள்ளது. அதில் அம்பிகை நான்கு கரங்களுடன் நின்றவாறு காட்சியளிக்கின்றாள்.

கோட்டங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோரும் கோமுகிக்கருகில் சண்டேசுவரரும் உள்ளனர். மகாமண்டபத்தின் உட்புறம் சூரியன், வயிரவர் ஆகியோர் அமைந்துள்ளனர்.

இக்கோயிலில் சுவாமி, அம்மன் ஆகியோர் சந்நிதிகளுக்கு

முன்மண்டபங்களும் இவை இரண்டிற்கும் பொதுவான மகாமண்டபமும் உள்ளன. கருவறை மீது சதுர வடிவில் இரண்டு நிலைகள் கொண்ட வட்டச் சிகரத்துடன் விமானம் அமைந்துள்ளது.

கருவறையின் உட்பீடத்தில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை படியெடுக்கப்படவில்லை.

நாள்தோறும் குருக்கள் இங்கு இருவேளைகள் பூசை செய்துவருகிறார். தனியார் ஒருவர் நிருவாகத்தின் கீழ் இக்கோயில் இருந்து வருகிறது. இக்கோயிலுக்கு 6 ஏக்கர் நன்செய் நிலமும் 4 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. பங்குனி உத்திர விழா நடைபெறுகிறது.

## உளுந்தை

# கரியமாணிக்கப் பெருமாள் கோயில்

சோத்துப்பாக்கம் — வந்தவாசிப் பாதையில் உள்ள சாலவேடு கிராமத்திற்கு மேற்கே 3 கிலோமீட்டர்த் தொலைவில் ஊரின் தொடக்கத்தில் 40 செண்ட் பரப்பில் இக்கோயில் அமைந்துள்ளது.

ஒளிவடிவமாகி நின்ற எந்தையின் கோயில் இருப்பதனால் ஒளியெந்தை என்பது ஒளிந்தையாகி பின்னர் உளுந்தையானதென்பர்.

உளுந்து விளைந்த பூமி என்னும் பொருளில் உளுந்தை என்பது வழங்கி வருவதாகவும் கூறுவர்.

காடாறு மாதம் நாடாறு மாதம் ஆட்சி நடத்தி வந்த விக்கிரமாதித்தன் இங்கு வந்தபோது ஒரு மரத்திலிருந்த கிளிகள் மரப்பொந்திலிருந்த திருமாலின் வடிவினைப் பற்றிக் கூற அதனையடுத்துக் கோயில் கட்டினான் என்று கூறுவர்.

கிழக்கு நோக்கிய வாயிலின் வழியாக உட்செல்வோமெனில், பலிபீடத்தையும் கருடர் சந்நிதியையும் காண்கிறோம். பிரகாரத்தை வலம் வந்து உட்செல்வோமெனில், கருவறையில் உபய நாச்சிமார்களுடன் நின்றவாறு கரியமாணிக்கப் பெருமாள் காட்சியளிக்கின்றார். முன்புறம் உள்ள பீடத்தில் கரியமாணிக்கப் பெருமாள் உபய நாச்சிமார்களுடன் உலாத்திருமேனியாகவும் எழுந்தருளியுள்ளார். அருகில் சாளக்கிராமம் உள்ளது. கருவறையின் வடபுறமும்

தென்புறமும் இரு சந்நிதிகள் உள்ளன. வலப்புற அறையில் ஆண்டாள் திருவுருவம் உள்ளது. இவ்வடிவம் வனப்புடன் அமைந்துள்ளது. வழக்கமாக வலக்கையில் அமைய வேண்டிய கிளி இத்திருவுருவத்தின் இடத்தோளில் உள்ளது.

தென்புற அறையில் திருமகளான அமிர்தவல்லித் தாயார் அமர்ந்துள்ளாள். ஆண்டாள், தாயார் ஆகியோர் சந்நிதிகளில் அவர்களின் உலாத்திருமேனிகளும் உள்ளன.

கருவறை மீது சதுரமான அடிப்படையுடன் வட்டச் சிகரமும் ஒற்றைக் கலசமும் கொண்ட விமானம் உள்ளது.

நாள்தோறும் இருகாலப்பூசை தென்கலைப் பாஞ்சராத்திர முறைப்படி நடைபெறுகிறது. ஆண்டுதோறும் கோகுலாட்டமி, ஆழ்வார் திருநாள்களில் சாற்றுமறை, மார்கழித் திருநாள்கள் ஆகியவை கொண்டாடப்பெறுகின்றன. வைணவர்கள் பலர் இங்கு வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் திருக்கோயிலுக்குக் கூட்டமாக வந்து வழிபாடாற்றுகின்றனர்.

கருட வாகனம் ஒன்றுள்ளது. இக்கோயிலுக்கு 60 செண்ட் நன்செய் நிலம் உள்ளது. அறங்காவலர் ஒருவரின் கீழ் நிருவாகம் உள்ளது.

## எலத்தூர்

# கரைகண்டேசுவரர் கோயில்

இக்கோயில் போளூர் வட்டத்தில் கலசப்பாக்கம் இருப்புப்பாதை நிலையத்திற்கு 8 கிலோமீட்டர்த் தொலைவில் சேயாற்றின் வடகரையில் உள்ள எலத்தூரின் நடுவில் 3 செண்ட் பரப்பில் தெற்கு நோக்கிய வாயிலையும் கிழக்கு நோக்கிய கருவறையையும் கொண்டுள்ளது.

இளஆத்தூர் என்னும் பெயர் எளத்தூர் ஆகி எலத்தூர் எனத் திரிபெய்திற்று என்பர். முருகன் பூசித்த கரைகண்டேசுவரர் தலங்களில் இஃது ஐந்தாவது தலமாகும்.

தெற்குவாயிலின் மேற்கில் விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. வாயிலின் வழியே உட்சென்றதும் வெளிப்பிரகாரத்தின் தென்மேற்கில் விநாயகர் சந்நிதியும் நடுவில் வள்ளி தெய்வயானையுடன் முருகன் சந்நிதியும் வடமேற்கில் பெரியநாயகி சந்நிதியும் வடகிழக்கில் நவக்கோள் சந்நிதியும் கிழக்கில் சூரியன்

திருவுருவமும் உள்ளன. கிழக்கில் கருவறையை நோக்கியவாறு நந்திதேவர் சந்நிதியும் பலிபீடமும் உள்ளன.

உள்வாயிலின் கிழக்கில் தெற்கு நோக்கியவாறு வயிரவர் உள்ளார். கருவறையில் கரைகண்டேசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ளார். முன்மண்டபத்தில் விநாயகர், சண்டேசுவரர், சோமாசுகந்தர், நடராசர், சிவகாமி, பிட்சாடனர், நால்வர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, அத்திரதேவர் ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன.

சுவாமி சந்நிதி மீது இரண்டு நிலைச் சதுர வடிவ விமானம் அமைந்துள்ளது. தெற்கு வாயில் முகப்பில் அழகிய சோமாசுகந்தரின் சுதை வடிவம் உள்ளது. கருவறைக்கு முன்னர் அர்த்தமண்டபமும் மகாமண்டபமும் உள்ளன.

ஒருகாலப் பூசை மட்டுமே நடைபெறுகிறது. ஊர்ப்பொறுப்பில் நிருவாகம் இயங்கிவருகிறது. ஐப்பசி மாதத்தில் நடைபெறும் கந்தர்சஷ்டியில் ஐந்தாம் நாள் வேல்வாங்கும் பொருட்டு மோட்டூர் (எலத்தூர்) சிவசுப்பிரமணியசுவாமி இங்கு எழுந்தருள்வார். அவ்வாறே சித்திரை மாத ஆற்று உற்சவத்தின் (ஊறல் விழாவின்போது) போதும் இங்கு எழுந்தருளி இறைவனைப் பூசை செய்கிறார்.

இக்கோயிலில் பங்குனி உத்திர நாளில் திருமண விழா மூன்று நாள்கள் மிக்கச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

### எறையூர்

## இலட்சுமி நாராயணசுவாமி கோயில்

இக்கோயில் திருவண்ணாமலையிலிருந்து செங்கம் சாலையில் எறையூர்க் கூட்டுச் சாலைக்கு வடக்கே ஒரு கிலோமீட்டர்த் தொலைவில் எறையூரின் வடமேற்கில் 5 செண்ட் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இறைவன் எழுந்தருளிய ஊர் இறைவனூர் என வழங்கிவந்தது. பின்னர் இப்பெயர் இறையூர் எனத் திரிபெய்தியது.

கிழக்கு நோக்கிய வாயிலின் முன்புறம் கருடத்தம்பம் உள்ளது. கருவறையில் இலக்குமிதேவியை மடியில் இருத்தியவண்ணம் சங்கு, சக்கரம் ஏந்தி அபயம் தந்து

வரம் அளிக்கிறார் இலட்சுமிநாராயணர். இவருக்கு அருகில் இரண்டு கைகளுடன் மடியில் சீதேவியை அமர்த்திக்கொண்டு அபயம் அளிக்கும் முறையில் இவரது மற்றொரு திருவுருவம் உள்ளது. உற்சவர் இலட்சுமி நாராயணர் உபய நாச்சிமார்களுடன் நின்றவாறு காட்சியளிக்கின்றார். சிறு நர்த்தன கண்ணனின் திருவுருவம் இங்குள்ளது. கருவறை மீது வட்டவடிவ விமானம் உள்ளது.

இவ்வூர் ஏரியுள் 1 மீட்டர் நீளமும் 2 மீட்டர் அகலமும் கொண்ட சோழர்காலக் கல்வெட்டொன்று உள்ளது.

இக்கோயிலில் தென்கலை பட்டாச்சாரியர் மரபினரால் நாள்தோறும் ஒரு காலப் பூசை செய்யப்பெறுகிறது. இக்கோயிலில் நவராத்திரியின்போது 10 நாள்கள் விழாவும் தசமியன்று அம்புவிடும் விழாவும் நடைபெறுகின்றன. காணும் பொங்கல், வைகுண்ட ஏகாதசி, ஸ்ரீஜெயந்தி ஆகிய நாள்களில் சிறப்புத் திருமஞ்சனங்களும் திருவீதி உலாக்களும் நடைபெறுகின்றன.

இக்கோயில் 11 ஏக்கர் நிலம் பெற்றுள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 2,195 உருபாயாகும். இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலையத்துறை அறங்காவலரிடம் உள்ளது.

### ஒடுக்கத்தூர்

## சப்தரிஷீசுவரர் கோயில்

இக்கோயில் இராணிப்பேட்டை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 10 கிலோமீட்டர்த் தொலைவிலும் வேலூருக்கு மேற்கே 16 கிலோமீட்டர்த் தொலைவிலும் 10 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

'கலிகாலம் இறுதி அடையும்போது பொய், களவு, காமம் முதலிய தீயவையெல்லாம் மிகும். இத்தகைய காலத்தில் மக்களோடு வாழ்ந்து அவர்களைச் சீர்திருத்த இயலாது; அவர்களோடு சேர்ந்து வாழ்தலால் தங்களது தூய்மையும் கெடும்' என்னும் கருத்தில் ஞானியர் தம்மை ஒடுக்கிக்கொண்டார்கள். இவ்வாறு அவர்கள் ஒடுங்கியது சிவலிங்கமாக அமைந்தது. ஒடுங்கிய இச்சிவலிங்கம் கொண்ட கோயில் சப்தரிஷீசுவரர் கோயிலாக விளங்குகிறது.

கோயிலின் கிழக்கு வாயிலின் வழியாக உள்ளே கோயில் பிரகாரத்தை வலம் வரும் வழியில் தெற்குப் பிரகாரத்தில் ஐயனார் திருவுருவமும் இதனையடுத்து,

வீரபத்திரர் திருவுருவமும் அடுத்து சப்தமாதர் சிற்பமும் காணப்படுகின்றன. மேற்குப் பிரகாரத்தில் வில்வ மரத்தடியில் நாகர் திருவுருவமும் அடுத்து விநாயகர், ஐயப்பன், பஞ்சமாதா, வள்ளி தெய்வயானையுடன் முருகப்பெருமான் ஆகியோர் சந்நிதிகளும் கிழக்கு நோக்கியுள்ளன.

தென்கிழக்குக் கோடியில் வயிரவர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. கருவறையின் சுவர் மாடங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் தனிச்சந்நிதியில் வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுவரர் திருவுருவமும் உள்ளன.

கருவறையின் வாயிலுக்குச் சற்றுக் கிழக்கில் தென்புறத்தில் விநாயகர் திருவுருவம் வடக்கு நோக்கியவாறுள்ளது. கருவறையின் வாயிலில் இருபுறங்களிலும் துவாரபாலகர்கள் திருவுருவங்கள் உள்ளன.

கருவறையில் சப்தரிஷீசுவரர் சிவலிங்கம் கிழக்கு நோக்கியவாறு அருள்புரியும் நிலையில் உள்ளது. வடக்குப் பகுதியில் அபிதகுஜாம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியவாறு இருக்கின்றது. இச்சந்நிதிக்குக் கிழக்கில் வயிரவர் சந்நிதி இருக்கின்றது.

சந்திரசேகரர் உற்சவத்திருமேனி மட்டும் உள்ளது.

கிழக்குப் பிரகாரத்தில் நவக்கிரகங்களின் சந்நிதிக்கு எதிரில் தீர்த்தக்கிணறு உள்ளது.

சப்தரிஷீசுவரர் கருவறை மீது சதுரத்தில் தொடங்கி வட்ட வடிவமான சிகரங்கள் கொண்ட விமானமும் அம்பிகை சந்நிதி மீது இரண்டு நிலைகள் கொண்ட சாலஹார விமானமும் உள்ளன.

இக்கோயிலுக்கு முன்மண்டபம் மகாமண்டபம் ஆகிய மண்டபங்கள் உள்ளன. நுழைவாயில் மீது வளைவில் இடபாரூடர் சிற்பம் உள்ளது.

புரோகித அந்தணர் ஒருவர் இக்கோயிலில் பூசை செய்து வருகிறார். கார்த்திகை விளக்கீடு, திருவாதிரை, தைப்பொங்கல் ஆகியவை கொண்டாடப் பெறுகின்றன.

இக்கோயிலுக்கு 6 1/2 ஏக்கர் நிலம் உள்ளது. இக்கோயில் நிருவாகம் ஊர்ப்பொதுவில் இயங்கிவருகிறது.

## ஓச்சேரி

# சுயம்புநாதர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் – வாலாசாப்பேட்டை வழியில் காஞ்சிபுரத்திலிருந்து 22 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள ஓச்சேரி கிராமத்தின் வடக்கில் கிழக்கு நோக்கியவாறு 10 செண்ட் பரப்பில் அமைந்துள்ளது.

இங்கு, சுவாமி சுயம்பு வடிவாக எழுந்தருளியுள்ளார் என்பதாகவும் தற்போது சுயம்புமூர்த்தி மீது இலிங்கவடிவக் கல் கவசம் இடம்பெற்றதாகவும் சிலர் கூறுகின்றனர்.

வயிற்றுவலியால் துன்பப்பட்ட இராகூப் என்பவர் நாவல்மரத்தின் அருகில் இக்கோயிலைக் கட்டியதாகவும் பின்னர் அவர் வலி நீங்கப் பெற்றதாகவும் சிலர் கூறுகின்றனர்.

தெற்குப்புறம் அமைந்துள்ள வாயிலின் வழியாகக் கோயிலினுள் சென்றால், கிழக்கு வெளிப்பிரகாரத்தில் பலிபீடம், கொடிமரம், நந்திதேவர்சந்நிதி ஆகியவற்றைக் காணலாம். மூலவர் சுயம்புநாதரை நோக்கியவாறு மேற்கு முகமாக நந்திதேவர் காணப்படுகிறார். அடுத்து உட்புறம் மற்றொரு நந்திதேவர் திருவுருவமும் உள்ளது.

கருவறையின் முன் அருணகிரிநாதர் திருவுருவமும் விநாயகர் திருவுருவமும் கிழக்கு நோக்கி உள்ளன. கருவறையின் முன் இடப்புறம் ஆறுமுகப் பெருமான் கிழக்கு நோக்கியும் விநாயகர் தெற்கு நோக்கியும் உள்ளனர். அருகில் காமாட்சியம்மன் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. கருவறையில் சுயம்புநாதீசுவரர் சிவலிங்கவடிவில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். சந்திரசேகரர், அம்பிகை ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன.

கருவறை மீது மூன்று நிலைகளைக் கொண்ட விமானம் உள்ளது. இதன் கிரீவப் பகுதியில் முனிவர்களின் உருவங்கள் சில அமைந்துள்ளன.

இக்கோயிலில் ஒரு காலப்பூசை செய்யப்படுகிறது. சிவராத்திரி, காணும் பொங்கல், திருவாதிரை, கார்த்திகை விளக்கீடு ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிருவாக அலுவலர்

கட்டுப்பாட்டில் இருந்துவருகிறது. இக்கோயிலுக்கு 8 ஏக்கர் நன்செய் நிலமும் 3 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 3300 உருபாயாகும்.

இவ்வூரில் ஒரு திருமால் கோயிலும் உள்ளது. இதில் திருமால், சீதேவி, பூதேவி ஆகியோர் கற்சிலைகள் மட்டும் உள்ளன. குறிப்பிட்ட நாள்களில் பூசை நடைபெறுகிறது. இங்கு நரசிம்மருடைய தலையுருவம் மட்டும் உலாத்திருமேனியாக வெளியில் எடுத்துச்செல்லப்படுகிறது.

## கட்டேரி

# கட்டேரியம்மன் கோயில்

இக்கோயில் ஜோலார்பேட்டை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து ஏறத்தாழ 3 கிலோமீட்டர்த் தொலைவில் வடமேற்கே திருப்பத்தூர் — நாட்டறம்பள்ளி சாலையில் 59 எண் நிலஅளவைப் புலத்தில் 3.91 ஏக்கர் பரப்பில் 7 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இங்குக் குடிகொண்டிருக்கும் அம்மன் கட்டேரி அம்மன் என்பதால், இவ்வூருக்குக் கட்டேரி கிராமம் என்னும் பெயர் வழங்கி வருகிறது.

கருவறை விமானம் நன்கு உயர்ந்தோங்கி விளங்குகிறது. மூலத்தானத்தில் ஆதியில் காட்சியளித்த கட்டேரி அம்மனின் வடிவமற்ற ஐந்து கல் விக்கிரகங்கள் உள்ளன. சுதையில் மிக எடுப்பாக அம்மன் கருவறையில் காட்சியளிக்கிறார். மரச்சிலைகளாக நாக கன்னி, கட்டேரி அம்மன், படவேட்டம்மன், பரசுராமர், முத்துமாரி ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. இவை கருவறையில் உள்ள ஆதி திருவுருவங்களையே குறிக்கின்றன எனக் கூறுகின்றனர்.

உற்சவத் திருமேனிகள் மிகச்சிறிய அளவில் உள்ளன. அம்மன் திருமேனியுடன் யானையின் உருவம் ஒன்றும் உள்ளது.

இக்கோயிலின் முன்புறமுள்ள அடர்ந்த வனத்தில் உள்ள கிணற்று நீர் இக்கோயிலுக்குத் தீர்த்தமாகப் பயன்படுத்தப்படுகிறது.

கோயில் மதிற்சுவர் நன்றாக உள்ளது. உள்மண்டபம், கருவறையுடன் வெளிப்பிரகாரத்திற்கும் மதிற்சுவருக்கும் உள்ள இடைவெளி 4.5 மீட்டர் அகலம் கொண்டுள்ளது. வாயில் நுழைவு மண்டபத்தில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது.

இக்கோயிலுக்கு நாள்தோறும் விளக்கு மட்டும் ஏற்றப்படுகிறது. வாரத்தில் வெள்ளிக்கிழமை தோறும் பூசைகள் நடைபெறுகின்றன. இப்பகுதியிலுள்ள 17 கிராமங்களுக்கும் காவல் தெய்வமாக இவ்வம்மன் கருதப்படுகின்றார். ஆண்டுதோறும் ஆடி, ஆவணி மாதங்களில் வெள்ளிக்கிழமைகளில் மிகச் சிறப்பாக பிரமோற்சவம் கொண்டாடப்படுகிறது.

இக்கோயிலின் பூசாரி, திருவிழா ஆரம்பிக்கும் நாளில் அம்மனை அழைப்பார்; பின் கொடியேற்றம் நடைபெறும். கரகம் சப்பரத்தில் வலம்வரும். மறுநாள் மஞ்சள் நீராடுதலுடன் அம்மன் கரகத் திருவிழா நிறைவு பெறும்.

இங்குத் தமிழ் ஆண்டுப்பிறப்பு, கார்த்திகை தீபம் ஆகிய நாள்களிலும் தனுர் மாதம் 30 நாள்களிலும் சிறப்புப் பூசைகள் நிகழ்த்தப்பெறுகின்றன.

முழுத்திருப்பணி செய்யப்பட்டு 10-9-82-இல் குடமுழுக்கு நடைபெற்றது.

இக்கோயில் அமைந்துள்ள 59 எண் நிலஅளவைப் புலத்திலுள்ள இடமும் பூசாரி வீடு உள்ள இடமும் நீங்கலாக மிகுதி இடத்தில் வாரச்சந்தை நடத்தப்படுகிறது. இதில் வரும் வருமானம், உண்டியல் வருமானம், நிலக்குத்தகை வருமானம், திருவிழாச் சுங்க வசூல் வருமானம் ஆகியவை இக்கோயிலுக்குரிய முக்கியமான வருமானங்கள் ஆகும். இக்கோயிலுக்கு மொத்தம் 16.74 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. மொத்த ஆண்டு வருமானம் 10,985 உரூபாயாகும். இக்கோயில் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் மூலம் நியமிக்கப்பட்ட அறங்காவலர்களால் நிருவகிக்கப்படுகின்றது.

### கடலாடி

## இலட்சுமி நாராயணப்பெருமாள் கோயில்

இக்கோயில் கலசப்பாக்கம் போளூர் வட்டம் கடலாடி ஊரின் நடுவில் கிழக்கு நோக்கியவாறு 75 செண்ட் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இக்கோயிலுக்கு வெளியில் கிழக்கே மூலவர் இலட்சுமி நாராயணப் பெருமாளை நோக்கி வழிபடுமாறு சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. அடுத்துக்

கருடத்தம்பம் இருக்கின்றது. கோயிலினுள் மூலவர் சந்நிதியை நோக்கியவாறு கருடர் சந்நிதி மேற்கு நோக்கியவாறு இருக்கின்றது. கோயில் கருவறையில் இலக்குமியை மடியிலிருத்திக் கொண்டு அமர்ந்த நிலையில் கிழக்கு நோக்கியவாறு நாராயணன் காட்சியளிக்கிறார். கருவறை வாயிலின் இடப்புறத்தில் சீதேவி திருவுருவமும் வலப்புறத்தில் மலர் ஏந்தியவண்ணம் கங்கையின் திருவுருவமும் உள்ளன. சற்று வடப்புறத்தில் தாயார் சந்நிதி உள்ளது. அடுத்துக் கிழக்கில் சீனிவாசர், சீதேவி, பூதேவி, தாயார், மணவாளர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

இக்கோயிலின் சந்நிதி மீது ஒரு நிலை வட்டவடிவ விமானம் உள்ளது. சந்நிதிமுன் முகமண்டபம் உள்ளது. இதில் இலிங்கத்தைப் பூசிக்கும் அடியவர் வடிவங்கள், திருமாலின் பல்வேறு வடிவங்கள், கந்தர்வர்கள், கின்னரர் ஆகியோர் திருவுருவங்கள் புருடா மிருகங்களின் உருவங்கள் ஆகியவை செதுக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் ஒரு காலப்பூசை செய்யப்படுகிறது. கிருஷ்ணஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி, நவராத்திரி ஆகிய விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. 22 ஏக்கர் நிலம் உள்ளது.

இக்கோயிலின் மேற்குச்சுவரிலுள்ள சகம் 1458 விஜய ஆண்டு 15-ஆம் நாள் கல்வெட்டு, இக்கோயிலுக்கு நாள்தோறும் ஒரு விளக்கு எரிக்க நெய் வழங்குவதற்கும் கார்த்திகை தீபத்திற்குக் கூடுதல் நெய் வழங்குவதற்கும் உரிய நிபந்தனையின்பேரில் மூன்று ஆடு மேய்ப்பவர் குடும்பங்களைக் கோயில் குடிகளாக நியமித்ததை மாம்பாக்கம் குன்றத்தாரின் சிற்றூராகிய வேங்கடாத்திரி சமுத்திரம் என்கிற கடலாடி மகாசபை குறிக்கிறது.*

---

(* 111/1942_43)

வ.எண்:...855.....
நாள்:...17/5/10...
நூலகம்

## கடலாடி

# கரைகண்டேசுவரர் கோயில்

செங்கம் – போளூர்ச் சாலையில் செங்கத்திலிருந்தும் போளூரிலிருந்தும் 24 கிலோமீட்டர்த் தொலைவில் அமைந்துள்ளது.

கடலில் ஆடி நிற்பது கப்பல். அதுபோல் பெரிய நான்கு ஏரிகளுக்கு இடையே அமைந்துள்ள ஊராதலின், கப்பல்போல இவ்வூர் நிற்பதால் கடலாடி எனப்பட்டது.

கரைகண்டீசுவரர் தலங்களுள் இஃது இரண்டாவதாக உள்ளது. இவ்வூரின்

கிழக்கில் வயல்வெளியின் நடுவே 50 செண்ட் பரப்பில் தெற்கு நோக்கியவாயிலும் கிழக்கு நோக்கிய கருவறையும் கொண்டு கோயில் அமைந்துள்ளது.

தெற்கு வாயிலின் வழியாகக் கோயிலினுள் வலம் வரும்போது பிரகாரத்தின் தென்மேற்குக் கோடியில் விநாயகர் சந்நிதியைக் காணலாம். அடுத்து வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் சந்நிதியைக் காண்கிறோம். வடமேற்குக் கோடியில் பெரிய நாயகி சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. அடுத்து வடகிழக்குப் பகுதியில் பிரமதேவர், சூரியன் சந்நிதி மேற்கு நோக்கியிருக்கின்றது. கிழக்குப் பிரகாரத்தில் மூலவரை நோக்கியவாறு பலிபீடமும் நந்திதேவர் திருவுருவமும் உள்ளன.

கரைகண்டேசுவரர் கருவறை மாடச்சுவர்களில் கிழக்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகியோர் திருவுருவங்களும் மேற்கில் இலிங்கோற்பவர் திருவுருவமும் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் காணப்படுகின்றன. சற்று வடக்கில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. கருவறையின் வாயில்களுள் தென்புறத்தில் விநாயகர் திருவுருவமும் வடபுறத்தில் இரண்டு சிவலிங்கங்களும் உள்ளன. கிழக்குப் பிரகாரத்தின் நந்தி சந்நிதியையடுத்து உட்புறத்திலும் நந்திதேவர் திருவுருவம் மற்றொன்று உள்ளது. கருவறையின் கரைகண்டேசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார்.

கருவறைச் சந்நிதி மீதும் அம்பிகை சந்நிதி மீதும் மூன்று நிலை விமானங்கள் உள்ளன. பரம்பரைக் குருக்களே அறங்காவலராக உள்ளனர். இதில் முறையாகப் பூசை நடைபெறுவதில்லை. 10 ஏக்கர் நிலம் இக்கோயிலுக்குள்ளது.

இக்கோயிலின் உற்சவர் திருமேனிகள் பூசையற்ற நிலையில் வன்னீசர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளன.

## கடலாடி

# வன்னீசுவரர் கோயில்

இக்கோயில் செங்கம் — போளூர்ச் சாலையில் அமைந்துள்ளது. செங்கத்திலிருந்தும் போளூரிலிருந்தும் 24 கிலோமீட்டர் தொலைவில் இவ்வூர் உள்ளது.

அக்கினி மலையாக் நின்ற அண்ணாமலையாரின் நினைவாக முருகப்பெருமான் ஏழு சிவலிங்கங்களை நிறுவி வழிபாடாற்றிய கோயில்கள் கரைகண்டீசுவரர் கோயில்கள் எனப் பெயர் பெற்றன. இவ்வாறு சிவலிங்கங்களை நிறுவிப் புரிந்த வேள்விக்காகச் சுப்பிரமணியக் கடவுள் அழைத்த அக்கினி பூசித்த லிங்கம் இதுவாகும். காமாட்சியை நினைவுகூரும் வகையில் முருகப்பெருமான் அவர் திருவுருவத்தையும் இங்கு நிறுவி வழிபட்டார்.

தலவிருட்சம் அரசமரமாகும். இது தெற்குப்பகுதியில் தழைத்து வளர்ந்துள்ளது.

இக்கோயிலின் தெற்கு வாயிலின் வழியாகப் பிரகாரத்தில் வலம் வரும் வழியில் மேற்குப் பிரகாரத்தில் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் சந்நிதியும் அடுத்து வடமேற்குக் கோடியில் காமாட்சி சந்நிதியும் கிழக்கு நோக்கியுள்ளன. காமாட்சி சந்நிதிக்கு நேரெதிரில் இடபத்தின் திருவுருவம் உள்ளது. வடக்குப் பிரகாரத்தின் வடகிழக்குக் கோடியில் நவக்கிரகங்கள் சந்நிதி உள்ளது. மூலவர் சந்நிதியை நோக்கியவாறு பலிபீடமும் நந்திதேவர் சந்நிதியும் உள்ளன. கோயிலின் முகப்பின் தெற்கில் விநாயகர், வடக்கில் திருமுருகன் ஆகியோர்களின் புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

கருவறையின் நுழைவாயிலின் தென்புறம் விநாயகர் திருவுருவமும் வடபுறத்தில் முருகப்பெருமான் திருவுருவமும் உள்ளன. உள்மண்டபத்தின் முகப்பில் கருவறையைத் தொட்டாற்போல் வடபுறத்தில் விநாயகர் திருவுருவமும் வடக்குப்பகுதியில் சுப்பிரமணியர் புடைப்புச் சிற்பத் திருவுருவமும் உள்ளன. வடக்குப்பகுதியில் உற்சவர் திருமேனிகள் உள்ளன. தெற்கில் விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது.

கருவறைக் கோட்டச்சுவர் மாடங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. சந்திரசேகர், தனியம்மன், விநாயகர், சண்டேசுவரர், அத்திரதேவர் ஆகியோரும் கும்பாபிடேகம் செய்யப்படாத நிலையில் சோமாசுகந்தர், தனியம்மன், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, பிரதோட நாயகர் ஆகியோரும் உள்ளனர்.

செய்யாறு இதன் தீர்த்தமாகும். தீர்த்தக்கிணறு வெளிப்பிரகாரத்தின் தென்மேற்குக் கோடியிலுள்ளது.

சுவாமி சந்நிதி, அம்பிகை, சுப்பிரமணியர், விநாயகர் ஆகியோர் சந்நிதிகள் மீது இரு நிலைகளைக் கொண்ட விமானங்கள் உள்ளன. சண்டேசுவரர் சந்நிதிக்குச் சிறுவிமானம் உள்ளது.

இங்குச் சூலத்தில் (அத்திரதேவர்) விடைவாகனத்தில் சுவாமி அம்பாள் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது.

குருக்கள் இருகாலப் பூசை செய்து வருகிறார். பரம்பரை அறங்காவலரே பூசகராக உள்ளார். சித்திரை மாதம் 11 நாள்கள் வசந்த உற்சவம், நவராத்திரி 10

நாள்கள், விநாயகர் சதுர்த்தி, அன்னாபிடேகம், சிவராத்திரி ஆகிய நாள்களில் விழாக்கள் நடைபெறுகின்றன.

இக்கோயிலுக்குச் சொந்தமாக 36 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளன. இடப வாகனங்கள் இரண்டும் பெருச்சாளி வாகனமும் மயில் வாகனமும் உள்ளன.

வன்னீசர் கோயில், கல்வெட்டொன்று[1] இது சகம் 1705 எனத் தொடங்கியதோடு நின்றுவிடுகிறது.

பிரகாரத்திலுள்ள கிணற்றின் அருகிலுள்ள விசயநகரப் பொக்கண்ண உடையார் குமாரர் கம்பண்ண உடையார் சகம் 1291 சௌமிய மீனம் 2 வியாழன் ரேவதி நட்சத்திரம் கல்வெட்டு சிதைந்துள்ளது. ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் பல்குன்றக் கோட்டத்திலுள்ள உட்பிரிவில் சிலவரிகள் தள்ளுபடி செய்ததைக் குறிக்கிறது.[2] (1.109/1942_43; 2. 110/1942_43)

## கரிவேடு

# அரிபிரசாதேசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் வாலாசாப்பேட்டை சாலையில் அரக்கோணத்திலிருந்து 29 கிலோமீட்டர்த் தொலைவில் தெற்கு நோக்கிய வாயிலைக் கொண்டு அமைந்துள்ளது. மூலவர் கிழக்கு நோக்கியவாறு உள்ளார். இக்கோயில் 50 செண்ட் பரப்பில் அமைந்துள்ளது.

கரியன் என்பவர் திருமால்; வேடு என்பது விரும்புதல்; திருமால் விரும்பி இங்கு வழிபட்டுப் பேறு பெற்றதைக் கரிவேடு என்னும் தொடர் தெரிவிக்கிறது. இங்குள்ள இறைவர் அரியாகிய திருமாலுக்கு அருள்புரிந்ததால் இவர் அரிபிரசாதேசுவரர் என்னும் பெயரில் விளங்குகிறார்.

இக்கோயிலின் மேற்கு வெளிப் பிரகாரத்தில் தெற்கில் விநாயகர் சந்நிதியும் வடக்கில் கயிலாசநாதர் சந்நிதியும் உள்ளன. கிழக்கில் நந்திதேவர் திருவுருவம் மேற்கு நோக்கியவாறும் நந்திதேவருக்குத் தெற்கில் சூரியன் திருவுருவம் கிழக்கு நோக்கியவாறும் உள்ளன. கருவறையில் அரிபிரசாதேசுவரர் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். கருவறைக் கோட்டச் சுவர்களில் தெற்கில் தென்முகக் கடவுளும் விநாயகரும் மேற்கில் திருமாலும் வடக்கில் பிரமதேவரும் துர்க்கையும் உள்ளனர்.

துர்க்கையின் அருகில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது.

கருவறையின் முன்னுள்ள வடபகுதியில் உற்சவர்மேடை உள்ளது. இதில் சந்திரசேகரர், அம்பிகை, சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, நடராசர், மணிவாசகர், சுந்தரர் ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன. உற்சவருக்குக் கிழக்கில் பாதாளேசுவரர் சந்நிதி தெற்கு முகமாகக் காணப்படுகிறது. இதற்குக் கிழக்கில் அம்மன் தர்மவர்த்தினி சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. எதிரில் சிங்கத்தின் உருவம் காணப்படுகிறது. அம்மன் சந்நிதிக்குத் தெற்கில் சூரியன் சந்நிதி உள்ளது.

சுவாமி சந்நிதி மீது ஒரு நிலைச் சதுர விமானமும் அம்பிகை சந்நிதி மீது ஒரு நிலைச் சாலஹார விமானமும் உள்ளன. முன்மண்டபம், முகமண்டபம், உள்மண்டபம் ஆகியவை உள்ளன.

திருமாலின் தேவகோட்டத்தின் முகப்பில் நர்த்தனகிருட்டிணர் சிற்பம் சிறப்புடன் உள்ளது. தூண்களில் சிங்கம், மீன் ஆகியவற்றின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

பரம்பரைக் குருக்கள் பூசைசெய்து வருகின்றனர். தைப்பூசம், திருவாதிரை, சங்கராந்தி ஆகிய விழாக்கள் நடைபெறுகின்றன.

கரிவேடு அரிபிரசாதேசுவரர் கோயில் மகாமண்டபத்தின் கிழக்குச் சுவரிலுள்ள திரிபுவனச் சக்கரவர்த்தி வீரகண்டகோபாலன் நான்காம் ஆண்டு கர்கடக 10 சனிக்கிழமை உரோகிணி நட்சத்திரம் கல்வெட்டு ஜயங்கொண்ட சோழமண்டலம் தாமற்கோட்டத்தின் குலோத்துங்க நல்லூர் என்னும் கரிவேட்டு காஞ்சி மாநகர் அரிக்கு அருள்ஈசுவரம் உடைய நாயனாருக்குக் காக்குநாயக்கன் பெருந்தெருவில் குடியிருக்கும் தேவரடியார், ஓர் ஏக்கர் நிலம் அளித்ததைக் கூறுகிறது[1]

மேற்குச்சுவரிலுள்ள ஆங்கிரச மார்கழி 2-ஆம் நாள் கல்வெட்டு அரிக்கருளிய ஈசுவரமுடைய நாயனார் தைப்பூசையின் போது தங்குவதற்குத் தாமர் வாய்க்கால் கரையில் மண்டபத்தை விஜயராய மகாராயர் புதல்வி திரியம்மகதேவி ஆயியார் கட்டியதையும் அன்று வழிபாடு செய்தற்காகவும் அம்மண்டபம் பழுதுபார்க்கப்படுவதற்காகவும் பணமும் நிலமும் அளித்ததையும் குறிக்கிறது.[2] இதில் கடிகாராட்டு முதலியார் குறிப்பிடப்பெறுகிறார்.

திரிபுவன வீரகண்ட கோபாலன் 3-ஆம் ஆண்டு கல்வெட்டு, கரிவெட்டிலுள்ள ஒருவேலி நிலம் மடப்புறமாகக் காஞ்சிபுரம் அருந்தவ தேயார் மடத்து நந்திதேவனுக்கு அளித்ததைக் குறிப்பிடுகிறது.[3]

இதே சுவரிலுள்ள அரியண்ண உடையார் பிரஜாபதி மகரம் செவ்வாய் திருவோணம் (25-1-1392) கொற்றமான் இடர்நீக்கிய பிள்ளை கரிவேடு ஆளவந்த

நாயன் குருகுலராயன் சோழநல்லூரில் ஒரு மண்டபம் கட்டியதையும் ஈசுவரன் உடையாருக்கு இவன் கோயில்கள் கட்டியதையும் இளையநாயனார் திருவுருவமும் அழ்மன் திருவுருவமும் நிறுவியதையும் இத்தெய்வங்களுக்கு வழிபாட்டுக்கு அவன் நிலங்கள் அளித்ததையும் குறிக்கிறது.[4]

இதே சுவரிலுள்ள திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஜெயகண்டகோபாலன் நான்காம் ஆண்டுக் கல்வெட்டு அரிக்கருளீசுரமுடைய நாயனார் கோயிலில் விளக்கு வைக்கக் கொற்றமன் நம்பி தீரனும் அவன் மகனும் நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.[5]

சைவ முதலியார்கள் பரம்பரை அறங்காவலராகப் பணியாற்றுகின்றனர். கிருத்திகை, மாதவிழா, சனிப்பெயர்ச்சி ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1500 உருபாயாகும்.

---

(1. 58/1945_46; 2. 59/1945_46 3. 60/1945_46; 4. 61/1945_46; 5. 62/1945_46)

## கரிவேடு

# கசேந்திர வரதர் கோயில்

இக்கோயில் அரக்கோணத்திலிருந்து 29 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள கரிவேடு கிராமத்தின் நடுவில் 10 செண்ட் பரப்பில் உள்ளது. இது கிழக்கு நோக்கியவாறுள்ள கோயிலாகும்.

இங்குக் கசேந்திரன் வரதராசரைப் பூசித்ததால் இத்தலம் கசேந்திரர் பெருமாள் கோயில் என விளங்கி வருகிறது.

கிழக்கு நோக்கிய சந்நிதியுள் வரதர் உபய நாச்சிமார்களுடன் எழுந்தருளியுள்ளார். முன்னுள்ள பீடத்தில் உற்சவர் உபய நாச்சிமார்களுடன் எழுந்தருளியுள்ளார்.

இங்கு ஒருகாலப்பூசை தென்கலைப் பட்டாச்சாரியாரால் நிகழ்த்தப்படுகிறது. கார்த்திகை தீபம், உறியடித் திருவிழா, கோகுலாட்டமி, வைகுண்ட ஏகாதசி ஆகிய விழாக்கள் கொண்டாடப்பெறுகின்றன.

இக்கோயிலுக்கு 9.03 ஏக்கர் நன்செய் நிலமும் 15.29 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

கசேந்திரவரதர் கோயிலின் மண்டபத்தூணில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுப்பகுதி நிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. இது தோட்டவாரியப் பெருமக்களையும் குறிக்கிறது[1].

கருவறையின் வடக்கு, மேற்குச் சுவர்களிலுள்ள இராசகேசரிவர்மன் 42-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒருவாறு சிதைந்துள்ளது. இது 'புகழ் சூழ்ந்த புணரி' எனத் தொடங்குகிறது. இது கரிவேடு குலோத்துங்க சோழநல்லூர் கோயிலுக்கு நிலம் விற்பனை செய்ததைக் குறிக்கிறது[2].

---

(1. 63/1945-46; 2. 64/1945-46)

## கரிவேடு

# வீரமாகாளியம்மன் கோயில்

இவ்வூரின் மேற்கே வீரமாகாளியம்மன் கோயில் என்னும் பெயரில் பிடாரியின் கோயில் அமைந்துள்ளது. தெற்கு வாயிலின் வழியாக உட்செல்வோமெனில், மேற்கு நோக்கி இரு சந்நிதிகளைக் காண்கிறோம். ஒற்றை ஊர்ப்பிடாரி என்னும் பெயரிலும் மற்றொன்றை ஓண்டவந்த பிடாரி என்னும் பெயரிலும் வழங்குகின்றனர். ஊர்ப்பிடாரி கோயிலில் ஐந்து சிலைகள் உள்ளன. நடுவில் சாமுண்டி திருவுருவம் உள்ளது. அதன் வலப்புறம் பிராமியும் மகேசுவரியும் இடப்புறத்தில் வராகியும் கௌமாரியும் உள்ளனர். இந்நால்வரின் பீடங்களில் முறையே அன்னம், இடபம், சிங்கம், மயில் ஆகிய வடிவங்கள் உள்ளன.

அடுத்த சந்நிதியில் அம்மையின் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. இரண்டு சிற்பங்கள் இருயானைகளிடையே அமர்ந்துள்ள கஜலட்சுமியைக் குறிக்கின்றன. நடுவில் பிடாரி வீற்றிருக்கின்றாள். இதில் மகாலட்சுமி முழு வடிவமாக இல்லாமல் ஸ்ரீவத்சம் குறியீடாக அமைக்கப்பட்டுள்ளாள்.

இங்குக் கருவறை முன்மண்டபமும் மகாமண்டபமும் உள்ளன. ஆடிமாதத்தில் கூழ்வார்த்தல் முதலியன நடைபெறுகின்றன.

# கரைப்பூண்டி
# திருக்கண்டேசுவரர் கோயில்

இக்கோயில் போளூருக்குக் கிழக்கில் 5 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள கரைப்பூண்டி என்னும் ஊரின் நடுவில், தெற்கு நோக்கியவாயிலும் கிழக்கு நோக்கிய கருவறையும் கொண்டு ஏழு செண்ட் பரப்பில் அமைந்துள்ளது.

பாலாற்றின் கரையில் நீர்த்துறையாக அமைந்துள்ளதால் இவ்வூருக்குக் கரைப்பூண்டி என்னும் பெயர் வழங்கிவருகிறது. இவ்வூர் இறைவனுக்குக் கரையுடையார் என்னும் பெயர் வழங்கிவந்தது. பின்னர் இப்பெயர் கரைகண்டாரரகிக் கரைகண்டன் என்னும் பெயருக்குச் சமமான பொருளுடைய ஸ்ரீகண்டர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

தெற்கு வாயிலுக்கு முன்புறமுள்ள பூந்தோட்டத்தைக் கடந்து வாயிலின் வழியாக உட்செல்வோமெனில், கிழக்குப் பிரகாரத்திலுள்ள நந்தி, பலிபீடம் ஆகியவற்றைக் காணலாம். கிழக்குப் பிரகாரத்தில் நந்திதேவர் சந்நிதிக்குச் சற்று வடக்கில் மேற்கு நோக்கியவாறு சூரியன் உள்ளார். பிரகாரத்தை வலம் வரும்போது தென்மேற்கு முனையில் விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறு உள்ளது. கருவறைக்கு நேர் பின்புறம் முருகப்பெருமான் வள்ளி தெய்வயானையுடன் கிழக்கு நோக்கியவாறு தனிச்சந்நிதியில் அருள்பாலிக்கின்றார். வடமேற்கு முனையில் கிழக்கு நோக்கியவாறு திரிபுரசுந்தரி சந்நிதியுள்ளது. இங்கு அம்பிகை நின்றவாறு அருள் புரிகிறார். இச்சந்நிதியின் முன்மண்டபத்தில் நவக்கிரகங்களின் சந்நிதியும் அதனை அடுத்து வயிரவர் சந்நிதியும் உள்ளன. இச்சந்நிதிக்கு நேரெதிரில் சிங்கம், பலிபீடம் ஆகியன உள்ளன.

கருவறையில் திருக்கண்டேசுவரர் சிவலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். கருவறை வாயிலின் தென்புறம் விநாயகரும் வடபுறம் ஆறுமுகரும் உள்ளார்கள். கருவறைப் புறச்சுவர்க் கோட்டங்களில் விநாயகர், தென்முகக்கடவுள், திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோரின் உருவங்களும் கோமுகிக்கருகில் சண்டேசுவரர் திருவுருவமும் உள்ளன. உலாத் திருமேனிகளாகச் சந்திரசேகரர், அம்பிகை ஆகியோர் உள்ளனர்.

சுவாமி கருவறை மீது இரண்டு நிலைகளைக் கொண்ட சதுரவிமானம் உள்ளது. அம்பிகை சந்நிதி மீது இரண்டு நிலைகள் பெற்றுள்ள விமானம் அமைந்துள்ளது.

இக்கோயிலில நாள்தோறும் ஒரு காலப் பூசை செய்யப்படுகிறது. காணும் பொங்கல், சிவராத்திரி, திருவாதிரை ஆகிய நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன.

இக்கோயிலுக்கு 10 ஏக்கர் நிலம் உள்ளது. இக்கோயிலுக்குக் குதிரை, மயில், இடபம் ஆகிய வாகனங்கள் உள்ளன. ஐயப்ப அன்பர்கள் அவ்வப்போது இங்குக் கூடி வழிபாடாற்றுகின்றனர்.

## கலசப்பாக்கம்

# திருமாமுடீசுவரர் கோயில்

இக்கோயில் திருவண்ணாமலைக்கு வடக்கிலுள்ள கலசப்பாக்கம் கிராமத்தின் வடக்கில் இரண்டு மீட்டர் உயரம் கொண்ட மண்மலையின் மீது கிழக்கு நோக்கிய கருவறையும் தெற்கு நோக்கிய வாயிலும் கொண்டு 131 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது.

அமுதகலசம் தங்கிய காரணத்தின் இவ்வூர் கலசப்பாக்கம் எனப் பெயர் பெற்றது. இது மண்மலையின் முடியாகத் தோன்றியதால் இங்கு எழுந்தருளிய இறைவர் மாமுடி ஈசுவரர் எனப் பெயர் தாங்குகிறார்.

தெற்கு வாயில் வழியாக இக்கோயில் பிரகாரத்தில் வலம் வருவோம் எனில், தென்மேற்குக் கோடியில் விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறு இருப்பதைக் காண்கிறோம். இவர் திருமேனியில் சிவப்புச் செந்தூரம் பூசப்பெற்றுள்ளது. மேற்குப் பிரகாரத்தில் திரிபுரசுந்தரி சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. இச்சந்நிதியின் முன்புறம் இடபத்தின் திருவுருவமும் அதனையடுத்துக் கிழக்கு நோக்கிய கொற்றவை சந்நிதியும் உள்ளன.

வடகிழக்குக் கோடியில் நவக்கிரகங்கள் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. பலிபீடம், கொடிமரம், நந்திதேவர் சந்நிதி ஆகியவை கிழக்குப் பிரகாரத்தில் உள்ளன. தெற்கு நோக்கிய வாயிலின் வழியாகக் கோயிலினுள் செல்லும்போது சோமாசுகந்தர் சந்நிதி கிழக்கு நோக்கியிருப்பதைக் காண்கிறோம். பின்னர்க் கருவறையின் தென்புறத்தில் வடக்கு நோக்கியவாறு அருணகிரிநாதர் திருவுருவமும் தென்புறத்தில் சிவலிங்கமும் உள்ளன. அடுத்துச் சில சிவலிங்கங்கள் உள்ளன. வடக்குப் பகுதியில் நடராசர் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. இங்குச் சிவகாமசுந்தரி திருவுருவமும் உள்ளது. கிழக்குப் பகுதியில் சூரியன் திருவுருவம்

மேற்கு நோக்கியும் வயிரவர் திருவுருவம் தெற்கு நோக்கியும் உள்ளன. இக்கோயிலில அம்பிகை, அருணகிரிநாதர், வெள்ளிக்கிழமை அம்மன், சுப்பிரமணியர், வள்ளி தெய்வானை, அத்திரதேவர், பிரதோட நாயகர், தண்டபாணி, அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகியோர், உற்சவத்திருமேனிகள் உள்ளன.

சுவாமி சந்நிதி மீது மூன்றுநிலை விமானமும் அம்பிகை சந்நிதி மீது மூன்று நிலை வியானமும் விநாயகர் சந்நிதி மீது ஒருநிலை வட்டவிமானமும் முருகர் சந்நிதி மீது ஒரு நிலை வட்டவடிவ விமானமும் உள்ளன.

இங்குள்ள திருஞானசம்பந்தர் வடிவம் அழகியது. இஃது ஒருகை பால் கிண்ணம் தாங்கிய நிலையிலும் மறுகை உயர எழுந்து ஆள்காட்டிவிரலால் பிரமபுரத்து ஈசனைச் சுட்டிக்காட்டும் நிலையிலும் அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் சுப்பிரமணியர் சந்நிதியின் தூணிலுள்ள சோழ மன்னன் இராசகேசரிவர்மன் 17ஆம் ஆண்டுக் கல்வெட்டு பல்குன்றநாட்டின் உட்பிரிவாகிய வசுகூர் (கலசப்பாக்கம்) திருவச்சிரப்பாக்கத்தாழ்வார் கோயிலில் மூவேந்தவேளாளன் என்பான் திருப்பதிகம் பாடும் மூவருக்கு நிலம் நன்கொடை அளித்ததைக் கூறுகிறது[1].

இதே கோயிலின் மற்றொரு தூணிலுள்ள சோழமன்னன் இராசகேசரிவர்மன் இராசாதிராசதேவன் 33ஆம் ஆண்டுக் கல்வெட்டு நானா தேசிகன் சாலையிலும் ஐந்நூற்றுவன் அம்பலத்திலும் நடைபெறும் ஆண்டு விழாவின் போது பொது மக்களுக்கு உணவு அளிக்கக் கோயிலின் திருவுண்ணாளிகை சபையிலிருந்து ஒரு நிலத்தை விலைக்கு வாங்கி அதற்கு அறக்கட்டளை ஏற்படுத்தியதைக் குறிக்கிறது[2].

இருவேளை பூசை நடைபெறுகிறது. பங்குனியில் பத்து நாள்கள் திருவிழா நடைபெறுகிறது. நடராசர் அபிடேகங்கள், திருவாதிரை, அன்னாபிடேகம் கிருத்திகை, நவராத்திரி, கந்தர்சஷ்டி ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன.

மாலையில் பெருவாரியான மக்கள் கூடி வழிபாடு செய்கின்றனர். இக்கோயிலுக்கு 3.54 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது. இக்கோயிலில் யானை, குதிரை, மயில், இடபம், அதிகாரநந்தி, இராவணேசுவரன், அதிகார நந்தி பூதம் முதலிய வாகனங்கள் உள்ளன. இக்கோயிலின் நிருவாகம் சைவ வேளாளர்களிடம் உள்ளது.

---

(1. 290/1038_39; 2. 291/1938_39)

## கலவை

# திருக்காரீசுவரர் கோயில்

இக்கோயில் ஆர்க்காடு வட்டத்தில் இராணிப்பேட்டை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து மூன்று கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள கலவை கிராமத்தில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

கிழக்கு நோக்கியவாறுள்ள கோபுர வாயில் வழியாகக் கோயிலினுள் செல்வோம் எனில், பலிபீடத்தை அடுத்து நந்திதேவர் சந்நிதி மேற்கு நோக்கியவாறு இருப்பதைக் காண்கிறோம். காரீசுவரர் கிழக்கு நோக்கியவாறு சிவலிங்க வடிவில் காட்சி அளிக்கிறார். கருவறைக் கோட்டச் சுவர்மாடங்களில் தெற்கில் விநாயகரும் தட்சிணாமூர்த்தியும் மேற்கில் திருமாலும் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோரும் உள்ளனர். வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது.

அடுத்து அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. அடுத்து 1 1/2 மீட்டர் உயரம் கொண்ட நடராசரும் சிவகாமசுந்தரியும் (1 மீட்டர்) பஞ்சலோக மூர்த்திகளாகத் தெற்கு நோக்கியவாறு அருள்புரிகிறார்கள். விநாயகர், வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் ஆகியோர் சந்நிதிகள் கிழக்கு நோக்கியவாறுள்ளன. பிரகாரத்தில் நால்வர் சந்நிதி உள்ளது. விநாயகர், சண்முகர், சோமாசுகந்தர், சந்திரசேகரர், பிரதோட நாயகர், சண்டேசுவரர், அத்திராயர் ஆகியோர்தம் பஞ்சலோக உலாத்திருமேனிகள் உள்ளன.

இக்கோயிலிலுள்ள தீர்த்தக்கிணறு பாழடைந்துள்ளது. பாலாற்றிலிருந்து குழாய் வழியாக வரும் நீர் பூசைக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இக்கோயிலுக்கு மூன்று நிலைகளுடைய இராசகோபுரம் ஒன்பது மீட்டர் உயரமுடையது. காரீசுவரர் கருவறை, அம்மன் சந்நிதி, விநாயகர் சந்நிதி, சுப்பிரமணியர் சந்நிதி, நந்திதேவர் சந்நிதி ஆகியவற்றிற்கு விமானங்கள் உள்ளன. இக்கோயிலில் ஒரு காலப் பூசைநடைபெறுகிறது.

நடராசருக்கு அபிடேகங்களும் ஆராதனைகளும் நடைபெறுகின்றன. கிருத்திகை, பிரதோடம் ஆகியவையும் கொண்டாடப்பெறுகின்றன.

இக்கோயிலுக்கு 7 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. இக்கோயிலில் பரம்பரைக்

குருக்கள் பூசை செய்து வருகிறார். இவரே பரம்பரை அறங்காவலராகவும் இருந்து வருகிறார்.

பரம்பரைக் குருக்கள் இக்கோயிலுக்குத் தனியுரிமை கொண்டாடுகிறார். நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது. எனினும், பரம்பரை அறங்காவலர் இந்து சமய அறநிலையத்துறைக்கு உதவித் தொகை தாம் கொடுத்துவருவதாகக் கூறுகிறார். இக்கோயிலின் ஆண்டுவருமானம் 960/- உரூப்பாயாகும்.

மையச் சந்நிதியின் தெற்குச்சுவரிலுள்ள திருக்காளீசுவரர் கோயிலின் ஆதிராசேந்திரதேவர் என்கிற பரகேசரிவர்மன் 3-ஆம் ஆண்டுக் கல்வெட்டு சோழேச்சுவரவேதிமங்கலம் திருக்காளீசுவர உலாகாண்டவர் கோயிலுக்கு நிலம் விற்பனை செய்யப்பட்டதைக் குறிக்கிறது.[1]

இதே சந்நிதியின் மேற்குச்சுவரிலுள்ள விக்கிரமசோழதேவன் என்கிற பரகேசரியின் 7-ஆவது ஆண்டுக் கல்வெட்டு நிலம் நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. கலவை, இங்கு இராசநாராயண சதுர்வேதிமங்கலம் எனக்குறிக்கப்படுகிறது.[2]

தெற்குச்சுவரிலுள்ள இராசநாராயண சம்புவராயர் 7-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, பயிர்கள் விளையாத நிலங்களின் வரிகளைத் தள்ளுபடி செய்ததைக் குறிப்பிடுகிறது.[3]

இதே சந்நிதியின் தெற்குச்சுவரிலுள்ள விக்கிரமசோழதேவர் 4-ஆம் ஆண்டுக் கல்வெட்டு இரண்டு விளக்குகளும் இரண்டு பசுக்களும் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[4]

இதே சந்நிதியின் முன்புறமுள்ள மண்டபத்தின் தெற்குச்சுவரிலுள்ள பாண்டியமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி சுந்தரபாண்டியதேவர் பதினேழாவது ஆண்டுக் கல்வெட்டு திருக்காளீசுவரர் கோயிலுக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[5]

---

(1. 228/1901; 2. 229/1901; 3.230/1901; 4. 231/1901; 5. 232/1901)

## கவசம்பட்டு

# நீலகண்டீசுவரர் கோயில்

இக்கோயில் விரிஞ்சிபுரத்திற்கு வடமேற்கில் கவசம்பட்டு கிராமத்தில் 4 கிலோமீட்டர்த் தொலைவில் 10 சென்ட் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு இருக்கின்றது.

தெற்கு நோக்கிய வாயில் வழியாகக் கோயிலினுள் வலம் வரும்போது கருவறைச் சுவர் மாடங்களில் கோட்ட மூர்த்தங்களைக் காண்கிறோம். தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகியோர் திருவுருவங்களும் மேற்கில் திருமால் திருவுருவமும் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் அமைந்திருப்பதைக் காணலாம். வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. தெற்கு வாயில் கிழக்குப்பிரகாரத்தில் பலிபீடமும் பலிபீடத்தையடுத்து நந்திதேவரின் மேற்கு நோக்கிய சந்நிதியும் உள்ளன.

கருவறையின் நுழைவாயிலில் வலப்புறம் சித்தி புத்தி விநாயகர் திருவுருவமும் இடப்பக்கம் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் திருவுருவமும் உள்ளன. கருவறையில் நீலகண்டேசுவரர் சிவலிங்கவடிவில் கிழக்கு நோக்கியவாறு அருள்பாலிக்கிறார். அம்பிகை அகிலாண்ட நாயகி சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. விநாயகர், சித்தி புத்தி விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, சூலாயுதம், சந்திரசேகரர், அம்பிகை, சண்டேசுவரர் ஆகியோர் உலாத்திருமேனிகள் இங்குள்ளன.

இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் நிருவாக அலுவலரின் கீழ் உள்ளது. இக்கோயிலின் ஆண்டுவருமானம் 2000 உருபாய். ஒரு காலப் பூசை நடத்தப்பெறுகிறது.

## களத்தூர்

# ஆதிகேசவப்பெருமாள் கோயில்

இக்கோயில் களத்தூரின் மையத்தில் 3 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

ஆதிகேசவப்பெருமாள் உபயநாச்சியார்களுடன் கிழக்கு நோக்கியவாறு காட்சி தருகிறார். இவர்களின் உற்சவத் திருமேனிகளும் உள்ளன. கருவறை மீது வட்ட வடிவ ஒருநிலை விமானம் உள்ளது.

இச்சந்நிதிக்கு ஒரு காலப்பூசை நடைபெறுகிறது.கிருட்டினஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி, புரட்டாசிச் சனிக்கிழமைகள் ஆகிய நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இக்கோயில் ஊர்ப்பெருமக்கள் கவனிப்பில் இருந்துவருகிறது.

## களத்தூர்

# கயிலாசநாதர் கோயில்

இக்கோயில் களத்தூரில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

கோயிலின் முகப்பில் நந்திதேவர் திருவுருவம் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. கருவறையின் வலப்பக்கத்தில் விநாயகர் திருவுருவமும் இடப்புறத்தில் சுப்பிரமணியர் திருவுருவமும் கிழக்கு நோக்கியுள்ளன. கருவறையில் கயிலாசநாதர் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார்.

நடராசர், சந்திரசேகரர், விநாயகர் ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன. இக்கோயிலில் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. இக்கோயில் நிருவாகம் ஊர்ப்பெருமக்களின் பொறுப்பில் உள்ளது.

## களத்தூர்

# (தத்தேசுவரர்) சுகநாதேசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 22 கிலோமீட்டர்த் தொலைவில் இவ்வூரில் கிழக்கு நோக்கியவாறு 2 ஏக்கர்ப் பரப்பில் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் களத்தூர் என்னும் பெயரில் வேறு சில ஊர்கள் இருப்பதால், இவ்வூரைக் குறிக்கக் கரிவேட்டுக் களத்தூர் என்பர். இது களந்தைப்பதி எனவும் குறிக்கப்பெறும். நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவராகிய கூற்றுவ நாயனார் இங்கு வாழ்ந்தார் என்றும் கூறுவர்.

வியாசமுனிவருக்குக் கிருதாசி என்னும் அப்சரப்பெண்ணிடம் கிளி (சுகம்) வடிவில் பிறந்த புதல்வரான சுகமுனிவர் பூசித்ததால், இத்தலத்து இறைவன் சுகநாதேசுவரர் என்னும் பெயர் ஏற்றார் என்பர்.

இங்குள்ள இறைவன் சுகமுனிவரால் பூசிக்கப்பெற்றவர் ஆதலால், தத்தை (கிளி) ஈசுவரர், தத்தேசுவரர் எனவும் குறிப்பிடப் பெறுகிறார். மேலும் தத்தன என்பதற்குத் துணைவன் என்பதும் ஒரு பொருளாகும். உயிர்த்துணைவனாக இறைவன் விளங்குவதால் ஈசனுக்குத் தத்தேசுவரர் எனப் பெயர் அமைந்தது என்பர் சிலர்.

கோயிலுக்குக் கிழக்கிலுள்ள பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றையடுத்து மேற்கு நோக்கியவாறு நந்திதேவர் திருவுருவம் உள்ளது. கோயிலின் உள்வாயிலை அடுத்து வலம்வரும்போது தென்கிழக்குக் கோடியில் சூரியன் திருவுருவம் மேற்கு நோக்கியுள்ளது. தென்மேற்குக் கோடியில் கணபதி சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. மேற்குப் பிரகாரத்தின் மையத்தில் நாகர் திருவுருவமும் அதனை அடுத்துக் கயிலாசநாதர் சந்நிதியும் அதனையடுத்து முருகப்பெருமான் சந்நிதியும் வடமேற்குக் கோடியில் வள்ளி தெய்வயானையுடன் ஆறுமுகசுவாமி சந்நிதியும் கிழக்கு நோக்கியுள்ளன.

வடக்குப் பிரகாரத்தின் கிழக்குப்பகுதியில் நவக்கிரகங்கள் சந்நிதி உள்ளது. வடக்குக் கோடியில் வயிரவர் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது கோயிலின் கருவறையின் தலை வாயிலில் இருபுறமும் துவாரபாலகர்கள் திருவுருவங்கள் உள்ளன. கருவறைக் கோட்டச் சுவர் மாடங்களில் தெற்கில் விநாயகரும்

தட்சிணாமூர்த்தியும் மேற்கில் திருமாலும் வடக்கில் பிரமதேவரும் துர்க்கையம்மனும் உள்ளனர். பிரகாரத்தில் துர்க்கையின் திருவுருவத்திற்கு எதிரில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. கருவறை முன்புறமுள்ள உட்பகுதியில் வடக்கில் உற்சவர்கள் சந்நிதியும் இச்சந்நிதிக்குக் கிழக்கில் நடராசர் சந்நிதியும் உள்ளன. அம்மன் அகிலாண்ட நாயகி சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. கிழக்குப்பிரகாரத்தின் தென்பகுதியில் கொற்றவை, வைணவி ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

இக்கோயிலில் உலாத்திருமேனிகளாகச் சோமாசுகந்தர், அம்பிகை, நடராசர், சிவகாமி, நால்வர், சுப்பிரமணியர், சுக்கிரவார அம்மன், வள்ளி, தெய்வயானை, சந்திரசேகரர், பாலசுந்தரி, பிட்சாடனர், மோகினி, மான், குண்டோதரன், ஆகியோர் உள்ளனர். இங்குள்ள திரிசூலம் குறிப்பிடத்தக்கது. இதில் வழக்கமாகச் சிவபெருமான் திருவுருவம் அமைக்கப்படும். ஆனால் இங்குள்ள திரிசூலத்தில் உலாத்திருமேனிகளான பார்வதி பரமேசுவரன், இடபத்தின் மீது எழுந்தருளியபடி அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கோயிலின் முன்புறம் திண்ணைகளுடன் கூடிய நெடியவாயில் இருக்கின்றது. கருவறை மீது மூன்று நிலைச் சதுரவிமானம், அம்மன் சந்நிதி மீது இரண்டு நிலைகள் கொண்ட சதுர விமானம் ஆகிய விமானங்கள் அமைந்துள்ளன.

கருவறை எதிரே முகமண்டபமும் உள்மண்டபமும் உள்ளன. சுவாமி அம்பிகை ஆகியோர் சந்நிதிப் பிரகாரங்கள் தளமிடப்பட்டுள்ளன. இதன் தூண்களில் காஞ்சிப் புராணக் காட்சிகள், திருவிளையாடற்காட்சிகள் அழகுடன் செதுக்கப்பட்டுள்ளன. கிழக்குப் பிரகாரச்சுவரையொட்டி அம்பு, வில், கேடயம், பிரயோகச் சக்கரம் ஆகியவற்றைக் கொண்டு வீரத்தோற்றம் மிளிரக் காளியின் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

கருவறை எதிரே உள்ள மண்டபத் தூணில், காடு வெட்டித் தலைவன் என்பான் காலத்தில் ஊர்மக்கள் குழுவினராய்க் கூடி இக்கோயிலில் விளக்கு எரிக்க ஏற்பாடு செய்ததை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கோயிலில் நடைபெற்ற பெரும்பலிப்பூசைக்காக இறையிலியாக நிலம் அளிக்கப்பட்டதை வேறு ஒரு கல்வெட்டு கூறுகிறது.

இங்குக் குருக்களால் இருவேளைப்பூசை செய்யப்படுகிறது. பரம்பரை அறங்காவலர் கோயில் நிருவாகத்தைக் கவனித்து வருகின்றார். திருவாதிரை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கார்த்திகை தீபம், நடராசர் அபிடேகம், மார்கழி மாதம், பௌர்ணமி, கிருத்திகை ஆகிய நாள்களும் கொண்டாடப்படுகின்றன. பங்குனி உத்திரம், காணும் பொங்கல், நவராத்திரி ஆகியவை சிறப்பான திருநாள்களாகும்.

இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்துவருகிறது. இதற்கென்று 40 ஏக்கர் நிலம் உள்ளது. நிலவருமானத்தை நம்பியே

இக்கோயில் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 7,653/- உருபாயாகும். இவ்வூரைப் பற்றிய நூல் களந்தை அந்தாதி என்பதாகும். இஃது இன்னும் அச்சிடப்படவில்லை எனத் தெரிகிறது.

## களத்தூர்

# சுப்பிரமணிய சுவாமி கோயில்

கரிவேடு களத்தூரின் மேற்குப்பகுதியில் 10 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு இக்கோயில் அமைந்துள்ளது. மூலவர் சுப்பிரமணியர் திருவுருவம் மட்டும் உள்ளது. வள்ளியம்மை, தெய்வயானை, முருகப்பெருமான் ஆகியோர் மூவருக்கும் உற்சவத்திருமேனிகள் உள்ளன.

ஒருநிலை வட்ட வடிவ விமானம் உள்ளது. முன்மண்டபம், உள்மண்டபம் ஆகியவை உள்ளன. இக்கோயிலின் குருக்கள் பூசை செய்துவருகிறார். ஆடிக்கிருத்திகையில் சுவாமி புறப்பாடு நடைபெறுகிறது. இக்கோயிலின் நிருவாகம் ஊர்ப்பொதுவில் உள்ளது.

## களம்பூர்

# காசி விசுவநாதர் கோயில்

இத்தலம் ஆரணி - போளூர் நெடுஞ்சாலையில் ஆரணிச்சாலை இருப்புப் பாதை நிலையத்திலிருந்து ஒரு கிலோமீட்டர்த் தொலைவில் அரை ஏக்கர் நிலப்பரப்பில் தெற்கு நோக்கியவாறு இருக்கிறது.

இவ்வூர் முன்பு ஒருகாலத்தில் போர்க்களமாக இருந்ததால், களம்பூர் என்னும் பெயர் இதற்கு வழங்கிற்று. இங்குள்ள கோயில், காசி விசுவநாதர் கோயில் நினைவாகக் கட்டப்பட்டது. இத்தலத்தின் விருட்சம் வில்வ மரம் ஆகும்.

இக்கோயிலில் காசி விசுவநாதர் கிழக்கு நோக்கியும் விசாலாட்சி அம்மை தெற்கு நோக்கியும் அருள்பாலிக்கின்றார்கள். முதலில் கோயில் நுழைவாயிலில் துவாரபாலகர்கள், இடமிருந்து விநாயகர், ஆறுமுகர், வள்ளி, தெய்வயானை, நர்த்தன விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், துர்க்கை, பிரமதேவர், வயிரவர், சூரியன், நந்தி ஆகியோர் உள்ளனர். பலிபீடம், கொடிமரம் ஆகியவையும் உள்ளன. கோயிலின் உள்ளே நால்வர், விநாயகர், நவக்கிரகம் ஆகிய மூர்த்தங்கள் உள்ளன.

இங்குத் தீர்த்தக்கிணறு ஒன்றுள்ளது. இராசகோபுரம் இல்லை. சுவாமி, அம்பாள், விநாயகர், சுப்பிரமணியர், தட்சிணாமூர்த்தி, சண்டேசுவரர் ஆகியோர் சந்நிதிகளுக்குத் தனித்தனியாக விமானங்கள் உள்ளன. கருவறையின் முன்புறம் எட்டுக் கால் மண்டபம் உள்ளது.

அம்பாள் சந்நிதி விமானத்தில், விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோர் சிற்பங்கள் உள்ளன. சுவாமி சந்நிதிச் சுவரில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இதே கிராமத்தில் காசிவிசுவநாதர் கோயில் சுவரில் மூன்றாகப் பிரிந்துள்ள கல்வெட்டுத் துண்டுகளுள் ஒரு துண்டு பரகேசரி இராசேந்திரவர்மன் வரலாற்றுப்பகுதியைக் கூறுகிறது. மற்ற இரண்டும் களம்பூர் கிராமத்தையும் நிகரில்லாச் சோழமண்டலத்தின் உட்பிரிவாகிய எயில்நாட்டின் மாதவச் சதுர்வேதிமங்கலம் என்கிற திருப்பேரூர் ஈசுவர உடையார் கோயிலுக்கு நிலம் அளித்ததையும் குறிக்கின்றன.*

காரண ஆகம முறையில் ஒருகாலப்பூசை நடைபெறுகிறது. மாசிப் பஞ்சமி திதியில் பிரமோற்சவம் 10 நாள்கள் நடைபெறுகிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் நிருவாகத்தில் இக்கோயில் உள்ளது. இக்கோயிலுக்கு 3 ஏக்கர் நிலம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டுவருமானம் 4,000/- உரூபாயாகும். 1983-ஆம் ஆண்டில் இக்கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்யப்பெற்றது.

---

* 247/1909

### களம்பூர்

## வேணுகோபாலசுவாமி கோயில்

இத்தலம், ஆரணி - போளூர் நெடுஞ்சாலையிலும் காட்பாடி, விழுப்புரம் ஆரணி சாலை இருப்புப்பாதையிலிருந்து ஒரு கிலோமீட்டர்த் தொலைவிலும்

இருக்கின்றது.

இக்கோயிலின் கருவறையில் வேணுகோபாலர், இராதா, உருக்குமணி ஆகியோர் காட்சியளிக்கின்றனர். கோயில் 45 மீட்டர் நீளமும் 15 மீட்டர் அகலமும் கொண்டது. கோயில் கட்டடத்திற்கும் மதிற்சுவருக்கும் 5 மீட்டர் அளவு இடைவெளி இருக்கிறது.

இக்கோயிலில் தீர்த்தக்கிணறு மட்டும் உள்ளது. கருவறைக்கு விமானம் உள்ளது.

இங்கு இரண்டு கல்வெட்டுகள் உள்ளன.

இக்கோயிலிலுள்ள சகம் 892 தமிழ்க் கல்வெட்டு களம்பூர்ச் சபையினரால் காளிகேசுவரி விண்ணகரதேவி கோயிலுக்கு விளக்கு எரிக்க நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.*

வைகாசன முறையில் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. வைகாசி மாதத்தில் 10 நாள்கள் பிரமோற்சவம் நடைபெறுகிறது. வைகுண்ட ஏகாதசி சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது.

இக்கோயிலுக்கு 10 ஏக்கர் நன்செய் நிலமும் 4.75 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 5,500 உருபாயாகும். இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருகிறது. இக்கோயிலுக்குக் கருடவாகனமும் மாருதி வாகனமும் உள்ளன.

---

* 46/1909

காக்கங்கரை

## சென்னகேசவப் பெருமாள் கோயில்

இக்கோயில் காக்கங்கரை இருப்புப்பாதை நிலையத்திற்கு மேற்கே ஒரு கிலோமீட்டர்த் தொலைவில் 18 மீட்டர் அகலமும் 18 மீட்டர் நீளமும் கொண்ட பரப்பில் அமைந்துள்ளது.

கருவறையில் பெருமாள் சீதேவி பூதேவியுடன் காட்சியளிக்கிறார். உற்சவர்களாகக் கேசவப்பெருமாள், சீதேவி, பூதேவி ஆகியோர் உள்ளனர்.

இக்கோயிலில் சனிக்கிழமை தோறும் வார பூசை நடைபெறுகிறது. இங்கு இலிங்காயத்து மரபினர்களால் பூசை செய்யப்படுகிறது. புரட்டாசிச் சனிக்கிழமை, கார்த்திகை தீபம், மார்கழி 30 நாள்கள், சங்கராந்தி, கருட உற்சவம் ஆகிய திருநாள்கள் கொண்டாடப்படுகின்றன.

இக்கோயிலுக்கு 5.72 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. இதிலிருந்து ஆண்டுதோறும் 975 உருபாய் குத்தகை கிடைக்கிறது.

### காக்கங்கரை

## விநாயகர் கோயில்

இக்கோயில் காக்கங்கரை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து மேற்கே ஒரு கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள காக்கங்கரை கிராமத்தின் கீழ்ப்புறத்தில் ஏழு செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இப்பகுதி மக்களை மழைவெள்ளததிலிருந்தும் இதர இன்னல்களிலிருந்தும் காக்கும் கரையாக இங்கு எழுந்தருளிய விநாயகர் இருப்பதால் அவர் குடிகொண்டுள்ள கோயில் அமைந்துள்ள இவ்வூருக்குக் காக்கங்கரை என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

கோயிலின் உட்புறத்தில் கொடிமரம் உள்ளது. தெற்கு நோக்கிய வாயிற்புறம் அமைந்துள்ளது. விநாயகர், வீரபத்திரர் ஆகியோர் கிழக்குத் திசை நோக்கியவாறு காட்சியளிக்கின்றனர். மூலவர் திருவுருவங்கள் உயர்ந்த மேடையில் மிக அழகிய வடிவில் உள்ளன. உள்மண்டபத்தின் சிறிய கோயிலினுள் விநாயகர் சந்நிதி விமானம் அமைந்துள்ளது. உற்சவமூர்த்திகளாக விநாயகர், வீரபத்திரர், நர்த்தன விநாயகர் ஆகியோர் உள்ளனர்.

இக்கோயிலில் நாள்தோறும் விளக்கு ஏற்றப்படுகிறது. வெள்ளிக்கிழமைகளில் பூசை செய்யப்படுகிறது. விநாயகர் சதுர்த்தி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இக்கோயிலுக்கு 1.84 ஏக்கர் நன்செய் நிலமும் 15.29 ஏக்கர்ப் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயில் உயர்நீதிமன்றத்தின் 21-7-1977-ஆம் நாளிட்ட ஏ. எஸ். 60/73 எண் தீர்ப்புக்கேற்பப் பரம்பரை நிருவாகம் திரு. வீரபத்திர அய்யர், திரு. நஞ்சுண்ட அய்யர் ஆகியோர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆண்டுவருமானம் 1,500

உருபாய் குத்தகையாக வருகிறது. தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் மேற்பார்வையில் இருந்துவருகிறது.

## காங்கேயநல்லூர்

# பாலகுஜாம்பாள் சமேத காங்கேசப் பெருமாள் திருக்கோயில்

இக்கோயில் குடியாத்தம் வட்டம் வேலூருக்கு 4 கிலோமீட்டர்த் தொலைவிலும் காட்பாடி இருப்புப்பாதை நிலையத்திற்குத் தென்கிழக்கில் 4 கிலோமீட்டர்த் தொலைவிலுமுள்ள காங்கேய நல்லூரின் மையத்தில் கிழக்கு நோக்கியவாறு 41 மீட்டர் நீளமும் 30 மீட்டர் அகலமும் கொண்டு 1230 சதுரமீட்டர்ப் பரப்பில் உள்ளது.

கங்கையின் மகனானதால், முருகனுக்குக் காங்கேயன் என்னும் பெயர் அமைந்தது. இங்குச் சிவபெருமான் முருகப்பெருமானால் வழிபடப்பெற்றார். அதனால் அவர் காங்கேய ஈசுவரர் என அழைக்கப்பெறுகிறார். ஊர்ப்பெயரும் காங்கேயநல்லூர் என விளங்கி வருகிறது.

இக்கோயிலின் தலவிருட்சம் பலா மரமாகும்.

இக்கோயிலின் கோபுரவாயில் வழியாக உள்ளே செல்வோம் எனில், நந்தி தேவர், பலிபீடம் ஆகியவற்றை முதலில் காணலாம். கருவறையில் காங்கீசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு அருள்பாலிக்கிறார். வடபுறத்தில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. காங்கீசுவரர் சந்நிதிக்கு வடக்கில் அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. இக்கோயிலில் காங்கீசர், அம்மன், சோமாசுகந்தர், சந்திரசேகரர், விநாயகர், நால்வர் முதலியோரின் 12 உலோக உற்சவத் திருமேனிகள் உள்ளன. சில நூற்றாண்டுகளுக்கு முன் இக்கோயில் மதிற்சுவர் கட்டுவதற்குக் கடைக்கால் தோண்டும்போது பஞ்ச லோகத்தால் செய்யப்பட்ட சோமாசுகந்த மூர்த்தி திருவுருவம் கிடைக்கப்பெற்றுக் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

வடகிழக்கு முனையில் நவக்கிரகங்களின் சந்நிதி உள்ளது. இக்கோயிலுக்கு இராசகோபுரம் உள்ளது. இக்கோபுரத்தின் நுழைவாயிலில் அழகிய முறையில்

படிகள் அமைக்கப்பெற்றுள்ளன.

இக்கோயிலுக்கு வெளிப்பிரகாரமும் உட்பிரகாரமும் உள்ளன. இக்கோயிலில் முன்மண்டபம், திருமணமண்டபம், 16 கால் மண்டபம் ஆகியவை உள்ளன. இங்கு 40 தூண்கள் காணப்படுகின்றன. மேற்குப் புறத்தில் மேற்குப் புற வாசல் வழி அமைக்கும் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. மூலவர் தூபி, அம்மன் தூபி மற்றும் இதர திருப்பணி வேலைகளும் நடைபெற்று வருகின்றன. கோபுரத்திலும் விமானங்களிலும் சுதைச்சிற்பங்கள் காணப்படுகின்றன.

இக்கோயிலில் ஆனித்திருமஞ்சனம், ஆருத்ரா மற்றும் பங்குனி உத்திரம் ஆகிய நாள்களில் பிரமோற்சவம் 10 நாள்கள் வெகு விமரிசையாய் நடைபெற்றுவருகிறது. 10 நாள்கள் வரையில் தினமும் நாளுக்கொரு வாகனத்தில் சுவாமி வீதியுலா பவனி வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். ஐந்தாம் நாள் பார்வதி திருக்கல்யாண உற்சவமும் ஆறாம் நாள் யானை வாகன உற்சவமும் ஏழாம் நாள் திருத்தேர் உற்சவமும் பெருஞ்சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இத்திருவிழாவானது இவ்வாலயத்திற்குப் பெரிய திருவிழாவாகும். இத்திருவிழாவில் பக்தர்கள் கூடி சிவனை வழிபாடு செய்து வருவது இன்றும் நடைபெற்று வருகின்றது. 10 நாள்கள் திருவிழா நடந்து முடிந்து கொடியிறங்கிய ஐந்தாம் நாள் மாவடி சேவைத் திருவிழா சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. இத்திருவிழாவில் அன்பர்கள் திரளாகக் கூடி சிவபெருமானை வழிபடுகிறார்கள்.

இக்கோயிலுக்கு 133 ஏக்கர் நன்செய் நிலமும் 4.21 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளது. இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமிக்கப் பெற்ற அறங்காவலரின் பொறுப்பில் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 2,586 உரூபாயாகும்.

இங்குள்ள கல்வெட்டுகள் அவற்றின் ஒழுங்கான வரிசையில் காணப்படவில்லை. முதலிலிருந்த கோயில் அழிக்கப்பட்டுப் பின்னர்க் கட்டப்பட்டிருக்கலாம் அல்லது மற்றொரு கோயில் கற்களைக் கொண்டு இக்கோயில் கட்டப்பட்டிருக்கலாம்.

(கிரந்தமும் தமிழும்) காஞ்சீசுவரர் கோயிலின் இக்கல்வெட்டு அப்பயப்பேசுவர நாயனாரைக் குறிப்பிடுகிறது.[1]

(கிரந்தமும் தமிழும்) இக்கல்வெட்டு சகலலோக சக்கரவர்த்தி இராசநாராயண சம்புவரைக் குறிப்பிடுகிறது. இம்மன்னன் கி.பி. 1337-ஆம் ஆண்டில் அரசேற்றான்.[2]

(கிரந்தமும் தமிழும்) இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளின் துண்டுப்பகுதிகள்.[3]

(கிரந்தமும் தமிழும்) இக்கல்வெட்டு[4] திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவரின் 41-ஆம் ஆண்டுக் கல்வெட்டாகும்.

---

(1. 16/1887; 2. 17/1887; 3. (18_22)/1887; 4. 23/1887)

## காங்கேயநல்லூர்

# சுந்தர வரதராசப் பெருமாள் கோயில்

இக்கோயில் குடியாத்தம் வட்டத்தில் வேலூருக்கு வடகிழக்கில் நான்கு கிலோமீட்டர்த் தொலைவில் காட்பாடி இருப்புப்பாதை நிலையத்திலிருந்து தென்கிழக்கு மூலையில் 4 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள காங்கேயநல்லூரில் 59.45 மீட்டர் நீளமும் 46.95 மீட்டர் அகலமும் கொண்ட 2,791 சதுரமீட்டர்ப் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இக்கோயிலின் தலவிருட்சம் புன்னை மரமாகும்.

இக்கோயிலின் கோபுர வாயிலைக் கடந்து உள்ளே செல்வோம் எனில், கருடாழ்வார் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளதைக் காண்கிறோம். கருவறையில் சுந்தரராசப் பெருமாள் சீதேவி, பூதேவியுடன் கிழக்கு நோக்கியவாறு அருள் பாலிக்கிறார். அருகில் தாயார் சந்நிதி இருக்கிறது. இங்குச் சுந்தரராசப் பெருமாள் தாயார் முதலியோரின் 12 பஞ்சலோகத் திருவுருவங்கள் திருவிழாக்களின் போது எழுந்தருளிச் சிறப்பாகக் காட்சியளிக்கின்றன.

இக்கோயிலுக்கு இராசகோபுரம் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளது. இத் திருப்பணியை டாக்டர் கிருபானந்த வாரியார் சுவாமி மேற்கொண்டார். கோயில் பிரகாரத்தில் சுரங்கவழி ஒன்று இன்றும் உள்ளது. சுரங்கப்பாதை வேலூர் கோட்டைக்குச் செல்வதாகச் செவிவழிச் செய்தியொன்று கூறுகிறது.

இக்கோயிலில் இருகாலப்பூசைகள் நடந்து வருகின்றன. 1. காலைச் சந்தி, 2. சாயுங்காலப் பூசை ஆகியவையாகும். புரட்டாசிச் சனிக்கிழமைகள், நவராத்திரி கார்த்திகை தீபத்திருவிழா, வைகுண்ட ஏகாதசி, தனுர் மாதச் சிறப்புப் பூசைகள், கிருட்டின ஜெயந்தி, கருடசேவை, வசந்தோற்சவம் ஆகியவை போன்ற உற்சவங்கள் மிகச் சிறபபாகக் கொண்டாடப்பெறுகின்றன.

இக்கோயிலுக்கு 7.18 ஏக்கர் நன்செய் நிலமும் 6.18 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினரால்

நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலர்களிடமும் நிருவாக அலுவலரிடமும் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 4,418/- உரூபாயாகும்.

பெருமாள் கோயிலின் வடக்குச்சுவரிலுள்ள சகலலோக சக்கரவர்த்தி வென்று மண்கொண்ட சம்புவராயர் பதினேழாம் ஆண்டுக் கல்வெட்டு, பிரமாதி ஆண்டு இடபராசி உரோகிணி நட்சத்திரம் பிரதமை பூர்வபட்சம் திங்கட்கிழமை திருவேங்கடம் உதயன் ஸ்ரீமல்லிநாத சதுர்வேதி மங்கலத்தில் ஒரு காணி நிலத்தைக் காங்கய நல்லூர் நீலகந்த சதுர்வேதி மங்கலத்துச் சபைக்கு 170 பு வாசி படா விசமப்பன் குளிகை(4) விலைக்கு விற்றதைக் குறிப்பிடுகிறது.*

---

* 24/1887

## காங்கேயநல்லூர்


# சுப்பிரமணியசுவாமி கோயில்

இக்கோயில் குடியாத்தம் வட்டத்தில் வேலூர் பாலாற்றங்கரையின் வடகிழக்கில் 4 கிலோமீட்டர்த் தொலைவில், காட்பாடி இருப்புப்பாதை நிலையத்திற்கு 4 கிலோமீட்டர்த் தென்கிழக்கில் உள்ள காங்கேயநல்லூரில் 36.28 மீட்டர் நீளமும் 26 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் அமைந்துள்ளது.

இங்குக் காங்கீசுவரர் கோயில் கொண்டிருப்பதால் இந்த ஊருக்குக் காங்கேயே நல்லூர் என்னும் பெயர் வழங்கிவருகிறது. இக்கோயிலின் தலவிருட்சம் நாகலிங்க மரமாகும்.

இக்கோயிலின் கிழக்குக் கோபுர வாயிலின் வழியாகக் கோயிலினுள் செல்வோம் எனில், பலிபீடத்தையும் அதனையடுத்துக் கொடிமரத்தையும் அடுத்து மயிலின் உருவத்தையும் காணலாம்.

கோயில் வாயிலின் இடப்பக்கத்தில் விநாயகர் சந்நிதியும் வலப்பக்கத்தில் பழனி ஆண்டவர் சந்நிதியும் கிழக்கு நோக்கி உள்ளன. இங்கிருந்து கோயிலை வலம்வருவோம் எனில், வடக்குப் பிரகாரத்தில் தெற்கு நோக்கியவாறு ஆறுமுக சுவாமி சந்நிதி உள்ளது. பின்னர்க் கோயிலின் உட்பிரகாரத்தின் தென்மேற்கில்



சுப்பிரமணியர் கோயில் - காங்கேயநல்லூர்

விநாயகர் கோயிலும் அடுத்து மையத்தில் சிவலிங்கச் சந்நிதியும் வடமேற்கில் தெய்வ யானை, வள்ளி ஆகியோருடன் சுப்பிரமணியர் கோயிலும் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளன. வடகிழக்கில் அருணகிரிநாதர் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. மூலவர் சந்நிதிக்குச் செல்லும் வழியில் நவவீரர்கள் திருவுருவங்கள் உள்ளன.

கருவறையில் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியசுவாமி கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். இங்கு எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் கற்சிலையும் திருத்தணிகை முருகப்பெருமான் கற்சிலையும் ஒரே சிற்பியால் செய்யப்பட்டவை என்பது செவிவழிச் செய்தியாகும்.

இக்கோயிலின் அருகில் சரவணப்பொய்கையும் வடக்கு வெளிப்பிரகாரத்தில் தீர்த்தக்கிணறும் இருக்கின்றன.

இக்கோயிலின் இராசகோபுரம் கிழக்கு நோக்கியவாறுள்ளது. இஃது ஐந்து தளங்களையும் ஏழு கலசங்களையும் கொண்டுள்ளது. வடக்கிலுள்ள கோபுரத்திலும் ஐந்து தளங்களும் ஏழு கலசங்களும் உள்ளன.

இக்கோயிலின் வெளிப்பிரகாரமும் உட்பிரகாரமும் நன்கு அமைந்துள்ளன. கோயில் மதிற்சுவர்களில் பொன்மொழிகள், கந்தவேள்பதிகம், முருகர் பதிகம், கந்தர்சஷ்டி கவசம் ஆகியவை எழுதப்பட்டிருப்பதும் கல்வெட்டுகள் அமைந்திருப்பதும் தனிச்சிறப்பாகும். ஆலய வெளிப்பிரகாரத்தின் வடப்பக்கத்தில் கந்தபுராணக் கதைச் சிற்பங்களும் மற்றும் ஆலய வெளிமதில் சுவரில் வள்ளி திருமணம் பற்றியச் சிற்பங்களும் தீட்டப்பட்டுள்ளமை தனிச்சிறப்பாகும்.

தென்புற வெளிப்பிரகாரத்தின் மேற்குப்பக்கத்திலுள்ள உற்சவர் மண்டபத்தில் 20 உற்சவத் திருவுருவங்கள் நிலைப்படுத்தப்பட்டு நாள்தோறும் பூசை நடத்தப்பெறுவது தனிச்சிறப்பாகும்.

வடக்கில் வாகனமண்டபமும் கோயில் நுழைவாயிலையடுத்து உட்புறம் தெற்கில் மடைப்பள்ளியும் வடக்கில் பள்ளியறையும் நுழைவாயில் உட்புறம் வடக்கில் வேள்விச்சாலையும் உள்ளன.

இக்கோயிலில் நான்கு காலப்பூசைகள் நடைபெற்றுவருகின்றன. 1. ஏகாந்த சேவைக்குப் பிறகு காலைச்சந்தி, 2. உச்சிக்காலப்பூசை, 3. சாயுங்காலப்பூசை, 4. அர்த்தசாமப் பள்ளியறைப் பூசை ஆகிய நான்கு பூசைகள் நடைபெற்று வருகின்றன. உச்சிக்காலப் பூசையின்போது அருணகிரிநாதருக்கு அன்னத்தை நைவேத்தியம்செய்து அவ்வன்னம் வழிப்போக்கர்களுக்கு அன்னதானமாக வழங்கப்பட்டு வருகின்றது. இக்கோயிலுக்கு 22 செண்ட் பரப்பில் ஒரு நந்தவனம் உள்ளது. அதிலிருந்து கிடைக்கும் மலர்களைக் கொண்டுதான் சுவாமிக்கு நாள்தோறும் மலர்கள் அலங்காரம் செய்யப்பட்டுவருகிறது.

இக்கோயிலில் ஆனிமாதத்தில் அருணகிரிநாதர் குருபூசை, ஆடி மாதத்தில்

ஆடிக்கிருத்திகைத் திருவிழாவில் பால் காவடி, பன்னீர்க் காவடி, புட்பக் காவடி விழா ஆகியவை நடைபெறுகின்றன. அன்பர்கள் காவடிப் பிரார்த்தனை செய்து முருகனை வழிபாடு செய்வது கண்கொள்ளாக் காட்சியாகும். ஐப்பசி மாதத்தில் அன்னாபிடேகம் ஆறு நாள்களிலும் செய்யப்படுவதும் கந்தர் சஷ்டி இலட்சார்ச்சனை செய்யப்படுவதும் 6-ஆவது நாள் கந்தர் சஷ்டியன்று சூரசம்மார உற்சவம் நடைபெறுவதும் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை தீப உற்சவமும் மார்கழியில் தனுர் மாதச் சிறப்புப் பூசையும் தை மாதத்தில் தைப்பூசத் திருவிழாவும் மாசி மாதத்தில் பத்து நாள் பிர்மோற்சவமும் நாள்தோறும் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு வாகனத்தின் மேல் சுவாமி வீதியுலா பவனி வருவதும் குறிப்பிடத்தக்கன. 8-ஆம் நாள் பழனியாண்டிப் பெருமாள், திருவீதியில் பிச்சை ஏற்று, மறுநாள் காலை வள்ளியைத் திருமணம் செய்து, குதிரை வாகனத்தில் வீதிவீதியாக உலா வந்த இறுதியில் வேடர்பறித் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. இத்திருவிழாவில் இவ் வட்டாரத்தில் பலர் கலந்து கொள்கிறார்கள். கொடி இறங்கி 6-ஆம் நாள் மாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் இலட்ச தீபத்திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இத்திருவிழாவில் தவணங்களால் அலங்கரிக்கப்பட்ட குடைகளைக் கொண்டும் மயில், தோகை விரித்தாடும் வடிவத்தில் உள்ள விமானத்தின் மேல் விலை மதிக்க முடியாத ஆபரணங்களாலும் வைரத்தால் செய்த வைர முடியாலும் அலங்கரிக்கப் பெறுகிறார். அன்று ஒரு நாள் மட்டும் சாத்துப்படி செய்யப்பெற்றுச் சுவாமி பவனி வருகிறார். இத்திருவீதியுலா காலை 4.00 மணிக்கு இக்கோயிலின் சரவணப் பொய்கையில் வலம் வருகிறது. மறுநாள் ஏகாந்தசேவை நடைபெறுகிறது. இத்திருவிழாவில் கூடி முருகப்பெருமானை வழிபாடு ஆற்ற அன்பர்கள் திரளாகக் வருகிறார்கள்.

சித்திரை மாதத்தில் தமிழ் ஆண்டுப் பிறப்பை முன்னிட்டு, சுவாமியை அலங்கரித்து "வட கோபுர தரிசனம்" நடத்தப்படுகிறது. வைகாசி மாதத்தில் விசாக உற்சவமும் நடைபெறுகிறது. இக்கோயிலால் இப்பகுதியில் திருமுருக வழிபாடு நாளுக்குநாள் வளர்ந்தோங்கி வருகிறது.

1929-ஆம் ஆண்டில் இராசகோபுரம் திருப்பணி நடைபெற்றது. அத்திருப்பணி நடைபெற்றுவந்த 23-10-1929-ஆம் நாள் மாலை 4 மணி அளவில் டாக்டர் கிருபானந்தவாரியார் சுவாமிகளின் இளவல் திரு சைலவாசன் என்பவர் கோபுரத்தின் உச்சியில் சிற்பிகளுக்கு உணவளித்துக் கொண்டிருந்தபோது கோபுரத்திலிருந்து தவறிக் கீழே விழுந்து மயக்கமுற்றார். அருகிலிருந்தவர்கள் அவர் பிழைத்தெழ அருள்புரியுமாறு முருகப்பெருமானை வேண்டி அவர் நெற்றியில் திருநீறிட்டனர். ஐந்து மணித்துளியில் அவர் யாதொரு இடருமின்றி எழுந்தார். இக்கோயிலின் இராசகோபுரத் திருப்பணி டாக்டர் கிருபானந்த வாரியார் தந்தையார் சிவமல்லைய தாச பாகவதரால் தொடங்கப்பட்டு, குடமுழுக்கு 5-6-1933-ஆம் நாளில் நடைபெற்றது. அவ்விழாவின் போது இவ்வற்புதத்தை வியந்து தவத்திரு வாரியார் சுவாமிகள் அருட்பாடல்கள் பத்து பாடியுள்ளார். பின்னர் அவர் இராசகோபுரத்தைப் புதுப்பித்துத் திருப்பணி செய்து வடக்குக் கோபுரம் எழுப்பியபோது 3-7-1958-ஆம் நாளில் குடமுழுக்கு நடத்தப்பட்டது. அருணகிரிநாதருக்குப் பூசை செய்யப்பட்ட பின்னர் வழிப்போக்கர் அறுவருக்கு

அன்னதானம் செய்ய இவர் ஏற்பாடு செய்துள்ளார். இலட்ச தீப விழாவும் இவரது உபயமாகும். இவர் முருகர் கந்தவேல் பதிகம் பாடியுள்ளதால் இப்பாடல்களை அன்பர்கள் ஓதிப் பயன் எய்தி வருகிறார்கள். இக்கோயில் வளர்ச்சிக்கும் முருக வழிபாட்டுக்கும் இப்பணிகள் மிக உகந்தவை.

இக்கோயிலுக்கு 3.78 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது. இக்கோயிலில் யானை, மயில், குதிரை, நாகம் ஆகிய வாகனங்கள் உள்ளன.

இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலரிடமும் நிருவாக அலுவலரிடமும் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 21,717 உருபாயாகும்.

## காஞ்சி

# கரைகண்டேசுவரர் கோயில்

இக்கோயில் திருவண்ணாமலையிலிருந்து 18 கிலோமீட்டர்த் தொலைவில் செங்கம் வட்டத்தில் காஞ்சி கிராமத்தின் வடகிழக்கில் 1 1/2 ஏக்கர் நிலப்பரப்பில் தெற்கு நோக்கிய வாயிலும் கிழக்கு நோக்கிய சந்நிதியும் கொண்டு அமைந்துள்ளது.

இக்கோயில் கரைகண்ட தலங்களுள் முதலாவதாக உள்ளது. சேயாற்றின் கரையிலுள்ள வாழைப்பந்தல் என்னும் ஊரில் பார்வதி, வாழை இலைகளைக் கொண்டு பந்தல் அமைத்து அதன் கீழ்ச் சிவலிங்கம் அமைத்துப் பூசை செய்தார். அக்காலத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. அப்போது நீருக்காகப் பார்வதிதேவி முருகப்பெருமானை நாடினார். இந்நிலையில் முருகப்பெருமான் அருகிலிருந்த மலைகளை நோக்கி அம்பெய்தார். அதன் விளைவாக அம்மலைகளிலிருந்து நீர் ஊற்றெடுத்து ஆறாகப் பெருகிற்று. இது பார்வதியின் பூசைக்குப் பயன்பட்டது. சேய் ஆகிய முருகன் கொணர்ந்த ஆறு சேயாறு என்னும் பெயர் பெற்றது. இதனைச் செய்யாறு என மக்கள் குறிப்பிட்டு வருகிறார்கள். மலைகளிலிருந்து நீர் பெருகிவந்தபோது, அந்நீர் சிவந்திருந்தது. இதற்குக் காரணம் அம்மலைகளின் மீது அமர்ந்து தவமியற்றிய முனிவர்கள் எழுவர் உடல்களில் முருகப்பெருமான் அம்பு தைத்ததேயாகும். இவ்வாறு இம்முனிவர்களைக் கொன்ற பாவம் கழிவதற்காக முருகப்பெருமான் ஏழு இடங்களில் சிவன் கோயில்களை நிறுவி வழிபட்டார். இவையாவும் சேயாற்றின் கரைகளில் உள்ளன.

கோயிலின் கிழக்கு வெளிப்பிரகாரத்தில் கரைகண்டேசுவரரை நோக்கியவாறு பலிபீடம், கொடிமரம், நந்திதேவர் சந்நிதி ஆகியவை உள்ளன. உட்பிரகாரத்தில் வலம் வரும்போது தெற்குப் பகுதியில் நால்வர், ஏழு சிவலிங்கங்கள், சப்தமாதர்,

மயில் மீது அமர்ந்த முருகன் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

தென்மேற்குக் கோடியில் விநாயகர் சந்நிதியும் இதனையடுத்து நாகர் உருவங்களும் அடுத்து விசுவநாதர், விசாலாட்சி ஆகியோர் சந்நிதியும் அடுத்து இலட்சுமி நாராயணர் சந்நிதியும் உள்ளன. அடுத்து வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் சந்நிதியும் அதனையடுத்து ஆறுமுகர் சந்நிதியும் உள்ளன. வடமேற்குக் கோடியில் பெரியநாயகியின் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. வடகிழக்குக் கோடியில் வயிரவர் தெற்கு நோக்கியுள்ளார். வயிரவரையடுத்துக் கிழக்கில் நவக்கிரகங்கள் சந்நிதி உள்ளது.

கருவறையில் கரைகண்டேசுவரர் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். கருவறைக் கோட்டத்தின் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, மேற்கில் இலிங்கோற்பவர் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. சற்று வடக்கில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. கருவறை முன்புற மண்டபத்தின் வாயிலில் துவாரபாலகர் திருவுருவங்கள் காணப்படுகின்றன. உட்புறத்தின் வடக்கில் சூரியன் திருவுருவம் மேற்கு நோக்கியுள்ளது. சுவாமி கருவறைப்பகுதிக்குத் தெற்கில் உள்ள மண்டபத்தில் உற்சவர் சந்நிதி இருக்கிறது. இங்கே சோமாசுகந்தர், பாலாம்பிகை, சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, விநாயகர், சுக்கிரவார அம்மன், சண்டேசுவரர், அத்திரதேவர் ஆகியோர்தம் உலாத்திருமேனிகள் உள்ளன.

சேயாறு இக்கோயிலின் தீர்த்தமாகும். சுவாமி சந்நிதி மீதும் அம்பிகை சந்நிதி மீதும் விமானங்கள் உள்ளன. இக்கோயிலின் முன் ஒருமண்டபமும் அம்பிகை சந்நிதி முன் ஒரு மண்டபமும் சுப்பிரமணியர் சந்நிதிக்கு முன் ஒரு மண்டபமும் உற்சவர் சந்நிதிக்கு முன் ஒரு மண்டபமும் உள்ளன.

இங்குள்ள தெற்கு உட்பிரகாரத்தில் முருகன் பூசை புரிந்ததும் சப்தரிஷிகள் பூசித்ததுமான சிவலிங்கம் உள்ளது. துவாரபாலகர் இருவர் அழகு மிக்கவர்கள். தெற்கு வாயிலின் மீது தட்சிணாமூர்த்தி, சோமாசுகந்தர், சுப்பிரமணியர், வள்ளி தெய்வயானை ஆகியோர்தம் சுதையுருவங்கள் உள்ளன. இங்கு அறுபத்துமூவர் திரு உருவங்கள் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. முகப்பு மேற்பகுதி வாயும் வண்ணமலர்கள் போன்று ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. இங்கு இருகாலப்பூசை நடைபெறுகிறது. பங்குனி உத்திர பிரமோத்சவம், நவராத்திரி, மார்கழிமாதம், திருவாதிரை, அன்னாபிடேகம், கார்த்திகை விளக்கீடு, பிரதோடம், மாதக்கிருத்திகை ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன.

இடபம், மயில், பெருச்சாளி, அன்னம் ஆகிய வாகனங்கள் உள்ளன.

இக்கோயிலுக்கு 555 ஏக்கர் நன்செய் நிலமும் 6.70 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளது. வேளாளச் செட்டிமார்களால் இக்கோயில் நிருவாகம் இயங்கிவருகின்றது. இக்கோயிலில் திருமணமண்டபம், தங்கும் விடுதி ஆகியவை உள்ளன.

## காஞ்சி

# சுப்பிரமணியர் கோயில்

இக்கோயில் செங்கம் – போளூர்ப் பாதையில் திருவண்ணாமலைக்கு மேற்கே காஞ்சி ஊரின் மேற்கில் மண்ணாலாகிய சிறுகுன்றின் மீது கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. குன்றின் மீதுள்ளதால், இதற்குக் குன்றுக்கோயில் என்னும் பெயரும் வழங்குகின்றது.

காஞ்சி மரங்களால் சூழப்பெற்றிருந்ததால் இத்தலத்திற்கு இப்பெயர் அமைந்தது என்பர்.

இக்கோயிலை அடைய அறுபது படிகள் ஏறிச் செல்ல வேண்டும். படிக்கட்டின் மேல்பகுதியில் வடபுறத்தில் இடும்பன் கோயில் தெற்கு நோக்கியுள்ளது. இதுபோன்று கோயிலுக்குத் தெற்கில் ஆஞ்சநேயர் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. குன்றின் மீதுள்ள கோயிலுக்கு ஒரு பிரகாரம் உள்ளது. இதன் நுழைவாயிலில் தகடு போர்த்தப் பெற்ற பலிபீடமும் பலிபீடத்தையடுத்துக் கொடிமரமும் உள்ளன. கோயிலின் உள்ளே தென்பகுதிக்கோடியில் விநாயகர் திருவுருவமும் அடுத்துக் காசிவிசுவநாதர் விசாலாட்சி ஆகியோர் திருவுருவங்களும் அடுத்து வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் திருவுருவமும் உள்ளன. கருவறையின் நுழைவாயிலின் தென்புறம் விநாயகர் திருவுருவமும் வடபுறம் வள்ளி தெய்வயானையுடன் ஆறுமுகர் திருவுருவமும் உள்ளன. கருவறையில் சுப்பிரமணியர் வள்ளிதெய்வயானையுடன் உயர்ந்த நிலையில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். அடுத்து வடக்குப்பகுதியில் திருஞானசம்பந்தர், வீரவாகுதேவர், சுமந்தரீசுவரர், முருகன் உருவம் பொதிந்த அத்திரதேவர், விநாயகர், ஒருமீட்டர் உயரமுடைய முத்துக்குமரன் ஆகியோர்தம் உற்சவர் திருமேனிகள் உள்ளன.

சின்னைய முதலியார் என்கிற சுந்தரானந்த சுவாமிகள் முன்னின்று இக்கோயிலைக் கட்டினார்கள்.

கருவறை மீது மூன்றுநிலை விமானமும் பாலசுப்பிரமணியர் சந்நிதி மீது இருநிலை விமானமும் இடும்பன், ஆஞ்சநேயர் ஆகியோர் சந்நிதி மீது ஒருநிலை விமானமும் உள்ளன.

அருச்சகர், ஓதுவார் ஆகியோர் குடியிருக்கக் கோயில் வீடுகள் உள்ளன. இங்குத் திருமண மண்டபம் உள்ளது. இக்கோயிலில் குருக்கள் ஒருவர் இருவேளை

பூசித்து வருகிறார். மாதக்கிருத்திகை, கந்தர்சஷ்டி, ஆடிக்கிருத்திகை ஆகிய நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன. கந்தர்சஷ்டியில் பிரம்மோற்சவம் சூரசம்மாரம் ஆகியவை நடைபெறுகின்றன. கந்தர்சஷ்டி, ஆடிக்கிருத்திகை நாள்களில் 500 லிட்டர் பால் அபிடேகம் நடைபெறுகின்றது. சுவாமிக்கு வெள்ளிக்கவசம் உள்ளது.

இவ்வூர்ச் செங்குந்த முதலியார்கள் இக்கோயிலை நிருவகித்து வருகின்றனர். இக்கோயிலின் ஆண்டு வருமானம் 5,000/- உருபாயாகும்.

### காந்தி நகர்

# சொர்ணமுகீசுவரர், ஓடைப்பிள்ளையார் கோயில்

இக்கோயில் குடியாத்தம் வட்டம், காந்திநகரில் சித்தூர் - கடலூர் நெடுஞ்சாலையில் 41 மீட்டர் நீளமும் 38 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் கிழக்கு நோக்கியவாறுள்ளது.

இந்தக் கோயில் நிலத்தின் கீழ் ஒரே குழியிலிருந்து 21 தெய்வத்திருவுருவங்கள் எடுக்கப்பட்டன. இவை இராசராசசோழன் காலத்துச் சிற்பங்கள் என்பது இவ்வகையில் எழுதப்பட்ட இரண்டு சங்குகளிலிருந்து அறியப்பெறுகிறது. இக்கோயிலின் தலவிருட்சம் வன்னி மரமாகும்.

விநாயகர் தெற்கில் கிழக்கு முகமாக அமர்ந்து ஓடைப்பிள்ளையார் என்னும் பெயருடன் அருள்பாலித்து வருகின்றார். அருகில் மேற்கு நோக்கியவாறு சொர்ணமுகீசுவரர் அருள்புரிந்து வருகின்றார் அம்பாள் தெற்கு நோக்கி அமர்ந்த வண்ணம் காட்சியளிக்கிறார். ஒரே இடத்தில் நின்று அம்பாளையும் சுவாமியையும் வழிபடுவது சிறப்பாகும்.

நவக்கிரகங்கள் தம் பத்தினிகளோடு கல்யாண நவக்கிரகங்களாக் காட்சி தந்து அருள்பாலித்து வருகின்றனர். வடக்கில் திருமுருகன் வள்ளி, தெய்வயானை ஆகியோருடன் அமர்ந்து அன்பர்களுக்குக் காட்சி தருகின்றார்.

முத்துமாரியம்மன் கோயில் இங்குள்ளது. இங்கு இருக்கும் அம்மன் கிழக்கு நோக்கியவாறு அமர்ந்துள்ளார். இங்கு விநாயகர், முருகன் ஆகியோர் சந்நிதிகளும் உள்ளன. அம்மை, வயிற்று வலி ஆகியவை போன்ற நோய்களினால் துன்புறும்

மக்கள், பிரார்த்தனை செய்து நோய் நீங்கப்பெற்று நலமடைந்து செல்கின்றனர். மகளிரின் வார வழிபாடும் சாஸ்தாவின் கார்த்திகை நோன்பும் சிறப்பு மிக்கவை.

இக்கோயிலில் சித்திரைப் பௌர்ணமி, ஆடி வெள்ளிக்கிழமை, விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கார்த்திகைதீபம், தை வெள்ளிக்கிழமை ஆகிய திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இக்கோயிலின் குடமுழுக்கு 3.3.1987-ஆம் நாளில் நடைபெற்றது.

இங்குத் தக்காரும் நிருவாக அதிகாரியும் இணைந்து நிருவாகம் புரிந்து வருகிறார்கள்.

## காப்பலூர்

# திருக்காமீசுவரர் கோயில்

இக்கோயில் போளூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 18 கிலோமீட்டர்த் தொலைவில் திருவண்ணாமலையைச் சார்ந்த கல்சப்பாக்கத்திற்கு வடமேற்கில் உள்ள காப்பலூரின் மையத்தில் 3 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது.

சோழர்காலத்தில் சிறப்பாக விளங்கிய ஊர்களுள் ஒன்றாகிய இவ்வூர், காப்பு, அரண் ஆகியவற்றைக் கொண்ட ஊராதலின் இத்தலத்திற்குக் காப்பூர், காப்பலூர் என்னும் பெயர்கள் வழங்கி வருகின்றன.

காமம் என்பது ஆசை. அன்பர்கள் ஆசைதீர அவர்களுக்கு அருள் கொடுப்பவர் என்னும் பொருளில் காமீசுவரர் என்னும் பெயர் அமைந்துள்ளது. அம்பிகை கனக குஜாம்பாள் (பொன்முலை மடந்தை) என்பது மருவி கடின குஜாம்பாள் என வழங்கி வருகிறது.

இவ்வூரில் மூன்று கோயில்கள இருந்தன என்பது தெரியவருகிறது. அவையாவன 1. திருக்காமேசுவரர் கோயில், 2. கலியாதித்த விண்ணவர் கோயில், 3. சங்கர நாராயணர் கோயில். சங்கர நாராயணர் கோயில் தற்போது சற்று அழிந்துவிட்டது. கலியாதித்த விண்ணவர் கோயில் தற்போது விசயராகவப்பெருமாள் கோயில் என்னும் பெயரில் காணப்படுகிறது.

இக்கோயில் சிதைந்துள்ளது. அதனால் பல திருவுருவங்கள் இடம் மாறி நிலைப்படுத்தப்பட்டுள்ளன. இப்போதைய நிலையில், மூன்று புறமும் கருவறை போல் அமைக்கப்பட்ட சந்நிதியில் நந்திதேவர் சந்நிதி உள்ளது. கிழக்குக் கோபுர

வாயிலின் உட்புறத்தில் கிழக்குப் பிரகாரத்தின் தென்கோடியில் நால்வர் சந்நிதி உள்ளது. பிரகாரத்தின் வடமேற்குக் கோடியில் கடினகுஜாம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. இச்சந்நிதியின் தென்புறத்தில் அம்பிகையின் பழைய திருவுருவம் உள்ளது.

அம்பிகை சந்நிதிக்குக் கிழக்கில் நவக்கிரகங்கள் சந்நிதியும் அடுத்து விநாயகர் சந்நிதியும் அடுத்து நடராசர் சந்நிதியும் உள்ளன. தெற்குநோக்கியுள்ள நடராசர் சந்நிதியில் சிவகாமசுந்தரி திருவுருவமும் இருக்கின்றது. நடராசர் சந்நிதி வாயிலில் வலப்புறத்தில் திருமால் திருவுருவமும் இடப்புறத்தில் சீதேவி திருவுருவமும் உள்ளன.

சுவாமி கோயிலின் கருவறையில் திருக்காமீசர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். இச்சந்நிதியின் இருபுறங்களிலும் துவாரபாலகர்கள் திருவுருவங்கள் உளளன. உள்மண்டபத்தில் வடக்கில் சக்தி திருவுருவம் உள்ளது. அடுத்து முகமண்டபத்தில் வடக்குச்சுவரையொட்டி உற்சவர்கள் சந்நிதி உள்ளது.

இக்கோயிலின் கிழக்குக்கோபுரம் இரண்டுநிலைகளைக் கொண்டுள்ளது. இக்கோயிலின் திருக்காமீசுவரர் சந்நிதி முன் அர்த்தமண்டபமும் முன்மண்டபமும் உள்ளன. அம்பிகையின் சந்நிதிக்கு முன்மண்டபமும் சிறிய அளவில் உள்ளது.

இவ்வூர், பண்டைக் கல்வெட்டுகளில் காமப்புத்தூர் எனக் குறிப்பிடப்படுகிறது. தற்போதைய காப்பலூர் வடஆர்க்காடு மாவட்டத்தில் வீரசோழபுரத்துக்கு வடக்கே 80 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ளது. இங்கு விசயாலய சோழனின் மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திருக்காமேசுவரர் என்று குறிக்கப்படும் சிவபெருமானுடைய பெயர் கல்வெட்டுகளில் 'திருக்காமை நக்கர்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கோயிலில் நந்திவர்மனின் 3ஆம் ஆண்டுக் கல்வெட்டு, ஆட்சியாண்டு கண்டுபிடிக்க முடியாத கம்பவர்மனின் கல்வெட்டு என்பவை காணப்படுவதால் இக்கோயில் 8ஆம் நூற்றாண்டிலேயே இருந்திருக்கவேண்டும் என்பது தெரியவருகிறது. அரசாங்கக் கல்வெட்டுத் துறையினர் இங்குள்ள பழைய சோழர் கல்வெட்டு, பரகேசரிவர்மனின் எட்டாம் ஆண்டைச் சேர்ந்தது என்று குறிப்பிட்டுள்ளனர். பங்கள நாட்டு மாதேவர் என்பவர் மகனாரான காமடிகள் என்பவரின் தேவியார் கங்கப்பெருந்தேவியாரால் உள்ளூர்க் கோயிலில் அந்தணர்களுக்கு அமுது இடுவதற்கு வைத்த நிவந்தம் பற்றி அப்பரகேசரிவர்மன் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இம்மாதேவர் என்பார் பல்லவ மன்னனான கம்பவர்மனின் சிற்றரசராகக் குறிப்பிடப்படுகிறார். இக்கல்வெட்டுகளை நோக்க இத்தொண்டை மண்டலப்பகுதியை முதற் பராந்தகன் மீண்டும் வென்றான் என்பது உணரப்படுகிறது. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கரந்தைத் தமிழ்ச் சங்கச் செப்பேடுகள் தொண்டை மண்டலத்திலிருந்து அடியோடு பல்லவர்களைப் போக்கிய நிலைமை முதற் பராந்தகனையே சாரும் என்ற கருத்தை வெளியிடுகின்றன.

பரகேசரிவர்மனான முதற்பராந்தகன் 13-ஆம் ஆண்டில் காப்பளூரில் சாந்தோக்கிய கிடைப்புறமாக ஒரு நிலம் வழங்கப்பட்டது.

இக்கோயிலின் சப்தமாதர் கோட்டத்தின் சுவரில் வெட்டப்பட்டுள்ள பரகேசரிவர்மனின் மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டு சங்கர நாராயணர் கோயிலுக்குப் பிருதிவீ கங்கரையர் என்ற கங்கமார்த்தாண்டரும் அவர் மகனாரும் வழங்கிய நிலம் பற்றிய நன்கொடையைக் குறிப்பிடுகிறது. இப்பரகேசரிவர்மனின் மூன்றாமாண்டுக் கல்வெட்டு முதற் பராந்தகன் காலத்தது என்று கொள்ளலாம்.

பரகேசரிவர்மன் (முதற் பராந்தகன்) 3-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று கலியாதித்த விட்டுணுகிருக தேவர் கோயிலுக்கு மிலாடு நாட்டுப் பெருவேங்கூரினர் ஒருவர் விளக்கெரிக்க நன்கொடை உதவிய செய்தியைக் குறிப்பிடுகிறது.

பரகேசரிவர்மனுடைய (முதல் பராந்தகன்) 13-ஆம் ஆண்டில் அவ்வூர் ஆளுங்கணத்து உறுப்பினர் ஒருவர் ஊர்ச்சபையாரிடமிருந்து ஒரு நிலத்தை விலைக்கு வாங்கிச் சாந்தோக்கியக் கிடைப்புறமாக வேதம் ஓதுவிப்பதற்கு வழங்கிய செய்தி உணரப்படுகிறது.

மதுரைகொண்ட கோப்பரகேசரியின் 25-ஆம் ஆண்டுக் கல்வெட்டு அப்பரகேசரியின் மக்களுள் ஒருவரான பிள்ளையார் கோதண்டராமன் உள்ளிட்ட மூவரால் உள்ளூர்க் குளத்தைக் கல்லித்திருத்துவதற்கு உள்ளூர்ச் சபையாரிடம் பணமாக ஒரு தொகையை ஒப்படைத்த அறக்கட்டளையைக் குறிப்பிடுகிறது. மூன்றாம் கிருஷ்ணனின் 25-ஆம் ஆண்டுக் கல்வெட்டுகள் மூன்று கோயிலுக்கு விளக்கு எரிக்கவும் பட்ட விருத்திக்கும் (ஓதும் அந்தணருக்கு உணவிடல்) நன்கொடை வழங்கப்பட்ட செய்திகளைக் குறிப்பிடுகின்றன. இக்கல்வெட்டுகள் இப்பகுதி இராட்டிரகூட (இரட்டையர்) மன்னனான மூன்றாம் கிருட்டிணனால் வெல்லப்பட்ட செய்தியைக் கூறுகின்றன.

மதுரை கொண்ட இராசகேசரிவர்மனான சுந்தர சோழனின் ஆறாம் ஆண்டுக் கல்வெட்டு வேதம் ஓதுவிப்பதற்காக விடப்பட்ட நிவந்தம் பற்றிக் குறிப்பிடுகிறது.

கல்வெட்டுத் துறையினர் குறிப்பிடுவது போல் விட்டுணு கோயில், இரண்டாம் ஆதித்தன் காலத்தை ஒட்டியது எனக் கொண்டால், பரகேசரிவர்மனின் 3-ஆம் ஆண்டைச் சேர்ந்தது எனக் குறிப்பிடப்படும் கல்வெட்டுப் பராந்தகனுடையதாகாது என்பதும் அஃது உத்தமசோழன் காலத்ததாகும் என்பதும் தெளிவாகும்.

குருக்களால் இக்கோயிலில் இரு வேளைப்பூசை செய்யப்படுகிறது. நடராசர் அபிடேகம், சிவராத்திரி, கிருத்திகை, சஷ்டி முதலிய நாள்களில் சிறப்பு அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

இக்கோயிலுக்கு 25 ஏக்கர் நன்செய் புன்செய் நிலங்கள் உள்ளன. இந்துசமய

அறநிலையத்துறையின் நிருவாக அலுவலர் இங்குச் செயலாற்றி வருகிறார். பெரிய இடப வாகனமும் பெருச்சாளி வாகனமும் உள்ளன.

இக்கோயிலின் ஆண்டு வருமானம் 2035 உருபாயாகும்.

## காப்பளூர்

# விசயராகவப் பெருமாள் கோயில்

இக்கோயில் காப்பளூரின் மேற்கில் கிழக்கு நோக்கியவாறு 1 1/2 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் வடக்குப்பகுதியில் விசயராகவப்பெருமாள் உபயநாச்சியார்களுடன் காட்சியளிக்கிறார். இக்கோயிலில் வரலாற்றுப் புகழ்பெற்ற இராமர், சீதை, இலக்குவன் ஆகியோர்தம் உலோகச் சிலைகள் உள்ளன. அர்த்தாஞ்சலி அனுமானின் வடிவம் மிகவும் சிறப்பாக வடிக்கப்பெற்றுள்ளது.

ஆண்டாள் சந்நிதி வடக்குப் பிரகாரத்தின் தலைப்பில் கிழக்கு நோக்கியவாறுள்ளது. விசயராகவப்பெருமாள் சந்நிதிக்குத் தெற்கில் மரகதவல்லித் தாயார் சந்நிதி உள்ளது. இச்சந்நிதியின் தென்கிழக்குப்பகுதியில் துர்க்கை திருவுருவம் உள்ளது. விசயராகவப்பெருமாள் சந்நிதிக்குச் சற்று வடகிழக்கில் இலக்குமி, அமர்ந்தபெருமாள், கலியன் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

காளிங்க நர்த்தன உலாத்திருமேனி உள்ளது. பட்டாச்சாரியார் பூசித்து வருகின்றார். ஸ்ரீஜெயந்தி, இராமநவமி, வசந்தோற்சவம், மார்கழி மாதம், வைகுண்ட ஏகாதசி முதலிய விழாக்கள் நடைபெறுகின்றன.

## காரை

# கௌதமேசுவரர் கோயில்

வடஆர்க்காடு என்பது காடுகள் நிறைந்த தலம் என்னும் பொருள்

கொண்டது எனப் புராணங்களில் காணப்படுகிறது. வன்னிவேடு, காரை, வேப்பூர், விஷாரம், புதுப்பாடி, குடிமல்லூர் ஆகிய கிராமங்களில் ஆறு கோயில்கள் உள்ளன. இவற்றுள் பாலாற்றங்கரையின் தென்கரையில் காரை, வன்னிவேடு, குடிமல்லூர் ஆகிய தலங்களும் பாலாற்றங்கரையின் வடகரையில் விஷாரம், வேப்பூர், புதுப்பாடி ஆகிய தலங்களும் உள்ளன. இத்தலங்கள் முனிவர் அறுவரால் நிலைப்படுத்தப்பட்டுப் பூசைகள் செய்யப்பட்டன என்பதை வரலாறு கூறுகிறது.

| | | பூசைசெய்தவர் |
|---|---|---|
| காரை | கௌதமேசுவரர் கோயில் | கௌதமர் |
| வன்னிவேடு | அகத்தீசுவரர் " | அகத்தியர் |
| குடிமல்லூர் | திருசந்தீசுவரர் " | அத்திரி |
| விஷாரம் | வால்மீகீசுவரர் " | வால்மீகி |
| வேப்பூர் | வசிட்டேசுவரர் " | வசிட்டர் |
| புதுப்பாடி | பாரத்வாசேசுவரர் " | பரத்வாசர் |

காரை கௌதமேசுவரர் திருக்கோயில் திருப்பணி செய்யப்பட்டு 1984-ஆம் ஆண்டு குடமுழுக்கு செய்யப்பட்டது.

### காரை

## பொன்னியம்மன், மண்டியம்மன் கோயில்

இக்கோயில் வாலாசா வட்டம் இராணிப் பேட்டையிலிருந்து ஐந்து கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள காரை கிராமத்தில் வயல்களாலும் தோப்புகளாலும் சூழப்பெற்றுள்ள கிராமக் கோயிலாக, காரை கிராமத்திலிருந்து 3 கிலோமீட்டர்த் தொலைவில் பாலாற்றின் கரையில் 9 செண்ட் பரப்பில் அமைந்துள்ளது.

இங்குப் பொன்னியம்மன் சப்தமாதர்கள் புடைசூழ, கொலுவீற்றிருக்கிறாள். மண்டியம்மன் சுயம்புவாகக் காட்சியளிக்கிறாள்.

இக்கோயிலில் ஒரு காலப்பூசை நடைபெறுகிறது. ஆடி, தை, சித்திரை ஆகிய மாதங்களில் மகளிர் பொங்கலிட்டுப் படையல் செய்வார்கள். சித்திரை மாதம் பொன்னியம்மனுக்குக் காப்புக் கட்டி 10 நாள்கள் ஊர்மக்கள் திருவிழா காண்கிறார்கள். இக்கோயிலின் ஆண்டு வருமானம் 2190 உரூபாயாகும்.

## காவேரிப்பாக்கம்

# அழகிய இராமர் கோயில்

இக்கோயில் காவேரிப்பாக்கம் ஊர் நடுவில் காமராசர் வீதி எனச் சொல்லப்பெறும் தேரடி வீதியில் மூன்று செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

கிழக்குக் கோபுரவாயில் வழியாகக் கோயிலினுள் வலம்வரும் வழியில் மேற்குப் பிரகாரத்தில் உள்ள மண்டபத்தில் அழகிய இராமர், சீதை, இலட்சுமணர், ஆஞ்சநேயர், மடைப்பள்ளிநாச்சியார், கஜானனர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. தென்மேற்குப் பிரகாரத்தில் தாயார் சந்நிதி கிழக்கு நோக்கியவாறு உள்ளது. அடுத்துக் கிழக்குப் பிரகாரத்தில் ஆண்டாள் சந்நிதியையும் ஆழ்வார்கள் சந்நிதியையும் காண்கிறோம். ஆழ்வார்கள் சந்நிதி வடக்கு நோக்கியுள்ளது. இதில் சேனை முதலியார், பொய்கையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியார், நாதமுனிகள், ஆளவந்தார், பாஷியகாரர், கரியன்தேசிகர், மணவாளமாமுனிகள், சிறிய திருவடி ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

தாயார் சந்நிதிக்கு நேர் வடக்கில் ஆண்டாள் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. பின்னர்க் கோயிலின் உட்பகுதியின் முகப்பில் கருடர் சந்நிதி மேற்கு நோக்கியவாறுள்ளது. கருவறை வாயிலின் இருபுறங்களிலும் துவாரபாலகர்கள் திருவுருவங்கள் உள்ளன. கருவறையில் சுந்தரவரதர் சீதேவி, பூதேவியோடு கிழக்கு நோக்கியவாறு அருள் பாலிக்கிறார். சீனிவாசர், சீதேவி, பூதேவி, இராமர், இலட்சுமணர், சீதை ஆகியோர் உற்சவத் திருமேனிகள் உள்ளன.

கோயிலின் வடமேற்குக் கோடியில் பகிழமரம் தலமரமாகவுள்ளது. இங்குத் தென்மேற்குக் கோடியில் தீர்த்தக்கிணறு இருக்கின்றது. வடகிழக்குக் கோடியில் திருக்குளம் இருக்கிறது.

இரண்டு காலப்பூசைகள் நடைபெறுகின்றன. இந்து சமய அறநிலையத்துறை சாராத தனிப்பட்ட பட்டர் குடும்பத்தினரிடம் பரம்பரையாகக் கோயில் நிருவாகம் இருந்துவருகிறது. பெரிய விழாக்கள் நின்றுபோய்விட்டன. கோயிலுக்குள்ளேயே ஆடிப்பூரம், நவராத்திரி, தீபாவளி, கார்த்திகை தீபம், மார்கழி விழா, ஏகாதசி, சங்கராந்தி ஆகியவை சிறப்பாக நடைபெறுகின்றன.

இக்கோயிலுக்கு 1.90 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது.

வழிபடுவோர் எண்ணிக்கை குறைவாக உள்ளது. சுற்றுச்சுவர், குளம், கிணறு, மண்டபம் ஆகியவை பாழ்பட்ட நிலையில் உள்ளன. வெளிப்பிரகாரத்தைப் பால் உற்பத்தியாளர் சங்கம் பயன்படுத்திவருகிறது.

பல்லக்கு, சந்திரபிரபை, தண்டுகள் ஆகியவை உள்ளன. திருக்குளத்தில் கண்டெடுக்கப்பட்ட சிலைகள் சென்னை அருங்காட்சியகத்தில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## காவேரிப்பாக்கம்

# காளிகாம்பாள் கோயில்

இக்கோயில் காவேரிப்பாக்கம் கடைவீதிக்குக் கிழக்கில் உள்ள விசுவகர்மா வீதியில் கிழக்கு நோக்கியவாறு ஒரு செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

கிழக்கு நோக்கிய நுழைவாயிலின் வழியாகப் பிரகாரத்தில் வலம் வரின், தெற்கில் பலிபீடத்தைக் காண்கிறோம். கோயிலினுள் மேற்கில் காசி விசுவநாதர் சந்நிதியையும் இச்சந்நிதிக்குச் சற்றுக் கிழக்கில் சண்டேசுவரி, நந்திதேவர், விநாயகர் ஆகியோர் திருவுருவங்களையும் காண்கிறோம். வடக்குப் பகுதியில் காளிகாம்பாள் அமர்ந்தகோலத்தில் தெற்கு நோக்கியவாறு அருள்புரிகிறார்.

நடராசர், சிவகாமி, ஞானசம்பந்தர் ஆகியோர் உற்சவத்திருமேனிகள் உள்ளன.

தென்கிழக்குப் பிரகாரத்தில் வில்வமரம் இருக்கிறது. தீர்த்தக்கிணறு தெற்குப் பிரகாரத்திலுள்ளது.

கல்தூண்களில் சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன.

இரண்டுகாலப்பூசை நடைபெறுகிறது. நவராத்திரி, தீபாவளி, கார்த்திகை தீபம் ஆகிய விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன.

இக்கோயிலின் நிருவாகம் விசுவகர்மா மரபினரிடம் உள்ளது.

## காவேரிப்பாக்கம்

# கொங்கணீசுவரர் கோயில்

இக்கோயில் சோளிங்கர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 14.4 கிலோமீட்டர்த் தொலைவில் அரக்கோணம் காவேரிப்பாக்கம் கிராமத்தில் 10 செண்ட் நிலப்பரப்பில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

கொங்கணமுனிவர் தவம் இயற்றி வந்த ஒரு நாளில், ஒரு கொக்கு அவர் மீது எச்சமிட்டது. அக்கொக்கைச் சினங்கொண்டு அவர் உற்றுநோக்கியவுடன் அஃது அப்போதே எரிந்து சாம்பலாயிற்று. இத்தகைய தவ ஆற்றல் பெற்றிருந்த அவர் ஒருநாள் ஊருக்குள் சென்று உணவிற்காக ஒரு வீட்டின் முன் நின்றுகொண்டிருந்தார். அப்போது அவ்வில்லத்தரசி அவர் விரும்பியதை அளிக்க உடனடியாக வரவில்லை. இதனால் முனிவர் சீற்றங் கொண்டு அப்பெண்மணியைச் சற்று உற்று நோக்கினார். அவள் அம்முனிவரை நோக்கி, "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா" என வினவினாள். இதற்குச் செவிசாய்த்த முனிவர் தாம் எரித்த கொக்கை மட்டுமன்றித் தம் பெயரையும் அறியத்தக்க ஆற்றல் அப்பெண்ணுக்கு இருந்ததைக் கண்டுகொண்டார். அதனால் மேலும், தவம் இயற்றினார். இக்கோயிலையும் அவரே அமைத்தார்.

இக்கோயிலுக்குரிய தலவிருட்சம் பாதிரி மரமாகும்.

கோயிலின் நுழைவாயிலைக் கடந்து உள்ளே செல்வோம் எனில் பலிபீடமும் கொடி மரமும் அவற்றையடுத்து நந்திதேவர் சந்நிதியும் மூலவரை நோக்கியவாறுள்ளதைக் காண்கிறோம்.

இக்கோயிலின் வடக்கு நுழைவாயிலின் வழியாக வலம் வரும் வழியில் வடக்குப் பிரகாரத்தில் ஞாகிரி அம்மன் சந்நிதியும் நாகர் திருவுருவங்களும் மேற்குப் பிரகாரத்தில் பலிபீடமும் கொடிமரமும் உள்ளன. வடக்குப் பிரகாரத்திலுள்ள நுழைவாயிலையடுத்துக் கோயிலினுள் நவக்கிரகங்கள் சந்நிதி உள்ளது. அடுத்துச் சப்தமாதர் திருவுருவங்கள் உள்ளன. கருவறை நுழைவாயிலின் இருபுறங்களிலும் துவாரபாலகர்கள் உள்ளார்கள். கருவறையில் கொங்கணீசுவரர் மேற்கு நோக்கியவாறு அருள்புரியும் நிலையில் உள்ளார்.

கிழக்கில் நால்வர் சந்நிதி மேற்கு நோக்கியவாறும் தெற்கில் வள்ளிதெய்வயானையுடன் முருகப்பெருமான் சந்நிதியும் உள்ளன. அடுத்து

குங்குமவல்லித் தாயார் சந்நிதி வடக்குநோக்கியுள்ளது. சற்றுக் கிழக்கில் கிழக்கு நோக்கியவாறு இலட்சுமி நாராயணர் சந்நிதி உள்ளது. அருகில் வள்ளலார் திருவுருவம் கிழக்கு நோக்கியவாறு உள்ளது.

கருவறைக் கோட்டத்தின் வடக்கில் சண்டேசுவரர், கிழக்கில் திருமால், தெற்கில் தீட்சிணாமூர்த்தி ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. மேற்குப் பிரகாரத்தில் பாரிசாத மரம் இருக்கிறது. தீர்த்தக்கிணறு வடக்குப் பிரகாரத்தில் உள்ளது. தீர்த்தக்குளம் சீர்குலைந்திருக்கிறது. இதற்குத் திருப்பணி தேவைப்படுகிறது.

கொங்கணீசுவரர் கருவறைச் சந்நிதி மீது மூன்று நிலைகளுடன் கூடிய விமானம் 18 மீட்டர் உயரத்தில் இருக்கின்றது. இதற்கு ஒரு கவசம் உள்ளது.

அம்மன் சந்நிதியின் நுழைவாயிலில், "கங்க பல்லவ மன்னர்" நிருபதுங்கவர்மன் கல்வெட்டு, காணப்படுகிறது. இது காவேரிப்பாக்கம் திருமேற்றளிக் கோயிலைக் குறிப்பிடுகிறது.

தைப்பூசம், அறுபத்துமூவர் திருநாள்கள், ஞாயிறு மாலை வழிபாடு ஆகியவை கொண்டாடப்படுகின்றன.

இக்கோயிலில் காலை, மாலை ஆகிய இருவேளைகளில் பூசைகள் நடைபெறுகின்றன. நவராத்திரி, சிவராத்திரி, அன்னாபிடேகம், கார்த்திகை மாதம் சிறப்பு அபிடேகம் ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன.

இடபம், நந்தி ஆகியவற்றை உருவங்களாகக் கொண்ட வாகனங்கள் உள்ளன.

இக்கோயிலுக்கு, காவேரிப்பாக்கத்தில் 1.7 செண்ட் நிலமும் கொண்டாபுரத்தில் 4.86 ஏக்கர் நிலமும் இராமாபுரத்தில் 45 செண்ட் நிலமும் ஆக மொத்தம் 7.01 ஏக்கர் நிலமுள்ளது. காவேரிப்பாக்கம் கடைத்தெருவில் இக்கோயிலுக்குச் சொந்தமாக 16 கடைகளும் குருக்கள் வீடு ஒன்றும் (கட்டடமாக) உள்ளன. கோயிலின் ஆண்டு வருமானம் 10, 000 /- உருபாயாகும்.

இக்கோயில் நிருவாகம் அறங்காவலர் குழுத்தலைவரிடம் உள்ளது.

### காவேரிப்பாக்கம்

# கோட்டை அபயவரதராசர் திருக்கோயில்

இக்கோயில் காவேரிப்பாக்கம் கோட்டைப்பகுதியில் ஊருக்கு மேற்கில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறுள்ளது. இவ்வூரில் பெரிய கோயில் இதுவாகும்.

300 ஆண்டுகளுக்கு முன் இம்மூர்த்தம் மண்மேட்டிற்குள் புதைந்திருந்ததை ராஜா என்னும் நாயக்கர் குடும்பத்தினர் கண்டுபிடித்தனர். இக்கோயில் நிலத்திற்கடியில் சுரங்கம் இருப்பதாகக் கூறுகின்றனர்.

கிழக்கு வாயில் வழியாகக் கோயிலினுள் செல்வோம் எனில், முதலில் பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றைக் காண்கிறோம். அடுத்துக் கருடர் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. கருடர் சந்நிதிக்கு நேரெதிரில் மூலவர் அழகிய அபயவரதராசர் சீதேவி, பூதேவி ஆகியோருடன் கிழக்கு நோக்கியவாறுள்ளார். இவருடைய பின்னிரு கைகளில் சங்கு, சக்கரம் ஆகியவை உள்ளன. முன்னிருகைகளில் ஒன்று அபயமளிக்கிறது; மற்றொன்று வேண்டப்பட்ட வரங்களை அளிக்கிறது. இங்கு இராமர், ஆஞ்சநேயர், குலசேகரர், இராமாநுசர் ஆகியோர் சிலைத்திருவுருவங்கள் உள்ளன.

காலையில் பூசையும் மாலையில் திருவிளக்கிடுதலும் நடைபெறுகின்றன. பெரிய திருவிழாக்கள் நின்றுபோயின. கோயிலுக்குள்ளே சிறிய விழாக்கள் கொண்டாடப்பெறுகின்றன. கோயிலுக்கு நிலங்கள் உள்ளன. குறைந்த வருமானம் கிடைககிறது எனத் தெரிகின்றது.

இக்கோயில் நிருவாகம் தனியாரிடம் உள்ளது. அறநிலையத்துறையுடன் வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. இக்கோயிலில் வழிபடுவோர் எண்ணிக்கையும் குறைந்துகொண்டே வருகிறது. தற்போது கோயிலின் நிலைமை மனநிறைவு அளிப்பதாக இல்லை. சுற்றி வலம்வர இயலாதவகையில் ஆக்கிரமிப்புகள் தோன்றியுள்ளன. மதில், கிணறு மண்டபம், நுழைவாயில் ஆகியவை வலிவிழந்துள்ளன.

இக்கோயிலின் மையத்தில் வடக்குச்சுவரிலுள்ள முடிவுபெறாத கல்வெட்டு சோழமன்னர் இராசகேசரிமன்னர் ஆறாம் ஆண்டுக் கல்வெட்டாகக் காணப்படுகிறது.[1]

இதே சந்நிதி மேற்குச்சுவரிலும் தெற்குச்சுவரிலும் சோழமன்னர் இராசகேசரிவர்மன் (அரிஞ்சனனா?) ஆறாம் ஆண்டுக் கல்வெட்டு காணப்படுகிறது. இது[1] விளக்கு வைக்கப் படுவூர்க்கோட்டத்துச் சிறு திமிரி நாட்டுக் கிருதிமார்த்தாண்ட வணிகர், 90 செம்மறிஆடுகளை நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது. இத்தெய்வம் கிருத்திமார்த்தாண்ட காலப்பிரயதேவர் ஆவார். இக்கோயில் இராட்டிரகூட மூன்றாம் கிருட்டிணன் கட்டியதாகும் என அரசுத் தொல்பொருள் துறையினர் தெரிவிக்கின்றனர்.[2]

இக்கோயிலின் மையச் சந்நிதியின் தெற்குச்சுவரில் வீரப்பிரதாபதேவராயர் மகன் மன்னர் மல்லிகார்ஜுனராமர் சகம் 1377 பவ ஆண்டுக் கல்வெட்டு, காவேரிப்பாக்கம் கேசவப்பெருமாள் கோயிலுக்குப் (விக்கிரம சோழ சதுர்வேதி மங்கலம் என்கிற காவேரிப்பாக்கம்) பழுதுபார்த்தல் திருப்பணி செய்வதற்காகத் திருமண நிகழ்ச்சிகளில் ஒரு தொகை ஒதுக்கப்பட வேண்டும்[3] என வணிகர்களுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டதைத் தெரிவிக்கிறது.

இதேசுவரில் பொறிக்கப்பட்ட பதினொன்றாம் ஆண்டுக் கல்வெட்டு, படுவூர்க் கோட்டத்து, துரைவழி[4] கந்தபுரப் பேட்டையையும் உலோகமகாதேவி புரத்தையும் குறிப்பிடுகிறது.

இக்கோயிலின் மையச் சந்நிதி வடக்குச் சுவரில் விசயநகரமன்னர் வேங்கடபதிதேவ மகாராயர் சகம் 1514 நந்தன ஆண்டுக் கல்வெட்டு, அழகிய இராமப்பெருமாள் கோயில்[5] திருவிழா ஒன்று நடத்த மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளைக் குறிக்கிறது.

இக்கோயில் வடக்குச் சுவரிலும் மேற்குச் சுவரிலும் வீரபொக்கண உடையார் மகன்வீரகம்பண்ண உடையார் 2, சகம் 1292 சாதாரண ஆண்டுக் கல்வெட்டு, செயங்கொண்ட சோழமண்டலக் கோட்டப் படுவூர்க் கோட்டம் என்கிற காவேரிப்பாக்கம் (தனியூர்) கிராமத்தைக் குறிக்கிறது. இந்தக் கோட்டத்திலுள்ள கடப்பேரி கிராமம் விற்பனை செய்யப்பட்டதையும்[6] தெரிவிக்கிறது. வீரசம்பன் குளிகை என்னும் நாணயமும் குறிக்கப்படுகிறது.

இந்தச் சந்நிதியின் மேற்குச் சுவரிலுள்ள திருபுவனச்சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் எட்டாம் ஆண்டுக் கல்வெட்டு, சுந்தரபாண்டியன சந்திவிழா நடத்த நிலம் நன்கொடை அளித்ததைக்[7] குறிக்கிறது. சோழமண்டலத்திலுள்ள காவேரிப்பாக்கத்தையும் திருவத்தியூர் அருளாளப்பெருமாள் கோயிலையும் குறிக்கிறது. இந்நிலத்தைச் செந்தாமரை வளர்வதற்காகப் பயன்படுத்தி அம் மலர்களை இவ்வழிபாட்டின்போது இடவேண்டும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சுவரில் விஜயநகர மன்னர் சீரங்கதேவமகாராயர் கல்வெட்டு சகம் 1559 ஆண்டிற்குரியது. இம்மன்னனின் கள்ளக்குறிச்சி நன்கொடை கி. பி. 1644 ஆம் ஆண்டுக்குரியது

இந்தச் சந்நிதியின் தெற்குச்சுவரிலுள்ள திரிபுவனச்சக்கரவர்த்தி விசயகண்ட கோபாலதேவர் (கி. பி. 1250-83) கல்வெட்டு விசயகண்ட கோபால சதுர்வேதி மங்கலம் என்கிற காவேரிப்பாக்கம் அழகிய பெருமாள் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நன்கொடையைக் குறிக்கிறது.[9]

இந்தச் சுவரில், வீரபொக்கண்ண உடையார் (1) மகனான விசயநகரமன்னர் கம்பண்ண உடையார் (2) கல்வெட்டு நில விற்பனையைக் குறிக்கிறது. விக்கிரமசோழ சதுர்வேதிமங்கலம் என்கிற காவேரிப்பாக்கத்தின் தனியூர் கிராமத்தைக் குறிக்கிறது.[10] மற்றும் இது மல்லிநாடன் சம்புவராயன் வழங்கிய நன்கொடையைக் குறிக்கிறது.

இந்தச் சந்நிதியின் தெற்குச்சுவரிலுள்ள கல்லில் பொறிக்கப்பட்ட மன்னன் கங்க பல்லவ விசயகம்பவர்மன் 17-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, பொன் நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.[11]

இந்தக் கோயிலின் உள்மண்டபத்தின் தெற்குச் சுவரிலுள்ள வியநகரமன்னர் மல்லிகார்ஜுன தேவ மகாராயர் கல்வெட்டு சகம் 1381 பிரமாதி ஆண்டுக் கல்வெட்டு, நரசிங்கராயர் நலனுக்காக வழங்கப்பட்ட நன்கொடையைக் குறிக்கிறது. காவேரிப்பாக்கத்தின் பெரியசபையைக் (மகா சபையை)[12] குறிக்கிறது. இந்த வீரப்பிரதாப தேவராயர் மல்லிகார்ஜுனரின் தந்தையாவார்.

இந்தக் கோயிலின் முதற்பிரகாரத்தின் தெற்குச் சுவரிலுள்ள கல்லில் ஒரு கல்வெட்டின் பகுதி காணப்படுகிறது. இது கிராமக் குழுக்களைக் குறிக்கிறது. இஃது ஆண்டு வாரியத்தின் பெரியோர்களையும் தோட்டவாரியத்தின் பெரியோர்களையும் வரி வாரியத்தையும் குறிப்பிடுகிறது.[13]

இக் கோயிலின் முன்புறமுள்ள மண்டபச்சுவரில் பொறிக்கப்பட்ட கங்கபல்லவ மன்னன் நிருபதுங்கவர்மன் கல்வெட்டுப்பகுதி படுவூர்க் கோட்டத்தின் உட்பிரிவாகிய மாங்காடு நாட்டையும் அவனி[14] நாராயண சதுர்வேதிமங்கலம் என்கிற காவேரிப் பாக்கத்தையும் குறிப்பிடுகிறது.

இந்த மண்டபத்தின் மேற்குச் சுவர்க் கல்லிலுள்ள கல்வெட்டுப்பகுதி, அவனி நாராயண சதுர்வேதிமங்கலம் என்கிற காவேரிப்பாக்கத்தையும் தோட்ட வாரியத்தையும்[15] குறிக்கிறது. ஏரிவாரியம் நியமனம் செய்யப்பட்டதையும் இது குறிக்கிறது.

இந்த மண்டபத்தின் மேற்குச்சுவர்க் கல்வெட்டுப் பகுதி பெரிய ஏரியையும் ஏரி வாரியத்தையும் குறிப்பிடுகிறது.[16]

இந்த மண்டபத்தின் கூரைக்கல் கல்வெட்டு, கங்கபல்லவ மன்னன் விசய நிருபதுங்க விக்கிரவர்மன் இருபத்தைந்தாம் ஆண்டுக் கல்வெட்டுத்[17] துண்டுப் பகுதியாகும். இது பொன் நன்கொடை அளித்ததைக் கூறுகிறது.

இந்த கூரைக்கல்லில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, கங்க பல்லவமன்னன் விசயு கம்பவர்மன் ஆறாம் ஆண்டுக் கல்வெட்டின் பகுதியாகும். இது சேதமடைந்துள்ளது.[18]

இந்த மண்டபத்தின் தூணிலுள்ள கல்வெட்டு (அக்கல்வெட்டின் மன்னர் பெயர் மறைந்துள்ளது.)[19] திருப்பன்றீசுவரம் கோயிலைக் குறிக்கிறது.

இந்த மண்டபத்தின் மற்றொரு தூணிலுள்ள சோழமன்னர் இராசகேசரிமன்னர் இருபத்து ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டு, சேதமடைந்துள்ளது.[20]

இந்த மண்டபத்தின் மூன்றாம் தூணிலுள்ள கல்வெட்டு சோழமன்னர் இராசகேசரிவர்மன்[21] இருபத்து நான்காம் ஆண்டுக் கல்வெட்டு, சேதமடைந்துள்ளது.

இதே மண்டபத்தின் நான்காம் தூணிலுள்ள பாண்டியமன்னன் "ஒவ்வொரு நாட்டையும் மனமுவந்து கைக்கொண்டவராகிய" சடாவர்மன் சுந்தரதேவ பாண்டிய (கி. பி. 1251-64) தேவர் பதினான்காம்[22] ஆண்டுக் கல்வெட்டு பாண்டிய நாட்டிலுள்ள மிழலைக்கூற்றத்தைக் குறிக்கிறது.

---

(1. 381/1905; 2. 382/1905; 3. 383/1905; 4. 384/1905; 5. 385/1905; 6. 386/1905; 7. 387/1905; 8. 388/1905; 9. 389/1905; 10. 390/1905; 11. 391/1905; 12. 392/1905; 13. 393/1905; 14. 394/1905; 15. 395/1905; 16. 396/1905; 17. 397/1905; 18. 398/1905; 19. 399/1905; 20. 400/1905; 21. 401/1905; 22. 402/1905)

## காவேரிப்பாக்கம்

# சுந்தரவிநாயகர் கோயில்

இக்கோயில் சென்னை - பெங்களூர் நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து, காவேரிப்பாக்கம் ஊருக்குள், நுழைவாயிலில் முதன்மையான இருப்பிடத்தில் அமைந்துள்ளது. இஃது ஒரு செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இது, 400 ஆண்டுகளுக்கு முன்னர்த் தோட்டக்காரத்தெரு அகமுடைய முதலியார் மரபினரால் எடுக்கப்பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

கிழக்கிலுள்ள முகப்புமண்டப நுழைவாயிலின் வழியாகப் பிரகாரத்தை வலம் வரும்போது உற்சவ மூர்த்தி கிழக்கு வெளிப்பிரகாரத்தில் உள்ளதைக் காணலாம்.

பின்னர்க் கோயிலின் உள்ளே, தெற்கில், கிழக்கு நோக்கியவாறு அருள்புரியும் நிலையிலுள்ள விநாயகரைக் காணலாம். தென்மேற்குக் கோடியில் வில்வமரம் இருக்கின்றது.

மூலவர் சந்நிதிக்கு வடக்கில் தீர்த்தக்கிணறு இருக்கிறது. கோயிலினுள் கிழக்குப் பகுதியில் நவக்கிரகங்கள் உள்ளன.

காலை, மாலை ஆகிய இரு வேளைகளில் பூசைகள் நடைபெறுகின்றன. சதுர்த்தி, திருவாதிரை முதலிய சிறப்பு நாள்கள் கொண்டாடப்பெறுகின்றன.

இக்கோயிலுக்கு மனை, தோட்டம் ஆகியவை உள்ளன. இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கிவருகிறது. உண்டியல் வருமானம் மாதம் ஒன்றுக்கு 700/- உருபாயாகும்.

## கொண்டாபுரம் (காவேரிப்பாக்கம்)

# சுப்பிரமணியசுவாமி கோயில்

இக்கோயில் சோளிங்கர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 14.4 கிலோமீட்டர் தொலைவிலுள்ள காவேரிப்பாக்கத்திற்கு அருகிலுள்ள கொண்டாபுரத்தில் இரண்டு செண்ட் நிலப்பரப்பில் தெற்கு நோக்கிய வாயிலுடன் கிழக்கு நோக்கிய மூலவர் சந்நிதியுடன் அமைந்துள்ளது.

தெற்கு நோக்கிய வாயிலின் வழியாகக் கோயிலை வலம் வந்து கிழக்கிலுள்ள பலிபீடத்தையும் அதனை அடுத்துள்ள மயில் உருவத்தையும் காண்கிறோம். மூலத் தானத்தில் சுப்பிரமணியர் வள்ளி தெய்வயானையுடன் கிழக்கு நோக்கியவாறு காட்சி அளிக்கிறார். மேற்கில் விநாயகர் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது.

கோயிலுக்கு வெளியில் வடகிழக்குப் பகுதியில் குளம் உள்ளது. இது தூர்ந்து விட்டது. கோயிலின் வடமேற்குக் கோடியிலுள்ளது தீர்த்தக்கிணறாகும்.

பரம்பரைக் குருக்கள் ஒருவர் இரண்டு காலப்பூசை செய்து வருகிறார். சஷ்டி, கார்த்திகை முதலிய நாள்களில் சிறப்புப் பூசைகள் செய்யப்படுகின்றன. இக்கோயிலுக்கு 10. 41 ஏக்கர் நன்செய் நிலமும் 17 செண்ட் புன்செய் நிலமும் உள்ளன. குறைந்த வருமானம் கிடைக்கப்பெறுவதாகச் சொல்லப்படுகிறது.

### காவேரிப்பாக்கம்

## செல்லியம்மன் கோயில்

இக்கோயில் காவேரிப்பாக்கம் ஊருக்கு மேற்கில் அழகிய இராமர் கோயிலிலிருந்து ஒரு கிலோமீட்டர்த் தொலைவில் கிழக்கு நோக்கியவாறு ஒரு செண்ட் நிலப்பரப்பில் இருக்கின்றது.

இக்கோயிலில் செல்லியம்மன் உற்சவத் திருமேனி மட்டும் உள்ளது.

இக்கோயிலில் இருவேளைப் (பூசாரியால்) பூசை நடத்தப்படுகிறது.

மாரியம்மன் கோயில் திருவிழா போன்று ஆடிமாதத்தில் திருவிழா நடத்தப்பெறுகிறது. வெளியூர்ப் புறப்பாடும் உண்டு. இக்கோயிலில் பிரார்த்தனைகள் செய்யப்படுகின்றன.

நிருவாகம் ஊர்ப் பொதுவில் நிகழ்ந்துவருகிறது.

### காவேரிப்பாக்கம்(கொண்டாபுரம்)

## பஞ்சலிங்கேசுவரர் கோயில்

இக்கோயில் சென்னை - பெங்களூர் நெடுஞ்சாலையை ஒட்டிச் சென்னையிலிருந்து 97.75 கிலோமீட்டர்த் தொலைவில் சைவபுரம் (எ) கொண்டாபுரம் காவேரிப்பாக்க உட்பகுதியில் 75 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

முன்னர்ப் பாலாற்றிற்குத் தென்கரையில் இக்கோயில் விளங்கியது எனவும் தற்போது பாலாறு 2 கிலோமீட்டர் தெற்கில் உள்ளது எனவும்

ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். திரிவேணி சதுர்வேதமங்கலம் என்னும் காவேரிப்பாக்கம் சார்ந்த கொண்டாபுரம் என வழங்கும் சைவபுரத்தில் முப்பத்திரண்டு அறங்களை மேற்கொள்ள இறைவி காமாட்சியம்மை, கம்பா நதிக்கரையில் தவம் இயற்றுவதற்கு முன்னர் இத்திருத்தலத்தில் எழுந்தருளித் தம் திருக்கரங்களால் வாமதேவம், தத்புருஷம், அகோரம், ஈசானம், சத்யோசாதம் என்னும் பஞ்ச பூத இலிங்கங்களை நிறுவிப் பஞ்சலிங்கேசுவரரை எழுந்தருளச் செய்வித்தார் எனவும் இச்சிறப்பால் இத்தலம் ஞானிகள் போற்றுவதற்குரியதாய் விளங்கி வழிபடப்பெற்றுவருகிறது எனவும் கூறப்படுகிறது.

பெருந்தொழிலதிபர் பிர்லா குடும்பத்தினர், காஞ்சி சங்கராச்சாரியார் அருளாணைக்கேற்ப இக்கோயிலில் புனருத்தாரணம் செய்து 24-6-1988-ஆம் ஆண்டு குடமுழுக்கு விழா நடைபெற வழிவகுத்தனர்.

வடக்கு நோக்கியவாறுள்ள கோபுர வாயிலின் வழியாகக் கோயிலினுள் செல்வோம் எனில் முதலில் விநாயகரை வழிபடலாம். வடக்குக் கோடியில் நவக்கிரகங்கள் சந்நிதி உள்ளது. தென்மேற்குக் கோடியில் விநாயகர் சந்நிதியும் விநாயகர் சந்நிதிக்குச் சற்று வடக்கில் சண்முகர் சந்நிதியும் உள்ளன. வடமேற்குக் கோடியில் நாகர் திருவுருவங்கள் உள்ளன. கிழக்குப் பிரகாரத்தில் பலிபீடம், நந்திதேவர் சந்நிதி ஆகியவை உள்ளன. இக்கோயிலினுள் கிழக்குப்பகுதியில் வாமதேவம், அகோரம், தத்புருஷம், சத்தியோசாதம் ஆகிய நான்கு சிவலிங்கங்களை வணங்குகிறோம். அருகில் நடராசர் சந்நிதியும் காமாட்சியம்மன் சந்நிதியும் உள்ளன. வடக்குப்பகுதியில் பிரமதேவர், சண்டேசுவரர் ஆகியோர் சந்நிதியும் உள்ளன.

கோயிலின் மேற்குப் பகுதியில் ஈசானியச் சிவலிங்கம் உள்ளது. இதற்கு நேரெதிரில் பலிபீடம் கொடிமரம் ஆகியவை உள்ளன. இச்சந்நிதிக்கு வடக்கில் காமாட்சி சந்நிதியும் கிழக்கில் உற்சவர் சந்நிதியும் உள்ளன. இப்பகுதியில் தெற்கில் தட்சிணாமூர்த்தி திருவுருவமும் நவநாயகர் திருவுருவமும் வடக்கில் உள்ளன.

திருக்குளம் தெற்கில் உள்ளது. கோயிலுக்கு வெளியில் வடகிழக்கு முனையில் ஆதிசங்கரர் குடில் உள்ளது. நுழைவாயிலில் மூன்று நிலைகள் கொண்ட கோபுரம் உள்ளது.

இரண்டு காலப்பூசை நடைபெறுகிறது. ஒவ்வொரு திங்கட்கிழமையும் சங்கராச்சாரியார் பெயரில் அருச்சனை நடைபெற்றுவருகிறது. பிரசாதம் காஞ்சிபுரம் காமகோடி சங்கராச்சாரியார் திருமடத்தில் செலுத்தப்படுகின்றது.

சொத்துகள் உள்ளன. தனிப்பட்ட முறையில் நிருவாகம் நடைபெற்று வருகிறது.

## காவேரிப்பாக்கம்

# முத்தீசர் கோயில்

இக்கோயில் காவேரிப்பாக்கத்தின் வடக்கில் கட்டளைப்பாட்டைத் தெருவிலுள்ளது. இஃது ஐந்து செண்ட் நிலப்பரப்பில் வடக்குநோக்கிய வாயிலுடனும் கிழக்கு நோக்கிய சந்நிதியுடனும் அமைந்துள்ளது.

இக்கோயிலின் கிழக்குப் பிரகாரத்தில் மூலவர் முத்தீசர் சிவலிங்கத் திருமேனியை நோக்கியவாறு கோயிலின் உட்பகுதியின் தென்புறத்தில் அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது.

இக்கோயிலின் நுழைவாயிலில் மூன்று நிலைக்கோபுரம் இருக்கின்றது.

இக்கோயிலின் மையத்திலுள்ள சந்நிதியின் தெற்குச்சுவரில் சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கச் சோழன் 3, 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டு சேதமடைந்துள்ளது. இது கட்டிமல்லன் விக்கிரம சோழ சம்புவராயர் என்கிற செங்கேணி வீரமிண்டனைக் குறிப்பிடுகிறது.[1]

கோபுர நுழைவாயிலில் பல்லவமன்னன் நந்திவர்மன் 13-ஆம் ஆண்டுக் கல்வெட்டு சேதமடைந்து காணப்படுகிறது.[2]

இக்கோயிலில் இருகாலப்பூசை நடத்தப்படுகிறது. நவராத்திரி, கார்த்திகை தீபம், சிவராத்திரி, திருவாதிரை முதலிய திருவிழாக்கள் நடைபெற்றுவருகின்றன.

இக்கோயிலுக்கு 3 ஏக்கர் நன்செய் நிலமும் 3 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன.

---

(1. 405/1906; 2. 406/1906.)

## காவேரிப்பாக்கம்

# மூலத்துவாழியம்மன் (மாரியம்மன்) திருக்கோயில்

இக்கோயில் காவேரிப்பாக்கம் ஊர்நடுவில் செட்டித் தெருவில் ஒரு செண்டு நிலப்பரப்பில் தெற்கு நோக்கியவாறு இருக்கின்றது.

தெற்குக் கோபுரவாயிலின் வழியாகக் கோயிலினுள் சென்று பிரகாரத்தை வலமாக வரும் வழியில் கிழக்குப் பகுதியில் பலிபீடம், அடுத்து மேற்குப் பிரகாரத்தில் அரசமரத்து அருகில் நாகர் திருவுருவங்கள் ஆகியவற்றைக் காண்கிறோம். இந்த மேடையே சொற்பொழிவு மேடையாகப் பயன்படுத்தப்படுகிறது. இங்கு அம்மன் மீது பாரதியார் பாடிய பாடல்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மண்டப வளைவின் வழியை அடுத்துக் கோயிலின் உட்பகுதியில் நடனகணபதி சந்நிதி உள்ளது. மேற்கில் மூலத்து வாழியம்மன் தெற்கு நோக்கியவாறுள்ளார். இச்சந்நிதியில் அம்மன் 2 மீட்டர் உயரமுள்ள அத்தி மரத்தாலான உருவத்தில் விளங்குகிறார். அம்மன் நின்ற நிலையிலுள்ளார் வடக்கில் கஜலட்சுமி திருவுருவம் உள்ளது. சற்றுத் தெற்கில் நவக்கிரகங்கள் சந்நிதியைக் காணலாம்.

வடக்குப் பிரகாரத்தில் வில்வமரமும் வேப்ப மரமும் உள்ளன.

தெற்குப் பிரகாரத்தில் அம்மை கண்டவர்கள் தங்கும் பிரார்த்தனை அறை உள்ளது. மேற்குப் பிரகாரத்தில் தீர்த்தக்கிணறு உள்ளது.

இக்கோயிலில் இரண்டு காலப்பூசை (பூசாரிகளால்) செய்யப்படுகிறது. ஆடிமாதம் பெரிய திருவிழா நடைபெறும். அந்த அந்தத் தெருவிலுள்ள நாட்டாண்மைக்காரர்கள் நன்கொடை திரட்டி ஒவ்வொரு தெருவிற்கும் ஒரு நாள்விழா என்னும் முறையில் இத்திருவிழா நடைபெறும். அண்மையிலுள்ள சிற்றூர்களுக்கும் சுவாமி புறப்பாடு நடைபெறுகிறது.

காவேரிப்பாக்கம் ஏரியில் நீர் நிரம்பி நல்ல விளைவு கிடைக்குமெனில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறும்.

சுற்றுச்சுவர் பாழடைந்துளளது. 1977-ஆம் ஆண்டுக்குப் பின்னர் குடமுழுக்கு நடைபெறவில்லை.

### கிரிசமுத்திரம்

## பெருமாள் கோயில்

இக்கோயில் வாணியம்பாடி வட்டம் கிரிசமுத்திரம் கிராமத்தில் 57/1 எண் நிலஅளவைப்புலத்தில் 10 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

கோயிலின் முகப்பில் கருடத்தம்பம் உள்ளது. மூலத்தானத்தில் பெருமாள் சீதேவி பூதேவியுடன் எழுந்தருளியுள்ளார். பெருமாள், சீதேவி, பூதேவி ஆகியோர்தம் திருவுலாத்திருமேனிகள் உள்ளன.

இக்கோயிலுக்கு வருமானம் ஏதுமில்லை. பூசைகள் ஊர்ப்பொதுமக்கள் ஒத்துழைப்புடன் நடத்தப்படுகின்றன. சனிக்கிழமைதோறும் பூசை நடைபெறுகின்றது. புரட்டாசிச் சனிக்கிழமைகள், மார்கழி 30 நாள்கள் ஆகிய நாள்களில் சிறப்புப் பூசைகள் செய்யப்படுகின்றன. வைகாசியில் கருடவாகனப் புறப்பாடு நடைபெறுகிறது.

கோயிலின் அருகில் ஒரு கடை மட்டும் உள்ளது. அதிலிருந்து மாத வாடகை 15 உருபாய் மட்டும் கிடைக்கின்றது. தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் நியமனம் செய்யப்பட்ட அறங்காவலரிடம் இதன் நிருவாகம் உள்ளது.

### கீழ்க்கொடுங்காலூர்

## அகத்தீசுவரர் கோயில்

வந்தவாசி வட்டத்தில் சோத்துப்பாக்கம் - வந்தவாசிச் சாலையில் மங்கலம் கூட்டுச்சாலைக்கு வடக்கே இரண்டு கிலோமீட்டர்த் தொலைவில் இவ்வூரின் நடுவில் கிழக்கு நோக்கியவாறு ஐந்து செண்ட் பரப்பில் இக்கோயில் அமைந்துள்ளது.

கால் என்பது இடம் (நாற்றங்கால்-நாற்றுவிடும் இடம்) என்ற முறையில்

கொடுங்கால் என்பது வளைவான குடியிருப்புப்பகுதியாகும். அதனால் இவ்வூரின் பெயர் கொடுங்காலூர் என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு இவ்வட்டத்திலேயே இரண்டு ஊர்கள் இருப்பதால் பிரித்துக்காட்ட இது கீழ்க்கொடுங்காலூர் எனப்பட்டது.

இக்கோயில் வாயிலின் இருபுறத்திலும் தென்புறம் விநாயகப்பெருமானும் வடபுறம் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியரும் உள்ளார்கள். உள்ளே சென்றதும் ஒரு திறந்த வெளிப் பிரகாரத்தைக் காண்கிறோம். இதன் மேற்குப்பகுதியில் சுவாமி சந்நிதியும் வடக்குப் பகுதியில் தெற்கு நோக்கியவாறு அம்பிகை சந்நிதியும் உள்ளன.

சுவாமி சந்நிதியை நோக்கியவாறு நந்திதேவர் சந்நிதியும் பலிபீடமும் உள்ளன முகமண்டபத்தில் விநாயகப்பெருமான் வீற்றிருக்கின்றார். சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியிருப்பினும் உள்வாயில் தெற்கு நோக்கியுள்ளது. இவ்வாயிலுக்கு நேரே நடராசர், சிவகாமி, நால்வர், சந்திரசேகரர் ஆகிய உலாத்திருமேனிகள் உள்ளன. கருவறையில் சதுரவடிவ பீடத்தில் அகத்தீசுவரர் கிழக்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ளார்.

இச்சந்நிதியை வலம் வரும்போது மேற்குப் பிரகாரத்தில் கருவறைக்கு நேர் பின்புறம் சுப்பிரமணியர் தம் தேவியருடன் எழுந்தருளும் சந்நிதி உள்ளது. வடக்கில் சண்டேசுவரர் எழுந்தருளியுள்ளார். கோயிலின் வடக்குப்பகுதியில் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ள சந்நிதியில் அம்பிகை நின்ற வண்ணம் காட்சியளிக்கின்றார். இங்கு முன்மண்டபத்தின் தென்கிழக்கில் நவக்கோள்கள் எழுந்தருளியுள்ளார்கள்.

சுவாமி சந்நிதி மீது இரண்டு நிலை வட்டவடிவ விமானமும் அம்பிகை, முருகன் ஆகியோர் சந்நிதிகளின் மீது ஒரு நிலை விமானங்களும் அமைந்துள்ளன. சுவாமி சந்நிதிக்கு முன் உள்மண்டபம், மகாமண்டபம், அலங்காரமண்டபம் ஆகியவையும் அம்பிகை சந்நிதியின் முன் உள்மண்டபம், பதினாறுகால் மண்டபம் ஆகியவையும் உள்ளன. சுவாமி, அம்பிகை ஆகியோர் சந்நிதிகளை உள்ளடக்கிய 16 மீட்டர் அகலமுடைய திறந்த வெளிப்பிரகாரம் ஒன்று உள்ளது.

ஒருகாலப் பூசை (குருக்களால்) நிகழ்ந்து வருகின்றது. ஊர்ப்பொதுவில் நிருவாகம் இருந்துவருகின்றது. தைப்பூசம், சிவராத்திரி ஆகிய திருநாள்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றுவருகின்றன.

இராசராசன், இராசேந்திரன், விக்கிரமசோழன், வீரகண்டகோபாலன் ஆகியோரின் 12 கல்வெட்டுகள் இக்கோயில் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளன இக்கோயிலின் ஆண்டுவருமானம் 1265/- உருபாயாகும்.

## கீழ்க்கொவளைவேடு

# ஆதிகேசவப் பெருமாள் கோயில்

இக்கோயில் வந்தவாசி வட்டத்தில் மேல் மருவத்தூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 35 கிலோமீட்டர்த் தொலைவில் 100 மீட்டர் நீளமும் 75 மீட்டர் அகலமும் கொண்ட 7500 சதுர மீட்டர்ப் பரப்பில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

குவளை மலர்களையுடைய தடாகங்களைப் பெற்றிருந்த ஊர் என்னும் பொருளில் குவளைவேடு என்றும் இருகுவளைவேடுகள் இருப்பதால், பிரித்துக்காட்ட இது கீழ்க்குவளைவேடு எனவும் அழைக்கப்பெறுகிறது.

கோயில் வாயில் வழியாக உள்ளே செல்வோம் எனில், கருடாழ்வார் சந்நிதி ஆதிகேசவப்பெருமாள் சந்நிதியை நோக்கி இருப்பதைக் காணலாம். கருவறையில் ஆதிகேசவப்பெருமாள் சீதேவி, பூதேவி ஆகியோருடன் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். ஆதிகேசவப்பெருமாள் சந்நிதிக்கு இடப்புறத்தில் தாயார் சந்நிதி இருக்கின்றது.

மூலத்தான சந்நிதிக்கு விமானம் உள்ளது. இக்கோயிலுக்கு வெளிப்பிரகாரம் உட்பிரகாரம் ஆகியவை உள்ளன. மண்டபங்களுள் குறிப்பிடத்தக்கது முன் மண்டபம் ஆகும். விமானத்தில் சுதைச்சிற்பங்கள் சில காணப்படுகின்றன. இக்கோயிலில் வைகான்ச ஆகம முறையில் பட்டாச்சாரியார் ஒரு காலப் பூசை செய்துவருகிறார்.

இக்கோயிலுக்கு 38 ஏக்கர் நன்செய் நிலமும் 292 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமிக்கப் பெற்ற அறங்காவலரிடம் இருக்கின்றது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1, 296 உருபாயாகும்.

# குகை நல்லூர்

# அகத்தீசுவரர் கோயில்

இக்கோயில் திருவலம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து வள்ளிமலைக்குச் செல்லும் வழியில் திருவலத்திற்கு வடக்கே 3 கிலோமீட்டரில் ஊருக்கு வடகிழக்குப் பகுதியில் கிழக்கு நோக்கியவாறு 5 செண்ட் பரப்பில் அமைந்துள்ளது.

இப்பகுதியில் குகைகள் ஆங்காங்கு இருந்தன. அவை தவமியற்றத் தகுதி பெற்றிருந்தன. அவற்றில் ஒன்று குகைநல்லூர் என்னும் பெயரில் இருந்துவருகிறது. அகத்தியர் திருவலத்தில் வழிபட்டபிறகு இங்குத் தங்கி வழிபட்டதால் இவ்வாறு வழிபடப்பெற்ற பெருமானுக்கு அகத்தீசுவரர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

தெற்கு நோக்கிய வாயிலின் வழியாக உட்செல்வோமெனில், உளளே சிறுபிரகாரத்தை அடைகிறோம். இதனை வலம்வந்து தெற்கு உள்வாயிலைக் கடந்து மகாமண்டபத்தை அடையலாம். கருவறையில் அகத்தீசுவரர் சுயம்பு வடிவில் கிழக்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ளார். அவரை நோக்கியவாறு நந்திதேவர் இருக்கின்றார். கருவறை வாயில் வலப்புறம் விநாயகரும் இடப்புறம் சுப்பிரமணியரும் சூரியனும் கிழக்குநோக்கியவாறும் திருமால், தட்சிணாமூர்த்தி, சண்டேசுவரர் ஆகியோர் தெற்கு நோக்கியவாறும் இருக்கிறார்கள். கருவறையில் அம்பிகையின் எதிரே சிங்கமும் பலிபீடமும் உள்ளன. முன் உள்மண்டபத்தில் பிடாரி, இராமர், இலக்குவன் ஆஞ்சநேயர், சீதை ஆகியோர்தம் உலாத்திருமேனிகள் உள்ளன.

இக்கோயிலில் ஒரு காலப்பூசை குருக்களால் செய்யப்படுகிறது. திருவாதிரை, கிருத்திகை, முதலிய விழாக்கள் அபிடேக ஆராதனையுடன் சிறப்பாக நடைபெறுகின்றன. இக்கோயிலுக்கென்று 5 ஏக்கர் நிலம் உள்ளது.

காணும் பொங்கலன்று திருவல்லம் வில்வநாதர் இக்கோயிலுக்கு எழுந்தருளி விழாக் காண்கிறார். தட்சிணாமூர்த்தி, சண்டேசுவரர் முதலியோர் திருவுருவங்களை முறையே மகாமண்டபத்திலேயே நிறுவியுள்ளனர். ஊர்ப்பொதுவில் இக்கோயில் இயங்குகிறது.

## குடிமல்லூர்
# பூமீசுவரர் கோயில்

இக்கோயில் வாலாசாப்பேட்டைக்குத் தெற்கே நான்கு கிலோமீட்டர்த் தொலைவில் உள்ள குடிமல்லூரில் வடகிழக்கு முனையில் நான்கு ஏக்கர் பரப்பில் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

குடிவளம் நிறைந்த ஊர் என்ற முறையில் இவ்வூருக்குக் குடிமல்லூர் என்னும் பெயர் வழங்கிவருகிறது. பஞ்சபூதங்களின் ஒன்றான பூமி வடிவாக இறைவன் கோயில் கொண்டிருப்பதால், பூமீசுவரராக இங்கு இவர் வழிபடப்பெறுகிறார். பூமியின் இயற்கை அழகின் அடிப்படையில் இங்கு வீற்றிருக்கும் அம்பிகைக்குச் சௌந்தரவல்லி என்னும் பெயர் அமைந்தது.

இக்கோயிலின் தெற்குக் கோபுர நுழைவாயிலின் வழியாகப் பிரகாரத்தில் வலம் வரும்போது மேற்குப் பிரகாரத்தில் கார்த்திகேயன் சந்நிதியும் வடக்குப் பிரகாரத்தில் வள்ளி தெய்வயானையுடன் ஆறுமுகசுவாமி சந்நிதியும் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளதைக் காண்கிறோம். கிழக்குப் பிரகாரத்தில் மூலவரை நோக்கிப் பலிபீடமும் நந்திதேவர் திருவுருவமும் உள்ளன.

கருவறை வாயிலுக்குத் தென்புறம் விநாயகர் திருவுருவமும் கருவறை வாயிலின் இருபுறங்களில் துவாரபாலகர்கள் திருவுருவங்களும் உள்ளன. கருவறை உட்பிரகாரத்தில் கருவறைச்சுவர் மாடங்களில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகியோர் திருவுருவங்களும் மேற்கில் அண்ணாமலையார் திருவுருவமும் வடக்கில் பிரமதேவர் துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. சண்டேசுவரர் திருவுருவம் வடக்குப் பிரகாரத்தில் தெற்கு நோக்கி உள்ளது.

கருவறையில் பூமீசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சி அளிக்கிறார். பூமீசுவரர் கருவறைக்குக் கிழக்கில் சௌந்தரவல்லியம்மை சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. அடுத்து நவக்கிரகங்கள் சந்நிதியும் நால்வர் சந்நிதியும் உள்ளன. இக்கோயிலின் 33 உற்சவத்திருமேனிகள் பாதுகாப்புக் கருதி வெளியூருக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இக்கோயிலுக்குத் தெற்கில் ஓடும் பாலாறே இதன் தீர்த்தமாகும்.

தெற்கிலுள்ள எட்டு நிலைகளும் ஏழு கலசங்களும் கொண்ட கோபுரம் 20

மீட்டர் உயரமுடையதாகும். அம்பிகை சந்நிதி மீது இரண்டு நிலைகள் கொண்ட சாலஹாரவிமானமும் கருவறை மீது இரண்டு நிலைகளைக் கொண்ட சதுர விமானமும் இருக்கின்றன.

இக்கோயிலின் உட்பிரகாரம் மேல்தளமிடப்பெற்றுள்ளது. வெளிப் பிரகாரம் திறந்த வெளியாகவுள்ளது.

தெற்கு வாயிலையடுத்துள்ள வாத்திய நிருத்த மண்டபம் 15 மீட்டர் நீளமும் 6 மீட்டர் அகலமும் 5 மீட்டர் உயரமும் கொண்டது. இதனையடுத்து வடக்கில் பொது மகா மண்டபம் உள்ளது. அடுத்துத் தென்மேற்குப் பிரகாரத்தில் கல்யாண மண்டபம் 9 மீட்டர் நீளமும் 7 மீட்டர் அகலமும் 5 மீட்டர் உயரமும் கொண்டுள்ளது. தென்மேற்குப் பிரகாரத்தில் அலங்கார மண்டபம் உள்ளது. கோயில் கோபுர நுழைவாயிலை அடுத்துக் கிழக்குப் பிரகாரத்தில் வாகனமண்டபம் இருக்கின்றது.

இக்கோயிலின் கருவறைக் கோட்டத்தில் காணப்பெறும் தட்சிணாமூர்த்தி உருவத்தில் நகம் கூடத் தெளிவாகத் தெரியும் வகையிலும் இடையைச் சுற்றியுள்ள பாம்பின் உடலின் வளைவுகளும் தலையில் உள்ள கங்கை உருவமும் நன்கு நுட்பமாகத் தெரியும் வகையிலும் செதுக்கப்பட்டுள்ளன. அண்ணாமலையார் திருவுருவம் சிறந்த கலைப் படைப்பாகும். இத்திருவுருவத்தில் சிவலிங்கத்திலிருந்து தோன்றும் அண்ணாமலையாருக்கு வலப்பக்கத்தில் பிரமதேவரும் இடப்பக்கத்தில் திருமாலும் காட்சியளிக்கிறார்கள். கோட்ட இடைவெளிகளில் முள்எடுக்கும் பெண் உருவமும் கஜசம்மாரச் சிற்பமும் உள்ளன.

இக்கோயிலின் மையச் சந்நிதியின் வடக்குச்சுவரிலுள்ள சகலலோக சக்கரவர்த்தி இராசநாராயண சம்புவராயன் நான்காம் ஆண்டுக் கல்வெட்டு, படுவூர்க் கோட்டத்துக் கலவைப்பற்றுக் கிராமத்தின் கரைவழி வள்ளியூரிலுள்ள கடாரங்கொண்ட சோழீச்சுரமுடைய நாயனார் கோயிலுக்கு நிலம் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[1]

இந்தச் சுவரிலுள்ள விசயநகரமன்னர் சதாசிவ தேவர் மகராயர் மகம் 1472 சாதாரண ஆண்டுக் கல்வெட்டு மன்னரின் சாளுவ மன்னர் விருதுகளைக் குறிப்பிடுகிறது. மற்றும் இது படுவூர்க் கோட்டத்தின் உட்பிரிவாகிய பெருந்திமிரிநாட்டிலுள்ள கலவைப் பற்றைத் தெரிவிக்கிறது. மேலும், இஃது ஓர் ஆற்று வாய்க்கால் தோண்ட மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளைப் பற்றிக் கூறுகிறது.[2] தவிர குமார கிருஷ்ணப்ப நாயக்கரையும் சின்ன பொம்ம நாயக்கரையும் குறிக்கிறது.

பாண்டியமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டியதேவர் 14-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, மல்லியூரிலுள்ள[3] கடாரம் கொண்ட சோழீசுவரமுடைய நாயனார் கோயிலைக் குறிக்கிறது.

இதே இடத்திலுள்ள மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகரதேவர் 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டு படுவூர்க் கோட்டப் பிரிவிலுள்ள கலவைப்பற்றிலுள்ள கரைவழி வல்லியூரிலுள்ள கடாரம் கொண்ட சோழவரம் கோயிலையும் மற்ற உயர்சாதியினரையும் குறிக்கிறது.[4]

இதே சுவரிலுள்ள சகலலோக சக்கரவர்த்தி இராசநாராயணன் சம்புவராயன் 7-ஆவது ஆண்டுக் கல்வெட்டு கலவைப்பற்றிலுள்ள கிராமமாகிய கரைவழி நால்பற்றிலுள்ள கோயிலுக்காக வரிகள் தள்ளுபடி செய்யப்பட்டதைக் குறிக்கிறது.[5]

இதே சந்நிதியின் தெற்குச்சுவரிலுள்ள குரோதி ஆண்டுக் கல்வெட்டு சங்கமநாயக்கர் பொம்மி நாயக்கர் கிராமத்தின் நெசவாளர்களுக்காகப் பிறப்பித்த ஆணையைக் குறிக்கிறது.[6]

இதே சுவரில் விசயநகர அரியண்ண உடையார் சகம் 1305-ஆம் ஆண்டுக் கல்வெட்டு நான்கு ஆண்டுக் காலம் வலதுசாரிச் சாதியர்க்கும் இடதுசாரிச் சாதியருக்கும் இடையே நிகழ்ந்த சண்டையைக் குறிப்பிடுகிறது.[7]

பாண்டியமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி ஜடாவர்மன் பெருமான் சுந்தர பாண்டியன் கல்வெட்டு நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[8]

இதே சந்நிதியின் தெற்கு, கிழக்குச் சுவர்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு இராசநாராயணன் சம்புவராய திருமல்லநாதன் முதலாம் ஆண்டுக் கல்வெட்டும் எட்டாம் ஆண்டுக் கல்வெட்டும் நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[9]

இந்தச் சுவர்களிலே பொறிக்கப்பட்ட கல்வெட்டு சகலலோக சக்கரவர்த்தி இராசநாராயண சம்புவராயர் கல்வெட்டு கலவைப்பற்றிலுள்ள பயிர்கள் விளையாதபோது பயிரிடப்பட்ட நிலங்களுக்குரிய வரிகளை மன்னர் தள்ளுபடி செய்ததைக் குறிப்பிடுகிறது. இந்த ஆணை திருவல்லத்திலுள்ள குடிமல்லூர் மன்னைக் கோயிலில் பொறிக்கப்படவேண்டும் என்று விதிக்கப்பட்டது.[10]

இக்கோயிலில் பூசையும் விழாக்களும் நடைபெறுவதில்லை. ஒருவரால் விளக்கு மட்டும் ஏற்றப்பட்டு வருகின்றது. இக்கோயிலுக்கு 6 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. இக்கோயில் நிருவாகம் வள்ளிமலை கோயில் நிருவாகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

---

1. 416/1905; 2. 417/1905; 3. 418/1905; 4. 419/1905; 5. 420/1905; 6. 421/1905; 7. 422/1905; 8. 423/1905; 9. 424/1905; 10. 425/1905.

## குடியாத்தம்

# கருப்புலீசுவரர் கோயில்

## (பாலசார்த்துல்லீசுவரர்)

இக்கோயில் இவ்வூரின் நெல்லுப்பேட்டையில் கிழக்கு நோக்கியவாறு நான்கு ஏக்கர்ப் பரப்பில் அமைந்துள்ளது.

இங்குக் கண்டலநதி வளைந்து ஓடுகிறது. அப்படிக் கோடி (வளைந்து) ஓடும் ஆற்றூர் — கோடியாத்தூர் — குடியாத்தூர் என வழங்கிவருகிறது என்பர். தலபுராணம் குடியேற்றம் என்னும் பெயரை எடுத்துக் கூறுகிறது.

இக்கோயிலுக்குத் தலபுராணம் இருக்கின்றது. நஞ்சுண்டபுரத்தில் வாழ்ந்த சிவநேசர் என்னும் பெரு வணிகர், மிளகு வணிகம் செய்யக் குடியாத்தம் கடந்து செல்லும்போது வழியில் ஓர் ஆற்றைக் கடந்து சென்று குடியேத்த நல்லூரை அடைந்தார். இதுவே வசிட்டரின் மாணவராகிய கௌண்டிஞ்சர் சிவலிங்கத்தை வழிபட்டுப் பேறுபெற்ற தலமாகும். இத்தலத்தில் இருந்த சிவலிங்கத்திற்கு, அவ்வூருக்கு மன்னராக விளங்கிய மணசீலன் கோயில் அமைத்தார். கோயில் சிறப்பாக அமைந்திருந்தது. இவ்வூரைக் கடந்து சென்ற சிவநேசருக்கு வழித்துணையாகச் சிவபெருமான் அமைந்தார். சிவநேசர் தாம் கொண்டு சென்ற மிளகுப்பொதிகளை விற்பனை செய்த பின்னர்க் குடியேற்றத்திலேயே குடியேறி அங்குக் கோயிலில் குடிகொண்டிருந்த பெருமானை வழிபட்டு வந்தார் (குடியேற்றம் - குடியாத்தம் என மருவியது).

அவருக்கு மகப்பேறு வாய்க்கவில்லை. அது காரணமாகச் சிவபெருமானிடம் அவர் வேண்ட ஆண் மகப்பேறு எய்தினர். அவர் தம் துணைவியோடு ஒரு நாள் கோயில் அருகில் தங்கி வழிபட்டபோது சற்றுத் தொலைவில் யானையும் புலியும் சண்டையிட்டதைக் கண்டார். இறுதியில் புலி தோற்று அருகிலுள்ள அவருடைய குழந்தையைக் கவ்விக்கொண்டு ஓடியது. இதுவரை யானையும் புலியும் சண்டையிட்டதால் அதைப்பார்த்து அஞ்சிய வணிகர், புலி தம் குழந்தையைக் கவ்விக்கொண்டு செல்வதைக் கண்டு துடிதுடித்தார். உடனே இறைவனை நோக்கி அழுது முறையிட்டார். புலி வேகமாகச் சென்றதால் அஃது எப்பக்கம் சென்றது எனக் காண இயலவில்லை. அப்போது ஒரு வியக்கத்தக்க நிகழ்ச்சி நேர்ந்தது. சண்டையிட்டுத் துன்புற்ற யானை தன் துதிக்கையால் புலி சென்ற திசையைக் காட்டிவிட்டு ஒரு விநாயகர் சிலையாக மாறிற்று. அவ்விநாயகரே தற்போது

செதுவாலை விநாயகர் என விளங்கி வருகிறார். வியப்புற்ற அவ்வணிகர் யானை காட்டிய வழியே சென்று பார்த்தபோது ஒரு வன்னிமரத்தடியில் குழந்தையை விடுத்துப் புலி அருகில் அமர்ந்திருந்தது. இவர் அஞ்சி இறைவனை நோக்கி அழுதவுடன் அப்புலி சிவலிங்கமாக மாறிவிட்டது. இது கண்டு அவர் பெருமகிழ்ச்சியடைந்தார். கரியோடு (யானையோடு) புலி போரிட்டதன் காரணமாக இங்குள்ள இறைவன் கருப்புலீசுவரர் என்னும் பெயர் பெற்றார். மேலும் இவ்வூரில் மார்க்கண்டேயர், துர்வாசர், தக்கன் ஆகியோர் வழிபட்டுப் பேறுபெற்றனர் என்பர்.

கிழக்குக் கோபுர வாயிலின் வழியாகக் கோயிலினுள் செல்வோம் எனில், முதலில் வெளிப்பிரகாரத்தின் தென்கிழக்கு முனையில் விநாயகர் சந்நிதி மேற்கு நோக்கியவாறுள்ளதைக் காண்கிறோம். அடுத்துத் தென்மேற்குக்கோடியில் ஆறுமுகர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறும் இச்சந்நிதியின் உட்புறத்தில் சப்தமாதர் திருவுருவங்கள் வடக்கு நோக்கியவாறும் உள்ளன. மேற்குப் பிரகாரத்தில் நாகங்களின் திருவுருவங்கள் அஷ்டோத்திரச் சிவலிங்கம், மாரியம்மை, அம்பிகை, கண்ணப்பர், விநாயகர், நந்திதேவர், சண்டேசுவரர் ஆகியோர் திருவுருவங்கள் கிழக்கு நோக்கியுள்ளன. அடுத்துச் சுப்பிரமணியர், வள்ளி தெய்வயானையோடு தனிச்சந்நிதியில் கிழக்கு நோக்கியவாறு உள்ளது. வடக்குப் பிரகாரத்தில் வடமேற்குக் கோடியில் சிவகாமசுந்தரி சந்நிதி கிழக்கு நோக்கியவாறு உள்ளது. இச் சந்நிதியின் முன்புறத்தில் வடகிழக்கு முனையில் நவக்கிரகங்கள் சந்நிதி உள்ளது. இப் பிரகாரத்தின் வடகிழக்குக் கோடியில் சனீசுவரர் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. அடுத்து வயிரவர் திருவுருவம் தெற்கு நோக்கியவாறுள்ளது. கிழக்குப் பிரகாரத்தில் நாகராசன், விநாயகர் ஆகியோர் திருவுருவங்கள் வன்னிமரத்தடியில் காணப்படுகின்றன.

அடுத்துச் சற்று மேற்கில் சிவலிங்கம், அதனடியில் குழந்தையின் உருவம் அதன் அருகில் புலியின் உருவம் ஆகியவற்றைக் காண்கிறோம். இங்குள்ள பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றை அடுத்து நந்திதேவர் சந்நிதி மேற்கு நோக்கியவாறுள்ளது. கருவறை வாயிலினுள் செல்வோம் எனில் தென்புறத்தில் நால்வர் திருவுருவங்கள் வடக்குநோக்கியும் சற்று மேற்கில் சோமாசுகந்தர், வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர், அத்திரதேவர், விநாயகர், சந்திரசேகரர், அம்பிகை, அருணகிரிநாதர், பிரதோடமூர்த்தி, தண்டபாணி, பாலசந்திரமுருகப்பெருமான், சண்முகர், வீரபாகுதேவர், சமந்தரேசுவரர், பிட்சாடனர், சண்டேசுவரர் ஆகியோரின் உற்சவத்திருமேனிகளும் உள்ளன.

கருவறை வாயிலில் துவாரபாலகர் இருவர் திருவுருவங்கள் கிழக்கு நோக்கியுள்ளன. தென்புறத்துத் துவாரபாலகருக்குத் தெற்கில் விநாயகர் திருவுருவம் உள்ளது. வடபுறத்துத் துவாரபாலகர் திருவுருவத்திற்குச் சற்று வடக்கில் நடராசர் சந்நிதி தெற்குநோக்கியுள்ளது. இங்குச் சிவகாமசுந்தரியின் திருவுருவமும் உள்ளது. தென்புறத்தில் அறுபத்துமூவர் திருவுருவங்கள் வடக்கு நோக்கியுள்ளன. இப்பிரகாரத்தின் மேற்குக் கோடியில் சனீசுவரர் சந்நிதி உள்ளது. அடுத்து மேற்குப் பிரகாரத்தில் பாலசுப்பிரமணியர் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது.

ப

கருவறைக் கோட்டச் சுவர்மாடங்களின் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, மேற்கில் இலிங்கோற்பவர் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் உட்பிரகாரத்தின் வடகிழக்குக்கோடியில் தல விநாயகர் திருவுருவமும் உள்ளன. கருவறையில் கருப்புலீசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார்.

கௌண்டிஞ்சனால் தோற்றுவிக்கப்பட்ட (கமண்டல நதி) சிற்றாறு இதன் முதன்மைத் தீர்த்தமாகும். இக்கோயிலின் உட்கோபுரத்திற்கு வடக்கில் பெருஞ்சிங்க வடிவில் அமைந்துள்ள நடைபாவிக்கிணறு இதன் முக்கியமான தீர்த்தமாகும். இதில் அமைந்துள்ள சிற்பம் இரண்டு யானைகளின் மீது சிங்கம் அமர்ந்துள்ளது போன்று அமைக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பிரகாரத்தில் ஐந்து நிலைக் கோபுரம் ஏழு கலசங்களுடன் விளங்கி வருகிறது. சுவாமிக்கு மூன்று நிலை விமானமும் அம்பிகை சந்நிதிக்கு மூன்று நிலைவிமானமும் சண்முகர் சந்நிதிக்கு இரண்டு நிலைவிமானமும் உள்ளன. இரண்டாம் வாயிலுக்கு மூன்று நிலைக் கோபுரம் உள்ளது. சனீசுவரர் கோயிலுக்கும் விமானம் உள்ளது. கிழக்குக் கோபுரத்தின் உட்பக்கத்தில் அறுபத்துமூவர் திருவுருவங்களும் திருஞானசம்பந்தர் வரலாற்றுச் சிற்பங்களும் சுதை வடிவிலுள்ளன.

தலவரலாற்றை விளக்கும் நிகழ்ச்சிகளும் அஷ்டலட்சுமிகள், நவசத்தியர், அபிராமி, சனீசுவரர், நவக்கோள் திருவுருவங்களும் பழத்திற்காகப் போட்டியிட்டு வென்று அம்மையப்பரிடம் மாங்கனி பெறும் விநாயகர் திருவுருவமும் சுதைச் சிற்பங்களாக உள்ளன.

குருக்கள் இருவேளைப் பூசைபுரிகின்றார். அன்னாபிடேகக் கட்டளை, சஷ்டிக்கட்டளை போன்ற பத்துக்கும் மேற்பட்ட அறக்கட்டளைகள் இயங்கி வருகின்றன.

இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாக அலுவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 24,676/_ உருபாயாகும்.

---

* இக்கோயில் இறைவரின் பெயர் யானையொடும் புலியோடும் சம்மந்தப்பட்டிருப்பினும் கரிப்பொதீசுவரர் என்னும் பெயரே உண்மைப்பெயராகும். கரி (கறி) என்பது மிளகைக் குறிக்கும். மிளகுப்பொதிகளுக்குக் காவலாக இறைவன் வந்ததால், கரிப்பொதிக்காவலீசர் என்னும் பெயர் இவருக்கு அமைந்து, பின்னர் இப்பெயர் கரிப்பொலீசுவரராகிக் காலப்போக்கில் கருப்பூலீசுவரர் எனத் திரிபு எய்திற்று. பிற்காலத்தில் புலியோடும் யானையோடும் தொடர்புடைய புராணக்கதை உண்டாவதற்கு இப்பெயரே காரணமாயிற்று. வடமொழியில் இவ்விறைவன் பெயர் பாலசார்த்துல்லீசர் என்பதாகும். சார்த்துதல் - மிளகு; பாலன் - காவலன்; ஆனால் சார்த்து என்னும் சொல் சார்த்துல்லியமாகிப் புலியைக் குறித்து நின்றது. இவ்வகையில் புராணக்கதைக்கு இதுவும் ஊன்றுகோலாக உதவிற்று.

இக்கதையின் அடிப்படையையும் அருகிலுள்ள திருவிரிஞ்சிக் கதையையும் நோக்குமிடத்து மிளகு வணிகர்கள் இங்கு மிகுதியான எண்ணிக்கையில் இருந்தார்கள் என்பது தெரிய வருகிறது.)

## குரங்கணில் முட்டம்

## வாலீசுவரர் கோயில்

வடஆர்க்காடு மாவட்டம் செய்யாறு வட்டத்தில் பாலாற்றின் தென்கரையில் 44மீட்டர் நீளமும் 30 மீட்டர் அகலமும் கொண்ட 1,320 மீட்டர்ச் சதுரப் பரப்பில் மேற்கு நோக்கியவாறு இக்கோயில் இருக்கின்றது. அண்மையில் இக்கோயில் வனப்புடைய மதில்களுடன் புதுப்பிக்கப் பெற்றுள்ளது.

இக்கோயிலுக்கும் ஊருக்கும் 'குரங்கணில் முட்டம்' என்னும் பெயர் விளங்கி வருகிறது. இங்கு எழுந்தருளியுள்ள சிவலிங்கப் பெருமானைக் குரங்கு, அணில், காகம் ஆகிய மூன்றும் வழிபட்டதால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டுள்ளது.


காக்கை, முட்டம் என்னும் பெயரால் உணர்த்தப் பெற்றுள்ளது. குரங்குக்கு வாலி என்னும் பெயரும் உள்ளது. வாலி இங்குச் சிவபெருமானுக்கு வழிபாடு ஆற்றியதால் இப்பெருமான் வாலீசுவரர் என்னும் பெயரிலும் இங்குப் போற்றப்பெறுகின்றார்.

உயிரினங்கள் 84 இலட்சம் வகையின எனவும் இறைவன் அவ்வுயிர்களுக்கு உயிருக்குயிராய் நின்று, காத்து அருள்புரிந்துவருகிறார்[1] எனவும் திருஞானசம்பந்தர் தாம் அருளிய திருவீழிமிழலைப் பதிகப் பாடல் ஒன்றில்[1] எடுத்துக்காட்டியுள்ளார்.


பறவைகளும் திருவருள் பெறத்தக்கன என்பதைக் காட்டும் முறையில் சிவபெருமான் கரிக்குருவிக்கு உபதேசித்தார் எனவும் நாரைக்கு முத்தி அளித்தார் எனவும் இழிந்ததெனக் கருதப்படும் பன்றியின் குட்டிகளுக்கும் அவர் பாலூட்டினார் எனவும் திருவிளையாடற்புராணம் கூறுகிறது. இத்தலத்தில் குரங்கு, அணில், காகம் ஆகிய இம்மூன்றும் சிவபெருமானை வழிபட்டு அவ்வழிபாட்டின் பயனாக வழியாகத் தம் பிறவிப் பயனை எய்தின என்றும் கூறுவர்.

இக்கோயிலில் இலந்தை மரம் தலவிருட்சமாக உள்ளது.

குரங்கணில் முட்டம்



கோயிலும் தீர்த்தமும்



குடைவரை

142.2.11

மேற்கு நோக்கிய இக்கோயிலினுள் நுழைந்ததும் நந்தி, பலிபீடம் ஆகியவற்றின் திருவுருவங்கள் கருவறையை நோக்கியுள்ளன. இடமிருந்து வலம் செல்லும் வழியில் கிழக்கு நோக்கி வள்ளி, தெய்வயானையுடன் காட்சியளிக்கும் சுப்பிரமணியர் திருவுருவம் உள்ளது. அடுத்துக் காசி விசுவநாதர், விசாலாட்சி ஆகியோர் திருவுருவங்கள் கிழக்கு நோக்கியுள்ளன. வயிரவர் திருவுருவம் வடகிழக்குக் கோடியில் தெற்கு நோக்கியிருக்கிறது. வயிரவருக்குத் தெற்கில் சூரியன் திருவுருவம் மேற்கு நோக்கியவாறு இருக்கின்றது. தெற்குப் பகுதியில் வடக்கு நோக்கியவாறு சப்தமாதர்கள் சந்நிதி இருக்கிறது. அடுத்து நால்வர் சந்நிதியும் சம்பந்தர் சந்நிதியும் வடக்கு நோக்கியுள்ளன. நுழைவாயிலில் சந்நிதிக்கு இடப்புறத்தில் விநாயகர் திருவுருவம் கிழக்கு நோக்கியுள்ளது.

கருவறையில் மேற்புறத்துச் சுவர்மாடத்தில் திருமாலும் வடபுறத்துச் சுவர் மாடத்தில் பிரமதேவரும் அடுத்துத் துர்க்கையும் துர்க்கைக்குச் சற்று வடக்கில் சண்டேசுவரரும் உள்ளனர். பிரமதேவரும் துர்க்கையும் வடக்கு நோக்கி வீற்றிருக்கிறார்கள். சண்டேசுவரர் தெற்கு நோக்கியுள்ளார். சண்டேசுவரர் சந்நிதிக்குக் கிழக்கில் சூரியனுக்கு எதிரில் நவக்கிரகங்கள் சந்நிதி உள்ளது. கருவறைக் கிழக்குச் சுவரில் இலிங்கோற்பவரும் தெற்குச்சுவரில் தட்சிணாமூர்த்தியும் காட்சியளிக்கின்றனர். கருவறைக்குள் இலிங்க வடிவில் வாலீசுவரர் மேற்கு நோக்கிக் காட்சியளிக்கிறார். இச்சந்நிதி 6 மீட்டர்ச் சதுரப்பரப்பில் இருக்கிறது. இதே பகுதியில் "இறையார் வளையம்மை" என்னும் அம்பிகை சந்நிதி தெற்கு நோக்கி 6 மீட்டர்ச் சதுரப்பரப்பில் இருக்கின்றது. திருஞானசம்பந்தர் தாம் அருளிய இத்தலத்துப் பதிகத்தில் அம்மையை இறையார் வளை எனக் காட்டியுள்ளார். "இறையார் வளை" என்பது தம் முன்கையில் வளையல் அணிந்த அம்மையார் என்பதைக் குறிக்கிறது.

இங்குச் சிவபெருமானை வழிபட்ட காகத்தின் பெயரால் அழைக்கப்படும் "காக்கைமடு" என்னும் திருக்குளம் இக்கோயிலின் வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய மூன்று புறங்களையும் சூழ்ந்துள்ளது. நீராடிச் சிவபெருமானைப் பூசிக்கவேண்டும் என்பதற்காகக் காகம் தன் மூக்கினால் கீறி இக்குளத்தை அமைத்தது என்பர். சற்றுத் தூரத்திலிருந்து இக்குளத்தைப் பார்க்கும்போது, இக்குளத்தின் வடபகுதி காக்கையின் அலகுபோலவும் கிழக்குப்பகுதி அதன் உடல் போலவும் தென்பகுதி அதன் கால்கள் போலவும் ஒருவாறு தோன்றுகின்றன. இன்றும் காகங்கள் பிற்பகலில் இங்கு நீரில் மூழ்கி எழுவதை நாம் காணலாம்.

இக்கோயிலுக்கு மூன்று பிரகாரங்கள் உள்ளன. இக்கோயிலின் வெளிப் பிரகாரச் சுவர் 2 மீட்டர் உயரத்தில் காணப்படுகிறது. இதனையொட்டி வெளிப் பிரகாரம் அமைந்துள்ளது. இரண்டாம் பிரகாரம் மதிற்சுவரின் உட்பகுதியை ஒட்டி நாற்புறமும் 3 மீட்டர் அகலத்தில் இருக்கின்றது. முதற்பிரகாரம் கோயிலின் உட்புறத்தில் இறையார் வளையம்மை, வாலீசுவரர் சந்நிதி ஆகியவற்றை ஒட்டி அமைந்துள்ளது. இம்மூர்த்தங்கள் உள்ள பகுதி 24 மீட்டர் நீளமும், 18 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் உள்ளது.

இக்கோயிலின் வெளிமண்டபம் 10 மீட்டர் நீளத்திலும் 9 மீட்டர் அகலத்திலும் 3 1/2 மீட்டர் உயரத்திலும் 12 தூண்களுடன் உள்ளது. சப்தமாதர்கள் சந்நிதியில் 9 மீட்டர் நீளமும், 5 மீட்டர் அகலமும் கொண்டு 3 மீட்டர் உயரத்தில் 4 வட்டத் தூண்களுடன் ஒரு மண்டபம் இருக்கின்றது. வாலீசுவரர் சந்நிதியின் முன்மண்டபம் 3 1/2 மீட்டர் நீளமும், 3 மீட்டர் அகலமும் கொண்டு 4 வட்டத்தூண்களுடன் காணப்படுகிறது.

அணிலும் காக்கையும் இக்கோயிலில் வழிபட்டன என்பது இக்கோயில் நுழைவாயிலின் தென்புறத்திலுள்ள சிற்பத்தாலும் குரங்கு வழிபட்டது என்பதை வடபுறத்திலுள்ள சிற்பத்தாலும் அறியமுடிகிறது. இறையார் வளையம்மை, வாலீசுவரர் ஆகியோர் சந்நிதிகளின் மண்டபத் தூண்களில் சிவலிங்கம், விநாயகர், வாலி, ஆஞ்சநேயர், துர்க்கை ஆகியோரின் சிற்பங்கள் எழிலுறக் காணப்படுகின்றன. பன்றி, அன்னம் ஆகியவற்றின் சிற்பங்களும் இங்குக் காணப்படுகின்றன.

இக்கோயிலுக்கு நாள்தோறும் காலையில் ஒருவேளைப் பூசை மட்டும் நடைபெறுகிறது. மார்கழி மாதத்தில் இரு வேளைப்பூசை நடைபெறுகிறது. கார்த்திகை மாதத்தில் இலட்சதீபப் பெருவிழா நடைபெறுகிறது.

திருஞானசம்பந்தர் இக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது ஒரு பதிகம் பாடியுள்ளதால், திருஞானசம்பந்தர் திருநாள் இக்கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சிவராத்திரி முதலிய நாள்களில் கோயில் குருக்கள் சிறிய அளவில் பூசைகள் மேற்கொண்டு வருகிறார்.

இங்குள்ள இறைவன் மீது திருஞானசம்பந்தர் அருளிய பதிகத்தில், இப்பதியின் இயற்கை வனப்பை 'கொழுநீர் வயல் சூழ்ந்த' 'கோலப்பொழில் சூழ்ந்த', "முடையார் புனல் மல்கு குரங்கணில் முட்டம்" என்றெல்லாம் அமைத்துக் காட்டியுள்ளார்.

இவ்வூரில் இக்கோயிலுக்குரிய ஆறு கல்வெட்டுகள் உள்ளன. இவை கோனேரின்மை கொண்டான் (முதல் குலோத்துங்கன்) கி.பி.1070–1120, கிருஷ்ண தேவராயர் (கி.பி.1509–1529), இராட்டிரகூட கன்னர தேவன் ஆகியோர் காலத்தவை. அவற்றில் இத்தலம் காளியூர்க் கோட்டத்து இடகழி நாட்டு மாவண்டூர்ப் பற்றத்துப் பல்லவபுரமான திருக்குரங்கணில் முட்டமுடைய நாயனார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[3] பூசைகள் நடத்தப்படுவதற்காகச் சகம் 1451–ஆம் ஆண்டில் கிருஷ்ண தேவ மகாராயர் பல்லவபுரம் கிராமத்தை அளித்தார். இஃது இவ்வூருக்குச் சற்று அருகில் இருக்கிற ஊராகும்.[4] இராட்டிர கூடக் கன்னரதேவன் பூசைக்காக நிலமளித்ததும் கூறப்படுகிறது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தியவரான சம்புவராயரால் சத்தி மங்கலமாகிய அம்மை நல்லூர் கிராமத்தை நிவந்தமாகவிட நீறணிந்தான் சேதிராயனுக்கு உத்தரவிட்டான் என மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது.[5] மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178–1216) காலத்தில் நீறணிந்தான் சேதிராயன் என்பான் சத்திமங்கலம் என்ற அம்மைநல்லூரைத் தானம் செய்தான் என்பதும் அதில் இவ்வூரை அடுத்துள்ள தூசி என்ற ஊர் குறிக்கப்பட்டுள்ளது

என்பதும் கிருஷ்ணதேவராயன் (கி.பி.1529) காலத்துக் கல்வெட்டு ஒன்றில் இறைவர் பெயர் கொய்யாமலரீசுவரர் என்று குறிக்கப்பட்டிருப்பதும் அறியத்தக்கன. திருஞானசம்பந்தர் தாம் அருளிய இத்தலத்துப் பதிகத்தின் எட்டாம் பாடலில் "கொய்யார் மலர் சூடி" எனக் குறித்துள்ளார். கொய்யார் மலர் என்னும் தொடர் கொய்யப்படுதல் பொருந்திய மலர் என்பதைக் காட்டுகிறது. கொய்யார்மலர் என்பது கொய்யா மலர் எனக் கல்வெட்டில் காணப்படுகிறது.

இவ்வூரில் பல்லவர் காலத்திய குடைவரைக் கோயில் காணப்படுகிறது. இங்குள்ள இறைவர் பெயர் கல்லாடைக் காத்தாள்வார் என்று குறிக்கப்படுகிறது.

இக்கோயிலுக்கு 2 ஏக்கர் நன்செய் நிலங்கள் மட்டும் உள்ளன இவற்றிலிருந்து வரப்பெறும் வருமானம் இக்கோயில் பூசைக்காகப் பயன்படுத்தப்படுகிறது. இக்கோயில் பூசகருக்கு மாதந்தோறும் 50 உரூபாய் ஊதியம் அளிக்கப்படுகிறது. அவ்வப்போது கோயில் பூசைக்குத் தேவையான பொருள்களை இந்து சமய ஆட்சித்துறையினர் அளித்து வருகிறார்கள்.

---

1. முதல் சைவத் திருமுறை - 132-4 திருஞானசம்பந்தர்
2. முதல் சைவத் திருமுறை-பதிகம் 31-5 திருஞானசம்பந்தர்
3. 290-1902;
4. 295-1902
5. 291-1902

## குறும்பேரி

# சென்ன கேசவப்பெருமாள் கோயில்

திருப்பத்தூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 12 கிலோமீட்டர்த் தொலைவில் திருப்பத்தூர்-சிங்காரப்பேட்டைச் சாலையில் கீழ்த்திசையில் இக்கோயில் 5 செண்ட் பரப்பில் கிழக்கு நோக்கியவாறுள்ளது.

இங்குக் குறும்பர்கள் மிகுதியான எண்ணிக்கையில் இருந்ததாலும் அவர்கள் ஆடுகளை மேய்ப்பதற்கு இடம் மிகுதியாக ஏரி அருகில் இருந்ததாலும் இக்கிராமம் குறும்பேரி என்னும் பெயர் பெற்றிருக்கலாம் எனச் சிலர் கருதுகிறார்கள்.

கோயிலின் நுழைவாயிலின் உட்புறத்தில் விநாயகர் சந்நிதி உள்ளது. கருவறையில் சென்ன கேசவப் பெருமாள் சீதேவி, பூதேவி ஆகியோருடன் கிழக்கு

நோக்கியவாறு காட்சியளிக்கிறார். இங்குச் சென்ன கேசவப்பெருமாள், சீதேவி, பூதேவி, விநாயகர், பெருமாள் ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன.

இக்கோயிலின் வெளிப்புறத்தில் மதிற்சுவர்கள் 36 மீட்டர் நீளத்திலும 12 மீட்டர் அகலத்திலும் உள்ளன.

இக்கோயிலுக்கு 2.22 ஏக்கர் நன்செய் நிலமும் 4.14 ஏக்கர் புன்செய் நிலமும் சிறிய கடைகள் ஐந்தும் உள்ளன. கோயிலின் ஆண்டு வருமானம் 4,050 உருபாயாகும். இக்கோயில் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் பெற்றுள்ள அறங்காவலர்களால் நிருவாகம் செய்யப்படுகிறது.

## கூழமந்தல்

# சோழீச்சுரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரத்திலிருந்து 18 கிலோமீட்டர்த் தொலைவில் செய்யாறு வட்டத்தில் கூழமந்தல் கிராமத்தில் 60 செண்ட் நிலப்பரப்பில் தெற்கு நோக்கிய வாயிலும் கிழக்கு நோக்கிய சந்நிதியும் கொண்டு அமைந்துள்ளது.

தஞ்சாவூரில் முதலாம் இராசராச சோழன் நிறுவிய பெரிய கோயிலைப் போன்று அம்மன்னன் மகன் முதலாம் இராசேந்திரன் கங்கைகொண்ட சோழீச்சுரத்தை அமைத்தான்.

அதனையொட்டித் தன் குலகுருவான ஆசார்ய சர்வ சிவ பண்டிதர் ஆணையின் படி இங்கும் ஒரு கங்கைகொண்ட சோழீச்சுவரத்தை எழுப்பினான்.

நுழைவாயிலின் இருபுறங்களிலும் ஓங்கி உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் துவார பாலகர் இருவர் திருவுருவங்கள் உள்ளன. கிழக்குப் பிரகாரத்தில் பலிபீடம், நந்திதேவர் சந்நிதி ஆகியவை மேற்கு நோக்கியுள்ளன. கருவறையில் பெரிய சிவலிங்க வடிவில் கங்கைகொண்ட சோழீச்சுவரர் கிழக்கு நோக்கியவாறுள்ளார்.

கருவறை விமானம் சதுரமாகத் தொடங்கி வட்டச் சிகரத்துடன் உள்ளது. இஃது அடிமுதல் நுனிவரை மிகுந்த வேலைப்பாடுடன் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலில் மகாமண்டபமும் உள்மண்டபமும் உள்ளன. கோயிலுக்கு எதிரே சதுரங்க மண்டபம் உள்ளது. இது தற்போது சிதைந்துள்ளது.

கோயிலின் சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கவை பிட்சாடனர், பூதகணங்கள், கசாந்தகர், கங்காளர், திரிபுராந்தகர் ஆகியோர் சிற்பங்களாகும்.

இக்கோயிலில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன.

சிவன் கோயிலின் முன்புறமுள்ள மண்டபத்தின் தெற்குச் சுவரிலுள்ள சோழமன்னன் இராசாதிராசதேவர் (1 அல்லது 2) முப்பத்துமூன்றாம் ஆண்டுக் கல்வெட்டு ஒரு விளக்கு வைப்பதற்காகத் தொண்ணூறு செம்மறி ஆடுகள் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.[1]

இதே மண்டபத்தின் வடக்குச்சுவரிலுள்ள சோழமன்னர் உடையவர் இராசேந்திர சோழதேவர் 1 என்கிற பரகேசரிவர்மன் முப்பத்திரண்டாம் ஆண்டுக் கல்வெட்டு நடனம் புரியும் பெண்களுக்கு நிலமும் பொன்னும் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[2]

இதே சுவரில் பொறிக்கப்பட்டது சோழமன்னர் இராசாதிராசன் 1 நினைவு பெறாக் கல்வெட்டாகும்.[3]

இக்கோயிலுக்குத் தென்புறத்தில் திருமால் கோயில் இருக்கிறது. இங்குத் திருமால் தம் தேவியருடன் காட்சியளிக்கிறார். இக்கோயில் இடிந்த நிலையில் உள்ளது. சோழீச்சுவரர் கோயிலுக்கு முறையான பூசை இல்லை. தமிழக அரசுத் தொல்பொருள் துறையின் பாதுகாப்பில் இக்கோயில் அமைந்துள்ளது. திருமால், வர்த்தமானர், திருமால் தேவியர் சிலைகள் மட்டும் கேட்பாரற்று வயல் வெளியில் உள்ளன.

---

(1. 413/1902; 2. 414/1902; 3. 415/1902.)

# கொரட்டி

## காளத்தீசுவரர் கோயில்

இக்கோயில் திருப்பத்தூர்-ஊத்தங்கரைச் சாலையில் 8 கிலோமீட்டர்த் தொலைவில் கொரட்டி கிராமத்தில் 1/2 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கு நோக்கியவாறு உள்ளது.

காளமாகிய பாம்பும் அத்தியாகிய யானையும் பூசித்தன. இது பாடல்பெற்ற தலம் ஆகும்.

மேற்கு நோக்கி அமைந்த இக்கோயிலில் முதலில் இராசகோபுரம் உயர்ந்தோங்கி நிற்கின்றது. இக்கோயிலின் வாயில் வழியாக உள்நுழைந்ததும் இடப்புறமாக அம்மன் சந்நிதியையும் அடுத்து நேராகக் கொடிமரத்தையும் அதனையடுத்து மயில் மீது அமர்ந்த நிலையில் உள்ள ஆறுமுக சுவாமியின் தனிச் சந்நிதியையும் காண்கிறோம். இச்சந்நிதிகளுக்குச் சிறிய விமானங்கள் நான்கு உள்ளன. இடப்புறமாகக் கல்லால் கட்டப்பட்ட காளத்தீசுவரர் கோயில் உள்ளது. சிவலிங்க வடிவில் மேற்கு நோக்கியவாறு காளத்தீசுவரர் அருள் பாலிக்கிறார். கோயில் கருவறைச் சுவர் மாடங்களில் தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. அருகில் காலவயிரவர் திருவுருவம் உள்ளது. உள்மண்டபத்தில் தெற்கு வாயிலில் விநாயகர் சந்நிதியும் உற்சவ திருவுருவங்களும் உள்ளன. நடராசர் திருமேனி 60 செமீ 4 செமீ. அளவிலும் சிவகாமசுந்தரி, அத்திரதேவர், சப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, சந்திரசேகரர், தனி அம்மன், வேங்கடரமணப் பெருமாள், சீதேவி, பூமாதேவி. ஆகியோரின் உற்சவத் திருமேனிகள் உள்ளன.

இக்கோயிலின் இராசகோபுரம் சிதைவுற்றுள்ளது.

காமிக ஆகமமுறையில் ஒரு காலப்பூசை நாள்தோறும் செய்யப்படுகிறது. பங்குனி உத்திரத்தில் பிரமோற்சவம் பத்து நாள்கள் நடைபெறுகிறது. ஆடிக்கிருத்திகை, கார்த்திகை தீபம், மார்கழி சங்கராந்தி, தமிழ் ஆண்டுப் பிறப்பு ஆகிய சிறப்பு நாள்கள் கொண்டாடப்படுகின்றன.

இக்கோயிலுக்கு 18.49 ஏக்கர் நன்செய் புன்செய் நிலங்கள் உள்ளன. 12.67 ஏக்கர் மட்டும் கோயில் வசம் உள்ளது. மீதி ஆக்கிரமிப்பில் உள்ளது. பங்குனி உத்திரம் கட்டளை செய்ய 9.09 ஏக்கர் நிலம் விடப்பட்டுள்ளது. இக்கோயிலின் நிலக்குத்தகை முக்கியமான வருமானமாகும். பங்குனி மாதத்தில் காவடித் திருவிழாவின்போது உண்டியல் மூலம் 500 உரூபாய் கிடைத்துவருகிறது. இக்கோயிலுக்கு ஆண்டு வருமானம் 2,000 உரூபாயாகும். அரசினரிடமிருந்து மானியமாக 362/_ உரூபாய் வருகிறது.

இக்கோயில் நிருவாகம் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் மூலம் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலர்களிடம் உள்ளது.

மயில் வாகனமும் சப்பரங்கள் இரண்டும் நல்ல நிலையில் உள்ளன.

## கொரட்டி
# வேங்கடரமணப் பெருமாள் கோயில்

கொரட்டி ஊருக்கு அப்பால் 1 1/2 கிலோமீட்டர்த் தொலைவில் வேங்கடரமணப் பெருமாள் கோயில் இருக்கின்றது.

இக்கோயிலின் கருவறையில் பெருமாள் நின்றநிலையில் அருள்பாலிக்கிறார். அலர்மேல்மங்கை தாயாரும் தனிச்சந்நிதியில் உள்ளார்.

பூசை ஒழுங்கான முறையில் செய்யப்படுவதில்லை. இக்கோயிலின் மதில்கள் முழுமையாக இடிந்துவிட்டன. இதற்குத் திருப்பணி மிகவும் தேவைப்படுகிறது.

## சக்கரமநல்லூர்
# சுந்தர வரதராசப் பெருமாள்கோயில்

இக்கோயில் இராணிப்பேட்டை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து ஆர்க்காடு_இலுப்பைக்குடி வழியில் ஆர்க்காட்டிலிருந்து 13 கிலோமீட்டர்த் தொலைவில் 2 ஏக்கர்ப் பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயில் செவிவழிச் செய்திகளின்படி இவ்வூர்த் திருச்சக்கர அமுதூர் என்றும் திருச்சக்கரமூதூர் என்றும் குறிப்பிடப்படுகின்றது. திருச்சக்கரமாகிய சுதர்சனம் நிலைபெற்ற ஊராதலின் இது திருச்சக்கரமூதூர் எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர்.

அழகில் சிறந்து விளங்குகின்ற பெருமாள் என்பதால் சுந்தரவரதர் என்னும் பெயர் பெருமாளுக்கு வழங்கிவருவதாயிற்று.

இவ்வூருக்குத் திருச்சக்கரை அமுதூர் என்னும் பெயரும் உள்ளது. சர்க்கரைச்

சோற்றுக்கு நிகரான சுவைமிக்க ஊர் என்பது இதன் பொருளாகும்.

இக்கோயிலில் உலாத்திருமேனிகளாகச் சுந்தரவரதர் உபயநாச்சிமார்களுடன், இராமர், சீதை, இலக்குவன், ஆஞ்சநேயர், ஆழ்வார்கள் நம்மாழ்வார், கலியன், பள்ளியறைச் சுந்தரர், உபயநாச்சிமார்கள், சக்கரத்தாழ்வார் ஆகியோர் உள்ளனர்.

இக்கோயிலின் கிழக்கு வாயில் வழியாகப் பிரகாரத்தில் வலம் வரும்போது பிரகாரத்தின் தென்மேற்குக் கோடியில் சௌந்தரவல்லித் தாயார் சந்நிதி கிழக்கு நோக்கியவாறு இருப்பதைக் காண்கிறோம். மேற்குப் பிரகாரத்தின் வடக்குப் பகுதியில் முதலில் சுவர்க்க வாசலும் அடுத்து இராமர் சந்நிதியும் ஆண்டாள் சந்நிதியும் இருக்கின்றன. வடக்குப் பிரகாரத்தில் ஆழ்வார்கள் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது.

பின்னர்த் தெற்கு நோக்கியவாறுள்ள வாயிலின் வழியாகக் கருவறைப் பகுதிக்குள் சென்று அடுத்த வாயிலைக் கடந்து கிழக்கு நோக்கியவாறுள்ள சுந்தரவரதராசர், உபயநாச்சிமார்கள் ஆகியோரை வழிபடலாம். இச்சந்நிதியின் வாயிலின் இருபுறங்களிலும் துவாரபாலகர் இருவர் திருவுருவங்கள் இருக்கின்றன.

கிழக்கு வாயில் மீதுள்ள ஐந்து நிலைக் கோபுரம் 20 மீட்டர் உயரத்தில் ஐந்து செப்புக் கலசங்களைக் கொண்டுள்ளது. சுந்தரவரதர் சந்நிதி மீது சதுர வடிவத்தில் தொடங்கி வட்டவடிவத்துடன்முடியும் இரண்டு நிலைகள் கொண்ட விமானமும் சௌந்தரவல்லித் தாயார் சந்நிதி மீது இரண்டு நிலைகள் கொண்ட விமானமும் ஆண்டாள் சந்நிதி மீது சிறு விமானமும் உள்ளன.

கொடியேற்று மண்டபம் பிரகாரத்தின் தென்கிழக்குக் கோடியில் உள்ளது. கிழக்கு நுழைவாயிலை அடுத்து உட்புறம் வேதபாராயண மண்டபம் உள்ளது. கருவறைக்கு முன்புறமுள்ள உள்மண்டபத்திற்குக் கிழக்கில் மகாமண்டபம் உள்ளது. தாயார் சந்நிதியில் மகாமண்டபமும் அதனையடுத்துக் கருவறையின் முன்புறத்தில் உள்மண்டபமும் ஆண்டாள் சந்நிதிக்கும் தாயார் சந்நிதிக்கும் ஒரு பொது மண்டபமும் ஆழ்வார்கள் சந்நிதிமுன் ஒரு மண்டபமும் உள்ளன. வாகனமேற்று மண்டபம் கோயிலுக்கு வெளியில் முன்புறத்தில் இருக்கின்றது.

நாள்தோறும் இருகாலப் பூசையினைப் பட்டாச்சாரியார் செய்து வருகிறார். ஆழ்வார் திருநாள்கள், வைகுண்ட ஏகாதசி, கார்த்திகை விளக்கீடு, சித்திரைப் பௌர்ணமி, ஜெயந்தி ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

கருடன், யானை, சிங்கம், கிளி, சூரியபிரபை, சந்திரபிரபை, குதிரை, பல்லக்கு, புண்ணியகோடி விமானம் ஆகிய விமானங்கள் உள்ளன.

இக்கோயிலுக்கு ஏறத்தாழ 100 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இது கம்மவார் நாயுடு இனத்திற்குச் சொந்தமான கோயிலாகும். இந்து சமய அறநிலையத் துறைத் துணை ஆணையர் மேற்பார்வையில் இக்கோயில் இயங்கிவருகின்றது.

## சக்கரமநல்லூர்

# திருக்கண்டீசுவரர் கோயில்

இக்கோயில் இராணிப்பேட்டை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து ஆர்க்காடு இலுப்பைக்குடி வழியில் ஆர்க்காட்டிலிருந்து 13 கிலோமீட்டர்த் தொலைவில் தெற்கு நோக்கியவாறுள்ள வாயிலுடன் கிழக்கு நோக்கியவாறு சக்கரமநல்லூரில் 2 ஏக்கர் 73 செண்ட் நிலப்பரப்பில் உள்ளது.

மல்லம் என்பது வளமை. சக்கரம் என்பது வட்டத்தைக் குறிக்கிறது. வட்டமான வளமையால் சூழப்பெற்றதால் இவ்வூருக்குச் சக்கரமநல்லூர் என்னும் பெயர் வழங்கிவருகிறது.

பாற்கடலில் தோன்றிய நஞ்சைத் தமது கண்டத்தில் அடக்கி, அனைத்து உயிர்களையும் காப்பாற்றிய இறைவர் திருக்கண்டீசுவரர் என்னும் பெயரில் விளங்குவராயினர்.

இக்கோயிலில் தெற்கு வழியாக உள்ளே சென்று பிரகாரத்தை வலம் வருவோம் எனில், கிழக்குப் பிரகாரத்தில் மூலவர் சந்நிதியை நோக்கியவாறு பலிபீடம், கொடிமரம், நந்திதேவர் சந்நிதி ஆகியவற்றைக் காணலாம். அடுத்து உட்பிரகாரத்தின் தென்பகுதியில் நாகர் திருவுருவங்கள் இரண்டும் அவற்றையடுத்து விநாயகர் திருவுருவமும் கிழக்கு நோக்கியுள்ளன. உட்பிரகாரத்தில் தென்மேற்குக் கோடியில் விநாயகர் சந்நிதியும் இதற்கு நேரே வடமேற்குக் கோடியில் சண்முகர் சந்நிதியும் கிழக்கு நோக்கியவாறுள்ளன. இதன்பின்னர் வடக்கு உட்பிரகாரத்தில் வயிரவர் சந்நிதி தெற்கு நோக்கியவாறு உள்ளது. அடுத்துச் சூரியன் சந்நிதி மேற்கு நோக்கியவாறு இருக்கின்றது. கருவறையின் வாயிலில் இருபுறங்களிலும் துவாரபாலகர் இருவர் திருவுருவங்கள் உள்ளன.

கருவறையின் உட்புறத்தில் தெற்கில் விநாயகர் திருவுருவமும் இத்திருவுருவத்திற்கு எதிரில் வடபுறத்தில் உற்சவர்கள் சந்நிதியும் உள்ளன. கருவறையில் திருக்கண்டீசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். கருவறையிலுள்ள இப்பெருமானை வழிபட்ட பின்னர்த் திரும்பும்போது வடபுறத்தில் சுப்பிரமணியர் வள்ளி தெய்வயானையுடன் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிவதைக் காண்கிறோம். இச்சந்நிதிக்கு எதிரில் மயிலுருவம் காணப்படுகிறது. இதற்கு வடக்கில் நடராசர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது.

தென்கிழக்குக் கோடியில் அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியவாறு உள்ளதைக் காண்கிறோம். அம்மன் சந்நிதிக்கு எதிரில் வடகிழக்கு முனையில் சிங்கத்தின் உருவம், பலிபீடம் ஆகியவை உள்ளன. நவக்கிரகங்கள் சந்நிதி கிழக்குப் பிரகாரத்தில் அம்மன் சந்நிதியை அடுத்துள்ளது.

இக்கோயிலில் தீர்த்தக்கிணறு ஒன்று உள்ளது.

வாயில் 5 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. அம்பிகை சந்நிதி மீசு சதுர வடிவ விமானமும் கருவறை மீது கஜப்பிரஷ்ட மூன்றுநிலைகள் கொண்ட விமானமும் அமைந்துள்ளன. விமானம் முழுவதும் பிரமதேவர், திருமால் ஆகியோர் சுதையுருவங்கள் காணப்படுகின்றன.

கருவறை புறச்சுவர் முழுவதும் பச்சைக்கல்லால் மிக நுண்மையாக இழைக்கப்பட்டுள்ளது. ஒரு மீட்டர் உயரமுள்ள உபபீடத்தின் மீது கோயில் கட்டப்பட்டுள்ளது. புறச்சுவர்கள் பீடம், பாதம், பதுமபந்தம், கோட்டம், கும்ப பஞ்சரங்கள் ஆகியவற்றால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. கோட்டங்களுக்குக் கீழே ஒரு யாளிவரிசை அமைந்துள்ளது. இதில் ஒவ்வொரு யாளியின் வாயிலிருந்தும் குதித்து வரும் வீரனின்சிலை அழகுற அமைக்கப்பட்டுள்ளது. தவம் செய்யும் முனிவர்கள், மான், முயல், பன்றி முதலிய புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

இக்கோயிலில் உலாத்திருமேனிகளாகச் சோமாசுகந்தர், சந்திரசேகரர், வெள்ளிக்கிழமை அம்பிகை, பள்ளியறைச் சொக்கர், அம்பிகை, சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, விநாயகர், சண்டேசுவரர், மாரியம்மன், செல்லியம்மன், நடராசர், சிவகாமியம்மை, மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

குருக்கள் நாள்தோறும் இருவேளைப் பூசை செய்துவருகிறார். சித்திரைப் பௌர்ணமி, அன்னாபிடேகம், ஆடிக்கிருத்திகை, தைக்கிருத்திகை, கார்த்திகைக் கிருத்திகை, கந்தர் சஷ்டி, பங்குனி உத்திரம், மார்கழி 30 நாள்கள், திருவாதிரைப் பொங்கல், தீபாவளி ஆகிய திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இக்கோயிலுக்கு 35 ஏக்கர் நிலம் உள்ளது. தொண்டை மண்டல சைவவேளாளப் பரம்பரையினர் அறங்காவலராகப் பணியாற்றி வருகின்றனர்.

கண்டேசுவரர் கோயில்கருவறை வடக்குச்சுவரிலுள்ள திரிபுவனராசராசதேவர் 15-ஆம் ஆண்டு மகரமாதம் 13 சனிக்கிழமை புனர்பூசம் சக்கரமநல்லூர் முக்கண்ணதேவருக்குத் தாமற்கோட்டம் செயங்கொண்ட சோழமண்டலத்துத் தனியூர்ச் சக்கரமநல்லூர் இறைவருக்குப் பிள்ளையார் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் என்கிற கண்டகோபாலன் அரசப் பிரதிநிதி வசம் 500 குழி நிலம் அதிகாலை பூசைக்கென இராசராச வளநாட்டுத் திருமுனைப்பாடி நாட்டு உட்பிரிவான மங்கலநாட்டுச் சோமங்கலம் ஊர்த்தலைவனான தாமோதரன் அருளாளப் பெருமாள் என்கிறவன் அளித்த நன்கொடையைக் கூறுகிறது.[1]

அதே சுவரிலுள்ள பெருஞ்சிங்க தேவன் என்னும் பல்லவன் 22-ஆம் ஆண்டு இடபமாதக் கல்வெட்டு முன்சொன்ன கல்வெட்டை உறுதிப்படுத்தும் வண்ணம் இக்கோயில் சிவப் பிராமணர்கள், சோமங்கலம் அருளாளப் பெருமாள் என்பானிடம் 300 காசுகளைப் பெற்றுக்கொண்டு இக்கோயிலில் 12 விளக்குகளை ஏற்றுவதற்கு ஒப்பந்தம் செய்ததைக் கூறுகிறது.[2]

இதே சுவரில் பொறிக்கப்பட்ட சகம் 1683 கலி 4862விசுவ, ஐப்பசி 6-ஆம் நாள் கல்வெட்டு, சக்கரமூதூர் முதலியார்கள் பதியப்பட்ட நிலவிற்பனையைக் கூறுகிறது. திருப்பெரும்பூர் புட்பநாத நயினார், உண்டியப்ப நயினார் மகன் அகத்தியப்ப நயினார் இரு சமணர்களுக்கு வீட்டுமனையை 405 சென்னப்பட்டினம் வராகனுக்கு விற்றனர்.[3]

அதே சுவரில் திரிபுவன இராசராசதேவரின் 19-ஆம் ஆண்டில் பாடிகாப்பான் கிராமத்துத் தேவர்கள் சுந்தரன் மகனான தழுவினான் என்பவன், 3 சந்நிதி விளக்குகளை இக்கோயிலில் ஏற்ற 3 மாடை மதிப்புள்ள ஓர் எருமையை அளித்ததைக் கூறுகிறது.[4]

சம்புவராயர் ஆணை சக்கரமூதூர் ஊரவர்களுக்குப் பிறப்பிக்கப்பட்டது. இது நிலத்தீர்வை விதிப்பதற்காக 100 வேலி நிலத்தை எடுத்துக் கொண்டதைக் குறிக்கிறது. இது முக்கண்ணதேவர் கோயிலில் பொறிக்கப்படவேண்டும் எனக் கூறுகிறது.[5]

கருவறை மேற்குச்சுவரில் திரிபுவன இராசராசதேவரின் 14 (?) ஆண்டு விருச்சிக மாதம் ஞாயிற்றுக்கிழமை, 6 உத்திராட நாள் கல்வெட்டு, இக்கோயிலுக்குப் பெரியநாச்சி என்னும் பெரியநாட்டு நங்கை என்னும் தேவரடியார், அளித்த 600 காசுகளுக்காக அவளுக்கும் அவள் வழிவந்தவர்களுக்கும் திருமடைவிளாகத்தில் முதல் வீட்டுக்கு உரிமை பெறுதற்காகவும்; மேலும் 500 காசுகள் கொடுத்ததற்காகத் திருவிழாக் காலங்களில் கோயிலில் வந்திருக்கும் மரியாதை அளிப்பதற்காகவும்; கோயிலில் நிரந்தரமாக விளக்கு வைப்பதற்காகவும் சிவப்பிராமணர்கள் ஓர் உடம்படிக்கை எழுதித் தந்தது.[6]

கருவறை மேற்கு, தெற்கு ஆகிய பகுதிகளிலுள்ள இராசகேசரிவர்மன் என்னும் திரிபுவன விக்கிரம சோழதேவனின் 7-ஆம் ஆண்டுக் கல்வெட்டு பூமாதுபுணர எனத் தொடங்குகிறது. இது நித்தவிநோத சோழமண்டலத்து ஆலத்தூர் நாட்டுத் திருச்சிற்றம்பலமுடையான் திருநாகைதேவன் என்கிற செம்பியன் மூவேந்தவேளான், இக்கோயில் திருப்பணி மேற்கொள்வதற்குமுன் இக்கோயிலுக்குப் பல்வேறு தேவைகளுக்காக அளிக்கப்பட்ட நிலங்களைப் பற்றிக் கூறுகிறது. இப் பட்டியலில் நிலங்களை நன்கொடை அளித்தவர்கள் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன.[7]

இதே இடத்தில் பொறிக்கப்பட்ட மேலே குறிக்கப்பட்ட மன்னனின் அதே ஆண்டுக் கல்வெட்டு, நரலோக வீரநல்லூர் என்னும் ஊரிலுள்ள 13,500 குழி நிலங்களைத் தேவதானம் எனக் குறிக்கிறது. இக்கோயிலின் திருவிழாக்களுக்கு இந்நிலங்களின் வரிகள் பயன்படுத்தப்படுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

முந்திய கல்வெட்டிலுள்ளவர்களின் கையொப்பங்களும் இதில் உள்ளன.[8]

கருவறைத் தெற்குச் சுவரிலுள்ள விக்கிரமசோழதேவனின் 11_ஆம் ஆண்டுக் கல்வெட்டு, 588 பலம் எடையுள்ள 2 விளக்குகளைப் பற்றிக் கூறுகிறது.[9]

இதே இடத்திலுள்ள இராசகேசரிவர்மனின் 6_ஆம் ஆண்டுக் கல்வெட்டு, வத்சலதேவன் மனைவி ஆக்கம்மரசியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகைக்கான வட்டிக்காக, தேவதான நிலங்களிலிருந்தும் கிராமத்தின் வரியிலா நிலங்களிலிருந்தும் பெறப்படும் நெல், பள்ளிச்சந்தம் நிலங்களிலிருந்து கிடைக்கப்பெறும் நெல், பொன் ஆகியவை சோழீசுவரமுடைய மகாதேவர் கோயில் திருவிழாக்கள் ஊரார் நடத்தப் பயன்படுத்தப்பட்டதைக் குறிக்கிறது.[10]

இதே இடத்திலுள்ள திரிபுவனக் குலோத்துங்கச் சோழன் 25_ஆம் ஆண்டுக் கல்வெட்டு, பொன்னைக் கிராமத்தலைவன் சித்தராமனிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு பழங்காசுகளுக்கு வரவேண்டிய வட்டிக்காக, இரண்டு விளக்குகளை இக்கோயிலில் வைக்கச் சிவப்பிராமணர்கள் எழுதிக்கொடுத்த உடன்படிக்கையைக் குறிக்கிறது.[11]

தெற்குச்சுவரிலுள்ள திருக்காளத்திதேவர் கண்டகோபாலன் 6_ஆம் ஆண்டுக் கல்வெட்டு இக்கோயிலின் இறைபணிக்கான புனிதத் துணிகளுக்காகவும்; வேறு தேவைகளுக்காகவும்; இக்கோயிலில் நான்கு விளக்குகள் வைப்பதற்காகவும் கோயிலின் தேவதான நிலங்களிலிருந்து கிடைக்கப்பெறும் வருவாய்களையும் திருமடைவளாகத்தில் ஓடும் தறிகளின் வரிகளையும் கிராமத்தின் எண்ணெய்ச் செக்குகளிலிருந்து கிடைக்கப்பெறும் கட்டணங்களையும் அளிக்க தியாக சமுத்திரப்பாட்டை வீமராசர் கீழ் இருந்த தலைவர் மேலைப்பாட்டைநாட்டு விண்ணமலைச் சூரப்பனால் இக்கோயில் கட்டப்பட்டது என்பதைக் குறிக்கிறது.[12]

அதே இடத்திலுள்ள திரிபுவனக் குலோத்துங்கச் சோழதேவன் 14_ஆம் ஆண்டுக் கல்வெட்டு, செங்கேணி வீராசனி அம்மையப்பன் திருமீதான கண்ணுடைய பெருமாள் என்கிற வீர விநோத விக்கிரமசோழ சம்புவராயன் கோயிலுக்கு உதவுவதற்காக, வரவேண்டிய கைக்கூலி, குற்றத்தண்டம் முதலிய வரிகள் தள்ளுபடி செய்யப்பட்டதைக் குறிக்கிறது.[13]

அதே இடத்திலுள்ள திரிபுவனச் சடாவர்மன் என்னும் சுந்தரபாண்டியதேவன் 12_ஆம் ஆண்டுக் கல்வெட்டு, முக்கண்தேவர் கோயிலில் ஒரு விளக்கு வைப்பதற்காகச் சோழர்குலவள்ளி நல்லூர் மணற்பாக்கம் கிராமத்தலைவர், சிவப்பிராமணர்களிடம் இரண்டு பசுக்களை விட்டுவைத்தலைக் குறிக்கிறது.[14]

இதே கோயிலில் மேற்குப்பக்கத்தின் கீழ்த்தரையிலுள்ள இராசராசதேவனின் 1 (2) ஆம் ஆண்டுக் கல்வெட்டு இவ்வூர் பாடிகாப்பானான தொண்டைமான் சோழப்பிரியன் மகன் தேவசுந்தரன் என்னும் மாதய்யப்பராயன் ஓர் எருமையைக் கோயில் வண்டிக்காகக் கொடுத்ததைக் குறிக்கிறது.[15]

மகாமண்டபத்தில் கணபதி திருவுருவத்திற்கு அருகில் உள்ள சுவரிலுள்ள கல்வெட்டு கடும்பஞ்சத்தின்போது சக்கபுரி மக்களுக்கு ஏராளமான அரிசி வழங்கியவராகிய மந்திரதர வாசியாகிய சிவசேகரப் பிரதாபனின் வள்ளல் தன்மையை எடுத்துக் கூறுகிறது.[16]

தெருவில் அமைந்துள்ள கல்லொன்றில் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்கச் சோழதேவரின் 29_ஆம் ஆண்டுப் பங்குனி மாதக் கல்வெட்டு இதுவாகும். இது சிதைந்துள்ளது. இது சித்திரமேலி பதினெண்பூமிபட்டினம் என்கிற புதிய விசயப்பட்டினம் அமைக்கப்பட்ட போது சில நிலங்களின் வரிகளை அம்மையப்பன் அழகிய சோழ சம்புவராயன் தள்ளுபடி செய்ததைக் குறிக்கிறது.[17]

சுந்தர வரதராசப் பெருமாள் கோயில் தெற்குக் கருவறைச் சுவரிலுள்ள சடாவர்மன் என்கிற சுந்தரபாண்டியதேவரின் 12_ஆம் ஆண்டுக் கல்வெட்டு பூமி சுந்தரவிண்ணகர எம்பெருமான் கோயிலில் விளக்கு வைக்கக் கரியபெருமாள் சாம்பன் சனத்திரையன் கைளூர் மணற்பாக்கம் கிராமத்தலைவனும் சோழகுலவள்ளி நல்லூர் பெருமக்களும் இரண்டு பசுக்களை நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது[18]

அதே சுவரிலுள்ள பிரமோதூத மாசி 15_ஆம் நாள் கல்வெட்டு சின்னத்திருமலை தீட்சிதர் நன்மைக்காகச் சௌந்தரப்பெருமாள் கோயிலில் ஒரு விளக்கு வைக்கப் பெத்தப்பைய்யா பணம் அளித்ததைக் குறிக்கிறது.[19]

வடக்குச்சுவரிலுள்ள சடாவர்மன் சுந்தரபாண்டியதேவரின் 9_ஆம் ஆண்டுக் கல்வெட்டு காலைப்பூசைக்கு விளக்கெரிக்கத் தேவைப்படும் நெய்க்காகப் பசுக்கள் வாங்க வீராணத்தின் பகுதிப் பெரியபெருமாள் தாதன் மகன் திருவேங்கிடமுடையான் காசு கொடுத்ததைக் குறிக்கிறது[20]

---

(1. 24/1940_41; 2. 25/1940_41; 3. 26/1940_41; 4.27/1940_41; 5. 28/1940_41; 6. 29/1940_41 7. 30/1940_41; 8. 31/1940_41; 9. 32/1940_41; 10. 33/194041; 11. 34/194041; 12. 35/1940_41 13. 36/1940_41; 14. 37/1940_41; 15. 38/1940_41; 16. 39/1940_41; 17. 40/1940_41 18. 41/1940_41; 19. 42/1940_41; 20. 43/1940_41.)

## சக்கரமநல்லூர்

# வாலீசுவரர் கோயில்

இக்கோயில், சக்கரமநல்லூருக்கு வடக்கில் உள்ள பாலாற்றின் கரையில் கிழக்கு நோக்கியவாறு 2 செண்ட் பரப்பில் அமைந்துள்ளது.

குரங்குகளுக்குத் தலைவராகிய வாலி பூசை செய்ததை முன்னிட்டு இக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு வாலீசுவரர் என்னும் பெயர் வழங்குகிறது. கிழக்கு வாயிலை அடுத்து மூலவர் சந்நிதிக்கு எதிரில் பலிபீடமும் நந்திதேவர் திருவுருவமும் உள்ளன. இக்கோயில் பிரகாரத்தில் வலம்வரும் வழியில் வடக்குப் பிரகாரத்தில் திரிபுரசுந்தரி சந்நிதி தெற்கு நோக்கியிருப்பதைக் காண்கிறோம். இச்சந்நிதிக்குக் கிழக்கில் நாகர் திருவுருவங்கள் காணப்படுகின்றன. கருவறையில் வடபுறம் விநாயகர் திருவுருவமும் தென்புறத்தில் நாகத்தின் திருவுருவமும் உள்ளன. கருவறையினுள் வாலீசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். திரிபுரசுந்தரி கோயில் மீது மூன்று நிலைகள் கொண்ட சாலஹார விமானம் உள்ளது.

இக்கோயில் வடக்குப் பிரகாரத்தில் தீர்த்தக்கிணறு உள்ளது.

கருவறையின் மீது கிரீவம் மட்டும் கஜப்பிரஷ்ட வடிவிலான விமானம் உள்ளது. கிரீவத்தில் முனிவர்கள் திருவுருவங்கள் காணப்படுகின்றன.

இக்கோயிலில் குருக்களால் ஒருகாலப்பூசை செய்யப்படுகிறது. சிவராத்திரி, திருவாதிரை ஆகிய நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன. இங்கு நிகழும் நாகர் வழிபாடு குறிப்பிடத்தக்கது.

இக்கோயிலின் நிருவாகம் பரம்பரை அறங்காவலரிடம் உள்ளது.

### சந்தவாசல்

## திரௌபதையம்மன் கோயில்

இக்கோயில், வேலூர்-திருவண்ணாமலை நெடுஞ்சாலையிலிருந்து மேற்கில் 1 கிலோமீட்டர்த் தொலைவிலும் காட்பாடி-விழுப்புரம் இருப்புப்பாதை வழியில் (களம்பூர்-ஆரணி சாலை) நிலையத்திலிருந்து 12 கிலோமீட்டர்த் தொலைவிலும் வந்தவாசிக்குத் தெற்கில் 10 கிலோமீட்டர்த் தொலைவிலும் உள்ள சந்தவாசல் என்னும் ஊரில் 45 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலில் மூலவர் திரௌபதையம்மன். தவிர அருச்சுனன் திருவுருவமும் உள்ளது.

கோபுரம் ஏதுமில்லை. விமானம் மட்டும் உள்ளது. ஒரே பிரகாரம் கொண்டுள்ளது. இங்குப் பூசாரி ஒருவர் ஒரு காலப்பூசை செய்துவருகிறார். ஆண்டுக்கொருமுறை ஊர்மக்கள் திரௌபதையம்மனுக்குப் பொங்கலிட்டுத் திருவிழா நடத்துவர்.

இத்திரௌபதையம்மன் மிக்க சக்தி வாய்ந்த தெய்வமாக விளங்குகின்றார். இந்து சமய அறநிலையத்துறையினரால் நியமனம் பெற்றுள்ள அறங்காவலரும் நிருவாக அலுவலரும் நிருவாகம் செய்துவருகின்றனர்.

இக்கோயிலுக்குச் சொந்தமாக ஒரு வீடு உள்ளது. இதன் ஆண்டு வாடகை 500/-உருபாயாகும்.

### சம்புவராயநல்லூர்

## ஆற்றங்கரை விநாயகர் கோயில்

இக்கோயில், சேதரம்பட்டு இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 2 கிலோமீட்டர்த் தொலைவில் தெற்கு நோக்கி 15 செண்ட் நிலப்பரப்பில் இருக்கின்றது.

இவ்வூருக்குச் சம்புவராயர் என்னும் சிற்றரசர் பெயரால சம்புவராயநல்லூர் என்னும் பெயர் வழங்கிவருகிறது. இக்கோயில் கமண்டல ஆற்றின் ஓரத்தில் கட்டப்பட்டிருப்பதால், இஃது ஆற்றங்கரை விநாயகர் கோயில் என்னும் பெயரில் வழங்கி வருகிறது.

இக்கோயில் பிரகாரத்தில் தீர்த்தக்கிணறு உள்ளது. இக்கோயிலுக்குச் சுதைச்சிற்பங்களைக் கொண்ட விமானம் உள்ளது. ஒரு காலப்பூசை நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு அறநிலையத் துறையின் கீழ் இக்கோயில் இயங்கிவருகின்றது. இக்கோயிலுக்கு 4.69 ஏக்கர் நன்செய் நிலங்கள் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 2,000 உருபாயாகும்.

இக்கோயில் விநாயகர் மீது நவரத்தினமாலைப் பாடல்களை இவ்வூர்க் கந்தசாமிக் கவிராயர் இயற்றியுள்ளார்.

## சம்புவராயநல்லூர்

# விருபாட்சீசுவரர் கோயில்

இக்கோயில், ஆரணி நகரத்திற்கு 5 கிலோமீட்டர் மேற்கிலும் வேலூர்-திருவண்ணாமலை நெடுஞ்சாலைப் பாதையில் சந்தவாசல் கிராம நிறுத்தத்திலிருந்து 12 கிலோமீட்டர்க் கிழக்கிலும் உள்ள சம்புவராயநல்லூரில் 58 மீட்டர் நீளமும் 50 மீட்டர் அகலமும் கொண்டு ஏறத்தாழ 2 ஏக்கர்ப் பரப்பில் உள்ளது.

மன்னர் சம்புவராயர் முன்பொரு காலத்தில் நீதி வழுவாது இங்கு ஆட்சிபுரிந்து வந்துள்ளார். அம்மன்னர் பெயரே இவ்வூரின் பெயராக அமைந்துள்ளது.

கருவறை முன் துவாரபாலகர் உள்ளனர். கோட்ட தெய்வங்களாக விநாயகர். தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் உள்ளனர். துர்க்கை திருவுருவத்திற்குச் சற்று வடக்கில் சண்டேசுவரர் தனிச்சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது.

இராசகோபுரமும் மூலவர் சந்நிதி விமானமும் உள்ளன. மகாமண்டபம், சுவாமி கல்யாண மண்டபம் ஆகிய மண்டபங்கள் இருக்கின்றன. மடைப்பள்ளியும் யாகசாலையும் இருக்கின்றன.

சுதைச் சிற்பங்கள் அனைத்தும் அடையாளம் காண இயலாத நிலையில் உருக்குலைந்துள்ளன.

இக்கோயிலின் கருவறை வடக்குச்சுவரிலுள்ள சகம். - துந்துபி விருச்சிகராசி ஏழாம்நாள் திங்கள்கிழமை திருவோண நட்சத்திரம் கல்வெட்டு, இக்கோயிலில் விருபாட்சி தேவரின் வழிபாட்டுக்காக, ஒரு வேலி நிலத்தை அளித்தது பற்றியும் இக்கோயிலைச் சுற்றிலுமுள்ள வீட்டு மனைகளை அறக்கட்டளைகளாக ஏற்பாடு செய்தது பற்றியும் ஏகாம்பரநாதரைப் பூசகராக நியமித்தது பற்றியும் மங்கப்ப உடையார் சம்புவராயநல்லூர் ஊரார்களுக்கு அனுப்பிய ஆணையைக் குறிப்பிடுகிறது[1]

கருவறைத் தெற்குச்சுவரிலுள்ள மகாமண்டலேசுவரர் ஹரிஹர உடையார் சகம் 1304 விருச்சிக 7_ஆம் நாள் திங்கள்கிழமை திருவோணம் கல்வெட்டு மேலே குறிப்பிடப்பட்ட நிலங்களின் விவரங்களைக் குறித்து, இவை வருவாய்க் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டன என்பதைக் குறிக்கிறது.[2]

மண்டபக் கிழக்குச்சுவரிலுள்ள கல்வெட்டு, இக்கோயில் சங்கரனுக்காக, ஏகாம்பரம் கோயில் அமைத்ததைக் குறிக்கிறது.[3]

அதே சுவரிலுள்ள கல்வெட்டு இவ்விவரங்களை ஒரு பாடலில் தெரிவிக்கிறது.[4]

காமிக ஆகமவிதிப்படி ஒரு காலப்பூசை மட்டும் குருக்கள் செய்துவருகிறார். ஆண்டுதோறும் பிரமோற்சவம் மிகச் சிறப்பாகக் கொடியேற்றத்துடன் 10 நாள்கள் நடத்தப்படுகின்றது. விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கார்த்திகை தீபம், ஆகிய விழாக்கள் நடைபெறுகின்றன.

அறங்காவலர்களாலும் நிருவாக அலுவலராலும் நிருவாகம் நடத்தப்படுகிறது. இக்கோயிலுக்குச் சொந்தமாக நன்செய் நிலம் 34.51 ஏக்கரும் புன்செய் நிலம் 40.22 ஏக்கரும் உள்ளன. கோயிலின் ஆண்டு வருமானம் 5,000 உரூபாயாகும். கோயிலில் 8 மீட்டர் உயரமுள்ள பெரிய மரத்தேர் உள்ளது. வாகனங்கள் அனைத்தும் பழுதடைந்துள்ளன.

---

(1. 96/1940_41; 2. 97/1940_41; 3. 98/1940_41; 4. 99/1940_41)

## சாலவேடு

# அகத்தீசுவரர் கோயில்

இக்கோயில், வந்தவாசி வட்டத்தில், சோத்துப்பாக்கம் — வந்தவாசிப்பாதையில் சோத்துப்பாக்கத்திலிருந்து 7 கிலோமீட்டர்த் தொலைவில் ஊரின் நடுவில் தெற்கு நோக்கிய வாயிலும் கிழக்கு நோக்கிய கருவறையுமாக 5 செண்ட் பரப்பில் அமைந்துள்ளது.

வேடு என்பது தானமாக கிடைக்கப்பெற்ற ஊர் என்பதைக் குறிக்கும். சாலையோரத்தில் அமைந்த வேடு என்னும் பொருளில் சாலவேடு என்னும் பெயர் அமைந்ததென்பர். சால என்பது மிகுதி என்ற பொருளையும் தரும் ஆதலின், மிகுதியான அளவில் கிடைக்கப்பெற்ற தானத்தைக் குறிக்கும் வகையில் சாலவேடு என்னும் பெயர் இவ்வூருக்கு அமைந்தது என்பாருமுளர்.

தெற்குவாயிலின் வழியாக உட்சென்றால் தென்மேற்கில் விநாயகரையும் வடமேற்கில் முருகப்பெருமானையும் வடகிழக்கில் சனீசுவரன் சந்நிதியையும் தனித்தனியாகக் காணலாம். கிழக்குப் பிரகாரத்தில் கொடிமேடை, நந்தி, பலிபீடம் ஆகியவை உள்ளன. தெற்கு உள் வாயிலின் வழியாக உட்செல்லும்போது நேரே காமாட்சியம்பிகை நின்றவாறு அருள் பாலிப்பதைக் காணலாம். கருவறையில் சிவலிங்க வடிவில் அகத்தீசுவரர் எழுந்தருளியுள்ளார். மகாமண்டபத்தில் சோமாசுகந்தர், அம்பிகை, சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, விநாயகர், சண்டேசுவரர் ஆகியோரின் உலாத்திருமேனிகள் எழுந்தருளியுள்ளன.

சுவாமி சந்நிதி மீது மூன்று நிலை சதுர விமானமும், அம்பிகை சந்நிதி மீது இரண்டு நிலை விமானமும் உள்ளன. சுவாமி, அம்பிகை ஆகியோர் சந்நிதிகளின் முன் தனித்தனியே உள்மண்டபங்களும் இரண்டிற்கும் பொதுவாக மகாமண்டபமும் உள்ளன. பிரகாரம் முழுவதும் மலர்ச்செடிகளால் தோட்டம் அமைக்கப்பெற்று இயற்கைச் சூழலில் கோயில் விளங்குகிறது.

பரம்பரைக் குருக்கள் இருவேளை, பூசை செய்துவருகின்றார். இந்து சமய அறநிலையத்துறையினரால் நியமிக்கப்பெற்ற அறங்காவலர் நிருவாகம் செய்துவருகின்றார். சிவராத்திரி, தைப்பூசம், அன்னாபிடேகம் ஆகிய நாள்களில சிறப்புப் பூசனை நடைபெற்று வருகிறது.

இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1200/- உருபாயாகும். இவ்வூரின் நடுவில்

எட்டுக்கரங்களுடன் எழில் வடிவத் துர்க்கையின் சிலை உள்ளது. இது பல்லவர் காலப் படைப்பாகும்.

### சிங்கிரி

## இலட்சுமி நாராயணப்பெருமாள் கோயில்

இக்கோயில், வேலூரிலிருந்து 20 கிலோமீட்டர்த் தொலைவில் தெற்கிலுள்ள சிங்கிரி ஊரின் வடபகுதியில் கமண்டல நதிக்கரையின் மீதுள்ள குன்றில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

சிங்ககிரி என்பது சிங்கிரி எனத் திரிபெய்தியுள்ளது. நந்தன் என்னும் சம்புவராய மன்னன் அடிக்கடி சோளிங்கபுரம் நரசிம்மரைத் தரிசித்து வந்தான். அதற்காகச் செல்லும்போது இங்குக் காற்றும் மழையும் மிகுந்து இவன் செல்வதைத் தடைப்படுத்தியதால் அன்று பயணம் நின்றுவிட்டது. இதனை முன்னிட்டு அவன் அயர்ந்து வருந்த, அன்றிரவு அவனது கனவில் இம்மலையில் தாம் தோன்றியுள்ளதாக நாராயணர் கூறி மறைந்தார். இதனைக் கருத்திற்கொண்டு அவன் இக்கோயிலை இங்குக் கட்டினான் என்பர்.

தென்புறமிருந்த பழையகோயில் பாறையில் வெடிப்பு ஏற்பட்டதால், தற்போதுள்ள கோயில் புதிதாகக் கட்டப்பட்டது. கமண்டல நதிக்கரையில் மலைமீது சில படிகளைக் கடந்து சென்றால் ஒரு பாறை மீது நான்கு தூண்களைக்கொண்ட உற்சவ மண்டபத்தைக் காணலாம். மலைமீது கோயில் கிழக்கு நோக்கியவாறுள்ளது.

கோயிலின் முகப்பில் கருடர் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. கோயிலைச் சுற்றிச் சிறிய பிரகாரம் உள்ளது. கருவறை வாயிலின் இருபுறங்களிலும் துவார பாலகர்கள் உள்ளார்கள். தென்புறத்துத் துவாரபாலகருக்குச் சற்றுத் தெற்கில் உற்சவர் பெருமாள் உபயநாச்சிமார்களுடன் உள்ளார். இவர் சிங்கமுகம் கொண்டுள்ளார். வடபுறத்துத் துவாரபாலகரையடுத்துச் சற்று வடக்கில் ஆஞ்சநேயர் திருவுருவம் உள்ளது.

இங்கு வடகலை வைகாசன முறையில் பட்டாச்சாரியரால் ஒரு காலப்பூசை நிகழ்த்தப்பெறுகின்றது. கோயிலுக்கு நிலவருமானம் மட்டுமே உள்ளது. இரதசப்தமி அன்று பெரிய விழா நடைபெறுகிறது. மற்றபடி எல்லா விழாக்களிலும் திருமஞ்சனம் மட்டுமே நடைபெறும். அருச்சகரும் அறங்காவலரும் ஒருவரேயாவார்.

## சிறுகரும்பூர்

# சுந்தரவரதராசர் கோயில்

இக்கோயில், காஞ்சிபுரம் வாலாசா வழியில் வாலாசாவிலிருந்து 4 கிலோ மீட்டர்த் தொலைவில் அரக்கோணம் வட்டத்தில் 25 செண்ட் பரப்பில் தெற்கு நோக்கியவாயிலுடன் அமைந்துள்ளது.

சிரிப்பால் முப்புரங்களை எரித்த சிவபெருமானுக்குக் கணையாக இருந்தவர் திருமால் கார் போன்ற திருமால், திரிபுரப் போருக்கு அம்பாக அமைந்து புரமெரிய உதவச் சென்றார். கார் அம்பாக அமைந்த திருமால் பூசித்த இடம் கார் அம்பூர் என ஆகிப் பின்னர்க் கரும்பூர் எனத் திரிபு எய்திற்று என்பர். பின்னர்க் கருமை நிறம் நீங்கப்பெற்றுச் சுந்தர வடிவம் பெற்றதால் இவ்வூர்ப் பெருமாள் சுந்தரவரதர் என்னும் பெயரைத் தாங்கியுள்ளார் என்பர்.

கருவறையில் கிழக்கு நோக்கியவாறு சுந்தரவரதர், உபய நாச்சிமார்கள் ஆகியோர் காட்சியளிக்கின்றனர். இதன் முன்புறம் உற்சவர்களாகச் சுந்தரவரதர், உபய நாச்சிமார்கள், சக்கரத்தாழ்வார் ஆகியோர் உள்ளனர். கருவறையின் வலப்புறம் சுந்தரவல்லித் தாயார் கிழக்கு நோக்கியவாறுள்ளார். இடப்புறம் கும்பாபிடேகமாகாத தாயாரின் செப்புத் திருமேனி உள்ளது.

இக்கோயில் அருகில் முடிவடையாத தாயார் சந்நிதி உள்ளது. கருவறை மீது இருநிலைகளைக் கொண்ட சதுரவிமானம் உள்ளது. இக்கோயிலில் ஒருவேளைப் பூஜை தென்கலைப் பட்டாச்சாரியாரால் நிகழ்த்தப் பெறுகின்றது. பரம்பரை அறங்காவலர் இருந்து வருகிறார். இக்கோயிலின் ஆண்டு வருமானம் 862 உரூபாயாகும்.

பாதுகாப்புக்காக அருகிலுள்ள கோயில்களுக்குரிய கரும்பூரம்மன், கிருட்டினர், திரௌபதி, அருச்சுனன், சுபத்திரை ஆகியோர் சிலைகள் இக்கோயிலில் வைக்கப்பட்டுள்ளன.

## சிறுகரும்பூர்

# திரிபுராந்தகேசுவரர் கோயில்

இக்கோயில், அரக்கோணம் வட்டத்திலுள்ள சிறுகரும்பூரில் 25 செண்ட் பரப்பில் தெற்கு நோக்கியவாயிலுடன் அமைந்துள்ளது.

ஊர் சிறியது எனினும் இங்குக் கரும்பு மிகுதியாக விளைந்ததால், இவ்வூர் கரும்பூர் எனக்குறிப்பிடப்பட்டு வருகிறது என்பர் ஒரு சாரார். மண்ணின் வளத்தைக் கொண்டு, செம்மையான மண்ணைக் கொண்ட ஊரைச் செம்பூர் என்று குறிப்பது போன்று கரிசல் மண் நிறைந்த ஊருக்குக் கரும்பூர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று என்பர் மற்றும் சிலர்.

முப்புரம் எரித்த சிவபெருமான் இவ்வூரில் திரிபுராந்தகேசுவரர் என்னும் பெயரில் விளங்கிவருகிறார். இங்குள்ள அம்பிகைக்குக் காஞ்சி காமாட்சியின் நினைவாகச் சுந்தரம் என்னும் அடைமொழியோடு சுந்தர காமாட்சி என்னும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தெற்கு வாயிலினுள் நுழைந்தவுடன் சற்று மேற்கே, கிழக்கு நோக்கியவாறுள்ள விநாயகர் சந்நிதியைத் தென்மேற்குக் கோடியில் காணலாம். இச்சந்நிதிக்கு நேரே வடமேற்குக் கோடியில் ஆறுமுகசுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. வடகிழக்குப் பகுதியில் வயிரவர் சந்நிதி தெற்கு நோக்கியும் இதனை அடுத்து நவக்கிரகங்கள் சந்நிதியும் உள்ளன. கிழக்குப் பிரகாரத்தில் மூலவர் சந்நிதிக்கு நேரெதிரில் பலிபீடம், கொடிமரம் ஆகியவையும் இவற்றை அடுத்து நந்திதேவர் சந்நிதியும் உள்ளன. கருவறையில் திரிபுராந்தகேசுவரர் சிவலிங்க வடிவில் தெற்கு நோக்கியவாறு அருள்பாலிக்கிறார்.

கருவறையினுள் சந்நிதி முன்புறம் தெற்கில் வடக்கு நோக்கியவாறு வீரபத்திரர் சந்நிதி உள்ளது. கருவறைக் கோட்டச் சுவர்களில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, மேற்கில் திருமால், வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

கருவறைக்கு வடக்கிலுள்ள சுந்தரகாமாட்சி கோயில் கிழக்கு நோக்கியவாறுள்ளது. அம்பிகையின் முன்புறம் கல்லாலான ஸ்ரீசக்கரம் உள்ளது. இச்சந்நிதிக்கு எதிரில் வெளியில் பலிபீடமும் சிங்கத்தின் உருவமும் உள்ளன.

இக்கோயிலின் தலவிருட்சம் சரக்கொன்றையாகும். தியான மேடை என்னும் ஒரு வட்ட மேடையின் நடுவில் இம்மரம் செழித்து வளர்ந்துள்ளது.

சுவாமி சந்நிதிக்கு விமானம் உள்ளது. அம்பிகை சந்நிதி மீது மூன்று நிலை சதுர அடிப்படையும் வட்டச்சிகரமும் கொண்ட விமானம் உள்ளது. இதன் அடிப்பகுதி பச்சைக் கல்லால் ஆனது.

சுவாமி கோயில் கருவறை, கஜப்பிருஷ்ட அமைப்பைச் சார்ந்தது. இதன் கர்ண கூடுகளில் சிவலிங்கத்தின் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மீது இரண்டு நிலைகள் கொண்ட கஜப்பிருஷ்ட விமானம் உள்ளது. இதில் சிவபெருமானின் பல்வேறு நிலைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. அடுத்துள்ள அம்பிகையின் சந்நிதி அடிப்பகுதி முதல் உச்சி வரை சிறந்த வேலைப்பாடுகளுடன் விளங்குகிறது. புறச்சுவர்கள் கும்ப பஞ்சரம், கோட்டம் இவற்றால் மிகவும் நுணுக்கமாகச் செதுக்கப்பட்டுள்ளன. வாயிலின் இருமருங்கும் நடன விநாயகர், முத்துக்குமரன், சரசுவதி, திருமகள் ஆகியோர் திருவுருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. முகமண்டப உட்புறத்து நாடகச் சட்டங்களில் காளி தேவியின் 16 வீரச்செயல்களைக் காட்டும் சிற்பங்கள் உள்ளன. புறச்சுவர்களில் அழகிய திருவாசியுடன், மேற்கரங்களில் சாமரம் ஏந்திய அபய வரதத்துடன் கூடிய புடைப்புச் சிற்பம் திரும்பத் திரும்பச் செதுக்கப்பட்டுள்ளது. வடக்குப்புறச்சுவரில் பாற்கடலிலிருந்து வெளிப்பட்ட கற்பகவிருட்சம், காமதேனு, குதிரை, வெள்ளையானை ஆகியவற்றின் சிற்பங்களும் திருமகளின் சிற்பமும் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள துவாரபாலகர்கள் திருவுருவங்கள் அழகியவை.

கருவறை உள்வாயிலில் புருஷா மிருகப் பெண்ணுருவமும் புருஷா மிருக ஆணுருவமும் தூப தீபங்களால் வழிபடுவது போலச் செதுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் புதிய கலைப்படைப்புகளாகும்.

அன்பர் பலர் முறையாக அபிடேக ஆராதனைகளைச் செய்துவருகின்றனர். கோயில் வண்ணவண்ணப் பூச்செடிகளாலும் மரங்களாலும் சூழப்பெற்று அமைதியான சூழ்நிலையில் உள்ளது.

பரம்பரைக் குருக்கள் நாள்தோறும் இருவேளைப் பூசைகள் செய்துவருகின்றார் பரம்பரை அறங்காவலர் கோயிற்பணிகளை ஆற்றி வருகின்றார். இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1000/- உருபாயாகும்.

### சின்னவெள்ளைக்குட்டை

## தருமராசர் கோயில்

வாணியம்பாடி - ஆலங்காயம் சாலையில் வாணியம்பாடியிலிருந்து 15 கிலோமீட்டர்த் தொலைவில் சின்ன வெள்ளைக்குட்டைக் கிராமத்தில் 6.09 மீட்டர் நீளமும் 3.04 மீட்டர் அகலமும் கொண்ட அளவில் இக்கோயில் அமைந்துள்ளது.

இக்கோயிலில் திரௌபதியம்மன் கிழக்கு நோக்கிக் காட்சிதருகிறார். இங்குத் தர்மராசர், அருச்சுனன், திரௌபதி, கிருட்டினர், பீமன் ஆகியோரின் உருவச் சிலைகள் உள்ளன.

பூசைப்பணி செய்வதற்குப்பட்ட பூசாரிகளுக்கு இக்கோயிலின் மான்ய நிலங்களின் பட்டா அளிக்கப்பட்டுள்ளது. கோயிலின் பெயரில் 9.815/-உருபாய் இழப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டுமென வருவாய் அலுவலர் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாரபூசை மட்டும் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பூசாரிகளே பரம்பரை அறங்காவலர்களாக இக்கோயிலில் நிருவாகம் செய்து வருகின்றனர்.

### சீயமங்கலம்

## தம்பேசுவரர் கோயில்

இக்கோயில், திண்டிவனம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 35 கிலோமீட்டர்த் தொலைவில் உள்ள சீயமங்கலத்தில் (வந்தவாசி வட்டம்) 2.83 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கு நோக்கியவாறு உள்ளது.

இக்கிராமம் முதலில் சிம்மவிஷ்ணுசதுர்வேதி மங்கலம் என்னும் பெயரில் இருந்து வந்தது எனவும் அப்பெயர் பின்னர்ச் சிவமங்கலம் எனத் திரிபு எய்தியதாகவும் அதன்பின்னர் சிவமங்கலம் என்பது சீயமங்கலம் என

மாறியுள்ளதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இக்கோயில் குகைக்கோயிலாகும். இக்கோயிலின் கருவறைப் பகுதியின் முன் நுழைவாயில் உட்புற வாயிலிலுள்ள துவாரபாலகர்கள் திருவுருவங்களும் இக்கருவறைப் பகுதியும் இதனைத் தாங்கியுள்ள தூண்களும் வலியதொரு கற்பாறையிலிருந்து குடைந்து அமைக்கப்பட்டவையாகும். பின்னர் அம்மன் சந்நிதிப்பகுதியும் சுவாமி சந்நிதி முன்மண்டபமும் கட்டப்பட்டுள்ளன. தொல்பொருள் துறையினர் இங்குப் பல பாதுகாப்புப் பணிகளைச் செய்துள்ளார்கள்.

மூலவர் தம்பேசுவரர் மூன்று மீட்டர் உயரமுள்ள சிவலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். மரகதவல்லி அம்மன் சந்நிதி தெற்குப் பகுதியில் உள்ளது. ஆனால், தற்போது அச்சந்நிதியில் அம்மன் திருவுருவம் இல்லை. புதிதாகச் சிலை அமைக்கப்படவேண்டும். விநாயகர் சந்நிதி தெற்கில் உள்ளது. சுப்பிரமணியர் சந்நிதி கோயிலுக்கு வடபுறத்திலுள்ளது. சண்டேசுவரர், வயிரவர் ஆகியோர் திருவுருவங்களும் இங்குள்ளன. சூரியன் சிலையைத் தொல்பொருள் துறையினர் வேலூர்க் கோட்டையில் வைத்துள்ளனர்.

இக்கோயிலில் தீர்த்தக்கிணறு இருக்கிறது.

இக்கோயிலின் கோபுரம் நான்கு நிலைகளுடன் 24 மீட்டர் உயரத்தில் இருக்கின்றது. அம்மன் சந்நிதிக்கும் விநாயகர் சந்நிக்கும் விமானங்கள் உள்ளன.

இங்கு முன்மண்டபமும் மகாமண்டபமும் உள்ளன. துவாரபாலகர் நால்வர் திருவுருவங்கள் மிகநுட்பமாக அமைக்கப்பட்டுள்ளன. காவல்புரியும் துவாரபாலகர் இருவரும் தம் கைகளில் அம்பும் வில்லும் ஏந்தியுள்ளார்கள்.

ஒருகாலப்பூசை நடைபெறுகிறது. கார்த்திகைத் தீபவிழா, திருவாதிரை, காணும்பொங்கல், அன்னாபிடேகம் ஆகிய திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன.

இக்கோயிலுக்கு 1.8 ஏக்கர் நன்செய் நிலமும் 16 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் அறங்காவலர்களால் நிருவகிக்கப்படுகிறது. இங்கு இடப வாகனமும் குதிரை வாகனமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டுவருமானம் 2,500 உரூபாயாகும்.

தம்பேசுவரர் கோயில் முன்புறமுள்ள தாழ்வாரத்தின் வடக்குச்சுவரில் வாயிலின் வலப்புறத்திலுள்ள பரகேசரிவர்மன் 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, அந்த ஊரில் வாழ்ந்த ஒருவர் கோயிலுக்கு நிலக்கொடை வழங்கியதைக் குறிக்கிறது.*

---

(1. 60/1900)

## சீய(ஷ)மங்கலம்

# முக்குறுணி தாலிகாத்தம்மன் கோயில்

இவ்வூர், சோத்துப்பாக்கம் இருப்புப்பாதை நிலையத்திற்கு மேற்கே 5 கிலோமீட்டர்த் தொலைவில் வந்தவாசி வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூரின் கிழக்குப் பகுதியிலுள்ள ஓடையின் மேற்குக்கரையில் இக்கோயில் கிழக்கு நோக்கியவாறு 3 செண்ட் பரப்பில் அமைந்துள்ளது.

சீயமங்கலம் என்பதே சீஷமங்கலமாக மருவியதென்பர். ஒரு காலத்தில் இவ்வூர் வீரர்கள் போரில் ஈடுபட்டுக் களைத்து வீடு திரும்பினர். அப்போது எதிர்பாராதவாறு ஆர்க்காடு நவாப் படைகள் இவ்வூருக்குள் புகுந்தன. அப்போது போரிட இயலாது களைத்து நிற்கும் தங்கள் கணவன்மார்களைக் காப்பாற்றவேண்டும் என்னும் நோக்கில் பெண்கள் தம்தம் தாலிகளைக் காணிக்கையாகச் செலுத்துவதாக வேண்டினராம். அவ்வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட இப்பிடாரி, எல்லா வீரர்களையும் எதிரிப்படையினர் பார்வையிலிருந்து மறைத்துவிட்டாளாம். தங்களை எதிர்க்க வீரர்களைக் காணாது எதிரிகள் திரும்பிச் சென்றுவிட்டனர். பெண்கள் தாங்கள் வாக்களித்தவாறு தாலிகளைக் காணிக்கையாகச் செலுத்தினர். அவை மூன்று மரக்கால் அளவு இருந்ததால் அன்றுமுதல் முக்குறுணி தாலிகாத்தம்மன் என்னும் பெயர் இவ்வம்மனுக்கு வழங்கிவருகிறது என்பர்.

கருவறையில் முக்குறுணி தாலிகாத்தம்மன் வீற்றிருக்கின்றாள். முன்புறம் விநாயகரும் அடுத்து அம்பிகையும் உலாத்திருமேனியராக உள்ளனர். எதிரில் சிங்கமும் பலிபீடமும் உள்ளன. கருவறை மீது சிறு விமானம் உள்ளது. முன்புறம் மகாமண்டபமும் வடக்கில் நன்னிலையில் உள்ள தீர்த்தக்குளமும் உள்ளன.

இக்கோயிலில் பூசாரி பூசை செய்துவருகிறார். ஊர்ப்பொதுவில் நிருவாகம் இயங்கி வருகின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை விழா நடைபெறுகிறது. இவ்விழாவில் 50,000 பேர் கலந்து கொள்கின்றனர். இப்போதும் சிலர் தாலியைக் காணிக்கையாக இவ்வம்மனுக்குச் செலுத்தி வருகின்றனர்.

## சுந்தரம்பள்ளி

# கரிவரதராசப் பெருமாள் கோயில்

இக்கோயில், காக்கங்கரை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 8 மீட்டர்த் தொலைவிலுள்ள (திருப்பத்தூர் வட்டம்) சுந்தரம்பள்ளி . என்னும் ஊரிலிருந்து மேற்கே 1கிலோமீட்டர்த் தொலைவில் 0.85 ஏக்கர்ப் பரப்பில் அமைந்துள்ளது.

இங்கு எழுந்தருளியுள்ள பெருமாளுக்குச் சௌந்தரப் பெருமாள் என்னும் பெயரும் உண்டு. சௌந்தரம் என்னும் சொல் சுந்தரம் என வழங்குகிறது. இப்பெயரின் அடிப்படையில் இவ்வூருக்குச் சுந்தரம்பள்ளி என்னும் பெயர் வழங்கிவருகிறது.

கரிவரதராசர் சீதேவி பூதேவியுடன் கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கிறார். அருகில் 1 1/2 மீட்டர் உயரமுள்ள ஆஞ்சநேயர் திருவுருவம் உள்ளது. கரிவரதராசர் (21 செ: மீ உயரம்), சீதேவி (21 செ . மீ), பூதேவி (21 செ. மீ உயரம்) ஆகியோர் உற்சவத் திருமேனிகள் உற்சவ மண்டபத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

மூலவர் கருவறைக்கு விமானம் கலசத்துடன் உள்ளது.

இக்கோயிலில் நாள்தோறும் வைகாசன ஆகமமுறையில் ஒரு காலப்பூசை நிகழ்த்தப்பெறுகிறது. வைகாசியில் இங்கு 10 நாள்கள் பிரமோற்சவம் நடைபெறும். கோகுலாட்டமி, (புரட்டாசியில்) நவராத்திரித் திருவிழா, பாரிவேட்டை ஆகிய திருநாள்கள், வைகுண்ட ஏகாதசி உற்சவம் ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

கருடன், ஆஞ்சநேயர், ஆகிய வாகனங்கள் இங்குள்ளன.

இக்கோயிலின் முன்மண்டபம் 1916_ஆம் ஆண்டில் பள்ளபள்ளி அருணாசல நயினாரால் நளவருடம் ஆனிமாதம் கட்டப்பட்டதாகக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயில் அர்ச்சகர்களாகப் பணிபுரிந்துவந்த குடும்பத்தின் அழகான பெண் ஒருத்தியை நவாப் மன்னர் ஒருவர் பார்த்து அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்பியதாகவும் ஆனால் அப்பெண்ணின் பெற்றோர்கள் தங்கள் மகளை நவாப்புக்குத் திருமணம்

செய்துகொடுக்க விரும்பாமல் அப்பெண்ணைப் புதைத்துவிட்டு, நவாப்பின் பிடியிலிருந்து தப்பி மற்றவர் சிலருடன் சென்றபோது, தருமபுரி மாவட்டம் சிவம்பட்டிக் கிராமத்தில் அவர்கள் நவாப்பால் கண்டுபிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டதாகவும் அதிலிருந்து உயிர்தப்பிய சுந்தரம் என்ற குழந்தை வளர்ந்து இக்கோயிலின் வரதராசருக்குப் பூசைப்பணிகள் மேற்கொண்டு வந்ததாகவும் அந்த இடத்திற்குத் தற்போது சுந்தரம்பள்ளி என்னும் பெயர் அமைந்துள்ளதாகவும் சிலர் கூறுகின்றனர். 1953ஆம் ஆண்டு வரை இந்த இனத்தினரே இக்கோயிலில் பூசை செய்துவந்துள்ளனர். அதற்குப் பிறகு மார்த்தவ (ஸ்மார்த்த) பிராமணர்கள் பூசை செய்து வருகின்றனர். இவ்வாறு பூசை செய்து வந்தமைக்கான செப்புத் தகட்டுச் சாசனம் இக்கோயிலில் உள்ளது. இதனை இன்றும் காணலாம்.

அன்பர்கள் இங்கு வந்து தங்கி இளைப்பாறுவதற்காகவும் அவர்களுக்கு உணவுக்கூடமாகப் பயன்படுவதற்காகவும் ஒரு கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இப்பெருமாளை வணங்குவோர் கண்பார்வை நன்குபெற்றுச் சிறப்புடன் வாழ்கின்றனர் என்பர். இன்றும் ஆந்திரம், கருநாடகம் ஆகிய மாநிலங்களிலிருந்து மக்கள் இங்கு வந்து இப்பெருமாளைத் தரிசித்துப் பெருமாளின் அருள்பெற்றுச் செல்கின்றனர்.

இக்கோயிலுக்குச் சுந்தரம்பள்ளி கிராமத்தில் 19. 28 ஏக்கர் புன்செய் நிலமும் 1.08 ஏக்கர் நன்செய் நிலமும் தருமபுரி மாவட்டம் சிவம்பட்டி கிராமத்தில் 0 . 77 ஏக்கர் நன்செய் நிலமும் மான்யமாக அளிக்கப்பட்டுள்ளன. இந்நிலங்களிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமிக்கப்பட்ட தக்கார் இக்கோயில் நிருவாகத்தைக் கவனித்துவருகிறார். இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1,118 உருபாயாகும்.

### சுமங்கலி

## சத்தியநாதர் கோயில்

இக்கோயில், காஞ்சிபுரத்திற்குத் தென்மேற்கில் 19.2 கிலோமீட்டர்த் தொலைவில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

ஊழ்வினைக்கேற்ப, இறந்துபோன தம் கணவர் சத்தியவான் உயிர்பெற்று வாழும் வகையில், தமது கற்பின் முறையில் வரம் பெற்றுச் சுமங்கலியாய்த் திகழ்ந்த சாவித்திரியையும் சாவித்திரி கணவன் சத்தியவானையும் நினைவுகூரும் வகையில் இத்தலத்தின் அம்மனுக்கு சுமங்கலி நாயகி என்னும் பெயரும் இங்கு

எழுந்தருளியுள்ள சுவாமிக்குச் சத்தியநாதர் என்னும் பெயரும் அமைந்துள்ளன.

கோயிலின் முகப்பில் ஒருபுறம் விநாயகர் திருமால் ஆகியோர் திருவுருவங்களும் இத்திருவுருவங்களுக்கு நேரொத்தவாறு அடுத்த பகுதியில் வள்ளி தெய்வயானை திருவுருங்களும் உள்ளன. சண்டேசுவரர் சந்நிதி, கருவறைக்கு வடக்கில் தெற்கு நோக்கியவாறுள்ளது. அடுத்து நவக்கிரகங்கள் சந்நிதியும் உள்ளது. கருவறையில் சத்தியநாதர் எட்டுப்பட்டைகளுடன் கூடிய சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். சுமங்கலி நாயகி அம்மையின் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. இக்கோயிலில் விளக்கு மட்டும் ஒழுங்காக வைக்கப்படுகிறது. இக்கோயிலில் நாட்பூசை செய்யப்படுவதில்லை. வெள்ளிக்கிழமைகளில் மட்டும் பூசை நடைபெறுகிறது.

இக்கோயிலுக்குரிய தீர்த்தக்குளம் குட்டை வடிவில் காணப்படுகிறது. இக்கோயிலுக்கு 81 செண்ட் நன்செய் நிலமும் 92 செண்ட் புன்செய் நிலமும் உள்ளன. இவற்றிலிருந்து யாதொரு வருமானமும் கிடைப்பதில்லை. அறங்காவலர் ஒருவர் உள்ளார். இக்கோயிலில் பூசை முற்றும் அற்றுவிடாதவாறு ஊர்ப் பொதுமக்கள் வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறுமாறு கவனித்து வருகிறார்கள்.

### செங்கம்

## இடபேசுவரர் கோயில்

இக்கோயில், திருவண்ணாமலைக்குத் தென்மேற்கே 30 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள செங்கம் வட்டத்தின் தலைமை இடமான இவ்வூரின் வடமேற்கில் கிழக்கு நோக்கியவாறு 3 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது.

சிவகெங்கம் என்பதே செங்கம் என்பதாக வழங்குவதாயிற்று என்பர். தருமம் தழைத்து ஓங்க இடபதேவர் இங்குள்ள சிவகெங்கம் என்னும் இப்பகுதியில் பெரும் பூசை செய்து பேறுபெற்றார். அதனால் இங்கு எழுந்தருளியுள்ள இறைவனுக்கு இடபேசுவரர் என்னும் பெயர் அமைந்தது.

இக்கோயிலின் கிழக்கு வாயிலுக்குள் செல்லுமுன் பலிபீடம், இடபர் கோயில் ஆகியவற்றைக் காண்கிறோம். கோயிலினுள் பலிபீடமும் நந்திதேவர் சந்நிதியும் உள்ளன. பின்னர் பிரகாரத்தில் வலம் வரும்போது மேற்குப் பிரகாரத்தில் விசுவநாதர் விசாலாட்சி ஆகியோர் சந்நிதியும் இச்சந்நிதிக்குச் சற்று வடக்கில்

விநாயகர் சந்நிதியும் கிழக்கு நோக்கியுள்ளன. வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது.

கோயிலின் தெற்குப்பகுதியில் உற்சவர் சந்நிதியின் நுழைவாயிலின் இருபுறங்களிலும் விநாயகர் திருவுருவங்கள் உள்ளன. அடுத்து மூலவர் சந்நிதிக்குள் தென்புறத்தில் நால்வர் சந்நிதி வடக்கு நோக்கியுள்ளது. கருவறையின் வெளிவாயிலில் இருபுறங்களிலும் தென்புறத்தில் விநாயகர் திருவுருவமும் வடபுறத்தில் வள்ளி தெய்வயானையுடன் சண்முகர் திருவுருவமும் உள்ளன. கருவறையில் இடபேசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். கருவறைக் கோட்டத்தில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, மேற்கில் அண்ணாமலையார், வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் இருக்கின்றன. இடபேசுவரரை வழிபட்டுத் திரும்பிவரும்வழியில் வடக்குப்பகுதியில் தட்சிணாமூர்த்தியின் இரு திருவுருவங்கள் தெற்கு நோக்கியுள்ளன. அடுத்து நடராசர், சிவகாமி ஆகியோர் திருவுருவங்களும் அதற்கடுத்து வயிரவர் திருவுருவமும் தெற்கு நோக்கியும் சூரியன் திருவுருவம் மேற்கு நோக்கியும் உள்ளன. நந்தியின் திருவுருவமும் மேற்கு நோக்கியவாறு இருக்கிறது.

இடபதேவர் கோயிலுக்கு வடக்கில் சுப்பிரமணியர் கோயில் தனியாகக் கிழக்கு நோக்கியவாறுள்ளது. சுப்பிரமணியர் கோயிலுக்கு வடக்கில் அம்பிகை சந்நிதி கிழக்கு நோக்கியவாறு இருக்கின்றது. இக்கோயிலுக்குள் செல்லுமுன் பலிபீடம் நந்திதேவர் சந்நிதி ஆகியவற்றைக் காண்கிறோம். இங்குத் தெற்குப்பகுதியில் நந்தி, சிவலிங்கம்; சிவலிங்கத்திற்கு எதிரில் வடக்குப்பகுதியில் விநாயகர் திருவுருவம் ஆகியவை உள்ளன. கருவறையில் இருபுறங்களிலும் துவாரபாலிகைகள் திருவுருவங்கள் உள்ளன. கருவறையில் அம்பிகை அனுபாம்பாள் கிழக்கு முகமாகக் காட்சியளிக்கிறார்.

வட கிழக்குக்கோடியில் சித்திரகுப்தர் சந்நிதியில் சித்திரர், குப்தர் ஆகிய இரு திருவுருவங்கள் உள்ளன. உற்சவர்களாகச் சோமாசுகந்தர், சுப்பிரமணியர், வள்ளி தெய்வயானை, சண்டேசுவரர், சந்திரசேகரர், அம்பிகை, அத்திரதேவர், ஆறு கைகளுடைய நர்த்தன கணபதி, விநாயகர், சுப்பிரமணியர், மாரியம்மன், பிடாரி, காளி, வெள்ளிக்கிழமையம்மன் ஆகியோர் உள்ளனர்.

தீர்த்தக்கிணறு அம்பிகை கோயிலுக்கு எதிர்ப்புறத்தில் கிழக்குப் பிரகாரத்தில் இருக்கிறது.

கருவறை மீது சதுரவடிவ மூன்று நிலை விமானமும் காசிவிசுவநாதர், விநாயகர் ஆகியோர்களின் சந்நிதி மீது ஒரு நிலை வட்ட வடிவ விமானமும் அம்பிகை சந்நிதி மீது இரு நிலைச்சதுர விமானமும், சித்திரகுப்தர் சந்நிதி மீது சிறு விமானமும், நடராசர் சந்நிதி மீது ஒருவிமானமும் உள்ளன. உற்சவர் சபா மண்டபம், மூலவர் முன் மகாமண்டபம் ஆகியவையும் மற்றச் சந்நிதிகளுக்குத் தனித்தனியே இடை மண்டபங்களும் முகமண்டபங்களும் உள்ளன. கருவறை புறச்சுவர்கள் உபபீடம், பட்டிகை, கும்பம், பஞ்சாங்கள், யாளி வரிசைகள், கபோதம்

ஆகியவற்றால் அழகுபடுத்தப்பட்டுள்ளன.

இக்கோயிலில் இருவேளைப் பூசை நடைபெறுகிறது. சித்திரை மாதம் 10 நாள்கள், வசந்தோற்சவம், பங்குனி உத்திரம், திருக்கல்யாண விழா, ஆடிக் கிருத்திகை, நவராத்திரி, கந்தர்சஷ்டி, நடராசர் அபிடேகம், நால்வர் திரு நட்சத்திரங்கள் ஆகியவை சிறப்பாக நடைபெறுகின்றன. காணும் பொங்கலன்று திருஊடல் உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது.

இடபம், மயில், பெருச்சாளி ஆகிய வாகனங்கள் உள்ளன. இக்கோயிலுக்கு 20 ஏக்கர் நிலமும் மற்றும் கடைகள் ஆகியவையும் உள்ளன.

### இக்கோயிலின் சிறப்புச் செய்திகள்

ஆறு கைகள் கொண்ட நர்த்தன கணபதி பஞ்ச மூர்த்தியில் ஒருவர். இவர்மீது பிரபையும் அதில் நாகம் குடைபிடிப்பது போலவும் உள்ளன.

சண்டேசுவரர் தம் வலக்கையில் தாமரையும் இடக்கையில் தண்டமும் ஏந்தியுள்ளார். இஃது இம்மாவட்டத்தில் இடபதேவர் பூசித்த ஒரே தலம் ஆகும்.

## செங்கம்

# வேணுகோபாலப் பார்த்தசாரதிப் பெருமாள் கோயில்

இக்கோயில், திருவண்ணாமலையிலிருந்து 30 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள செங்கம் ஊரின் நடுவில் 1.33 ஏக்கர் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இக்கோயில், பார்த்தனாகிய அருச்சுனனுக்கு வேணுகோபால கிருட்டினர் கீதை அருளியநிலையை உணர்த்துவதாக அமைந்துள்ளது. இவ்வேணுகோபாலர், கருவறையில் நான்கு கரங்களுடன் காட்சியளிக்கிறார். சங்கு, சக்கரம், ஆக்கருவாள் ஆகியவற்றை மூன்று கைகளில் தாங்கியும் மடி மீது ஒருகையை வைத்தும் உருக்குமணி சத்தியபாமாவுடன் விளங்குகிறார்.

கிழக்குக் கோபுர வாயிலையும் அடுத்துள்ள சிறு கோபுரவாயிலையும் கடந்து கோயிலினுள் பிரகாரத்தில் வலம் வரும்போது தென்கிழக்குக் கோடியில் துளசியம்மன் சந்நிதி வடக்கு நோக்கியவாறு இருப்பதைக் காண்கிறோம். அடுத்துத்

தென்மேற்குக் கோடியில் கனகவல்லித்தாயார் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது.

தாயார் சந்நிதிக்கு நேரொத்தவாறு வடமேற்குக் கோடியில் ஆண்டாள் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. வடகிழக்குக் கோடியில் சீனிவாசர், ஆழ்வார்கள், உடையவர் ஆகியோர் சந்நிதிகள் தெற்கு நோக்கியவாறுள்ளன.

இதன்பின்னர் பலிபீடம், கருடாழ்வார் சந்நிதி ஆகியவற்றைக் கடந்து கோயிலினுள் நுழைகிறோம். தென்பகுதியில் பலராமர் திருவுருவம் வடக்கு நோக்கியவாறு காணப்படுகிறது. அடுத்துக் கருவறையின் இருபுறங்களிலும் துவாரபாலகர்கள் திருவுருவங்களைக் காண்கிறோம். கருவறையில் உருக்குமணி, சத்தியபாமா ஆகியோர் இருபுறங்களிலும் இருக்க வேணுகோபாலர் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். கருவறையில் வேணுகோபாலவரதர், ஸ்ரீதேவி, பூதேவி, கண்ணன், சக்கரத்தாழ்வார் ஆகியோர் உலாத்திரு மேனிகள் உள்ளன.

இக்கோயிலின் தலவிருட்சம் மகிழமரம். இது தெற்குப் பிரகாரத்தில் இருக்கிறது.

இக்கோயிலில் தீர்த்தக்கிணறு உள்ளது. கிழக்கு இராசகோபுரம் ஐந்து நிலைகளுடன் 7 கலசங்களுடன் 21 மீட்டர் உயரத்துடன் இருக்கின்றது. அடுத்துள்ள உள்கோபுரம் இரண்டு நிலைகளையுடையது.

கருடாழ்வார் சந்நிதியையடுத்து நுண்மையான வேலைப்பாடுடைய 16 தூண்களைக் கொண்ட மண்டபம் இருக்கின்றது. இதன் மேற்புறத்தின் வடபுறத்தில் பலராமர் திருவுருவமும் தென்புறத்தில் சீனிவாசர் திருவுருவமும் உள்ளன.

வைகாசன முறையில் பட்டாச்சாரியார் இருகாலப் பூசை செய்துவருகிறார். நவராத்திரி, பங்குனி உத்திரம், ஸ்ரீஜெயந்தி, ஸ்ரீராமநவமி, வைகாசி மாதம் பிரம்மோற்சவம் ஆகிய நாள்களில் விழாக்கள் நடைபெறுகின்றன.

துளசியம்மன்மாடம் மட்டுமன்றி துளசியம்மன் உருவச்சிலையும் அமைந்திருப்பது சிறப்பளிக்கிறது. கருடன், அனுமன், நாகம், அன்னம் முதலிய வாகனங்கள் உள்ளன. இக்கோயிலின் நிருவாகம் அறங்காவலர் குழுவிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 5,910/- உரூபாயாகும்.

# செங்கம்புதூர்
# மாரியம்மன் கோயில்

செங்கம் - போளூர்ச் சாலையில் செங்கத்திலிருந்து 9 கிலோமீட்டர் வடக்கே புதூர்ச் சாலையோரத்தில் கிழக்கு நோக்கியவாறு 3.92 ஏக்கர் பரந்த வெளியின் மையத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. புற்று வளர்ந்த அடிப்படையில் இவ்வூருக்குப் புற்றூர் என்னும் பெயர் அமைந்து பின்னர் அது புத்தூர் என மாறிற்று என்பர்.

இக்கோயிலுக்கு முகப்புவாயில் தென்கிழக்குப் பகுதியிலுள்ளது. கோயிலின் உள்நுழைவாயிலின் இருபுறங்களில், தென்புறம் விநாயகர் திருவுருவமும் வடபுறம் பரசுராமர் திருவுருவமும் பரசுராமர் திருவுருவத்தையடுத்து உருவற்ற பல சிலைகளும் கூட்டுவடிவில் அமைந்த பல சிலைகளும் உள்ளன.

கருவறையில் சுயம்பு அம்மன் திருவுருவமும் அடுத்து உற்சவர் அம்பிகை திருவுருவமும் உள்ளன.

பீமாநதி ஒரு தீர்த்தமாகும். குதிரைகளும் சுதைவடிவங்களும் கிழக்குப் பிரகாரத்தில் மூன்று தொகுதிகளில் உள்ளன.

மூன்று நிலைகள் கொண்ட சதுரவடிவ விமானம் உள்ளது.

கோயிலைச்சுற்றி இலவசமாகத் தங்கும் அறைகள் உள்ளன. கண்பார்வை குறைந்தோர், அம்மையால் வருந்துவோர் இங்குத் தங்கி வழிபாடியற்றிப் பலன் பெறுகின்றனர் என்கிறார்கள். பாகுபாடின்றிக் கிருத்துவர், முகமதியர், இந்துக்கள் ஆகியோர் இங்கு வழிபடுகின்றனர்.

கண்பார்வை பெற, 40 ஆயிரம் வரை செலவு செய்தும் பயன் எய்தாத முகமதிய அன்பர் ஒருவர் அண்மையில் இங்குத் தங்கி வழிபாடாற்றி நலம்பெற்றுச் சென்றுள்ளார் என்னும் செய்தி அறிவிக்கப்படுகிறது.

பீமா நதிக்கரை நாச்சியார் என்று இக்கோயில் அம்பிகை செங்கம் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இங்கு ரெட்டியார்களால் பரம்பரையாகப் பூசை செய்யப்படுகிறது.

இருகாலப்பூசை நடைபெறுகிறது. ஆடி, ஆவணி ஆகிய மாதங்களில் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் சிறப்பாகப் பலரும் கூடி வழிபடுகின்றனர். மக்கள் தொட்டில், ஆடு, மாடு, கோழி ஆகியவற்றைக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர். இனாம் நிலமாக இரண்டு ஏக்கர் நன்செய் நிலமும் 5 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் ஓர் இலட்சம் ரூபாயாகும். ரெட்டியார் சமூகத்தின் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து வருகின்றனர்.

## செம்பியமங்கலம்

# வீரபத்திரர் கோயில்

இக்கோயில், போளூர் வட்டத்தில், போளூர் - சேத்துப்பட்டுச் சாலையில் மாடப்புரையூர்ச் சந்திப்புச் சாலைக்குத் தெற்கே 5 கிலோமீட்டர்த் தொலைவில், 15 செண்ட் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. முதற்காலத்தில் வீரசைவத்துறவிகளும் பைராகிகளும் இக்கோயிலில் தங்கி வந்ததால் இக்கோயிலை மடம் என்றே குறிப்பிட்டு வந்துள்ளார்கள். தற்போது இவ்வூர்ப் பெயர் செம்பியமங்கலம் என்பதாகும்.

செம்பியன் என்பது சோழர்களின் பட்டப்பெயர்களுள் ஒன்று. அதன் அடிப்படையில் செம்பியமங்கலம் என்னும் பெயர் இவ்வூருக்கு வழங்கி வந்தது என்று ஒருசாராரும்; மற்றொரு சாரார் சௌமியன் என்பது சூரியனின் பெயர்களுள் ஒன்று என்றும் அவன் பெயரால் சௌமிய மங்கலம் என வழங்கி அப்பெயர் திரிபு எய்திச் செம்பிய மங்கலமாயிற்று என்றும் கூறுகின்றனர்.

கருவறையுள் 1 1/2 மீட்டர் உயரமுள்ள வீரபத்திரர் சிலையொன்று கிழக்கு நோக்கியவாறுள்ளது. இவர் நான்கு கரங்களுடன் அவற்றில் கத்தி, கேடயம், வில், அம்பு ஆகியவற்றை ஏந்தி நிற்கின்றார். வெளியில் மேலுமொரு வீரபத்திரரின் உடைந்த சிலை காணப்படுகிறது.

கட்டட அமைப்பு முறை குறிப்பிடத்தக்கது. கருவறைக்கு முன் 36 தூண்களைக் கொண்ட ஒரு மண்டபம் இருக்கிறது. அதன் நடுவில் கிணறு ஒன்று அமைந்துள்ளது. கிணற்றில் சூரிய ஒளி விழுமாறு மண்டபம் திறந்த வெளியில் அமைந்துள்ளது.

வீரபத்திரரால் பற்கள் உடைக்கப்பட்ட (பன்னிரண்டு சூரியர்களுள் ஒருவராகிய) சௌமியனும், கண்கள் பிடுங்கப்பெற்ற பகனும் வீரபத்திரரை வழிபட்ட

இடம் இஃது என்பர். வீரபத்திரரின் கோபக்கனலைக் குறைக்க இக்கிணற்றை எடுத்தனர் என்றும் கூறுகின்றனர்.

தற்போது முறையான பூசை இல்லை. விரும்பும்போது அன்பர்கள் தாங்களே பூசை செய்து செல்கின்றனர். திருப்பணி வேலைக்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இவ்வூரில் இரண்டு நடுகற்களும் சுற்றிலுமுள்ள பல ஊர்களில் பல நடுகற்களும் காணப்படுவதால் இவ்வூரில் வீரர்கள் பலர் வாழ்ந்திருக்கிறார்கள் எனக் கருதப்படுகிறது. வீரபத்திரர் போர்க்கடவுள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சேண்பாக்கம்


# செல்வ விநாயகர் கோயில்

இக்கோயில், வடஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரமாகிய வேலை மாநகருக்கு மேற்கில் 2 கிலோமீட்டர்த் தொலைவில் பெங்களூர் நெடுஞ்சாலையில் சேண்பாக்கம் கிராமத்தில் 23 செண்ட் நிலப்பரப்பில் விளங்குகிறது. தமிழ்நாட்டில் விநாயகருக்கு எத்தனையோ விதமான தலங்கள் உள்ளன. அத்தலங்களில் ஒன்றாக மிகப் பிரசித்தி பெற்றுப் பிரார்த்தனைத் தலமாக விளங்குவது இக்கோயிலாகும். இக்கோயில் கட்டப்பட்ட காலம் சாலி வாகன சகாப்தம் 1329ஆம் ஆண்டாகும்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் முகம்மதுகானின் மகன் அப்துல்கான் என்பவர் வேலூரைப் பத்தாண்டுக் காலமாக ஆட்சிபுரிந்து வந்த காலத்தில் வடதேசத்திலிருந்து துக்கோசிராயன் என்பவன் தனது சேனையுடன் வந்து பாலி நதி என்னும் பாலாற்றங்கரையில் இறங்கி, வேலூரை அடைய முற்றுகையிட்டான்.

அக்காலத்தில் ஒரு நாள் அங்குள்ளவர் முன்னிலையில் விநாயகர் இளைஞர் வடிவில் தோன்றி, வேலூர்க்கோட்டை அமைக்கக் கல்கொண்டு வந்த வண்டி தாக்கியதால், தம் முதுகில் அடிபட்டதாகக் கூறித் தம்மீதுள்ள காயத்தைக் காட்டி உடனே மறைந்தார். அவர் மறைந்த இடத்தைக் கூர்ந்து கவனித்தபோது புதரில் ஆறு கற்சிலைகள் காணப்பட்டன. அவற்றுள் ஒன்றில் குருதி பெருகிக் கொண்டிருந்தது. இதைக் கேள்வியுற்ற துக்கோசிராயன் அவ்விடத்தில் விநாயகர் கோயில் அமைத்தான்.

இக்கோயிலின் முன்புறம் செண்பகவனம் என்ற பூந்தோட்டம் இருந்தது. அதில்



செல்வ விநாயகர் கோயில்
சேண்பாக்கம்

மக்கள் குடியேறினார்கள். அது சேண்பாக்கம் என்னும் கிராமமாயிற்று. துக்கோசி அங்குப் பூசை செய்துவரும் நாளில் வேலூர்க்கோட்டை துக்கோசி வசமாயிற்று. அப்துல்கானும் மனம் மாறித் துக்கோசிராவிடம் வேலூர் நகரத்தை ஒப்படைத்துவிட்டு வேலூருக்கு மேற்குத் திசையில் அப்துல்லாபுரம் என்ற இடத்தில் சிறு மாளிகை கட்டி அதில் குடியேறினான். அம்மாளிகை பாழடைந்த நிலையில் இன்றும் இருக்கிறது. அன்று துக்கோசிராவால் கட்டப்பட்ட சிறிய கோயில் நாளடைவில் வேலூர் நகர மற்றும் சுற்றுப்புற மக்களால் சிறப்பாகத் திருத்திக் கட்டப்பட்டது.

இக்கோயிலின் பிரகாரம் அகன்ற வெளியிடமாக உள்ளது. இக்கோயிலில் சோமசுந்தரேசுவரர், சுப்பிரமணியர் ஆகியோர் சந்நிதிகளும் நவக்கிரகங்களின் சந்நிதியும் உள்ளன.

இக்கோயிலில் இருகாலப்பூசை நடைபெறுகிறது. இக்கோயிலில் ஒவ்வொரு சித்திரைத் திங்களிலும் சித்திரைப் பௌர்ணமி புட்பப் பல்லக்கு உற்சவம் வேலூர் நகரத்தின் அரிசிமண்டி வியாபாரிகளால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் சுமார் 1 இலட்சம் பக்தர்கள் கலந்து கொள்கின்றார்கள். ஆடிமாதம் ஐந்தாம் வெள்ளிக்கிழமையன்று இக்கோயிலில் இலட்சதீபத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. பிரமோற்சவம், விநாயகர் சதுர்த்தி ஆகிய விழாக்கள் தொடர்ந்து பத்து நாள்கள் வேலூர் நகர மக்களாலும் சேண்பாக்கம் கிராம மக்களாலும் மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டுவருகின்றன. ஆண்டுதோறும் ஆனி முப்பதாம் தேதி 108 சங்கு அபிடேகமும் நடைபெற்றுவருகின்றது. புரட்டாசி மாதம் பவித்திர உற்சவயாகமும் நடைபெற்றுவருகின்றது. இவ்வாலயத்தின் விழாக்கள் தவிர சித்திரை முதல் நாள் அன்றும், சனவரி முதல் நாளன்றும் பெருமளவில் பக்தர்கள் வருகை தருகின்றார்கள். தற்போது இவ்வாலயத்தில் ஒரே நேரத்தில் நான்கு திருமணங்கள் நடத்தக் கூடிய அளவில் இடவசதி உள்ளது. ஒரே நேரத்தில் பத்துத் திருமணங்கள் நடைபெற வசதியாக வேலூர் நகர அரிசி மண்டி வியாபாரிகள் சங்கத்தின் முயற்சியால் சுமார் 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டப்பட்டு வருகின்றது. ஆண்டொன்றுக்கு நானூறு திருமணங்களுக்கு மேல் மிகக் குறைந்த கட்டணத்தில் சிறப்பாகச் செய்து வைக்கப்படுகின்றன.

பொதுமக்கள் நிதி உதவியின் பேரில் இக்கோயில் உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலர்களிடம் உள்ளது.

# சேரி அய்யம்பேட்டை

# நரசிம்ம ஈசுவரர் கோயில்

இக்கோயில், சோளிங்கர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 10 கிலோ மீட்டர்த் தொலைவில் அரக்கோணம் வட்டம் சேரி கிராமத்தில் 85 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

நரசிம்மரால் வழிபடப்பெற்ற சிவபெருமானுக்கு நரசிம்ம ஈசுவரர் என்னும் பெயர் வழங்கிவருகிறது.

கிழக்கே உள்ள நுழைவாயிலின் வழியாகக் கோயிலினுள் செல்வோம் எனில், பலிபீடம்; பலிபீடத்தையடுத்து நந்திதேவர் சந்நிதி ஆகியவற்றைக் காண்கிறோம். பின்னர் பிரகாரத்தில் வலம் வரும்போது தென்மேற்குக் கோடியில் சுந்தர விநாயகர் சந்நிதியும் இச்சந்நிதிக்கு நேரொத்தவாறு வடமேற்குக் கோடியில் வள்ளி, தெய்வ யானையுடன் சுப்பிரமணியர் சந்நிதியும் கிழக்கு நோக்கியவாறுள்ளன.

கருவறைக் கோட்டச்சுவர்களில் தெற்கில் தட்சிணாமூர்த்தியும் விநாயகர் திருவுருவமும் மேற்கில் திருமால் திருவுருவமும் வடக்கில் பிரமதேவர் திருவுருவமும் துர்க்கை திருவுருவமும் உள்ளன. வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுவரர் தெற்கு நோக்கியவாறுள்ளார்.

சண்டேசுவரர் சந்நிதிக்குச் சற்றுக் கிழக்கில் வடக்குப் பிரகாரத்தில் மரகதவல்லியம்மை சந்நிதி கிழக்கு நோக்கியவாறும் பிரகாரத்தின் தென்கிழக்குக் கோடியில் நவக்கிரகங்கள் சந்நிதியும் உள்ளன.

மூலவர் நரசிம்மசுவாமி சந்நிதி மீது ஒரு நிலை விமானம் 3/4 மீட்டர் உயரத்தில் ஒரு கலசத்துடன் விளங்குகிறது.

இக்கோயிலில் தீர்த்தக்கிணறு வடக்குப் பிரகாரத்திலுள்ளது. இக்கோயிலில் முன்மண்டபம் உள்ளது.

இக்கோயிலில் ஒரு காலப்பூசை நடைபெறுகிறது. திங்கட்கிழமைகளில் சிறப்பாகப் பூசை நடத்தப்படுகிறது. திருவாதிரை, அன்னாபிடேகம் ஆகிய நாள்களில் அபிடேக ஆராதனைகள் செய்யப்படுகின்றன.

கோயில் உட்புறம், மழைக்காலங்களில் ஒழுகுகிறது. கோபுரம் மிகவும் உருக்குலைந்துள்ளது. சுற்று மதிற்சுவர்கள் முழுதும் இடிந்துள்ளன.

இத்திருக்கோயிலில் வருமானமாக, ஆண்டுக்கு 1000 முதல் 1500 உருபாய் வரை கிடைக்கிறது.

## சேரிகிராமம்

# கோதண்டராமர் கோயில்

இக்கோயில், சோளிங்கர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 10 கிலோமீட்டர்த் தொலைவில் அரக்கோணம் வட்டம் சேரி கிராமத்தில் ஓர் ஏக்கர் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

கிழக்கு நோக்கியவாறுள்ள கோயில் வாயிலை அடுத்து உட்புறம் பலிபீடமும் அடுத்து மேற்கு நோக்கியவாறு கருடாழ்வார் சந்நிதியும் உள்ளன. கோயிலினுள் தென்பகுதியில் கோதண்டராமர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. மேற்கில் சீதேவி, பூதேவி ஆகியோருடன் பரமபதநாதர் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். வடக்குப்பகுதியில் ஆண்டாள், இராமர், இலட்சுமணர், சீதை ஆகியோர் சந்நிதிகள் கிழக்கு நோக்கியவாறுள்ளன. மணவாள மாமுனிகள் சந்நிதி வடக்கு நோக்கியுள்ளது. கோயிலுக்கு வெளியில் கிழக்கில் ஆஞ்சநேயர் சந்நிதி மேற்குநோக்கியுள்ளது. தெற்கில் தீர்த்தக்கிணறும் கிழக்கில் ஆஞ்சநேயருக்கு வடபகுதியில் குளமும் உள்ளன. இவை சீர்குலைந்துள்ளன.

கோயிலின் மூலவர் சந்நிதி மீது ஒரு நிலை விமானம் 3 மீட்டர் உயரத்தில் ஒரு கலசத்துடன் உள்ளது.

ஒரு காலப்பூசை மட்டும் நடைபெற்றுவருகிறது. இக்கோயிலுக்கு 5.79 ஏக்கர் நிலம் உள்ளது. சுமார் 3 ஏக்கர் நிலம் மானியமாக விடப்பட்டுள்ளது. மிகுதி இருக்கும் நிலத்திற்கு ஒழுங்கான நீர்ப்பாசன வசதியில்லை. கோயில் நிருவாகம் அறங்காவலரிடம் உள்ளது. கோயிலின் ஆண்டு வருமானம் 1,000/- உருபாயாகும். கோயில் மூலத்தானம் பழமையானது.

## சோத்துக்கண்ணி
# சன்னாசிப்பட்டன் கோயில்

சோத்துக்கண்ணியம்மன் கோயில் போளூர் - சேத்துப்பட்டு வழியில் சாணாரம்பாளையம் கிராமத்திலிருந்து தெற்கே 3 கிலோமீட்டர்த் தொலைவில் 20 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இவ்வூருக்குத் தென்கிழக்கில் 100 மீட்டர் உயரம் கொண்ட மலையொன்று உள்ளது. அதன் உச்சியில் 15 செண்ட் நிலப்பரப்பில் சன்னாசிப்பட்டன் கோயில் அமைந்துள்ளது.

பாட்டன் என்னும் சந்நியாசி இக்கோயில் இடத்தில் தவத்தில் மூழ்கி இருக்கிறார் எனக்கருதி அவருக்கு அடிக்கடி தொல்லை கொடுக்கக் கூடாதென்பதற்காகப் பூசை எதுவும் இங்குச் செய்யப்படுவதில்லை. மலைக்குச் செல்லப் படிகள் இல்லை. கொடிவழிமட்டும் உள்ளது. மார்கழி மாதம் முதல்தேதி இங்கு மிகச் சிறப்பாக விழா கொண்டாடப்படுகிறது. அந்நாளில் மக்கள் மிகுதியான எண்ணிக்கையில் சன்னாசிப்பட்டர் திருவுருவத்தைத் தரிசிக்கின்றனர். காணும் பொங்கலன்று இம்மலை அடிவாரத்திலுள்ள சோத்துக்கண்ணியம்மன் கோயிலில் விழா கொண்டாடப் பெறுகின்றது.

கோயிலின் கருவறையில் தவத்தில் வீற்றிருக்கும் நிலையில் துறவிக்கோலத்தில் சன்னாசிப்பட்டன் சிலையுள்ளது. கருவறை மீது 2 நிலைகளைக் கொண்ட விமானம் அமைக்கப்பட்டுள்ளது. பூசாரிகளால் பூசை செய்யப்படுகிறது.

## சோத்துக்கண்ணி
# மாரியம்மன் கோயில்

சாத்தன் காணி என்பது சாத்தக்காணியாகிப் பின்னர் சோத்துக்காணியாகி அது சோத்துக்கண்ணி என ஆயிற்று என்பர்.

சோத்தை என்பது ஒரு வகைக் கொடி என்பர். அது படர்ந்து (கண்ணி) வலை போல் இவ்வூரைச் சுற்றி இருந்ததால் இவ்வூர் சோத்துக்கண்ணி என்னும் பெயர் பெற்றது என்பர். சோத்துப்பாக்கம் என்னும் வேறு ஓர் ஊரும் இங்கு உள்ளது.

மாரியம்மனை வழிபட்டு வந்த பெண்மணி ஒருத்தி இவ்வூரில் வாழ்க்கைப்பட்டாள்.. அவள் கணவனின் தங்கை ஒருநாள் சோற்றைத் துழாவும்போது அவளது கைமோதிரம் அதனுள் விழுந்துவிட்டது. இதை அவள் கவனிக்காமல் தன் தமயனின் மனைவி மீது திருட்டுக் குற்றம் சாட்டினாள். குற்றம் எதுவும் செய்யாத அப்பெண்மணி மாரியம்மனை வேண்டிக்கொண்டாளாம். அவள் வேண்டுகோளுக்கிரங்கிய மாரியம்மன் அவள் கனவில் தோன்றித் தம் கண்களை உருட்டி விழித்தாள். அதனுள் சோற்றுப்பானையும் அச்சோற்றுப் பானையில் மோதிரம் விழுந்திருப்பதும் தெரியவந்தன. தங்கள் தவறையுணர்ந்த அனைவரும் மாரியம்மனின் கால்களில் விழுந்து, அன்பு செலுத்திய பெண்மணிக்காகச் சோற்றுப் பானையைக் கண்களிலே காட்டிய அம்மனைச் சோத்துக்கண்ணி எனப் போற்றி வழிபட்டனர். மனமிரங்கிய மாரியம்மன் அங்கேயே கோயில் கொண்டாள் என்கின்றனர்.

கிழக்கு வாயிலின் வழியாக உட்செல்வோமெனில், இடப்புறம் வடக்கு நோக்கியவாறு இரண்டு மீட்டர் உயரமுள்ள இரண்டு குதிரைகளின் உருவங்களைக் காணலாம். மையப்பகுதியில் சோத்துக்கண்ணி மாரியம்மன் கருவறை உள்ளது. கருவறையில் சுதையினாலான அம்பிகை உருவம் உள்ளது. அதன் முன்புறம் மாரியம்மன் கற்சிலையும் முத்தாலம்மன் கற்சிலையும் உள்ளன.

முன்மண்டபத்தில் சிவபெருமான், அம்பிகை, சோத்துக்கண்ணியம்மன், முத்தாலம்மன் ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன. வடக்கில் சிறு சந்நிதியில் சிவலிங்கம், விநாயகர் ஆகியோர் கற்றிருவுருவங்கள் உள்ளன. முன் மண்டபத்தின் தென்புறம் விநாயகர், அம்பிகை ஆகியோர் உருவங்களும் வடபுறம் நாகர் சிலைகள் ஒன்பதும் உள்ளன. கருவறையை நோக்கி எதிரிடையான் சிலை உள்ளது. எதிரிடையான் சிலை ஒரு கையில் வாளும் மற்றொரு கையில் வெட்டுண்ட தலையும் கொண்டவாறு உள்ளது.

இக்கோயிலை மூடுவதில்லை. அம்பிகை, அன்பர்களுக்கு வேண்டிய போதெல்லாம் அருள்புரிய நேரம் காலமின்றி வெளியே போவதும் வருவதுமாக இருப்பதற்காக இக்கோயில் மூடப்படுவதில்லை என்று கூறப்படுகிறது.

நாள்தோறும் காலையிலும் மாலையிலும் பூசைகள் நடைபெறுகின்றன. பெண்துறவி ஒருத்தி இக்கோயிலில் பூசை செய்து வருகின்றார். அவர் சோறு சாப்பிடுவதில்லை. 15 ஆண்டுகளாகப் பொரிகடலை, வாழைப்பழங்கள் ஆகியவற்றை உண்டே பூசையைத் தொடர்ந்து செய்துவருகின்றார்.

காணும் பொங்கலன்று மிகப் பெரிய விழா நடைபெறுகிறது. அப்போது ஒரு லட்சம் பேர்கள் கூடுகின்றனர். சிவபெருமான் இடபவாகனத்திலும் மாரியம்மன்

பூதவாகனத்திலும் வீதியுலா கண்டருளுகின்றனர். வாணவேடிக்கைகளுடன் சிறப்பாக இவ்விழா நடத்தப்பெறுகிறது. இக்கோயிலுக்குச் சொத்துகள் இல்லை. ஊர்மக்கள் சாதி முறையில் அடுத்தடுத்து விழாக்கள் கொண்டாடுகிறார்கள்.

## சோழபுரம்

## சத்தியநாதேசுவரர் கோயில்

செங்கம்-போளூர்ப் பாதையில் செங்கத்தினின்று 32 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள சோழபுரத்தின் கிழக்கு நோக்கியவாறு 25 செண்ட் பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயில் சோழர்கள் தங்கள் நினைவாக ஏற்படுத்திய கோயிலாக இருக்க வேண்டும். இங்குள்ள கோயில் திருப்பணி செய்யப்படவேண்டுமென்று பிரிக்கப்பட்டுக் கோயிலின் சில பகுதிகள் பக்கத்தில் அடுக்கி வைக்கப்பெற்றுள்ளன. கருவறையும் உள் மண்டபமும் மட்டுமே தற்போது உள்ளன.

வாயிலின் தென்புறம் விநாயகர் பெருமான் உள்ளார். தென்கிழக்கு முனையில் சூரியனின் 1 மீட்டர் உயர புடைப்புச் சிற்பம் உள்ளது. தெற்கில் உடைபட்ட திருமாலின் கல் பலகைச் சிற்பமுள்ளது. இங்குத் திருமாலின் இருபுறமும் விளக்குகள் போன்ற உருவங்கள் உள்ளன.

பின்புறம் திருமாலின் வடிவம் சிற்பமாக உள்ளது. உள்மண்டபத்தின் இடப்புறம் சிவகாமியம்மன் உருவச்சிலை உள்ளது. கருவறையுள் சுயம்பு சத்தியநாதேசுவரர் உள்ளார். சந்திரசேகரர், அம்பிகை ஆகியோர் உற்சவத்திருமேனிகள் உள்ளன.

கருவறை மீது மூன்று நிலை சதுரவடிவ விமானம் உள்ளது.

ஒரு காலப் பூசை குருக்களால் செயயப்படுகிறது. மாட்டுப் பொங்கலன்று திருவூடல் உற்சவம் நடைபெறுகிறது. இக்கோயிலுக்கு 2 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது.

இக்கோயிலின் நிருவாகம் அறங்காவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1088/-உருபாயாகும்.

## சோழபுரம்

# மாரியம்மன்கோயில்

இவ்வூர் மாரியம்மன் கோயில் ஊரின் நடுவில் அமைந்துள்ளது. இது ஐந்து செண்ட் பரப்பில் உள்ளது.

இக்கோயிலில் மாரியம்மனின் மரச்சிற்பமும் சுழுத்தளவுச் சிற்பமும் உள்ளன. பொங்கலன்று பெரிய விழா நடைபெறும். பத்தாயிரம் பேர் அன்று கூடி பிரார்த்தனையைச் செலுத்துகின்றனர்.

இக்கோயிலில் நாள்தோறும் ஒரு காலப்பூசை பூசாரி ஒருவரால் செய்யப் படுகிறது. தைப்பொங்கல் நாளில் இங்கு பெருவிழா கொண்டாடப்பெறுகின்றது. இக்கோயிலின் ஆண்டுவருமானம் 700/-உருபாயாகும்.

## சோழவரம்

# வரதராசப் பெருமாள் கோயில்

இக்கோயில் கனியாம்பாடி இருப்புப்பாதை நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர்த் தொலைவில் வேலூர் வட்டத்தில் 50 செண்ட் நிலப்பரப்பில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

மேற்குப் பிரகாரத்தில் பலிபீடம் கொடிமரம் ஆகியவற்றை அடுத்துக் கிழக்கு நோக்கியவாறுள்ளது கருடாழ்வார் சந்நிதியாகும்.

கருவறையில் சீதேவி, பூதேவி ஆகியோருடன் வரதராசப்பெருமாள் மேற்கு நோக்கியவாறு அருள்புரியும் நிலையிலுள்ளார். அடுத்துக் கோயிலில் மகாமண்டபத்தில் ஆஞ்சநேயர், உபயநாச்சிமார்களுடன் அரங்கநாதர் ஆகியோர் திருவுருவங்கள் சிலைவடிவில் உள்ளன. பெருமாள், சீதேவி, பூதேவி,

சக்கரத்தாழ்வார் ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன.

இக்கோயிலின் மூலவர் கருவறைச் சந்நிதி ஒரு கலசத்தோடு 9மீட்டர் உயரம் கொண்டுள்ள விமானம் உள்ளது.

இக்கோயிலில் உள்மண்டபம், மகாமண்டபம் ஆகியவை உள்ளன. இங்குள்ள மடைப்பள்ளியும் அலங்கார மண்டபமும் பாழடைந்துள்ளன.

தீர்த்தக்கிணறு உள்ளது. ஆனால் இது பழுதுபார்க்கப்படவேண்டிய நிலையில் உள்ளது.

இக்கோயிலின் வடக்குச் சுவரிலுள்ள கல்வெட்டு சேதமடைந்துள்ளது. இது பிரிதிவி கங்கராயர் துணைவியைக் குறிப்பிடுகிறது. இவர் இக்கோயிலுக்கு நன்கொடை அளித்திருக்கக்கூடும் எனத் தோன்றுகிறது.[1]

இக்கோயிலின் உட்சுவரில் கிரந்தத்திலும் தமிழிலும் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு பல்லவ மன்னர் கோவிசயன் இருபத்து மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டாகவுள்ளது. இக்கல்வெட்டு, இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலமுள்ள கனகவல்லி கிராமத்தின் பெயரில் நாராயணன் கோயில் கட்டடம் கட்டப்பட்டதாகக் குறிப்பிடுகிறது.[2]

இரண்டு காலப்பூசைகள் நடைபெறுகின்றன. கிருஷ்ணஜெயந்தி உறியடி உற்சவம், நவராத்திரி, கார்த்திகை தீபம், பாரிவேட்டை உற்சவம், வைகுண்ட ஏகாதசி, கிரிவலம், தீர்த்தவாரி உற்சவம் ஆகியவை நடைபெறுகின்றன.

இக்கோயிலுக்கு 2, 08 ஏக்கர் நன்செய் நிலமும், 7.51 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயில் நிருவாகம் அறங்காவலரிடம் உள்ளது. கோயிலின் ஆண்டு வருமானம் 2, 490 /_ உருபாயாகும்.

---

(1. 427 /1902; 2. 14/1887)

## சோளிங்கபுரம்

# இலட்சுமி நரசிம்மசுவாமி கோயில்

இக்கோயில் சென்னை_பெங்களூர் இருப்புப்பாதையில் அரக்கோணத்திலிருந்து மேற்கே 27 கிலோமீட்டர்த் தொலைவிலும் சென்னை_திருப்பதி இருப்புப்பாதையில்

திருத்தணி இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 24 கிலோமீட்டர்த் தொலைவிலும் அமைந்துள்ளது. வேலூரிலிருந்தும் சித்தூரிலிருந்தும் இவ்வூருக்குப் பேருந்து வசதி உள்ளது.

சோளிங்கர் என்னும் பெயர் சோழ - லிங்க - புரம் என்னும் மூன்று சொற்களைக் கொண்டுள்ளது எனவும் சோழ மன்னர் ஒருவர் இங்கு இயற்கையில் அமைந்த சுயம்புலிங்கம் ஒன்றைக் கண்டு அதற்கு ஒரு கோயில் அமைத்துச் சோளீசர் கோயில் எனப் பெயரிட்டதாகவும் சோழ - லிங்க - புரம் என்னும் பெயர் சோளிங்கர் எனத் திரிபு எய்திற்று எனவும் சிலர் கூறுகிறார்கள். இதற்கு ஆதாரமாகச் சோளிங்கரில் ஐந்து கல்வெட்டுகளைக் கொண்ட சோழபுரீசுவரர் கோயில் இருக்கிறது.

இவ்வூர்ச் சோளிங்கர் எனக் குறிப்பிடப்பட்டாலும் இவ்வூருக்கு அருகில் 3 கிலோமீட்டர்த் தெற்கில் கொண்டபாளையம் என்னும் சிறுகிராமம் உள்ளது. இங்குப் பெரியமலையும் சிறியமலையும் அமைந்துள்ளன. இவையே இவ்வூருக்குப் பெருமை சேர்ப்பவையாகும். சோளிங்கபுரத்தில் நடுநாயகமாக விளங்குவது நரசிங்கப் பெருமாள் திருக்கோயிலாகும். இது பத்தோசித சுவாமி கோயில் என்றும் பெருமாள் கோயில் எனவும் பக்தவத்சலர் கோயில் என்றும் குறிப்பிடப்படுகிறது. நாற்புறமும் மதில் அமைய அதனைச் சுற்றி மாட வீதியாக ஒரு காலத்தில் விளங்கிய திருச்சுற்று உள்ளது.


இப்பெரிய மலைமீதுள்ள கோயில் 60 மீட்டர் நீளமும் 45 மீட்டர் அகலமும் கொண்டு 1 1/2 ஏக்கர்ப் பரப்பில், ஏறத்தாழ 225 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இது கடல்மட்டத்திலுருந்து 120 மீட்டர் உயரத்திலுள்ளது. இதற்கு ஆயிரம் படிகள் உள்ளன.

யோக ஆஞ்சநேயசுவாமி கோயில் சிறிய மலையில் 75 மீட்டர் நீளமும் 45மீட்டர் அகலமும் கொண்டு ஏறத்தாழ 1 ஏக்கர்ப் பரப்பில் 105 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.


இவ்வூரின் மையத்தில் பத்தோசிதன் சுவாமி என்னும் பெயரில் உள்ள கோயில் 90 மீட்டர் நீளமும் 45மீட்டர் அகலமும் கொண்டு ஏறத்தாழ 2 1/2 ஏக்கர்ப் பரப்பில் அமைந்துள்ளது.

கடிகை என்பது கல்லூரி. இம்மலைச்சாரலில் கடிகை இருந்ததால், அதனையொட்டிக் கடிகாசலம் எனப்பெயர் பெற்றது. இக்கல்லூரியில் பல்லவ இளவரசர்களும் அரங்கப் பதாகைப் பிராட்டியாரும் கல்வி கற்றனர் என்பர்.


இப்பகுதியில் முன்னொரு காலத்தில் கும்போதரர், காலகேயர் என்னும் அசுரர்கள் சான்றோர்களுக்கும் தவமுனிவர்களுக்கும் தீங்கிழைத்துவந்ததன்றி, இப்பகுதியை ஆண்டுவந்த மன்னனைத் துரத்திவிட்டு மக்களுக்குப் பெருந்துன்பம் விளைவித்துவந்தார்கள். இதை உணர்ந்த தேவேந்திரன் நரசிங்கப் பெருமாளை




பெரியமலை ஸ்ரீ யோக நரசிம்ம சுவாமி ஆலய
இராசகோபுர முன்புறத் தோற்றம்



பெரியமலை ஸ்ரீ யோக நரசிம்ம சுவாமி
ஆலய இராசகோபுரப் பின்புறத் தோற்றம்




மூலவர்கள் -- ஸ்ரீ அமிர்தபலவல்லித் தாயார், ஸ்ரீ யோக நரசிம்ம சுவாமி,
ஸ்ரீ யோக ஆஞ்சநேய சுவாமி




ஸ்ரீ அமிர்தபலவல்லித் தாயார்-மூலவர்
விமானத் தோற்றம்

142_2_14




அருள்மிகு பக்தோசித சுவாமி திருக்கோயில்
இராசகோபுரத் தோற்றம்



சிறியமலை ஸ்ரீ யோக ஆஞ்சநேய சுவாமி
ஆலய இராசகோபுரத் தோற்றம்

142_2_14அ



ஸ்ரீ யோக நரசிம்ம சுவாமி-மூலவர்
ஹேமகோடி விமானத் தோற்றம்

அருள்புரியுமாறு வேண்டினான். பெருமாள் தம்மை நாடிவந்த இந்திரனை நோக்கி மகாராசா என்னும் மன்னனைக் கொண்டு செயலாற்றுமாறு கூறினார். அம்மன்னனுக்கு உதவிபுரிய ஆஞ்சநேயரை அனுப்புவதாகவும் கூறினார். இந்திரன் வேண்டுகோளுக்கு இணங்க ஆஞ்சநேயர் உதவியுடன் அம்மன்னன் அசுரரைக் கொன்று வெற்றியடைந்து நாட்டில் அமைதியை நிலைநாட்டினான். பின்னர் அம்மன்னன், தேவர்கள் கட்டளைக்கு இணங்கச் சிலகாலம் இத்தலத்தில் அரசாண்டு பின் தம் குலகுருவாகிய வசிட்டரின் ஆணைக்கேற்ப முதலில் பிரம்ம தீர்த்தத்தில் நீராடி வலம்வந்து அவாத்தரி பிரதட்சிணம் என்னும் பெருஞ்சுற்று, உட்சுற்று ஆகியவற்றை விதிப்படி செய்து, கடிகை மலைமேல் மனைவியுடன்யோக நரசிங்கப் பெருமானை வணங்கி வழிபட்டான். அவ்வளவில் இறைவன் அருளால் அவ்விருவரும் வீடுபேறு எய்தினர். அவனுக்கு உதவிய ஆஞ்சநேயரைச் சிறியமலையில் இருந்து தம்மை நாடிவரும் அன்பர்களுக்கு அருள்புரிந்துவருமாறும் இறைவன் கட்டளை இட்டார். அதன்படி, ஆஞ்சநேயர் சிறியமலையில் யோகாஞ்சநேயராகத் தவம் புரிந்தவாறே அன்பர்களின் வினைகளைத் தீர்த்தும் அவர்களுக்கு வரங்களைத் தந்தும் அருள்பாலித்துவருகிறார். இப்பகுதிக்குக் கடிகாசலம் என்ற பெயரல்லாமல் நரசிம்மபுரி என்னும் பெயரும் அனுமந்தபுரி என்னும் பெயரும் உள்ளன.

பைரேசுவரர் ஆணைக்கேற்பச் சமவெளி நிலத்திலிருந்து இம்மலை மிக்க உயரத்தில் வளர்ந்துகொண்டு வருவதைக் கண்டு அதனைப் பொறுக்காத இந்திரன் அதை அழுத்துமாறு பலராமனிடம் கூற, அவரும் அவ்வாறு செய்ய, இம்மலை, தற்போதுள்ள நிலையில் இருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இம்மலை உச்சியே இங்குள்ள 14 மலையுச்சிகளிலும் மிகப்புனிதமானது எனக் கருதப்படுகிறது.

இக்கோயிலில் வழிபாடாற்றிப் பேறுபெற்ற பெருந்தவத்தோர்கள் அத்திரி, காசிபர் வசிட்டர், சமதக்னி, கௌதமர், பரத்வாசர், விசுவாமித்திரர் ஆகியோர் ஆவர்.

அடியார்கள்: பிரகலாதர், விப்பிரசேகரர், வாமதேவர், துர்வாசர், ஹம்ஸம், ஔந்தாலி முதலிய பலர்.

மகாலட்சுமி அமுதக் கொடியுடன் இலட்சுமி சரஸ் என்னும் பொய்கையில் தோன்றித் தம்தோழியருடன் ஆனந்தமாக ஊஞ்சலாடிக் கொண்டிருந்தபோது, திருமால் கருடப்புள்ளேறி வந்தார். அவளைக் கண்டு ஆனந்தம் அடைந்தார். தேவர்கள் முனிவர்கள் மற்றுமுள்ளோர் கணடு, வியக்குமாறு தாமரையாளை மணந்து அருள்பாலிக்கிறார். திருமகளுக்குச் சுதாவல்லி, அமிருதவல்லி எனப் பல் பெயரிட்டு வாழ்த்தித் தேவரும் முனிவரும் பேறுபெற்றனர்.

வைணவ சமய ஆசாரியப் பெருந்தகையோரில், நாதமுனிகள், ஆளவந்தார், திருக்கச்சிநம்பிசள், இராமானுசர், முதலியாண்டான், வேதாந்ததேசிகர், மணவாள மாமுனிகள் ஆகியோர் இத்தலத்து இறைவனை வணங்கி வழிபட்டுள்ளனர். குறிப்பாக மணவாள மாமுனிகள் (14 - ஆம் நூற்றாண்டு ) இத்தலத்தில் எறும்பி என்ற பகுதியில் தம் சீடர் தேவராஜகுரு என்னும் எறும்பி அப்பாவிற்காக

ஒருமாதமாக இருந்து திருப்பாவைச் சொற்பொழிவு செய்தார் என்றும் அதன் சாற்று நாளில் தக்கான் பாரிவேட்டை நாளாவதால், அந்த எறும்பிப்பகுதியில் திருப்பாவை சாற்று நடந்தது என்றும் அதனை ஒட்டியே இன்றும் மேற்குத் திசைப் பாரி(பரி) வேட்டை நாளில் தக்கான் எம்பெருமானுக்கு எறும்பி கிராம மண்டபத்தில் திருப்பாவை, சாற்று நடந்துவருகிறது என்றும் பெரியோர் கூறுகின்றனர். மணவாள மாமுனிகள் இந்தப் பெருமானை மிகவும் உகந்து வடதிருவரங்கநாதர் திருநாமம் இட்டும் ஊர்க்கு வடதிருவரங்கம் என்றும் எறும்பியிலுள்ள ஏரிக்கு வட திருக்ககாவேரி என்றும் பெயரிட்டும் மகிழ்ந்தார். அவர் தம் சீடர் எறும்பிஅப்பா தம் ஆசிரியரைத் தவிர பிறர் எவரையும் புகழாதவர். தம் ஆசாரியர் மனம் மகிழுமாறு இத்தலத்து எம்பெருமான் மீது 'அமிருதபலாவளி சதகம்' என்னும் சதக நூல் ஒன்றினை வடமொழியில் இயற்றியுள்ளார்.

சுவாமி தொட்டாச்சார் என்னும் மகாவித்துவானும் பக்தருமாகிய பெரியவர் தற்போதுள்ள சோளிங்கபுர கிராமத்தை நிர்மாணம் செய்து பெருமாள் கோயிலைப் புதிதாகக் கட்டிக் குடமுழுக்கு முதலிய விழாக்களைச் சீரும் சிறப்புமாகச் செய்தார். இதல்லாமல் மலைக் கோயில்களையும் புதுப்பித்துக் கோயில் நாட்பூசை, திருவிழா போன்ற அனைத்துச் சிறப்புகளையும் ஏற்படுத்தினார். முதன்முதலில் பெருமால் கோயில் கி. பி. 1588-ஆம் ஆண்டில் நிலைப்படுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. இவரே இத்தலத்து முதல் ஆசாரிய புருடராகப் பெருமாளின் அனைத்துச் செயல்களையும் செய்து வழிபாட்டு முறையை வகுத்த, பெரியார் ஆவார். இவர் இராமானுசரின் மருமகனாரான முதலியாண்டானின் திருக்குலத்தைச் சார்ந்தவர். இவர் ஆசார்ய புருடர் ஆகையால், இவரும் இவர்தம் குலத்தோன்றல்களும் தம் சீடர்களின் உதவிகொண்டு பெருமாளுக்குத் திருவாபரணம், பட்டுப்பீதாம்பர ஆடைகள், வாகனங்கள், பாத்திரங்கள் போன்ற அனைத்தையும் சேகரித்து உதவியுள்ளனர்.

இஃது ஒரு புகழ்வாய்ந்த பிரார்த்தனைத் தலமாகும். பில்லி, சூனியம், தீராதவினை, மனக்குறை முதலியவற்றால் துன்புறுவோர் இத்தலத்திற்கு வந்து நியமனத்துடன் சேவை புரிந்தால், அத்துன்பம் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கப் பெறுவர் என்பது கண்கண்ட உண்மை. நோய் நீங்கியும், மனக்குறை தீர்ந்தும் பல்வகையிலும் அல்லல் பெற்றோர் பலர். பெருமானுக்கு மண்டகப்படி செய்தும் மண்டபம் எழுப்பியும் கட்டளை ஏற்படுத்தியும் உற்சவம் செய்தும் தொண்டுகள் புரிந்து வருவதே இத்தலம் தனித்த சிறப்பு வாய்ந்த ஒன்று என்பது கண்கூடாக விளங்குகிறது. இத்தலம் காசி, கங்கை, கயை ஆகியவற்றிலும் மேலானது என்று புராணத்திலேயே போற்றப்பட்டுள்ளது.

தலவிருட்சம் என்னும் பெயரில் விருட்சம் எதுவுமில்லை. ஆயினும் இவ்வூரில் பெருமாள் கோயிலில் பாரிசாத மரம் ஒன்று முன்பு இருந்தது. சிறிய மலையில் அசோக மரம் உள்ளது.

பெரியமலையில் உள்ளே நுழையும்போது அழகிய கோபுரவாசல் உள்ளத்தைக்

கொள்ளைகொள்ளும். அங்கு நின்று சுற்றுமுற்றும் பார்த்தால் பச்சைப்பசேல் எனப் பசுமை படர்ந்த குன்றுகளும் இடையிடையே ஊர்களும் காட்சி அளிக்கும். வலப்புறமாகச் செல்லும்போது பெரிய பலிபீடமும் கொடிமரமும் இருப்பதைக் காணலாம். நீண்ட நெடுங்காலமாக இருந்த கொடிமரம் பழுதுபட்டதால், அண்மையில் புதுக் கொடிமரம் அன்பர்களின் காணிக்கையால் அமைக்கப்பட்டுள்ளது. உற்சவர் இருக்கும் கோயிலில் (ஊர்க் கோயிலில்) தனியாக வேறு கொடிமரம் இல்லை. முதன்மை வழி வடக்கு நோக்கியவாறுள்ளது. யோக நரசிம்மர் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். கொடிமரம் பெரியமலையில் உள்ளது.

பெரியமலையின் இடைப்பகுதியில் அமிர்தவல்லித் தாயாருக்குத் தனிக்கோயில் இருந்தது. (தாயார் அல்லது அம்மனைத் தனிக்கோயில் நாச்சியார் என்பது வைணவ முறை) பாதுகாப்பும் பிறவும் கருதித் தாயார் மூலவர், உற்சவர் ஆகியோர் திருவுருவங்கள் இங்குப் பெருமாள் சந்நிதிக்குத் தெற்கில் ஒரு சந்நிதியில் வைக்கப்பட்டுள்ளன.

தாயார் சந்நிதியைக் கடந்தால் பெருமாள் சந்நிதியை எய்தலாம். தாயார் கிழக்கு முகமாக வீற்றிருக்கிறார். தாயாரை வலம் வந்து வடக்கு முகமாக நடந்தால் பெருமாளின் துவாரபாலகர்கள் உருவங்களைக் காணலாம். இவை அழகிய சிலை உருவங்கள். கருவறை அமைந்த மண்டபத்தின் வெளியே வடக்கு வாயிலில் தெற்கு நோக்கி எடுப்பாகக் காட்சி தருகின்றன. அவர்களையடுத்துப் பெருமாளின் முன் இரண்டு இறக்கைகளுடனும் குவிந்த கைகளுடனும் சிலை வடிவில் சிறிய கருடாழ்வார் நின்ற நிலையில் காட்சியளிக்கிறார். அவருக்குப் பின்னமைந்த சுவரில் சாளரமுண்டு. அங்கிருந்து பார்த்தால் எதிரே சிறியமலை தென்படும். சிறிய மலையில் யோகாஞ்சநேயரின் திருக்கண்கள் நேராகப் பெரியமலையில் உள்ள யோகநரசிங்கப் பெருமாளின் திருவடி நோக்கி அமைந்துள்ளன என்று பெரியோர் கூறுவர். கருடாழ்வார் திருவுருவத்தின் இடப்பக்கம் தீப்பாவை நாயகி என்னும் வெண்கலப் பாவை விளக்கொன்று உள்ளது. கருடனின் வலப்பக்கம் ஏழுமுனிவர்களின் திருவுருவங்கள் உள்ளன. கருவறையைச் சுற்றிலும் ஒருவர் ஒருவராக நுழையக்கூடிய திரு உண்ணாழிச்சுற்று உள்ளது. இப்போது அதனைப் பூட்டியுள்ளதால் அதில் யாரும் வலம் வரமுடியாது. கருவறையின் முன் அமைந்த பகுதி நுட்பமான முறையில் சுற்றிவர அமைந்துள்ளது. கருவறையில் சிலை வடிவில் யோக நரசிங்கப்பெருமாள் எழுந்தருளியுள்ளார். கீழே அமைந்த பீடத்தில் சிறிய இலட்சுமி நரசிம்மப்பெருமாள் திருவுருவம் உள்ளது. அடுத்து ஆதிசேடன், சக்கரத்தாழ்வார், கண்ணன், கருடாழ்வார் முதலிய உற்சவத் திருவுருவங்கள் உள்ளன. அடுத்த பகுதியில் மறையாய் விரிந்த விளக்கு உள்ளது. நரசிங்கப் பெருமானுக்கு ஆழ்வார் பாடலில் அங்காரக்கன் என்பது பெயர். இவரது உற்சவர் தக்கான் அல்லது பக்தோசிதசுவாமி சோளிங்கர் ஊர்க்கோயிலில் கோயில் கொண்டுள்ளார்.

பெருமாளின் இடப்புறத்தில் அமைந்த தாயார் திருக்கோயிலில் இருக்கும் மூலமூர்த்தி, உற்சவமூர்த்தி ஆகியோருக்கு அமிருதவல்லி, சுதாவல்லி என்னும் பெயர்கள் கூறப்படும்.

### சின்னமலை

ஏற்றமிகு இயற்கை எழிலிடையே ஏறத்தாழ 500 படிகள் அமைந்த அழகிய குன்றின்மீது அமைந்துள்ளது. எழில்மிகு ஆஞ்சநேயர் கோயில். நுழைவாயிலின் எதிரே அமைந்த வழியிலுள்ள ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. அங்குள்ள பாறையைக் கடந்து வலமாக வந்தால் அனுமார் சந்நிதியைக் காணலாம். ஆஞ்சநேயர் சாந்தமாக, யோகநிலையில் பரந்தாமனை நினைந்து சேவை செய்து கொண்டிருக்கிறார். எதிரே மேற்குத் ,திசையில் பெரியமலையில் நரசிங்கப்பெருமானின் கொடிக்கம்பம் இருப்பதை இங்கிருந்தே காணலாம். சிறியமலையில் யோக ஆஞ்சநேயர் தம் திருக்கண்களால் பெரியமலையிலுள்ள நரசிங்கப்பெருமாளின் திருவடிகளைக் கண்டவாறே அவரை நினைத்துத் தவமிருக்கும் நிலையைக் காணலாம். மூலவர் ஓரழகிய சிறுகுழந்தை அமர்ந்துள்ளது போல் காட்சியளிக்கிறார். நான்கு கைகள் ஒரு கையில் சக்கரமும் இன்னொன்றில் சங்கும் மற்றிரு கைகளில் ஜபமாலையும் ஜப எண்ணிக்கையும் ஆன நிலை, வீற்றிருந்த திருக்கோலமாகும். ஔத்தாலிக முனிவர், வாமதேவர் ஆகியோர் போன்றவர்க்கு வரமருள், மனக்குறை தீரித்த, தீர்க்கும் வசியப் புன்னகையுடன் விளங்குகிறார். உற்சவர் நின்ற திருக்கோலம் மூலவர் தோற்றம் போன்றே உள்ளது. (ஞாயிறுதோறும் சிறப்பு அபிடேகம், நாள்தோறும் உண்டு.) கார்த்திகையில் சிறப்புப் பிரார்த்தனை உற்சவம் குறிப்பிட்ட காலங்களில் நடைபெறும். கார்த்திகை மாதம் இத்தலத்திற்குத் தனிச்சிறப்பு கூறப்படுகிறது.

அனுமார் சந்நிதியை அடுத்து ஒரு பெரிய குளம் உள்ளது. அனுமார் பொருட்டு இராமர் தம் சகோதரர் இலக்குவணன் சீதை ஆகியோருடன் இம்மலையில் தங்கி முன்கூறிய குளத்தில் நீராடியதாகப் புராணம் கூறுகிறது. இதனால் அக்குளத்திற்கு இராமர் தீர்த்தம் என்னும் பெயருண்டு. அனுமார் அதில் சக்ரத் தாழ்வாரைத் தோய்த்துத் தூய்மை செய்ததால் இதற்கு அனுமன் தீர்த்தம், சக்கரதீர்த்தம் என்ற வேறு பெயர்களும் உண்டு. அருகே அரச மரமும் உள்ளது.

அடுத்து இராமர் சந்நிதிக்குச் செல்லும் வழியில் கருவறைக்கு முன் துவாரபாலகர்களைக் காணலாம். இராமர் சந்நிதியில் இலட்சுமணர், சீதாபிராட்டி ஆகியோர் நின்ற திருக்கோலத்தில் அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றனர். மூலவர், உற்சவர் ஆகியோருடன் பெரிய மலையில் உள்ளது போல் சிறிய கண்ணன், சக்கரத்தாழ்வார், ஆதிசேடன் போன்றோர் செப்புத் திருமேனிகளும் இச்சந்நிதியில் உள்ளன.

இராகவனின குல ஆராதனைப் பெருமாளான அரங்கநாதர் சந்நிதி இராமர் சந்நிதியை அடுத்து உள்ளது. இங்கு இராமர் சந்நிதியைத் தவிர வேறு சந்நிதியில் துவாரபாலகர்கள் இல்லை என்பது ஒரு முக்கியமான செய்தியாகும். அரங்கநாதர் மூலவர் பள்ளி கொண்ட திருக்கோலத்திலும் உற்சவர் நின்ற திருக்கோலத்திலும் உபய நாச்சிமார் அமர்ந்த கோலத்திலும் சேவை சாதிக்கின்றார்கள்.

தீர்த்தம் நிறைந்த குளத்தில் மீன்கள் மிகுதியாக உண்டு. ஏறத்தாழ 50

ஆண்டுகளுக்கு முன்பு இம்மலையில் 'கொண்டமுசு' என்ற ஒரு வகைக் குரங்குகள் ஒருசிறுவர், சிறுமி உயரம் உடையவை மிகுதியாக இருந்தன. இரண்டாம் உலகப்போரில் நீக்ரோவர் இப்பகுதியில் முகாம் இட்டிருந்தபோது அவை முழுமையாக அழிக்கப்பட்டுவிட்டன என்பது வருத்தம் தரும் செய்தியாகும். அக்குரங்குகள் சாதுவானவை என்று கூறப்படுகிறது.

பேய், பிசாசு பிடித்தவர், தீராத நோயினால் வருந்துபவர் போன்றோர் இம்மலைச்சுனையில் நீரில் விதிப்படி மூழ்கிப் படிகளில் படுத்துக்கிடந்து, வாயுகுமாரனை நினைந்து வரம் கேட்பதை இன்றும் காணலாம்.

சோளிங்கர் நகரில் நீள் சதுரவடிவில் அழகுற அமைந்துள்ள பெருமாள் திருக்கோயிலின் தோரண வாயில் உள் எதிரே பலிபீடம்காட்சி தருகிறது. அதன் அருகே அமைந்த மேடையில் பெருமாளின் பாதங்கள் சிலைவடிவில் உள்ளன. வலப்புறத்து மடைப்பள்ளி விளங்கும். அதன் எதிரே அமைந்த மண்டபம் கல்மண்டபம், இராப்பத்து, பகல்பத்து முதலிய விழா நடைபெறுவது இந்த மண்டபத்தில் தான்.

இறைவன் விழாக் காணும் அந்த மண்டபத்தின் கல்தூண்கள் மிகப் பெரியவை. சிற்பக்கலை நிறைந்தவை. எதிர் முனையில் சுவரிலேயே குடைந்தது போன்ற அரங்கநாதர் சிலை அமைந்துள்ளது. பள்ளிகொண்ட பெருமானுக்கு முன்பொரு காலத்தில் பூசை நடந்துள்ளது. அருகே தாயார் வடிவம் பொறித்த மேல்பகுதி அமைந்த ஒரு சந்நிதியைக் காணலாம். அதில் இப்போது திருவுருவம் எதுவுமில்லை. அங்கிருந்து கிழக்கு நோக்கி வந்தால் ஆழ்வார், ஆச்சாரியர்கள் சந்நிதிகளைக் காணலாம். அனைத்திலும் சிலை வடிவில் உருவங்கள் உள்ளன. பெருமாள் சந்நிதிக்குப் பின்புறம் ஆதிகேசவப்பெருமாள் சந்நிதி உள்ளது. ஆதிகேசவர், உபயநாச்சிமாருடன் சிலை வடிவில் நின்றநிலையில் உயர்ந்து காணப்படுகின்றார். எதிரே பெரிய வடிவில் கல்லில் வடித்த கருடனின் மிக அழகிய தோற்றம். அதில் சிவலிங்கம் இருந்ததாகக் கூறப்படுகிறது. தொட்டாச்சாரியர் சுவாமி காலத்தில் சிவபெருமானுக்கு ஊரின் தென்கிழக்கில் தனிக்கோயில் எடுக்கப்பட்டு அதில் அந்தச் சிவமூர்த்தம் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

**பெருமாள் சந்நிதி**: அரங்கமண்டபம் என்னும் மகா மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால், பக்தோசித சுவாமி சந்நிதியைக் காணலாம். வெளியே துவாரபாலகர் உள்ளனர். உற்சவர் தக்கான், பிராட்டியார் இருவருடன் நின்றகோலத்தில் நாக வாகனத்தில் நின்று காட்சி அளிக்கிறார். சடகோபம் என்னும் பெருமாள் திருவடிநிலை ஆதிசேடன் வடிவில் அமைந்திருப்பது இத்தலத்தின் தனிச்சறப்பு ஆகும். பெருமாளின் வலப்புறத்தில் ஐம்பொன்னாலான கண்ணனின் உலாத்திருமேனி கண்ணையும் கருத்தையும் கவர்வதாய்ச் சிற்ப வேலைபாடு நிறைந்து உள்ளது. மற்றொரு பக்கம் சிறிய வடிவில் வரதராசசுவாமி காட்சி தருகிறார். தல ஆச்சாரிய புருடர் தொட்டாச்சாரியர் சுவாமிக்கு கருடவாகனத்தில் காட்சியளித்ததால் அப்பெருமான் அருளாளர் என்றும் பேரருளாளர் என்றும் போற்றப்பெறுகிறார். அதனை நினைவூட்ட அவர் கோயில் கொண்டுள்ளார்.

கருவறையைச் சுற்றி வலம் வரும்போது ஆண்டாள் சந்நிதியைக் காணலாம். மூலவர், உற்சவர் இருவரும் உள்ளார்கள். அதற்கு நேர் கிழக்கில் ஆழ்வார் திருமேனிகள் 12 உள்ளன. ஆச்சாரியர்களில் நாதமுனிகள், ஆளவந்தார், திருகச்சி நம்பி, இராமானுசர், எம்பார், கூரத்தாழ்வார், முதலியாண்டான், பிள்ளைலோகாச்சாரியர், மணவாள மாமுனி, எறும்பியப்பன், சுவாமி தொட்டாச்சாரியர் ஆகியோர் 11 செப்புத் திருமேனிகள் உள்ளன.

**திருமலைக்கோயில்** (பெரிய கோயில்) : மூலவர் யோக நரசிம்மசுவாமி (சிங்கமுகம்; வீற்றிருந்த திருக்கோலம். யோகாசனம்) சாளக்கிராம மாலை அணிந்துள்ளார். யோக பீடத்தில் தசாவதாரம் காட்சி விளங்குகிறது. இறைவன் திருவடிகளில் சூரிய சந்திரர்களின் நித்தியவாசம். சப்தரிஷிகளுக்கு கடிகைப் பொழுதில் தோற்றமளித்தார். சிறிய திருவடி என்னும் ஆஞ்சநேயருக்கு சங்கு, சக்கரம் அளித்தவர். விமானம் ஹேமகோடி பெருமாளுடன் மறையார் விரிந்த விளக்கு, மிக்கான், புக்கான் என்ற ஆழ்வார் மங்களாசாசனம் பெற்ற பெருமான்களும் உள்ளனர். தீர்த்தம் சிலா புட்கரணி மலையின் பின் உள்ளது. பெரிய மலைக்கு கடிகாத்திரி, கடிகாசலம், அனுமந்த பர்வதம், ஏகசிலா பர்வதம் என்றெல்லாம் பல பெயர்கள் உள்ளன. பெருமாளின் எதிர்ப்புறத்தில் சேனை முதல்வர், நம்மாழ்வார், எம்பெருமானார் (இராமானுசர்) உள்ளனர். அடுத்து சப்தரிஷிகளும் கருடனும் உள்ளனர்.

**தாயார் சந்நிதி**: மூலவர் உற்சவர் அமிருதபலவல்லி, சுதாவல்லி என்னும் திருநாமம் கொண்டுள்ளார். கிழக்கே திருமுக மண்டலம்.

**சின்னமலை**: அரங்கநாதர் சந்நிதி; மூலவர் பள்ளி கொண்ட திருக்கோலம்; உற்சவர் நின்ற திருக்கோலம் உபய நாச்சியார்; வீற்றிருந்த திருக்கோலம். தெற்கே திருமுகமண்டலம்.

**இராமர்சந்நிதி**: இராமர், இலக்குவனர், சீதாபிராட்டி மூலவர் நின்ற திருக்கோலம்; உற்சவர் நின்ற திருக்கோலம்; மேற்கே திருமுகமண்டலம்.

**யோக ஆஞ்சநேயர் சந்நிதி**: மூலவர் யோகாஞ்சநேயர்; வீற்றிருந்த திருக்கோலம். யோகாசனம்; மேற்கே திருமுக மண்டலம். சதுர்ப்புஜம் (4 கைகள்). மேற்கைகளில் வலத்தில் சக்கரம், இடத்தில் சங்கம் மற்றிருகைகளில் ஜபமாலை. ஜபங்களின் எண்ணிக்கை மூலவர்க்குச் சாளக்கிராம மாலை, உற்சவர்க்கும் சதுர்ப்புஜம்; நின்ற திருக்கோலம். தீர்த்தம் அனுமன் தீர்த்தம்; சக்கரத் தீர்த்தம். ஞாயிற்றுக்கிழமை வழிபடச் சிறந்தது.

## தக்கான் குளம் என்னும் பிரம்ம தீர்த்தம்

நான்முகக் கடவுள் தம் தலையறுப்புண்ட குற்றம் நீங்க நரசிங்கப்பெருமாளைக் குறித்துத் தவம்புரிந்துயர்ந்ததால் அமைத்த தீர்த்தம் பிரம்ம தீர்த்தம் வியாழக்கிழமை இத்தீர்த்தத்தில் குளித்தல் சிறப்பாகும். அதிலும் மாசி

வியாழக்கிழமையும் பௌர்ணமியும் கூடிய நாளில் இதில் நீராடித் தானம், தபம் முதலியன செய்பவர்களுக்கு பெருமை மிகும். கரையில் வரதராசசுவாமி திருக்கோயில் உள்ளது.

**மூலவர்** வரதராசசுவாமி கருடவாகனத்தில் நாற்கரங்களுடன் காட்சிதருகிறார். ஒரு கையில் சக்கரமும் ஒரு கையில் சங்கமும் மற்றிருகைகளில் முறையே தாமரை, கட்சமும் (வாள்) ஏந்தி வலத்திருவடியை மடக்கிக் கருடனின் தோளிலும் இடத்திருவடியை நீட்டிக் கருடனின் உள்ளங்கையிலும் இட்டு மேற்கு நோக்கியவாறு உள்ளார். புண்ணியகோடி விமானம். சுவாமி தொட்டாச்சாரியருக்குக் காட்சி. கீழே பெருமாளைத் தாங்கும் கருடனுக்கு ஒரு கையில் பெருமாள் திருவடி, மற்றொரு கையில் ஞானமுத்திரை. வரதராசசுவாமி உற்சவர் உபயநாச்சிமாருடன் நின்ற திருக்கோலம். **இராமானுசர் சந்நிதி**: உடையவர், மூலவர், உற்சவர், தெற்கே திருமுக மண்டலம்.. பெரும்புதூர் உடையவர் போன்ற பெரிய திருமேனியுடன் இருப்பது சிறப்பு. **தொட்டாச்சாரியர் சந்நிதி**: மூலவர் மட்டும்; நின்ற திருக்கோலம்; அஞ்சலி கைகூப்பிய நிலை; தெற்கே திருமுக மண்டலம்.

பக்தோசித சுவாமி கோயில் உற்சவர் (தக்கான்) உபய நாச்சிமாருடன் நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம். சதுர்ப்புஜம்_சக்கரம், சங்கம், மற்றிருகைகளில் இடக்கையினால் அழைத்து அபயம் அளிக்கும் காட்சி. உபயநாச்சிமாருக்கும் அதே போன்றுள்ளன. இருக்கை சேஷ வாகனம். விமானம் ஹேமகோடி விமானம். கண்ணன், வரதராசசுவாமி, எம்பெருமான்கள் திருமங்கையாழ்வார், பேயாழ்வார், மங்களாசாசனம் செய்த பெருமாள். நிவாச புட்கரணி.

ஆதிகேசவப்பெருமாள் உபய நாச்சிமாருடன் கிழக்கு முகமாய் நின்ற திருக்கோலம். பெரியமலை, சின்னமலைக்குப் போய்ச் சேவை செய்ய இயலாதவர் அவருக்கு ஆராதனை செய்தால் அப்பயன் எய்துவர் என்று பெரியோர் கூறுவர். இப்பெருமானுக்கு 1008 குடம் நீராட்டுவிழா முறைப்படி நடத்தினால் மழைபெய்து நாடு செழிக்கும் எனக் கூறப்படுகிறது.

கடிகாசலத்தில் 108 தீர்த்தங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆயினும் புராணத்தில் சிலவே கூறப்பட்டுள்ளன. அவற்றில் மிகமிக முக்கியமானதொன்று **பிரம்ம தீர்த்தம்** என்னும் தக்கான் குளமாகும். இது மலைக்கோயிலுக்குச் செல்லும் வழியில் உள்ளது. இது தற்போது நன்கு புதுப்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் குளத்தின் நீளம் 90 மீட்டர்; அகலம் 60 மீட்டர்; இதில் 25 படிகள் உள்ளன. வழிபட வருவோர் நாள்தோறும் நீராடும் தீர்த்தமும் இதுவேயாகும். இதில் தெப்ப உற்சவம், தீர்த்தவாரி ஆகியவை நடைபெறுகின்றன. இக்குளக்கரையில் வரதராசசுவாமி கோயில் உள்ளது.

பிரமதீர்த்தத்திற்கு அருகில் சிறிய நீர் வீழ்ச்சியாக அயவிருத தீர்த்தமும் **வயிரவர் மலையில்** வயிரவ தீர்த்தமும் உள்ளன. மலையுச்சியில் அம்ச தீர்த்தம் உள்ளது. கோயில் படிகளில் ஏறி நடுப்பகுதியில் வரும்போது வால்சுனைத் தீர்த்தத்தைக் காணலாம். சின்னமலையில் இராமர் சந்நிதியின் முன் அனுமந்த

தீர்த்தம் உள்ளது. சின்ன மலைக்குச் செல்லும் வழியில் ஒரு நந்தவனத்தருகில் பாண்டவ தீர்த்தம் உள்ளது. சோளிங்கர் அரக்கோணம் நெடுஞ்சாலையில் 6.4 கிலோமீட்டர்த் தொலைவில் மலைமீது பாம்பு வடிவில் சர்ப்ப தீர்த்தம் உள்ளது. பெரியமலை அடிவாரத்தில் நரசிம்ம தீர்த்தம் உள்ளது. ஊர்ப் பெருமாள் கோயிலின் முன்புள்ள குளம் நிவாச புட்கரணி எனப்படும்.

பெரியமலை யோக நரசிம்ம சுவாமி திருத்தலத்தின் நுழைவாயிலில் அழகிய இராசகோபுரம் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இது 5 நிலைகளும் 7 கலசங்களும் கொண்டது. இதன் உயரம் சுமார் 15 மீட்டர். அடிப்பரப்பு 7 மீட்டர்.

சிறியமலை யோக ஆஞ்சநேயசுவாமி திருத்தலத்தின் நுழைவாயிலில் அழகிய இராசகோபுரம் வடக்கு நோக்கியமைந்துள்ளது. இது மூன்று நிலைகளும் கலசங்களும் கொண்டது. இதன் உயரம் 9 மீட்டர், அடிப்பரப்பு 4 மீட்டர்.

பெருமாள் கோயிலின் அழகிய கோபுரம் கிழக்கு நோக்கியவாறு 5 நிலைகளையும் 7 கலசங்களையும் கொண்டு 27மீட்டர் உயரத்தில் 10 மீட்டர் அடிப்பரப்பில் உள்ளது.

பெரியமலை வெளிப்பிரகாரம் 60 மீட்டர் நீளமும் 4 மீட்டர் அகலமும் கொண்டது. தாயார் சந்நிதிப் பிரகாரம் 22மீட்டர் நீளமும் 3 மீட்டர் அகலமும் உடையது. பெருமாள் சந்நிதிப் பிரகாரம் 24 மீட்டர் நீளமும் 4 மீட்டர் அகலமும் கொண்டது.

சிறியமலையின் வெளிப் பிரகாரம் 27 மீட்டர் நீளமும் 4 மீட்டர் அகலமும் கொண்டது. இராமர் சந்நிதிப் பிரகாரம் 5 மீட்டர் நீளமும் 2 மீட்டர் அகலமும் உடையது. அனுமார் சந்நிதிப் பிரகாரம் 22 மீட்டர் நீளமும் 2 மீட்டர் அகலமும் கொண்டதாக அமைந்துள்ளது.

பெருமாள் கோயிலின் உள்ளே ஒரே ஒரு பிரகாரம் உள்ளது. திருச்சுற்று தற்போது பயன்படுத்தப்படவில்லை. உள்பிரகாரத்தின் நீளம் 60 மீட்டர் அகலம் 6 மீட்டர் உற்சவர் பெருமாள் சந்நிதிப் பிரகாரம் 12 மீட்டர் நீளமும் 3 மீட்டர் அகலமும் கொண்டமைந்துள்ளது. மூலவர் ஆதிகேசவப் பெருமாள் சந்நிதிப் பிரகாரம் 9 மீட்டர் நீளமும் 3 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது.

பெரியமலை அடிவாரத்திலிருந்து நுழைவாயில் இராசகோபுரம் வரை ஏழு மண்டபங்கள் உள்ளன. அம்மண்டபங்கள் வழிபட வருவோர்களுக்கு இளைப்பாற அமைக்கப்பட்டுள்ளன. இராசகோபுரம் எதிரே ஒரு நாற்காலி மண்டபம் உள்ளது. பெருமாள் சந்நிதி வெளிப்பிரகாரத்தில் நான்குகால் மண்டபம் அமைந்துள்ளது. மடைப்பள்ளி வாசலில் யாகசாலை மண்டபமும் தனி மடைப்பள்ளி மண்டபமும் அமைந்துள்ளன. பெரியமலை வழியிடையே பழைய தாயார் சந்நிதி 16 கால் மண்டபத்துடன் அமைந்துள்ளது. தற்போது இது பயன்படுத்தப்படவில்லை.

சிறியமலை அடிவாரத்திலிருந்து இராசகோபுரம் நுழைவாயில் வரை இரண்டு மண்டபங்கள அமைந்துள்ளன. சக்கர தீர்த்தக் குளக்கரையைச் சுற்றிலும் சுற்றுக் கால் மண்டபம் நீண்ட அளவில் அமைந்துள்ளது. இராமர் சந்நிதிக்கு எதிரே சக்கர மண்டபம் ஒன்று அமைந்துள்ளது.

## பெருமாள் கோயில் (ஊர்த் திருக்கோயில்)

அரங்கமண்டபம் சிற்பங்களுடன் காணப்படும் அழகிய மண்டபமாகும். அடுத்து இராப்பத்து மண்டபம், பெரிய பெரிய தூண்களுடைய மண்டபமாக உள்ளது. அதன் இறுதியில் அழகிய ஊஞ்சல் மண்டபம் சிற்பங்களுடன் இருக்கிறது. இம்மண்டபம்போன்று பெரிய மலையிலும் பெருமாளுக்கு அழகியதொரு மிகச் சிறிய ஊஞ்சல் மண்டபம் ஒன்று அமைந்துள்ளது.

இக்கோயில் பகுதியில் முற்றுப் பெறாத பெரிய கல்தூண்களுடன் நிற்கும் பகுதிகளும் உள்ளன. பெருமாள் சந்நிதியில் வடக்குப் பிரகாரத்தருகே அவற்றைக் காணலாம். இம்மண்டபங்கள், கோயில் அனைத்தும் விசய நகர ஆட்சியின்போது அமைந்தவையாகும். கோயிலில் பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை அனைத்தும் விசய நகரக் காலத்தவையாகும். ஆண்டாள் சந்நிதியின் வெளிச்சுவரில் மட்டும் கி.பி.1715-ஆம் ஆண்டினைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது.

பெருமாள் கோயிலின் முன் இரண்டு நான்குகால் மண்டபங்கள் உள்ளன இப்போது தரையுடன் சமமாக நிற்கும் இம்மண்டபங்கள் முன்பு படியுடன் இருந்தன என்றும் படி ஏறித்தான் பெருமாள் திருவந்திக்காப்பு கண்டருள்வார் என்றும் கூறுவர். முதல் நான்குகால் மண்டபத்தில் சக்கரத்தாழ்வார் எழுந்தருளியுள்ளார். கிராம நன்மைக்காக இம்மண்டப விமானத்தில் சக்கரத்தாழ்வார் நிறுவப்பட்டுள்ளதாகச் செவி வழிச் செய்தி கூறுகிறது. உள்சுற்றில் பல கம்பங்கள் அமைந்த பெரிய மண்டபம் ஒன்று உண்டு. அதன் எதிரே ஆண்டாள் வெள்ளிக்கிழமை மண்டபம் (நான்குகால் மண்டபம்) ஒன்று உள்ளது. அது சென்ற நூற்றாண்டில் நிறுவப்பட்டது.

தூண்களில் புடைப்புச் சிற்பங்களே பெரும்பான்மையாக உள்ளன. கோபுரங்களில் இந்தச் சிற்பங்களே உள்ளன. முன்னாளில் அரங்கமண்டப விதானத்தில் ஓவியம் இருந்திருக்க வேண்டும். ஆயின், இப்போது அண்மைக்காலத்துப் பூச்சு ஓவியத்தால் அது முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டது.

மூலவர் யோக நரசிம்மசுவாமி கருவறைக்கு மேல் ஹேமகோடி விமானம் அமைந்துள்ளது. இதற்கு ஒரு கலசம் உள்ளது. மூலவர் தாயார் சந்நிதி கருவறைக்கு மேல் விமானம் அமைந்துள்ளது. இதற்கு ஒரு கலசம் உள்ளது.

சிறிய மலையில் மூலவர் அரங்கநாதர், இராமர், ஆஞ்சநேயர் ஆகியோர் சந்நிதிகளின் மீது மூன்று விமானங்கள் கலசத்துடன் அமைந்துள்ளன.

ஊர்க்கோயிலில் ஆதிகேசவப்பெருமாள் சந்நிதி மீதுள்ள விமானம் ஒரு கலசத்துடன் அமைந்துள்ளது. உற்சவர் பக்தோசிதசுவாமி சந்நிதி மீது ஒரு விமானமும் மூன்று கலசங்களும் அமைந்துள்ளன. உற்சவர் சந்நிதிக்கு எதிரே உள்ள கருடாழ்வார் உற்சவர் சிலைக்கு மேல் ஹேமகோடி விமானம் மூன்று கலசங்களுடன் அமைந்துள்ளது.

இக்கோயில் கோபுரத்தின் வடக்குச்சுவரில் வாயிலுக்கு வலப்புறத்தில் வசந்தராய மகராயர் சகம் 1598 நள ஆண்டு ஆடிமாதம் திங்கட்கிழமை திருவோணம் கல்வெட்டு சிதைந்துள்ளது.[1]

இதே இடத்தின் வடக்குச்சுவரிலுள்ள சகம் 1555 ஸ்ரீமுக ஆண்டு தை 20-ஆம் நாளில் துவசாரோதகணத்தின் போதும் தொட்டாச்சாரியரின் திருநாளின்போதும் இறைவனுக்கு அமுதுபடைப்பதற்காகச் சத்தாத ஸ்ரீவைணவர் வல்லபம்மன் திருமலையில் ஓர் அறக்கட்டளை ஏற்பாடு செய்ததைக் குறிப்பிடுகிறது.[2]

இதே இடத்திலுள்ள சகம் 1555 ஸ்ரீமுக ஆண்டு மகம் சித்திரை ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீராமநவமி, கி.பி.1633 ஏப்பிரல் 7-ஆம் நாள், ஞாயிற்றுக்கிழமை ஒவ்வொரு மாதமும் கண்ணன் பிறந்தநாளாகிய உரோகிணி நட்சத்திரத்தின்போது அமுதுபடைத்தலுக்காகவும் மற்றவை படைப்பதற்காகவும் பாவாடை கிருஷ்ண நாயக்கர் மகன் பாவாடை தம்முநாயக்கர் 200 ராமதேவராயர் பணம் அறக்கட்டளை ஏற்பாடு செய்ததைக் குறிக்கிறது. இதற்குப் பாரபத்தியம் மணவாள அய்யங்கார் ஒரு தரப்பில் ஒப்புக்கொண்டார். அதைக் கோயிலார் ஏற்றுக்கொண்டார்கள்.[3]

இதே இடத்தில் வாயிலுக்கு இடப்புறத்திலுள்ள சகம் 1555-ஆம் ஆண்டுக் கல்வெட்டு அழகிய சிங்கர் சந்நிதியில் கந்தோடி தொட்டியாச்சேரி இல்லத்தில் பன்னிரண்டு ஸ்ரீவைணவர்களுக்கு உணவு அளிக்க திருவேளுக்கையிலுள்ள நிலங்களை அளித்ததைக் குறிக்கிறது.[4] சீரியானந்தன் பேரரும் நரசநாராயண ராசாவின் மகனுமாகிய ராமராயர் இந்நிலங்களை அளித்தார்.

இக்கோயிலின் மேற்குச்சுவரில் வாயிலுக்கு இடப்புறத்திலுள்ள கல்வெட்டு, சகம் 1551 மன்மத ஆண்டு உத்தராயணம் மிதுனம் வெள்ளிக்கிழமை (கி.பி.1595) ஜூன் 13-ஆம் நாள் கல்வெட்டு இறைவன் நாச்சியார் ஆகியோருக்கு தினசரி அமுது படைப்புக்காகவும் வாதுல கோத்திரம் அபஸ்தம்பர் சூத்திரர் இராமதேவ் சந்தாடி தேவாச்சாரியார் பேரரும் கந்தாடை அப்பங்கார் மகனும் ஆகிய சந்தாடி அப்பங்கார் அய்யா, காலகாரம் என்கிற புறவத்தூர் கிராமத்தை நன்கொடை அளித்ததைக் குறிக்கிறது. இந்தக் கிராமம் புறவத்தூர் சீர்மையின் உட்பிரிவாகிய சந்தரகிரி ராச்சியத்திலுள்ள திருக்கடிகை நாட்டுப் புறப்பிரிவில் சோளிங்கரில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[5]

இதே இடத்தில் வாயிலுக்கு வடபுறத்திலுள்ள கல்வெட்டு அக்கயவன் மகனாகிய எரப்பன் சடகோபம் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.[6]

முதற் பிரகாரத்தின் தெற்குச்சுவரிலுள்ள விசயநகரம் சகம் (15)58 உத்தராயணம் மகரம் தை 19 திங்கட்கிழமை அமாவாசைக் கல்வெட்டு குறிப்பிட்ட சமயங்களில் இறைவனுக்கும் நாச்சியாருக்கும் அமுது படைப்புக்காகச் சாத்தாத அலமேல் மங்கம்மாள் ஓர் அறக்கட்டளை அமைத்ததையும் நகைகள் நன்கொடை அளித்ததையும் குறிக்கிறது.[7]

இதே இடத்தில் வடக்குச்சுவரிலுள்ள முகலாயர் சகம் 1637 (1638) துர்முகி வைகாசி 4 சப்தமி புதன்கிழமை கி.பி.1716-ஆம் ஆண்டு மே மாதம் 2-ஆம் நாள் புதன்கிழமை புதிதாக நிறுவப்பட்ட சூடிக்கொடுத்த நாச்சியார் திருவுருவத்தை மலையைச் சுற்றி உலா நடத்த உபாதான துவாதசி திருவேங்கட அய்யங்காருக்கும் பாருபத்தியம் வேங்கய்ய பண்டிதருக்கும் இடையே வகுக்கப்பட்ட உடன்படிக்கையைக் குறிக்கிறது.[8]

இதே இடத்தில் வடக்குச்சுவரின் உட்புறத்திலுள்ள கல்வெட்டுத் துண்டுப்பகுதி திருக்கடிகை நாட்டைக் குறிப்பிட்டு 13-ஆம் நூற்றாண்டு கிரிய சாசனாவை அறிவிக்கிறது.[9]

இரண்டாம் பிரகாரம் வடக்குச்சுவரில் உள்ள இக்கல்வெட்டு விசயநகர மன்னர் காலத்தியது. மிகுதியாகச் சேதமடைந்துள்ளது. இறைவன் நாச்சியார் ஆகிய இருவர் கிரிபிரதட்சிணத்திற்காகப் பணம் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.[10]

இதே இடத்தில் சகம் 15(6)5 கல்வெட்டு சேதமடைந்துள்ளது. இது பாரபத்தியம் திம்மய்யங்கார் ஒரு நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது.[11]

சோழபுரீசுவரர் கோயில் கோபுரம் மேற்கு, வடக்கு, தெற்கு முகப்புகளில் சோழமன்னர் இராசராசன் I ஆண்டு 25. கல்வெட்டின் துண்டுப்பகுதிகள் மன்னரின் முதல் உரை 'திருமகள் போல' முதலியவற்றுடன் தொடங்குகிறது. இது தோட்டப்பட்டி நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. இது கடிகை நாட்டைக் குறிக்கிறது.[12]

வடக்குச்சுவர் இராசாதிராசதேவர் 14-ஆம் ஆண்டுக் கல்வெட்டு நிரந்தரமாக இரண்டு விளக்குகள் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டதைக் குறிக்கிறது இதன் துண்டுப்பகுதி. இது சீயகங்கன் என்கிற சிராய் மத்த பெருமாளை 13-ஆம் நூற்றாண்டில் குறிப்பிடுகிறது.[13]

கிழக்குச்சுவரிலுள்ள திரிபுவனச் சக்கரவர்த்திகள் திரிபுவன வீரதேவர் காலத்திய கல்வெட்டு. இம்மன்னன் பெயரோடு இக்கல்வெட்டு நின்றுவிடுகிறது.[14]

முதற் பிரகாரம் சிதைந்துள்ளது. இக்கல்வெட்டு ஒரு விளக்கு வைப்பதற்காக நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[15]

பெரியமலை, சிறியமலை, ஊர்த்திருக்கோயில் ஆகிய மூன்று சந்நிதிகளிலும் நித்தியப்படி சிறப்புப்பூசை முதலிய அனைத்தும் நடைபெறுகின்றன. மலையில் இருவேளைப் பூசை நாள்தோறும் நிகழ்த்தப்படுகிறது. ஊர்க்கோயிலில் காலையில் நாள்பூசை, மாலையில் திருமால்வடை, இரவில் நாள்பூசை, இரவுப்பூசை என்றும் அரவணை என்ற மூன்று பூசைகளும் நடைபெறுகின்றன. சித்திரை மாதத்தில் பிரமோற்சம் மிகச் சிறப்புடன் நடைபெறுகிறது. எல்லா மாதங்களிலும் பல்வேறு சிறப்புத் திருநாள்கள் சிறப்புற நடைபெறுகின்றன. பூசை முறை வைகானச ஆகம முறையில் நடைபெறுகிறது. பூசகர்கள் வைகானச பட்டாச்சாரியார்கள்.

இக்கோயிலில் வழிவழியாகப் பெருமாளுக்குத் தொண்டுபுரியும் தொட்டாச் சாரியர் சுவாமிமரபினரே முதல் தீர்த்தக்காரராக மந்திர புட்பம் முதலியவை வழங்கும் கைங்கர்யங்களையும் வேதபாராயணம் ஆகிய தொண்டுகளையும் செய்து வருகின்றனர். திவ்வியப் பிரபந்தம் ஓதா நாளே இல்லை. நாள்தோறும் இருவேளையும் ஆழ்வார் பாசுரங்கள் ஓதப்படுகின்றன. காலையில் ஆண்டாள் நாச்சியார் திருப்பாவை சேவை சாத்துமுறை, மாலையில் ஆழ்வார் பாசுரங்கள், சிறப்பு நாள்களில் அந்த அந்த ஆழ்வார்களின் பாசுரங்கள் சேவை சாத்துமுறை நடைபெறுகின்றன.

## சிறப்புத் திருவிழாக்கள்

| | |
|---|---|
| 1. சித்திரை மாதம் | 1. சித்திரைப் பெருந்திருவிழா பத்துநாள்கள் நடைபெறும் விழா முக்கியமான நாள்கள் 1. தங்கக்கருடசேவை; 2. திருத்தேர்; 3. குதிரை வாகனம்; வேடுபறி ஏகல்<br>2. இராமாநுஜர் விழா 10 நாள்கள் |
| 2. வைகாசி மாதம் | 1. நரசிம்ம ஜெயந்தி. 2. வசந்த உற்சவம். 3. வைகாசிக்கருடசேவை, தொட்டாச்சாரியார் சேவை. 4.நம்மாழ்வார் விழா 10 நாள்கள். |
| 3. ஆனி மாதம் | 1. கோடைத்திருநாள் (3 நாள்கள்) 2. கருடவாகன சேவை. 3.ஆதிகேசவப்பெருமாளுக்கு ஆண்டு நட்சத்திரமான திருவோணவிழா. |
| 4. ஆடி மாதம் | 1. ஆண்டாள் திருவாடிப்பூரவிழா 10 நாள்கள். 2. திருவாடிப்பூரத்தன்று திருக்கல்யாணப் புறப்பாடு. 3. ஆடிப்பௌர்ணமி கசேந்திர மோட்சம் கருடசேவை. 4. ஜேஷ்டாபிடேகம். கவசம் களைந்து திருஅபிடேகம் பின் கவசம் அணிதல். அந்நாளிலிருந்து ஒரு மாதம் திருமஞ்சனம் திருவீதிப் புறப்பாடு முதலியன நடைபெறும். |
| 5. ஆவணி மாதம் | 1.திருப்பவித்திரோற்சவம் ஏழு நாள்கள் பெரிய மலையில் |

| | |
|---|---|
| | நடைபெறும். 2.ஜெயந்தி — மறுநாள் உறியடி, கண்ணன் பெருமாள் (நான்கு) வீதிப் புறப்பாடு. |
| 6. புரட்டாசி மாதம் | 1. நவராத்திரி உற்சவம் 10 நாள்கள், பெருமாள், தாயார் இருவருக்கும். |
| 7. ஐப்பசி மாதம் | 1. ஊஞ்சல் திருவிழா ஐந்து நாள்கள் நடைபெறும். 2. மணவாள மாமுனிகள் 10 நாள்கள் உற்சவம் 3. கடைசி வெள்ளிக்கிழமை. 4. தீபாவளி 5.வனபோசனம். |
| 8. கார்த்திகை மாதம் | 1. பெரியமலையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும், சிறிய மலையில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் உற்சவம் புறப்பாடு திருமஞ்சனம் முதலியவை. 2. கார்த்திகைத் தீபத்திருவிழா — சொக்கப்பனை கொளுத்துதல். 3. திருமங்கையாழ்வார் 10 நாள்கள் உற்சவம். 4. அனுமந்த செயந்தி சின்னமலையில் ஆஞ்சநேயருக்கு உற்சவம். |
| 9. மார்கழி மாதம் | 1. பகல்பத்து திருநாள் 2. வைகுண்ட ஏகாதசி 3. முக்கோடி துவாதசி தீர்த்தவாரி உற்சவம். 4. இராப்பத்து திருநாள். இறுதிநாளில் நம்மாழ்வார் பரமபதம் புகும் திருவடி தொழும் விழா. 5. ஆண்டாள் மார்கழி நீராட்டம் 3 நாள்கள். 6. சனவரி முதல் தேதி திருப்படித் திருவிழா. |
| 10. தை மாதம் | 1. பொங்கல் — சங்கராந்தி ஆண்டாள் திருக்கல்யாணம் . 2. கனுப்பாரி (பரி) வேட்டை 3. கிரி வலம் 4. தைப்பூசம். 5. தை அமாவாசை தொடங்கி தெப்போற்சவம் 3 நாள்கள். |
| 11. மாசி மாதம் | 1. தவன உற்சவம் — 3 நாள்கள். 2. மாசி உத்திராடத் திருநாள் 10 நாள்கள் (சுவாமி தொட்டாச்சாரியர் அவதார உற்சவம்) 3 மாசி மகம் தெப்போற்சவம் 3 நாள்க்ள் |
| 12. பங்குனி மாதம் | 1. யுகநாள்(அ) தெலுங்கு ஆண்டுப் பிறப்பு உற்சவம். பஞ்சாங்கம் கேட்டல். 2. பெரியமலையில் பங்குனி உத்திரத் திருக்கல்யாணம். |

கோயிலின் சமயம் வைணவமாகும். ஆயினும், பிற சமயத்தவரும் பெருமானிடம் பக்தி கொள்ளும் முறையில் அவர்களையும் ஈர்க்கிறார். உற்சவம் காரணமாக அனைத்து இன சமய மக்களும் பல்வேறு வகையில் பயனடைகின்றனர். மன அமைதிக்கு இருப்பிடமாக இருப்பதால் நாடோறும் நன்மை எய்தற்பொருட்டு இந்நகரைஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர், முதியோர் ஆகியோர் நாடி வருகின்றனர்.

இக்கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இருந்து வருகிறது. இந்தத் திருக்கோயில் சென்ற நூற்றாண்டில் 1926-ஆம் ஆண்டு முன் கார்வே நகர சமீன் பொறுப்பில் நிர்வகிக்கப்பட்டுவந்தது. பின்பு 1926-ஆம் ஆண்டுக்குப் பின் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டு அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

திட்டம் ஓ.எ. 411/1942 இதன் படி நிருவாகம் நடைபெற்று வருகிறது. 1936-ஆம் ஆண்டு முதல் நிருவாக அதிகாரியும் இருக்கிறார்.

| | | |
|---|---|---|
| நிலங்கள் | நன்செய் - | 7.06 1/2 ஏக்கர் |
| | புன்செய் - | 0.87 ஏக்கர் |
| | வீடு - | 1 |
| | வியாபாரக் கட்டடங்கள் | 16 |
| | வேலூர் க.ம. வங்கிக் கட்டடம் | 1 |
| | பெரியமலை, சிறியமலை கடை 2 | |
| | ஆண்டு வருமானம் உரூபாய் (பசலி 1396 _ இதன் படி) | 12,76, 003.71 |
| | வரிவிதிப்பு வருமானம் உரூபாய் பசலி 1397 | 10,60, 044.00 |
| முக்கிய வருமானங்கள் (பசலி 1396 இன்படி) | திருமஞ்சனம் உரூபாய் | 1,33,410.00 |
| | தளிகை " | 56,525.00 |
| | அருச்சனை மற்றும் இதர சீட்டு விற்பனை மூலம் வரவு " | 2,06,268.00 |
| | உண்டியல் " | 3,58,866.33 |
| | கட்டட வாடகை " | 34,403.00 |
| | நிலக்குத்தகை " | 255.00 |
| | இதர இனங்கள் " | 4,86,276.00 |

## நகைகள் (அபூர்வமானவை)

பெருமாளின் திருமாலை நாச்சியார், நாணுக்கொண்டை, மாங்காய் மாலை, நாச்சியாரின் வைரக் கம்மல், சடைப்பின்னல் (அற்புதமான சித்திர வேலைப்பாடு அமைந்தது) கிளி முதலியன மிகச் சிறப்பானவை.

சப்பரம், நாக வாகனம், அன்னம், சிங்கம், தங்கமுலாம் கருடவாகனம், அனுந்த வாகனம், குதிரை வாகனம், பல்லக்கு முதலியவை பழைமையானவை. திருத்தேர் அழகானதொன்று.

## கோயிலைப் பற்றிக் கூறும் நூல்கள்

வடமொழியில் கடிகாசலப் புராணம்.

2. தெலுங்கு மொழியில் தெனாலிராமன் கிருட்டினனின் கடிகாசலப் புராணம்

3. ஆழ்வார் பாசுரங்கள் பேயாழ்வார் இயற்பா மூன்றாம் திருவந்தாதி திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி நம்மாழ்வார் பாடல் ஒன்று.

4. பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதியில் ஒரு பாசுரம்

5. குரவை இராமானுச தாசன் இயற்றிய நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ்.

6. முத்துசாமி தீட்சிதரின் வடமொழிக் கீர்த்தனை ஒன்று.

7. திருப்பேரி ஆனந்தகிருட்டின அய்யங்கார் இயற்றிய திவ்வியதேசப் பாமாலை.

8. திருக்கடிகை நரசிங்கப் பெருமாள் அந்தாதி. அனுமந்த நகரம் சீனிவாசய்யங்கார் இயற்றியது.

9. எறும்பிலியப்பன் வடமொழியில் இயற்றிய 100 சுலோகங்கள் அடங்கிய அமிர்த பலவல்லி சதகம்.

---

(1. 284/1953_54; 2. 285/1953_54; 3. 286/1953_54; 4. 287/1953_54; 5. 288/1953_54; 6. 289/1953_54; 7. 290/1953_54; 8. 291/1953_54; 9. 292/1953_54; 10. 293/1953_54. 11. 294/1953_54; 12. 295/1953_54; 13. 296/ 1953_54; 14. 297/1953_54; 15. 298/1953_54.)

## தக்கோலம்

# கங்காதரேசுவரர் கோயில்

இக்கோயில் திருஊறல் மகாதேவர் கோயிலிலிருந்து வடக்கே 18 மீட்டர் நீளமும் 16 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் நிலமட்டத்திற்குக் கீழ் 1.80 மீட்டர் ஆழத்தில் இருக்கிறது. தெற்கு நோக்கியவாறுள்ள இக்கோயிலில் நுழைந்து மேற்கு நோக்கி வலம் வருவோமெனில், மோகன வல்லி அம்பாள் சந்நிதிக்கு வடக்கிலுள்ள

ஆறுமுகர் சந்நிதியைக் கடந்து கிழக்கு நோக்கியவாறுள்ள கங்காதரேசுவரர் கருவறையை அடையலாம். இங்குள்ள இக்கருவறையின் முன் நந்தி திருவுருவம் உள்ளது. இங்கு 1/4 மீட்டர் உயரமுள்ள சிவலிங்கம் 1/4 மீட்டர் சதுரப் பரப்பிலுள்ள ஆவுடையாருடன் இருக்கின்றது.

இக்கோயிலின் தென்மேற்குக் கோடியில் மோகனவல்லி அம்மன் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. கங்காதரேசுவரர் சந்நிதிக்கு வடக்கில் ஆறுமுகசுவாமி கோயில் கிழக்கு நோக்கியவாறுள்ளது. கங்காதரேசுவரர் சந்நிதி மோகனவல்லி சந்நிதிக்கு வடக்கில் கிழக்கு நோக்கியவாறு ஆறுமுக சந்நிதிக்கும் இடையில் 4.60 மீட்டர் சதுரப்பரப்பில் இருக்கிறது.

கருவறைச் சுவரின் உயரம் 2 1/4 மீட்டர், கருவறையைச் சுற்றிலும் உள்ள தூண்களின் உயரம் 1 1/2 மீட்டர். கருவறையைச் சுற்றிலும் வெளியில் 1/2 மீட்டர் ஆழமும் 1/2 மீட்டர் அகலமும் கொண்ட நீர்வழி உள்ளது. கருவறையின் மேற்பகுதியின் பின்புறம் 1.80 மீட்டர் உயரத்தில் 4 மீட்டர் நீளமும் 3மீட்டர் அகலமுமுள்ள சிறு சந்நிதியில் ஒரு சிவலிங்கம் இருக்கிறது. இதன் அடியில் கிழக்கு நோக்கி வரும் நீரூற்று இச்சிவலிங்கத்திற்கு 5 மீட்டர் தொலைவிலுள்ள ஒரு நந்தியின் திருவுருவத்தின் வாயின் வழியாகக் கீழே கோயிலினுள் இறங்கிக் கருவறையைச் சுற்றி அமைந்துள்ள பள்ளத்தில் பாய்ந்து நுழைவாயிலுக்குக் கிழக்கேயுள்ள வழியாகக் கட்டடத்தை ஊடுருவி இக்கோயிலுக்கு வெளியே கட்டப்பட்டுள்ள குளத்தின் மேற்பகுதியிலுள்ள நந்தியின் வாயின் வழியாக வந்து 2 1/4 மீட்டர் ஆழமுள்ள குளத்தில் வீழ்கிறது. இக்குளம் 20.35 மீட்டர் நீளமும் 10.90 மீட்டர் அகலமும் 2 1/4 மீட்டர் ஆழமும் கொண்டுள்ளது.

தொழுநோயால் துன்புற வேண்டும் என்ற நிலையிலிருந்த உததி முனிவர் தாம் உய்யும். வழியை வகுக்குமாறு இறைவனிடம் வேண்டினார். அப்போது இறைவன், 'நீ நந்தியை வழிபட்டு நலம் பெறக்கடவாய்' என அருள்புரிந்தார். இவ்வருளுரைக்கேற்ப உததி முனிவர் நந்தியம்பெருமானை நோக்கி, வழிபாடு செய்தபோது நந்தியம் பெருமான் தோன்றிக் கங்கை நீர் தன் வாயில் வழியாக வருமாறு செய்து பின்னர்ப் பொய்கை ஒன்றை உருவாக்கி அந்நீரைக் கொண்டு அப்பொய்கையில் நீர் நிரையுமாறு செய்தார். உததி முனிவர் அப்பொக்கையில் நீராடி நலம் பெற்றார். இங்கு இந்நீர் எந்நாளும் பொழிந்து கொண்டேயிருக்க வேண்டுமென உததி முனிவர் நந்தியம் பெருமானிடம் வேண்டிக் கொண்டார். அவ்வேண்டுகோளுக்கேற்ப நீர், நந்தியம் பெருமான் திருவாயிலிருந்து வழிந்துகொண்டிருக்கிறது.

இக்கோயிலினுள் ஒரே பிரகாரம் உள்ளது. இப்பிரகாரம் கீழ்மேலாக 13.60 மீட்டர் அளவிலும் தென்வடலாக 14.05 மீட்டர் அளவிலும் காணப்படுகிறது. இப்பிரகாரம் தெற்கில் 3.18 மீட்டர் அகலமும் கிழக்கில் 3.32 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது.

இக்கோயில் நுழைவாயிலுக்கு முன்புறமுள்ள மண்டபம் 1.92 மீட்டர் நீளத்திலும் 14.05 மீட்டர் அகலத்திலும் 2.05 மீட்டர் உயரத்திலும் ஏழு உருண்டை

வடிவத் தூண்களைக் கொண்டுள்ளது. இத்தூண்கள் சோழர் காலத்துக் கோயில்களில் காணப்படும் உருண்டைத் தூண்களைப் போன்றுள்ளன.

கருவறைக் கீழ்ப்படியில் ஒரு கல்வெட்டு 'திருமகள் போல்' எனத் தொடங்குகிறது. இஃது இராசராச சோழன் கல்வெட்டாகத் தோன்றுகிறது. இஃது இராசராசன் காலத்தில் பொறிக்கப்பட்டதா அல்லது வேறிடத்திலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டதா என்பது தெரியவில்லை. இக்கோயிலின் நந்தி தீர்த்தம் விசயநகர மன்னர் காலத்தைக் குறிப்பிடுகிறது என்னும் கருத்துமுள்ளது.

சிவபெருமான் முடிமேல் விளங்கும் கங்கை இந்நிலவுலகத்திற்கு வந்து இறைவனைச் சுற்றி அணைந்து ஊறி நீராட்டுக்குப் பயன்படுகிறது எனச் சேக்கிழார் கூறுவதால், அவர் இந்நந்தி தீர்த்தத்தின் அமைப்பின் ஒரு பகுதியைச் சுட்டிக்காட்டுவதாகக் கொள்ளலாம். இங்குள்ள தூண்கள் சோழர் காலத் தூண்களாகக் கருதப்படுமிடத்து இக்கோயில் சோழர் காலத்தில் கட்டப்பட்டு விசயநகர மன்னர் காலத்தில் நிறைவு பெற்றிருக்கலாம் எனக் கொள்ளலாம்.

இக்கோயில் தற்போது இடிந்த நிலையில் இருப்பதால், இதற்கு நாள் பூசை ஒழுங்காக நடைபெறுவதில்லை. சிவராத்திரி நாளில் மட்டும் விளக்கேற்றப்பட்டுப் பூசை நடத்தப்படுகிறது. இக்கோயிலில், திருவூறல் மகாதேவர் கோயிலில் பூசை செய்துவரும் சிவாச்சாரியரே பூசை செய்கிறார். இக்கோயிலின் அருமையை முன்னிட்டு இது சீர்படுத்தப்படுவதற்குரியதாகிறது.

## தக்கோலம்

# சலநாதீசுவரர் கோயில்

வடஆர்க்காடு மாவட்டம் அரக்கோணம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து மேற்கே 6 கிலோமீட்டர்த் தொலைவில் இக்கோயில் அமைந்துள்ளது. மதிற்சுவர்களுடன் கூடிய இக்கோயில் 92.29 மீட்டர் நீளமும், 87 மீட்டர் அகலமும் கொண்ட 8,105 சதுரமீட்டர் பரப்பில் இருக்கின்றது. இஃது ஏறத்தாழ 2 ஏக்கர் பரப்பில் உள்ளதாகும். இம்மதிற்சுவர்களைச் சுற்றி நாற்புறங்களிலும், 37 மீட்டர் வரையிலும் இக்கோயிலுக்குரிய வெற்றிடம் இருப்பதால், இவ்வகையில் 130 மீட்டர் நீளமும், 124 மீட்டர் அகலமும் கொண்ட 16,120 சதுரமீட்டர் பரப்பு இக்கோயிலுக்குரிய நிலமாகும்.



துவாரபாலகர்
சலநாதீசுவரர் ஆலயம் - தக்கோலம்

தக்கன் என்னும் அசுரன் ஓலமிட்டுச் சிவபெருமானை இங்கு வழிபட்டான். இதன் காரணமாக இந்த இடத்திற்குத் தக்கோலம் என்னும் பெயர் ஏற்பட்டது. இத்தலத்திற்குத் 'திருஊறல்' என்னும் பெயர் அமைந்துள்ளது. இங்குப் புனிதநீர் ஊறிக்கொண்டே இருப்பதால் இத்தலத்திற்கு ஊறல் என்னும் பெயர் அமைந்தது. திரு என்பது அடைமொழி. தக்கன் ஓலமிட்டு வழிபாடாற்றிய இடத்திற்கு, தகூஓலம் — தக்கோலம் என்னும் பெயர் நிலைபெறுவதாயிற்று. இக்கோயிலின் கருவறைச்சுவர் மாடங்களில் விநாயகர், திருமால், பிரமதேவர் ஆகியோர் அமர்ந்த கோலத்தில் காணப்படுகின்றனர். மற்றும் வீரபத்திரன் கோயில் இக்கோயிலுக்கு மேற்கில் இருக்கின்றது. இங்கு வீரபத்திரர் திருவுருவத்தை அடுத்து, ஆட்டுத்தலையுடன் தக்கன் நிற்பதையும் காணலாம்.

பல்லவர் தொடக்கக் காலமாகிய கி.பி.7-ஆம் நூற்றாண்டிலே சைவ சமய ஆசிரியர்களுள் முதல்வராகிய திருஞானசம்பந்தர் தாம் அருளிய தேவாரப்பதிகத்தில் இத்தலத்தை ஊறல் என்பதாக எடுத்துக்காட்டியுள்ளார். ஊறல் என்பது ஊறிவருதல். இதனை ஊற்று எனவும் கூறலாம். இந்நீரூற்றின் வடிவமாக இறைவன் இங்குள்ளார் என்பதைக் குறிக்கச் சலநாதீசுவரர் என்னும் பெயர் அமைந்ததாகத் தோன்றுகிறது.

தேவர்கள் குருவாகிய வியாழ பகவானின் தம்பி சம்வர்த்த முனிவர் இத்தலத்தில் வழிபாடு ஆற்றியதாகச் சேக்கிழார் தாம் இயற்றிய பெரியபுராணத்தில் கூறுகிறார். ஆனால், தலபுராணமோ தேவலோகத்தில் காமதேனுவின் சாபம் பெற்ற (வியாழ பகவான் தமபியாகிய) உததி முனிவர் தக்கோலத்து இறைவனை வழிபட்டு உய்ந்தார் எனக் கூறுகிறது. உததி முனிவருக்குச் சம்வர்த்த முனிவர் என்னும் பெயரும் இருந்தது போலும். தக்கவர் பலர் இங்கு இருந்திருப்பார்கள். ஆதலினால், இத்தலம் தக்ககோலம் என்னும் பெயர் பெற்றிருக்கலாம். மற்றும் பலர் இங்குத் தவம் புரிந்திருந்த காரணமாக இவ்வூர்த் தவக்கோலம் என்னும் பெயரில் முதலில் விளங்கி, அப்பெயர் பின்னர்த் தக்கோலம் என மாறியிருக்கலாம் எனச் சிலர் கூறுகின்றனர்.

முன்பொரு காலத்தில், தற்போதுள்ள தக்கோலம் உள்ளடங்கிய நிலப் பரப்பைச் சிவாதித்தன் என்னும் பெயர் தாங்கிய மன்னன் நீதி வழுவா நெறிமுறையில் ஆட்சிபுரிந்து வந்தான். அப்போது அப்பகுதியில் தக்கன் என்னும் அசுரன் பிரமதேவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து மிக்க ஆற்றலைப் பெற்றான். இவ்வாற்றலைக் கொண்டு இவன் தக்கோலம் தவிர, இதனைச் சுற்றிலுமுள்ள ஊர்களுக்குச் சென்று, அங்குள்ள மக்களுக்குச் சொல்லொணாத் துன்பங்களை விளைவித்து வந்தான். இவனை வெல்வதற்குச் சிவாதித்த மன்னனால் இயலவில்லை. இவ்வசுரனால் ஏற்பட்டு வந்த தொல்லையை ஒழிக்க வல்லவர் சிவபெருமானே என உறுதி கொண்ட சிவாதித்தன், இப்பெருமானைநோக்கி இதற்காகத் தவம் இயற்றினான். இது தொடர்பாகக் கருணை வள்ளலாகிய கண்ணுதல் பெருங்கடவுளாகிய சிவபெருமான் தம் தேவியாகிய உமையம்மையைக் கடைக்கண்கொண்டு நோக்கினார். அவ்வம்மையார் உடனே காளியைத் தோற்றுவித்துப் பின்னர்க் காளிக்குத் துணையாக ஆறு கன்னியர்களையும்

உருவாக்கித் தக்கனை வென்று வருவதற்காக அனுப்பினார். தக்கனுடன் காளி போரிட்டபோது தக்கன் தன் வலிமை முழுவதையும் பயன்படுத்தியபோதிலும் இறுதியில் காளியின் தாக்குதலைத் தாங்க இயலாமல் காளியின் காலால் மிதியுண்டு ஓலமிட்டுக் கொண்டே உயிர் துறந்தான். இச்சமயத்தில் தக்கன் இட்ட ஓலம் காரணமாக இத்தலம் தகு ஓலம் தக்கோலம் என்னும் பெயர் வழங்குவதாயிற்று..

மற்றொரு விளக்கமும் மரபு வழியாக அமைந்துள்ளது. தக்கன் வலிமை மிக்கவன்; ஆணவத்தில் அழுந்தியவன். தான் ஒரு வேள்வி புரிந்தபோது, சிவபெருமானை மதியாமல் வேள்வி நடத்தினான். இவனுக்கு நல்லறிவு புகட்டுவதற்காகச் சிவபெருமான் வீரபத்திரருக்கு ஆணையிட்டார். உடனே வீரபத்திரர் தக்கன் வேள்வியை அழித்துத் தக்கன் தலையைக் கொய்து அவன் தலை இருந்த இடத்தில் ஆட்டுத்தலையைப் பொருத்தினார். இத்தண்டனையைத் தாங்க இயலாத தக்கன் சிவபெருமானை நோக்கி, ஓலமிட்டு அழுதான். அவனுக்கிரங்கிய சிவபெருமான் தக்கனை நோக்கி "நீ சீர நதிக்கருகில் சென்று எம்மை நோக்கி வழிபாடு ஆற்றுவாயாக, அங்கு விநாயகர், திருமால், பிரமதேவர் ஆகியோரும் அமருமாறு வேண்டுவாயாக. அவ்வாறு அவர்கள் அமர்ந்து உன் வழிபாட்டைக் கூர்ந்து கவனிப்பார்கள். அப்போது யாம் அருள்புரிவோம்" என்றருளினர். இவ்வினிய அருளுரைக்கேற்பத் தக்கன் செயற்பட்டான். விநாயகர், திருமால், பிரமதேவர் ஆகியோரும் அங்குத் தக்கன் தவம் புரிந்த இடத்தருகில் அமர்ந்தனர். தக்கன் சிவபெருமானுக்கு அழுத்தமாக வழிபாடாற்றினான்.

இதே சமயத்தில் தமது ஆணை பெறாமலே, தக்கன் வேள்விக்குச் சென்ற பார்வதி தேவியாரும் தாம் செய்த தவறு காரணமாகத் தீய விளைவைப் போக்கிக் கொள்ள, தக்கன் வழிபாடாற்றிய இடத்தருகில் தாமும் மணலால் சிவலிங்கம் அமைத்து அதனை வழிபடத் தொடங்கினார். ஆனால், அருகில் ஓடிக்கொண்டிருந்த ஆற்றின் வெள்ளப்பெருக்கு அம்மையார் வழிபாட்டிற்குகந்த சிவலிங்கத்தை அடித்துச் செல்லத் தொடங்கிற்று. அம்மையார் தம் இரு வளையற் கைகளால் கட்டித் தழுவி வெள்ளத்திலிருந்து அச்சிவலிங்கத்தைப் பாதுகாத்தனர். இதன் காரணமாக இச்சிவலிங்கத்தின் மீது அம்மையின் முலைத் தழும்புகள் படிந்தன. இவ்வடுக்களை இன்றும் இச்சிவலிங்கத்தின் மீது காணலாம். அம்மையின் இத்தகைய பேரன்பிற்குகந்த சிவபெருமான் காட்சியளித்து அம்மைக்கு அருள்புரிந்தார். இதே சமயத்தில் அவர் தக்கனுக்கும் அருள்புரிந்தார்.

தக்கனுக்கு ஆட்டுத்தலை பொருத்திய வீரபத்திரர் கோயில், இக்கோயிலுக்கு மேற்கில் இருக்கிறது. இங்கு வீரபத்திரர் திருவுருவம் வடக்கு நோக்கியுள்ளது.

தக்கோலத்தில் ஓர் இயற்கை நீர்ஊற்று பால்போல் வெண்ணிறம் கொண்டிருந்தமையால், இப்பகுதி திருப்பாலூறல் என்னும் பெயர் பெற்றது என மரபு வழிச் செய்தி கூறுகிறது.

இங்கு முற்காலத்தில் தக்கோலம் பொட்டு என்னும் மரம் இருந்ததாகவும் அது பட்டுப்போயிற்று என்றும் கூறப்படுகிறது. தற்போது இங்குத் தலவிருட்சம் இல்லை.

இக்கோயிலின் மேற்குக் கோபுரத்தின் நுழைவாயிலின் வெளிப்புறத்தின் வலப்பக்கம் விநாயகர்சந்நிதியும் இடப்புறம் சுப்பிரமணியர் சந்நிதியும் ஒவ்வொன்றும் 2 மீட்டர்ச் சதுரப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளன. மேற்குக் கோபுரத்திற்கு வடகிழக்கில் 6 மீட்டர் நீளமும் 2. 75 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் ஒரு சிறுமண்டபத்துடன் கூடிய சந்நிதியில் சக்தி விநாயகர் கிழக்கு நோக்கியவாறு இருக்கின்றார்.

இக்கோயிலின் கிழக்குப் பிரகாரத்தின் கொடிமரம், பலிபீடம் ஆகியவற்றை அடுத்து, நந்திதேவர் திருவுருவம் திருவூறல் மகாதேவர் சந்நிதியை நோக்கியவண்ணம் மேற்குமுகமாக இருக்கின்றது. அடுத்து வலமாகக் கடந்து இக்கோயிலினுள் செல்லும் போது உட்பிரகாரத்தின் வெளிப்புறத்தின் வலப்பக்கத்தில் விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியவண்ணம் இருப்பதைக் காணலாம். இதற்கு நேரொத்தவாறு வடக்கில் சுப்பிரமணியர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. இக்கோயிலின் உட்பிரகாரத்திற்குச் செல்லும் நுழைவாயிலின் இடப்புறத்தில் சூரியன், வலப்புறத்தில் சந்திரன், சந்திரனுக்குப் பக்கத்தில் திருமால் ஆகியோர் திருவுருவங்கள் நின்ற நிலையில் மேற்கு நோக்கியும், வயிரவர் திருவுருவம் தெற்கு நோக்கியும் இருக்கின்றன.

உட்பிரகாரத்தின் தென்கிழக்குக் கோடியில் சப்த மாதாக்களாகிய பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைணவி, வராகி, இந்திராணி, சாமுண்டீசுவரி ஆகியோரின் திருவுருவங்கள் வடக்கு நோக்கியவாறுள்ளன. அடுத்துத் தெற்கு உட்பிரகாரத்தில் ஒரு குகை அமைப்பைக் கொண்ட உள்ளிடத்தில் உததி முனிவர் வழிபட்டதாகக் கூறப்பெறும் சிவலிங்கம் 1 மீட்டர் உயரத்தில் இருக்கிறது. இதையடுத்து மேற்குப்பகுதியில் வள்ளி தெய்வயானையுடன் சண்முகர், திருஞானசம்பந்தர் ஆகியோர் நின்ற நிலையில் கிழக்கு நோக்கியவாறு உள்ளனர். அருகில் பிள்ளையார், சாத்தன், இலட்சுமி ஆகியோர் திருவுருவங்கள் கிழக்கு முகமாகக் காணப்படுகின்றன.

வடக்கு உட்பிரகாரத்தில் கருவறையையொட்டிச் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியவாறு 1 1/2 மீட்டர் சதுரப்பரப்பில் இருக்கிறது.

கருவறைச்சுவரின் தெற்கு வெளிப்பக்கத்தில் விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகியோர் திருவுருவங்களும் மேற்குப் பகுதியில் திருமால் திருவுருவமும் வடக்குப் பகுதியில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் சிலை வடிவில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

கருவறைக்கு முன் இருபுறமும் துவாரபாலகர்களின் திருவுருவங்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. பஞ்சலிங்கங்கள் எனப்படும் ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் ஆகியவற்றைக் குறிப்பிடுவனவாகத் தெற்கு உட்பிரகாரத்தில் உள்ள இரண்டு சிவலிங்கங்களும் வடக்கு உட்பிரகாரத்தில் உள்ள இரண்டு சிவலிங்கங்களும் கருவறையில் ஒரு சிவலிங்கமும் அமைந்துள்ளன.

கருவறைக்கு முன்புறத்தில் உள்மண்டபத்தில் எழுந்தருள் மூர்த்திகள் சந்நிதி இருக்கின்றது. இங்கு எழுந்தருள் மூர்த்திகளாக விளங்குவோர்கள் சோமாசுகந்தர், தனியம்பாள், சந்திரசேகரர், அம்பாள், சுப்பிரமணியர், வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர், துர்க்கை, இலட்சுமி, சரசுவதி ஆகியோர். விநாயகர், அர்த்தநாரீசுவரர், சண்டேசுவரர் ஆகியோரின் உலாத்திருமேனிகளும் உள்ளன.

திருவூறல் மகாதேவர் கருவறை 5 மீட்டர் நீளமும், 3 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் இருக்கின்றது. இங்குத் திருவூறல் மகாதேவர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். இத்திருவுருவத்திற்கு எதிரில் பிரதோட நந்தியும் உள்ளார். திருவூறல் மகாதேவர் சந்நிதியிலிருந்து வெளிவரும்போது, கிழக்குப் பகுதியில் நவக்கிரகங்கள் ஒரு மேடையின் மீது இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம். அருகில் நடராசர் சந்நிதி தெற்கு நோக்கியவாறு உள்ளது. இச்சந்நிதியில் சிவகாமி, மாணிக்கவாசகர் ஆகியோர் திருவுருவங்களும் நடராசர் திருவுருவத்துடன் இருக்கின்றன.

இக்கோயிலின் தெற்கு வெளிப் பிரகாரத்தில் கிரிராச கன்னிகாம்பாள் கோயில் 15 மீட்டர் நீளமும், 7 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் இருக்கிறது. கிரிராச கன்னிகாம்பாள் வடக்கு நோக்கியவாறு மூன்று உள்வளைவுகளுடன் கூடிய திரிபங்கி எனப்படும் நிலையில் காட்சியளிக்கிறார். திருஞானசம்பந்தர் அருளிய பதிகத்தின் இரண்டாம் பாடலில் அம்மையின் பெயர் மலையான் மகள் எனக் காணப்படுகிறது. அம்மன் சந்நிதிக்கு மேற்கில் இக்கோயிலின் நுழைவாயிலின் உட்புறத்தின் தென்மேற்கில் ஆறுமுகசுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியவாறு 9 மீட்டர் நீளமும், 6 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் ஒரு முன்மண்டபத்துடன் இருக்கின்றது. இச்சந்நிதியில் வள்ளி தெய்வயானையுடன் ஆறுமுகர் நின்ற நிலையில் காட்சியளிக்கின்றார். இச்சந்நிதிக்கு ஒரு விமானமும் இருக்கிறது. திருவூறல் மகாதேவர் கருவறையின் முன்புறத்திலிருந்த வலம்புரி விநாயகர் திருவுருவம் தற்போது இங்கு வைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலுக்குத் தீர்த்தம் - வெளிப் பிரகாரத்தின் வடபகுதியிலுள்ள திருக்குளமாகும். இது 28 மீட்டர் சதுரப்பரப்பில் இருக்கின்றது. இதற்குப் படிகள் உள்ளன. இதில் ஒரு மீட்டர் ஆழம் தண்ணீர் இருக்கின்றது. இதைத் தவிர்க் கோயிலின் கிழக்கு மதிற்சுவரையொட்டி விருத்தசீர ஆறு ஓடுகிறது. இது தமிழில் பழைய பாலாறு என்னும் பொருள் தருகிறது.

இக்கோயிலுக்கு மேற்குப்புறத்தில் இராச கோபுரம் உள்ளது. இது 10.17 மீட்டர் நீளமும், 7.24 மீட்டர் அகலமும் கொண்டு விளங்குகிறது. இதற்கு மூன்று தளங்களும் ஐந்து கலசங்களும் உள்ளன. கோபுரம் 20 மீட்டர் உயரமுள்ளது. இக்கோபுரம் விசயநகர மன்னன் வீரபிரதாப சதாசிவன் சக ஆண்டு 146 (கி.பி.1543) ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாக இக்கோயிலிலுள்ள கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது.[2]

வெளிப்பிரகாரம் கீழ்மேலாக 91.60 மீட்டர் அளவிலும் தென்வடலாக 85.25 மீட்டர் அளவிலும் காணப்படுகின்றது. இதன் அகலம் கிழக்கில் 28.60 மீட்டர்

தெற்கில் 22.75 மீட்டர் ஆகும். உட்பிரகாரம் கிழமேலாக 29.63 மீட்டர் அளவிலும் கீழ் தென்வடலாக 18 மீட்டர் அளவிலும் இருக்கின்றது. இப்பிரகாரத்தின் அகலம் தெற்கில் 5.33 மீட்டர், மேற்கில் 5.22 மீட்டர், வடக்கில் 7.66 மீட்டர், கிழக்கில் 6.32 மீட்டர் ஆகும்.

விநாயகர் சந்நிதியில் முன்மண்டபம் 2 1/2 மீட்டர் சதுர வடிவில் தூண்களைக் கொண்டுள்ளது. திருவூறல் மகாதேவர் கோயில் கருவறைக்குச் செல்லும் வழியில் நடராசர் சந்நிதியின் முன்மண்டபம் 13.70 மீட்டர் நீளத்திலும் 9 மீட்டர் அகலத்திலும் இருக்கின்றது. இம்மண்டபத்தில் 24 தூண்கள் 3 மீட்டர் உயரத்தில் உள்ளன. உற்சவர் மண்டபம் கருவறைக்கு முன் 8 மீட்டர் நீளத்திலும் 7.90 மீட்டர் அகலத்திலும் 2.40 மீட்டர் உயரத்திலும் உள்ளது. இம்மண்டபத்தின் வடபகுதியிலுள்ள மேடையில் உற்சவத்திருமேனிகள் வைக்கப்பெற்றுள்ளன.

உற்சவர் மண்டபத்தையொட்டி மேற்கில் உள்மண்டபம் 7 மீட்டர் நீளத்திலும் 2 மீட்டர் அகலத்திலும் 2.40 மீட்டர் உயரத்திலும் உள்ளது. இம்மண்டபத்தின் நுழைவாயிலின் இருபுறமும் துவாரபாலகர் இருவர் நின்றகோலத்தில் உள்ளனர். இம்மண்டபத்தின் தெற்குப் பகுதியில் சுரங்க வழி ஒன்றுள்ளது. அம்மன் சந்நிதி முன்மண்டபம் 7 மீட்டர் நீளத்திலும் 5.45 மீட்டர் அகலத்திலும் 3 மீட்டர் உயரத்திலும் இருக்கின்றது. இம்மண்டபத்தில் 12 தூண்கள் உள்ளன. சுப்பிரமணியர் சந்நிதி முன்மண்டபம் 16 தூண்களுடன் 4.25 மீட்டர் உயரத்தில் காணப்படுகிறது. இம்மண்டபம் 9.45 மீட்டர் நீளமும் 9 1/2 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது.

திருவூறல் மகாதேவர் கோயிலின் கருவறைச்சுவர்கள், கருவறை வாயில்கள் போன்றவற்றின் கட்டடக் கலை சிறந்து விளங்குகிறது. பல்லவர் காலத்தில் கருவறையின் உட்புறச்சுவரில் சோமாசுகந்தர் திருவுருவம் சிற்பமாக அமைந்துவந்தது. இத்திருவுருவம் இக்கோயிலில் கருவறையில் நுழைவாயில் நிலையின் மீது பொறிக்கப்பட்டுள்ளது. பல்லவர் காலத் துவாரபாலகர்கள் நான்கு கைகளுடன் விளங்குகின்றனர். இத்தகைய நிலையை இங்கும் காண்கிறோம். திருவூறல் மகாதேவர் சந்நிதிக்கு எதிரிலுள்ள நந்திதேவர் மண்டபத்தில் இருதூண்களில் சீறி நிற்கும் சிங்கங்கள் இரண்டின் உருவங்கள் சிற்பவடிவில் வடிக்கப்பெற்றுள்ளன. இவை பல்லவர் காலத்தவை. இக்கோயிலின் சிற்பங்களில் வன்மையும் அழுத்தமும் காணப்படுகின்றன. இத்தன்மைகளைக் கொண்டும் இங்கு அபராசித பல்லவ மன்னன் கல்வெட்டொன்று 1972-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதைக் கொண்டும் பல்லவர் தொடங்கிய இக்கோயில் சோழர் காலத்திலும் விசயநகர மன்னர் காலத்திலும் விரிவாக்கம் பெற்றது எனக்கொள்ளலாம்.

கருவறைக்குத் தென்புறத்துச் சுவரின் கோட்டத்தில், விநாயகர் தமது வலக்காலையும் இடக்காலையும் மடக்கி வைத்து உயரமான பதுமபீடத்தின் மீது அமர்ந்து (தமது துதிக்கையை இடப்பக்கம் மேல்நோக்கி வளைத்து அருள்சுரக்கும் முகத்துடன் தெற்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார்.

இக்கோயிலின் உட்பகுதியில் நாள் பூசையை ஏற்கும் விநாயகர் தமது

துதிக்கையை வலப்புறம் வளைத்துக்கொண்டு காட்சியளிப்பதால், இவர் வலம்புரி விநாயகர் என்னும் பெயர் தாங்குகிறார். தம்மை வழிபடுவோர்க்கு அருள்புரிகிறார் என்பதை அபயம் அளிக்கும் அவரது வலக்கை காட்டுகிறது.

வழக்கமாகத் தட்சிணாமூர்த்தி யோக வடிவமைப்பில், தமது ஒரு காலை மற்றக் காலின் மீது மடித்து வைத்திருப்பார். ஆனால், இங்குள்ள திருவுருவத்தில் அவர் அமர்ந்த நிலையில் தம் வலக்காலைச் சற்று வளைத்துக் கீழே ஊன்றியவண்ணம் தமது இடக்காலைச் சாய்த்துப் பீடத்தின் மீது வைத்துள்ளார். அவரது தலை தமது இடப்புறம் சற்று நளினமாகச் சாய்ந்திருக்கிறது. கருவறையின் மேற்குப்புறச் சுவரில் அமர்ந்துள்ள திருமால் தமது தலையில் கிரீடம் தாங்கி, உடலில் பலவகை அணிகள் பூண்டு வலக்கையில் சக்கரமும் இடக்கையில் சங்கும் கொண்டு முன்புற வலக்கையில் அபயம் அளிக்கின்றார். முன்புற இடக்கை அமைதியான நிலையில் அவரது வலப்புறத்துத் தொடை மீது படிந்திருக்கின்றது.

கருவறையின் வடக்குப்புறச் சுவரில் பிரமதேவர் அலைவரிசை ஆடையுடுத்தி, அணிகலன்கள் பல பூண்டு, முப்புரி நூல் மார்பில் விளங்க, வலமேற்கை அக்க மாலையும் இடமேற்கை கெண்டியையும் கொள்ள, வலக்கை அபயம் அளிக்க, இடக்கையைத் தம் இடப்புறத் தொடை மீது வைத்துக் கொண்டிருக்கிறார். அக்க மாலையும், கெண்டியும் இவர் சிவபெருமானை வழிபடுபவர் என்பதைக் காட்டுகின்றன.

கருவறை வடபுறத்துச் சுவரில் துர்க்கை தம் இருபுறங்களிலும் அழகுறத் தொங்கும் ஆடையை உடுத்துக் குறுகிய தமது இடை வெளிப்படும் வகையில் தம்முடைய கைகளுள், மேற்புற வலக்கையில் சக்கரமும் இடக்கையில் சங்கும் ரந்தி முன்புற வலக்கை அபயம் அளிக்க இடக்கையை ஒய்யாரமாகத் தமது இடுப்பின் கீழ்ச் சாய்த்தவண்ணம் வைத்துள்ள தோற்றம் இத்திருவுருவத்தின் சிறந்த சிற்பக்கலையை எடுத்துக்காட்டுகிறது. துர்க்கையில் வலக்கால் ஓரெருமைத்தலை மீது அழுத்தமாக வைக்கப்பட்டுள்ளது.

கருவறையின் முகப்பில் துவாரபாலகர் இருவர், மகுடம் தரித்துத் தம் அகன்ற தோள்களும் விரிந்த மார்பும் வெளிப்பட வலிய கால்களில் வீரக்கழல்கள் அணிந்து நிற்கிறார்கள். வலப்புறத்துத் துவாரபாலகர் தமது இடக்கையைப் பூண்கள் இடப்பட்ட கதை மீது வைத்திருக்கிறார். இடப்புறத்துத் துவாரபாலகர் தமது வலக்கையைத் தமது கதை மீது வைத்துள்ளார். இந்நிலையில் இவர்கள் ஏந்தியுள்ள இருகதைகளும் கருவறையின் நுழைவாயிலுக்குப் பாதுகாப்பளிக்கும் வலிய இரு ஆயுதங்களாக அமைந்துள்ளன.

கருவறையின் முகப்பில் அழகில் சிறந்த சோமாசுகந்தர் சிற்பம் பொருத்தப்பட்டுள்ளது. சிவன், உமையம்மை, கந்தப்பெருமான் ஆகியோர் திருவுருவங்கள் நுண்ணிய முறையில் வடிக்கப்பெற்றுள்ளன. கருவறையில் கிழக்குநோக்கியவாறு அருள்பாலிக்கும் சிவலிங்கப் பெருமானுக்கு ஆனந்தத் தேறல் ஊறுவதால் இப்பெயர் அமைந்துள்ளது. தேறல் என்பது தேன்.

திருவூறல் மகாதேவர் கோயிலுக்குத் தெற்கில் அம்பாள் சந்நிதி வடக்கு நோக்கியுள்ளது. இத்திசையமைப்பில் நுட்பமான பொருத்தம் இருக்கின்றது. "வரைராசனுக்கு இரு கண்மணியாய் உதித்த வளர் காதலிப் பெண் உமையே" எனத் தாயுமானவர் அம்பாளைப் போற்றுகிறார். வரை அரசனாகிய இமயத்தரசன் வடக்கில் உள்ளவன். மாணிக்கவாசகர் குறிப்பிடுவது போன்று சிவபெருமானோ "தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்" ஆதலினால், தந்தையையும் தம் கணவரையும் ஒரே சமயத்தில் காண அம்பாளுக்கு இத்திசை அமைப்பு உதவுகிறது. கிரிராசகன்னிகை நின்ற கோலத்தில் சற்றுச் சாய்ந்த நளினச் சிறப்புடன் புன்முறுவல் பூத்த முகப்பொலிவுடன் காட்சியளிக்கிறார்.

திருவூறல் மகாதேவர் கருவறை முகப்பில் இடப்புறம் நிற்கும் துவாரபாலகரின் தலைப்பகுதிக்கு மேல் அரை மீட்டர் நீளத்தில் உள்ள அழகிய சிற்பம், சிவலிங்க வடிவினராகிய காளத்திநாதருக்குக் கண்ணப்ப நாயனார் தமது கண்ணை அப்பிய பெரிய புராண வரலாற்றை எடுத்துக்காட்டுகிறது.

திருவூறல் மகாதேவர் கோயில் கோபுர நுழைவாயிலின் இடப்புறத்துச் சுவரில் செதுக்கப்பட்டுள்ள சிற்பம், பாசுபத அத்திரம் பெறுவதற்காக அருச்சுனன் சிவபெருமானை நோக்கித் தவம் செய்யும் காட்சியைக் காட்டுகிறது. வேடுவ மகளிர் வடிவில் உமையம்மை பின்தொடரச் சிவபெருமான் வேடுவர் வடிவில் ஒரு பன்றியைத் தொடர்ந்து சென்று பின்னர் அருச்சுனனுக்கு அருள்புரியும் காட்சியும் அருச்சுனனைக் குறிக்கும் சிற்பத்திற்கு நேரொத்தவாறு இந்த நுழைவாயிலின் வலப்புறத்தில் சிவபெருமான் அருள்புரியும் காட்சியும் சுவரில் காணப்படுகின்றன.

உள்மண்டபத்தில் கருவறையின் கிழக்குப் புறத்தில் கணேசர் திருவுருவமும் கண்ணப்ப நாயனார் வரலாற்றுச் சிற்பமும் கூரைப்பகுதியில் சூரியன், சந்திரன் ஆகியோர் திருவுருவங்களும் காணப்படுகின்றன. கருவறை முன்மண்டபத்தின் தெற்கு வெளிச் .சுவரில் யானை இலிங்கத்திற்குப் பூசை செய்தல், முனிவர் சிவலிங்கத்தைப் பூசைசெய்தல், வடக்குச் சுவரில் வாத்து சிவலிங்கத்தைப் பூசித்தல் போன்ற காட்சிகள் சிற்பவடிவில் செதுக்கப்பட்டுள்ளன. ஆறுமுகசுவாமி கோயில் முன்மண்டபத் தூண்களில் இராமர், இலட்சுமணர், திருமாலின் பல அவதாரங்கள், சிவமூர்த்தங்கள், பெண்களின் உருவங்கள், அனுமன், சிவலிங்கம், யாளி, நாகலிங்கம், ஆகியவற்றின் சிற்பங்களும் காமச் சிற்பங்களும் உள்ளன. இம்மண்டபத்தின் சில தூண்களில் வீரர்கள் குதிரை மீது அமர்ந்து குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துச் செல்வது போன்ற சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் தூண்கள் நிறுவப் பயன்படுத்தப்பட்ட கற்கள் இவ்வூரில் சிதைந்த திருமால் கோயில் கட்டடப் பகுதியிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டவை எனவும் ஆதலால் இம்மண்டபக் கற்றூண்களில் பொறிக்கப்பட்ட சிற்பங்களில் பல அப்பெருமாள் கோயிலுக்கு உரியவை எனவும் சொல்லப்படுகிறது.

கோபுரத்தின் மேற்குத் தளங்களில் அம்பாள் சிவனைப் பூசித்தல், நால்வர், திருமால் ஆதிசேடன் மீது வீற்றிருத்தல், மார்க்கண்டேயர் சிவபெருமானிடம் சரண் புகுதல், இயமன் மார்க்கண்டேயர் மீது பாசக்கயிறு வீசுதல், சிவபெருமான்

இலிங்கத்திலிருந்து வெளிப்படுதல், நாரதர் சிவபெருமானிடம் ஞானப்பழத்தை அளித்தல் ஆகிய சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தளத்தின் வாயிலிலும் ஆறு துவார பாலகர்கள், நடுவில் சோமாசுகந்தர் ஆகியோர் சுதைத் திருவுருவங்களும் தெற்கில் மரத்தடியில் தட்சிணாமூர்த்தி திருவுருவமும் அருகில் முனிவர்கள் திருவுருவங்களும் காணப்படுகின்றன. மற்றும் இங்கே பாம்பாட்டி மகுடி ஊதுதல், அதைக் கேட்டுப் பாம்பு படம் எடுத்தல் ஆகியவற்றின் சிற்பங்கள் அழகிய வடிவங்களில் காணப்படுகின்றன. வடபுறத்தில் நடுவில் நான்கு தளங்களிலும் பிரமதேவர் திருவுருவம் காணப்படுகின்றது. மேல் தளத்தில் பிரமதேவருக்குக் கந்தர்வர்கள் மாலையிடுவது, வள்ளி தினைப்புனம் காத்தல், இலட்சுமி, சரசுவதி, சிவபெருமான் முருகப் பெருமானிடம் உபதேசம் பெறுதல் ஆகிய காட்சிகளும் நான்கு பூதங்கள், நான்கு நந்திகள் ஆகியவற்றின் உருவங்களும் காணப்படுகின்றன. கிழக்குப்பகுதியில் மூன்று தளங்களிலும் ஆறு துவாரபாலகர்கள் உருவங்களும், நான்கு ஆண், பெண் கோபுரந்தாங்கிகள், தேவர்கள், அசுரர்கள் அமுதத்திற்காகப் பாற்கடல் கடையும் காட்சியும் சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை திருமணம் மீனாட்சி திருமணம், திருமால் மிருதங்கம் வாசித்தல் ஆகிய காட்சிகளும் சுதைத் திருவுருவங்களாகப் பொருத்தப்பட்டுள்ளன.

கோயில் வெளிப்பிரகாரத்தில் இடப்பக்கம் விநாயகர் சந்நிதியின் விமானத்தில் விநாயகர் திருவுருவமும் இடபங்களின் திருவுருவங்களும் சுதை வடிவில் உள்ளன. திருவூறல் மகாதேவர் சந்நிதி விமானத்தில், கிழக்கில் உருத்திரர் தெற்கில் தட்சிணாமூர்த்தி, மேற்கில் திருமால், வடக்கில் பிரமதேவர் ஆகியோரின் சுதைச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உததி முனிவர் சந்நிதியின் மேல் தளத்தில் உததி முனிவரின் சுதைத் திருவுருவம் தெற்கு முகமாக உள்ளது. உட்கோயில் வெளிமுகப்பில் பதினாறு இடபங்களின் உருவங்கள் பொருத்தப்பட்டுள்ளன. திருவூறல் மகாதேவர் சந்நிதிக்கு எதிரில் நந்தி விமானத்தில் நாற்புறங்களிலும் எட்டு இடபங்களின் உருவங்கள் சுதை வடிவில் உள்ளன. அம்மன் சந்நிதியின் விமானத்தில் மேற்பகுதியில் நாற்புறங்களிலும் பிராமி அம்மனின் திருவுருவங்களும், எட்டுச் சிம்மங்களும், குண்டோதரன் உருவமும், கீழ்ப்பகுதியில் அட்டலட்சுமிகள், நடுவில் கோபுரந்தாங்கிகள் ஆகியோரின் சுதை உருவங்களும் அம்மன் சந்நிதியின் முன் மண்டபமுகப்பில் வலப்புறம் இலட்சுமி உருவமும் உள்ளன.

கி. பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க நாட்டு நிலவியல் ஆசிரியர் தாலமி தாம் இயற்றிய நூலில் தக்கோலத்தைத் 'தகோல' எனக் குறிப்பிட்டுள்ளார். கி. பி. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த "மிலிந்த பன்கா" என்னும் பௌத்த நூலிலும் தக்கோலம் இடம்பெற்றுள்ளது.

பல்லவமன்னர் மூன்றாம் நந்திவர்மன் (கி. பி. 835-860) காலத்தில் தக்கோலம் மிக்க சிறப்பெய்தியதன் காரணமாக இதன் பெயரில், மலேயாத் தீபகற்ப சியாம் நாட்டில் தாகோப மாவட்டத்தில் புதிய தக்கோலம் தோன்றிற்று. இவ்வாறு மலேயாவில் தோன்றிய புதிய தக்கோலத்திலிருந்த ஆற்றுக்கும் 'தக்கோல' ஆறு என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இப்பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனுக்கு அவனி நாராயணன் என்னும் பெயரும் இருந்துவந்தது. இக்காலத்தில் தஞ்சை

மாவட்டத்து வைணவ நாங்கூர்ப் பகுதித் தலைவர் மலேயாவில் அமைத்த குளத்தின் பாதுகாப்பு, இங்கு நியமிக்கப்பட்ட இராணுவத்தாரிடம் ஒப்புவிக்கப்பட்டது. இச்செய்தியைப் புதிய தக்கோலத்திலுள்ள கி. பி. 9-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு கூறுகிறது. இவ்வாறு நம் நாட்டுத் தக்கோலத்தின் பெருமை மலேயா நாட்டிலும் பரவிற்று.

இக்கோயிலில் காணப்பெறும் தொன்மைக் கல்வெட்டுகளில்[2] மிகத் தொன்மையானது பல்லவமன்னன் அபராசிதன் கல்வெட்டாகும். இது 1972-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. அடுத்துப் பழமை வாய்ந்த கல்வெட்டுகள் முதல் ஆதித்தன் காலத்திய 21-ஆம் ஆண்டுக் கல்வெட்டு திருவூறல் மகாதேவருக்கு ஒரு விளக்கு எரிக்க 30 கழஞ்சு பொன் வழங்கப்பட்டதைக் குறிக்கிறது. இம்மன்னன் 24-ஆம் ஆண்டுக் கல்வெட்டு மாரமரையர் மகனாகிய இரண்டாம் பிருதீவிபதி திருவூறல் மகாதேவருக்குக் சூரிய கிரகண நாளில் வெள்ளிக் கெண்டி ஒன்று வழங்கியதைக் குறிக்கிறது. அடுத்த நிலையில் வருவன கி. பி. 907 முதல் 955 வரையில் அரசாண்ட முதல் பராந்தகன் கல்வெட்டுகள். இவை இக்கோயிலின் தெற்குச் சுவரில் பொறிக்கப்பெற்றுள்ளன. இம்மன்னன்,

1. 19- ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இக்கோயிலுக்கு நெல் வழங்கியதைக் குறிக்கிறது.

2. 21- ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இக்கோயிலுக்கு நெல்லும் பொன்னும் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

3. 24- ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இறைவன் கவசத்திற்காக 455 கழஞ்சு பொன் வழங்கப்பட்டதைக் கூறுகிறது.

4. 28- ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இக்கோயிலில் விளக்கு வைப்பதற்காக ஆடுகள் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

5. முதல் பராந்தகனின் 31-ஆம் ஆண்டில் இக்கோயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு இக்கோயிலில் விளக்கு வைப்பதற்காக முதல் பராந்தகன் மகளும் இராட்டிரகூட மன்னன் நான்காம் கோவிந்தனின் துணைவியுமாகிய வீரமாதேவி நன்கொடை வழங்கியதைக் குறிக்கிறது.

6. முதல் இராசராசனால் (கி. பி. 986-1014) தொண்டை மண்டலம் சோழர் ஆட்சியில் வருவதற்கு முன் தொண்டை மண்டலத்தை மீட்ட பெருமை பாண்டியன் முடித்தலை கொண்ட பார்த்திப வேந்தனைச் சேரும். இவன் மூன்றாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இவன் மனைவி அருள்மொழி நங்கை படகொன்று அளித்ததைக் குறிப்பிடுகிறது. இக்கோயிலின் மேற்குச் சுவரில் பொறிக்கப்பட்ட இவனது ஏழாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இக்கோயிலில் விளக்கு எரிக்க ஆடுகள் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

7. சோழரிடமிருந்து தக்கோலம் இராட்டிரகூடரிடம் கைமாறியபோது (கி. பி. 987) இக்கோயிலின் தெற்குச் சுவரில் பொறிக்கப்பட்ட இராட்டிரகூட மன்னர் மூன்றாம் கிருட்டிணனின் 27-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இம்மன்னன் கச்சியையும் தஞ்சையையும் வென்றதாகவும் இக்கோயிலில் விளக்கு எரிக்க உள்ளூர் மடத்துத் தலைவர் ஒருவர் ஆடுகள் அளித்ததாகவும் கூறுகிறது.

8. தக்கோலம் மகாதேவர் கோயிலின் தெற்குச் சுவரில் பொறிக்கப்பட்ட வேங்கை நாட்டு இளவலும் முதலாம் இராசராச சோழன் புதல்வி குந்தவையின் கணவனுமான விமலாதித்தவர்மன் இராசராச சோழன் இரண்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இக்கோயில் விளக்குகள் எரிக்க நன்கொடை அளிக்கப்பட்டதைக் கூறுகிறது.

9. முதலாம் இராசேந்திரன் தமது பிறந்த நாளில் திருவூறல் மகாதேவருக்கு எண்ணெய்க் காப்பு முதலியவை செய்ய ஒரு நிலத்தை அளித்தார் என்பதைக் கூறுகிறது.

10. இக்கோயிலின் இரண்டாம் பிரகாரத்துக் கிழக்குச் சுவரில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு. முதல் குலோத்துங்கன் இக்கோயிலுக்கு நிலம் அளித்ததைக் குறிக்கிறது. (16-1197)

11. தெற்குச் சுவரில் பொறிக்கப்பட்ட திரிபுவனச் சக்கரவர்த்தி மூன்றாம குலோத்துங்கன் தமது 12-ஆம் ஆட்சி ஆண்டில் இக்கோயிலில் விளக்கு வைப்பதற்காகப் பணம் அளித்ததைக் கூறுகிறது.

12. தெற்குச் சுவரில் மூன்றாம் குலோத்துங்கன் தமது 17-ஆம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு யாதவ குல அரையன் என்கிற திருக்காளத்தி தேவன் இக்கோயிலுக்கு நிலம் அளித்ததைக் கூறுகிறது.

முதல் இராசராசன் (கி. பி. 985-1014) காலத்தில் இத்தலம் "சத்திரிய சிகாமணிபுரம்" என்னும் பெயரில் விளங்கிற்று. சோழமன்னர்கள் இத்தலத்துத் திருவூறல் மகாதேவர் கோயிலுக்குப் பல அறக்கொடைகள் நிறுவினர். அக்காலத்தில் கல்வியில் வல்ல சான்றோர்களால் புகழப்படத்தக்க தகுதியைத் தக்கோலம் பெற்றிருந்தது என்பதை முதல் இராசேந்திரன் (கி. பி. 1012-1044) 18-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு தக்கோலத்தைத்[3] 'தலைத் தக்கோர் புகழ் தலைத் தக்கோலம்" எனக் குறிப்பிடுவதைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். 'கல்வியில் வல்ல சான்றோர்களால் புகழப்படுவதாகிய மேன்மையுற்ற தக்கோலம்' என்பது இதன் பொருளாகும்.

இக்கோயிலில் காலை 8 மணி முதல் 10 மணிக்குள்ளும், மாலை 6 மணி முதல் 9 மணிக்குள்ளும் பூசைகள் நடைபெறுகின்றன. பிரதோட நாள்கள், வெள்ளிக்கிழமை, திங்கட்கிழமை போன்ற நாள்களில் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன.

சித்திரை மாதம் பிரமோற்சவம் 10 நாள்கள் நடைபெறுகின்றது. தீர்த்தவாரி 10-ஆம் நாளில் நிகழ்கிறது. புரட்டாசி மாதத்தில் நவராத்திரி விழா 10 நாள்களும் கந்தர் சஷ்டி விழா ஆறு நாள்களும் ஆண்டு தோறும் நடராசர் பூசை ஆறு திருநாள்களிலும் நடைபெறுகின்றன.

பல்லவ மன்னன் அபராசிதன் காலத்தில் கட்டப்பட்ட இக்கோயில் பல்லவர் ஆட்சிக் காலத்தில் சிறப்போடு விளங்கி வந்தது. திருப்புறம்பியப் போரின் விளைவாகப் பல்லவர் ஆட்சி இறுதியடைந்தது. இதன் விளைவாக விசயாலய சோழமன்னரால் நிலைநாட்டப்பட்ட சோழப் பேரரசு, ஆதித்த சோழன், முதற்பராந்தகன் ஆகியோர் காலத்தில் வடக்கே நெல்லூர் வரையில் பரவிற்று. ஆனால், இப்பேரரசுக்கு வாட்டம் தந்து வீழ்ச்சி தந்த நிகழ்ச்சி, இராட்டிரகூட மன்னர் பராந்தக சோழன் புதல்வன் இராசாதித்தனைத் தக்கோலத்தில் கொன்று சோழர் படையைத் தோல்வியுறச் செய்ததாகும். இத்தகைய வரலாற்றுச் சிறப்புடைய தக்கோலம் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர்ச் சிறுகச் சிறுக மீண்டும் சோழர் ஆட்சியின் கீழ் வந்து சிறப்புற்றது.

தக்கோலம், முதல் இராசாதிராசன் காலத்தில் (கி. பி. 1018-1054) இரட்டபாடி கொண்ட சோழபுரம் எனவும் முதல் குலோத்துங்கன் (கி. பி. 1070-1120) காலத்தில் பல்லவபுரம் எனவும் குலோத்துங்கச் சோழபுரம் எனவும் தெலுங்குச் சோழ மன்னன் விசய கண்ட கோபாலன் காலத்திலும் (கி. பி. 1364-1585) விசயமன்னர் காலத்திலும் வடிமுடி கொண்ட சோழபுரம் எனவும் விளங்கிற்று. சேக்கிழார் தாம் இயற்றிய பெரியபுராணத்தின் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் தக்கோலத்தைக் கலிகை மாநகர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இங்குள்ள திருவூறல் மகாதேவர் கோயில் பலவகை நன்கொடைகள் பெற்றது. இக்கோயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் சோழர் வரலாற்றை ஆய்வு செய்யப் பெரிதும் பயன்படுகின்றன. இக்கோயில் பல்லவர் காலத்திற்கும் சோழர் காலத்திற்குமுரிய கட்டடக் கலையையும் சிற்பக் கலையையும் நன்முறையில் எடுத்துக் காட்டுகிறது. ஊறிவரும் புனித நீர், இரு நந்திகளின் திருவுருவங்களிலிருந்து கோயிலினுட் பாய்ந்து ஒரு குளத்தை அடையுமாறு அமைக்கப்பட்டமை கட்டடக் கலையின் நுட்பத் திறனை எடுத்துக் காட்டுகிறது.

சைவ சமய ஆசிரியர்களில் முதல்வராகிய திருஞானசம்பந்தர் அருளிய ஒரு பதிகத்தைப் பெற்றுள்ள இக்கோயில் திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர்களாலும் குறிப்பிடப் பெற்றுள்ளது. சமண சமயம் பரவியிருந்த காலத்தில் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசு நாயனாரும் இக்கோயிலில் வழிபாடாற்றிப் பதிகம் பாடியதால், இப்பகுதியில் சைவ சமயம் நிலைப்படுத்தப்பட்டது. இவர்கள் வகுத்த வழியில் இப்பகுதியில் பலர் சைவ வழிபாட்டில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள்.

இக்கோயிலுக்கு வருமானம் குறைந்த அளவில் இருப்பினும் இக்கோயிலில் திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பிரமோற்சவத் திருவிழாவைச்

சிறப்பாகக் குறிப்பிட்டுக் காட்டலாம். இத்திருவிழா இவ்வூர்ப் பண்பாட்டின் வளர்ச்சியைக் காட்டுகிறது. மக்களின் ஒற்றுமையையும் ஒருங்கே வளர்த்து வருகிறது.

இக்கோயிலுக்கு 7 ஏக்கர் நன்செய் நிலங்கள் உள்ளன. இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் பெற்ற அறங்காவலரிடம் இருந்துவருகிறது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 4,000 ரூபாயாகும்.

---

(1. பெரியபுராணம் - வம்பறா வண்டுச் சருக்கம் - பாடல் 1006 2. 1897, 3. 1897.)

## தக்கோலம்

# சோமநாதீசுவரர் கோயில்

இக்கோயில் தக்கோலம் இருப்புப்பாதை நிலையத்திற்குக் கிழக்கில் 8 மீட்டர்த் தொலைவில் அமைந்துள்ளது.

இக்கோயில் சந்திரனாகிய சோமனால் வழிபாடாற்றப் பெற்றதால், இக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமான் சோமநாத ஈசுவரர் என்னும் பெயரில் விளங்கி வருகிறார்.

கோயிலின் நுழைவாயிலைக் கடந்ததும் நந்திதேவர் சந்நிதியையும் அடுத்துப் பலிபீடத்தையும் காண்கிறோம். அடுத்து விநாயகர் சந்நிதி, வள்ளி தெய்வயானை உடனுறையும் ஆறுமுகர் சந்நிதி, காசி விசுவநாதர் சந்நிதி, வயிரவர் சந்நிதி, நவகிரக சந்நிதி ஆகியவை உள்ளன.

கருவறையில் சோமநாதீசுவரர் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். கருவறைச் சுவர்மாடங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் எதிரில் சண்டேசுவரரும் உள்ளனர். சோமநாதீசுவரர் சந்நிதிக்கு இடப்புறம் தெற்கு நோக்கியவாறு அம்மன் சந்நிதி உள்ளது.

இக்கோயிலின் தீர்த்தம் 10 மீட்டர் நீளமும் 7 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் உள்ளது. இக்குளம் நன்னிலையில் இல்லை.

மூலவர் விமானம் 4 மீட்டர் சதுரப்பரப்பில் 7 மீட்டர் உயரம் கொண்டுள்ளது. அம்மன் சந்நிதி விமானம் 3 மீட்டர்ச் சதுரப்பரப்பில் 2 மீட்டர் உயரம் கொண்டுள்ளது. ஆறுமுகசுவாமி விமானம் 3 மீட்டர்ச் சதுரப்பரப்பில் 2 மீட்டர் உயரம் கொண்டுள்ளது.

இக்கோயிலின் உட்பிரகாரம் ஒருபுறத்தில் 33 மீட்டர் நீளமும் மறுபுறத்தில் 32 மீட்டர் நீளமும் கொண்டது. இக்கோயிலில் மகாமண்டபமும் உள்மண்டபமும் உள்ளன. உள்மண்டபம் 16 கால்களைக் கொண்டுள்ளது. உட்சுற்றுப் பிரகாரத்தின் வடகிழக்கில் யாகசாலையும் தென்கிழக்கில் மடைப்பள்ளியும் உள்ளன.

காரண ஆகமமுறையில் காலசந்தி, உச்சிக்காலம், மாலைப்பூசை ஆகிய மூன்று காலப்பூசைகள் நடைபெறுகின்றன.. வெள்ளிக்கிழமைகளில் வாரவழிபாடு நடைபெறுகிறது. பிரதோடம், கிருத்திகை, விசாகம், சித்திரை, திருவோணம், ஆனித்திருமஞ்சனம், ஆவணிச் சதுர்த்தி, புரட்டாசிச் சதுர்த்தி, மார்கழித் திருவாதிரை, மாசி சதுர்த்தி ஆக 6 நடராசர் அபிடேகங்கள் நடைபெறுகின்றன. வைகாசி விசாகம், புரட்டாசி மகிடாசுரசம்மாரம், ஐப்பசி சூரசம்மாரம், திருக்கலியாணம், தை மயிலேறு, மாசிமக உற்சவம், பங்குனி உத்திர உற்சவம் ஆகிய திருநாள்களில் வீதி உலா நடைபெறுகிறது.

இக்கோயில் பரம்பரை அறங்காவலர் கட்டுப்பாட்டிலுள்ளது. இக்கோயிலுக்கு 3.58 ஏக்கர் புன்செய் நிலங்களும் 4.06 ஏக்கர் புன்செய்நிலங்களும் 15 வீட்டு மனைகளும் புளியந்தோப்பும் உள்ளன.

மயில், சூரன், இடபம் ஆகிய வாகனங்கள் உள்ளன.

## தாமரைப்பாக்கம்

# அக்கினீசுவரர் கோயில்

இக்கோயில் கலசப்பாக்கம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 12 கிலோமீட்டர்த் தொலைவிலும் செங்கம் - போளூர்ச் சாலையில் தாமரைப்பாக்கம் கூட்டுச் சாலைக்குத் தெற்கே 1 கிலோமீட்டர்த் தொலைவிலும் செய்யாற்றின் தென்கரையில் ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இறைவன் அக்கினி மலையாக நின்ற நிலையினையொட்டி அக்கினீசுவரர் வடிவம் இங்கு நிறுவப்பட்டுள்ளது. தாமல் என்பது நிலப்பரப்பின் பெயராகும். தாமல்பாக்கம் என்பது தாமற்பாக்கம் என அமைகிறது. தாமற்பாக்கம் பின்னர்த் தாமரைப்பாக்கம் எனத் திரிபு எய்திற்று.

தெற்கு வாயிலின் வழியாக இக்கோயிலின் ஒரே பிரகாரத்தில் வலம் வரும் போது முதலில் வடக்குப் பிரகாரத்திலுள்ள திரிபுரசுந்தரியின் கிழக்கு நோக்கிய சந்நிதியை அடைகிறோம். இச்சந்நிதிக்கு எதிரில் இடபத்தின் திருவுருவம் உள்ளது. கிழக்குப் பிரகாரத்தில் பலிபீடம் அதனை அடுத்து நந்திதேவர் சந்நிதி ஆகியவையுள்ளன.

கருவறையின் முகப்பில் தென்புறம் விநாயகர் திருவுருவமும் வடபுறம் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் திருவுருவமும் உள்ளன. கருவறை வாயிலின் இருபுறமும் துவாரபாலகர்கள் காவல் புரிகின்றார்கள். கருவறைக் கோட்டச் சுவர்மாடங்களில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, ஆகியோர் திருவுருவங்களும் மேற்கில் இலிங்கோற்பவர் திருவுருவமும் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. துர்க்கைக்கு அருகில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது.

கருவறையில் அக்கினீசுவரர் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். கருவறைப் பகுதியின் வடகோடியில் வயிரவர் தெற்கு நோக்கியும் கிழக்கில் சூரியன் மேற்கு நோக்கியும் உள்ளனர். நவக்கிரகங்கள் சந்நிதி கிழக்குப் பிரகாரத்தில் உள்ளது. விநாயகர், சந்திரசேகரர், அம்பிகை ஆகியோர் உற்சவத் திருமேனிகள் உள்ளன.

இக்கோயிலில் தீர்த்தக்கிணறு உள்ளது. சுவாமி, அம்பிகை ஆகியோர் சந்நிதிகளின் மீது விமானங்கள் உள்ளன. அக்கினீசுவரர் சந்நிதியில் முன்மண்டபமும் உள்மண்டபமும் உள்ளன.

குருக்கள் ஒரு காலப்பூசை செய்துவருகிறார். அன்னாபிடேகம், கார்த்திகை தீபம், சிவராத்திரி முதலிய திருவிழாக்கள் கொண்டாடப்பெறுகின்றன.

இக்கோயிலுக்கு 4.40 ஏக்கர் நன்செய் நிலமும் 8.69 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலர்களிடம் கோயில் நிருவாகம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 3878/- உருபாயாகும்.

## திம்மம்பேட்டை

# பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில்

வாணியம்பாடி வட்டம் பாலாற்றங்கரையில் அமைந்துள்ள திம்மம்பேட்டை கிராமத்தில் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில் 1/2 ஏக்கர் பரப்பில் கிழக்கு

நோக்கியவாறு அமைந்துள்ளது.

இக்கோயில் மிகவும் சிதைந்த நிலையில் இருக்கின்றது. கருவறையில் வெங்கடேசப் பெருமாள் கிழக்கு நோக்கியவாறு உள்ளார். இக்கோயில் புராதனமான கோயில். இதன் மதிற்சுவர்கள் இடிந்து இடிபாடுகளுடன் காட்சியளிக்கின்றன.

இக்கோயிலில் பணிசெய்வோர்க்குத் தெற்குப்பட்டு என்னும் ஊரில் நிபந்தமாக நிலங்கள் விடப்பட்டுள்ளன. அவை திவ்வியப் பிரபந்தம் சேவிப்பவர், ஏழூர் நடை பாராயணக்காரர், அருச்சகர், இனாம்தார் புஷ்ப கைங்கர்யம், உபநிஷத பாராயணம், சங்கீதக்காரர், ஸ்ரீகர்ணம், பார்ப்பதிதாரர், செங்கோல்காரர், கும்பாரத்திப் பெண்டிர், நாட்டியமகளிர், மிருதங்கம் வாசிப்போர், கடமேளம் வாசிப்போர், நாதசுவரம் வாசிப்போர், சுருதி கூட்டுவோர், தோலா இசைப்போர், திம்மம்பேட்டை அருச்சகர் உள்ளிட்ட ஊழியர்க்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் ஆகும். இவை ஏறத்தாழ 600 ஏக்கருக்கும் மேற்பட்டவை என்று ஒரு பட்டயம் தெரிவிக்கிறது. ஆனால், இன்றைக்கு 2.85 ஏக்கர் நிலம் மட்டுமே கோயிலுக்குச் சொந்தமாகவுள்ளது. அதுவும் மற்றவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

இக்கோயிலுக்கு பெரிய தேர் ஒன்று உள்ளது. அதுவும் பழுதடைந்த நிலையில் உள்ளது.

இக்கோயிலுக்கு அறநிலையத்துறையினர் அறங்காவலர்களை நியமனம் செய்த போதிலும் யாரும் அறங்காவலர்களாவதற்கு முன்வரவில்லை. இத்திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்யவும் ஒரு காலப்பூசைக்காயினும் ஏற்பாடு செய்யவும் சொத்துகளை மீட்கவும் தக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இத்தகையதொரு நல்ல நிலை எப்போது தோன்றும் என்பது தெரியவில்லை.

## (குமரகிரி) திமிரி

# சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

இக்கோயில் ஆற்காடு வட்டம் இராணிப்பேட்டை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 12 கிலோமீட்டர்த் தொலைவிலும் ஆர்க்காட்டிலிருந்து 13 கிலோமீட்டர்த் தொலைவிலும் உள்ள திமிரியிலுள்ள குமரகிரியில் 83.34 மீட்டர் உயரம் கொண்ட மலைமீது அமைந்துள்ளது. இம்மலைக்கு 115 படிகள் ஏறிச் செல்லவேண்டும்.

மலை மீது வள்ளி, தெய்வயானை ஆகியோருடன் சுப்பிரமணியசுவாமி நின்ற கோலத்தில் காட்சிதருகிறார். மலை மீது வள்ளி சுனை என்னும் வற்றாத சுனை உள்ளது.

மலைப்படிகள் முடிவுறும் இடத்தில் காவடி மண்டபம் உள்ளது. மலைப்படிகளின் நடுவழியில் திருப்புகழ் மண்டபம் உள்ளது. அடிவாரத்தில் திருமணமண்டபம் உள்ளது.

இக்கோயிலில் இருகாலப்பூசை நடைபெறுகிறது. தை, ஆடி, கார்த்திகை, சித்திரை ஆகிய மாதங்களில் வரும் கிருத்திகை நாள்களில் இங்கு வழிபாடாற்ற வெளியூர்களிலிருந்து மக்கள் திரளாக வருகிறார்கள். கந்தர் சஷ்டி உற்சவம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது.

இக்கோயிலுக்கு 68 செண்ட் நன்செய் நிலமும் 7.92 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டுவருமானம் 17,446 உருபாயாகும்.

செங்குந்த மரபினர்கள் வழிவழியாக அறங்காவலர்களாகப் பணியாற்றுகின்றனர்.

## திருப்பத்தூர் நகர்

# காளியம்மன் (எ) காமாட்சியம்மன் கோயில்

இக்கோயில், திருப்பத்தூர் வட்டம் திருப்பத்தூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 1 கிலோமீட்டர்த் தொலைவில் திருப்பத்தூர் நகர் மையத்தில் காளியம்மன் (எ) காமாட்சியம்மன் கோயில் கிழக்கு நோக்கியவாறு 15 மீட்டர் அகலமும் 21 மீட்டர் நீளமும் கொண்ட பரப்பில் அமைந்துள்ளது.

கருவறை 9 மீட்டர் நீளமும் 5 மீட்டர் அகலமும் கொண்டதாக உள்ளது. வலக்கோடியில் காளியம்மன் என்கிற காமாட்சியம்மன் சந்நிதியும் இடப்புறத்தில் வள்ளி தெய்வயானையுடன் முருகர் சந்நிதியும் அடுத்தாற்போல் ஏகாம்பரேசுவரர் சந்நிதியும் இடக்கோடியில் விநாயகர் சந்நிதியும் உள்ளன. கருவறை மீது விமானம் நன்னிலைமையில் உள்ளது. ஒரு மண்டபத்தின் வலப்பக்கம் நவக்கிரகம் அமைக்கப்பட்டுள்ளது.

தீர்த்தக்கிணறு உள்ளது. மேலும் நந்தவனமும் கோயிலின் சுற்றுப்பிரகாரத்தில் உள்ளது.

இக்கோயில் விசுவகர்மா மரபினால் கட்டப்பட்டது என்று கூறப்படுகிறது. இங்குப் பூசை அம்மரபினராலேயே செய்துவரப்படுகிறது. பூசை இருகாலம் நிகழ்த்தப்படுகிறது. வெள்ளிக்கிழமைதோறும் பெண்கள் வரம் வேண்டி இக்கோயிலின் வலம் வருகின்றனர். நவராத்திரித் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மார்கழி 30 நாள்களும் தமிழ் ஆண்டுப்பிறப்பும் சிறப்பு நாள்களாகும். உற்சவமூர்த்திகளாக ஏகாம்பரேசுவரர், அம்மன், காமாட்சியம்மன் அத்திரதேவர் (சூலம்) ஆகியோர் உள்ளனர்.

இக்கோயிலின் பின்புறமுள்ள கட்டடங்கள் 1832 எண் நில அளவைப் புலத்தின் 1.43 ஏக்கர் பரப்பளவும் மற்றும் அதில் உள்ள கட்டடங்களும் கருப்பனூர் கிராமத்தில் 232/1 எண்நிலஅளவைப்புலத்தில் 2.34 ஏக்கர் நிலங்களும் உள்ளன. இவை தவிர இக்கோயிலுக்குத் திருப்பத்தூரில் 183/1 எண் புலத்தில் 3.55 ஏக்கர் நிலம் உள்ளது. இந்நிலத்தின் பட்டா மாற்றம் செய்தது குறித்து நடவடிக்கை எடுத்துவரப்படுகிறது. திருப்பத்தூர் நகரில் 19, துவாரகப் பிள்ளையார் கோயில் தெருவிலுள்ள 208 எண் நிலத்திலுள்ள வீடும் இக்கோயிலைச் சேர்ந்ததாகும். இக்கோயிலுக்கு ஆண்டுவருமானம் 10,173/- உருபாயாகும். இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரின் நிருவாகத்தின் கீழ் இருந்து வருகிறது.

## திருப்பத்தூர் நகர்

# சுந்தரவீர ஆஞ்சநேயர் கோயில்

இக்கோயில், திருப்பத்தூர் இருப்புப்பாதை நிலையத்திற்குத் தெற்கே 1 கிலோமீட்டர்த் தொலைவில் பேருந்து நிலையத்திலிருந்து 1/2 கிலோமீட்டர்த் தொலைவில் 16.5 மீட்டர் நீளமும் 4.5 மீட்டர் அகலமும் கொண்ட 64 சதுர மீட்டர்ப் பரப்பளவில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்கு முன்னர்த் திருப்பத்தூரிலிருந்து சோலார்பேட்டை செல்லும் வழியில் அமைந்த "தாழை மடு" என்னும் ஏரியில் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றபோது விரித்த வலையில் ஒரு மீட்டர் உயரமுள்ள சிலை கிடைத்தது எனவும் அச்சிலை ஆஞ்சநேயர் சிலை எனவும் ஆஞ்சநேயருக்காக ஒரு கோயிலை அமைத்து, அதில் அவரை வைத்து வழிபடவேண்டும் எனவும் அவர்கள் கனவில் திருவருள் தெரிவித்ததாகவும் அவ்வாறு தெரிவிக்கப்பட்டதற்கேற்ப அவர்கள் தங்கள் குடியிருப்பிற்கு அருகில் ஆஞ்சநேயர் கோயில் அமைத்தார்கள் எனவும் அக்கோயில் தற்போது புகழ்வாய்ந்து விளங்குகிறது எனவும் மரபுவழிச் செய்தி கூறுகிறது.

கோயிலின் பின்புறம் அரசமரமும் வேம்பு மரமும் இணைந்திருந்தன. இவையே தலவிருட்சமாகக் கருதப்பட்டன. பின்னர் இக்கோயிலின் திருப்பணி 1939-ஆம் ஆண்டில் நடைபெற்றபோது கோயிலை விரிவுபடுத்தும் பொருட்டு இம்மரங்களால் கோயிலில் பாதிக்கப்படும் எனக்கருதிக் கோயிலார் இம்மரங்களை அகற்றினர். தற்போது தலவிருட்சம் இங்கு எதுவும் இல்லை.

இக்கோயிலுக்கு நேரெதிரில் 11 மீட்டர் உயரமும் 3/4 மீட்டர் சுற்றளவும் கொண்ட தீபக் கம்பம் உள்ளது. இக்கோயிலின் நுழைவாயிலின் உட்புறம் வலப்புறமாகச் செல்வோமெனில், தெற்கு நோக்கியவாறு இராமர் சந்நிதியைக் காணலாம். இச்சந்நிதி 4 மீட்டர் நீளமும் 1.25 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இச்சந்நிதியில் இராமர், சீதை, இலட்சுமணர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

இக்கோயிலினுள் தீர்த்தக்கிணறு உள்ளது.

இக்கோயிலின் கோபுரம் எட்டு மீட்டர் உயரம் கொண்ட மூன்று நிலைகளும் மூன்று கலசங்களும் கொண்டுள்ளது. மூலவர் சந்நிதிக்கு 2 மீட்டர் உயரத்தில் விமானம் அமைக்கப்பட்டுள்ளது.

உட்பிரகாரம் 5 மீட்டர் நீளமும் 2 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. அன்பர்கள் வழிபட வசதியாக மூலவர் சந்நிதிக்கு முன் 9 மீட்டர் நீளமும் 2.5 மீட்டர் அகலமும் கொண்ட உள்மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு வேளைப்பூசை மட்டும் நடைபெறுகிறது. காலை 6 மணி முதல் 10 மணிக்குள் பூசை நடைபெறுகிறது. மாலை 5 மணி முதல் 8 மணிவரை மக்கள் வழிபாடு ஆற்றுகிறார்கள். சனிக்கிழமை சிறப்புப்பூசை, கார்த்திகை தீபம், வைகுண்ட ஏகாதசி, அனுமந்த ஜெயந்தி ஆகிய திருவிழா நாள்களில் திருவீதியுலா நடைபெறும்.

இராமநவமி 10 நாள்கள் திருவிழா நடைபெறும். 9-ஆம் நாள் வீதியுலா நடைபெறும்.

இக்கோயிலின அறங்காவலர்கள் தலைமையில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை நிருவாக அலுவலர் செயலாற்றி வருகிறார்.

இக்கோயிலுக்கு 4.80 ஏக்கர் நிலம் உள்ளது. கட்டட வாடகை, உண்டியல் முதலியவற்றிலிருந்து ஆண்டுவருமானம் 30,788 உருபாய் கிடைத்துவருகிறது.

தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
வ.எண்: 855
நாள்: 17.5.02
நூலகம்